உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அகத்தியர் தேவாரத்திரட்டாதி

பன்னிரு திருமுறைத் திரட்டு

குறிப்புரையும் விஷய சூசனமும்.

௨௫௰ - வேதப்பிரமாணங்களுடன்

இஃது

சித்தாந்த சைவ சரபம்

சோளங்கிபுரம்

ஸ்ரீலஸ்ரீ சிவ அருணகிரி முதலியாரவர்களால்

பாசுரங்களின் தலைகள் பிரித்துப்

பரிசோதிக்கப்பட்டு

ஷை உரையும் சூசனமும் இயற்றப்பெற்று

இராமநாதபுரம் ஜில்லா - கண்டமாணிக்கம்

ஸ்ரீமாந். நா. பிச்சகுட்டி செட்டியாரவர்கள்

நல்லுதவியால்

சென்னை திருவல்லிக்கேணி

நோபில் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

(இரண்டாம் பதிப்பு.)

பிரபவ ௵ சித்திரை ௴

1927

 [விலை ரூ. 2-12-0

PRINTED AT

THE NOBLE PRESS, TRIPLICANE,

MADRAS. S. E.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பொருளடக்கம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பன்னிரு திருமுறைக ளிவையெனல்.

	திருமுறை
திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம்	முதல் இரண்டு மூன்று
திருநாவுக்கரசு மூர்த்தி சுவாமிகள் தேவாரம்	நான்கு ஐந்து ஆறு
சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்	ஏழு
திருவாசகமும், திருக்கோவையாரும்	எட்டு
திருவிசைப்பாவும், திருப்பல்லாண்டும்	ஒன்பது
திருமூல நாயனார் திருமந்திரம்	பத்து
திருவாலவாயுடையார் முதலிய பன்னிருவர் அருளிச்செய்த நாற்பது பிரபந்தங்கள்	பதினொன்று
திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம்	பன்னிரண்டு

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

இந்தத் திரட்டில் அடங்கிய திருமுறைகள்.

திருச்சிற்றம்பலம்

சிவமயம.

திருச்சிற்றம்பலம்.

முகவுரை.

சுத்தாத்வைத சித்தாந்த சைவ சிகாமணிகாள் !

அன்பே ஓர் வடிவமாகத் திரண்டுவந்த நஞ்சைவ சமயத்துக்கு நேத்திரம்போல் விளங்குந் தெய்வ வருணூல் பன்னிரு திருமுறைகளே. இவை பன்னிரு பகுதிகளாக மிகவும் விரிந்து கிடக்கின்றமையின், சிவபூசைக்கும், சிவாலய தரிசனத்துக்கும், நித்திய நைமித்திகங்களுக்கும், அடியவர் பூசைக்கும் மிக்க உபயோகமாமாறு "அகத்தியர் தேவாரத் திரட்டாதி பன்னிரு திருமுறைத்திரட்டு" என நாமம் புனைந்து இத்திருமுறைத் திரட்டை இரண்டாம் முறை அச்சிற் பதிப்பித்தேன். முதற் பதிப்பிலுள்ளவற்றைப் பார்க்கிலும் இதில் குறிப்புரையும் விஷய சூசனங்களுஞ் சேர்ந்திருப்பதுமல்லாமல் சைவர்களுக்கு வேண்டிய வேறு சில முக்கிய விஷயங்களும், பத்தாந் திருமுறை என்னும் திருமந்திரத் திரட்டுப் பகுதியில் அதிகமாக நானூற்றைம்பத்தைந்து செய்யுட்களும், பதினோராம் பன்னிரண்டாந் திருமுறைத் திரட்டு என்னும் பகுதிகளில் இன்னுஞ் சில செய்யுட்களும் சேர்த்துப் பதிக்கப்பட்டுள்ளன. இவை யாவும் நம்மவர்களுக்கு அதிக அன்பையும் ஆராமையும் ஊட்டுவதோடு இந்நூல் எடுக்கவும் வைக்கவும், பூசையின்நிமித்தம் பலவிடங்களுக்கு எடுத்துக்கொண்டு போகவுங் கைக்கடக்கமா யநுகூலமாயுள்ளது.

இதிலுள்ள விஷய சூசனத்தில் சிவபரத்துவமும், சிவாதிக்யமும், சிவபாரம்யமும் (உருய) வேதப் பிரமணங்களோடு தெளிவாய் நிரூபிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வேத வாக்கியத்துக்குந் தெளிபொருள் விளக்கியிருப்பதால் உண்மையறிய விரும்புவோ ரனைவருக்கும் இத்திரட்டு பெரும் பயனைத்தந்து, சிவபக்தி சிவனடியார் பக்தி மேலிடச்செய்ய யாதொரு தடையுமின்று.

இப்பன்னிரு திருமுறைத் திரட்டிலுள்ள பாசுரங்களில் புதைந்து கிடக்கும் அநுபவ வேத்யமாயுள்ள பொருட்டிறங்கள் சுத்த ஞானாநந்தாநுபவிக்கே புலப்படுவதன்றி ஏனையோர்க்கு எட்டுணையும் புலப்படுமாறில்லை யென்பது யாவரும் நன்குணர்ந்த விஷயம். ஆயினும், சாதாரண சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் பொருள்தெரியாமல் பலர் பிழைபட வோதுகின்றமையால் அவர்கள் அங்ஙனமோதாது சப்தார்த்த ஞானமாவது தெரிந்து கொண் டோதினால் அன்பும் இன்பும் அதிகரித்துத் தம்மை மறந்து பரவசப்பட்டிருப்பார்க ளென்றெண்ணியே போதிய ஆற்றலும், அறிவும், காதலுமில்லா வடியேன் சிற்சில சொற்களுக்கு மாத்திரம் குறிப்புரையும் சூசனமும் வரைந்துள்ளேன். அவ்வாறு வரைந்ததும் சைவ பரிபாலனம் செய்து போதருமுறையை முன்னிட்டேயன்றி வேறன்று. கருதல்களாயுள்ள சொற் பிரயோகங்களுக்குப் பொருளும், அநுபவ ரஹஸியங்களும் விளங்காமையால் உரையெழுதாது விடப்பட்டன. ஆதலால் இத்திரட்டிலுள்ள எனது உரையும், சூசனமும் இறைவன் திருவடி நிழலையடையக் காதல்கொண்டிருப்பவருக்கன்றி நிறைந்த கல்வியும் ஞானமுமுடையார்க்குப் பயன்றராதிருக்கலாம். அப்பெரியார் என்னை யுடையாராதலின் அருட்களிப்பின் மிகுதியால் யானெழுதிய விவற்றை இகழ்தல் செய்யார்.

அன்றியும், வடமொழியில் "ஸ்ரீமந்த்ர மாலிகா" என்று பெயர் பெற்று விளங்குகின்ற திருமூலத்தேவர் திருமந்திரமாலையிலுள்ள அனேக செய்யுட்களின் ஆழ்ந்த ரஹஸியங்களும், பரிபாஷா சொற்களின் விளக்கங்களும், பிறர் துயராற்றாது கருணையினாலாட்கொள்ளும் ஞான வைராக்கிய பரிபூரண குருமூர்த்தியின் சந்நிதியில் முறைப்படி வழிபட்டுக் கேட்ட சற்சீடருக்கே அவரது கருணா கடாக்ஷ வீக்ஷண்யத்தால் கிடைக்கப் பெறுவனவாம். ஏனையோர் அவற்றை அறியக்கூடாமை. "தொட்டுக்காட்டாத வித்தை சட்டுப் போட்டாலும் வாராது" என்பது யாவருமறிந்த விஷயமே.

இந்தத் திருமுறைத் திரட்டிலடங்கிய பாசுரங்களை யாவருமெளிதிலுணர்ந்தோதுமாறு தளைகள் பிரித்தும், வேண்டியவிடங்களில் இலக்கண வழுக்களுண்டாகாதபடி ஒவ்வோரடியின் இறுதிச்

சீரில் சந்திகள் பிரித்தும் பதித்திருப்பதால் இலக்கணம் பயிலாதவர்கள் கூட இதை யெளிதிலோதி உளங்கசிந்துருகி நிற்கலாம்.

இத்திரட்டை விரைவில் அச்சிற் பதிப்பித்துத் தரவேண்டுமென்று யான் கேட்டுக்கொண்டபோது அப்படியே செய்து தருகிறேமென்று உறுதி வாக்களித்து, அவ்வார்த்தையின்படி விடாமுயற்சியோடு முடித்துத் தந்த நோபில் அச்சியந்திரசாலைத் தலைவர் ஸ்ரீமாந். து. கதிர்வேலு முதலியாரவர்களுக்கும் ஷை அச்சுக்கூடத் தலைவர் ஸ்ரீமாந். செ. ஜயசந்த்ர முதலியாரவர்களுக்கும் எனது மனமார்ந்த விநய வந்தனத்தைப் பன்முறையுஞ் செலுத்துகின்றேன்.

சோளங்கிபுரம்.
பிரபவஹ சித்திரைமீ.

இங்ஙனம்
சோ. சிவ அருணகிரி முதலியார்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

உரிமையுரை.

எந்நாட்டிலுஞ் சிறந்து விளங்காநின்ற நம் தென்னாட்டிலே பாண்டி வளநாட்டில் இராமநாதபுரம் ஜில்லாவைச்சேர்ந்த கண்டமாணிக்கம் என்னுந் திருப்பதியில் நாட்டுக்கோட்டை நகரத்தாரென்னும் வைசிய மரபிலே சிவபக்தி சிவனடியார் பக்தியிற் சிறந்த திருவாளர் குமா. நாராயணன் செட்டியாரவர்கள் இருந்தனர். அவரும் அவர் மனைவியாரும் விளையாட்டுக்கேனும் அசத்தியங்கூற அஞ்சி இல்வாழ்க்கையை நடத்தி வந்தவர்கள். அத்தகைய மாதா பிதாக்களுக்கு அருந்தவப் புதல்வராய்த் தோன்றி இளமைதொட்டு அன்பு, அருள், ஆசாரத்தோடு வாழ்ந்து வருகின்றவர் ஸ்ரீமாந். நா. பிச்சகுட்டி செட்டியாரவர்கள். இவர் நாடோறுஞ் சைவத்திருமுறைகளைப் பாராயணஞ் செய்யும் நியமம் பூண்டவர். ஒழுக்கம் நிறைந்த பரிசுத்தவுள்ளமுடைய பெரியோர்களிடத்திற்றான் அன்பும் அபிமானமுமுடையவர். அவர்களையன்றி யேனையரோடு நட்புரிமை கொள்ள விரும்பாதவர். எல்லினும் பகலினும் ஸ்ரீசிற்சபேசப் பெருமானுடைய குஞ்சித பாதத்தையே தாரகமாகப் பற்றியிருப்பவர். "எப்பாலவர்க்கு மப்பாலாம் என்னாரமுதேயோ - அப்பா காணவாசைப்பட்டேன் கண்டாயம்மானே" என்னும் மதுரவாசகத்தின்படி அவ்வெம்பெருமானையே சந்ததமும் அப்பா வென்றழைக்கும் ஆர்வமுடையவர். யாவராயினும் ஸ்ரீசிற்சபேசப் பெருமானைப் பற்றிப்பேசின் அப்போதே இவர்வதனம் மலர்ந்தவண்ணமாகவேயிருக்கும். இவர் எப்பொழுதும் அந்தர்முக நாட்டத்தில் சாலவழுத்தமுடையவர். ஆத்மாவின் ஸ்வதந்தர ஹீனத்தை நன்குணர்ந்தவர். யாது காரணமோ அடியேன்பால் ஆராவன்புடையவர்.

அத்தகைய பெருந்தகையாளர் அகத்தியர் தேவாரத்திரட்டாதி பன்னிரு திருமுறைத்திரட்டை நான் இரண்டாம் முறை அச்சிற் பதிப்பிக்க எண்ணியதை யுணர்ந்து, அதற்குவேண்டும் பொருளுதவி செய்வதாக வாக்களித்து, அவ்வாறு உதவிபுரிந்ததோடு திருமூலத் தேவர் திருமந்திரங்கள் இப்பதிப்பில் அதிகமாகச் சேர்க்கின் பலருக் கும் பிரயோசனமாயிருக்குமென்று தெரிவித்து, அவ்வாறே அம்மந் திரச் செய்யுட்களனைத்தையுந் தாமே திரட்டித்தந்தனர். இதனால் இவரது ஆராய்ச்சியும் அநுபவமும் எத்திறத்ததென்று யாவரும் நன்குணரலாம். இவர் திருமந்திரத்திருமுறையை ஞானக்களஞ்சி யம் என்றும், எவ்விஷயத்திற்கும் ஞானக்கருவூலம் என்றும் பலரு முணர எடுத்திசைப்பர்.

இவ்வரியதிருமுறைத்திரட்டின்இரண்டாம்பதிப்பு,குறிப்புரை யோடும் விஷய சூசனத்தோடும் வெளியிடுவதற்கு இவரே முக்கிய காரணரா யிருந்தமையின் எல்லாக்கடவுளருந் தாமாக விருக்கும் ஸ்ரீசிற்சபேசப்பெருமான் இவருக்கு நோயற்ற வாழ்வையும், குறை வற்ற செல்வத்தையும், பூரணாயுசையும், இஷ்டகாமியார்த்தங்களை யும் கடைக்கணித்தருளுமாறு அவரது பெருங்கருணைத் தடங்கட லைச் சந்ததமும் பிரார்த்திக்கின்றேன். சுபம்! சுபம்!! சுபம்!!!

சோ - சிவ அருணகிரி முதலியார்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அகத்தியர் தேவாரத்திரட்டின்

திருப்பதிக அட்டவணை.

திருஞான சம்பந்த சுவாமிகள்.

ஆகத்திருப்பதிகம்-௰.

திருநாவுக்கரசு சுவாமிகள்.

ஆகத்திருப்பதிகம்-௮.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

ஆகத்திருப்பதிகம்-௭.

மொத்தம் திருப்பதிகங்கள்-௨௫.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

திருவாசகத் திருப்பதிக அட்டவணை.

ஆகத் திருப்பதிகங்கள் ௫௧. அகவலோடு செய்யுள் ௯௫௮.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவிசைப்பா திருப்பல்லாண்டின்

திருப்பதிக அட்டவணை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அகத்தியர் தேவாரத்திரட்டில்

அடங்கிய திருமுறைகள்.

முதற் றிருமுறை	பதிகம்	௫
இரண்டாந் திருமுறை	,,	௪
மூன்றாந் திருமுறை	,,	௫
நான்காந் திருமுறை	,,	௪
ஆறாந் திருமுறை	,,	௪
ஏழாந் திருமுறை	,,	௭
ஆகப் பதிகங்கள்		௨௯

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அகத்தியர் தேவாரத்திரட்டின்

வரலாறு.

அநாதி மலமுத்த சுத்தஷாட்குண்ணிய பரிபூரணராயும், ஆதிமத்யாந்த சமானாதிக நாமரூப குணரகிதராயும் விளங்காநின்ற முழுமுதற்கடவுள் சிவபெருமானே என்று ஆன்மாக்களனைவருந் துணிந்து, வழிபட்டு உய்யும் பொருட்டுப் பற்பல திவ்விய அற்புதங் களினாலே சகல சமயாதீத சுத்தாத்வைத சைவசித்தாந்த நன் னெறியை ஸ்தாபித்தருளிய பரமாசாரிய மூர்த்திகள் நால்வர் எனப் படுவர். அவருள் **திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள்** சிவகுரு வாகிய முருகக்கடவுள் அவதாரமும், **திருநாவுக்கரசு சுவாமிகள்** வாகீசத்திருமுனிகள் அவதாரமும், **சுந்தரமூர்த்தி சுவாமிகள்** சிவ பெருமானுடைய திருவழகே வெளிப்பட்டு வந்த ஆலாலசுந்தரர் அவதாரமும், **மாணிக்கவாசக சுவாமிகள்** திருநந்திகணத்தலைவர் அவதாரமுமாயுள்ளார்கள். இவர்களது சரித்திரப்பிரபாவம் உபமந்யு பக்தவிலாசம், அகஸ்திய பக்தவிலாசம், சிவரஹசியம், ஹாலாஸ்ய மஹாத்மியம், காஞ்சிமஹாத்மியம் முதலிய நூல்களிலே கூறப்பட் டுள்ளது. இவர்கள் சைவ சமயமரபு மயங்காமல் என்றும் நிலைபெற் றிருக்கவேண்டி சகல வேதவேதாந்த ரகசியங்களை உலகுய்யத் தேவார திருவாசகம் என்னும் மந்திரமொழிகளாக அனுக்கிரகித்த வர்கள். ஆயினும் சிறப்புவகையால் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த திருப்பதிகங்கள் ருக்வேதசாரமாயும், திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த திருப்பதிகங்கள் மிகுதி யாய் யஜுர்வேதசாரமாயும், சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச் செய்த திருப்பதிகங்கள் அனேகமாய் சாமவேதசாரமாயும், மாணிக்க

வாசக சுவாமிகள் அருளிச்செய்த திருப்பதிகங்கள் பெரும்பான்மை அதர்வணவேதசாரமாயும் விளங்கிக்கொண்டிருக்கின்றன. இந்தத் திருப்பதிகங்களைத் தனித்தனியே கூறுமிடத்து முறையே "**திருக்கடைக்காப்பு**" எனவும், "**தேவாரம்**" எனவும், "**திருப்பாட்டு**" எனவும் "**திருவாசகம்**" எனவும் ஆன்றோர் வழங்குவர். இவைகளே கேட்போர் மனத்துக்கு ஆனந்தத்தை உண்டுபண்ணி அயரா அன்பு விளைவிப்பதும், கேட்போர்க்கினிய சற்சரித்திரங்கள் நிறைந்தனவும், சொல்வன்மையிற் சிறிதுங் குறைவில்லாதசும், அகில வேதாந்த ரகசியம் நிறைந்ததும், சிவம் பழுத்தவுள்ளத்துப் பத்தி வடிவினருக்குச் சர்வ சிரவணாதிகாரம் பெற்றதும், "**திருமுறைகள்**" என மங்கலப்பட்டம் பெற்றதுமா யுள்ளன. அன்றியும் பதிவாக் கென்றுந் தெள்ளிநிற்றணியப்பட்டும் இருக்கின்றன. இவைகளுக்கே திருமறைத்தமிழ், திராவிடவேதம், திருநெறித்தமிழ், குற்றமில்தமிழ், ஞானத்தமிழ், சொன்மாலை, உரைமாலை, அருணூல், ஞானப்பாடல் என்பனவாதி பல சிறப்புப்பெயர்களுமுண்டு.

பரமாசாரிய மூர்த்திகள் நால்வரும் வேதாகமங்களிலே கூறியுள்ள தெய்வவழிபாடாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு சன்மார்க்கங்களையும், குருலிங்க சங்கமபத்திகளையும், அப்பத்திசெய்தார்க்குச் சிவபெருமான் செய்யும் அருட்டிறத்தினையும் சர்வான்மாக்களும் உணர்ந்து உய்யும் வண்ணம் கண்ணுதல் கருணையால் திருமேனிதாங்கி தாமே நடாத்திக் காட்டியருளிய குருமூர்த்தங்களாதலாலும், சாதாரணமாகத் தத்தம் பிறவி நோய் நீக்கவந்து தவம்புரிந்தவர்களல்ல ராதலாலும், இவர்கள் முறையே "**ஆளுடையபிள்ளையார்**" எனவும், "**ஆளுடையவரசுகள்**" எனவும், "**ஆளுடையநம்பிகள்**" எனவும், "**ஆளுடைய வடிகள்**" எனவுந் துதிக்கப்படுகின்றனர். இவர்களுள் ஆளுடையபிள்ளையார் சிவபெருமானை முதலிலும், ஆளுடையவடிகள் இறுதியிலும், மற்றிருமூர்த்திகள் ஆங்காங்கு இடையிலுஞ் சுட்டிக்காட்டினார்கள். இவர்கள் பதிப்பொருளான பரசிவப்பரம்பொருளுக்கு உண்மைச் சிவனடியவர்களாய்ச் சிவமேயானவர்களாதலின் சைவத்திருவாளரெல்லாரும் இவர்களைத் தெய்வமாக வழிபட்டு வருகின்றார்கள். இவர்கள்

உள்ளும்புறமும் சிவத்தைக்கண்டு ஆனந்தித்தவர்கள். அன்பே சிவம் என்று போதித்து அவ்வழியில் நின்று உண்மை நிறுவின வர்கள். அளவில்லாத பெருமையுடையவர்கள். இவர்களே பாரார், விசும்புளார், பாதலத்தார், புறத்தார் யாராலும் சிறப்பித்துரைக்கப் பட்டவர்கள். இவர்கள் அருளிச்செய்து வைத்த தேவார திருவாசக கப்பதிகங்களைச் சிரத்தாபக்தியோடு ஓதிப்பிழைத்தார் கோடிகோடி. பிழைக்கின்றார் கோடிகோடி. பிழைப்பார் பல்லாயிரகோடி. இது உலகப்பிரசித்தம்.

இவர்களுள் மாணிக்கவாசக சுவாமிகள் நீங்கலாக திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் "தோடுடையசெவியன்" என்பதுமுதல் "கல்லூர்" என்பதீறாக பதினாறாயிரந் திருப்பதிகங்களையும், திரு நாவுக்கரசு சுவாமிகள் "கூற்றாயினவாறு" என்பதுமுதல் "ஒரு வனையும்" என்பதீறாக நாற்பத்தொன்பதினாயிரந் திருப்பதிகங்களை யும், சுந்தரமூர்த்திசுவாமிகள் "பித்தாபிறைசூடீ" என்பதுமுதல் "ஊழிதோறும்" என்பதீறாக முப்பத்தெண்ணாயிரந் திருப்பதிகங் களையும் ஆக ஒருலக்ஷத்து மூவாயிரந் திருப்பதிகங்களைத் திருவாய் மலர்ந்தருளினார்கள். இவைகளே தமிழ்வேதமாகிய தேவாரமாம். இவைகளுள் எழுநூற்றுத் தொண்ணூற்றேழு திருப்பதிகங்கள் நிற்க மற்றவை மறைந்து போயின. எஞ்சிநின்ற அவ்வெழுநூற் றுத் தொண்ணூற்றேழு திருப்பதிகங்களையும் திருவாரூர் அபய குலசேகர சோழமகாராஜாவுடைய வேண்டுகோளின்படி திருநாரை யூர்ப் பொல்லாப்பிள்ளையாருடைய மாணாக்கராகிய நம்பியாண்டார் நம்பி என்பவர் எழுதிருமுறைகளாக வகுத்தருளினார். அவ்வேழும் அடங்கிய திருமுறை அடங்கன்முறை எனப்படும்.

கல்வி, அறிவு, ஒழுக்கங்களாற் சிறப்புற்று விளங்கிய சிவாலய முனிவர் அவ்வடங்கன் முறையினது மகிமையையும், அதனை நாடோறும் விதிப்படி சிரத்தையோடு பாராயணஞ்செய்யின் முத்தி சித்திக்குமென்பதனையும் அறிந்து, தாம் அப்படிப் பாராயணஞ்செய்ய ஆசைகொண்டார். அது நிறைவேறுதல் கூடாமையால் வருத்த முற்று, ஸ்ரீசிதம்பரத்தை அடைந்து கனகசபையின்கண்ணே பஞ்ச கிருத்தியத்தாண்டவஞ் செய்தருளும் சபாநாதரைவணங்கி, தமது

கருத்து முற்றும் பொருட்டு நெடுங்காலம் அருந்தவஞ்செய்தார். அப்பொழுது சபாநாதருடைய திருவருளினாலே, "சிவாலயமுனிவனே! நீ பொதிய மலையிலிருக்கின்ற அகத்தியமுனிவனிடத்தே போவாயாயின் உன்கருத்து நிறைவேறும்" என்று ஓரசரீரிவாக்குத் தோன்றிற்று. அதுகேட்ட சிவாலயமுனிவர் மனமகிழ்ந்து, சபாநாதரை வணங்கி, விடைபெற்றுக்கொண்டு சென்று, பொதியமலையை அடைந்து, அகத்திய மகா முனிவரைச் சிந்தித்து, மூன்று வருடகாலம் அருந்தவஞ் செய்தனர். ஸ்ரீ அகத்திய மாமுனிவர் அவருக்கு வெளிப்பட்டு, அடங்கன்முறை முழுமையும் அவருக்கு உபதேசித்து, அதினின்றும் குருவருள், திருநீறு, பஞ்சாக்கரம், கோயிற்றிறம், சிவனுருவம், திருவடி, அருச்சனை, அடிமை என்பவைகளின் உண்மைகளைத் தெரிக்கநிற்கும் இருபத்தைந்து திருப்பதிகங்களை எடுத்துத்திரட்டி, "இவைகளை நாடோறும் பாராயணஞ் செய்பவர்கள் அடங்கன்முறை முழுமையும் பாராயணஞ் செய்பவர்களாவார்கள்" என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினார். சிவாலயமுனிவர் அப்படியே இவ்விருபத்தைந்து திருப்பதிகங்களையும் நெடுங்காலம் பாராயணஞ் செய்து சிவபெருமானுடைய திருவருளைப்பெற்றுப் பரமுத்தியெய்தினார்.

சீராருந் திருமுறைகள் கண்டதிறற் பார்த்திபனும்
ஏராரு மிறைவனையு மெழிலாரு நம்பியையும்
ஆராத வன்பினுட னடிபணிந்தங் கருள்விரவச்
சோராத காதன்மிகுந் திருத்தொண்டர் பதந்துதிப்பாம்.

திருச்சிற்றம்பலம்.

பரமாசாரியர் மூவர் சரித்திரச் சுருக்க விஷயக் குறிப்பு.

திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள்.

ஞான சம்பந்தர் ஞால மடைதல்
தந்தையோடு தடாகஞ் செல்லல்
நாத னளித்த ஞானப்பா லுண்ணல்
தோணி யப்பரைச் சுட்டிக் காட்டல்
ஞால முய்ய நற்றமிழ் பாடுதல்
கோலக் காவில் தாளம் பெறுதல்
பாண ரைப் பரிவுட னேற்றல்
மாறன் பாடியில் சிவிகை யூர்தல்
உலக முய்ய உபவீத மணிதல்
ஆண்ட வரசருக் கன்ப ராதல்
மழவன் மகளின் முயலக னகற்றல்
அடியவர் நோயை யகற்றி யருளல்
பட்டீச ரருளாற் பந்தரைப் பெறுதல்
ஆவடு துறையில் அரதனம் பெறுதல்
இசையின் பெருமையை எவர்க்கு முணர்த்தல்
அரவா லிறந்த வணிகனை எழுப்புதல்
திருநா வரசரைத் திரும்பவு மெதிர்கொளல்
வீழி மிழலையில் படிக்காசு பெறுதல்
மறைக்கா டதனில் கதவம் பிணித்தல்
மானியார் வேண்ட மதுரையை யடைதல்
மடத்தின் வன்னி மன்னனைப் பொருந்துதல்
பாண்டியன் சுரநோய் பற்பத்தால் தீர்த்தல்
எரியிட்ட வட்டை எடுத்துக் காட்டல்
ஆற்றி லிட்ட ஏடெதிர் செல்லல்
மன்னன் கூன்போய் மாசில னாதல்

ஆற்றி லோடம் அக்கரை செலுத்துதல்
பூதியைப் புத்தர் பொலிவுறப் பூசல்
அப்பர் சமக்க அஞ்சிப் பதைத்தல்
சாயாப் பனையைக் காய்பனை யாக்கல்
எலும்பைப் பெண்ணாய் எழுப்பித் தருதல்
திருமணஞ் செய்து சிவனடி சேர்தல்
சைவ நற்றுறை தழைத்து வாழ்தல்.

திருநாவுக்கரசு சுவாமிகள்.

நாவுக் கரசர் ஞால மடைதல்
அறம்பல செய்து அமண்மதஞ் சேர்தல்
தரும சேனராய்த் தலைமை வகித்தல்
சூலி யருளால் சூலைநோ யடைதல்
அதிகை யடைந்து அரன்பொடி பூசல்
கூற்றுப் பாடி குடர்நோ யொழித்தல்
உழ வாரங்கொண் டுறுபணி செய்தல்
பல்லவன் சமுகம் பயமின்றிச் செல்லல்
நீற்றறை யதனில் துன்பமற் றிருத்தல்
விடத்தை யருந்தி வெறுப்பற் றிருத்தல்
யானையும் பணியப் பதிக மோதல்
கல்லே மிதப்பாய்க் கடற்கரை யணைதல்
பல்லவன் பரமனுக் கடிமை யாக்கல்
இணையார் தோளில் இலச்சினை ஏற்றல்
சம்பந்த முனியொடு சம்பந்தம் பெறல்
திருவடி முடிமேல் தீட்டப் பெறுதல்
அப்பூதி மைந்தனுக் காருயி ரளித்தல்
கழுமல வேந்தரைக் கலந்தினி திருத்தல்
பொற்பார் மிழலையில் பொற்காசு பெறுதல்
மறைக்கா டதனில் கதவந் திறத்தல்
வாய்மூர் தன்னில் வரதனைக் காணல்
சம்பந்த ரேகுதல் தடுத்துக் கூறல்

பழையா றதனில் பரமனைக் காண்டல்
பைஞ்ஞீலி யப்பர் பசிநோய் தீர்த்தல்
காளத்தி கண்டு கயிலைக் கேகுதல்
கைகால் தேய்ந்தும் கவலைகொண் டிருத்தல்
குளத்தில் மூழ்கி ஐயா றடைதல்
கயிலைக் கோலங் கண்டு களித்தல்
சீகாழி யண்ணலின் சிவிகை தாங்குதல்
சோதனை கடந்து துதிபெற் றிருத்தல்
புகலூர் தன்னில் பொன்னடி சேர்தல்
சைவ நற்றுறை தழைத்து வாழ்தல்.

சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

ஆலால சுந்தரர் அவனியில் வருதல்
பித்த ரோலையைப் பிடுங்கிக் கிழித்தல்
தம்பிரான் றேனே தடுத்தாட் கொள்ளல்
வன்றொண்ட னமம் வாதுபேசிப் பெறல்
அதிகையில் முடிமிசை அரனடி சூட்டல்
அரனு ராணையால் ஆரூர் செல்லல்
தம்பிரான் றோழராய்த் தரணியி லுலாவல்
பரம னருளால் பரவைதோள் சேரல்
தொண்டர்தம் பெருமை விரன்மிண்ட ராற்றெளிதல்
திருத் தொண்டத்தொகை சிறப்புட னோதல்
குண்டையூ ரன்பர் நென்மலை கொடுத்தல்
அந்நெல் முழுதும் ஆரூர் வருதல்
வனப்பகை சிங்கடிக் கப்ப னாதல்
தழுவனை செங்கல் தகுபொன் னாதல்
பொன்னைப் பரவைக் கீந்து மகிழ்தல்
பாச்சிலாச் சிரமத்து பசும்பொன் பெறுதல்
முதுகுன் றத்தில் முழுகன கம்பெறல்
ஆற்றி லிட்டுக் குளத்தி லெடுத்தல்
பசிப்பிணி தீரப் பொதிசோ றுபெறல்

ஆரூரர் மகிழ்வொடு அமுதிரந் தளித்தல்
சங்கர னருளால் சங்கிலியைப் பெறல்
மகிழ்க்கீழ் நின்று மாசப தஞ்செயல்
தொண்டர் கூடித் திருமண முடித்தல்
அன்பி னிட்டத்தால் ஆரூர்ச் சேருதல்
கண்க ளிழந்து கலங்கி நிற்றல்
வெண்பாக் கத்தில் ஊன்றுகோல் பெறுதல்
கண்ணொன்று பெற்றுக் கச்சியி லமர்தல்
உத்தம ரருளால் உடற்பிணி யொழித்தல்
வலக்கண் பெற்று மனமகிழ்ந் திருத்தல்
பரமனைத் தூது பரவைபால் செலுத்துதல்
ஏயர்கோன் சூலையை எய்தித் தீர்த்தல்
சேரர் பெருமான் தோழ ராதல்
முருகன் பூண்டியில் செல்வ மிழத்தல்
முதலை யுண்ட மதலையை யழைத்தல்
வெண்களி றேறி வியன்கயி லைச்செலல்
சைவ நற்றுறை தழைத்து வாழ்தல்

திருச்சிற்றம்பலம்.

மூவர் புராணசாரம்.

திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள்.

காழிநகர்ச் சிவபாத விதயர் தந்த
கவுணியர்கோ னமுதுமையாள் கருதியூட்டும்
ஏழிசையி னமுதுண்டு தாளம் வாங்கி
இலங்கியநித் திலச்சிவிகை யிசைய வேறி
வாழுமுய லகனகற்றிப் பந்த ரேய்ந்து
வளர்கிழிபெற் றரவின்விட மருக நீர்த்து
வீழிநகர்க் காசெய்தி மறைக்கதவம் பிணித்து
மீனவன்மே னியின்வெப்பு விடுவித் தாரே. (க)

ஆரெரியிட் டெடுத்தவே டவைமுன் னேற்றி
ஆற்றிலிடு மேடெதிர்போ யணைய வேற்றி
ஓரமண ரொழியாமே கழுவி லேற்றி
ஓதுதிருப் பதிகத்தா லோட மேற்றிக்
காருதவு மிடிபுத்தன் றலையி லேற்றிக்
காயாத பனையின்முது கனிக ளேற்றி
ஈரமிலா வங்கமுயி ரெய்த வேற்றி
இலங்குபெரு மணத்தரனை யெய்தி னாரே. (உ)

திருநாவுக்கரசு சுவாமிகள்.

போற்றுதிரு வாமூரில் வேளாண் மைப்
பொருவில்கொறுக் கையரதிபர் புகழ னார்பால்
மாற்றருமன் பினிற்றிலக வதியா மாது
வந்துதித்த பின்புமரு ணீக்கி யாரும்
தோற்றியமண் சமயமுறு துயர நீங்கத்
துணைவாரு டரவந்த சூலை நோயால்
பாற்றருநீ ளிடரெய்திப் பாடலிபுத் திரத்தில்
பாழியொழித் தரனதிகைப் பதியில் வந்தார். (க)

வந்தமக் கையருளா னீறு சாத்தி
வண்டமிழா னேய்தீர்ந்து வாக்கின் மன்னய்
வெந்தபொடி விடம்வேழம் வேலை நீந்தி
வியன்சூலங் கொடியிடபம் விளங்கச் சாத்தி
அந்தமலப் பூதிமக னரவு மாற்றி
அருட்காசு பெற்றமறை யடைப்பு நீக்கிப்
புந்திமகிழ்ந் தையாற்றிற் கயிலை கண்டு
பூம்புகலூ ரரன்பாதம் பொருந்தி னரே. (௨)

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

தண்கயிலை யகநீங்கி நாவ லூர்வாழ்
சைவனர் சடையனர் தனயனராய்
மண்புகழ வருட்டுறையா னேலை காட்டி
மணம்விலக்க வன்றொண்டா யதிகை சேர்ந்து
நண்பினுட னருள்புரிய வாரூர் மேவி
நலக்கிளரும் பரவைதோ ணயந்து வைகித்
திண்குலவும் விறன்மிண்டர் திறல்கண் டேத்துந்
திருத்தொண்டத் தொகையருளாற் செப்பி னரே. (௧)

செப்பலருங் குண்டையூர் நெல்லழைத்துத்
திருப்புகலூர்ச் செங்கல் செழும் பொன்னச் செய்து
தப்பின்முது குன்றர்தரும் பொருளாற் றிட்டுத்
தடத்தெடுத்துச் சங்கிலிதோள் சார்ந்து நாதன்
ஒப்பிரனித் தூதுவந்தா றூடு கீறி
வுறமுதலை சிறமதலை புமிழ நல்கி
மெய்ப்பெரிய களிறேறி யருளாற் சேர
வேந்தருடன் வடகயிலை மேவி னரே. (௨)

மூவர் தோத்திரம்.

திருஞானசம்பந்த சுவாமிகள்.

கடியவிழ் சடுக்கைவேணித் தாதைபோற் கனற்கண்மீனக்
கொடியனை வேவநோக்கிக் குறையிரந் தனையான்கற்பின்
பிடியன நடையாள்வேண்டப் பின்னுயி ரளித்துக்காத்த
முடியணி மாடக்காழி முனிவனை வணக்கஞ் செய்வாம். (க)

பரசமய கோளரியைப் பாலறு வாயனைப்பூம்
பழனஞ் சூழ்ந்த
சிரபுரத்துத் திருஞான சம்பந்தப் பெருமானைத்
தேய மெல்லாம்
குரவையிடத் தமிழ்வேதம் விரித்தருளுங் கவுணியர்தங்
குல தீபத்தை
விரவியெமை யாளுடைய வென்றிமழ விளங்களிற்றை
விரும்பி வாழ்வாம்.

திருநாவுக்கரசு சுவாமிகள்.

அறப்பெருஞ் செல்விபாகத் தண்ணலஞ் செழுத்தாலஞ்சா
மறப்பெருஞ் செய்கைமாறு வஞ்சக ரிட்டநீல
நிறப்பெருங் கடலும்யார்க்கு நீந்துதற் கரியவேழு
பிறப்பெனுங் கடலுநீத்த பிரானடி வணக்கஞ்செய்வாம். (க)

இடையறாப் பேரன்பு மழைவாரு மிணைவிழியு
முழவா ரத்திண்
படையறாத் திருக்கரமுஞ் சிவபெருமான் றிருவடிக்கே
பதித்த நெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன்
ஞானப் பாடல்
தொடையறாச் செவ்வாயுஞ் சிவவேடப் பொலிவழகுந்
துதித்து வாழ்வாம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

அரவக லல்குலார்பா லாசைநீத் தவர்க்கே வீடு
தருவமென் றளவில் வேதஞ் சாற்றிய தலைவன் றன்னைப்
பரவைதன் புலவி தீர்ப்பான் கழுதுகண் படுக்கும் பானாள்
இரவினிற் றூதுகொண்டோ னிணையடி முடிமேல் வைப்பாம்.

ஒருமணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட் டாட்கொண்ட
உவனைக் கொண்டே
இருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட வல்லாள
னெல்லா முய்யப்
பெருமணச்சீர்த் திருத்தொண்டத் தொகைவிரித்த பேரருளின்
பெருமா னென்றும்
திருமணக்கோ லப்பெருமாள் மறைப்பெருமா னெமதுகுல
தெய்வ மாமால். (உ)

மூவர் சிறப்பு.

பாலை நெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனை யன்றேவிக் கராங்கொண்ட—பாலன்
மரணந் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தஞ்
சரணம்போ லல்லாமை காண். (க)

என்பைப்பெண் ணாக்கி யிரும்பாலை நெய்தலாய்
உம்பர் மகிழ்ந்திடவன் றோதியதும்—தம்பிரான்
கதவ மடைக்கக் கழறியது மெல்லாம்
பதிகரண மென்றுணரப் பா. (உ)

அரவங் கடித்திறந்தா னாருயிரை மீட்டுந்
திருமறைக்காட் டிற்பின் றிறந்தும்—கரமலையை
நீற்றறையை வேகமற நீராகப் பாடியதுங்
கூற்றதைத்தான் போதமெனக் கொள். (௩)

கல்லைப்பொன் னாக்கிக் கடுமுதலை வாய்ப்பிள்ளை
மெல்ல வழைத்து வெறுக்கையினைச்—செல்லுகின்ற
ஆற்றிலிட்டு மீட்டு மருங்குளத்திற் கண்டதுவும்
சாற்றிற் சிவகரணந் தான். (௪)

நால்வர் சிறப்பு.

சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமென் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும்—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூ லெங்கே
யெந்தைபிரா னஞ்செழுத்தெங் கே.

நால்வர் வயதும் திருநட்சத்திரமும்.

அப்பருக் கெண்பத்தொன் றருள்வாத வூரருக்குச்
செப்பிய நாலெட்டிற் றெய்வீகம்—இப்புவியில்
சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்
கந்தம் பதினா றறி.

சித்திரைச் சதய மப்பர் சிறந்தவை காசிமூலம்
அத்தரைப் பணிசம் பந்த ரானியா மகத்தி லந்த
முத்தமிழ் வாத வூரர் முதியநல் லாடி தன்னில்
சுத்தமாஞ் சோதி நாளிற் சுந்தரர் கயிலை சேர்ந்தார்.

நால்வர் தோத்திரம்.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

தேவார மகிமை.

அருமறையைச் சிச்சிலிப்பண் டருந்தத்தேடும்
அதுபோலன் றிதுவென்று முளதாமுண்மைப்
பரபதமுந் தற்பரமும் பரனேயன்றிப்
பலரில்லை யென்றெழுதும் பனுவல்பாரில்
எரியினிடை வேவாதாற் றெதிரேயோடும்
என்புக்கு முயிர்கொடுக்கு மிடுநஞ்சாற்றும்
கரியைவளை விக்குங்கன் மிதக்கப்பண்ணும்
கராமதலை கரையிலுறக் காற்றுங்காணே.

தேவாரப் பண்.

நட்டபாடை, இந்தளம், காந்தாரம், காந்தாரபஞ்சமம், கௌசிகம், பழம்பஞ்சுரம், தக்கேசி, பியந்தைக்காந்தாரம், சாதாரி, புறநீர்மை, நட்டராகம், பஞ்சமம், ஆகியபன்னிரண்டு பண்கள் பகலினும்,

கொல்லி, தக்கராகம், கொல்லிக்கௌவாணம், பழந்தக்கராகம், குறிஞ்சிசீகாமரம், வியாழக்குறிஞ்சி, மேகராகக்குறிஞ்சி, அந்தாளிக்குறிஞ்சி ஆகிய ஒன்பது பண்கள் இரவினும்,

திருத்தாண்டகம், செவ்வழி, செந்துருதி ஆகியமூன்று பண்கள் எக்காலத்தும் ஓதற்குரியவைகளாம்.

தேவார இராகம்.

தேவராகம் முப்பத்திரண்டாவன :—பைரவி, தேவக்கிரியை, மேகரஞ்சி, குறிஞ்சி, பூபாளம், வேளாவளி, மலகரி, பௌளி, சீராகம், இந்தோளம், பல்லதி, சாவேரி, படமஞ்சரி, லலிதை, தோடி, தேசி, வசந்தம், இராமக்கிரியை, குண்டக்கிரியை, கூர்ச்சரி, வராளி, கைசிகம், மாளவி, நாராயணி, பங்காளம், தந்நியாசி, காம்போதி, கௌளி, நாட்டை, தேசாக்கரி, காந்தாரி, சாரங்கம் என்பனவாம்.

தேவாரம் என்னுஞ் சொற்குப் பொருள்.

க. தே - தேவன்; வாரம் - அன்பு. அதாவது தேவ தேவனாகிய மஹாதேவனிடத்து ஓதுவோர்க்கும் கேட்போர்க்கும் அன்பை யுண்டுபண்ணுவது.

உ. தே - தேவன்; ஆரம் - மாலை - அதாவது மஹாதேவனாகிய சிவபிரானுக்கு ஆரம்போல் அலங்கரிப்பது.

ங. தேவ - தெய்வத்தன்மை பொருந்திய; ஆரம் - பாமாலை.

ச. தே - தேவன்; வாரம் - உரிமை. அதாவது மஹாதேவனாகிய சிவபெருமானுக்கே உரிமை யுடையது.

இன்னும் உள.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அகத்தியமகாமுனிவர்

திரட்டியருளிய

தேவாரத்திரட்டு.

தேவாரநுதலியபொருள்.

நேரிசை வெண்பா.

குருவருளும் வெண்ணீ றெழுத்தஞ்சுங் கோயில்
அரனுருவ மென்றலைமே லாக்குந்—திருவடியும்
சிட்டான வர்ச்சனையுந் தொண்டுஞ் சிவாலயர்க்கென்
றிட்டா ரகத்தியனா ரெட்டு.

திருப்பதிகக்கருத்துரை.

நிலைமண்டிலவாசிரியப்பா.

தோடு கூற்றுப் பித்தா மூன்றும்
பீடுடைத் தேசிகன் பேரரு ளாகும்
நீற்றுப் பதிக நிகழ்த்துங் காலை
மாற்றுப் பரையின் வரலா றாகும்
துஞ்சல் காதல் சொற்றுணை மற்றும்
அஞ்செழுத் தன்மை யருளிய தாகும்
ஆரூர் தில்லை காட்டூர் மூன்றும்
சீரார் கோயிற் றிறமைய தாகும்

ஒருரு வரிய பாளை வடிவே
மருவா ரென்ற வண்டமி ழைந்தும்
திருவார் மேனிச் செய்திய தாகும்
பொடியுடை யரவணை யந்த ணாளன்
அடியிணை தந்த வருளே யாகும்
பந்து வேற்று சொன்றிவை மூன்றும்
நந்தலி லருச்சனை நாட்டிய தாகும்
வேய்குலந் தில்லை யெனுமிவை மூன்றும்
நாயனு மடிமையு நாட்டிய தாகும்
இப்பரி சகத்திய முனிவ னிருநிலத்
தொப்பரு மூவ ரோதுதே வார
முழுதையுஞ் சிவாலய முனிக்கறி வித்துப்
பழுதிலா வவையுட் பரிந்தெடுத் திருபத்
தைந்துயர் பதிகமு மறிவுறத் திரட்டி
எண்ணரு மடங்க லியாவையு முணரும்
புண்ணிய மிவைகொடு பொருந்து மென்றவன்
தனக்கருள் செய்தன னகவுற வதனால்
தீதிலா வகத்தியத் திரட்டினை யுலகில்
ஓதின ரடங்கலு மோதின ராவரே.

திருச்சிற்றம்பலம்.

தேவாரத்திரட்டின் திருவுள்ளக்கிடை.

வேதமுதலிய பதினெண் வித்தைகளையு மொருங்குணர்ந்தவரும், இயல், இசை, நாடகமென்னும் முத்தமிழையும் வளர்த்தவரும், முனிவேந்தரும், சிவஞானப் பெருஞ்செல்வருமாகிய ஸ்ரீ அகத்தியமாமுனிவர் மேற்குறித்த இருபத்தைந்து தேவாரத்திருப்பதிகங்களை எடுத்துத்தொகுக்கும்போது மிக்க ஆராய்ச்சியோடு அவற்றின் மெய்ப்பொருள் தோன்றத் திரட்டியருளினரென்பது அப்பதிகங்களின் சேர்வைப்பாட்டை நுனித்த மதிகொண்டு உற்றுநோக்குவார்க்கு உண்மை வெளிப்படாநிற்கும்.

சிவஞானபோதம், சிவஞான சித்தியார் முதலிய அரிய பெரிய ஒப்பில் சாஸ்திரங்கள் முப்பொருளின் உண்மைப்பொருளை உள்ள உள்ளவாறு உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளக்கி ஜீவன்முத்தனது சுவாநுபவநிலை கைவரும்படி போதிக்கும் உண்மை நூல்களாம்.

தேவாரத் திருப்பதிகங்கள், அந்நூல்களின் பயனும், முத்தி முடிவாயு முள்ள வேதாந்த சித்தாந்தமாகிய சிவானந்தாநுபவமென்னுஞ் சொரூப சாக்ஷாத்காரம் எய்தப்பெற்ற சிற்பரச்செல்வர்களாகிய சிவஞானிகள்கூடத் தெரித்துணர்த்த முடியாமல் அவ்வப்போது எல்லைமருவாது நீண்டு நிகழும் ஆனந்தாநுபவத்தை விளக்கிக்காட்டுந் தோத்திரங்களாம்.

இவ்வுண்மை குருவருள், பரையின் வரலாறு (அதாவது திருவெண்ணீறு), அஞ்செழுத்துண்மை, கோயிற்றிறம், சிவனுருவம், திருவடி, அர்ச்சனை, அடிமை என்னும் எட்டுநிலைகள் ஒருவருக்கு ஜீவன்முத்தி தசையில் நிகழ்வனவாதலின் அவற்றைத் தெளிவுபெற இப்பதிகங்களிலே விளக்கிக்காட்டி வற்புறுத்தியிருத்தல் சிந்திக்கத்தக்கது.

க - வது. **குருவருள்.** முத்திவிருப்பத்தையுடைய ஒருவன் நித்தியமாகிய பேரின்பப் பெருவாழ்வை அடைய விரும்பின் முதற்கண்ணே இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் என்னுமிவை வேண்டப்படுவன். படவே, இவற்றின் விளைவே பரிபக்குவமாம். இப்பக்குவம் சிவபுண்ணிய வினைவால் வரத்தக்கது. இச்சிவ புண்ணியமோ புண்ணிய தீர்த்தங்கடோறுஞ்சென்று படிந்து, ஸ்தலங்கடோறுஞ் சென்று, மூர்த்திகளை வழிபட்டு, உளங்கசிந்துருகுவதால் எய்தப்பெறுவது. அவ்வாறு எய்தப்பெற்ற பக்குவான்மாவுக்கு அதுகாறும் அறிவுக்கறிவாய் உண்ணின்றுணர்த்திய முழுமுதற்பொருளே ஆசாரியமூர்த்தியாய் வெளிப்பட்டு வந்து அருள்நோக்கஞ் செய்து அந்தகாரத்தை ஒருங்கே ஒழிக்கும் ஆதித்தனைப்போல சித்தாந்த மஹாவாக்கியமென்னும் ஒப்பற்ற ஓர்மொழியை உபதேசஞ்செய்து முத்திப்பேற்றை அடையும்படி அருள்செய்வன். அவ்வாறருளும் அருளே குருவருளாம்.

2

௨ - வது. **பரையின் வரலாறு.** அங்ஙனம் குருவருள்பெற்ற ஆன்மாவுக்கு ஆன்மவியாபக முழுதும் நின்று விளக்குவதாகிய முதல்வனது பராசத்தியின் விளக்கம் விளங்கித்தோன்ற அக்கணமே அப்பராசத்தியிலே வியாபகமுற்று, அதனோடு அநந்நியமாய் நின்று, எங்கணும் அப்பராசத்தி சொரூபமே காணப்பெற்று, பூரண நிஷ்டையில் அழுந்தி நிற்கும் நிலையே பரையின் வரலாறும். (திருவெண்ணீறு - பராசத்தியின் சொரூபமாகும்).

ங - வது. **அஞ்செழுத்துண்மை.** அவ்வாறு பரை வியாபகத்தில் அழுந்தி பூரணநிஷ்டை கூடியிருக்கும் நிலையில் பண்டைப் பயிற்சி வசத்தால் பிரபஞ்சவாசனைபற்றி சலிப்பு உண்டாமாயின் அச்சலிப்புநீங்கி அந்நிலை தலைகூடுதற் பொருட்டு ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை உச்சரிக்கவேண்டி யிருத்தலின் அதனை ஓது முறையிலோதி, உணருமுறையிலுணர்ந்து, நிற்குமுறையில் நின்று சிவோஹம்பாவனை பண்ணும் அநுபூதிநிலையே அஞ்செழுத்துண்மையாம்.

ச - வது. **கோயிற்றிறம்.** அவ்வாறு ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை அநுசந்தானஞ் செய்து பூரணநிஷ்டையில் அழுந்தும் ஆன்மா ஒரோவழி தன்னறிவு புறத்தே சென்று தொழிற்படுமாயின் அதனைத் தன் வசப்படுத்துங்காரணமாக ஆலயங்கடோறுஞ் சென்று முழுமுதற் பொருளாகிய இறைவனை இலிங்கமுதலிய திருமேனிகளில் விளக்கமாகக்கண்டு திரிகரணங்களையும் ஒருவழிப்படுத்திக்கொண்டு சிவத்தின் பாலாக்கும் நிலையே கோயிற்றிறமாம்.

ரு - வது. **சிவனுருவம்** பரையின் வியாபகத்தில் அழுந்தி ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை அநுசந்தித்து ஆலயவழிப்பாட்டில் தலைப்பட்டு நிற்கையில் அகக்கண்ணினாலே சிவத்தின் தடஸ்த லக்ஷணத்தையே தரிசித்துப் பரவசப்பட்டு நிற்கும் அநுபூதி நிலையே சிவனுருவமாம்.

சு - வது. **திருவடி.** அவ்வாறு சிவசொரூபத்தைத் தரிசித்து அச்சிவத்தின் திருவடிகளில், அதாவது அருள்நிறைவில், தலைப்பட்டு ஆண்டு கரைகடந்தெழும் பேரானந்தப் பெருவெள்ளத்தி

லழுந்தி நான் என்னும் ஆன்ம அறிவுகெட்டு (மாண்டு), முதல்வனறிவு மாத்திரையாய்த் தான் என நிற்கும் நிலையே திருவடியாம். இதுவே அத்வைதாநந்த முத்தியாம். (இவ்வுண்மை பதமுத்தியைப் பரமுத்தியாகக் கொண்ட சமயிகளுக்கு விளங்காது. சொல்லினும் வெகு தர்க்கமாம்.)

எ - வது. **அருச்சனை.** "அருச்சனை பாட்டேயாகும்" என்று சிவபிரான் கட்டளையிட்டருளியபடி திருவடிப்பேறு பெற்று எல்லையில்லாத பேரின்பப் பெருவெள்ளத்தில் திளைத்திருக்கும்படிச் செய்த சிவத்தினது பேருபகாரத்தைச் சாக்கிரத்தில் நினைத்து நினைத்து, அயராவன்பினாலே ஆவியோடாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருகும்படி போற்றுதலாகிய பாடும் நிலையே அருச்சனையாம்.

அ - வது. **அடிமை.** குருவருள் பெற்று, பரைவியாபகத்திலழுந்தி, ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை அநுசந்தித்து, ஆலயங்கடோறுஞ் சென்று வழிபட்டு, வாசனாமலத்தைப் பற்றறக்கழித்துச் சிவத்தை அருட்கண்ணாற்கண்டு, அச்சிவத்தின் திருவருளாகிய திருவடியிற் றிளைத்து, மலவலியையும் வினைவலியையும் வென்று,உற்பாதங்களுக்குச் சிறிதும் அஞ்சாது தம்மிச்சையின்படி உலாவும் மெய்ஞ்ஞானிகளென்னுந் திருத்தொண்டர்களோடு கூடியிருக்கும் நிலையே அடிமையாம்.

ஆயின், ஆன்மா, **சிவனுக்கடிமை** என்பதின் தாற்பரியம் யாதோவெனின், ஆன்மா மலமுழுதும் நீங்கப்பெற்று தன்னறிவு வியாபகமாய் விளங்கிய வழியும் தன்னாற்சாரப்பட்ட சிவத்தை மாத்திரம் அறிதலன்றி யற்றொன்றையும் அறிதல் செல்லாமையின் ஆன்மா சிவனுக்கடிமை எனக்கூறப்பட்டது. இவ்வுண்மை "அம்மா பொருளொன்று மறிந்திலனே" என்னும் திருவாக்கானுமறிக.

இவ்வாறு **குருவருள்** முதல் **அடிமை** ஈருகக்கூறப்பட்ட எட்டு நிலைகள் சிற்பரச்செல்வர்களாகிய ஜீவன் முத்தர்களது நிலையாதலின் அவற்றைப் பிரதிபாதிக்குந் திருப்பதிகங்களை ஸ்ரீ அகஸ்தியமாமுனிவர் தொகுத்துத்திரட்டிச் சிவாலய முனிவருக்குத் தந்தருளினார். ஆதலின் இந்தத்திரட்டு சைவ சமயத்தவர்க்கு நாடோறும் நியமமந்திரமா யிருந்து வருகின்றது.

திருச்சிற்றம்பலம்.

திருஞான சம்பந்த சுவாமிகள்.

திருப்பிரமபுரம்.

முதற்றிருமுறை-பண்-நட்டபாடை.

குருவருள்.

திருச்சிற்றம்பலம்.

தோடு டையசெவி யன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக்
காடு டையசுட லைப்பொடி பூசியென் னுள்ளங் கவர்கள்வன்
எடு டையமல ரான்முனை நாட்பணிந் தேத்த வருள்செய்த
பீடு டையபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. (க)

முற்ற லாமையிள நாகமோ டேன முளைக்கொம் பவைபூண்டு
வற்ற லோடுகல னப்பலி தேர்ந்தென துள்ளங் கவர்கள்வன்
கற்றல் கேட்டலு டையார்பெரி யார்கழல் கையாற் றொழுதேத்தப்
பெற்ற மூர்ந்தபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. (உ)

நீர்ப ரந்தநிமிர் புன்சடை மேலோர் நிலாவெண் மதிசூடி
எர்ப ரந்தவின வெள்வளை சோரவென் னுள்ளங் கவர்கள்வன்
ஊர்ப ரந்தவுல கின்முத லாகிய வோரூ ரிதுவென்னப்
பேர்ப ரந்தபிர மாபுர மேவிய பெம்மா னிவன்றே. (௩)

(அரும்பத விளக்கம்) க. சுடலைக்காடு-சுடுகாடு; அதாவது ஸர்வ ஸம்ஹாரமயானம்; பொடி - பெருந்தேவர்கள் வீந்த சுடலை விபூதி; கள்வன் - ஆன்மாக்களுக்குத் தோன்றாவண்ணம் மறைந்திருப்பவன்; எடு - இதழ்; பீடு-பெருமை; இவன்-இதோ என் கண் முன் தோன்றும் முதல்வன். (உ) முற்றல் - முதிர்ந்த; எனம் - பன்றி; வற்றல் ஓடு - தசை யற்றதலை; கலன் - பாத்திரம்; பெற்றம் - இடபம். (௩) இனம் - கூட்டம்.

விண்மகிழ்ந்தமதி லெய்ததுமன்றிவி ளங்கு தலையோட்டில்
உண்மகிழ்ந்துபலி தேரிய வந்தென துள்ளங் கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவர வம்மலர்க் கொன்றை மலிந்த வரைமார்பில்
பெண்மகிழ்ந்தபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. (ச)

ஒருமை பெண்மையுடை யன்சடை யன்விடை யூரும் மிவனென்ன
அருமை யாகவுரை செய்ய வமர்ந்தென துள்ளங் கவர்கள்வன்
கருமை பெற்றகடல் கொள்ளமி தந்ததோர் காலம் மிதுவென்னப்
பெருமை பெற்றபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. (ரு)

மறைகலந்தவொலி பாடலோ டாடல ராகி மழுவேந்தி
இறைகலந்தவின வெள்வளை சோரவென் னுள்ளங் கவர்கள்வன்
கறைகலந்தகடி யார்பொழி னீடுயர் சோலைக் கதிர்சிந்தப்
பிறைகலந்த பிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே. (சு)

சடைமுயங்குபுன லன்னன லன்னெரி வீசிச் சதிர்வெய்த
உடைமுயங்குமர வோடுழி தந்தென துள்ளங் கவர்கள்வன்
கடன்முயங்குகழி சூழ்குளிர் கானலம் பொன்னஞ் சிறகன்னம்
பெடைமுயங்குபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. (எ)

வியரிலங்குவரை யுந்திய தோள்களை வீரம் விளைவித்த
உயரிலங்கையரை யன்வலி செற்றென துள்ளங் கவர்கள்வன்
துயரிலங்கும்முல கிற்பல வூழிக டோன்றும் பொழுதெல்லாம்
பெயரிலங்குபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. (அ)

தாணுதல்செய்திறை காணிய மாலொடு தண்டா மரையானும்
நீணுதல்செய்தொழி யந்நிமிர்ந் தானென துள்ளங் கவர்கள்வன்
வாணுதல்செய்மக ளீர்முத லாகிய வையத் தவரேத்தப்
பேணுதல்செய்பிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. (கூ)

புத்தரோடுபொறி யில்சம ணும்புறங் கூற நெறிநில்லா
ஒத்தசொல்லவுல கம்பலி தேர்ந்தென துள்ளங் கவர்கள்வன்

(ரு) ஒருமை - ஓர்பாகம். (சு) இறை - கைத்தலம். (எ) சதிர்வு-அழகு; உழிதந்து - திரிந்துவந்து. (அ) வியர் - வியர்வு. (கூ) தாணுதல் - தாள் நுதல், அதாவது அடிமுடி; இறைகாணிய - இறைவனைக் காணும்பொருட்டு. (ய) நெறி - சைவநன்னெறி.

மத்த யானைமறு கவ்வுரி போர்த்ததோர் மாயம் மிதுவென்னப்
பித்தர் போலும்பிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. (௰)

அருநெ றியமறை வல்ல முனியகன் பொய்கை யலர்மேய
பெருநெ றியபிர மாபுர மேவிய பெம்மா னிவன்றன்னை
ஒருநெ றியமனம் வைத்துணர் ஞானசம் பந்தன் னுரைசெய்த
திருநெ றியதமிழ் வல்லவர் தொல்வினை தீர்த லெளிதாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் - சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பிரமபுரிசர், தேவியார்-திருநிலைநாயகியம்மை.

திருத்தோணியில் வீற்றிருப்பவர்—தோணியப்பர்.

இந்தத் திருப்பதிகம், பூவாரும் சீகாழிப் பொய்கைக்கரையிலே பிரமவித்தியா தேவியாராய உமாபிராட்டியாரது சிவஞானப்பாலை யுண்டருளிய ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்த சுவாமிகளை அவர் தந்தையாரான சிவபாதவிருதயர் "எச்சில்பொருந்த இப்பாலூட்டினரைக்காட்டுக" என்று கோபித்து மாறுகொண்டோச்சியபோது, பிள்ளையார் கண்களினின்றும் நீர்பெருகத் தம்மை ஆட்கொண்டு எதிர்நிற்கும் பெருமானாகிய தோணியப்பரைத் தமது வலத் திருக்கரவிரலாற் சுட்டிக்காட்டி ஓதியருளியது.

மன்னுயிர்களின் மாதவப்பயனாய்த் தோன்றிய நம்காழிப் பிரானார் தாமோதியருளிய இந்தத்திருப்பதிகத்தின் முதலடியின் முதன்மொழியின் முதலெழுத்து **தோ** என்று அமைத்ததின் திருவுள்ளக்கிடை பலவாயிருப்பினும் அவற்றுள் சில வருமாறு:—

௧. வேண்டுதல் வேண்டாமை யிலானாகிய பரன் தெய்வத் **தமிழ்**மொழியில் மிக்க இனித்தனாயிருத்தலினாலே தமிழ்ச்சொற்களினாலே ஆக்கப்பட்ட தமிழ்வேதம் மிகச்சிறப்புடைத்து எனவும், உ. ஐந்தெழுத்தோடுகூடிய **தமிழ்** என்னுந் தனிமொழி அன்பருள்

யானை - கயாசுரன். (௧௧) அருநெறிய - அரிய மார்க்கங்களையுடைய; முனி-நான்முகமுனி; பெருநெறி - முத்திநெறி; உணர் - ஓதாதுணர்ந்த.

ளத்தை எளிதிலே உருகச்செய்து இறைவன் றிருவடிக்கண்படுத்தும் பேராற்றலுடைத்து எனவும் விளக்க முதலில் த எனவும், ரு. மஹா மந்திரமாகிய உயர் காயத்திரியின் அரும்பொருளாயுள்ளவர் பர்க் கன் என்னுஞ் சப்தத்துக்குரிய சூரிய மண்டல அந்தர்யாமியாகிய ஸர்வகர்மபலதாதா வென்னும் சிவபிரானாதலின் அக்காயத்திரியின் முதலெழுத்து த எனவும், ச. சகல வித்தைகளிலுஞ் சிறந்த தகர வித்தையில் உபாசிக்கப்படும் பரம்பொருள் சிவனேயாதலின் அவ்வித் தையின் முதலெழுத்து த எனவும் யாவருந்தெளிந்து உண்மையுணர் ந்து உய்யும் வண்ணம் முதற்கண் தகரத்தை எடுத்து ஓதியருளினர். [ரு-ச.] இதனால் ஆதித்தனிலும் புருஷனிலும் உள்ளவனொருவனே.

பின்னர், க. சகல சப்தமய அர்த்தமயப் பிரபஞ்சங்களுக்கும் மூலகாரணமாய் ஸர்வமந்திர ஸாரபூதமாயுள்ளது ஓங்காரம் எனவும், உ. ஆரியவேதம் ஆரம்பமாகும் போதே ஓம் என்று தொடங்கிச் சென்றமையால் தமிழ்வேதமும் ஆரிய வேதம்போல எத்தகை யோராலும் பாராட்டப்படத்தக்கது எனவும் வற்புறுத்தும் பொருட் டுப் பிரணவத்தின் பிரதமாட்சரத்தைத் தகரத்தோடு புணர்த்தித் திருமுறையை ஆரம்பித்தனர்,

அன்றியும், நம் காழிச்செல்வரது முதற்றிருமுறையின் முத லடியின் முதன் மொழியின் முதலெழுத்தாய இவ்வோங்காரம் பின் னர் சேக்கிழார் சுவாமிகள் அருளிச்செய்த பன்னிரண்டாந்திரு முறையான திருத்தொண்டர் புராணத்தின் இறுதிச்சருக்கத்தின் இறுதிச்செய்யுளின் இறுதி அடியின் இறுதிச்சொல்லின் இறுதி யெழுத்தாகிய மகரத்தோடு புணர்ந்து ஓம் எனமுடிய வேண்டி யிருத்தலின் தமிழ்வேதமாகிய பன்னிருதிருமுறைகளும் பிரண வத்திற்றோன்றிப் பிரணவத்தில் ஒடுங்குமெனவும், பிரணவவாச் சியர் சிவபெருமான் எனவும் அறிவுறுத்தியவாறுமாயிற்று.

அல்லாமலும், மக்களது செவியின் அமைப்பை உற்று நோக்கி பண்டைத்தமிழர் ஓங்காரத்துக்கு வரிவடிவு கண்டறிந்தமையானும், தாம் இனி ஓதப்போகும் வேதவோசையைக் கவர்வது செவியே யாதலானும், ஓங்காரத்துக்கும் செவிக்கும் உள்ள ஒற்றுமையை நோக்கித் **தோடுடைய செவியன்** என்று திருவாய்மலர்ந்தருளினர்.

அல்லதூஉம், சிந்தையும் மொழியுஞ் செல்லா நிலைமைத் தாய அந்தமிலின்பத்தழிவில் வீடு எய்துதற்கு அவனருள் உபகரிப் பினல்லது அடையப் பெறுமையின் அவ்வருளே திருமேனியாக வுடைய அம்பிகையின் ஆபரணமாகிய தோட்டினை முதற்கண் ணெடுத்து வியந்தருளினார்.

திருநாவுக்கரசு சுவாமிகள்.

திருவதிகை வீரட்டானம்.

நான்காந் திருமுறை-பண்-கொல்லி.

தருவருள்.

திருச்சிற்றம்பலம்.

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
    கொடுமை பலசெய் தனநா னறியேன்
ஏற்றா யடிக்கே யிரவும் பகலும்
    பிரியா துவணங் குவனெப் பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
    குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
    வீரட் டானத் துறையம் மானே. (௧)

நெஞ்சம் முமக்கே யிடமா கவைத்தேன்
    நினையா தொருபோ துமிருந் தறியேன்
வஞ்சம் மிதுவொப் பதுகண் டறியேன்
    வயிற்றோ டுதுடக் கிமுடக் கியிட
நஞ்சா கிவந்தென் னைநலி வதனை
    நணுகா மற்றுரந் துகரந் துமிடர்
அஞ்சே லுமென்னீ ரதிகைக் கெடில
    வீரட் டானத் துறையம் மானே. (௨)

---

(௧) கூற்று - இயமன், இராவணனுக்கு உபாயங்கூறிய சொல்; அகம்படி - உள்ளிடம். (௨) துரந்து - அகற்றி; கரந்தும் இடர்-ஒழித் திருமில்லை.

பணிந்தா ரனபா வங்கள்பாற் றவல்லீர்
படுவெண் டலையிற் பலிகொண் டுழல்வீர்
துணிந்தே யுமக்காட் செய்துவா ழலுற்றால்
சுடுகின் றதுசூ லைதவிர்த் தருளீர்
பிணிந்தார் பொடிகொண் டுமெய்பூ சவல்லீர்
பெற்றமேற் றுகந்தீர் சுற்றும்வெண் டலைகொண்
டணிந்தீ ரடிகே ளதிகைக் கெடில
வீரட் டானத் துறையம்மானே. (௩)

முன்னம் மடியே னறியா மையினால்
முனிந்தென் னைநலிந் துமுடக் கியிடப்
பின்னை யடியே னுமக்கா ளும்பட்டேன்
சுடுகின் றதுசூ லைதவிர்த் தருளீர்
தன்னை யடைந்தார் வினைதீர்ப் பதன்றோ
தலையா யவர்தங் கடனா வதுதான்
அன்ன நடையா ரதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. (௪)

காத்தாள் பவர்கா வலிகழ்ந் தமையால்
கரைநின் றவர்கண் டுகொளென் றுசொல்லி
நீத்தா யகயம் புகநூக் கியிட
நிலைக்கொள் ளும்வழித் துறையொன் றறியேன்
வார்த்தை யிதுவொப் பதுகேட் டறியேன்
வயிற்றோ டுதுடக் கிமுடக் கியிட
ஆர்த்தார் புனலா ரதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. (௫)

சலம்பூ வொடுதூ பமறந் தறியேன்
தமிழோ டிசைபா டன்மறந் தறியேன்
நலந்தீங் கிலுமுன் னைமறந் தறியேன்
உன்னா மமென்னா வின்மறந் தறியேன்

---

(௩) பிணிந்தார் - இறந்தவர்கள். (௫) நீத்தாய - நிலைத்தலில்லாத; கயம் - குளம்; நூக்கியிட - தள்ளிவிட.

உலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வாய்
உடலுள் ளுறுசூலைதவிர்த் தருளாய்
அலந்தே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. (சு)

உயர்ந்தேன் மனைவாழ்க் கையுமொண் பொருளும்
ஒருவர் தலைகா வலிலா மையினால்
வயந்தே யடைக்காட் செய்துவா ழலுற்றால்
வலிக்கின் றதுசூலைதவிர்த் தருளீர்
பயந்தே யென்வயிற் றினகம் படியே
பறித்துப் புரட்டி யறுத்தீர்த் திடநான்
அயர்ந்தே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. (எ)

வலித்தேன் மனைவாழ்க் கைமகிழ்ந் தடியேன்
வஞ்சம் மனமொன் றுமிலா மையினால்
சலித்தா லொருவர் துணையாருமில்லைச்
சங்கவெண் குழைக்கா துடையெம் பெருமான்
கலித்தே யென்வயிற் றினகம் படியே
கலக்கி மலக்கிட் டுக்கவர்ந் துதின்ன
அலுத்தே னடியே னதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே. (அ)

பொன்போ லமிளிர் வதோர்மே னியினீர்
புரிபுன் சடையீர் மெலியும் பிறையீர்
துன்பே கவலை பிணியென் றிவற்றை
நணுகா மற்றுரந் துகரந் துமிடீர்
என்போ லிகளும் மையினித் தெளியார்
அடியார் படுவ திதுவே யாகில்
அன்பே யமையும் மதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. (க)

(எ) வயந்து - வசப்பட்டு. (அ) மலக்கிட்டு - முறுக்கி.

போர்த்தா யங்கொரா னையினீ ருரிதோல்
புறங்கா டரங்கா நடமா டவல்லாய்
ஆர்த்தா னரக்கன் றனைமால் வரைக்கீழ்
அடர்த்திட் டருள்செய் தவது கருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்து மெழுந்தால்
என்வே தனையா னவிலக் கியிடாய்
ஆர்த்தார் புனல்சூ ழதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. (ம)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வீரட்டானேசுவரர், தேவியார்-திருவதிகை நாயகியம்மை,

இந்தத் திருப்பதிகம், தம்முடைய சூலைநோய்தீர ஓதி அருளியது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

திருவெண்ணெய் நல்லூர்.

ஏழாந்திருமுறை-பண்-இந்தளம்.

தருவருள்.

திருச்சிற்றம்பலம்.

பித்தாபிறை சூடபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை [யுள்
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறை
அத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே. (க)

(ம) அங்கு - காசி; மால்வரை - கயிலாயமலை. (க) பித்தா - பித்தரே, அதாவது அளவுகடந்த அன்புடையவரே; எத்தான் - எவ்வகையாயினும்; அத்தா - அப்பனே; ஆமே - அடுக்குமோ.

நாயேன்பல நாளுநினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாவருள் பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆயாவுனக் காளாயினி யல்லேனென லாமே. (உ)

மன்னேமற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னைப்
பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு துந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அன்னேயுனக் காளாயினி யல்லேனென லாமே. (ங)

முடியேனினிப் பிறவேன்பெறின் மூவேன்பெற்ற மூர்தீ
கொடியேன்பல பொய்யேயுரைப் பேனைக்குறிக் கொண்ணீ [யுள்
செடியார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறை
அடிகேளுனக் காளாயினி யல்லேனென லாமே. (ச)

பாதம்பணி வார்கள்பெறு பண்டம்மது பணியாய்
ஆதன்பொரு ளானேனறி வில்லேனரு ளாளா
தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆதீயுனக் காளாயினி யல்லேனென லாமே. (ரு)

தண்ணார்மதி சூடீதழல் போலுந்திரு மேனி
எண்ணார்புர மூன்றுமெரி யுண்ணநகை செய்தாய்
மண்ணார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அண்ணாவுனக் காளாயினி யல்லேனென லாமே. (சு)

ஊனாயுயி ரானாயுட லானாயுல கானாய்
வானாய்நில னானாய்கட லானாய்மலை யானாய்
தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூ ரருட் டுறையுள்
ஆனாயுனக் காளாயினி யல்லேனென லாமே. (எ)

ஏற்றார்புர மூன்றுமெரி யுண்ணச்சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித்திரி வேனோசெக்கர் வானீர்

(உ) பேய் - எங்கும் அலைந்து திரியும் உயிர்; ஆய் - தாய். (ச) முடியேன் - இறவேன்; மூவேன் - மூப்படையேன். (ரு) பண்டம் - அருள்ஞானம்; ஆதன் - அறிவில்லாதவன். தாது - மகரந்தம். (அ) தேற்றாதன - தெளிவில்லாத வார்த்தைகள்; நீர் - நிறம்;

எற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
ஆற்றாயுனக் காளாயினி யல்லேனென லாமே. (அ).

மழுவாள்வல னேந்தீமறை யோதீமங்கை பங்கா
தொழுவா ரவர்துயராயின தீர்த்தலுன தொழிலே [யுள்
செழுவார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறை
அழகாவுனக் காளாயினி யல்லேனென லாமே. (கூ).

காருர்புன லெய்திக் கரை கல்லித்திரைக் கையால்
பாருர்புக ழெய்தித்திகழ் பன்மாமணி யுந்திச்
சீருர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆரூரனெம் பெருமாற்கா ளல்லேனென லாமே. (ம).

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கிருபாபுரீசுவரர், தேவியார் - வேற்கண் நாயகியம்மை.

இந்தத் திருப்பதிகம், திருமணக்காலத்தில் தடுத்தாட் கொண்ட போது ஓதியருளியது.

திருஞானசம்பந்த சுவாமிகள்

திருவாலவாய்த்திருநீற்றுப்பதிகம்.

இரண்டாந்திருமுறை - பண் - காந்தாரம்

பறையின் வரலாறு.

திருச்சிற்றம்பலம்.

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் றிருவால வாயான் றிருநீறே. (க).

(அ) ஆறு - நன்னெறி. (கூ) வலன் - வலக்கரம். (ம) கார் - கரியமேகம்; பாருர் - உலகில் பரவிய. (க) மேலது - உடலின் மேல் அணியப்பெற்றிருப்பது; தந்திரம் - உபாயம்; துவர் - பவளம்..

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் றிருநீறே. (உ)

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் றிருநீறே. (௩)

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் றிருநீறே. (௪)

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் றிருநீறே. (௫)

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் றிருநீறே. (௬)

எயிலது வட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தாலவா யான்றிரு நீறே. (௭)

இராவணன் மேலது நீறு வெண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு

கவினை - அழகை. (௪) மாணம் - மாணவகன் இலக்கணமாகிய தாழ்வு; சேணம் - விண்ணுலகவின்பம். (௬) அருத்தம் - ஐசுவரியம். (௭) எயில் - திரிபுரம்; துயில் - மரணம்; அயில் - கூர்மை. (அ) பராவணம் - பராசத்தியின்வண்ணம்;

தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி யாலவா யான்றிரு நீறே. (அ)

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்க டங்கண் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலமு துண்டமி டற்றெம் மாலவா யான்றிரு நீறே. (கூ)

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங்கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்து மாலவா யான்றிரு நீறே. (ய)

ஆற்ற லடல்விடை யேறு மாலவா யான்றிரு நீற்றைப்
போற்றிப் புகலிநி லாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்னனுட லுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.' (கக)

திருச்சிற்றம்பலம்.

இந்தத் திருப்பதிகம், நின்றசீர்நெடுமாறநாயனார் என்னுங்கூன் பாண்டியர்க்குற்ற வெப்புநோயை "ஆலவா யண்ணனீரே, மன்னு மந்திரமுமாகி மருந்துமாய்த் தீர்ப்பீர்" என்று ஓதித் தீர்த்தருளியது.

திருஞான சம்பந்த சுவாமிகள்.

பஞ்சாக்கரத்திருப்பதிகம்.

மூன்றுந்திருமுறை - பண் - காந்தாரம்.

அஞ்செழுத்துண்மை.

திருச்சிற்றம்பலம்.

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமி னாடொறும்

தராவணம் - பூதேவியின் நிறம்; அரா அணைங்கும் - சர்ப்பங்கள் அணியப்பெற்றுள்ள. (ய) குண்டிகை - நீர்க்குடம்; சாக்கியர் - புத்தர்; திகைப்பிப்பது - திகைத்து மயங்கச்செய்வது; பொருளார் - பாலகர். (கக) அடல் - வெற்றி; பூசுரன் - பிராமணன்.

வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்ச வுதைத்தன வஞ்செ ழுத்துமே. (௧)

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையு ணின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுண் மந்திர மஞ்செ ழுத்துமே. (௨)

ஊனி லுயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆன கெடுப்பன வஞ்செ ழுத்துமே. (௩)

நல்லவர் தீயரெ னாது நச்சினர்
செல்லல் கெடச்சிவ முத்தி காட்டுவ
கொல்ல நமன்றமர் கொண்டு போமிடத்
தல்லல் கெடுப்பன வஞ்செ ழுத்துமே. (௪)

கொங்கலர் வன்மதன் வாளியைந்தகத்
தங்குள பூதமு மஞ்ச மைம்பொழில்
தங்கர வின்பட மஞ்சுந் தம்முடை
அங்கையி லைவிர லஞ்செ ழுத்துமே. (௫)

தும்ம லிருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை யஞ்செ ழுத்துமே. (௬)

வீடு பிறப்பை யறுத்து மெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாடொறும்
மாடு கொடுப்பன மன்னு மாநடம்
ஆடி யுகப்பன வஞ்செ ழுத்துமே. (௭)

---

(௧) துஞ்சல் - உறங்கல்; வஞ்சகம் - கபடம். (௨) செந்தழல் - அக்கினிஹோத்திரம்; அந்தி - மாலைக்காலம். (௩) உயிர்ப்பை - உசுவாசநிசுவாசம்; புலம் - இடம்; வழி - சுழிமுனை. (௪) செல்லல் - பிறவி; இடம் - காலம். (௫) அசம் - உடம்பு. (௭) வீடு - சாதல்; மெச்சினர் - இறைவனைப்புகழ்கின்றவர்; மாடு - செல்வம்.

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டை யிராவணன் பாடி யுய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்
கண்ட மளிப்பன வஞ்செ ழுத்துமே. (அ)

கார்வண ணன்முகன் காணுதற் கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாடொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வண மாவன வஞ்செ ழுத்துமே. (கூ)

புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்க ளெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திர மாவன வஞ்செ ழுத்துமே. (ய)

நற்றமிழ் ஞானசம் பந்த னன்மறை
கற்றவன் காழியர் மன்ன னுன்னிய
அற்றமின் மாலையீ ரைந்து மஞ்செழுத்
துற்றன வல்லவ ரும்ப ராவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இந்தத் திருப்பதிகம், உபநயனச் சடங்கியற்றிய காலத்தே, சிஷ்யபரம்பரையாய் ஓதியுணரவரும் வேதங்களை நமக்குத் தந்தோமென்று சுவஸ்திவாசகமந்திரங்களை யுரைத்த அந்தணர்க்கு ஆளுடைய பிள்ளையார் வேதமந்திர ரகசியப்பொருளை யெல்லாம் உபதேசித்து அவர் ஐயங்களை நீக்கியதோடு, இம்மந்திரங்களெல்லாம் உதித்தற்குக் காரணமாயுள்ளது ஸ்ரீ பஞ்சாக்ஷரமே என அதன் பெருமையினையுந் தெரித்தருளியது.

(அ) ஓதி- அளகபாரம்; மடந்தை - உமையம்மையார்; பண்டை- கயிலாயமலையைத்தூக்கி இடர்ப்பட்ட காலம்; அண்டம்-சிவலோகம். (கூ) பேர்வணம்-பெயர்க்கிரமத்தில்; பித்தர்-அன்பர்; ஆர்வணம்-அநுபவிக்குந்தன்மை. (ய) பொய்-பொய்யுரை; சித்தத்தவர்-சிவனடியார்கள்; தேறின -நிச்சயித்தன; வித்தக-ஞானமயமான; அத்திரம்-படை. (கக) அற்றம் - அழிவு; மாலை-பாமாலை; உற்றன-பொருந்தியுள்ளன.

திருஞானசம்பந்த சுவாமிகள்

நமச்சிவாயத் திருப்பதிகம்.

மூன்றாந் திருமுறை-பண்-நட்டபாடை.

அஞ்செழுத்துண்மை.

திருச்சிற்றம்பலம்.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாம நமச்சி வாயவே. (க)

நம்பு வார்நமர் நாவி னவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெலாம்
நம்ப னாம நமச்சி வாயவே. (உ)

நெக்கு ளார்வ மிகப்பெரு கிநினைந்
தக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்
தக்க வானவ ராய்த்தகு விப்பது
நக்க னாம நமச்சி வாயவே. (௩)

இயமன் றூதரு மஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயன னாம நமச்சி வாயவே. (௪)

(க) காதல் - பேரன்பு; மல்கி - நிறைந்து; நன்னெறி - முத்தி நெறி. (உ) நமர் - நம்மவராகிய அடியார்; வம்பு - மணம்; வார் - சிந்துகின்ற; மது - தேன். (௩) உள் - மனம்; ஆர்வம் - அன்பு; அக்குமாலை-உருத்திராக்ஷமாலை; எண்ணுவார்-ஜபிப்பார். (௪) நயம்-அன்பு; நியமம் - முறைமை.

சொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரால்
நல்லார் நாம நமச்சி வாயவே. (௫)

மந்த ரம்மன பாவங்கண் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி நாம நமச்சி வாயவே. (௬)

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயினு ருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரத னாம நமச்சி வாயவே. (௭)

இலங்கை மன்ன னெடுத்த வடுக்கன்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கர னூன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொ ளாம நமச்சி வாயவே. (௮)

போதன் போதன கண்ணனு மண்ணறன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகிய லந்தவர்
ஓது நாம நமச்சி வாயவே. (௯)

கஞ்சி மண்டையர் கையினுண் கையர்கள்
வெஞ்சொன் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட வமுதுசெய்
நஞ்சுள் கண்ட னமச்சி வாயவே. (௰)

---

(௫) குணம் - நற்குணம். (௬) அன - அன்ன, ஒத்த; பந்தனையவர் - பிறவிப்பந்தத்தையுடையவர்; மல்கும் - நிறையும். (௮) அடுக்கல் - கயிலாயமலை; தலங்கொள் - இடங்கொண்ட; மலங்கி - அழுங்கி; வாய்மொழி செய்தவன் - வாய்விட்டு அரற்றினவன். (௯) போதன் - பிரமன்; நேடி - தேடி; அலந்தவர் - எய்த்துவருந்தியவர். (௰) மண்டை - மட்கலம்; கையர்கள் - கீழ்மக்கள்; மிண்டையர் - முரடர்; விஞ்சை - வித்தை; நஞ்சுள் - விடந்தங்கிய.

நந்தி நாம நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யான்மகிழ்ந் தேத்தவல் லாரெல்லாம்
பந்த பாசம றுக்கவல் லார்களே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்திருப்பதிகம். உலகம்வாழ உதித்தவராகிய திருஞான சம்பந்தமூர்த்திசுவாமிகள் தமது திருமணக்காலத்திலே சிற்சோதி தோன்றியபோது, உலகருய்ய முத்திசாதனமான உண்மைநெறியைக் கூறி எண்ணிறந்த உயிர்களைப்பரமுத்தியிற் சேர்ப்பித்தருளியது. [மரணகாலத்திலும் ஸ்ரீ பஞ்சாக்ஷரயோதினால் இயமன் றூதரும் அஞ்சுவர் - இதனைக் கடைப்பிடிக்க.]

திருநாவுக்கரசு சுவாமிகள்

நமச்சிவாயத் திருப்பதிகம்.

நான்காந்திருமுறை - பண் - காந்தாரபஞ்சமம்.

அஞ்செழுத்துண்மை.

திருச்சிற்றம்பலம்.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. (௧)

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கல மரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்டமில்லது
நாவினுக் கருங்கல நமச்சி வாயவே. (௨)

---

(௧) சொல் - வேதங்களாற் றுதிக்கப்பெற்ற; துணை - தோன்றுந்துணை; பொன் - பொலிவு; துணை - இரண்டு. (௨) கலம் - ஆபரணம்; அஞ்சு - பஞ்சகௌவியம்; கோ - அரசன்; கோட்டம் - கோணுதல்.

விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே. (௩)

இடுக்கண்பட் டிருக்கினு மிரந்தி யாரையும்
விடுக்கிற்பி ரானென்று வினவு வோமல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளி னுமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே. (௪)

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கல மருமறை யாறங்கம்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கல நமச்சி வாயவே. (௫)

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கல்லால்
நலமில னொடொறு நல்கு வானலன்
குலமில ராகினுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே. (௬)

வீடினா ருலகினில் விழுமிய தொண்டர்
கூடினா ரந்நெறி கூடச் சென்றலும்
ஓடினே னோடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினே னாடிற்று நமச்சி வாயவே. (௭)

இல்லக விளக்கது விருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே. (௮)

---

(௩) உண்ணிய - உண்ணும்பொருட்டு. (௪) இடுக்கண் - துன்பம்; அடுக்கல் - மலை. (௫) விரதி - துறவி. (௬) சலம் - வைரம். (௭) வீடினார் - செத்தார்; விழுமிய - சீரிய; நெறி - வீட்டுநெறி; நாடினேன் - விசாரித்தேன்; நாடிற்று - நாடியது. (௮) பல்அகம் - பலஇடம்; நல்அகம் - நல்லமனம். (௯) சரண் - புகலிடம்; நன்னெறி - நல்ல வழி.

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாதல் திண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே. (௬)

மாப்பிணை தழுவிய மாதோர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே. (ய)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்திருப்பதிகம், சமணர்கள் திருநாவுக்கரசு மூர்த்திகளைக் கற்றூணிற்கட்டிக் கடலிற்றள்ளியபோது ஓதி கல்லே தெப்பமாகக் கரைசேர்ந்தது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

நமச்சிவாயத் திருப்பதிகம்.

திருப்பாண்டிக் கொடுமுடி.

ஏழாந்திருமுறை - பண் - பழம்பஞ்சுரம்.

அஞ்செழுத்துண்மை.

திருச்சிற்றம்பலம்.

மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப் பாதமேமனம் பாவித்தேன்
பெற்ற லும் பிறந் தேனி னிப்பிற வாததன் மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாவுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே. (க)

(ய) மாப்பிணை - அழகமைந்த பெண்மான்; பூப்பிணை-பூமாலை; நாப்பிணை - நாவினாலோதப்பட்ட சொன்மாலை. (க) மற்று - வேறு;. பெற்றலும் - சிந்திக்கப்பெறலும்.

இட்ட னும்மடி யேத்து வாரிகழ்ந் திட்ட நாண்மறந் திட்டநாள்
கெட்ட நாளிவை யென்ற லார்கரு தேன்கிளர் புனற் காவிரி
வட்ட வாசிகை கொண்டடிதொழு தேத்து பாண்டிக் கொடுமுடி
நட்ட வாவுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே. (உ)

ஓவு நாளுணர் வழியு நாளுயிர் போகு நாளுயர் பாடைமேல்
காவு நாளிவை யென்ற லாற்கரு தேன்கி ளர்புனற் காவிரிப்
பாவு தண்புனல் வந்தி ழிபரஞ் சோதி பாண்டிக் கொடுமுடி
நாவ லாவுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே. (ஙு)

எல்லை யில்புக ழெம்பி ரானெந்தை தம்பி ரானென்பொன் மாமணி
கல்லை யுந்திவ ளம்பொ ழிந்திழி காவி ரியதன் வாய்க்கரை
நல்ல வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
வல்ல வாவுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே. (ச)

அஞ்சி னார்க்கர ணாதி யென்றடி யேனு நான்மிக வஞ்சினேன்
அஞ்ச லென்றடித் தொண்ட னேற்கருணல்கினுய்க்கழி கின்றதென்
பஞ்சின் மெல்லடிப் பாவை மார்குடைந் தாடு பாண்டிக் கொடுமுடி
நஞ்ச ணிகண்ட நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே. (ரு)

ஏடு வானிளந் திங்கள் சூடினை யென்பின் கொல்புலித் தோலின்மேல்
ஆடு பாம்பத ரைக்க சைத்த வழகனே யந்தண் காவிரிப்
பாடு தண்புனல் வந்தி ழிபரஞ் சோதி பாண்டிக் கொடுமுடிச்
சேட னேயுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே. (சு)

விரும்பி நின்மலர்ப் பாத மேநினைந் தேன்வி னைகளும் விண்டனன்
நெருங்கிவண்பொழில் சூழ்ந்தெழில்பெறநின்ற காவிரிக்கோட்டிடை

(உ) இட்டன் - இஷ்டனாகிய நான்; இகழ்ந்திட்ட - நிந்தைசெய்த; மறந்திட்ட - நினைக்காது மறந்த; வாசிகை - பூமாலை; நட்டவா - நட்புக் கொண்டவனே. (ஙு) ஓவும் - மறந்திருக்கும்; காவும் - சுமக்கப்படும்; பாவு - பரவிய; இழி - ஒழுகும்; நாவலா - ஞானநாவலரே. (ச) கல்லை - கற்களை. (ரு) அரண் - காவல்; அழிகின்றது என் - நஷ்டமாவது யாது; குடைந்தாடு - கையினாலே நீரை மோதி மூழ்கி விளையாடு. (சு) ஏடு - தகட்டுவடிவு; பாடு - ஒலி; சேடன் - இளையோன். (எ) கோட்டிடை - கரையில்;

குரும்பை மென்முலைக் கோதைமார்குடைந்தாடுபாண்டிக்கொடுமுடி
விரும் பனேயுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே. (எ)

செம்பொ னேர்சடை யாய்தி ரிபுரந் தீயெ ழச்சிலை கோலினாய்
வம்பு லாங்குழ லாளைப் பாக மமர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின் மேற்குயில் கூவ மாமயி லாடு பாண்டிக் கொடுமுடி
நம்ப னேயுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே. (அ)

சாரணன் றந்தை யெம்பிரானெந்தை தம்பிரானென் பொன்மாமணி
பேரொணாயிர கோடி தேவர்பி தற்றி நின்று பிரிகிலார் [யென்று
நார ணன்பிர மன்றொ ழுங்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடிக்
காரணாவுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே. (கூ)

கோணி யபிறை சூடி யைக்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
பேணி யபெரு மானைப் பிஞ்ஞகப் பித்த னைப்பிறப் பில்லியைப்
பாணு லாவரிவண்டறைகொன்றைத்தாரனைப் படப்பாம்பரை[பமே.
நாணனைத்தொண்டனூரன் சொல்லிவைசொல்லுவார்க்கில்லைத்துன்

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் கொங்குநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கொடுமுடிநாதர், தேவியார்-
பண்மொழியம்மை.

இந்தத் திருப்பதிகம், "உன்னை நான் மறக்கினும் [மறக்கேன் - அப்படி மறந்தாலும்] என்னுடைய நா உன்னுமத்தைச் சொல்லிக் கொண்டேயிருக்கும்" என்று தெரித்தருளியது. இவ்விதத் தன்மை யெய்தினவரே தமது காணங்களைப் பேரின்ப வுருவமாகப் பெற்றவர். இவரது செயல்கள் யாவுஞ் சிவச்செயலே. இவர்கள் மனித வர்க்கத் தவரன்று. சமரச நன்னிலையில் நின்ற அருள் வர்க்கத்தவர். சிவமே யாய்த் திகழ்ந்தவர்.

(எ) குரும்பை - தெங்கின் இளங்காய். (அ) சிலை - வில். (கூ) சாரணன் - புகலிடமாயுள்ளவன்; பேர் - நாமங்கள்; காரணன் - சர்வ காரணன். (ய) கோணிய - வளைந்த; பேணிய - விரும்பிய; பாண் - மது; அரைநாண் - அரைஞாண்.

திருஞான சம்பந்த சுவாமிகள்.

திருக்ஷேத்திரக் கோவை.

இரண்டாந்திருமுறை-பண்-இந்தளம்.

கோயிற்றிறம்.

திருச்சிற்றம்பலம்.

ஆரூர்தில்லையம்பலம்வல்லநல்லம்
வடகச்சியுமச்சிறுபாக்கநல்ல
கூரூர்குடவாயில்குடந்தைவெண்ணி
கடல்சூழ்கழிப்பாலைதென்கோடிபீடார்
நீரூர்வயனின்றியூர்குன்றியூருங்
குருகாவையூர்நாரையூர்நீடுகானப்
பேரூர்நன்னீள்வயனெய்த்தானமும்
பிதற்றாய்பிறைசூடிதன்பேரிடமே. (க)

அண்ணாமலையீங்கோயுமத்திமுத்தா
றகலாமுதுகுன்றங்கொடுங்குன்றமும்
கண்ணார்கழுக்குன்றங்கயிலைகோணம்
பயில்கற்குடிகாளத்திவாட்போக்கியும்
பண்ணார்மொழிமங்கையோர்பங்குடையான்
பரங்குன்றம்பருப்பதம்பேணிநின்றே
எண்ணாயிரவும்பகலுமிடும்பைக்
கடனீந்தலாங்காரணமே. (உ)

அட்டானமென்றோதியநாலிரண்டும்
அழகன்னுறைகாவனைத்துந்துறைகள்
எட்டாந்திருமூர்த்தியின்காடொன்பதும்
குளமூன்றுங்களமஞ்சும்பாடிநான்கும்

(உ) கண்ணார் - இடமகன்ற; பேணி - விரும்பி; இடும்பை - துன்பம்..

மட்டார்குழலாண்மலைமங்கைபங்கன்
மதிக்கும்மிடமாகியபாழிமூன்றும்
சிட்டானவன்பாசூரென்றேவிரும்பாய்
அரும்பாவங்களாயினதேய்ந்தறவே. (௩)

அறப்பள்ளியகத்தியான்பள்ளிவெள்ளைப்பொடிப்பூசி
நீறணிவானமர்காட்டுப்பள்ளி
சிறப்பள்ளிசிராப்பள்ளிசெம்பொன்பள்ளி
திருநனிபள்ளிசீர்மகேந்திரத்துப்
பிறப்பில்லவன்பள்ளிவெள்ளச்சடையான்
விரும்புமிடைப்பள்ளிவண்சக்கரமால்
உறைப்பாலடிபோற்றக்கொடுத்தபள்ளி
உணராய்மடநெஞ்சமேயுன்னிநின்றே. (௪)

* ஆறைவடமாகறலம்பரையா
றணியார்பெருவேளூர்விளமர்தெங்கூர்
சேறைதுலைபுகலூரகலாதிவை
காதலித்தானவன்சேர்பதியே. (௫)

மனவஞ்சர்மற்றோடமுன்மாதராரும்
மதிகூர்திருக்கூடலிலாலவாயும்
இனவஞ்சொலிலாவிடைமாமருதும்
இரும்பைப்பதிமாகாளம்வெற்றியூரும்
கனமஞ்சினமால்விடையான்விரும்பும்
கருகாவூர்நல்லூர்பெரும்புலியூர்
தனமென்சொலிற்றஞ்சமென்றேநினைமின்
தவமாமலமாயினதானறுமே. (௬)

* மாட்டேர்மடப்பாச்சிலாச்சிராமம்
முண்டீச்சரம்வாதவூர்வாரணாசி

---

(௩) சிட்டானவன் - பெரியோன். (௪) உறைப்பால் - உறைத்த தொண்டினோடு. (௬) மனவஞ்சர் - சமணர்; மாதரார் - மங்கையர்க்கரசியார்; மதி-அறிவு; மஞ்சு-மேகம்; தவ-மிகுதி. (௭) மடம்-மடங்கள். *இவ்விரண்டு திருப்பாட்டுகளும் மிகவுஞ் சிதைந்திருக்கின்றன..

காட்டூர்கடம்பூர்படம்பக்கங்கொட்டும்
கடலொற்றியூர்மற்றுறையூரவையும்
கோட்டூர்திருவாமாத்தூர்கோழம்பமும்
கொடுங்கோவலூர்திருக்குணவாயில். (எ)

* குலாவுதிங்கட்சடையான்குளிரும்பருதிநியமம்
போற்றூரடியார்வழிபாடொழியாத்
தென்புறம்பயம்பூவணம்பூழியூரும்
காற்றூர்வரையன்றெடுத்தான்முடிதோணெரித்தான்
உறைகோயிலென்றென்றுநீகருதே. (அ)

நெற்குன்றமோத்தூர்நிறைநீர்மருகல்
நெடுவாயில்குறும்பலாநீடுதிரு
நற்குன்றம்வலம்புரநாகேச்சரம்
நளிர்சோலையுஞ்சேனைமாகாளம்வாய்மூர்
கற்குன்றமொன்றேந்திமழைதடுத்த
கடல்வண்ணனுமாமலரோனுங்காணச்
சொற்கென்றுந்தொலைவிலாதானுறையுங்
குடமூக்கென்றுசொல்லிக்குலாவுமினே. (கூ)

குத்தங்குடிவேதிகுடிபுனல்சூழ்
குருந்தங்குடிதேவன்குடியருவும்
மத்தங்குடிதண்டிருவண்குடியும்
அலம்புஞ்சலந்தன்சடைவைத்துகந்த
நித்தன்னிமலனுமையோடுங்கூட
நெடுங்காலமுறைவிடமென்றுசொல்லாப்
புத்தர்புறங்கூறியபுன்சமணர்
நெடும்பொய்களைவிட்டுநினைந்துய்மினே. (ய)

அம்மானையருந்தவமாகிநின்ற
அமரர்பெருமான்பதியானவுன்னிச்
சொய்ம்மாமலர்ச்சோலைகுலாவுகொச்சைக்
கிறைவன்சிவஞானசம்பந்தன்சொன்ன

(கூ) கற்குன்றம் - கோவர்த்தநமலை; தொலைவிலாதான் - கடந்தவன்; * இந்தத் திருப்பாட்டு மிகவும் சிதைந்துள்ளது.

இம்மாலையீரைந்தமிருநிலத்தில்
இரவும்பகலுநினைந்தேத்தினின்று
விம்மாவெருவாவிரும்புமடியார்
விதியார்பிரியார் சிவன்சேவடிக்கே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருக்ஷேத்திரக் கோவை.

ஆறாந் திருமுறை - திருத்தாண்டகம்.

கோயிற்றிறம்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைச்சிற்றம்பலமுஞ்செம்பொன்பள்ளி
தேவன்குடிசிராப்பள்ளிதெங்கூர்
கொல்லிக்குளிரறைப்பள்ளிகோவல்
வீரட்டங்கோகரணங்கோடிகாவும்
முல்லைப்புறவமுருகன்பூண்டி
முழையூர்பழையாறைசத்திமுற்றம்
கல்லிற்றிகழ்சீரார்காளத்தியும்
கயிலாயநாதனையேகாணலாமே. (௧)

ஆரூர்மூலட்டானமானைக்காவும்
ஆக்கூரிற்றான்றோன்றியாடலூர்
பேரூர்பிரமபுரம்பேராவூரும்
பெருந்துறைகாம்பீலிபிடவூர்பேணும்
கூரார்குறுக்கைவீரட்டானமுங்
கோட்டூர்குடமூக்குக்கோழம்பமும்
காரார்கழுக்குன்றுங்கானப்பேரும்
கயிலாயநாதனையேகாணலாமே. (௨)

---

(௧௧) விதியார் - பிரமனால் விதிக்கப்பட்டார். (௧) புறவம் - காடு ; கல் - மலை. (௨) கார் - மேகம்.

இடைமருதீங்கோயிராமேச்சரம்
இன்னம்பரேரிடவையேமப்பேறூர்
சடைமுடிசாலைக்குடிதக்களூர்
தலையாலங்காடுதலைச்சங்காடு
கொடுமுடிகுற்றாலங்கொள்ளம்பூதூர்
கோத்திட்டைகோட்டாறுகோட்டுக்காடு
கடைமுடிகானூர்கடம்பந்துறை
கயிலாயநாதனையேகாணலாமே. (௫)

எச்சிலிளமரேமநல்லூர்
இலம்பையங்கோட்டூரிறையான்சேரி
அச்சிறுபாக்கமளப்பூரம்பர்
ஆவடுதண்டுறையழுந்தூராறை
கச்சினங்கற்குடிகச்சூராலக்
கோயில்கரவீரங்காட்டுப்பள்ளி
கச்சிப்பலதளியு மேகம்பத்தும்
கயிலாயநாதனையேகாணலாமே. (௬)

கொடுங்கோளூரஞ்சைக்களஞ்செங்குன்றூர்
கொங்கணங்குன்றியூர்குரக்குக்காவும்
நெடுங்களநன்னிலநெல்லிக்காவும்
நின்றியூர்நீடூர்நியமநல்லூர்
இடும்பாவனமெழுமூரேழூர்தோழூர்
எறும்பியூரேராருமேமகூடம்
கடம்பையிளங்கோயிறன்னினுள்ளும்
கயிலாயநாதனையேகாணலாமே. (௭)

மண்ணிப்படிக்கரைவாழ்கொளிபுத்தூர்
வக்கரைமந்தாரம்வாரணாசி
வெண்ணிவிளத்தொட்டிவேள்விக்குடி
விளமர்விராடபுரம்வேட்களத்தும்
பெண்ணையருட்டுறைதண்பெண்ணாகடம்
பிரம்பில்பெரும்புலியூர்பெருவேளூரும்

கண்ணைகளர்க்காறைகழிப்பாலையும்
கயிலாயநாதனையேகாணலாமே. (௬)

வீழிமிழலைவெண்காடுவேங்கூர்
வேதிகுடிவிசயமங்கைவியலூர்
ஆழியகத்தியான்பள்ளியண்ணா
மலையாலங்காடுமரதைப்பெரும்
பாழிபழனம்பனந்தாள்பாதாளம்
பராய்த்துறைபைஞ்ஞீலிபனங்காட்டூர்தண்
காழிகடவூர்க்காரோணத்தும்
கயிலாயநாதனையேகாணலாமே. (எ)

உஞ்சேனைமாகாளமூறலோத்தூர்
உருத்திரகோடிமறைக்காட்டுள்ளும்
மஞ்சார்பொதியின்மலைதஞ்சைவழுவூர்
வீரட்டமாதானங்கேதாரத்தும்
வெஞ்சமாக்கூடன்மீயச்சூர்வைகா
வேதிச்சரம்விவீசுரம்வெற்றியூரும்
கஞ்சனூர்கஞ்சாறுபஞ்சாக்கையும்
கயிலாயநாதனையேகாணலாமே. (அ)

திண்டீச்சரஞ்சேய்ஞலூர்செம்பொன்பள்ளி
தேவூர்சிரபுரஞ்சிற்றேமஞ்சேறை
கொண்டீச்சரங்கூந்தலூர்கூழையூர்கூடல்
குருகாவூர்வெள்ளடைகுமரிகொங்கு
அண்டர்தொழுமதிகைவீரட்டானம்
ஐயாறசோகந்தியாமாத்தூரும்
கண்டியூர்வீரட்டங்கருகாவூரும்
கயிலாயநாதனையேகாணலாமே. (௯)

நறையூரிற்சித்தீச்சரநள்ளாறும்
நாரையூர்நாகேச்சரநல்லூர்நல்ல
துறையூர்சோற்றுத்துறைசூலமங்கை
தோணிபுரந்துருத்திசோமீச்சரம்

உறையூர்கடலொற்றியூரூற்றத்தூர்
ஓமாம்புலியூரோடேரகத்தும்
கறையூர்கருப்பறியல்கன்ருப்பூரும்
கயிலாயநாதனையேகாணலாமே. (ய)

புலிவலம்புத்தூர்புகலூர்புன்கூர்
புறம்பயம்பூவணம்பொய்கைநல்லூர்
வலிவலமாற்பேறுவாய்மூர்வைகல்
வலஞ்சுழிவாஞ்சியமருகல்வன்னி
நிலமலிநெய்த்தானத்தோடெத்தானத்து
நிலவுபெருங்கோயில்பலகண்டாற்ருண்டீர்
கலிவலிமிக்கோனைக்கால்விரலாற்செற்ற
கயிலாயநாதனையேகாணலாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

ஊர்த்தொகை.

ஏழாந் திருமுறை - பண் - பழம்பஞ்சுரம்.

கோயிற்றிறம்.

திருச்சிற்றம்பலம்.

காட்டூர்க் கடலே கடம்பூர் மலையே கானப் பேரூராய்
கோட்டூர்க் கொழுந்தே யழுந்தூ ரரசே கொழுநற் கொல்லேறே
பாட்டூர் பலரும் பரவப் படுவாய் பனங்காட் டூரானே
மாட்டூ ரறவா மறவா துன்னைப் பாடப் பணியாயே. (க)

கொங்கிற் குறும்பிற் குரக்குத் தளியாய் குழகா குற்ருலா
மங்குற் றிரிவாய் வானோர் தலைவா வாய்மூர் மணவாளா

(கக) கலி - பாவம்; வலி - வன்மை. (க) கொழுநல் - கொழுத்தநல்ல, மாட்டூர் - இடபத்தில் ஊர்ந்தருளுகின்ற; அறவா - அறத்தின் வடிவினரே; (உ) மங்குல் - மேகம்.

சங்கக் குழையார் செவியா வழகா வவியா வனலேந்திக்
கங்குற் புறங்காட் டாடீ யடியார் கவலை களையாயே. (உ)

நிறைக்காட் டானே நெஞ்சத் தானே நின்றி யூரானே
மிறைக்காட் டானே புனல்சேர் சடையா யனல்சேர் கையானே
மறைக்காட் டானே திருமாந் துறையாய் மாகோ ணத்தானே
இறைக்காட் டாயே யெங்கட் குன்னை யெம்மான் றம்மானே. (ங)

ஆரூ ரத்தா வையாற் றமுதே யளப்பூ ரம்மானே
காரூர் பொழில்கள் புடைசூழ் புறவிற் கருகா வூரானே
பேரூ ருறைவாய் பட்டிப் பெருமான் பிறவா நெறியானே
பாரூர் பலரும் பரவப் படுவாய் பாசூ ரம்மானே. (ச)

மருக லுறைவாய் மாகா ளத்தாய் மதியஞ் சடையானே
அருகற் பிணிநின் னடியார் மேல வகல வருளாயே
கருகற் குரலாய் வெண்ணிக் கரும்பே கானூர்க் கட்டியே
பருகப் பணியா யடியார்க் குன்னைப் பவளப் படியானே. (ரு)

தாங்கூர் பிணிநின் னடியார் மேல வகல வருளாயே
வேங்கூ ருறைவாய் விளமர் நகராய் விடையார் கொடியானே
நாங்கூ ருறைவாய் தேங்கூர் நகராய் நல்லூர் நம்பானே
பாங்கூர் பலிதேர் பரனே பரமா பழனப் பதியானே. (சு)

தேனைக் காவல் கொண்டு விண்ட கொன்றைச் செழுந்தாராய்
வானைக் காவல் கொண்டு நின்றா ரறியா நெறியானே
ஆனைக் காவி லரனே பரனே யண்ணா மலையானே
ஊனைக் காவல் கைவிட் டுன்னை யுகப்பா ருணர்வாரே. (எ)

துருத்திச் சுடரே நெய்த்தா னத்தாய் சொல்லாய் கல்லாலா
பருத்தி நியமத் துறைவாய் வெயிலாய்ப் பலவாய்க் காற்றானாய்
திருத்தித் திருத்தி வந்தென் சிந்தை யிடங்கொள் கயிலாயா
அருத்தித் துன்னை யடைந்தார் வினைக ளகல வருளாயே. (அ)

(ங) தம்மான் - தம்பிரான். (ச) புறவு - முல்லைநிலம்; நெறி - முத்திநெறி. (ரு) அருகல் - வருந்துதல்; கருகல் - கருகின; குரல் - கண்டம்; படி - வடிவம். (எ) காவல் - காத்தல். (அ) வெயில் - சூரியன்; அருத்தித்து - விரும்பி.

புலியூர்ச் சிற்றம் பலத்தாய் புகலூர்ப் போதா மூதூரா
பொலிசேர் புரமூன் றெரியச் செற்ற புரிபுன் சடையானே
வலிசே ரரக்கன் றடக்கை யைஞ்ஞான் கடர்த்த மதிசூடீ
கலிசேர் புறவிற் கடவூ ராளீ காண வருளாயே. (௬)

கைம்மா வுரிவை யம்மான் காக்கும் பலவூர் கருத்துன்னி
மைம்மாந் தடங்கண் மதுர மன்ன மொழியாண் மடச்சிங்கடி
தம்மா னூரன் சடையன் சிறுவ னடியன் றமிழ்மாலை
செம்மாந் திருந்து திருவாய் திறப்பார் சிவலோ கத்தாரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்த சுவாமிகள்.

திருவெழுகூற்றிருக்கை.

முதற்றிருமுறை - சிவனுருவம்.

திருச்சிற்றம்பலம்.

ஓருரு வாயினை மானாங் காரத்
தீரியல் பாயொரு விண்முதல் பூதலம்
ஒன்றிய விருசுட ரும்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை

---

(௬) போதா - அறிவுருவினரே; பொலிசேர் - விளக்கமுற்ற; ஐஞ்ஞான்கு - இருபது; கலி-ஒலி. (௰) கைம்மா - கையையுடைய விலங்கு, யானை; மை - அஞ்சனம்; மா - மாவடுவின்பிளவு; சிங்கடி-சிங்கடியம்மை, இவர்கோட்புலி நாயனாரது புத்திரி, இவரையும் இவரது சகோதரியையும் நம்பியாரூரர் அபிமான புதல்வியராகக் கொண்டனர்; தம்மான் - பிதா; திறப்பார் - ஓதுவோர்.

(க - ச) ஓர் உருஆயினை - ஞானானந்தவஸ்துவாய் விளங்கும் சொரூபசிவமாகிய தேவரீரே உயிர்களின் பொருட்டுப் பஞ்சகிருத்தியஞ்செய்யும் நிமித்தமாக ஓர் திருமேனி தாங்கினீர்; மான் ஆங்காரத்து ஈரியல்பாய் - குணமாயுள்ள சத்தியைத் தன்னிடத்தில் தோற்றுவித்து அதனோடுநின்ற அவதாரத்து சத்திசிவம் என்னும் ஈரியல்பாயினீர்; ஆங்காரம் - எழுச்சி; மும்மூர்த்திகள் ஆயினை - சுத்தமாயையில் கிருத்தியஞ்செய்யும் பொருட்டுத் தடஸ்த லக்ஷணத்தில் மூன்று திருமேனிகளைத் தாங்கினீர்.

இருவரோ டொருவ னாகி நின்றனை
ஓரா னீழ லொண்கழ லிரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்டமூன் றாகக் கோட்டினை
இருநதி யரவமோ டொருமதி சூடினை
ஒருதா ளீரயின் மூவிலைச் சூலம்
நாற்கான் மான்மறி யைந்தலை யரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்
திருகோட் டொருகரி யீடழித் துரித்தனை
ஒருதனு விருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானில மஞ்சக்
கொன்று தலத்துற வவுணரை யறுத்தனை
ஐம்புல னாலா மந்தக் கரணம்
முக்குண மிருவளி யொருங்கிய வானோர்
ஏத்த நின்றனை யொருங்கிய மனத்தோ
டிருபிறப் போர்ந்துமுப் பொழுது குறைமுடித்து
நான்மறை யோதி யைவகை வேள்வி
அமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபத முரலும் வேணுபுரம் விரும்பினை
இகலி யமைந்துணர் புகலி யமர்ந்தனை
பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை
பாணிமூ வுலகும் புதையமேன் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை தொலையா விருநிதி

(௫ - ௰) இருவரோடு ஒருவன் ஆகிநின்றனை - பிரகிருதி மாயையில் ஸ்தூல கிருத்தியஞ் செய்யுநிமித்தம் பிரம்ம விஷ்ணுக்களை அதிஷ்டித்துக்கொண்டு அவர்களோடு தானும் ஒருவனாகி நின்றீர்; ஒண்கழல் - ஞானசக்தி கிரியாசக்தி என்னும் திருவடிகள்; ஒளிநெறி - அருண்ஞானநெறி; கோட்டினை - புறவிருளை நீக்கினீர். (௧௧ - ௧௫) மான்மறி - மான்கன்று; ஈடு - வலி; கால் - குதை; நானிலம் - பூமியிலுள்ளவர். (௨௰ - ௨௫) அறுபதம் - அறுகாலுடைய வண்டு. (௨௬ - ௩௰) இகல் - பகை; மைந்து - வலி; பாணி - ஜலம்.

வாய்ந்த பூந்தரா யெய்ந்தனை
வரபுர மென்றுணர் சிரபுரத் துறைந்தனை
ஒருமலை யெடுத்த விருதிற லரக்கன்
விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோ னான்முக னறியாப்
பண்பொடு நின்றனை சண்பை யமர்ந்தனை
ஐயுறு மமணரு மறுவகைத் தேரரும்
ஊழியு முணராக் காழி யமர்ந்தனை
எச்சனே ழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறு பதமு மைந்தமர் கல்வியும்
மறைமுத னான்கும்
மூன்று காலமுந் தோன்ற நின்றனை
இருமையி னொருமையு மொருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணிய னறியும்
அனைய தன்மையை யாதலி னின்னை
நினைய வல்லவ ரில்லைநீ ணிலத்தே.

திருச்சிற்றம்பலம்.

இஃது, சிவபாதவிருதயர் நித்தியகர்மங்களை நிறைவேற்றிய வுடனே தமது குமாரராகிய திருஞானசம்பந்த சுவாமிகளால் அருளிச்செய்யப்பட்ட திருப்பதிகங்களை ஓதிவிட்டே போசனஞ் செய்யும் நியமத்தைக்கொண்டனர். இவ்வாறு சிலகாலம் நிகழப் பிள்ளையார் தாம்பாடுவன பெருகுதலைத் திருவுளத்தடைத்து, தந்தையார் கொள்கைக்குத் தடைவாராவண்ணம் அதுவரையும் இயற்றியுள்ள திருப்பதிகங்களின் பொருள்கள் யாவு மமைத்து இத்திருவெழுகூற்

(௫௧ - ௫௫) வரபுரம் - வரத்தைத்தரும் நகரம். (௫௯ - ௬௦) எச்சன் - யாகவுருவன், யாகத்தலைவன். (௬௧ - ௬௦) ஒருமையும் - சத்தியைத் தன்னிடத்திலே ஒடுக்கிக்கொண்டு தனிப்பொருளாய் விண்ணெனநிற்றலையும்; ஒருமையின்பெருமை - சொரூபசிவத்தின் பெருமை; க உணியன் அறியும் - கம்என்னும் பிரமகபாலத்தில் உண்கின்றவன் அறிவன். (௬௭) இல்லை - பிறப்பற்றவர்.

றிருக்கையைத் திருவாய்மலர்ந்தருளினர். ஆகலின் இதனை நாடோறும் அன்புடன் ஓதுவோர் பாசக்ஷயமும் சிவப்பேறும் எய்துவர் என்பது சத்தியம். முக்காலுஞ் சத்தியம்.

திருஞானசம்பந்த சுவாமிகள்.

திருக்கடவூர்மயானம்.

இரண்டாந்திருமுறை - பண் - காந்தாரம்

சிவனுருவம்.

வரிய மறையார் பிறையார் மலையோர் சிலையா வணக்கி
எரிய மதில்க ளெய்தா ரெறியு முசல முடையார்
கரிய மிடறு முடையார் கடவூர் மயான மமர்ந்தார்
பெரிய விடைமேல் வருவா ரவரெம் பெருமா னடிகளே. (௧)

மங்கை மணந்த மார்பர் மழுவா ளலரொன் றேந்திக்
கங்கை சடையிற் கரந்தார் கடவூர் மயான மமர்ந்தார்
செங்கண் வெள்ளே றேறிச் செல்வஞ் செய்யா வருவார்
அங்கை யேறிய மறியா ரவரெம் பெருமா னடிகளே. (௨)

ஈட விடப மிசைய வேறி மழுவொன் றேந்திக்
காட திடமா வுடையார் கடவூர் மயான மமர்ந்தார்
பாட லிசைகொள் கருவி படுதம் பலவும் பயில்வார்
ஆட லரவ முடையா ரவரெம் பெருமா னடிகளே. (௩)

இறைநின் றிலங்கு வளையா ளிளையா ளொருபா லுடையார்
மறைநின் றிலங்கு மொழியார் மலையார் மனத்தின் மிசையார்
கறைநின் றிலங்கு பொழில்சூழ் கடவூர் மயான மமர்ந்தார்
பிறைநின் றிலங்கு சடையா ரவரெம் பெருமானடிகளே. (௪)

---

(௧) வரிய - இசைப்பாட்டுடைய; முசலம் - உலக்கை. (௨) வெள்ளேறு - வெண்மையான இடபம்; செல்வம் - திருவடிப்பேறு; ஏறிய - தரிக்கப்பட்ட. (௩) ஈடுஅல் - இணையில்லாத; காடு-மயானம்; படுதம் - வாத்தியம். (௪) இறை - கையிறை; பால் - பக்கம்; மலையார் - தடுமாற்றமில்லாதவர்; கறை-கறுப்பு.

வெள்ளை யெருத்தின் மிசையார் விரிதோ டொருகா திலங்கத்
துள்ளு மிளமான் மறியார் சுடர்பொற் சடைக டிலங்கக்
கள்ள நகுவெண் டலையார் கடவூர் மயான மமர்ந்தார்
பிள்ளை மதிய முடையா ரவரெம் பெருமா னடிகளே. (௫)

பொன்றா துதிரு மணங்கொள் புனைபூங் கொன்றை புனைந்தார்
ஒன்றா வெள்ளை யுயர்த்த துடையா ரதுவே யூர்வார்
கன்றா வினஞ்சூழ் புறவிற் கடவூர் மயான மமர்ந்தார்
பின்றாழ் சடையா ரொருவ ரவரெம் பெருமா னடிகளே. (௬)

பாச மான களைவார் பரிவார்க் கமுத மனையார்
ஆசை தீரக் கொடுப்பா ரலங்கல் விடைமேல் வருவார்
காசை மலர்போன் மிடற்றார் கடவூர் மயான மமர்ந்தார்
பேச வருவா ரொருவ ரவரெம் பெருமா னடிகளே. (௭)

செற்ற வரக்க னலறத் திகழ்சே வடிமெல் விரலால்
கற்குன் றடர்த்த பெருமான் கடவூர் மயான மமர்ந்தார்
மற்றொன் றிணையில் வலிய மாசில் வெள்ளி மலைபோல்
பெற்றொன் றேறி வருவா ரவரெம் பெருமா னடிகளே. (௮)

வருமா கரியி னுரியார் வளர்புன் சடையார் விடையார்
கருமா னுரிதோ லுடையார் கடவூர் மயான மமர்ந்தார்
திருமா லொடுநான் முகனுந் தேர்ந்துங் காண முன்னொண்ணாப்
பெருமா னெனவும் வருவா ரவரெம் பெருமா னடிகளே. (௯)

தூய விடைமேல் வருவார் துன்னா ருடைய மதில்கள்
காய வேவச் செற்றார் கடவூர் மயான மமர்ந்தார்
தீய கருமஞ் சொல்லுஞ் சிறுபுன் றேர ரமணர்
பேய்பே யென்ன வருவா ரவரெம் பெருமா னடிகளே. (௰)

---

(௫) காது - இடக்காது; பிள்ளைமதியம் – இளம்பிறை; வெண்தலை-பிரமசிரம். (௬) தாது – மகரந்தம்; புனை – அலங்காரி; ஒன்றா - நிகரில்லாத; இனம் – கூட்டம்; புறவம் – முல்லைநிலம்; ஒருவர் – ஒப்பற்றவர். (௭) பரிவார் – அன்புடையவர்; அலங்கல் – அசைவு; காலசமலர் – காயாம்பூ; பேச - புகழ. (௰) துன்னார் – பகைவர்; காயவேவ – எரிந்தழிய; தேரர் – புத்தர்; என்ன – இகழும்படி.

மரவம் பொழில்சூழ் கடவூர் மன்னு மயான மமர்ந்த
அரவ மசைத்த பெருமா னகல மறிய லாகப்
பரவு முறையே பயிலும் பந்தன் செஞ்சொன் மாலை
இரவும் பகலும் பரவி நினைவார் வினைக ளிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமி பெயர் - பிரம்மபுரேசர்; தேவியார் - அமலக்குய மின்னம்மை.

இந்தத்திருப்பதிகம், திருஞானசம்பந்த சுவாமிகள் தலங்கடோறுஞ்சென்று தரிசித்து இத்தலத்துக்கு வந்து, அங்கிருந்த கலந்த நட்புப்பெருமைசெறிந்த குங்கிலியக்கலயநாயனாரது திருமடத்திற்கெழுந்தருளி, அவர் அன்போடும் அமைத்தருளிய விருந்தை இனிதாகவிரும்பி, அங்குள்ள கோயிலிற் சென்று தரிசித்தபோது ஓதியருளியது.

திருநாவுக்கரசு சுவாமிகள்.

கோயிற்றிருப்பதிகம்.

நான்காந்திருமுறை - பண் - கொல்லி.

சிவனுநவம்.

திருச்சிற்றம்பலம்.

பாளை யுடைக்கமு கோங்கிப்பன் மாட நெருங்கியெங்கும்
வாளை யுடைப்புனல் வந்தெறி வாழ்வயற் றில்லைதன்னுள்
ஆளை யுடைக்கழற் சிற்றம் பலத்தர னாடல்கண்டாற் [னே.
பீளை யுடைக்கண்க ளாற்பின்னைப் பேய்த்தொண்டர் காண்பதென்

(கக) மரவம் - குங்குமமரம்; அகலம் - வியாபகம். (க) வாளை - வாளை மீன்கள்; கழல் - தூக்கியபாதம்; பேய்த்தொண்டர் - சிவஞானிகள்; பின்னை - பிறகு.

பொருவிடை யொன்றுடைப் புண்ணிய மூர்த்தி புலியதளன்
உருவுடை யம்மலை மங்கை மணாள னுலகுக்கெல்லாந்
திருவுடை யந்தணர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
திருவடி யைக்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே. (உ)

தொடுத்த மலரொடு தூபமுஞ் சாந்துங்கொண் டெப்பொழுதும்
அடுத்து வணங்கு மயனொடு மாலுக்குங் காண்பரியான்
பொடிக்கொண் டணிந்துபொன் னாகிய தில்லைச்சிற் றம்பலவன்
உடுத்த துகில்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே. (ங)

வைச்ச பொருணமக் காகுமென் றெண்ணி நமச்சிவாய
அச்ச மொழிந்தே னணிதில்லை யம்பலத் தாடுகின்ற
பிச்சன் பிறப்பிலி பேர்நந்தி யுந்தியின் மேலசைத்த
கச்சி னழகுகண் டார்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே. (ச)

செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
மைஞ்ஞின்ற வொண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்துநிற்க
நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த நீல மணிமிடற்றான்
கைஞ்ஞின்ற வாடல்கண் டார்பின்னைக் கண்கொண்டு காண்பதென் [னே.

ஊனத்தை நீக்கி யுலகறி யவென்னை யாட்கொண்டவன்
தேனைத் தெனக்கினி யான்றில்லைச் சிற்றம் பலவனெங்கோன்
வானத் தவருய்ய வன்னஞ்சை யுண்டகண் டத்திலங்கும்
ஏனத் தெயிறுகண் டார்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே.

தெரித்த கணையாற் றிரிபுர மூன்றுஞ்செந் தீயின்மூழ்க
எரித்த விறைவ னிமையவர் கோமா னிணையடிகள்
தரித்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
சிரித்த முகங்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே. (எ)

சுற்று மமரர் சுரபதி நின்றிருப் பாதமல்லாற்
பற்றொன் றிலோமென் றழைப்பப் பரவையு ணஞ்சையுண்டான்

(உ) அதள் - தோல். (ங) தொடுத்தமலர் - மலர் மாலை; துகில் - ஆடை. (ச) வைச்சபொருள் - சேமநிதி; ஆகும் - உதவும்; அச்சம் - பிறவிப் பயம். (ரு) ஞின்ற-நின்ற, தங்கிய; மைஞ்ஞின்ற - மைதீட்டிய; கைஞ்ஞின்ற - கைக்காட்டி நின்ற. (சு) ஏனத் தெயிறு - பன்றியின் கொம்பு. (எ) தெரிந்த - தேர்ந்தெடுத்த.

செற்றங் கநங்கனைத் தீவிழித் தான்றில்லை யம்பலவன்
நெற்றியிற் கண்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே.()

சித்தத் தெழுந்த செழுங்கம லத்தன்ன சேவடிகள்
வைத்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
முத்தும் வயிரமு மாணிக்கந் தன்னுள் விளங்கியதூ
மத்த மலர்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே. (௯)

தருக்கு மிகுத்துத்தன் றோள்வலி யுன்னித் தடவரையை
வரைக்கை களாலெடுத் தார்ப்ப மலைமகள் கோன்சிரித்து
அரக்கன் மணிமுடி பத்து மணிதில்லை யம்பலவன்
நெருக்கி மிதித்த விரல்கண்ட கண்கொண்டு காண்பதென்னே. (௰)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டில் உள்ளது.

சுவாமிபெயர் - சபாநாதர்; தேவியார் - சிவகாமியம்மை.

திருநாவுக்கரசு சுவாமிகள்.

திருப்பூவணம்.

ஆறுந்திருமுறை - திருத்தாண்டகம்.

சிவாநுபவம்.

திருச்சிற்றம்பலம்.

வடிவேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமே லிளமதியந் தோன்றுந் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணிதோன்றும்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழிறிகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்

(அ) பரவை - கடல்; அநங்கன் - மன்மதன். (ம) தருக்கு - செருக்கு.

பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித ஞர்க்கே. (க)

ஆணாகிப் பெண்ணாய வடிவு தோன்றும்
அடியவர்கட் காரமுத மாகித் தோன்றும்
ஊணாகி யூர்திரிவா னாகித் தோன்றும்
ஒற்றைவெண் பிறைதோன்றும் பற்றார் தம்மேல்
சேணாக வரைவில்லா லெரித்த தோன்றும்
செத்தவர்த மெலும்பினாற் செறியச் செய்த
பூணாணு மரைநாணும் பொலிந்து தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே. (உ)

கல்லாலி னீழற் கலந்து தோன்றும்
கவின்மறையோர் நால்வர்க்கு நெறிக ளன்று
சொல்லாகச் சொல்லியவா தோன்றுந் தோன்றும்
சூழரவு மான்மறியுந் தோன்றுந் தோன்றும்
அல்லாத காலனைமுன் னடர்த்த தோன்றும்
ஐவகையா னினைவார்பா லமர்ந்து தோன்றும்
பொல்லாத புலாலெலும்பு பூணாய்த் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித ஞர்க்கே. (ங)

படைமலிந்த மழுவாளு மானுந் தோன்றும்
பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை தோன்றும்
நடைமலிந்த விடையோடு கொடியுந் தோன்றும்
நான்மறையி னொலிதோன்று நயனந் தோன்றும்
உடைமலிந்த கோவணமுங் கீளுந் தோன்றும்
ஊரல்வெண் சிரமாலை யுலாவித் தோன்றும்

(க) வடிவு - அழகு; கடி - ஒளி; கண்ணி - மலர்மாலை; கலந்து - இருபுறத்துஞ்சேர்ந்து. (உ) ஊண்ஆகி - பலியுணவின்பொருட்டு; சேண் - ஆகாயம்; பூண்நாண் - அணிந்த மாலை. (ங) கவின் - சிவ வேடப் பொலிவு; சொல்லாக - கட்டுரையாக; சொல்லியவா - சொல்லிய விதம்; ஐவகை - பஞ்சமூர்த்தி. (ச) படைமலிந்த - படையிற்சிறந்த; பன்னிரண்டுகண் - மலர்ந்தகண்கள் பன்னிரண்டு. (இதனால் முகுளிதமானகண்கள் ஆறு கூறாமல் விடப்பட்டன); நடைமலிந்த - நடையிற்சிறந்த.

புடைமலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. (ச)

மயலாகுந் தன்னடியார்க் கருளுந் தோன்றும்
மாசிலாப் புன்சடைமேன் மதியந் தோன்றும்
இயல்பாக விடுபிச்சை யேற்ற றோன்றும்
இருங்கடனஞ் சுண்டிருண்ட கண்டந் தோன்றும்
கயல்பாயக் கடுங்கலுழிக் கங்கை நங்கை
ஆயிரமா முகத்தினொடு வானிற் றோன்றும்
புயல்பாயச் சடைவிரித்த பொற்புத் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. (ரு)

பாராழி வட்டத்தார் பரவி யிட்ட
பன்மலரு நறும்புகையும் பரந்து தோன்றும்
சீராழித் தாமரையின் மலர்க ளன்ன
திருந்தியமா நிறத்தசே வடிக டோன்றும்
ஓராழித் தேருடைய விலங்கை வேந்தன்
உடறணித்த விடர்பாவங் கெடுப்பித் தன்று
போராழி முன்னீந்த பொற்புத் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே. (சு)

தன்னடியார்க் கருள்புரிந்த தகவு தோன்றும்
சதுர்முகனைத் தலையரிந்த தன்மை தோன்றும்
மின்னனைய நுண்ணிடையாள் பாகந் தோன்றும்
வேழத்தி னுரிவிரும்பிப் போர்த்த றோன்றும்
துன்னியசெஞ் சடைமேலோர் புனலும் பாம்பும்
தூயமா மதியுடனே வைத்த றோன்றும்
பொன்னனைய திருமேனி பொலிந்து தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே. (எ)

(ச) ஊரல்-நகர்தல். (ரு) மயல்-பித்து; கடுங்கலுழி - கொடிய நீர்ப்பெருக்கு; புயல்-வெள்ளம். (சு) சீர்ஆழி - சிறந்தவட்டம்; மா நிறம்-அழகியநிறம்; இடர்பாவம்-பிரமஹத்தி; ஓராழித்தேர்-புஷ்பக விமானம். (எ) தகவு - மேன்மை. வேழம் - யானை; உரி - தோல்.

செறிகழலுந் திருவடியுந் தோன்றுந் தோன்றும்
திரிபுரத்தை யெரிசெய்த சிலையுந் தோன்றும்
நெறியதனை விரித்துரைத்த நேர்மை தோன்றும்
நெற்றிமேற் கண்டோன்றும் பெற்றந் தோன்றும்
மறுபிறவி யறுத்தருளும் வகையுந் தோன்றும்
மலைமகளுஞ் சலமகளு மலிந்து தோன்றும்
பொறியரவு மிளமதியும் பொலிந்து தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. (அ)

அரும்போட்டு முலைமடவாள் பாகந் தோன்றும்
அணிகிளரு முருமென்ன வடர்க்குங் கேழல்
மருப்போட்டு மணிவயிரக் கோவை தோன்றும்
மணமலிந்த நடந்தோன்று மணியார் வைகைத்
திருக்கோட்டி னின்றதோர் திறமுந் தோன்றும்
செக்கர்வா னொளிமிக்குத் திகழ்ந்த சோதிப்
பொருப்போட்டி நின்றதிண் புயமுந் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. (கூ)

ஆங்கணைந்த சண்டிக்கு மருளி யன்று
தன்முடிமே லலர்மாலை யளித்த தோன்றும்
பாங்கணைந்து பணிசெய்வார்க் கருளி யன்று
பலபிறவி யறுத்தருளும் பரிசுந் தோன்றும்
கோங்கணைந்த கூவிளமு மதமத் தம்மும்
குழற்கணிந்த கொள்கையொடு கோலந் தோன்றும்
பூங்கணைவே ளுருவழித்த பொற்புத் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. (ய)

ஆருருவ வுள்குவா ருள்ளத் துள்ளே
யவ்வுருவாய் நிற்கின்ற வருளுந் தோன்றும்

(அ) பொறி - புள்ளி. (கூ) அரும்பு - தாமரை முகை; உரும் - இடி; அடர்க்கும்-ஆரவாரிக்கின்ற; கோட்டில்-கரையில்; பொருப்பு- மேருமலை; ஓட்டி - இகழ்ந்து. (ய) ஆங்கு - மண்ணி ஆற்றங்கரை; பரிசு - வள்ளற்றன்மை; கோங்கு - வாசனை; கூவிளம் - வில்வம்; பொற்பு - வெற்றி.

வாருருவப் பூண்முலைநன் மங்கை தன்னை
மகிழ்ந்தொருபால் வைத்துகந்த வடிவு தோன்றும்
நீருருவக் கடலிலங்கை யரக்கர் கோனை
நெறுநெறென வடர்த்திட்ட நிலையுந் தோன்றும்
போருருவக் கூற்றுதைத்த பொற்புத் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பூவணநாதர்; தேவியார்-மின்னும்பிகையம்மை.

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

திருக்கடவூர்மயானம்.

ஏழாந்திருமுறை - பண் - பழம்பஞ்சுரம்.

சிவனுநவம்.

திருச்சிற்றம்பலம்.

மருவார் கொன்றை மதிசூடி மாணிக்கத்தின் மலைபோல
வருவார் விடைமேன் மாதோடு மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரம னிந்திரர்க்குந் தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. (௧)

விண்ணோர் தலைவர் வெண்புரிநூன் மார்பர் வேத கீதத்தர்
கண்ணார் நுதலர் நகுதலையர் கால காலர் கடவூரர்
எண்ணார் புரமூன் றெரிசெய்த விறைவ ரிமையோ ரொருபாகம்
பெண்ணா ணவர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. (௨)

காயும் புலியி னதளுடையர் கண்ட ரெண்டோட் கடவூரர்
தாயுந் தந்தை பல்லுயிர்க்குந் தாமே யாய தலைவனார்

---

(௧௧) உருவ - உறைப்பாக; வார்உருவம்-கச்சழகு; நீர்உருவம்-நீர்வடிவம்; போர் உருவம் - போர்க்கோலம்.

பாயும் விடையொன் றதுவேறிப் பலிதேர்ந் துண்ணும் பரமேட்டி
பேய்கள் வாழு மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. (௩).

நறைசேர் மலரைங் கணையானை நயனத் தீயாற் பொடிசெய்த
இறையா ராவ ரெல்லார்க்கு மில்லை யென்ன தருள்செய்வார்
பறையார் முழவம் பாட்டோடு பயிலுந் தொண்டர் பயில்கடவூர்ப்
பிறையார் சடையார் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. (௪).

கொத்தார் கொன்றை மதிசூடிக் கோணா கங்கள் பூணாக
மத்த யானை யுரிபோர்த்து மருப்பு மாமைத் தாலியார்
பத்தி செய்து பாரிடங்கள் பாடி யாடப் பலிகொள்ளும்
பித்தர் கடவூர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. (௫).

அணிவார் கீளுங் கோவணமுந் துதைந்து சுடலைப் பொடியணிந்து
பணிமே லிட்ட பாசுபதர் பஞ்ச வடிமார் பினர்கடவூர்த்
திணிவார் குழையார் புரமூன்றுந் தீவாய்ப் படுத்த சேவகனார்
பிணிவார் சடையார் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. (௬).

காரார் கடலி னஞ்சுண்ட கண்டர் கடவூ ருறைவாணர்
தேரா ரரக்கன் போய்வீழ்ந்து சிதைய விரலா லூன்றினார்
ஊர்தா னாவ தலகேழு முடையார்க் கொற்றி யூராரூர்
பேரா யிரவர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. (௭).

வாடா முலையா டன்னோடு மகிழ்ந்து கானில் வேடுவனாய்க்
கோடார் கேழற் பின்சென்று குறுகி விசயன் றவமழித்து
நாடா வண்ணஞ் செருச்செய்து வாவ நாழி நிலையருள்செய்
பீடார் சடையார் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. (அ).

வேழ முரிப்பர் மழுவாளர் வேள்வி யழிப்பர் சிரமறுப்பர்
ஆழி யளிப்ப ரரிதனக்கு வானஞ் சுகப்ப ரறமுரைப்பர்

(க) தானவர் - அசுரர். (உ) காலகாலர் - இயமனுக்கு இயமன்; எண்ணார் - பகைவர். (௩) காயும் - கோபிக்கும்; பரமேட்டி - யாகத் தலைவர். (௪) நறை - தேன். (௫) கோள் நாகங்கள் - கொல்லும் நாகங்கள்; பாரிடங்கள் - பூதகணங்கள். (௬) பஞ்சவடி - மயிர்ப்பூணூல்; பிணிவார் - கட்டிய நீண்ட. (அ) வாடா - தாழா; ஆவம்நாழி - அம்புக்கூடு.

ஏழை தலைவர் கடவூரி லிறைவர் சிறுமான் மறிக்கையர்
பேழைச் சடையர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. (௬)

மாட மல்கு கடவூரின் மறையோ ரேத்து மயானத்துப்
பீடை தீர வடியாருக் கருளும் பெருமா னடிகள்சீர்
நாடி நாவ லாரூர னம்பி சொன்ன நற்றமிழ்கள்
பாடு மடியார் கேட்போர்மேற் பாவ மான பறையுமே. (௰)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்த சுவாமிகள்.

திருவாழ் கொளிபுத்தூர்.

முதற்றிருமுறை - பண் - தக்கராகம்.

திருவடிகள்.

திருச்சிற்றம்பலம்.

பொடியுடை மார்பினர் போர்விடை யேறிப் பூதகணம் புடை சூழக்
கொடியுடை யூர்திரிந் தையங் கொண்டு பலபல கூறி
வடிவுடை வாணெடுங் கண்ணுமை பாக மாயவன் வாழ்கொளிபுத்தூர்க்
கடிகமழ் மாமல ரிட்டுக் கறைமிடற் றானடி காண்போம். (௧)

அரைகெழு கோவண வாடையின் மேலோ ராடரவம்மசைத் தையம்
புரைகெழு வெண்டலை யேந்திப் போர்விடை யேறிப் புகழ
வரைகெழு மங்கைய தாகமோர் பாக மாயவன் வாழ்கொளிபுத்தூர்
விரைகமழ் மாமலர் தூவி விரிசடை யானடி சேர்வோம். (௨)

பூணெடு நாகம சைத்தன லாடிப் புன்றலை யங்கையி லேந்தி
ஊணிடு பிச்சையூ ரைய முண்டியென் றுபல கூறி
வாணெடுங் கண்ணுமை மங்கையோர் பாக மாயவன்வாழ்கொளிபுத் [தூர்த்
தாணெடு மாமல ரிட்டுத் தலைவன தாளிழல் சார்வோம். (௩)

---

(௬) ஏழை - உமாதேவி; பேழை - பெரிய; (௰) பீடை - துன்பம்; பறையும் - கெட்டொழியும். (௨) புரை - ஓட்டை; வரைகெழுமங்கை - பார்வதி; ஆகம் - திருமேனி.

தாரிடு கொன்றையோர் வெண்மதி கங்கை தாழ்சடைமேலவைசூடி
ஊரிடு பிச்சைகொள் செல்வ முண்டியென் றுபல கூறி
வாரிடு மென்முலை மாதொரு பாக மாயவன் வாழ்கொளி புத்தூர்
காரிடு மாமலர் தூவிக் கறைமிடற் றானடி காண்போம். (ச)

கனமலர்க் கொன்றைய லங்க லிலங்கக் காதிலோர் வெண்குழையோடு
புனமலர் மாலை புனைந்தூர் புகுதியென் றேபல கூறி
வனமுலை மாமலை மங்கையோர் பாக மாயவன் வாழ்கொளி புத்தூர்
இனமல ரேய்ந்தன தூவியெம்பெரு மானடி சேர்வோம். (ரு)

அளைவளர் நாகம சைத்தன லாடி யலர்மிசை யந்தணனுச்சிக்
களைதலை யிற்பலி கொள்ளுங் கருத்தனே கள்வனே யென்று[தூர்த்
வளையொலி முன்கை மடந்தையோர் பாக மாயவன் வாழ்கொளிபுத்
தளையவிழ் மாமலர் தூவித் தலைவன தாளிணை சார்வோம். (சு)

அடர்செவி வேழத்தி னீருரி போர்த்து வழிதலை யங்கையி லேந்தி
யுடலிடு பிச்சையோ டைய முண்டியென் றுபல கூறி
மடனெடு மாமலர்க் கண்ணியோர் பாக மாயவன் வாழ்கொளிபுத்தூர்த்
தடமல ராயின தூவித் தலைவன தாணிழல் சார்வோம். (எ)

உயர்வரை யொல்கவெ டுத்தவ ரக்க னொளிர்கட கக்கை யடர்த்து
வயலிடு பிச்சையோ டைய மார்தலை யென்றடி போற்றி
வயல்விரி நீல நெடுங்கணி பாக மாயவன் வாழ்கொளி புத்தூர்ச்
சயவிரி மாமலர் தூவித் தாழ்சடை யானடி சார்வோம். (அ)

கரியவ னான்முகன் கைதொழு தேத்தக் காணலுஞ் சாரலு மாகா
எரியுரு வாகியூ ரைய மிடுபலி யுண்ணியென் றேத்தி

(ங) நெடுநாகம் – பெரியபாம்புகள்; தாள்நெடு – நீண்டதாள்கள்; இட்டு – அருச்சித்து; தாள்நிழல் – திருவடிநீழல். (ச) தார்இடு – மாலையாகக்கட்டின; கார்தூவி–மேகம்போலச் சொரிந்து(ரு) கனம் – அதிகம்; புனம் – கொல்லை; இனம் – கூட்டம். (சு) அளை – புற்று; களைதலை – கிள்ளினதலை; கள்வன் – பலியேற்பவன் போல்வந்து வளையும் நிறையும் கவர்ந்தவன்; தளை – முறுக்கு. (எ)அடர் –தகடு; மலர் – குவளைமலர். (அ) ஆர்தல் – புசித்தல்; சயம் – கூட்டம்.

வரியர வல்குன் மடந்தையோர் பாக மாயவன் வாழ்கொளி புத்தூர்
விரிமல ராயின தூவி விகிர்தன சேவடி சேர்வோம். (கூ)

குண்டம ணர்துவர்க் கூறைகண்மெய்யிற் கொள்கையினார் புறங்கூற
வெண்டலை யிற்பலி கொண்டல் விரும்பினை யென்றுவி ளம்பி
வண்டமர் பூங்குழன் மங்கையோர்பாகமாயவன்வாழ்கொளிப்புத்தூர்த்
தொண்டர்கள் மாமலர் தூவத் தோன்றநின் றானடி சேர்வோம்.(ய)

கல்லுயர் மாக்கட னின்று முழங்குங் கரைபொரு காழிய மூதூர்
நல்லுயர் நான்மறை நாவி னற்றமிழ் ஞானசம் பந்தன்
வல்லுயர் சூலமும் வெண்மழு வாளும்வல்லவன்வாழ்கொளிபுத்தூர்ச்
சொல்லிய பாடல்கள் வல்லார் துயர்கெடு தல்லெளி தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டி லுள்ளது.

சுவாமி - மாணிக்கவண்ணர்.

தேவியார் - வண்டமர் பூங்குழனாயகி.

இந்தத்திருப்பதிகம், ஆளுடையபிள்ளையார் இவ்வாலயசேவை செய்த காலத்து ஓதியருளியது.

(கூ) அரியவன் - புறம்போல் உள்ளுங்கரிய விஷ்ணு; ஊர் - ஊரார்; விகிர்தன - விகாரமில்லாதவனது. (ய) குண்டு - இழிவு; துவர் கூறை - சாயவுடை.(கக) கல் - ஒலி; மழுவாள் - மழுப்படை.

திருநாவுக்கரசு சுவாமிகள்.

திருவதிகை வீரட்டானம்.

ஆறாந் திருமுறை - திருவடித்திருத்தாண்டகம்.

திருவடிகள்.

திருச்சிற்றம்பலம்.

அரவணையான் சிந்தித் தரற்றும்மடி
அருமறையான் சென்னிக் கணியாமடி
சரவணத்தான் கைதொழுது சாரும்மடி
சார்ந்தார்கட் கெல்லாஞ் சரணமடி
பரவுவார் பாவம் பறைக்கும்மடி
பதினெண் கணங்களும் பாடும்மடி
விரவுநீர்த் தென்கெடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. (க)

கொடுவினையா ரென்றுங் குறுகாவடி
குறைந்தடைந்தா ராழாமைக் காக்கும்மடி
படுமுழவம் பாணி பயிற்றும்மடி
பதைத்தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்தவடி
கடுமுரணே றூர்ந்தான் கழற்சேவடி
கடல்வையங் காப்பான் கருதும்மடி
நெடுமதியங் கண்ணி யணிந்தானடி
நிறைகெடில வீரட்ட நீங்காவடி. (உ)

வைதெழுவார் காமம்பொய் போகாவடி
வஞ்சவலைப் பாடொன் றில்லாவடி
கைதொழுது நாமேத்திக் காணும்மடி
கணக்கு வழக்கைக் கடந்தவடி

(க) அரவு - ஆதிசேஷன்; அணை - படுக்கை; விரவு - மிக்க.
(உ) படு - சப்திக்கின்ற; பாணி - காதாளம்; கடுமுரண் - வேகமும் வலியும்.

நெய்தொழுது நாமேத்தி யாட்டும்மடி
நீள்விசும்பை யூடறுத்து நின்றவடி
தெய்வப் புனற்கெடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. (௩)

அரும்பித்த செஞ்ஞாயி றேய்க்கும்மடி
யழகெழுத லாகா வருட்சேவடி
சுரும்பித்த வண்டினங்கள் சூழ்ந்தவடி
சோமனையுங் காலனையுங் காய்ந்தவடி
பெரும்பித்தர் கூடிப் பிதற்றும்மடி
பிழைத்தார் பிழைப்பறிய வல்லவடி
திருந்துநீர்த் தென்கெடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. (௪)

ஒருகாலத் தொன்றாகி நின்றவடி
ஊழிதோ றூழி யுயர்ந்தவடி
பொருகழலும் பல்சிலம்பும் மார்க்கும்மடி
புகழ்வார் புகழ்தகைய வல்லவடி
இருநிலத்தா ரின்புற்றங் கேத்தும்மடி
இன்புற்றா ரிட்டபூ வேறும்மடி
திருவதிகைத் தென்கெடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. (௫)

திருமகட்குச் செந்தா மரையாமடி
சிறந்தவர்க்குத் தேனாய் விளைக்கும்மடி
பொருளவர்க்குப் பொன்னுரையாய் நின்றவடி
புகழ்வார் புகழ்தகைய வல்லவடி
உருவிரண்டு மொன்றோடொன் றொவ்வாவடி
உருவென் றுணரப் படாதவடி

---

(௩) பாடு - படுதல்; ஊடறுத்து - ஊடுருவி. (௪) செஞ்ஞாயிறு - சிவந்தசூரியன்; எய்க்கும் - நிகர்க்கும்; சுரும்பு - வண்டின் பேதம்; காய்ந்த - கோபித்த. (௫) ஒருகாலத்து - ஸம்ஹாரகாலத்து; ஒன்றாகிநின்ற - எல்லாவற்றையும் தன்னுள் ஒடுக்கிக்கொண்டு தானொருவனேயாகிநின்ற; ஊழிதோறூழி - பல ஊழிகள்தோறும்;

திருவதிகைத் தென்கெடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. (௬)

உரைமாலை யெல்லா முடையவடி
உரையா லுணரப் படாதவடி
வரைமாதை வாடாமை வைக்கும்மடி
வானவர் கடாம்வணங்கி வாழ்த்தும்மடி
அரைமாத் திரையி லடங்கும்மடி
அகல மளக்கிற்பா ரில்லாவடி
கரைமாங் கலிக்கெடில நாடன்னடி
கமழ்வீரட் டானக்கா பாலியடி. (௭)

நறுமலராய் நாறு மலர்ச்சேவடி
நடுவா யுலகநா டாயவடி
செறிகதிருந் திங்களுமாய் நின்றவடி
தீத்திரளா யுள்ளே திகழ்ந்தவடி
மறுமதியை மாசு கழுவும்மடி
மந்திரமுந் தந்திரமு மாயவடி
எறிகெடில நாடர் பெருமானடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. (௮)

அணியனவுஞ் சேயனவு மல்லாவடி
அடியார்கட் காரமுத மாயவடி
பணிபவர்க்குப் பாங்காக வல்லவடி
பற்றற்றார் பற்றும் பவளவடி
மணியடி பொன்னடி மாண்பாமடி
மருந்தாய்ப் பிணிதீர்க்க வல்லவடி
தணிபாடு தண்கெடில நாடன்னடி
தகைசார் வீரட்டத் தலைவன்னடி. (௯)

பொருகழல் - வீரக்கழல்; தகைய - மேன்மையடையச் செய்ய. (௬) உருஇரண்டும் - முதல்வன் முதல்வி என்னும் இரண்டு உருவங்களும். (௭) அரைமாத்திரை-பிரணவத்தின் நான்காம் மாத்திரை, அதாவது மிகவும் சூக்ஷ்மமான நாதரூபம்; அகலம் - வியாபகம். (௮) எறி - அலைவீசுகின்ற. (௯) தணிபாடு - தணிக்கின்ற; தகைசார் - பெருமைமிக்க.

அந்தா மரைப்போ தலர்ந்தவடி
    அரக்கனையு மாற்ற லழித்தவடி
முந்தாகி முன்னே முளைத்தவடி
    முழங்கழலாய் நீண்டவெம் மூர்த்தியடி
பந்தாடு மெல்விரலாள் பாகன்னடி
    பவளத் தடவரையே போல்வானடி
வெந்தார் சுடலைநீ றாடும்மடி
    வீரட்டங் காதல் விமலன்னடி. (௰)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

திருப்புன்கூர்.

ஏழாந் திருமுறை - பண் - தக்கேசி.

திருவடிகள்.

திருச்சிற்றம்பலம்.

அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத
    அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்ற னாருயி ரதனை
    வெளவி னாய்க்குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்றமர் நலியில்
    இவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தை யால்வந்துன் றிருவடி யடைந்தேன்
    செழும்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே. (க)

(க) அந்தணாளன் - மார்க்கண்டன்; அழகிய கிருபையாகிய குளிர்ச்சியை ஆளுதலுடையவன்; தமர் - படர், தூதுவர்; புன்கூர் - புன்கினை ஸ்தல விருக்ஷமாகவுடைய திருப்பதி. (உ) மறந்து - பெய்யாது ஒழிந்து; பெயர்த்தும் - மறுபடியும்; செய்கை - அருட்செய்கை.

வையக முற்று மாமழை மறந்து
வயலி னீரிலை மாநிலந் தருகோம்
உய்யக் கொள்கமற் றெங்களை யென்ன
ஒளிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்
பெய்யு மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளும்
செய்கை கண்டுநின் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே. (௨)

ஏத நன்னில மீரறு வேலி
ஏயர் கோனுற்ற விரும்பிணி தவிர்த்துக்
கோத னங்களின் பால்கறந் தாட்டக்
கோல வெண்மணற் சிவன்றன்மேற் சென்ற
தாதை தாளற வெறிந்தசண் டிக்குன்
சடைமி சைமல ரருள்செயக் கண்டு
பூத வாளிநின் பொன்னடி யடைந்தேன்
பூம்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே. (௩)

நற்ற மிழ்வல்ல ஞானசம் பந்தன்
நாவி னுக் கரைய னுளைப்போ வானுங்
கற்ற சூதனற் சாக்கியன் சிலந்தி
கண்ணப் பன்கணம் புல்லனென் றிவர்கள்
குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதுங்
கொள்கை கண்டுநின் குரைகழ லடைந்தேன்
பொற்றி ரண்மணிக் கமலங்கண் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூரு ளானே. (௪)

ஞானசம்பந்தர்—பாமுத்திக்குப் பக்குவரல்லாத பலரையும் தமது திருமணக்காலத்துப் பஞ்சாக்ஷரப்பதிக மோதி சிற்சோதியிற் புகும்படிச் செய்தமையானும், **நாவுக்காசர்**—கொல்லாமை மறைந்

(௩) ஏதம் - துன்பம்; கோதனம் - பசுக் கூட்டம்; பூதஆளி - பூதங்களை ஆள்பவன். (௪) சூதன் - மூர்க்கநாயனார்; சிலந்தி - கோச்செங்கட் சோழராது முற்பிறப்பு.

தறையும் அமண் சமயம்புகுந்து முதல்வனை இகழ்ந்தமையானும், நாளைப்போவார்—தம்மரபிற் கேலாததாகிய சிதம்பரத்துக்குச் சென்று நடனதரிசனஞ் செய்ய எண்ணினமை யானும், சூதர்—யாவராலும் குற்றமாகக் கருதப்பெறும் சூதாட்டத்தை மேற் கொண்டு அவ்வாட்டத்தில் சூதுவார்த்தையினால் மறுத்துப்பேசின வர்களை உடைவாளை யுருவிக்குத்தி மூர்க்கர் என்னும் பெயர் பெற்றமையானும், சாக்கியர்—சிவலிங்கப் பெருமானைக் கல்லா லெறிந்தமையானும், சிலந்தி—முற்பிறப்பில் வாயினூலால் பந்தர் அமைத்து யானையினிடத்துப் பகைமை கொண்டமையானும், சோழ ராஜவாகப் பிறந்தகாலத்தும் பண்டைப் பகையுணர்ச்சியால் யானைபுகாவண்ணம் மாடக்கோயில்கட்டி அவ்வுணர்ச்சியை விடா திருந்தமையானும், கண்ணப்பர்—இறைவன் திருமுடியில் அணியப் பெற்ற பூக்களைச் செருப்புக்காலால் நீக்கி, வாய் நீர் உமிழ்ந்து, குடுமியில் அமைத்துக் கொண்டு வந்த பூக்களைச் சொரிந்து, மாமிச வுணவை அருத்தினமையானும், கணம்புல்லர்—சிவபிரான் சந்நிதானத்தில் தலைமயிரினை விளக்கில்மாட்டி எரித்தமையானும், ஆகிய இச்செயல்கள்யாவும் இவர் மாட்டுக் குற்றமாகவிருக்கவும் திருத்தொண்டின் உறைப்பு, பெருக்கம் இவைகாரணமாக இவற்றைக் குணமாகக் கொண்டு நமதையன் அருளினமை உலகப்பிரசித்தம்.

கோல மால்வரை மத்தென நாட்டிக்
கோள ரவுசுற் றிக்கடைந் தெழுந்த
ஆல நஞ்சுகண் டவர்மிக விரிய
அமரர் கட்கருள் புரிவது கருதி
நீல மார்கடல் விடந்தனை யுண்டு
கண்டத் தேவைத்த பித்தநீ செய்த
சீலங் கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே. (ரு)

இயக்கர் கின்னரர் யமனொடு வருணர்
இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்

(ரு) மிக இரிய - மிகவும் பயந்து திசைகள் தோறுமோட; சீலம்-உபகாரகுணம்; (௬) அயர்ப்பு-சோர்வு; திகைப்பு - மயங்குதல்;

மயக்க மில்புலி வானர நாகம்
வசுக்கள் வானவர் தானவ ரெல்லாம்
அயர்ப்பொன் றின்றிநின் றிருவடி யதனை
அர்ச்சித் தார்பெறு மாரருள் கண்டு
திகைப்பொன் றின்றிநின் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே. (௬)

போர்த்த நீள்செவி யாளரந் தணர்க்குப்
பொழில்கொ ளானிழற் கீழறம் புரிந்து
பார்த்த னுக்கன்று பாசுப தங்கொடுத்
தருளி னாய்பண்டு பகீரதன் வேண்ட
வார்த்து வந்திழி யும்புனற் கங்கை
நங்கை யாளைநின் சடைமிசைக் கரந்த
தீர்த்த னேநின்றன் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே. (எ)

மூவெயில் செற்றஞான் றுய்ந்த மூவரில்
இருவர் நின்றிருக் கோயிலின் வாய்தல்
காவ லாளரென் றேவிய பின்னை
ஒருவ னீகரி காடரங் காக
மானை நோக்கியோர் மாநட மகிழ
மணிமு ழாமுழக் கவருள் செய்த
தேவ தேவநின் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே. (அ)

அறிவி னான்மிக்க வறுவகைச் சமயம்
அவ்வ வர்க்கங்கே யாரருள் புரிந்து
வெறிய மாகட லிலங்கையர் கோனைத்
துலங்க மால்வரைக் கீழடர்த் திட்டுக்

(எ) போர்த்த - பொத்தினை; நீள்செவியாளர் - நீண்ட கேள்வி யுடையவர்; அந்தணர் - சனகாதிநால்வர்; தீர்த்தன் - புனிதன்; (அ) கரிகாடு - இருண்மயமான சுடுகாடு; மானை - உமையம்மையை. (௯) துலங்க - நடுங்க; குறிகொள் - இரங்கியருளாய் என்று வேண்டுங் குறிப்பைக்கொண்ட; நாள்-ஆயுள்; செறிவு - நிறைந்த அன்பு.

குறிகொள் பாடலி னின்னிசை கேட்டுக்
கோல வாளொடு நாளது கொடுத்த
செறிவு கண்டுநின் றிருவடி யடைந்தேன்
செழும் பொழிற்றிருப் புன்கூரு ளானே. (கூ)

கம்ப மால்களிற் றின்னுரி யானைக்
காமற் காய்ந்ததோர் கண்ணுடையானைச்
செம்பொ னேயொக்குந் திருவுரு வானைச்
செழும்பொ ழிற்றிருப் புன்கூரு ளானை
உம்ப ராளியை யுமையவள் கோனை
யூரன் வன்றொண்ட னுள்ளத் தாலுகந்
தன்பி னாற்சொன்ன வருந்தமி ழைந்தோ
டைந்தும் வல்லவ ரருவினை யிலரே. (ய)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சிவலோகநாயகர்.

தேவியார் - சோக்கநாயகியம்மை.

இந்தத் திருப்பதிகம், சுந்தரமூர்த்திசுவாமிகள் கலிக்காமநாயனார்க்குற்ற சூலைநோயினையகற்றி நட்புகொண்டு அவரோடு இத்தலத்திற் சேர்ந்து சுவாமிதரிசனஞ் செய்தகாலத்து ஒதியருளியது.

(ய) கம்பம் - அசைவு; உம்பர்ஆளி - தேவர்களை யாள்பவன்.

திருஞானசம்பந்த சுவாமிகள்

திருப்பூந்தராய்.

மூன்றாந் திருமுறை - பண் - காந்தாரபஞ்சமம்.

அருச்சனை.

திருச்சிற்றம்பலம்.

பந்துசேர்விர லாள்பவளத்துவர் வாயினாள்பனி மாமதி போன்முகத்
தந்தமில்புக ழாண்மலைமாதொடு மாதிப்பிரான் [லர்
வந்துசேர்விடம் வானவரெத்திசை யுந்நிறைந்துவ லஞ்செய்து மாம
புந்திசெய்திறைஞ் சிப்பொழிபூந்தராய் போற்றுதுமே. (௧)

காவியங்கருங் கண்ணினாள்கனித்தொண்டை வாய்க்கதிர் முத்தநல்
வெண்ணகைத், தூவியம்பெடை யன்னநடைச் சுரிமென்குழலாள்
தேவியுந்திரு மேனியோர்பாகமா யொன்றிரண்டொரு மூன்றொடு
சேர்பதி, பூவிலந்தண னொப்பவர் பூந்தராய் போற்றுதுமே. (௨)

பையராவரு மல்குன்மெல்லியல் பஞ்சின்னேரடி வஞ்சிகொ ளுண்
மையலாளொரு பாலுடையெம்மிறை சாருமிடஞ் [ணிடை
செய்யெலாங்கழு நீர்கமலம்மலர்த் தேறலூறலிற் சேறல ராதநற்
பொய்யிலாமறை யோர்பயில்பூந்தராய் போற்றுதுமே. (௩)

முள்ளிநாண்முகை மொட்டியல்கோங்கின ரும்புதேன்கொள் குரும்
பை மூவாமருந், துள்ளியன்றபைம் பொற்கலசத்திய லொத்தமுலை,
வெள்ளிமால்வரை யன்னதோர்மேனியின் மேவினார்பதி வீமருதண்
பொழிற், புள்ளினந்துயின் மல்கியபூந்தராய் போற்றுதுமே. (௪)

---

(௧) ஆதிப்பிரான் - மூவர்க்கும் முதல்வனாய சிவபிரான்; பூந்தராய் - சீகாழி. (௨) காவி - நீலோற்பலம்; தொண்டை-கொவ்வை; தூவி - இறகு; ஒன்று இரண்டு ஒரு மூன்று - ஆறு, அதாவது சீகாழியின் பன்னிரு பெயர்களுள் பூந்தராய் ஆறாவது; அந்தணன் - பிரமதேவன். (௩) பை - படம்; வஞ்சி - வஞ்சிக்கொடி; தேறல் - தேன். (௪) முள்ளி - தாமரை; வீ - பூ.

பண்ணியன்றெழு மென்மொழியாள்பகர் கோதையோர்திகழ் பைந்த
ளிர் மேனியோர், பெண்ணியன்றமொய்ம் பிற்பெருமாற்கிடம் பெய்
வளையார், கண்ணியன்றெழு காவிச் செழுங்கரு நீலமல்கிய காமரு
வாவிநற், புண்ணியருறை யும்பதிபூந்தராய் போற்றுதுமே. (ரு)

வாணிலாமதி போனுதலாண்மட மாழையொண்கணாள் வண்டரளங்
நகை, பாணிலாவிய வின்னிசையார்மொழிப் பாவையொடும், சேணி
லாத்திகழ் செஞ்சடையெம்மண்ணல் சேர்வதுசிக ரப்பெருங்கோ
யில்சூழ், போணிலாநுழை யும்பொழிற்பூந்தராய் போற்றுதுமே. ()

காருலாவிய வார்குழலாள்கயற் கண்ணினாள்புயற் காலொளி மின்
வாருலாவிய மென்முலையாண்மலை மாதுடனாய் [னிடை
நீருலாவிய சென்னியன்மன்னி நிகருநாமமுந் நான்கு நிகழ்பதி
போருலா வெயில் சூழ்பொழிற்பூந்தராய் போற்றுதுமே. (எ)

காசைசேர்குழ லாள்கயலேர்தடங் கண்ணி காம்பன தோட்கதிர்
தேசசேர்மலை மாதமருந்திரு மார்பகலத் [மென்முலைத்
தீசன்மேவுமி ருங்கயிலையெடுத் தானையன்றடர்த் தாணிணைச்சேவடி
பூசை செய்பவர் சேர்பொழிற்பூந்தராய் போற்றுதுமே. (அ)

கொங்குசேர்குழ லாணிழல்வெண்ணகைக் கொவ்வைவாய்க் கொடி
யேரிடை யாளுமை, பங்குசேர்திரு மார்புடையார்படர் தீயுருவாய்
மங்குல்வண்ணனுமாமலரோனுமயங்கநீண்டவர்வான்மிசைவந்தெழு
பொங்குநீரின் மிதந்த நற்பூந்தராய் போற்றுதுமே, (கூ)

கலவமாமயி லாரியலாள்கரும் பன்னமென்மொழி யாள்கதிர் வாணு
குலவுபூங்குழ லாளுமைகூறனை வேறுரையால் [தல்
அலவை சொல்லுவார் தேரமணாதர்க ளாக்கினான்றனை நண்ணலு
நல்குநற், புலவர்தாம் புகழ் பொற்பதிபூந்தராய் போற்றுதுமே.

(ரு) கோதை - அளகபாரம்; மொய்ம்பு - தோள்; கண் இயன்று - கண்ணை யொத்து; காவி - கருங்குவளை; காமருவாவி-அழகிய தடாகம். (சு) மாழை - அழகு, மாவடு; தரளம் - முத்து; பாண் - பண்; போழ்நிலா - பிளவுபட்டநிலா. (எ) காசை-காயாம்பூ; காம்பு - மூங்கில். (அ) மங்குல் - மேகம். (௰) கலவம் - கலாபம்; அலவை - அல்லவை, தகாதவை; தேர் -புத்தர்; ஆதர்கள் - அறிவில்லாதவர்கள்.

தேம்பலுண்ணிடை யாள்செழுஞ்சேலன கண்ணியோடண்ணல் சேர்விடந் தேனமர், பூம்பொழிறிகழ் பொற்பதிபூந்தராய்போற்றுது மென், றோம்புதன்மையன் முத்தமிழ்நான்மறை ஞானசம்பந்த னுண்டமிழ் மாலைகொண், டாம்படியிவை யேத்தவல்லார்க்கடை
[யாவினையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு சுவாமிகள்

ஸ்ரீகயிலாயம்.

ஆறுந் திருமுறை - திருத்தாண்டகம்.

அநுச்சனை.

திருச்சிற்றம்பலம்.

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே யாளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி யுள்ளே யொளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி யங்கே யமர்ந்தாய் போற்றி
ஆறங்க நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (க)

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாட னன்று முகந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி

(யக) தேம்பல் - மெலிதல்.

(க) வேற்றாகி - வேறாய பூதங்களாகி; மீளாமே - திரும்பாமல்; ஆற்றாகி - உபசாந்தமாகி. (உ) பிச்சாடல் - பித்தர்களாடல்; வைச்சு - வைத்து, திருவடி நிழலில் இருத்தி; ஆள்தல் - ஆட்கொள்ளுதல்;

பொய்ச்சார் பரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (௨)

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடு முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (௩)

வானத்தார் போற்று மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கு முடலே போற்றி
ஓங்கி யழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (௪)

ஊராகி நின்ற வுலகே போற்றி
ஓங்கி யழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பேராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வா ரொருவரையு மில்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (௫)

பொய்ச்சார்-பொய்த்தார், திருவடி பிழைத்தவர்; போகாது-நீங்காது.
(௪) தேனத்தை - தேனை; வார்த்த - வடித்த; கானம் - மயானம்.

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவ ரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறு நின்றாய் போற்றி
பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (௬)

பண்ணி னிசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவ மறுப்பாய் போற்றி
எண்ணு மெழுத்துஞ்சொல் லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா விறைவா போற்றி
விண்ணு நிலனுந் தீ யானாய் போற்றி
மேலவர்க்கு மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (எ)

இமையா துயிரா திருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா விறைவா போற்றி
உமைபாக மாகத் தணைத்தாய் போற்றி
ஊழியே ழான வொருவா போற்றி
அமையா வருநஞ்ச மார்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
சமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (அ)

மூவாய் பிறவா யிறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர் கொழுந்தே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி

---

(௬) சில் - அணு; பூட்சி - உடம்பு. (எ) மேலவர்க்கும் மேலாகி- திரிமூர்த்திகளுக்கும் பரமாகி. (அ) சமை - பொறுமை. (௯) மூவாய்- மூப்படையாதவனே; அலந்தேன் - வருந்தினேன்.

ஆவா வடியேனுக் கெல்லாம் போற்றி
அல்ல லவிய வலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (க)

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள வகல முடையாய் போற்றி
அடியு முடியு மிகலிப் போற்றி
யங்கோன் றறியாமை நின்றாய் போற்றி
கொடியவன் கூற்ற முதைத்தாய் போற்றி
கோயிலா வென்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய வுருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (ம)

உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணா விலங்கைக்கோன் றன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த வீசா போற்றி
பண்ணா ரிசைசயின்சொற் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (கக)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் வடநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கயிலாயநாதர்; தேவியார் - பார்வதியம்மை.

(கக) எண்ணா - மதியாத; இறை - நொடிப்பொழுது; சொல் - பாடல்; பண்டே - அநாதியே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

திருக்கழுக்குன்றம்.

ஏழாந்திருமுறை - பண் - நட்டபாடை.

அருச்சனை.

திருச்சிற்றம்பலம்.

கொன்று செய்த கொடுமை யாற்பல சொல்லவே
நின்ற பாவ வினைகடாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் றேவர் பிரானிடம்
கன்றி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே. (க)

இறங்கிச் சென்று தொழுமி னின்னிசை பாடியே
பிறங்கு கொன்றைச் சடைய னெங்கள் பிரானிடம்
நிறங்கள் செய்த மணிக ணித்திலங் கொண்டிழி
கறங்கு வெள்ளை யருவித் தண்கழுக் குன்றமே. (உ)

நீள நின்று தொழுமி னித்தலு நீதியால்
ஆளு நம்ம வினைக ளல்கி யழிந்திடத்
தோளு மெட்டு முடைய மாமணிச் சோதியான்
காள கண்ட னுறையுந் தண்கழுக் குன்றமே. (ங)

வெளிறு தீரத் தொழுமின் வெண்பொடி யாடியை
முளிறி லங்குமழு வாளன் முந்தியுறைவிடம்
பிளிறு தீரப் பெருங்கைப் பெய்மத மூன்றுடைக்
களிறி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே. (ச)

புலைக டரத் தொழுமின் புன்சடைப் புண்ணியன்
இலைகொள் சூலப் படைய னெந்தை பிரானிடம்
முலைக ளுண்டு தழுவிக் குட்டியொ டுமுசுக்
கலைகள் பாயும் புறவிற் றண்கழுக் குன்றமே. (ரு)

(க) கொன்று - பிறவுயிர்களைக் கொன்று; பிடி - பெண்யானை. (உ) நித்திலம் - முத்து; கறங்கு - ஒலி. (ங) நீள - அதிகமாக. (ச) வெளிறு - அறியாமை, முளிறு - கூர்மை; பிளிறு - பேரொலி; முசு - குரங்கு; கலைகள் - ஆண்கள்; புறவு -குறிஞ்சி நிலம்.

மடமு முடைய வடியார் தம்மனத் தேயுற
விடமு முடைய மிடறன் விண்ணவர் மேலவன்
படமு முடைய வரவன்றான் பயிலு மிடம்
கடமு முடைய புறவிற் றண்கழுக் குன்றமே. (௬)

ஊன மில்லா வடியார் தம்மனத் தேயுற
ஞான மூர்த்தி நட்ட மாடிந விலுமிடம்
தேனும் வண்டு மதுவுண் டின்னிசை பாடியே
கான மஞ்ஞை யுறையுந் தண்கழுக் குன்றமே. (௭)

அந்த மில்லா வடியார் தம்மனத் தேயுற
வந்து நாளும் வணங்கி மாலொடு நான்முகன்
சிந்தை செய்த மலர்க ளீத்தலுஞ் சேரவே
சந்த நாறும் புறவிற் றண்கழுக் குன்றமே. (௮)

பிழைக ளரத் தொழுமின் பின்சடைப் பிஞ்ஞகன்
குழைகொள் காதன் குழகன் றானுறை யும்மிடம்
மழைகள் சாலக் கலித்து நீடுயர் வேயவை
குழைகொண் முத்தஞ் சொரியுந் தண்கழுக் குன்றமே. (௯)

பல்லில் வெள்ளைத் தலையன் றான்பயி லும்மிடம்
கல்லில் வெள்ளை யருவித் தண்கழுக் குன்றினை
மல்லின் மல்கு திரடோ ளூரன் வனப்பினால்
சொல்லல் சொல்லித் தொழுவா ரைத்தொழு மின்களே. (௰)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் தொண்டைநாட்டில் உள்ளது.

சுவாமிபெயர் - வேதகிரீசர்,

தேவியார் - பெண்ணினல்லாளம்மை.

---

(௬) மடம்-(ஆன்மஅறிவுகெட்டு ஒன்றையும்)அறியாமை, அதாவது முதல்வனறிவுமாத்திரையாய் நிற்றல்;கடம்-(செல்லுதற்கரிய), வழிகள். (௯) மழைகள் - மேகங்கள்; வேய் - மூங்கில். (௰)கல் - கற்பாறை; மல் - வலி; சொல்லல் - தோத்திரங்கள்,

திருஞான சம்பந்த சுவாமிகள்.

கோளறு திருப்பதிகம்.

இரண்டாந்திருமுறை - பண் - பியந்தைக்காந்தாரம்.

அடிமை.

திருச்சிற்றம்பலம்.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தெ
னுளமேபு குந்தவதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி
சனிபாம்பி ரண்டுமுடனே
ஆசறு நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியார வர்க்குமிகவே. (க)

என்பொடு கொம்பொடாமை யிவைமார்பி லங்க
வெருதேறி யேழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தெ
னுளமேபு குந்தவதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறு
முடனாயநாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியார வர்க்குமிகவே. (உ)

(க) வேய்உறு - மூங்கில்போலும்; தடவி - வாசித்து; பாம்பிரண்டு - இராகுகேது; ஆசு - குற்றம். (உ) ஏழை - உமாதேவி; மத்தம் - ஊமத்தம்; ஒன்பது - ஒன்பதாவதுநாள், அதாவது ஆயிலியம்; ஒன்பதொடொன்று - பத்தாம்நாள், அதாவது மகம்; ஒன்பதொடு ஏழு - பதினாறாம்நாள், அதாவது விசாகம்; பதினெட்டு - பதினெட்டாம்நாள், அதாவது கேட்டை; ஆறு - ஆறாம்நாள், அதாவது திருவாதிரை; உடனாயநாள்கள் - மற்றஏழுநாட்கள், அதாவது பரணி, கிர்த்திகை, பூரம், சித்திரை, சுவாதி, பூராடம், பூரட்டாதி. (ப.)

உருவளர் பவளமேனி யொளிநீற ணிந்து
வுமையோடும் வெள்ளைவிடைமேன்
முருகலர் கொன்றைதிங்கண் முடிமே லணிந்தெ
னுளமேபு குந்தவதனால்
திருமகள் கலையதூர்தி சயமாது பூமி
திசைதெய்வ மானபலவும்
அருநெதி நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியார வர்க்குமிகவே. (ஙு)

மதிநுதன் மங்கையோடு வடபாலி ருந்து
மறையோது மெங்கள்பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல ணிந்தெ
னுளமேபு குந்தவதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளானபலவும்
அதிகுண நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியார வர்க்குமிகவே. (ச)

நஞ்சணி கண்டனெந்தை மடவாட னோடு
விடையேறு நங்கள்பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல ணிந்தெ
னுளமேபு குந்தவதனால்
வெஞ்சின வவுணரோடு முருமிடியு மின்னு
மிகையான பூதமவையும்
அஞ்சிடு நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியார வர்க்குமிகவே. (ரு)

வாள்வரி யதளதாடை வரிகோவ ணத்தர்
மடவாட னோடுமுடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தெ
னுளமேபு குந்தவதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடுகரடி

(ஙு) உரு-அழகு; முருகு - மணம்; கலைஅதூர்தி - கலைமகள்; சயமாது - துர்க்கை; பூமி - பூமகள்; நெதி - நியதி. (ரு) உரும் - அச்சம்.

ஆளரி நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியார வர்க்குமிகவே. (௬)

செப்பிள முலைநன்மங்கை யொருபாகமாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியுமப்பு முடிமே லணிந்தெ
னுளமேபு குந்தவதனல்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்துநலியா
அப்படி நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியார வர்க்குமிகவே. (௭)

வேள்பட விழிசெய்தன்று விடைமேலி ருந்து
மடவாட னோடுமுடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தெ
னுளமேபு குந்தவதனல்
ஏழ்கடல் சூழிலங்கை யரையன் றனோடு
மிடரான வந்து நலியா
ஆழ்கட னல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியார வர்க்குமிகவே. (௮)

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள்பரமன்
சலமக ளோடெருக்கு முடியேல ணிந்தெ
னுளமேபு குந்தவதனல்
மலர்மிசை யோனுமாலு மறையோடு தேவர்
வருகால மானபலவும்
அலைகடன் மேருநல்ல வவைநல்ல நல்ல
அடியார வர்க்குமிகவே. (௯)

---

(௬) வாள் - ஒளி; அதள் - புலித்தோல், கோள்அரி - கொலை செய்யும்சிங்கம்; உழுவை - புலி; கேழல் - பன்றி; ஆள்அரி மனிதக்குரங்கு. (௭) அப்பு - கங்கை; வினையான - வினையால்வரும் நோய்கள். (௮) வேள் - மன்மதன்; வான் - ஒளி; இலங்கைஅரை யன் - (பொதுமையில்) அரக்கர்கள்; கடல் - சமுத்திரபயம்.

கொத்தலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணமாய வேடவிகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமேல ணிந்தெ
னுளமேபு குந்தவதனால்
புத்தரோ டமணைவாதி லழிவிக்கு மண்ணல்
திருநீறு செம்மைதிடமே
அத்தகு நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியார வர்க்குமிகவே. (௰)

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெ றுன்னி
வளர்செம்பொ னெங்குநிகழ
நான்முக னாதியாய பிரமாபு ரத்து
மறைஞான ஞானமுனிவன்
தானுறு கோளுநாளு மடியாரை வந்து
நலியாத வண்ணமுரைசெய்
ஆனசொன் மாலையோது மடியார்கள் வானி
லரசாள்வ ராணைநமதே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இந்தத் திருப்பதிகம், திருஞானசம்பந்த சுவாமிகள் சமணரை வாதில்வெல்லத்திருவுளங்கொண்டு மதுரைக்கு எழுந்தருளியபோது திருத்தாண்டகவேந்தர், "சமணரோ! மிகவுங்கொடியர், இப்போது கோள்நிலைடந் நிதாயிருக்கின்றது" என்று தடுத்தவிடத்து, "புவனேசராகிய சிவபெருமானை அம்மையோடு எம்முளத்திற் குடிகொள்ளப்பெற்றிருக்கின்றனம்" ஆகையால் யாதோர் தீங்கும் வாராதென்று உறுதிமொழிந்து ஓதியருளியது.

---

(௯) பரன் - பரமன்; பசு - இடபம். (௧௧) துன்னி - நெருங்கி; மறைஞானம் - வேதிகஞானம், அதாவது அபரஞானம் பரஞானம்; ஆன - முத்திக்கேதுவான.

திருநாவுக்கரசு சுவாமிகள்.

திருவாரூர் திருவிருத்தம்.

நான்காந்திருமுறை-பண்-கொல்லி.

அடிமை.

திருச்சிற்றம்பலம்.

குலம்பலம் பாவரு குண்டர்முன் னேநமக் குண்டுகொலோ
அலம்பலம் பாவரு தண்புன லாரூ ரவிர்சடையான்
சிலம்பலம் பாவரு சேவடி யான்றிரு மூலட்டானம்
புலம்பலம் பாவரு தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே. (க)

மற்றிட மின்றி மனைதுறந் தல்லுணா வல்லமணர்
சொற்றிட மென்று துரிசுபட் டேனுக்கு முண்டுகொலோ
விற்றிடம் வாங்கி விசயனொ டன்றொரு வேடுவனாய்ப், புற்றிடங்
கொண்டான்றன் றொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே. (உ)

ஒருவடி வின்றிநின் றுண்குண்டர் முன்னமக் குண்டுகொலோ
செருவடி வெஞ்சிலை யாற்புர மட்டவன் சென்றடையாத்
திருவுடை யான்றிரு வாரூர்த் திருமூலட் டானன்செங்கண்
பொருவிடை யானடித் தொண்டர்க்குத் தொண்டராம்புண்ணியமே.

மாசினை யேறிய மேனியர் வன்கண்ணர் மொண்ணரைவிட்
டீசனை யேநினைந் தேசறு வேனுக்கு முண்டுகொலோ
தேசனை யாரூர்த் திருமூலட் டானனைச் சிந்தைசெய்து
பூசனைப் பூசுரர் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே. (ச)

அருந்தும் பொழுதுரை யாடா வமணர் திறமகன்று
வருந்தி நினைந்தர னேயென்று வாழ்த்துவேற் குண்டுகொலோ

(க) குலம் - கூட்டம்; பலம் - வன்மை; பாவரு - பரவிவரு; அலம்பல் - ஒலித்தல்; புலம்பு அலம்பாவரு - வருந்தி அழுதுவரும். (உ) அல் - இரவு; சொல் - உபதேசம்; திடம் - உறுதி; துரிசு - குற்றம்; புற்றிடம் கொண்டான் - வன்மீகநாதன். (௩) செரு - போர்; வடி-தேர்ந்த; திரு - முத்திச்செல்வம். (ச) மொண்ணர் - சமணர்; ஏசு-குற்றம்.

திருந்திய மாமதி லாரூர்த் திருமூலட் டானனுக்குப்
பொருந்துந்தவமுடைத்தொண்டர்க்குத் தொண்டராம்புண்ணியமே.

வீங்கிய தோள்களுந் தாள்களு மாய்நின்று வெற்றரையே
மூங்கைகள் போலுண்ணு மூடர்முன் னேநமக் குண்டுகொலோ
தேங்கமழ் சோலைத்தென் னாரூர்த் திருமூலட் டானன்செய்ய
பூங்கழ லானடித் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே. (சு)

பண்ணிய சாத்திரப் பேய்கள் பறிதலைக் குண்டரைவிட்
டெண்ணில் புகழீசன் றன்னருள் பெற்றேற்கு முண்டுகொலோ
திண்ணிய மாமதி லாரூர்த் திருமூலட் டானனெங்கள்
புண்ணியன் றன்னடித்தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே..

கரப்பர்கண் மெய்யைத் தலைபறிக் கச்சுக மென்னுங்குண்டர்
உரைப்பன கேளாதிங் குய்யப்போந் தேனுக்கு முண்டுகொலோ
திருப்பொலி யாரூர்த் திருமூலட் டானன் றிருக்கயிலைப் [மே..
பொருப்பன் விருப்பமர் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணிய

கைவி டுசோறு நின்றுண்ணுங் காத லமணரைவிட்
டுய்யு நெறிகண்டிங் குய்யப்போந் தேனுக்கு முண்டுகொலோ
ஐய னணிவய லாரூர்த் திருமூலட் டானனுக்குப்
பொய்யன் பிலாவடித் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே..

குற்ற முடைய வமணர் திறமது கையகன்றிட்
டுற்ற கருமஞ்செய் துய்யப்போந் தேனுக்கு முண்டுகொலோ
மற்பொலி தோளா னிராவணன் றன்வலி வாட்டுவித்த
பொற்கழலானடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (ய):

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-வன்மீகநாதர், தேவிபெயர்-அல்லியங்கோதையம்மை.

(ரு) உரையாடா - வேண்டுவனவற்றிற்குக் கேட்க வேண்டியிருக்க அதையுஞ்செய்யாது மௌனமாயிருக்கும். (சு) வீங்கிய - பருத்த; வெற்றரை-திருவாணமாய்; பண்ணிய - கட்டி யுரைத்த; சாத்திரப் பேய்கள் - சாத்திரங்களைச் சொல்லிச் செருக்கித் திரிகின்றவர்கள். (ய) கையகன்றிட்டு - விட்டு நீங்கி.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருத்தொண்டத்தொகை.

ஏழாந்திருமுறை - பண் - கொல்லிக்கௌவாணம்.

அடிமை.

திருச்சிற்றம்பலம்.

தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்
 திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே யென்னாத வியற்பகைக்கு மடியேன்
 இளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
 விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியேன்
 ஆரூர னாரூரி லம்மானுக் காளே. (க)

இலைமலிந்த வேனம்பி யெறிபத்தற் கடியேன்
 ஏனாதி நாதன்ற னடியார்க்கு மடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்
 கடவூரிற் கலயன்ற னடியார்க்கு மடியேன்
மலைமலிந்த தோள்வள்ளன் மானக்கஞ் சாறன்
 எஞ்சாத வாட்டாய னடியார்க்கு மடியேன்
அலைமலிந்த புனன்மங்கை யானாயற் கடியேன்
 ஆரூர னாரூரி லம்மானுக் காளே. (உ)

மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்
 முருகனுக்கு முருத்திர பசுபதிக்கு மடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கு மடியேன்
 திருக்குறிப்புத் தொண்டர்தம் மடியார்க்கு மடியேன்

(க) வெல்லுமா - வெல்லுமாறு, வெற்றி பெருந்தன்மையில்; அல்லி - அகவிதழ்; அம்மான் - இறைவன். (உ) இலை - இலைவடிவு; கலைமலிந்த - நூல்களால் மிகவும் புகழப்பெற்ற; மலைமலிந்த - மலை போல் பருத்த; மங்கை - திருமங்கலம்.

மெய்ம்மையே திருமேனி வழிபடாநிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினா லெறிந்த
அம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. (ஙு)

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்ற னடியார்க்கு மடியேன்.
பெருநம்பி குலச்சிறைத னடியார்க்கு மடியேன்
பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கு மடியேன்
ஒருநம்பி யப்பூதி யடியார்க்கு மடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியேன்
அருநம்பி நமிநந்தி யடியார்க்கு மடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. (ச)

வம்பறா வரிவண்டு மணநாற மலரும்
மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியேன்
ஏயர்கோன் கலிக்காம னடியார்க்கு மடியேன்
நம்பிரான் திருமூல னடியார்க்கு மடியேன்
நாட்டமிகு தண்டிக்கு மூர்க்கற்கு மடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கு மடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. (டு)

வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கு மடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற் கடியேன்

(ஙு) மும்மை - மூவிதசாதனம், அதாவது விபூதி, ருத்ராக்ஷம், சடைமுடி; திருமேனி - மணலினாற்சமைத்த சிவலிங்கம். (ச) திருநின்ற செம்மையே - சர்வைசுவரிய சம்பந்நராகிய செம்பொருட் சிவத்தையே; செம்மையாய்க்கொண்ட - சிறந்தபற்றுக் கோடாகக் கொண்ட; பேயார்-பேயுருவடைந்த காரைக்காலம்மையார்; நாட்டம்மிகு - பார்வையை மிகுதியாகப்பெற்றுக்கொண்ட. (சு) கழறிற் றறிவார் - சேரமான் பெருமான் நாயனார் (எங்கும் எவருங் கூறு

கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவாற்கு மடியேன்
கடற்காழிக் கணநாத னடியார்க்கு மடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோ னடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. (சு)

பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யடியா னரசிங்க முனையரையற் கடியேன்
விரிதிரைசூழ் கடனாகை யதிபத்தற் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோ னடியார்க்கு மடியேன்
ஐயடிகள் காடவர்கோ னடியார்க்கு மடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. (எ)

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கு மடியேன்
நிறைக்கொண்ட சிந்தையா னெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாற னடியார்க்கு மடியேன்
துறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலா னடியார்க்கு மடியேன்
அறைக்கொண்ட வேனம்பி முனையடுவார்க் கடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. (அ)

கடல்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி யிடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணைதன் னடியார்க்கு மடியேன்
புடைசூழ்ந்த புலியதண்மே லரவாட வாடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கு மடியேன்
அடல்சூழ்ந்த வேனம்பி கோட்புலிக்கு மடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. (கூ)

வதைத் தாமிருந்த இடத்திலேயே அறியுந் தன்மையுடையவர்); ஆர் — கூர்மை; கூற்றன்—கூற்றுவநாயனார். (எ) துஞ்சிய — திருவடியடைந்த. (அ) காப்பு—காவல்; நிறை - நிறைவு; துறை - கடற்றுறை; அறை - அறுத்தல். (கூ) மடல் - இதழ்.

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடுவா ரடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கு மடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்
அப்பாலு மடிச்சார்ந்த வடியார்க்கு மடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. (௰)

மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கு நேசனுக்கு மடியேன்
தென்னவனா யுலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனா மரனடியே யடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் றிருநாவ லூர்க்கோன்
அன்னவனா மாரூர னடிமைகேட் டுவப்பார்
ஆரூரி லம்மானுக் கன்பரா வாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இந்தப் பதினொரு திருப்பாட்டினும் ஒன்பதுதொகை அடியார்களும் அறுபத்துமூன்று தனியடியார்களுங் கூறப்பட்டுள்ளார்கள்.

அகத்திய மாமுனிவர் திரட்டியருளிய

தேவாரத்திரட்டு முற்றுப்பெற்றது.

---

(௧௧) அடல் சூழ்ந்த — வெற்றிபொருந்திய; சடையநாயனார் இசைஞானியார் — சுந்தரமூர்த்திகளது தந்தையும் தாயும்.

சைவசமய பரமாசாரிய சுவாமிகளாகிய ஞானமூர்த்திகள் மூவர் தாமோதியருளிய தமிழ்வேதத்தைக்கொண்டு செய்த பற்பல அற்புதங்களில் **பஞ்சகிருத்தியங்களை** விளக்கிக்காட்டும் அற்புதங்களிற் சில வருமாறு :—

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்.

சிருஷ்டி—அரவாலிறந்த வணிகனை யெழுப்பியது.
திருமயிலையில் எலும்பைப் பெண்ணாக்கியது.

திதி—திருவீழி மிழலையில் அடியார்களை யாதரித்தது.
பாண்டியருக்குற்ற சுரநோயைத் தவிர்த்தது.
இராஜகுமாரத்தியின் முயலகநோயை யகற்றியது.

சம்ஹாரம்—திருவாலவாயில் சமணர்களைக் கழுவேற்றியது.
புத்த நந்தியின்றலையில் இடிவிழச்செய்தது.

திரோபவம்—வேதாரண்யத்தில் கதவை யடைத்தது.

அநுக்கிரகம்—திருமணத்தில் எவரையும் ஜோதியிற் புகச்செய்து பேரின்பமளித்தது.

திருநாவுகரசு மூர்த்தி சுவாமிகள்.

சிருஷ்டி—விஷத்தாலிறந்த மூத்தநாவுக்கரசை யெழுப்பியது.

திதி—திருவீழி மிழலையில் அடியார்களை யாதரித்தது.

சம்ஹாரம்—ஏவிய யானையைக்கொண்டு ஏவினரைக்கொன்றது.

திரோபவம்—அப்பூதியடிகள் கூறிய கர்ண கடோமானவார்த்தைகளைக் கவனியாதது.

அநுக்கிரகம்—அப்பூதியடிகளுக்குப் பரமுத்தியையளித்தது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

சிருஷ்டி—முதலையுண்ட பாலனை அழைத்தது.

திதி—பஞ்சகாலத்தில் நென்மலையை யெவர்க்குமளித்தது.

சம்ஹாரம்—காவிரியின் வெள்ளப் பெருக்கை யடக்கியது.

திரோபவம்—ஏயர்கோன் கலிக்காம நாயனாருக்குத்தன்னை மறைத்தது.

அநுக்கிரகம்—பெருமிழலைக் குறும்பர், சேரமான் பெருமாள், கலிக்காமனார் முதலிய திருத்தொண்டர்களைக் கயிலையிற் சேர்த்தது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

அகத்தியர் தேவாரத்திரட்டு

பாட்டு முதற்குறிப்பகராதி.

திருப்பாட்டு முதற்குறிப்பகராதி

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மாணிக்கவாசக சுவாமிகள்

சரித்திரச் சுருக்கம்.

அநாதிமலமுத்த சித்துருவாகிய முழுமுதற்கடவுள் சிவபெருமானே என்று ஆன்மாக்கள் யாவருந் துணிந்து வழிபட்டு உய்யும் பொருட்டுப் பற்பல அற்புதங்களினாலே, சகல சமயாதீதமாகிய சித்தாந்த சைவத்தை ஸ்தாபித்தருளிய பரம சமயாசாரிய சுவாமிகள் நால்வருள் **ஸ்ரீமந் - மாணிக்கவாசக சுவாமிகள்** ஒருவர். அவர் திருவாய்மலர்ந்தருளிய திருவாசகமும் தமிழ்வேதமென்று உயர்ந்தோர் அனைவராலுங் கொள்ளப்பெற்றுப் பாராயணஞ் செய்வோர்க்குப் பத்தி ஞானங்களை உண்டாக்குகின்றது. மாணிக்கவாசக சுவாமிகளுக்குச் சிவக்ஷேத்திரங்கள் எல்லாவற்றினும் மார்கழி மாசத்திலே திருவிழா நடத்தப்படுகின்றது. அவற்றுள் அப்பெருமானார் உபதேசம்பெற்ற திருப்பெருந்துறையிலே மார்கழி ஆனிமாசங்களில் நடத்தப் படுகின்ற மகோற்சவங்களிலே அவருக்கு இடபவாகனமுதலிய எல்லா வாகனங்களுமுண்டு.

இத்துணை அரியபெரிய மகிமைவகித்த மாணிக்கவாசக சுவாமிகள் பலவளங்கள் நிறைந்த செந்தமிழ்த் தென் பாண்டிநாட்டிலே, அரிமர்த்தன பாண்டிய ராஜன்காலத்திலே, திருவாதவூரிலே, அமாத்தியரென்னும் அந்தணர் குலத்திலே திருவவதாரஞ்செய்து வாதவூரர் என்கிற பிள்ளைத்திருநாமம்பெற்றுப் பதினாறு பிராயத்துள்ளே வேதசிவாகம முதலியகலைகள் முற்றுங் கற்றுச் சிவபெருமானிடத்துப் பேரன்பு பூண்டவராயொழுகினார்.

அவ்வாறு ஒழுகிப்பொலிவெய்திய அவ்வாதவூரருடைய நற்குண நற்செய்கைகள் அனைத்தும் மதுரையில் அரசாட்சிசெய்த

அரிமர்த்தனபாண்டியன் செவிக்குப் புலப்பட்டன. புலப்பட்டவுடனே, அவ்வரசன் வாதவூரரை வருவித்து ஆராய்ந்து, கேள்வியுற்றதிலும் மேம்பட்டு விளங்குங் குணாதிசயங்களை வியந்து கொண்டாடிப் பல சிறப்புகள் செய்து, **தென்னவன் பிரமராயன்** என்னும் பட்டப்பெயருங் கொடுத்துத் தனக்கு முதன் மந்திரியாராக நியமித்துக் கொண்டான்.

அம்மந்திரியார் அரசனுக்கு இனியராய்ப் பெருஞ்செல்வராய் வாழ்ந்திருக்கும்போழ்து, மனந்தூய்மையுடையராய் நித்தியாநித்திய வுணர்வு தோன்ற, இம்மை மறுமைப்பயனை வெறுத்துப் பிறவிக்கஞ்சி வீடுபேற்றின் அவாமிக்குடையராய், தம்முடைய எண்ண முழுதுஞ் சிவபெருமான் பாற்சேர்த்து அவருடைய திருவடிப்பேறு அடைதற்குக் காரணமாகிய தத்துவஞானத்தை உபதேசிக்கத்தக்க ஞானசாரியரைக் காணுதற்குப் பேரவா வுற்றிருந்தனர்.

அங்ஙனமிருக்கும்போது, அரசன் கீழ்க்கடற்றுறையிலே சென்று குதிரைகள் வாங்கி வரும்படி அம்மந்திரியாரை ஏவினான். ஏவப்பட்ட மந்திரியார் அரசனது அளவிறந்த திரவியத்தைக் கைக்கொண்டு, நால்வகைப் படைகளுஞ் சூழ ஓர் நல்லநாளிலே பிரயாணப்பட்டுச் சென்று, மார்க்கத்தின் மத்தியிலேயுள்ள திருப்பெருந்துறை என்னுஞ் சிவக்ஷேத்திரத்தைச் சமீபித்தனர். சமீபிக்குங்கால், பரமபதியாகிய சிவபிரான் மந்திரியார்க்கு இருவினையொப்பு மலபரிபாக முற்றமைநோக்கி, அவருக்கு அநுக்கிரகிக்கும்பொருட்டு, திருப்பெருந்துறைச் சிவாலயத்திலே, அருள்வடிவாகிய குருந்தமர நீழலிலே, தம்முடைய கணநாயகர்கள் மாணாக்கராய்ச்சூழ அக்குழாத்தின் நாப்பணே தாம் ஒரு அந்தணர் வடிவத்தோடு ஆசாரியராகத் திருவுருக்கொண்டு வீற்றிருந்தருளினார். பின்பு மந்திரியார் ஆலயஞ் சேர்ந்து குருமூர்த்தியைத் தரிசித்த வளவில் அழலிடைப்பட்ட மெழுகென மனமுருகி அழுதகண்ணுந் தொழுதகையுமுடையராய்த் திருவடிக்கமலங்களிலே வீழ்ந்து, தேவரீர் அடியேனுக்கு அநுக்கிரகிக்க வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தனர். மந்திரியாரது அதிதீவிரதர சத்திநிபாதத்தைக் கண்டதேசிகோத்தமர் திருவருள் சுரந்து விஞ்ஞானதீக்ஷைசெய்து பாசத்தை ஒருவி, ஞானத்

நாற் பசுபதியாகிய தம்மை யநந்நியமாகக் கண்டு தம்முள் விழுங்கக் கொடுத்து ஏகபூரணவடிவாய் நிற்கும் வண்ணம் ஸ்ரீ மூர்த்தி பஞ்சாக்ஷரத்தை உபதேசித்துத் திருவடி சூட்டி யருளினார். அவ்வுபதேசப் பொருளைக் கேட்டுச் சிந்தித்துத்தெளிந்து நிட்டையில் அமர்ந்து சிவாநுபவஞ் சுவாநுபூதியாகக்கொண்ட மெய்யன்பர் சிவாநந்த மேலீட்டினாலே குருமூர்த்தங்கொண் டருளிய பரமசிவனது பாதார விந்தங்களிற் பாமாலை சூட்டத் தொடங்கினார். அப்பாடல்களைக் கேட்டருளிய சிவபிரான் திருவுளங் களிகூர்ந்து, உயர்ந்த மாணிக்கங் கள்போல அப்பாடல்களிலே வாசகங்கள் அமைந் திருந்தமை நோக்கி, அவ்வாதவூரடிகளுக்கு "**மாணிக்க வாசகன்**" என்று திருப் பெயர் கொடுத்து அங்கே அமர்ந் திருக்கும்படி கட்டளையிட்டுத் தம் மாணாக்கர்களோடு மறைந்தருளினார்.

பின்பு அன்பே உருவாகிய மாணிக்கவாசகப் பிரான் குதிரை கொள்ளக் கொடுவந்த தனங்களை யெல்லாம் அப்பதிக்கண்ணதாகிய சிவாலயத்திருப்பணிக்கும், நித்திய பூஜைக்கும், நைமித்திகமாகிய விசேட பூஜைக்கும், அடியார்களுக்கும் உபயோகப் படுத்திப் பித்துப் பிடித்தார்போல் அமர்ந்தருளுங்கால், "இதுகாறுங் குதிரை கள் வாங்கிவாராமைக்குக் காரணம் என்னை" என்று அரசன் நிருபம் அனுப்பினமைகண்டு, ஆலயத்துக்குச்சென்று சிவ சந்நிதானத்திலே விண்ணப்பஞ் செய்தபொழுது, அசரீரிவாக்கு எழுந்தது. அதனைக் கேட்டவுடனே அடியார்க் கெளியராய் அவர் வேண்டிய வேண்டி யாங்கு செய்தருளும் எம்பரமநாதன் குருவடிவாயெழுந்தருளி அன் பனே! "நாம் பரிகொண்டு வருகின்றோம் நீ செல்லுதி" என்று திருவாய் மலர்ந்தருள, உடனே மாணிக்கவாசக மூர்த்திகள் எழுந்து மதுரையம்பதி சேர்ந்து, அரசனுக்கு மகிழ்ச்சி யுண்டாகும்படி "இத்தனை நாளிலேபரிகள்வரும்" என்று வரையறை கூறினார். வரைசெய்த நாள்காறும் பரிகள் வாராமைகண்டு அரசன் கோபங் கொண்டு மாணிக்கவாசக சுவாமிகளை வருத்தப்படுத்தி முன் கொண்டுசென்ற பொன்னை வாங்கும்படி சேவகரை ஏவினான். சுவாமிகள் அவ்வருத்தம் பொறு து சிவபிரானை நோக்கி முறையிடும் பொழுது, சிவபிரான் வனத்திலே திரிகின்ற நரிகளைப் பரிகளாக் கிக் கொடுவந்து காட்டி, அரசனை மகிழ்வித்துத் தந்தொண்டரை

விடுவித்தனர். பின்பு அன்றிரவிற்றானே அப்பரிகள் அனைத்தும் நரிகளாய் முன்னுள்ள பரிகளுக்கும் ஊறுசெய்து நகரமெங்கும் கலங்கும்படிச் செய்து தம்மிடங்களை அடைந்தன. விடிந்தவுடனே நிகழ்ந்த செய்திகளைக்கேட்டு அரசன் பெருங்கோபங்கொண்டு மந்திரியாரை வருவித்து "ஏ மந்திரியே ? நீமாயவித்தையினால் நம்மை மயக்கிவிட்டாய்" என்று கூறிச் சேவகரை நோக்கி இம்மந்திரியைக் கொடுந்தண்டஞ்செய்து குதிரை கொள்ளக்கொடுசென்ற பொன்னை வாங்கும்படி ஆஞ்ஞாபித்தான். உடனே சேவகர் அடிகளைக் கொடுந் தண்டஞ்செய்த போது, சுவாமிகள் சிவபிரானை நோக்கித் துதித்தனர். அதனையுணர்ந்த சிவபிரான் வைகைநதியை மதுரைநகர்மீது பெருகி வரும்படிச்செய்து மாணிக்கவாசக சுவாமிகளது மகிமையை அரசனுக்கு அறிவித்தனர்.

பின்பு சிற்பரச் செல்வர்களாகிய சுவாமிகள் எக்காலமுந் திருவருளிற் றிளைத்துக்கொண்டு அரசனையுந் துறந்து பல சிவஸ்தலங்களையும் பணிந்து பாடி, ஸ்ரீ சிதம்பரக்ஷேத்திரத்தை அடைந்து அங்கே ஸ்ரீ ஆனந்த நடராஜப் பெருமானைத் தொழுது உளங்கசிந்துருகும்படிப் பாடி, அத்தில்லையெல்லைக்கு மேலைத் திசையிலேயுள்ள தபோவனத்திலே ஞானானந்த நிட்டையில் அமர்ந்தருளினார். அதன்பின் ஸ்ரீ ஞானநடராஜர் ஆஞ்ஞைப்படி புத்தரை வாதிலே வென்று, ஊமைப் பெண்ணைப் பேசுவித்து அங்கே அமரும்போது, சிவபிரான் அந்தணராய் வந்தருளி அதுவரையும் பாடியவைகளைத் தொகுத்துக் கூறும்படிகேட்டு அதிகாரவரைசெய்த திருவாசகத் திருமுறையாகவும், திருக்கோவையார் பாடும்படி கேட்டு அதனை யதன் பின்னாகவும், தமது அருமைத் திருக்கரத்தால் வரைந்தருளி "இங்ஙனம் மாணிக்கவாசகன் சொல்லியபடி அழகிய திருச்சிற்றம்பல முடையார் எழுதியது" என்று திருக்கைச்சாத்துமிட்டு அந்தர்த்தானமாயினர். பின்பு அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய ஸ்ரீ பரமானந்தத் தாண்டவேசுரர் திருவடி நிழலிலே அருள்வர்க்கத்தவராகிய மாணிக்கவாசக சுவாமிகள் ஞானானந்த வடிவா யமர்ந்தனர்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மாணிக்கவாசக சுவாமிகள் புராணசாரம்.

செய்யதிரு வாதவூர் வந்தருளி யமைச்சரெனச் சிறந்துநீடு
வையமிசை வழுதிநிதி கொண்டரனைக் குருந்தடியில் வணங்கிஞாலம்
உய்யவருட் பணியாற்றி நரிபரியாச் செய்துநதி யுடைப்பிலெங்கள்
ஐயன்முடி மிசையுவந்து மண்சுமக்க வன்பினுரு வாயினாரே. (க)

எங்குமாகிய வழகன் மேனிபிரம் படிதாங்க வேங்கிப் புத்தர்
மங்கவா ரருள்செய்து மூகைபே சிடவழங்கி மணிமன் றூடும்
எங்கணு யகன்கரத்தா லேடுமெழுத்தாணியுங் கொண்டெழுதப் பாடி
அங்கண்மே வியசோதி தன்னிலிரண் டறக்கூடி யமர்ந்திட்டாரே.

மாணிக்கவாசக சுவாமிகள் தோத்திரம்.

எழுதரு மறைகடேறு விறைவனை யெல்லிற் குங்குல்
பொழுதறு காலத்தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமே லேறத் துளும்புகண் ணீருண்மூழ்கி
அழுதடி யடைந்த வன்ப னடியவர்க் கடிமை செய்வாம். (க)

பெருந்துறையிற் சிவபெருமா னருளுதலும் பெருங்கருணைப்
பெற்றி நோக்கிக்
கரைந்துகரைந் திருகண்ணீர் மழைவாரத் துரியநிலை
கடந்து போந்து
திருந்துபெருஞ் சிவபோகக் கொழுந்தேறல் வாய்மடுத்துத்
தேக்கிச் செம்மாந்
திருந்தருளும் பெருங்கீர்த்தி வாதவூ ரடிகளடி
யிணைகள் போற்றி. (உ)

மாணிக்கவாசக சுவாமிகள் சிறப்பு.

ஊமையினை மாற்றி யுணர்மொழியச் செய்ததுவும்
காமனைவென் றோனெழுதக் கற்றதுவும் - ஆமையைப்போல்
ஐந்தடக்கி யீச னருளிற் கலந்ததுவும்
மூந்தம் பசுகரண மோ. . .

திருவாசகப் பெருமை.

நேரிசை வெண்பா.

வள்ளுவர்நூ லன்பர்திரு வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணந் தொகைச்சித்தி யோராறும்
தண்டமிழின் மேலாந் தரம். (க)

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர். (உ)

நேரிசை யாசிரியப்பா.

விளக்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கண்
காரண னுரையெனு மாரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவா சகமிங் கொருகா லோதின்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே. (ங)

பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன் மொழிந்தவா சகமே
வாசக மதற்கு வாச்சியந்
தூசக லல்குல்வேய்த் தோளிடத் தவனே. (ச)

வலமழு வுயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கரு ணைக்கடல்
முகந்துல குவப்ப வுகந்தமா ணிக்க
வாசக னெனுமொரு மாமழை பொழிந்த
திருவா சகமெனும் பெருநீ ரொழுகி
ஓதுவார் மனமெனு மொண்குளம் புகுந்து
நாவெனு மதகி னடந்து கேட்போர்
செவியெனு மடையிற் செவ்விதிற் செல்லா
உளமெனு நிலம்புக வூன்றிய வன்பாம்
வித்திற் சிவமெனு மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் றருமே. (ரு)

நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ
மனநின் றுருக்கு மதுர வாசக
கலங்குறு புலனெறி விலங்குறு வீர
திங்கள் வார்சடைத் தெய்வ நாயகன்
ஒருகலை யேனு முணரா னஃதான்று
கைகளோ முறிபடுங் கைக்கள் காணின்
கண்களோ வொன்று காலையிற் காணும்
மாலையி லொன்று வயங்கித் தோன்றும்
பழிப்பி ஞென்று விழிப்பி னெரியும்
ஆயினுந் தன்னை நீபுகழ்ந் துரைத்த
பழுதில் செய்யு ளெழுதின னதனால்
புகழ்ச்சி விருப்பன் போலும்
இகழ்ச்சி யறியா வென்பணி வானே. (சு)

திருவார் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தின்
நீழல்வா யுண்டநிகரிலா னந்தத்
தேன்றேக் கெறியுஞ் செய்யமா ணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரு மோது மியற்கைத்தாதலின்
பொற்கல நிகர்க்கும் பூசுரர் நான்மறை

மட்கல நிகர்க்குமதா வாசகம்
ஓதின் முத்தி யுறுபயன்
வேத மோதின் மெய்ப்பய னறமே. (எ)

செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வாதவூ ரன்ப
பாவெனப் படுவ துன் பாட்டுப்
பூவெனப் படுவது பொறிவாழ் பூவே. (அ)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மாசறு மணிபோற் பன்னுள் வாசக மாலை சாத்திப்
பூசனை செய்து பன்னுட் புண்ணிய மன்று ளாடும்
ஈசன தடிக்கி ழெய்தி யிறிலா வறிவா னந்தத்
தேசொடு கலந்து நின்றார் சிவனருள் விளக்க வந்தார். (கூ)

திருவாசக உண்மை.

சிவபுராணம்.

தேசுறுமா ணிக்கமெனச் சிறந்ததிரு வாசகத்தில்
பேசதிருச் சிவபுரா ணத்தகவற் பெருமைசொலில்
ஈசர்தமக் கியல்பான திருநாம முதலெவையும்
மாசறவே வாழ்கவென வாழ்த்துகின்ற வருட்குறிப்பாம். (க)

கீர்த்தித்திருவகவல் - திருவண்டப்பகுதி.

புகழ்பெருகுஞ் செய்கையெலாம் புகலகவ லொன்றுகும்
திகழ்திருவண் டப்பகுதித் திருவகவல் செப்பியது
தகுசிருட்டி திதியொடுக்கஞ் சாற்றுதிரோ தம்பொதுவாய்
அகலமுறத் தேர்ந்திடவே யருளியநற் பொருளாகும். (உ)

போற்றித்திருவகவல் - திருச்சதகம் - நீத்தல்விண்ணப்பம்.

முத்திபெறு நெறியறிய மொழிபோற்றித் திருவகவல்
சத்தியஞா னந்தருதே சிகர்மோகஞ் சதகமதாம்

மித்தையுல கினையகற்றி விடாமலெனை யாண்டருளென்
றத்தாறிந் திடநீத்தல் விண்ணப்ப மறைந்ததுவாம். (௩)

திருவெம்பாவை - திருவம்மானை.

மலவிருளுற் றுறங்காயன் மன்னுபரி பாகருள்
செலமுழுக வருகவெனச் செப்பறிரு வெம்பாவை
நலமுறுமந் தணர்வடிவாய் நாரணன்காண் பரியபதம்
நிலமதில்வந் தாள்கருணை நினைந்தாட லம்மானை. (௪)

திருப்பொற்சுண்ணம் - திருக்கோத்தும்பி.

சத்திகளாற் றனுகரண புவனபோ கங்கடமை
அத்தனுக்குச் சுண்ணமவை யாமிடிக்கக் கூவுதலே
ஒத்ததிருச் சுண்ணமுயர் போதமொரு வுண்டாகச்
சித்தவிகா ரத்தூது செப்பிவிடல் கோத்தும்பி. (௫)

திருத்தெள்ளேணம் - திருச்சாழல்.

பொன்னார்மெய் யண்ணலரும் போதவின்ப மேமிகுந்து
தென்னாதென் னாவெனவே தெள்ளேணங் கொட்டியதாம்
முன்னார் கலையுமுண ராமூகை யாமேடி
தன்னாற் பதிமுதன்மை சாற்றியதாந் திருச்சாழல். (௬)

திருப்பூவல்லி - திருவுந்தியார்.

தேவரறி யாதசிவன் றேடியே யாண்டநலம்
ஆவலொடுஞ் சொல்லி யடியாரோ டுங்கூடிப்
பூவியந்து கொய்தறிருப் பூவல்லி யாமரன்சீர்
பாவமுறு தீமையறப் பாடறிரு வுந்தியதே. (௭)

திருத்தோணோக்கம் - திருப்பொன்னூசல்.

சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே புண்ணியமாய்
அத்தன் செயுங்கருணைக் காராமை யுண்மிகுந்து
பொத்தியகை கொட்டிப் புகழ்தறே ணோக்கமருள்
சத்தியிருந் தாடத்தா லாட்டிடுதல் பொன்னூசல். (௮)

திருவன்னைப்பத்து - குயிற்பத்து.

நேயம்மி குந்த நிலைகுலையக் கூடுதலை
ஆயவருட் டாய்க்கங் கறைதலன்னைப் பத்தாகும்
தூயவருட் குயிலேநற் சோதியெனைக் கூடுதற்குன்
வாயினாற் கூவெனமுன் வாழ்த்தல்குயிற் பத்தாமே. (கூ)

திருத்தசாங்கம் - திருப்பள்ளியெழுச்சி.

பேர்நாடு ராறுமலை பெயரூர்தி படைமுரசு
தார்கொடியே லாமரற்குச் சாற்றறசாங் கமதாம்
எர்மருவு திருப்பள்ளி யெழுச்சிபணி விடைகேட்
டார்வமுட னண்டவரற் கன்புசெயு மியல்பே. (ம)

கோயின்மூத்ததிருப்பதிகம் - கோயிற்றிருப்பதிகம்.

செத்திலாப்பத்து - அடைக்கலப்பத்து.

கோயின்மூத்ததிருப்பதிகஞ்சிதம்பரத்திலருளடையுங்குறிப்பதாகும்
ஏயுங்கோயிற்றிருப்பதிகம்பெருந்துறைத்தேசிகர்மோகமியம்பலாகு
ஆயபசுபோதம்முற்றுங்கெடவேண்டலேசெத்திலாப்பத்தாகும் [ம்
ஓதவல்லாதனைகள்வந்தணுகாமலடைக்கலப்பத்துரைத்ததாமே. (கக)

ஆசைப்பத்து - அதிசயப்பத்து.

கருவிடறு மூனுடற்கண் வாராமற் றிருவருளிற் கலப்ப தற்கே,
அரனடியைப்புகழ்ந்துபெருகார்வமொடுபாடுதலேயாசைப்பத்தாம்
வெருவிமலத்தினைச்சிலத்தொன்றுகுமடியர்குழாத்துடனேகூட்டும்
பரமரருட்பெருமைமிகுதியைப்புகழ்ந்துபாடலதிசயப்பத்தாமே. ()

புணர்ச்சிப்பத்து - வாழாப்பத்து.

ஆண்டகுரு வைப்பிரியா தணைந்துபணி பிரிந்துமிகு மன்போடின்பம், பூண்டுகிடக் கப்பெறுவ தென்றுகொலோ வெனும் விருப்பம் புணர்ச்சிப் பத்தாம், நீண்டவுல கத்தினிற்பற் றொன்றிலேனிவ்வுடற்க ளின்று வாழேன், மாண்டகுநின் பதநிழற்கீழ் வருக வருள் புரியெனுஞ்சொல் வாழாப் பத்தே. (கரு).

அருட்பத்து - திருக்கழுக்குன்றப்பதிகம்.

சோதியருட் சுடர்விளக்கே துயர்ப்பிறவி குடல்விடுத் துன்றுள் சேர்தற், காதரித்திங் குனையழைத்தா லதெந்துவெனக் கேளோ

லுஞ்சொ லருட்பத் தாகும், நீதிமறை பரவுதிருப் பெருந்துறையிற் குருவடியாய் நிகழ்ந்த கோலம், காதலொடுங் காட்டினையே யெனுங் களிப்புப் பகர்தறிருக் கழுக்குன்றுமே. (கரு)

கண்டபத்து - பிரார்த்தனைப்பத்து.

இந்திரிய வயமயங்கா தேயெடுத்துத் தானுக்கு மெழிலா னந்தம், கந்தமலி தில்லையினுட் கண்டேனென் றுவந்துரைத்தல் கண்ட பத்தாம், அந்தமிலா வானந்தத் தகலாம லெனையழுத்தி யாள்வா யென்று, சிந்தைசலந்துரைத்ததுவே பிரார்த்தனைப்பத் தாய்ப்புக லுஞ் செய்கை யாமே. (௧௫)

குழைந்தபத்து - உயிருண்ணிப்பத்து.

இழைத்தேனிவ் வாக்கைபொறுத் தினிக்கணமும் பொறுக் கலே னேழையேனைக், குழைப்பதேன் பிழைபொறுத்தா ளென விரங்கிக் கூறுதலே குழைத்த பத்தாம், தழைத்துவளர் பேரின்பந் தானுகி யுயிர்தோன்றுத் தன்மை யாய்த்துன், பொழித்துநிறை வைப்பெறுத லுயிருண்ணிப் பத்தாயிங் குரைத்த தாமே. (௧௬)

அச்சப்பத்து - திருப்பாண்டிப்பதிகம்.

தரையில்வளர் வினைமுழுதும் வரினுமஞ்சேன் சிவசமயத் தவஞ்சாராதார், அருகின்வரக் காண்கின்மன மஞ்சுமென விசழ்ந் துரைத்த லச்சப் பத்தாம், புரவியின்மேற் பாண்டியன்முன் வரும் பதத்தை யாம்பெறுமற் புதம்போல் யாரும், விரவுமின்க ளென்றடி யார்க் குறுதி சொலற் றிருப்பாண்டி விருத்த மாமே. (௧௭)

பிடித்தபத்து - திருவேசறவு.

மிக்கபிற வித்துயரொ லாமொழித்து விபுத்துவமிங் களித்த லாலே,பிக்கறச் சிக்கெனப் பிடித்தே னின்னை யென்று துணிவு செப் பல் பிடித்த பத்தாம், தக்கபரி யாய்நரியை யாக்குதல்போ லெனைப் பெரிதாய்த் தாக்கித் தாட்கீழ், அக்கணம்வைத் தனையேயென் றிரங் கறிரு வேசறவென் றியம்பலாமே. (௧௮)

திருப்புலம்பல் - குலாப்பத்து.

கரைந்துருகும் பேரன்புன் கழலிணைக்கே கற்றாவின் மனம்போ லென்றும், திருந்தும்வகை யெனக்கருள்க வெனக்கேட்ட திரும்

புலம்ப லாகு முள்ளம், விரும்புசிவா னந்தவெள்ளம் விளைந்துதில்லை நாயகனை மிகக்கொண்டாடி, நிரம்புமனக் களிமிகுத்த விறுமாப்பே குலாப்பத்தாய் நிகழ்த்த லாமே. (௧௯)

அற்புதப்பத்து - சென்னிப்பத்து.

மாயவுருக் கொண்டுளத்தை மயங்குமின்னார் கண்வலையுண் மயங்கு வேற்கிங், காயுமறி வளித்தாள லதிசயமென் றுரைத்தலற்பு தப்பத் தாகும், தூயவருட் குருபதத்தைச் சூட்டுதற்குப் பெற்றவுயிர் சுகத்தை நோக்கிச், சேயமலர்ப் பதத்தருமை யடியரொடும் வியந் துரைத்தல் சென்னிப் பத்தே. (௨௰)

திருவார்த்தை - எண்ணப்பதிகம்.

அறம்பெருகும் பெருந்துறையிற் றமையாண்ட செயன்முதலா வரன்சி ராட்டின், திறமறிவா ரெம்பிரா னவரென வுரைத்தறிரு வார்த்தையாகும், நிறம்வளரு மலர்ப்பொழில்சூழ்ந் தோங்குதிருத் தில்லைமன்று ளிமலனுமத், திறம்பெருகு மின்பமரு ளென்றவெண் ணப் பத்தெனவந் திகழ்த்த லாமே. (௨௧)

யாத்திரைப்பத்து - திருப்படையெழுச்சி.

பொல்லாத பவுத்தைவிட்டுச் சிவன்கழற்கீழ்ப் புகுங்காலம் புணர்ந்த தெற்கிங், கெல்லாரும் வாருமெனக் கருணையினு லழைத் திடல்யாத் திரைப்பத்தாகும், அல்லாத துர்க்குணமா யப்படைகள் விளையாம லருள்வா ளேந்தி, நல்லோர்க ளியாருமெம்மோ டெய்து மெனப் படை யெழுச்சி நவிறலாகும். (௨௨)

திருவெண்பா - பண்டாயநான்மறை.

தொந்தமா மலமொறுத்துச் சுகம்பெருக்கிப் பெருந்துறைவாழ் சோதி யென்றன், சிந்தனையே யூராகக் கொண்டிருந்தா ரென் றுரைத்த திருவெண் பாவாம், எந்தைதிருப் பெருந்துறையை யேத்துநம ரேவாழ்வுற் றிடர்சேர்பாச, பந்தமறுத் திடுவரெனப் பண்டாய நான்மறையும் பகர்ந்த தாயே. (௨௩)

திருப்படையாட்சி - ஆனந்தமாலை - அச்சோப்பதிகம்.

வாகுதிருப் பெருந்துறையா ரெழுந்தருளப் பெறிலெல்லா வளங்கண்முற்றும், ஆகுமெமக் கல்லாத தாகாதென் றியம்பல்படை

யாட்சி யாகும், மோகமிகு மடியரொடுங் கூட்டவிரும் பியதானந் தமொ
ழியு மீசர், போகசக மெனக்களித்தா ரார்பெறுவா ரெனுமருமை
புகற லச்சோ. (உ௪).

திருப்பதிகங்களின் பெயருந் தொகையும்.

சிவபுரா ணங்கீர்த்தி திருவண்டப் பகுதி
திருப்போற்றி யுடனகவ றிருச்சதக நூறும்
நவநீத்தல் விண்ணப்ப மைம்பதாம் பாவை
நலந்திகழு மம்மானை நல்லபொற் சுண்ணம்
புவனமகிழ் கோத்தும்பி திருவார்தெள் ளேணம்
பொருவரிய திருச்சாழல் பூவல்லி யுந்தி
இவையிருப தாமிரே ழாகுதோ ணோக்கம்
எழிற்பொன்னூ சலுமேயொன் பானென்ப விவையே. (க).

திருவன்னை குயிற்பத்துத் திருத்தசாங்கம்
திருப்பள்ளி யொடுகோயின் மூத்ததிருப் பதிகம்
அருட்கோயிற் றிருப்பதிகஞ் செத்திலடைக் கலமே
ஆசையதி சயம்புணர்ச்சி வாழாப்பத் தருட்பத்
தொருபதென வுரைசெய்வர் கழுக்குன்ற மேழாம்
உயர்பிரார்த் தனைகள்பதி னொன்றுகுங் காண்பத்
திருமைபெருங் குழைத்தபத் துயிருண்ணி யச்சம்
எழிற்பாண்டி பிடித்தபத்தொ டேசறவு பத்தே. (உ).

திருப்புலம்பல் மூன்றுகுலா வற்புதமே சென்னி
திருவார்த்தை பத்தெண்ணப் பதிகமொரு வாறும்
பாற்குரிய யாத்திரைப்பத் தொருபதா மற்றைப்
படையெழுச்சி யிரண்டாகும் பதினொன்றும் வெண்பா
அருட்டவழும் பண்டாய நான்மறையே ழாகும்
வலியபடை யாட்சியெட் டானந்த மேழாம்
அருட்பெறுமச் சோவொன்ப தைம்பதொன்றும் பதிகம்
அகவலொடு செய்யுளறு நூற்றைம்ப தெட்டே. (௩).

நூலின் திருநாமங்கள்.

க. திருவாசகம்.

உ. மணிவாசகம்.

ந. மதுரவாசகம்.

ச. வாசகமாலை.

ரு. தமிழ்வேதம்.

சா. வாசகத்தேன்.

எ. அம்பலத்தானெழுதுமறை.

அ. எட்டாந்திருமுறை.

சுவாமிகள் திருநாமங்கள்.

க. திருவாதவூரர்.

உ. தென்னவன் பிரமராயர்.

ந. மாணிக்கவாசகர்.

ச. மணிவாசகப்பிரான்.

ரு. ஆளுடைய வடிகள்.

சா. கோவை வேந்தர்.

உ

சிவமயம்.

தமிழ்வேதம்,

ஆகிய

திருவாசகம்.

நூற்சிறப்பு.

நேரிசை வெண்பா.

திருச்சிற்றம்பலம்.

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளை நீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே—எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

திருச்சிற்றம்பலம்.

(குறிப்புரையும் விஷய சூசனமும்.)

தொல்லை இரும் - அநாதியாக (தொன்றுதொட்டு) வராநின்ற பெரிய; தளை - கட்டு, பிணிப்பு; அல்லல் - துன்பங்களுக்கெல்லாம் மூலமாகிய அறியாமை; எல்லை மருவா - முடிவெய்தாத; நெறி - பேரின்பப்பெருநெறி (வீட்டுநெறி); தேன்-பூந்தேன். இப்பூந்தேனை நுகருந்தோறும் நுகருந்தோறும் நாவுக்கும் மனதுக்குமே சிறுபோழ்து சுவையைத் தருகின்றது. ஆனால் **திருவாசகம்** என்னுந் **தமிழ்த் தேனோ** அவ்விரண்டுக்கும் சுவையைத் தருவதோடு, உயிர்க்கும் உயிர்க்குயிர்க்கும் எப்போதும் இனிப்பையே தந்துகொண்டிருக்கின்றது. அம்மட்டோ, நினைக்குந்தோறும் காணுந்தோறும் பேசுந்தோறும் எப்போதும் எலும்புகளனைத்தும் உள்ளே நெகிழும்படிச் செய்து ஆனந்த வெள்ளம் பொழிந்துகொண்டிருக்கின்றது. ஆகையினாலன்றோ "திருவாசகத்திலுருகாதார் ஒரு வாசகத்திலுமில்லை" என்னும் முதுமொழி பண்டைக் காலந்தொட்டு நம்நாட்டில் வழங்கப் பெற்று வருகின்றது.

அன்றியும், வேதாகமங்களின் சாரமாயும், பேரின்பப்பொருளைப் பயப்பதாயும், பாடல்களுட் சிறந்த ஞானப்பனுவலாயுமுள்ள இம்**மணிவாசகத்தேன்** சொல்லளவானே இன்பத்தைத் தருதலால் இதனைப் பலகாலன்றி ஒருகாலோதினும் நெஞ்சம் நெக்குவிட்டுருகிக் கசிவதோடு எத்தகைய கருவிகரணங்களும் அன்பினாலீர்க்கப்பட்டுப் புரைபுரைகனிந்து, அருள் வசப்பட்டு, இறுதியில் தேன் போன்று இனித்து, இன்பகனமாய் விடுதல் எவராலும் மறுக்கப்படாத பரமசித்தாந்தம். ஆகையினாலே மரணவஸ்தையினுங்கூட இதைத் தப்பாதோதும் நியமம் அறிஞர் பலராலுங் கொள்ளப்பட்டு வருகின்றது. இதுவே சிந்தைக்கினிது, செவிக்கினிது, வாய்க்கினிதாயுள்ளது. இது துதிவடிவாய்க் காணப்படினும் எவரும் வீட்டு நெறியிற் நிலைப்படுதற்கு விழுமிய வாயிலாய் விளங்குகின்றது. பிராமணர் முதல் பல திறத்தராயுள்ள பலரும் எளிதிலோர்ந்து சிவானந்தத்தேனைப் பருகுதற்குப் பெருஞ்சாதனமாயிருப்பது இம்**மதுரவாசகத்தேனே.** இதைத் திருவருள் கொண்டு பருக ஆகூழ் வேண்டும்.

உ

சிவமயம்.

சிவபுராணம்.

சிவனதநாதிமுறைமையான பழமை

எ - து. சிவனது அருவ நிலைமை கூறல்.

திருப்பெருந்துறையிலருளிச் செயப்பட்டது.

கலிவெண்பா.

திருச்சிற்றம்பலம்.

நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க
ரு. ஏக னநேக னிறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க

(க) நமச்சிவாய - ஸ்தூல பஞ்சாக்ஷரம்; நாதன் - பஞ்சாக்ஷரப் பொருளாயுள்ள தலைவன். (உ) கோகழி - திருப்பெருந்துறை, திருவாவடுதுறை எனவுங் கூறுவாருமுளர். (ச) ஆகமம் - காமிக முதல் வாதுளாந்தமாகச் சொல்லப்பட்ட இருபத்தெட்டு சிவாகமங்கள்; அண்ணிப்பான்-அணுகி அநுக்கிரகிப்பவன். (ரு) ஏகன் - ஏகபரிபூரணன்; அநேகன் - தடஸ்த லக்ஷணத்தில் பல திருமேனிகளுடையவன் (தடஸ்தம் - பிறிதொரு பொருளின் சார்பாயுள்ளது), அது உலகெலாமாகி நின்ற தன்மையையும் குறிக்கும்; இறைவன் - இறைமைத் தன்மையுடையவன், சேதனாசேதனப் பிரபஞ்சங்களுக்குப் பதியாயுள்ளவன். (சு) வேகம் - மனவிருத்திகளின்வேகம்; கெடுத்து - ஒடுக்கி.

பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங் குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈச னடிபோற்றி யெந்தை யடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத வின்ப மருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையு ணின்ற வதனால்
அவனரு ளாலே யவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழு தோய வுரைப்பனியான்
கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்

(அ) புறத்தார் - தன்னை வழிபடாத அயலார்; சேயோன் - தூரமானவன். (கக) ஈசன் - அனைத்தையுமாள்வோன். (கஉ) தேசன் - ஒளியுருவன். (கங) நேயத்தே - உள்ளன்பின் கண்ணே. (கச) மாயப்பிறவி - வஞ்சனை, பொய் முதலியவற்றிற்கு இருப்பிடமான பிறவி. (கக) சிவபுராணம்-சிவனது அநாதிமுறைமையான பழமை. (உ௰) ஓய - கெட. (உக) கண் நுதலான் - நெற்றியில் அக்கினிக் கண்ணையுடையவன். (உஉ) எழில்-அழகு. (உஎ) விருகம்-மிருகம். (௩௰) தாவரம் - அசையாப்பொருள்; சங்கமம் - அசையும்பொருள்.

மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்து ளோங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே
ஆக்க மளவிறுதி யில்லா யனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருடருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பில்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுட் டேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கு மெங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
அறம்பாவ மென்னு மருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்

---

(௩௪) விமலா - மலத்தினின்றும் நீங்கினவனே; விடைப்பாகா - இடபவாகனனே. (௩௬) இயமானன் - எஜமானன். (௪௧) ஆக்கம் - தோற்றம்; அளவு - நிலை. (௪௪) நாற்றம் - பூவின்மணம்; நேரியாய் - பொருந்தியிருப்பவனே. (௪௫) மாற்றம் - சொல். (௪௯) நிறங்கள் - ஸத்தியோ ஜாத முதலியவற்றிற்குரிய நிறங்கள். (௫௨) அறம்பாவம் - புண்ணிய பாவங்கள்.

நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
௬௰. நாயிற் கடையாய்க் கிடந்த வடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
௬௫. நேச வருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே யளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
௭௰. இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்த நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட வெந்தை பெருமானே
௭௫. கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தில்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே யத்தாமிக் காய்நின்ற
௮௰. தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப

---

(௫௪) குடிலை - குடிசை, உடல். (௫௫) மலங்க - குலைய. (௫௬) விலங்கும்-பிரபஞ்சவாதனையினின்று நீங்கும். தத்துவனே-உண்மையனே. (௬௪) பாரிக்கும்-வளர்க்கும்; ஆரியனே-அறிவுடையோனே, மேலோனே. (௭௫) கூர்த்த - கூர்மையான. (௭௭) புணர்வு - கலந்திருத்தல். (௮௧) மாற்றம் - மாறுபாடு. (௮௪) விடக்கு - ஊன்.

ஆற்றேனெம் மையா வரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளி னட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

---

(௮௫) ஐயா-ஐயனே; அரனே-அஞ்ஞானத்தை அரிப்பவனே, முடிவில் மாயாகாரியமனைத்தையும் சங்கரிப்பவனே, அடியார் துயர் களைபவனே. (௮௬) மெய்யானார் - சிவமாந்தன்மை யெய்தினவர், அறிவேயுருவானவர், ஆன்ம அறிவுகெட்டு முதல்வனறிவு மாத்திரமாய் நின்றவர். (௮௮) குரம்பை-உடல். (௮௯) நள்இருள்-நடுவிருள், ஸம்ஹாரகாலம், தமஸ் என்னும் மூலப்பிரகிருதியாகிய விருள்; பயின்று - மிகுந்து. (௯௨) சொல்லி - துதித்து; கீழ் - மீது; சொல்லுவார் - துதிப்பவர். (௯௩) செல்வர் - செல்வார்கள்; உள்ளார் - இன்புற்றிருப்பார்கள்.

கீர்த்தித் திருவகவல்.

சிவனது திருவருட்புகழ்ச்சி முறைமை.

தில்லையிலருளிச் செயப்பட்டது.

நிலைமண்டிலவாசிரியப்பா.

திருச்சிற்றம்பலம்.

தில்லை மூதூ ராடிய திருவடி
பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி
எண்ணில் பல்குண மெழில்பெற விளங்கி
மண்ணும் விண்ணும் வானோ ருலகும்
துன்னிய கல்வி தோற்றியு மழித்தும்
என்னுடை யிருளை யேறத் துரந்தும்
அடியா ருள்ளத் தன்புமீ தூரக்
குடியாக் கொண்ட கொள்கையுஞ் சிறப்பும்
மன்னு மாமலை மகேந்திர மதனில்
சொன்ன வாகமந் தோற்றுவித் தருளியும்
கல்லா டத்துக் கலந்தினி தருளி
நல்லா ளோடு நயப்புற வெய்தியும்
பஞ்சப் பள்ளியிற் பான்மொழி தன்னொடும்
எஞ்சா தீண்டு மின்னருள் விளைத்தும்
கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்
விராவு கொங்கை நற்றடம் படிந்தும்

(உ) பயின்றனன் - இயக்கினவன். (சு) ஏற-முழுதும். (கச) ஈண்டும் - மிகுதிபட. (கரு) கிராதன் - வேடன்; கிஞ்சுக வாய் - முருக்கம் பூப்போன்ற வாய். (கசு) விராவு - நெருங்கின.

கேவேட ராகிக் கெளிறது படுத்து
மாவேட் டாகிய வாகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்தி ரத்திருந்
துற்றவைம் முகங்க ளாற்பணித் தருளியும்
நந்தம் பாடியி னான்மறை யோனாய்
அந்தமி லாரிய னாயமர்ந் தருளியும்
வேறுவே றுருவும் வேறுவே றியற்கையும்
நூறுநூ றாயிர மியல்பின தாகி
ஏறுடை யீசனிப் புவனியை யுய்யக்
கூறுடை மங்கையுந் தானும்வந் தருளிக்
குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசைச்
சதுர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்
வேலம் புத்தூர் விட்டே றருளிக்
கோலம் பொலிவு காட்டிய கொள்கையும்
தர்ப்பண மதனிற் சாந்தம் புத்தூர்
விற்பொரு வேடற் கீந்த விளைவும்
மொக்கணி யருளிய முழுத்தழன் மேனி
சொக்க தாகக் காட்டிய தொன்மையும்
அரியொடு பிரமற் களவறி யொண்ணான்
நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்
ஆண்டுகொண் டருள வழகுறு திருவடி
பாண்டி யன்றனக் குப்பரி மாவிற்
றீண்டு கனக மிசையப் பெறாஅ
தாண்டா னெங்கோ னருள்வழி யிருப்பத்
தூண்டுசோதி தோற்றிய தொன்மையும்

---

(௧௭) கேவேடர் - வலைஞர்; கெளிறு - கெளிற்று மீன். (௧௮) மா - பெரிய; வேட்டு - விருப்பம். (௨௨) ஆரியன் - ஆசிரியன். (௨௭) குடநாடு - மேல்நாடு. (௨௮) சதுர் - திறமை; சாத்தாய் - வணிகர் கூட்டத் தலைவனாய். (௨௯) விட்டேறு - வேற்படை. (௩௧) தர்ப்பணம் - கண்ணாடி. (௩௨) ஈந்த - கொடுத்த; விளைவு - ஆக்கம். (௩௩) மொக்கணி - கொள்முதலியன இடும் பை. (௩௪) சொக்கம் - அழகு. (௩௮) பரிமா - குதிரை. (௩௯) ஈண்டு - திரண்டு.

அந்தண னாகி யாண்டு கொண்டருளி
இந்திர ஞாலங் காட்டிய வியல்பும்
மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக னாகிய கொள்கையும்
ஆங்கது தன்னி லடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்
உத்தர கோச மங்கையு ளிருந்து
வித்தக வேடங் காட்டிய வியல்பும்
பூவண மதனிற் பொலிந்திருந் தருளித்
தூவண மேனி காட்டிய தொன்மையும்
வாத வூரினில் வந்தினி தருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்
திருவார் பெருந்துறைச் செல்வ னாகிக்
கருவார் சோதியிற் கரந்த கள்ளமும்
பூவல மதனிற் பொலிந்தினி தருளிப்
பாவ நாச மாக்கிய பரிசும்
தண்ணீர்ப் பந்தர் சயம்பெற வைத்து
நன்னீர்ச் சேவக னாகிய நன்மையும்
விருந்தின னாகி வெண்கா டதனில்
குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்
பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்
கட்டமா சித்தி யருளிய வதுவும்
வேடுவ னாகி வேண்டுருக் கொண்டு
காடது தன்னிற் கரந்த கள்ளமும்
மெய்க்காட் டிட்டு வேண்டுருக் கொண்டு
தக்கா னொருவ னாகிய தன்மையும்
ஓரி யூரி லுகந்தினி தருளிப்
பாரிரும் பாலக னாகிய பரிசும்
பாண்டூர் தன்னி லீண்ட விருந்தும்
தேவூர்த் தென்பாற் றிகழ்தரு தீவில்
கோவார் கோலங் கொண்ட கொள்கையும்

(௫௫) கரு - மூலம்; கள்ளம் - வஞ்சகம். (௭௰) ஈண்ட - மிக.

தேனமர் சோலைத் திருவா ரூரின்
ஞானந் தன்னை நல்கிய நன்மையும்
இடைமரு ததனி லீண்ட விருந்து
படிமப் பாதம் வைத்தவப் பரிசும்
ஏகம் பத்தி னியல்பா யிருந்து
பாகம் பெண்ணோ டாயின பரிசும்
திருவாஞ் சியத்திற் சீர்பெற விருந்து
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்
சேவக னாகித் திண்சிலை யேந்திப்
பாவகம் பலபல காட்டிய பரிசும்
கடம்பூர் தன்னி லிடம்பெற விருந்தும்
ஈங்கோய் மலையி லெழிலது காட்டியும்
ஐயா றதனிற் சைவ னாகியும்
துருத்தி தன்னி லருத்தியோ டிருந்தும்
திருப்பனை யூரில் விருப்ப னாகியும்
கழுமல மதனிற் காட்சி கொடுத்தும்
கழுக்குன் றதனில் வழுக்கா திருந்தும்
புறம்பய மதனி லறம்பல வருளியும்
குற்றா லத்துக் குறியா யிருந்தும்
அந்தமில் பெருமை யழலுருக் கரந்து
சுந்தரவேடத் தொருமுத லுருவுகொண்
டிந்திர ஞாலம் போலவந் தருளி
எவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்துத்
தானே யாகிய தயாபர னெம்மிறை
சந்திர தீபத்துச் சாத்திர னாகி
அந்தரத் திழிந்துவந் தழகமர் பாலையுள்
சுந்தரத் தன்மையொடு துதைந்திருந் தருளியும்
மந்திர மாமலை மகேந்திர வெற்பன்

---

(௭௨) கோ - அரசத் தன்மை. (௭௬) படிமம் - தெய்வத் தன்மை. (௮௨) பாவகம் - தோற்றம். (௯௫) வயின் - இடம்; படுத்து - அடக்கி. (௯௯) தன்மை - கோலம். (௱) மந்திரம் - இரகசியத்தானம்.

அந்தமில் பெருமை யருளுடை யண்ணல்
எந்தமை யாண்ட பரிசது பகரின்
ஆற்ற லதுவுடை யழகமர் திருவுரு
நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்
ஊனந் தன்னை யொருங்குட னறுக்கும்
ஆனந் தம்மே யாறா வருளியும்
மாதிற் கூறுடை மாப்பெருங் கருணையன்
நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்
அழுக்கடை யாம லாண்டுகொண் டருள்பவன்
கழுக்கடை தன்னைக் கைக்கொண் டருளியும்
மூல மாகிய மும்மல மறுக்கும்
தூய மேனிச் சுடர்விடு சோதி
காதல னாகிக் கழுநீர் மாலை
ஏலுடைத் தாக வெழில்பெற வணிந்தும்
அரியொடு பிரமற் களவறி யாதவன்
பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமும்
மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்
பத்திசெ யடியரைப் பரம்பரத் துய்ப்பவன்
உத்தர கோச மங்கையூ ராகவும்
ஆதி மூர்த்திகட் கருள்புரிந் தருளிய
தேவ தேவன் றிருப்பெய ராகவும்
இருள் கடிந் தருளிய வின்ப வூர்தி
அருளிய பெருமை யருண்மலை யாகவும்
எப்பெருந் தன்மையு மெவ்வெவர் திறமும்
அப்பரி சதனா லாண்டுகொண் டருளி
நாயி னேனை நலமலி தில்லையுள்
கோல மார்தரு பொதுவினில் வருகென

---

(௯௪) நீற்றுக் கோடி - திருவெண்ணீற்று ரேகைகள்; நிமிர்ந்து - இடையிட்டு. (௯௫) ஊனம் - உடற் பிறவித்துன்பம். (௱) கழுக்கடை - சூலம். (௧௦௪) ஏல் - பொருத்தம். (௧௦௯) பரம்பரம் - மிகவும் மேலான முத்தி, அதாவது பரமுத்தி.

ஏல வென்னை யீங்கொழித் தருளி
கஙய. அன் றுடன் சென்ற வருள்பெறு மடியவர்
ஒன்ற வொன்ற வுடன்கலந் தருளியும்
எய்தவந் திலாதா ரெரியிற் பாயவும்
மாலது வாகி மயக்க மெய்தியும்
பூதல மதனிற் புரண்டுவீழ்ந் தலறியும்
கஙரு. கால்விசைத் தோடிக் கடல்புக மண்டி
நாத நாத வென்றழு தரற்றிப்
பாத மெய்தினர் பாத மெய்தவும்
பதஞ்சலிக் கருளிய பரமநா டகவென்
றிதஞ்சலிப் பெய்தநின் றேங்கின ரேங்கவும்
கசய. எழில்பெறு மிமயத் தியல்புடை யம்பொற்
பொலிதரு புலியூர்ப் பொதுவினி னடநவில்
கனிதரு செவ்வா யுமையொடு காளிக்
கருளிய திருமுகத் தழகுறு சிறுநகை
இறைவ னீண்டிய வடியவ ரொடும்
கசரு. பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்
ஒலிதரு கைலை யுயர்கிழ வோனே.

திருச்சிற்றம்பலம்.

(கஉகூ) ஏல - பொருந்த. (கஙக) ஒன்ற ஒன்ற - பொருந்தப் பொருந்த. (கஙங) மாலது ஆகி - ஆசைகொண்டு. (கஙச) பூதலம் - பூமி. (கஙரு) விசைத்து - வேகங்கொண்டு; மண்டி - நெருங்கி. (கஙகூ) இதம் - இருதயம். (கசய) இமயத்து - இமயமலையின். (கசஉ) கனிதரு - கொவ்வைக் கனிபோன்ற. (கசச) ஈண்டிய - நெருங்கிய. (கசசு) கிழவோன் - உரிமையுடையோன்.

திருவண்டப் பகுதி

சிவனது தூலசூக்குமத்தை வியந்தது

தில்லையிலருளிச் செயப்பட்டது.

இணைக்குறளாசிரியப்பா.

திருச்சிற்றம்பலம்.

அண்டப் பகுதியி னுண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங்காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் றுன்னணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன் றெரியின்
வேதியன் றொகையொடு மாலவன் மிகுதியும்
தோற்றமுஞ் சிறப்பு மீற்றொடு புணரிய
மாப்பே ரூழியு நீக்கமும் நிலையும்
சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்
தெறியது வளியில்
கொட்கப் பெயர்க்குங் குழகன் முழுவதும்
படைப்போற் படைக்கும் பழையோன் படைத்தவை
காப்போற் காக்குங் கடவுள் காப்பவை
கரப்போன் கரப்பவை கருதாக்

(க) பகுதி - பிரிவு; உண்டை - கோளம்; பிறக்கம் - பெருக்கம். (ரு) இல் - வீடு; துன் - நெருக்கம். (எ) மிகுதி - ஏற்றம். (அ) ஈற்றொடு புணரிய - இறுதியடைய. (கக) எறியது - வீசுவதில். (கஉ) கொட்க - சுழல. (கரு) கரப்போன் - ஸம்ஹரிப்பவன்.

கருத்துடைக் கடவு டிருத்தகும்
அறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும்
வீடுபே றாய்நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையுங் கிழவோ னாடொறும்
அருக்கனிற் சோதி யமைத்தோன் றிருத்தகு
மதியிற் றண்மை வைத்தோன் றிண்டிறல்
தீயின் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலி னூக்கங் கண்டோ னிழறிகழ்
நீரி லின்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணிற் றிண்மை வைத்தோ னென்றென்
றெனைப்பல கோடி யெனைப்பல பிறவும்
அனைத்தனைத் தவ்வயி னடைத்தோ னஃதான்று
முன்னோன் காண்க முழுதோன் காண்க
தன்னே ரில்லோன் றானே காண்க
ஏனத் தொல்லெயி றணிந்தோன் காண்க
கானப் புலியுரி யரையோன் காண்க
நீற்றோன் காண்க நினைதொறு நினைதொறும்
ஆற்றேன் காண்க வந்தோ கெடுவேன்
இன்னிசை வீணையி லிசைந்தோன் காண்க
அன்னதொன் றவ்வயி னறிந்தோன் காண்க
பரமன் காண்க பழையோன் காண்க
பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க
அற்புதன் காண்க வநேகன் காண்க
சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க
சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையிற் படுவோன் காண்க
ஒருவ னென்னு மொருவன் காண்க
விரிபொழின் முழுதாய் விரிந்தோன் காண்க

(ககூ) கீடம் - புழு; கிழவோன் - உரியன். (உச) ஊக்கம் - வேகம்; நிழல்-ஒளி. (உஎ) பிறவும் - மற்றப்பொருள்களும். (உஅ) அஃதான்று - அதுவுமல்லாமல். (ஙச) ஆற்றேன் - சகியேன்.

அணுத்தருந் தன்மை யிலையோன் சாண்க
இணைப்பரும் பெருமையி லீசன் காண்க
அரியதி லரிய வரியோன் காண்க
மருவியெப் பொருளும் வளர்ப்போன் காண்க
நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க
மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க
அந்தமு மாதியு மகன்றோன் காண்க
பந்தமும் வீடும் படைப்போன் காண்க
நிற்பதுஞ் செல்வது மானோன் காண்க
கற்பமு மிறுதியுங் கண்டோன் காண்க
யாவரும் பெறவுறு மீசன் காண்க
தேவரு மறியாச் சிவனே காண்க
பெண்ணா ணலியெனும் பெற்றியன் காண்க
கண்ணா லியானுங் கண்டேன் காண்க
அருணனி சுரக்கு மமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானுந் தேறினன் காண்க
அவனெனை யாட்கொண் டருளினன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளுந் தானு முடனே காண்க
பரமா னந்தப் பழங்கட லதுவே
கருமா முகிலிற் றோன்றித்
திருவார் பெருந்துறை வரையி லேறித்
திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய
ஐம்புலப் பந்தனை வாளர விரிய
வெந்துயர் கோடை மாத்தலை கரப்ப
நீடெழிற் றோன்றி வாளொளி மிளிர
எந்தம் பிறவியிற் கோப மிகுத்து

---

(௪௧) சேட்சியன் - தூரத்தன். (௪௪) பொழில் - உலகம். (௪௫) ஐயோன் - அழகன். (௫௭) பெற்றியன் - தன்மையன். (௫௯) நனி - மிகவும். (௭௧) கோடை - வெய்யில்; மாத்தலை - பெரியதலை.

முரசெறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கிப்
௭௫. பூப்புரை யஞ்சலி காந்தள் காட்ட
எஞ்சா வின்னரு ளுண்டுளி கொள்ளச்
செஞ்சுடர் வெள்ளந் திசைதிசை தெவிட்ட, வரையுறக்
கேதக் குட்டங் கையற வோங்கி
இருமுச் சமயத் தொருபேய்த் தேரினை
௮௰. நீர்நசை தரவரு நெடுங்கண் மான்கணம்
தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடு
அவப்பெருந் தாப நீங்கா தசைந்தன
ஆயிடை வானப் பேரியாற் றகவயின்
பாய்ந்தெழுந் தின்பப் பெருஞ்சுழி கொழித்துச்
௮௫. சுழித்தெம் பந்தமாக் கரைபொரு தலைத்திடித்
தூழூ ழோங்கிய நங்கள்
இருவினை மாமரம் வேர்ப றித்தெழுந்
துருவ வருணீ ரோட்டா வருவரைச்
சந்தின் வான் சிறை கட்டி மட்டவிழ்
௯௰. வெறிமலர்க் குளவாய் கோலி நிறையகில்
மாப்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்
மீக்கொள மேன்மேன் மகிழ்தலி னோக்கி
அருச்சனை வயலு ளன்புவித் திட்டுத்
தொண்ட வுழவ ராரத் தந்த
௯௫. அண்டத் தரும்பெறன் மேகன் வாழ்க
கரும்பணக் கச்சைக் கடவுள் வாழ்க
அருந்தவர்க் கருளு மாதி வாழ்க
அச்சந் தவிர்த்த சேவகன் வாழ்க
நிச்சலு மீர்த்தாட் கொள்வோன் வாழ்க

---

(௭௩) கோபம்-இந்திரகோபப்பூச்சி. (௭௫) பூ-தாமரை மலர்; அஞ்சல்-கைகுவித்தல். (௭௮) கேதக்குட்டம் - துன்பமாகிய குளம்; கையற - அழகிய. (௭௯) பேய்த்தேர்-கானல் நீர். (௮௰) கணம்-கூட்டம். (௮௨) அசைந்தன - துவண்டன. (௮௩) ஆயிடை - அவ்விடத்து. (௮௬) ஊழ் ஊழ் - முறை முறையாய். (௮௯) வான்சிறை - பெரியகரை. (௯௰) வெறி-மணம். (௯௪) ஆர-உண்ண. (௯௫) மேகன்-மேகம் போல்பவன். (௯௬) பணம்-படமுடைய பாம்பு. (௯௮) அச்சம்-பிறவிப்பயம்.

சூழிருந் துன்பந் துடைப்போன் வாழ்க
எய்தினர்க் காரமு தளிப்போன் வாழ்க
கூரிருட் கூத்தொடு குனிப்போன் வாழ்க
பேரமைத் தோளி காதலன் வாழ்க
ஏதிலர்க் கேதிலெம் மிறைவன் வாழ்க
காதலர்க் கெய்ப்பினில் வைப்பு வாழ்க
நச்சர வாட்டிய நம்பன் போற்றி
பிச்செமை யேற்றிய பெரியோன் போற்றி
நீற்றொடு தோற்ற வல்லோன் போற்றி, நாற்றிசை
நடப்பன நடாஅய்க் கிடப்பன கிடாஅய்
நிற்பன நிறீஇச்
சொற்பதங் கடந்த தொல்லோன்
உள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படாஅன்
கண்முதற் புலனாற் காட்சியு மில்லோன்
விண்முதற் பூதம் வெளிப்பட வகுத்தோன்
பூவி னாற்றம் போன்றுயர்ந் தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை
இன்றெனக் கெளிவந் தருளி
அழிதரு மாக்கை யொழியச் செய்த, வொண்பொருள்
இன்றெனக் கெளிவந் திருந்தனன் போற்றி
அளிதரு மாக்கை செய்தோன் போற்றி
ஊற்றிருந் துள்ளங் களிப்போன் போற்றி
ஆற்றா வின்ப மலர்ந்தலை செய்யப்
போற்றா வாக்கையைப் பொறுத்தல் புகலேன்
மரகதக் குவாஅன் மாமணிப் பிறக்கம்
இன்னொளி கொண்ட பொன்னொளி திகழத்
திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும்
முறையுளி யொற்றி முயன்றவர்க் கொளித்தும்

(௱௨) குனிப்போன் - குனிந்து நடிப்போன். (௱௩) அமை — மூங்கில். (௱௫) வைப்பு - சேர்த்து வைத்தபொருள். (௧௨௩) பொறுத்தல் - தாங்குதல். (௧௨௪) குவா அல் - கூட்டம். (௧௨௭), முறையுளி – முறைமையாக.

ஒற்றுமை கொண்டு நோக்கு முள்ளத்
துற்றவர் வருந்த வுறைப்பவர்க் கொளித்தும்
மறைத்திற நோக்கி வருந்தினர்க் கொளித்தும்
இத்தந் திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்
கத்தந் திரத்தி னவ்வயி னொளித்தும்
முனிவற நோக்கி நனிவரக் கௌவி
ஆணெனத் தோன்றி யலியெனப் பெயர்ந்து
வாணுதற் பெண்ணென வொளித்துஞ் சேண்வயின்
ஐம்புலன் செலவிடுத் தருவரை தொறும்போய்த்
துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை
அருந்தவர் காட்சியுட் டிருந்த வொளித்தும்
ஒன்றுண் டில்லை யென்றறி வொளித்தும்
பண்டே பயில்தொறு மின்றே பயில்தொறும்
ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்
ஆர்மி னார்மி னாண்மலர்ப் பிணையலின்
தாடளை யிடுமின்
சுற்றுமின் சூழ்மின் றொடர்மின் விடேன்மின்
பற்றுமி னென்றவர் பற்றுமுற் றொளித்தும்
தன்னே ரில்லோன் றானே யான தன்மை
என்னே ரனையோர் கேட்கவந் தியம்பி
அறைகூவி யாட்கொண் டருளி
மறையோர் கோலங் காட்டி யருளலும்
உலையா வன்பென் புருக வோலமிட்
டலைகடற் றிரையி னார்த்தார்த் தோங்கித்
தலைதடு மாறா வீழ்ந்துபுரண் டலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவுங் கேட்டவர் வியப்பவும்
கடக்களி றேற்றாத் தடப்பெரு மதத்தின்
ஆற்றே னாக வவயவஞ் சுவைதரு

---

(௧௫௭) துற்றவை துறந்த - நுகர்ந்தவற்றை விட்ட. (௧௭௰) உலையா அன்பு - நீங்காத அன்பு.

கோற்றேன் கொண்டு செய்தனன்
ஏற்றார் மூதூ ரெழில்நகை யெரியின்
வீழ்வித் தாங்கன்
றருட்பெருந் தீயி னடியோ மடிக்குடில்
ஒருத்தரும் வழாமை யொடுக்கினன்
தடக்கையி னெல்லிக் கனியெனக் காயினன்
சொல்லுவ தறியேன் வாழி முறையோ
தரியே னாயேன் றானெனைச் செய்தது
தெரியே னாவா செத்தே னடியேற்
கருளிய தறியேன் பருகியு மாறேன்
விழுங்கியு மொல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடற் றிரைபுரை வித்
துவாக்கட னள்ளுநீ ருள்ளகந் ததும்ப
வாக்கிறந் தமுத மயிர்க்கா றோறும்
தேக்கிடச் செய்தனன் கொடியே னூன்றழை
குரம்பை தோறு நாயுட லகத்தே
குரம்பைகொண் டின்றேன் பாய்த்தி நிரம்பிய
அற்புத மான வமுத தாரைகள்
எற்புத் துளைதொறு மேற்றின னுருகுவ
துள்ளங் கொண்டோ ருருச்செய் தாங்கெனக்
கள்ளூ றாக்கை யமைத்தன னொள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையு மிருப்ப தாக்கின னென்னில்
கருணை வான்றேன் கலக்க
அருளொடு பராவமு தாக்கினன்
பிரமன்மா லறியாப் பெற்றி யோனே.

திருச்சிற்றம்பலம்.

(௧௬௰) அடிக்குடில்-அடிமைச்சிறுவீடு. (௧௬௬) ஆறேன் - நிறைவு பெறேன். (௧௬௭) ஒல்லகில்லேன் - ஆற்றேன். (௧௬௯) உவா - பௌர்ணமி; நள்ளும் - நடுவிலுள்ள. (௧௭௮) கன்னல் - கரும்பு; தேர் - உண்; கடைமுறை - இறுதி. (௧௮௧) பரா - மேலான.

போற்றித் திருவகவல்.

சகத்தினுற்பத்தி

௭-து. பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கு முறைமை.

தில்லையிலருளிச் செய்யப்பட்டது.

நிலைமண்டில வாசிரியப்பா.

திருச்சிற்றம்பலம்.

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
ஈரடியாலே மூவல களந்து
நாற்றிசை முனிவரு மைம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்
றடிமுடி யறியு மாதர வதனில்
கடுமுர ணேன மாகி முன்கலந்
தேழ்தல முருவ விடந்து பின்னெய்த்
தூழி முதல்வ சயசய வென்று
வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்
வழுத்துதற் கெளிதாய் வார்கட லுலகில்
யானை முதலா வெறும்பீ றாய
ஊனமி லியோனியி னுள்வினை பிழைத்தும்
மானுடப் பிறப்பினுண் மாதா வுதரத்
தீனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்

---

(௫) ஆதரவு - விருப்பம். (௬) கடு - மிக்க; முரண் - வலி. (௭) தலம் - உலகம். (௧௨) வினை - நல்வினை; பிழைத்து - தப்பி. (௧௪) ஈனம் - குறைவு; செரு - போர்.

௧௫. ஒருமதித் தான்றியி னிருமையிற் பிழைத்தும்
இருமதி விளைவி னொருமையிற் பிழைத்தும்
மும்மதி தன்னு ளம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்
அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்
௨௰. ஆறு திங்களி னூறலர் பிழைத்தும்
ஏழு திங்களிற் றாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்க தசமதி தாயொடு தான்படுந்
௨௫. துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்
ஆண்டுக டோறு மடைந்தவக் காலை
ஈண்டியு மிருத்தியு மெனைப்பல பிழைத்தும்
காலை மலமொடு கடும்பகற் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்
௩௰. கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்
ஒருங்கிய சாய னெருங்கியுண் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்
தெய்த்திடை வருந்த வெழுந்து புடைபரந்
தீர்க்கிடை போகா விளமுலை மாதர்தங்
௩௫. கூர்த்தநயனக் கொள்ளையிற் பிழைத்தும்
பித்த வுலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறெனு மவாவிடைப் பிழைத்தும்
கல்வி யென்னும் பல்கடற் பிழைத்தும்
செல்வ மென்னு மல்லலிற் பிழைத்தும்
௪௰. நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்
பல்வரம் பாய பலதுறை பிழைத்தும்

---

(௧௫) தான்றியின்-தான்றிக்காய்போன்ற உருவில். (௧௬) விளைவு-நிகழ்ச்சி. (௧௯) முஞ்சுதல்-சாதல். (௨௰) ஊறு-கொலை; அலர்-பழிச்சொல். (௨௨) கட்டம்-கஷ்டம். (௨௭) ஈண்டி-நெருங்கி. (௩௰) கார்-கார்காலம். (௩௨) கதிர்த்து-ஒளிபெற்று; பணைத்து-பருத்து. (௩௫) கொள்ளை-சூறை. (௩௬) துறை-இடம், உலகம். (௪௧) வரம்பு-எல்லை.

தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைக டொடங்கின
ஆத்த மானா ரயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்
சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்
விரத மேபர மாகவே தியரும்
சரத மாகவே சாத்திரங் காட்டினர்
சமய வாதிக டத்த மதங்களில்
அமைவ தாக வரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாத மென்னும்
சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்
துலோகா யதனெனு மொண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிட மெய்தி
அதிற்பெரு மாயை யெனைப்பல சூழவும்
தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுள முருகி யழுதுடல் கம்பித்
தாடியு மலறியும் பாடியும் பரவியும்
கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்
படியே யாகிநல் லிடையறா வன்பின்
பசுமரத் தாணி யறைந்தாற் போலக்
கசிவது பெருகிக் கடலென மறுகி
அகங்குழைந் தனுகுல மாய்மெய் விதிர்த்துச்
சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப

---

(௬௩) முனிவு - வெறுப்பு. (௬௬) ஆத்தமானர் - ஆப்தரானவர். (௬௮) பதறினர் பெருகவும் - பதறிப்பெருகவும். (௭௧) சரதம் - உண்மை. (௭௩) மலை - போர்செய். (௭௪) மிண்டிய - திண்ணிய. (௭௭) கலாபேதம் - சாஸ்திரபேதம். (௮௩) கொடிறு - குறடு. (௮௬) மறுகி - மயங்கி.

நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
௭௰. பூணது வாகக் கோணுத லின்றிச்
சதுரிழந் தறிமால் கொண்டு சாரும்
கதியது பரமா வதிசய மாகக்
கற்ற மனமெனக் கதறியும் பதறியும்
மற்றோர் தெய்வங் கனவிலு நினையா
௭௫. தருபரத் தொருவ னவனியில் வந்து
குருபர னாகி யருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறிவினை யறியா நிழலது போல
முன்பின் னாகி முனியா தத்திசை
அ௰. என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி
அன்பெனு மாறு கரையது புரள
நன்புல னொன்றி நாதவென் றரற்றி
உரைதடு மாறி யுரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதய மலரக்
அ௫. கண்களி கூர நுண்டுளி யரும்பச்
சாயா வன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதிய னாகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி
௯௰. ஆடக மதுரை யரசே போற்றி
கூட லிலங்கு குருமணி போற்றி
தென்றில்லை மன்றினு ளாடி போற்றி
இன்றெனக் காரமு தானாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
௯௫. சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி
மின்னா ருருவ விகிர்தா போற்றி
கன்னா ருரித்த கனியே போற்றி

---

(௭௧) சதுர் - திறம்; மால் - மயக்கம். (௭௫) பரதந்தாரு வன் - மேலோனொருவன். (அ௫) களிகூர - களிப்புமிக. (௯௰) ஆடகம் - பொன். (௯௬) விகிர்தா - வேறுபாடுடையவனே.

காவாய் கனகக் குன்றே போற்றி
ஆவா வென்றனக் கருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி
இடரைக் களையு மெந்தாய் போற்றி
ஈச போற்றி யிறைவ போற்றி
தேசப் பளிங்கின் றிரளே போற்றி
அரைசே போற்றி யமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி
வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி யறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
உடையாய் போற்றி யுணர்வே போற்றி
கடையே னடிமை கண்டாய் போற்றி
ஐயா போற்றி யணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி
வானோர்க் கரிய மருந்தே போற்றி
ஏனோர்க் கெளிய விறைவா போற்றி
மூவேழ் சுற்ற முரணுறு நரகிடை
ஆழா மேயரு ளரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி
வாழ்வே போற்றியென் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
அத்தா போற்றி யரனே போற்றி
உரையுணர் விறந்த வொருவ போற்றி
கைதர வல்ல கடவுள் போற்றி
விரிகட லுலகின் விளைவே போற்றி

(௱௬) வேதி - வேதியனே. (௧௧௮) மூவேழ் - இருபத்தொரு நிலைமுறை. (௧௨௬) விளைவே - பயனே.

அருமையி லெளிய வழகே போற்றி
கருமுகி லாகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருண் மலையே போற்றி
என்னையு மொருவ னாக்கி யிருங்கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி
தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
அழிவிலா வானந்த வாரி போற்றி
அழிவது மாவதுங் கடந்தாய் போற்றி
முழுவது மிறந்த முதல்வா போற்றி
மானேர் நோக்கி மணாளா போற்றி
வானகத் தமரர் தாயே போற்றி
பாரிடை யைந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவ ருள்ளத் தமுதே போற்றி
கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி
நனவிலு நாயேற் கருளினை போற்றி
இடைமரு துறையு மெந்தாய் போற்றி
சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
ஆரு ரமர்ந்த வரசே போற்றி
சீரார் திருவை யாறா போற்றி
அண்ணா மலையெம் மண்ணா போற்றி
கண்ணா ரமுதக் கடலே போற்றி
ஏகம் பத்துறை யெந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி
குற்றா லத்தெங் கூத்தா போற்றி

---

(௧௨௮) கண்ணே - ஆதாரமே. (௧௩௨) கை - உடனே.

கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலையெம் மெந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
அடைந்தவர்க் கருளு மப்பா போற்றி
இத்தி தன்னின் கீழிரு மூவர்க்
கத்திக் கருளிய வரசே போற்றி
தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கு மிறைவா போற்றி
ஏனக் குருளைக் கருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
அருளிட வேண்டு மம்மான் போற்றி
இருள்கெட வருளு மிறைவா போற்றி
தளர்ந்தே னடியேன் றமியேன் போற்றி
களங்கொளக் கருத வருளாய் போற்றி
அஞ்சே லென்றிங் கருளாய் போற்றி
நஞ்சே யமுதா நயந்தாய் போற்றி
அத்தா போற்றி யையா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி
பத்தா போற்றி பவனே போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி யமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி
உறவே போற்றி யுயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சே ரடியாள் பங்கா போற்றி

(கசுய) பாங்கு - அழகு. (கசுக) விடங்கா - ஆண்மையுடைய வனே; (கசுஎ) குருளை - குட்டி. (கஎஉ) களம் கொள - கள்ளஞ் செய்ய; அருளாய் - அருளாதவனே. (கஅங) சிறவே - சிறப்பே. (கஅச) மஞ்சா - அருண்மழையே.

அலந்தே னாயே னடியேன் போற்றி
இலங்கு சுடரெம் மீசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலைநா டுடைய மன்னே போற்றி
கலையா ரரிகே சரியாய் போற்றி
திருக்கழுக் குன்றிற் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத் தரனே போற்றி
அருவமு முருவமு மானாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமு மிறந்த சுடரே போற்றி
தெரிவரி தாகிய தெளிவே போற்றி
தோளா முத்தச் சுடரே போற்றி
ஆளா னவர்கட் கன்பா போற்றி
ஆரா வமுதே யருளே போற்றி
பேரா யிரமுடைப் பெம்மான் போற்றி
தாளி யறுகின் றாராய் போற்றி
நீளொளி யாகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக் கரிய சிவமே போற்றி
மந்திர மாமலை மேயாய் போற்றி
எந்தமை யுய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி
அலைகடன் மீமிசை நடந்தாய் போற்றி
கருங்குரு விக்கன் றருளினை போற்றி
இரும்புலன் புலர விசைந்தனை போற்றி
படியுறப் பயின்ற பாவக போற்றி

---

(௧௯௩) அரி - பகைவர்; கேசரி - சிங்கம். (௧௯௮) தோளா - தொளைக்காத. (௨௦௨) தாளி அறுகின்தாராய் - தாளியென்னும் ஓர் கொடியின் இலையும் அறுகும் சேர்த்துக்கட்டிய மாலை அணிந்தவனே. (௨௦௭) சந்தனச்சாந்து - சந்தனமும் திருநீறும். (௨௦௮) புல்வாய் - மான். (௨௧௨) பாவக - தோற்றங்களையுடையவனே.

போற்றித் திருவகவல்

அடியொடு நடுவீ றானாய் போற்றி
நரகொடு சுவர்க்க நானிலம் புகாமற்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி
ஒழிவற நிறைந்த வொருவ போற்றி
செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
தொழுவார் மைய றுணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்தசொன் மாலை கொண்டருள் போற்றி
புரம்பல வெரித்த புராண போற்றி
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி.

திருச்சிற்றம்பலம்.

(உகச) நானிலம் - பூமி. (உகசு) ஒருவ - ஏகனே. (உஉ0) பிழைப்புவாய்ப்பு-பிழைபடுதல் பிழைபடாமை. (உஉக) குழைத்த-மனங்குழைந்து. (உஉஉ) புரம்பல - திரிபுரங்கள்; புராண - பழையோனே. (உஉச) புயங்கம் - பாம்பு. (உஉரு) புராண காரண - புராதனமாகிய மூலகாரணனே. (உஉசு) சயசய - வெற்றியுண்டாக; வெற்றியுண்டாக.

திருச்சதகம்.*

பத்தி வைராக்கிய விசித்திரம்.

- து. ஞானசிரியர் பத்துவகையாக இரட்சித்த முறைமையை யுரைத்தல்.

திருப்பெருந்துறையிலருளிச் செயப்பட்டது.

அவையாவன

க - வது. மெய்யுணர்தல்.

அதாவது:—தேகாதி பிரபஞ்சங்களைக்கண்டு நீங்கல்; பொய்யைத் தவிர்த்து மெய்யை அறிதல்.

கட்டளைக் கலித்துறை.

திருச்சிற்றம்பலம்.

மெய்தா னரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி யுள்ளம்
பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னுங்
கைதா னெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே. (க)

---

* நூறுசெய்யுள் கொண்டது.

(ப) மெய்தான் அரும்பி - மெய் (உடல்) தானாகவே மயிர் சிலிர்த்து; விதிர்விதிர்த்து-மிகவும் நடுங்கி; விரைஆர்-வாசனைநிறைந்த; கைதான் தலைவைத்து - கைதானாகவே தலைமேல் அஞ்சலிசெய்து; ததும்பி - வடிந்து; வெதும்பி - வாடி; கை - ஒழுக்கம்; நெகிழ-நழுவ; என்னை - எனது நிலைமையை; கொள் - ஏற்றுக்கொள்.

இப்பாசரத்தில் தூய்மைபெற்ற திரிகரண வழிபாடு கூறப்பட்டுள்ளது. ஒருவர்க்கு ஒரேவிதமான வழிபாடிருந்தால் அதை ஒருமுறை செய்யலாமேயொழிய மாறி மாறி செய்யமுடியாது. அஃதொன்றையே அடிக்கடி செய்தால் மனஞ்சலித்து வெறுப்படையும்.

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளே னினதடி யாரொடல் லானர கம்புகினும்
எள்ளேன் றிருவரு ளாலே யிருக்கப் பெறினிறைவா
உள்ளேன் பிறதெய்வ முன்னையல் லாதெங்க ளுத்தமனே. (௨)

உத்தம னத்த னுடையா னடியே நினைந்துருகி
மத்த மனத்தொடு மாலிவ னென்ன மனநினைவில்
ஒத்தன வொத்தன சொல்லிட வூரூர் திரிந்தெவரும்
தத்த மனத்தன பேசவெஞ் ஞான்றுகொல் சாவதுவே. (௩)

சாவமுன் னாட்டக்கன் வேள்வித் தகர்தின்று நஞ்சமஞ்சி
ஆவவெந் தாயென் றவிதா விடுநம் மவரவரே
மூவரென் றேயெம் பிரானொடு மெண்ணிவிண் ணாண்டுமண்மேல்
தேவரென் றேயிறு மாந்தென்ன பாவந் திரிதவரே. (௪)

தவமே புரிந்திலன் றண்மல ரிட்டுமுட் டாதிறைஞ்சேன்
அவமே பிறந்த வருவினை யேனுனக் கன்பருள்ளாஞ்
சிவமே பெறுந்திரு வெய்திற்றி லேனின் றிருவடிக்காம்
பவமே யருளுகண் டாயடி யேற்கெம்பரம் பரனே. (௫)

பரந்துபல் லாய்மல ரிட்டுமுட் டாதடி யேயிறைஞ்சி
இரந்தவெல் லாமெமக் கேபெற லாமென்னு மன்பருள்ளம்

பலவிதமான வழிபாடிருப்பின் திரிகரணங்களால் செய்யுங் கிரியைகள் வெவ்வேறாக மாறி வருமாதலால் புதிது புதிதாக வருமவற்றை மனஞ்சலியாது செய்யும். ஆதலால் புறவழிபாடு, அகப்புறவழிபாடு, அக வழிபாடு, அறிவுத்தொழில் வழிபாடு என நான்கு வழிபாடுகள் நஞ்சைவத்தில் ஏற்பட்டுள்ளன. மேற்சொன்ன வழிபாடு இவற்றுளடங்கும். மனந்தூய்மை பெற்றபின்னரே ஞானமார்க்கம் தலைப்படும்.

(௨) நள்ளேன்-நட்புகொள்ளமாட்டேன்; எள்ளேன் (நரகத்தை) இகழேன்; உத்தமன்-தமசு என்னும் மூலப்பிரகிருதியாகிய இருளைக் கடந்தவன், பெரியோன். (௩) அத்தன் - தந்தை; மத்தம் - உன்மத்தம்; மால் - மயக்கங்கொண்டவன்; சாவது - செயலற்றிருப்பது. (௪) வேள்வித்தகர் - யாகப்பசு; தின்று - அவிசுடனுண்டு; ஆவ - ஐயோ; அவிதாஇடு - முறையிடு; நம்மவர் அவரே - பிரமவிஷ்ணுக்களாகிய நம்மவர்கள் தாமோ; திரிதவர் - திரிகின்றதலைவர்கள். (௫) உள்ளாம் - நடுவுளிருத்தலாகிய; சிவம் - மங்களகரம்; திரு-செல்வம்; பவம்-பிறப்பு; பரம்பரன்-மிக்கமேன்மையுடையவன்.

கரந்நில் லாக்கள்வ னேநின்றன் வார்கழற் கன்பெனக்கு
நிரந்தர மாயரு ளாய்நின்னை யேத்த முழுவதுமே. (ரு)

முழுவதுங் கண்டவ னைப்படைத் தான்முடி சாய்த்துமுன்னாள்
செழுமலர் கொண்டெங்குந் தேடவப் பாலனிப் பாலெம்பிரான்
கழுதொடு காட்டிடை நாடக மாடிக் கதியிலியாய்
உழுவையின் றோலுடுத் துன்மத்த மேல்கொண் டுழிதருமே. (எ)

உழிதரு காலுங் கனலும் புனலொடு மண்ணும்விண்ணும்
இழிதரு காலமெக் காலம் வருவது வந்ததற்பின்
உழிதரு காலத்த வுன்னடி யேன்செய்த வல்வினையைக்
கழிதரு காலமு மாயவை காத்தெம்மைக் காப்பவனே. (அ)

பவனெம் பிரான்பனி மாமதிக் கண்ணிவிண் ணோர்பெருமான்
சிவனெம் பிரானென்னை யாண்டுகொண் டானென் சிறுமைகண்டும்
அவனெம் பிரானென்ன நானடி யேனென்ன விப்பரிசே
புவனெம் பிரான்றெரி யும்பரி சாவதி யம்புகவே. (கூ)

புகவே தகேனுனக் கன்பருள் யானென்பொல் லாமணியே
தகவே யெனையுனக் காட்கொண்ட தன்மையெப் புன்மையரை
மிகவே யுயர்த்திவிண் ணோரைப் பணித்தியண் ணாவமுதே
நகவே தகுமெம் பிரானென்னை நீசெய்த நாடகமே. (ய)

(ரு) நிரந்தரம் - சதாகாலம். (எ) கண்டவன் - படைத்த பிரமன்; படைத்தான்—உந்திக்கமலத்தில் தோற்றுவித்த விஷ்ணு; அப்பாலன்—அப்பாலாயிருந்தவன்; கழுது - பேய்; உழிதரும் - திரியாநிற்பன். இதனால் இவன் சுடுகாட்டில் வசித்தலும், என்பு மாலை தரித்தலும், பேய்களை நேசித்தலும், பிணங்களைச் சூலத்திலேந்துதலும், பித்தனாய்த் திரிதலுமே இலக்கணமாக உடையவன். இத்தனையும் கருணையினபாற் பட்டதே.(அ) உழிதருகால்—உழலாநின்ற காற்று; இழிதரு காலம் - அழிகின்ற சர்வஸம்ஹாரகாலம்; உழிதருகாலத்த - நிலைத்திருக்கும் காலதத்துவத்தையுடையவனே; கழிதரு - கழித்தருளல் வேண்டும். (கூ) பவன் - எல்லாவற்றிற்கும் பிறப்பிடமாயுள்ளவன்; மதிக்கண்ணி - ஒருகலைமாலை, (மதி மலர்மாலையைப்போல் வளைந்திருப்பதால் கண்ணி எனப்பட்டது). பரிசு - விதம்; புவன் – ஸ்வயம்பு; பரிசு - வழி. (ய) பொல்லா - பொள்ளா (போழ்க்காத);தகவே- தகுதியோ; உயர்த்தி-உயர்த்துகின்றாய்; பணித்தி -தாழ்த்துகின்றாய்; அண்ணா-சார்தற்கரியவனே;அமுதே-நாசமற்றவனே;நாடகம்-கூத்து.

௨ - வது அறிவுறுத்தல்.

ஆதாவது :—பொறியோடே கூட்டுதல், அருள்தரிசனம், குரு தரிசனம்.

தரவுகொச்சகக்கலிப்பா.

நாடகத்தா லுன்னடியார் போனடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே யிடையறா வன்புனக்கென்
னூடகத்தே நின்றுருகத் தந்தருளெம் முடையானே. (௧௧)

யானேதும் பிறப்பஞ்சே னிறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்
தேனேயு மலர்க்கொன்றைச் சிவனேயெம் பெருமானெம்
மானேயுன் னருள்பெறுநா ளென்றென்றே வருந்துவனே. (௧௨)

---

(௧௧) இந்தப்பாசுரத்தின் முதலிரண்டடியில் கூறியுள்ள தாழ்வைச் சுவாமிகளின்மீது ஏற்றுதல் கூடாமை. ஏனெனின், சுவாமிகள் வைதிகசைவமரபு மயங்காவண்ணம பக்திநெறியின்றிறத்தை உலகறிய நடத்திக்காட்டவந்த குருமூர்த்தமாதலின் ஆன்மாக்கள் தத்தம் பக்குவநிலைக்கீடாக உண்மையுணர்ந்து வழிபட்டுய்யும்வண்ணம் அவ்வாறு தமது தமிழ்வேதசூக்தியில் ஓதியருளினர். அது எதுபோலுமெனின், இறைவன்வாக்காகிய ஆரியவேதத்தில் ஆண்டவன் தன்னைப்பன்முறையும் புகழ்ந்துகொண்டதோடு ஆன்மநிலையினுந் தன்னைவைத்து, ஆண்டவனுகிய தன்னை ஆன்மாக்கள் பாவித்துதித்து உய்யுமுறைகாட்டியருளினபடியாம். இவ்வாறே சுவாமிகள் தன்னைத்தாழ்வாகக் கூறிக்கொண்ட இடங்களிலெல்லாம் அமைத்துக்கொள்க. அவர்கள் அவ்வாறு எடுத்துக்கூறியது ஜீவசுபாவப் பொதுத்தன்மைநோக்கியே. நடித்து-அபிநயித்து; வீடகம் - முத்தியுலகம்; ஆடகம் - பொன்; இடையறாஅன்பு - இடையீடில்லாத அன்பு. அது தைலதாரையைப் போனறது. எவ்வாறெனின், ஒருயௌவன ஸ்திரியின்மீது வைத்த ஓர் காமுகனது அடங்காத காதல் அவன் எத்தொழிலைச்செய்தாலும், எதவத்தைப்பட்டாலும் அவனதுமனம் அவளையேபற்றிச் சிந்தித்துக்கொண்டிருத்தல் போன்றதாம்; அகத்தூடு - மனத்துள். (௧௨) ஏதும் - சிறிதும்; வானேயும் - விண்ணுலக ஆளுகையையும்; என்றே என்று - எக்காலமோவென்று.

வருந்துவனின் மலர்ப்பாத மவைகாண்பா னுயடியேன்
இருந்துநல மலர்புனையே னேத்தேனுத் தழும்பேறப்
பொருந்தியபொற் சிலைகுனித்தா யருளமுதம் புரியாயேல்
வருந்துவனற் றமியேன்மற் றென்னேநா னுமாறே. (கந)

ஆமாறுன் றிருவடிக்கே யகங்குழையே னன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமானின் றிருக்கோயி றூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே. (கச)

வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே. (கரு)

வாழ்த்துவதும் வானவர்க டாம்வாழ்வான் மனநின்பால்
தாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே. (கசு)

(கந) இருந்தும் - உயிரோடிருந்தும்; குனித்தாய் - வளைத்தாய்; நல் - மிகவும்; தமியேன் - தன்னந்தனியேன்; மற்று என் - வேறுயாது; நான் ஆம் ஆறு - நான் ஆளாகும்வகை. (கச) குழையேன் - இளகேன்; உருகேன் - கரையேன்; தூகேன் - அலகிடேன்; சாம்ஆறே - இறக்கும்வழியிலே; சதுராலே - தொண்டின்உறைப்பினாலே; சார்வானே - அடையப்படுபவனே. (கரு) இப்பாசுரத்தில் வானாகி என்றதுமுதல் உயிராகி என்றது வரையிலும் இறைவன் உயிரில்பொருளினும் உயிரினும் புணர்ந்துநின்றான் என்பதேயன்றி அவைகளாய் விரிந்தானென்பதன்று. எல்லாப்பொருள்களினும் இறைவனைக்காணும் அரியபெரியகொள்கை சைவசித்தாந்தத்துக்கே சிறப்பாயுள்ளது. அதுதான் பார்க்குமிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தம். கண்டனவெலாமோனவுருவெளியதாகும். உண்மையும்ஆய்-பிரபஞ்சசொருபமுமாய்; இன்மையும்ஆய்-பிரபஞ்சாதீதமாய்; கோன்ஆகி - பிரபஞ்சபதியாய்; கூத்தாட்டுவான் ஆகி - பிரபஞ்சாந்தர்யாமியாய். (கசு) மதுகரம் - வண்டுகள் (மது - தேன்; கரம் - செய்தல்); தார் - கொன்றைமாலை.

பரவுவா ரிமையோர்கள் பாடுவன நால்வேதம்
குரவுவார் குழன்மடவாள் கூறுடையா ளொருபாகம்
விரவுவார் மெய்யன்பி னடியார்கண் மேன்மேலுன்
அரவுவார் கழலிணைகள் காண்பாரோ வரியானே. (கஎ)

அரியானே யாவர்க்கு மம்பரவா வம்பலத்தெம்
பெரியானே சிறியேனை யாட்கொண்ட பெய்கழற்கீழ்
விரையார்ந்த மலர்தூவேன் வியந்தலறே னயந்துருகேன்
றரியேனு ளுமாறென் சாவேனுன் சாவேனே. (கஅ)

வேனில்வேண் மலர்க்கணைக்கும் வெண்ணகைச்செவ் வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும் பாழ்நெஞ்சே
ஊனெலா நின்றுருகப் புகுந்தாண்டா னின்றுபோய்
வானுளான் காணாய்நீ மாளாவாழ் கின்றாயே. (கக)

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்
டாழ்கின்றா யாழாமற் காப்பானை யேத்தாதே

(கஎ) குரவு-குராமலர்; மடவாள்-இளமையையுடையவள் (உமாதேவியார்); விரவுவார்-கலந்தவர்கள்; அரவு-அராவு; காண்பார் - தரிசிப்பார்; அரியானே - திரிகரணங்களுக்குமெட்டாதவனே. (கஅ) அம்பரவா-சிதாகாசத்திலிருப்பவனே; கழற்கீழ் - பாதங்களில்; ஆம் ஆறு என் - ஆளாகும்விதம்யாது. (கக) இந்தப்பாசுரத்தின் முதலிரண்டடியில் சுவாமிகள் தன்னை அவ்வாறு கூறிக்கொண்டது பிறர் உய்யும் பொருட்டேயாம். இளமைதொட்டு இம்மைமறுமை இன்பங்களில் உவர்ப்புற்று அறத்துறவியாயிருந்த தாம் இல்லறத்தானைப்போல் கூறிக்கொண்டார். நித்திய மாப்பிள்ளையாயிருந்த சுந்தரமூர்த்திகள் "சீளார் கோவணமுந் திருநீறுமெய்ப் பூசியுன்றன், . ருளேவந் தடைந்தேன் தலைவாவெனை என்றுக்கொள்நீ" என்று தன்னைத் துறவியினும் அதிகமாகக் கூறிக்கொண்டார். சமணச்சார்பிலிருந்த நாவுக்கரசரும், யார் எந்தச்சமயத்திலிருந்து எதை வழிபட்டாலும் முடிவில் அவ்வழிபாடு சிவபெருமானையே சாரும் என்பதாக "சலம் பூவொடு தூபமறந்தறியேன் தமிழோடிசைபாடல் மறந்தறியேன், நலந்தீங்கிலுமுன்னை மறந்தறியேன் உன்னாமமென்னாவில் மறந்தறியேன்." என்று தன்னைச்சிவாக்ரேசராகக் கூறிக்கொண்டார். இவற்றையெல்லாம் உய்த்துணரின் இவர்களது செய்கையும் வாக்கும் பரப்பிரயோசனார்த்தமென்றே உணரக்கிடக்கின்றது. வேனில்-வசந்தகாலம்; வேள் - மன்மதன்; நகை - பல்; பானல் - குவளைமலர்.

சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே. (உ௰)

௩ - வது சுட்டறுத்தல்.

அதாவது :—தன்செயலறுத்தல்.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க வென்னை யாண்டாய்க்
குள்ளந்தா ணின்றுச்சி யளவு நெஞ்சா
யுருகாதா லுடம்பெல்லாங் கண்ணா யண்ணா
வெள்ளந்தான் பாயாதா னெஞ்சங் கல்லாங்
கண்ணிணையு மரமாந்தீ வினையி னேற்கே. (உக)

வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போதுநான் வினைக்கேட னென்பாய் போல
இனையனு வென்றுன்னை யறிவித் தென்னை
ஆட்கொண்டெம் பிரானானாய்க் கிரும்பின் பாவை
அனையநான் பாடேனின் றாடே னந்தோ
அலறிடே னுலறிடே னாவி சோரேன்
முனைவனே முறையோநா னான வாறு
முடிவறியேன் முதலந்த மாயினானே. (உஉ)

ஆயநான் மறையவனு நீயே யாதல்
அறிந்தியா னியாவரினுங் கடைய னாய

(உ௰) வாழ்கின்றாய் - (சமரசஞான சன்மார்க்க நன்னெறியில் நில்லாமல்) வாழ்கின்றாய்; வாழாத - அந்நன்னெறியில் நின்று வாழாத. (உக) வெள்ளம்தாழ் - கங்கைதங்கிய; ஆண்டாய்க்கு - ஆண்ட நின்பொருட்டு; உள்ளந்தாள் நின்று - உள்ளங்காலிலிருந்து; உருகாதால் - உருகாமையாலும்; பாயாதால் - பாயாமையாலும். (உஉ) புகுந்து வலியப்புகுந்து; போது - வா; உலறிடேன் - காயேன்; முனைவனே - முன்னோனே. நான் ஆன ஆறுமுடிவும் - நான் உண்டானவிதமும் முடியும்விதமும். (உ௩) ஆய - ஆராயப்பட்ட;

நாயினே னாதலையு நோக்கிக் கண்டு
  நாதனே நானுனக்கோ ரன்ப னென்பேன்
ஆயினே னாதலா லாண்டு கொண்டாய்
  அடியார்தா மில்லையே யன்றி மற்றோர்
பேயனே னிதுதானின் பெருமை யன்றே
  எம்பெருமா னென்சொல்லிப் பேசுகேனே. (உங)

பேசிற்றா மீசனே யெந்தா யெந்தை
  பெருமானே யென்றென்றே பேசிப் பேசிப்
பூசிற்றான் றிருநீறே நிறையப் பூசிப்
  போற்றியெம் பெருமானே யென்று பின்றா
நேசத்தாற் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை
  ஆண்டானே யவாவெள்ளக் கள்வ னேனை
மாசற்ற மணிக்குன்றே யெந்தா யந்தோ
  என்னைநீ யாட்கொண்ட வண்ணந் தானே. (உச)

வண்ணந்தான் சேயதன்று வெளிதே யன்ற
  நேகனேக னணுவணுவி லிறந்தா யென்றங்
கெண்ணந்தான் றடுமாறி யிமையோர் கூட்டம்
  எய்துமா றறியாத வெந்தா யுன்றன்
வண்ணந்தா னதுகாட்டி வடிவு காட்டி
  மலர்க்கழல்க ளவைகாட்டி வழியற் றேனைத்
திண்ணந்தான் பிறவாமற் காத்தாட் கொண்டாய்
  எம்பெருமா னென்சொல்லிச் சிந்திக் கேனே. (உரு)

சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
  கண்ணிணைநின் றிருப்பாதப் போதுக் காக்கி

நோக்கிக்கண்டு – நன்றாயறிந்து. (உச) பேசில்-சொன்னால்; பூசில் – பூசினால்; நிறையப்பூசி-சர்வாங்கமும் உத்தூளனஞ்செய்து; பின்றா - பிறகிடாத; அவாவெள்ளம் - ஆசைப்பெருக்கு; என்னை – என்னையோ. (உரு) வண்ணம் - நிறம்; சேயது அன்று – செந்நிறத்தது அன்று; வெளிது அன்று - வெண்ணிறத்தது அன்று; அநேகன் - பலவாந்தன்மையன்; இறந்தாய் - இருப்பாய்; அங்கு - அப்படியே; வழி – உய்யும்வழி; காத்து – தடுத்து. (உசு) ஆர – அநுபவிக்க;

வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே. (உசு)

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலால்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லல்
கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்க னேற்கே. (உஎ)

கேட்டாரு மறியாதான் கேடொன் றில்லான்
கிளையிலான் கேளாதே யெல்லாங் கேட்டான்
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே
காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னுங்
கேளா தனவெல்லாங் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே. (உஅ)

வந்தனை - எழுந்தருளி வந்தனை; விச்சை - வித்தை; மால் - பழமை; அமுதம் - இறவாத; இரண்டும் இல் இ - இம்மை மறுமைப் பயனாகிய இரண்டும் இல்லாத இந்த. (உஎ) பௌவம் - கடல்; எவ்வம் - துன்பம்; காலால் - காற்றால்; வான் - பெரிய; புணை - தெப்பம்; மல்லல் - வளப்பம்; கரை - முத்திக்கரை; (உஅ) கேட்டாரும் - அழிவினையுடைய எவராலும்; கேடு - மரணம்; கிளை - உறவினர்; தவிசு - ஆசனம்; எல்லாங்காட்டி - தன்னுடைய சொரூப தடஸ்த லக்ஷணங்களெல்லாவற்றையுங்காட்டி; எல்லாங்கேட்பித்து - வேதசிவாகமங்களின் இரகசியப்பொருள்களெல்லாவற்றையும் கேட்பித்து; விச்சை - வித்தை.

விச்சைதா னிதவொப்ப துண்டோ கேட்கின்
மிகுகாத லடியார்தம் மடியனுக்கி
அச்சந்தீர்த் தாட்கொண்டா னமுத மூறி
அகநெகவே புகுந்தாண்டா னன்பு கூர
அச்சனுண் பெண்ணலியா காச மாகி
ஆரழலா யந்தமா யப்பா னின்ற
செச்சைமா மலர்புரையு மேனி யெங்கள்
சிவபெருமா னெம்பெருமான் றேவர் கோவே. (உகூ)

தேவர்கோ வறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோ னென்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாது மஞ்சோம்
மேவினோ மவனடியா ரடியா ரோடும்
மேன்மேலுங் குடைந்தாடி யாடு வோமே. (ஙய)

ச - வது ஆத்துமசுத்தி.

அதாவது:—அனுபவத்தழுந்தல்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை யென்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்

(உகூ) விச்சை - வித்தை; மிகுகாதல் - மிக்க அன்பு; அச்சன் - அத்தன், தந்தை; அந்தம் - முடிவிடம், பிரகிருதி; செச்சை - செச்சைமலர்; மாமலர் - தாமரை; புரையும் - நிகர்த்த. (ஙய) தேவர்கோ - இந்திரன்; பொழில்கள் - உலகங்கள்; மூர்த்தி - சகளமூர்த்தி; யாவர்கோன் - யாவர்க்குந்தலைவன்; மேவினோம் - கூடினோம்; குடைந்து - கவிந்து.

(ஙக) ஆடுகின்றிலை கூத்து - கூத்து ஆடுகின்றாயில்லை; உடையான் - எப்பொருளையும் எவ்வுயிரையும் உடைமையாகவும் அடிமையாகவும் உடையவன்; சூட்டுகின்றதும் இலை - சூட்டுவதும்

சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன் றறியேனே.()

அறிவி லாத வெனைப்புகுந் தாண்டுகொண் டறிவதை யருளிமேல்
நெறியெ லாம்புல மாக்கிய வெந்தையைப் பந்தனை யறுப்பானைப்
பிறிவி லாதவின் னருள்கள்பெற் றிருந்துமா றாடுதி பிணநெஞ்சே
கிறியெ லாமிகக் கீழ்படுத் தாய்கெடுத் தாயென்னைக் கெடுமாறே.

மாறி நின்றெனைக் கெடக்கிடந் தனையையெம் மதியிலி மடநெஞ்சே
தேறு கின்றில மினியுனைச் சிக்கெனச் சிவனவன் றிரடோண்மேல்
நீறு நின்றது கண்டனை யாயினு நெக்கிலை யிக்காயம்
கீறு கின்றிலை கெடுவதுன் பரிசிது கேட்கவுங் கில்லேனே. (௫௩)

கிற்ற வாமன மேகெடு வாயுடை யானடி நாயேனை
விற்றெ லாமிக வாள்வதற் குரியவன் விரைமலர்த் திருப்பாதம்
முற்றி லாவிளந் தளிர்பிரிந் திருந்துநீ யுண்டன வெல்லாமுன்
அற்ற வாறுநின் னறிவுநின் பெருமையு மளவறுக் கில்லேனே. ()

அளவ றுப்பதற் கரியவ னிமையவர்க் கடியவர்க் கெளியானங்
களவ றுத்துநின் றாண்டமை கருத்தினுட் கசிந்துணர்ந் திருந்தேயும்
உளக றுத்துனை நினைந்துளம் பெருங்களன் செய்தது மிலைநெஞ்சே
பளக றுத்துடை யான்கழல் பணிந்திலை பரகதி புகுவானே. (௫௫)

புகுவ தாவதும் போதர வில்லதும் பொன்னகர் புகப்போதற்
குகுவ தாவது மெந்தையெம்பிரானென்னை யாண்டவன் கழற்கன்பு

செய்கின்றிலை; துணை - ஒப்பு; பிணம் - பேய். (௫௨) நெறி - மார்க்கம்; புலமாக்கிய - அறிவுறுத்திய; பந்தனை - பிறவித்தளை; கிறி - பொய். (௫௩) கிடந்து - சும்மாவிருந்து; அனையை - அத்தன்மைத்தாயினை; கீறு - பிளவு; பரிசு - தன்மை; கில்லேன் - சம்மதியேன். (௫௪) கிற்ற அவாம் - வேண்டியவற்றையெல்லாம் அவாவும்; முற்றிலா - முதிராத, மிகவும்; அளவு அறுக்கிலேன் - அளவுபடுத்தவல்லனல்லேன். (௫௫) நங்களவு அறுத்து - நங் கள்ளத் தன்மையைச் சேதித்து; உளகறுத்து - உள்ளகுறைகளை முனிந்து; பெருங்களன் - பெரியவஞ்சகம்; பளகு அறுத்து - குற்றங்களையொழித்து. (௫௬) போதரவு - மீளுதல்; பொன்னகர் - சிவலோகம்; உகுவது - மனங்குழைவது; நித்தலும் - நாடோறும்.

நெகுவ தாவது நித்தலு மமுதொடு தேனொடு பால்கட்டி
மிகுவ தாவதுமின்றெனின் மற்றிதற்கென்செய்கேன்வினையேனே.

வினையென் போலுடை யார்பிற ராருடை யானடி நாயேனைத்
தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப் பன்றுமற் றதனாலே [ன்
முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்துநான் முட்டிலேன் றலைகீறே
இனையன்பாவனை யிரும்புகன்மனஞ்செவியின்ன தென்றறியேனே.

எனை யாவரு மெய்திட லுற்றுமற் றின்னதென் றறியாத
தேனை யானெயைக் கரும்பினின் றேறலைச்சிவனையென்சிவலோகக்
கோனை மானன நோக்கிதன் கூறனைக் குறுகிலே னெடுங்காலம்
ஊனை யானிருந் தோம்புகின் றேன்கெடு வேனுயி ரோயாதே.(௫௮)

ஒய்வி லாதன வுவமனி லிறந்தன வொண்மலர்த் தாடந்து
நாயி லாகிய குலத்தினுங் கடைப்படு மென்னைநன் னெறிகாட்டித்
தாயி லாகிய வின்னருள் புரிந்தவென் றலைவனை நனிகாணேன்
தீயில்வீழ்கிலேன் றிண்வரையுருள்கிலேன்செழுங்கடல்புகுவேனே.

வேனில் வேள்கணை கிழித்திட மதிசுடு மதுதனை நினையாதே
மானி லாவிய நோக்கியர் படிறிடை மத்திடு தயிராகித்
தேனி லாவிய திருவருள் புரிந்தவென் சிவனகர் புகப்போகேன்
ஊனி லாவியை யோம்புதற் பொருட்டினு முண்டுடுத்திருந்தேனே.

---

(௫௭)தினையின்பாகம்-தினையளவு;முட்டிலேன்-முட்டிக்கொள்ளேன் பாவனை - சிந்தனை. (௫௮) எனையயாவரும் - மற்றையபெருந்தேவர்களும்; தேறலை - சாற்றை; ஓயாதே - அழியாதோ. (௫௯) ஒய்வு - அழிவு; நாயில் ஆகிய குலம் - நாய்ச்சாதி; நனி - மிகவும்; வரை - மலை. (௬௰) படிறு - பொய், வஞ்சகம்; தேன்நிலாவிய - தேனினும் இனிமைபொருந்திய; ஓம்புதல் - வளர்த்தல்; இனும் - இன்னமும். வேள் - மன்மதன், இவன் கருவேள், விஷ்ணுமூர்த்தியின் மானஸ புத்திரன். (ஈண்டு குறிப்பிட்டது இவனையே). மற்றொரு பொருள்:—வேள் - முருகன், இவன் செவ்வேள், ஸ்ரீகண்ட ருத்திரமூர்த்தியின் நெற்றிக்கண்ணில் தோன்றினவன். இவ்விருவருக்குமுள்ள பேதம் யாதெனின்; **கருவேள்** - தனதுருவால் தன்றந்தையுருவங் கருப்பெனக்காட்டுவன். **செவ்வேள்** - தனதுருவால் தன்றந்தையுருவஞ் சோதிச்செவ்வுரு எனக்காட்டுவன். (௨) **கருவேள்** - தனது அனங்கன் என்னும்பெயரால் தன்றந்தைக்கு அதையுண்டாக்கும் ஆற்றலில்லையெனக்காட்டுவன். **செவ்வேள்** - தனது

ரு - வது கைம்மாறுகொடுத்தல்.

அதாவது:—தன்னைச் சிவனிடத்திலே கொடுத்தல்.

கலி விருத்தம்.

இருகை யானையை யொத்திருந் தென்னுளக்
கருவை யான்கண்டி லேன்கண்ட தெவ்வமே
வருக வென்று பணித்தனை வானுளோர்க்
கொருவ னேகிற்றி லேன்கிற்ப னுண்ணவே. (௪௪)

உண்டொ ரொண்பொரு ளென்றுணர் வார்க்கெலாம்
பெண்டி ராணலி யென்றறி யொண்கிலை
தொண்ட னேற்குள்ள வாவந்து தோன்றினாய்
கண்டுங் கண்டிலே னென்னகண் மாயமே. (௪௫)

மேலை வானவ ரும்மறி யாததோர்
கோல மேயெனை யாட்கொண்ட கூத்தனே
ஞால மேவிசும் பேயிவை வந்துபோங்
கால மேயுனை யென்றுகொல் காண்பதே. (௪௬)

வேலிறைவன் என்னும் பெயரால் தன் தந்தைக்கு எல்லா வன்மையு முள னெனக்காட்டுவன். (௩) கருவேள் - தன்தொழிலால் தன் தந்தையை மாயோன் எனக்காட்டுவன். செவ்வேள் - தன்தொழிலால் தன் தந்தையை மாயாரஹிதனெனக்காட்டுவன். (௪) கருவேள் - ஆத்மாக்களுக்கு என்றும் பந்தமங்கையின் இச்சையை எழுப்புவன். செவ்வேள் - ஆத்மாக்களுக்கு என்றும் மோக்ஷமங்கையின் இச்சையை எழுப்புவன். (ரு) கருவேள் - ஆத்மாக்களை சிற்றின்பத் தழுத்துவன். செவ்வேள் - ஆத்மாக்களை பேரின்பத்தழுத்துவன். இவ்வன்மையால் கற்றவர்கள் எக்காலமும் வெறுப்பதுகருவேளையே. அவர்கள் நிரந்தரம் விரும்புவது மாறாத இளமையும், நீங்காத 'ஞான மணத்தையும், அழியாத அழகையுமுடைய முருகன் என்னுஞ் செவ்வேளையே.

(௪௪) இருந்து - (குருமூர்த்தமா யெழுந்தருளி) இருந்து; அக்கருவை - அந்த மகிமைப்பொருளை; எவ்வமே - துன்பமே; கிற்பன் - அடியேன்; உண்ணகிற்றிலேன் - நுகரப்பெற்றிலேன். (௪௫) ஒண் - சிறந்த; ஒண்கிலை - அறிந்துகொள்ளக் கூடாமை; கண் மாயமே - கண்ணை மறைக்கும் மாயவித்தையோ. (௪௬) மேலை - விண்ணுலகம்; வந்துபோம் - தோற்றி யொடுங்கும். (௪௭) கட்கு - அகக்

காண லாம்பர மேகட் கிறந்ததோர்
வாணி லாப்பொரு ளேயிங்கொர் பார்ப்பெனப்
பாண னேன்படிற் றாக்கையை விட்டுனைப்
பூணு மாறறி யேன்புலன் போற்றியே. (௬௪)

போற்றி யென்றும் புரண்டும் புகழ்ந்து நின்
றாற்றன் மிக்கவன் பாலழைக் கின்றிலேன்
ஏற்று வந்தெதிர் தாமரைத் தாளுறுங்
கூற்ற மன்னதொர் கொள்கையென் கொள்கையே. (௬௫)

கொள்ளுங் கில்லெனை யன்பரிற் கூய்ப்பணி
கள்ளும் வண்டு மறாமலர்க் கொன்றையான்
நள்ளுங் கீழுளு மேலுளும் யாவுளும்
எள்ளு மெண்ணெயும் போனின்ற வெந்தையே. (௬௬)

எந்தை யாயெம் பிரான்மற்று மியாவர்க்குந்
தந்தை தாய்தம் பிரான்றனக் கஃதிலான்
முந்தி யென்னுள் புகுந்தனன் யாவருஞ்
சிந்தை யாலு மறிவருஞ் செல்வனே. (௬௭)

செல்வ நல்குர வின்றிவிண் ணோர்புழுப்
புல்வ ரம்பின்றி யார்க்கு மரும்பொருள்
எல்லை யில்சழல் கண்டும் பிரிந்தனன்
கல்வகைமனத் தேன்பட்ட கட்டமே. (௬௮)

கட்ட றுத்தெனை யாண்டுகண் ணாரநீ
றிட்ட வன்பரொ டியாவருங் காணவே

கண்ணுக்கு; (கட்கு) இறந்தது-ஊனக்கண்ணுக்குப் புலப்படாதது; பார்ப்பு - பறவைக்குஞ்சு ; பாணனேன் - பாழ்நனேன், பாழான வணுகிய நான்; படிறு ஆக்கை - வஞ்சகம், பொய் முதலியவை நிறைந்தவுடல்; புலன் போற்றி - ஐம்பொறிகளைக்காத்து (௬௫) எதிர் ஏற்று வந்து - எதிர்த்து வந்து; கூற்றம் - கூறுபடுத்தல், அது உடலுயிரைப் பிரித்தல் (இயமன்). (௬௬) கொள்ளுங்கில் எனை - அறிந்து கொள்ளுஞ் சக்தியில்லாத வென்னை; அன்பர் இல் - அன்பரைப்போல; கூய்ப்பணி - கூவிப்பணிகொள்; கள் - தேன்; நள் - நடு; நின்ற - நீக்கமற நிறைந்து நின்ற. (௬௮) பட்ட கட்டம் - அடைந்த துன்பம். (௬௯) கட்டறுத்து - பிறவித்தளையைச் சேதி

பட்டி மண்டப மேற்றினை யேற்றினை
எட்டி னோடிரண் டும்மறி யேனையே. (௪௯)

அறிவ னேயமு தேயடி நாயினேன்
அறிவ னாகக்கொண் டோவெனை யாண்டது
அறிவி லாமையன் றேகண்ட தாண்டநாள்
அறிவ னோவல்ல னோவரு ளீசனே. (௫0)

---

௬ - வது அநுபோகசுத்தி.

அதாவது :—சகமேலீடு.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஈச னேயென் னெம்மானே யெந்தை பெருமா னென்பிறவி
நாச னேநான் யாதுமொன் றல்லாப் பொல்லா நாயான
நீச னேனை யாண்டாய்க்கு நினைக்க மாட்டேன் கண்டாயே
தேச னேயம் பலவனே செய்வ தொன்று மறியேனே. (௫௧)

செய்வ தறியாச் சிறுநாயேன் செம்பொற் பாத மலர்காணப்
பொய்யர் பெறும்பே றத்தனையும் பெறுதற் குரியேன் பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்ப்பாத மேவக் கண்டுங் கேட்டிருந்தும்
பொய்ய னேனு னுண்டுடுத்திங் கிருப்பதானேன் போரேறே. (௫௨)

த்து; கண் ஆர ஆண்டு - நயனதீக்ஷைசெய்து ஆண்டு கொண்டு; பட்டி - கள்வன்; எட்டினோடு இரண்டும் அறியேனையே - எட்டு என்னும் எண் வரிவடிவில் அ வடிவாயும், இரண்டு என்னும் எண் வரிவடிவில் உ வடிவாயும் காணப்படுகின்றன. இவ்விரண்டோடு ம் என்னும் எழுத்தைச் சேர்த்தால் ஓம் என்று ஆயிற்று. இவ் வோங்காரத்தையும் அதன் உட்பொருளையும் அறியாத வென்னையே. அதுவுமன்றி, எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தை அறியாத என்னையே எனினும் பொருந்தும். அது எட்டும் இரண்டும் பத்து. தசயகாம்-அந்தயகரம் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தின் நடுவணின்று ஆன்மாவைக்குறிக்கும். அந்த ஆன்மாவாகிய தன்னைத்தான் அறியாத தென்னையே; இதன் விரிவெல்லாம் எமது தனி விஷய சூசனத்தில் காண்க. (௫0) அறிவனே - ஞான உருவினனே; அறிவன் ஆக - அறிவுடையோனாக; அல்லனோ - அறிவிலேனோ.

(௫௧) ஒன்று அல்லா - ஒரு பொருளுமல்லாத. (௫௨) பேறு —

போரே றேநின் பொன்னகர்வாய் நீபோந் தருளி யிருணீக்கி
வாரே றிளமென் முலையாளோ டுடன்வந் தருள வருள்பெற்ற
சீரே றடியார் நின்பாதஞ் சேரக் கண்டுங் கண்கெட்ட
ஊரே றாயிங் குழல்வேனோ கொடியே னுயிர்தா னுலவாதே. (௫௩)

உலவாக் காலந் தவமெய்தி யுறுப்பும் வெறுத்திங் குனைக்காண்பான்
பலமா முனிவர் நனிவாடப் பாவி யேனைப் பணிகொண்டாய்
மலமாக் குரம்பை யிதுமாய்க்க மாட்டேன் மணியே யுனைக்காண்பான்
அலவா நிற்கு மன்பிலே னென்கொண் டெழுகே னெம்மானே (௫௪)

மானேர் நோக்கி யுமையாள் பங்கா வந்திங் காட்கொண்ட
தேனே யமுதே கரும்பின் றெளிவே சிவனே தென்றில்லைக்
கோனே யுன்றன் றிருக்குறிப்புக் கூடு வார்நின் கழல்கூட
ஊனார் புழுக்கூ டிதுகாத்திங் கிருப்ப தானே னுடையானே. (௫௫)

உடையா னேநின் றனையுள்கி யுள்ள முருகும் பெருங்காதல்
உடையா ருடையாய் நின்பாதஞ் சேரக் கண்டிங் கூர்நாயின்
கடையா னேனெஞ் சுருகாதேன் கல்லா மனத்தேன் கசியாதேன்
முடையார் புழுக்கூ டிதுகாத்திங் கிருப்பதாக முடித்தாயே. (௫௬)

முடித்த வாறு மென்றனக்கே தக்க தேமுன் னடியாரைப்
பிடித்த வாறுஞ் சோராமற் சோர னேனிங் கொருத்திவாய்
துடித்த வாறுந் துகிலிறையே சோர்ந்த வாறு முகங்குறுவேர்
பொடித்த வாறு மிவையுணர்ந்து கேடென் றனக்கே சூழ்ந்தேனே.

தேனைப் பாலைக் கன்னலின் றெளியை யொளியைத் தெளிந்தார்தம்
ஊனை யுருக்கு முடையானை யும்ப ரானை வம்பனேன்

துன்பம்; போர் ஏறே - போரில் ஆண் சிங்கமே. (௫௩) நகர்வாய்- நகரி னின்றும்; ஊர் ஏறு ஆய்-ஊர்ப்பன்றியைப் போன்று; உழல் - சுழல்; உலவாதே - அழியாமல் (௫௪) உலவா - ஒழியா, அளவில்லா; உறுப்பு - உடம்பு; குரம்பை - உடல்; அலவா - துன்புற்று; எழுகேன் - உய்வேன். (௫௫) கூடுவார் - பெறுவோர். (௫௬) உள்கி - நினைத்து; முடை ஆர் - துர்க்கந்தம் நிறைந்த. (௫௭) சோராமல் - கைகூடாமல்; துகில் இறை - ஆடைசிறிது; பொடித்த - அரும்பின; சூழ்ந்தேன் - செய்து கொண்டேன். (௫௮) ஊனை - உடலை; உம்பரானை - திருச்சிற்றம்பலவனை, சிதாகாசசொரூபனை.

நாயினி னடியே னியென்னை யாண்டா யென்று லடியேற்குத்
தானுஞ் சிரித்தே யருளலாந் தன்மை யாமென் றன்மையே. (ருஅ)

தன்மை பிறரா லறியாத தலைவா பொல்லா நாயான
புன்மை யேனை யாண்டையா புறமே போக விடுவாயோ
என்னை நோக்கு வார்யாரே யென்னான் செய்கே னெம்பெருமான்
பொன்னே திகழுந் திருமேனி யெந்தா யெங்குப் புகுவேனே.(ருகூ)

புகுவே னெனதே நின்பாதம் போற்று மடியா ருண்ணின்று
நகுவேன் பண்டு தோளோக்கி நாண மில்லா நாயினேன்
நெகுமன் பில்லை நினைக்காண நீயாண் டருள வடியேனும்
தகுவ னேயென் றன்மையே யெந்தா யந்தோ தரியேனே. (கூ௰)

எ - வது காருணியத்திரங்கல்.

தாத்பர்யம் :—சிவனுடைய வெற்றிப்பாட்டிரங்கல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தரிக்கிலேன் காய வாழ்க்கை சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி யெங்கள் விடலையே போற்றி யொப்பில்
ஒருத்தனே போற்றி யும்பர் தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி யெங்க ளின்மலா போற்றி போற்றி. (கூக)

போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சி வாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோ நமச்சி வாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சி வாய சயசய போற்றி போற்றி. (கூ௨)

போற்றியென் போலும் பொய்யர் தம்மையாட் கொள்ளும் வள்ளல்
போற்றிநின் பாதம் போற்றி நாதனே போற்றி போற்றி

(ருகூ) தன்மைபிறரால் அறியாத—தனக்கு அந்நியமாகப் பிறரொருவரும் இல்லையாதலின் அவர்களாலறியப்படாத தன்மை; ஆண்டு-அடிமை யாக்கிக்கொண்டு. (கூ௰) பண்டு - பழைமையாகிய; தரியேன் - சகியேன். (கூக) வான விருத்தனே - சிதாகாயத்திலிருக்கும் பழையோனே; விடலையே - திண்ணியனே; (கூ௨) புறம் - புறத்தே, போக்கல் - போகவிடாதே; (கூ௩) இயமானன் - உயிர்; கடவுள் -

போற்றிநின் கருணை வெள்ளப் புதுமதுப் புவனநீர்தீக்
காற்றிய மானன் வான மிருசுடர்க் கடவு ளானே. (சுங)

கடவுளே போற்றி யென்னைக் கண்டுகொண் டருளு போற்றி
விடவுளே யுருக்கி யென்னை யாண்டிட வேண்டும் போற்றி
உடலிது களைந்திட் டொல்லை யும்பர்தந் தருளு போற்றி
சடையுளே கங்கை வைத்த சங்கரா போற்றி போற்றி. (சுச)

சங்கரா போற்றி மற்றோர் சரணிலேன் போற்றி கோலப்
பொங்கரா வல்குற் செவ்வாய் வெண்ணகைக் கரிய வாட்கண்
மங்கையோர் பங்க போற்றி மால்விடை யூர்தி போற்றி
இங்கிவாழ் வாற்றகில்லே னெம்பிரா னிழித்திட் டேனே. (சுரு)

இழித்தன னென்னை யானே யெம்பிரான் போற்றி போற்றி
பழித்திலே னுன்னை யென்னை யாளுடைப் பாதம் போற்றி
பிழைத்தவை பொறுக்கை யெல்லாம் பெரியவர் கடமை போற்றி
ஒழித்திடிவ் வாழ்வு போற்றி யும்பர்நாட் டெம்பிரானே. (சுசு)

எம்பிரான் போற்றி வானத் தவரவ ரேறு போற்றி
கொம்பரார் மருங்குன் மங்கை கூறவெண் ணீற போற்றி
செம்பிரான் போற்றி தில்லைத் திருச்சிற்றம் பலவ போற்றி
உம்பரா போற்றி யென்னை யாளுடை யொருவ போற்றி. (சுஎ)

ஒருவனே போற்றி யொப்பி லப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி யெங்கள் கோமளக் கொழுந்து போற்றி
வருகவென் றென்னை நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி
தருகநின் பாதம் போற்றி தமியனேன் றனிமை தீர்த்தே (சுஅ)

(ஆன்மாவின் இருதய குகையிலிருந்துகொண்டு இச்சாஞானக்கிரியை களை இயக்கிச் செலுத்துகின்ற) முதல்வன், கடவு+உள்=கடவுள் (கடவுதல் - செலுத்துதல்). அன்றியும். கட÷உள்=கடவுள் எனப் பிரித்து தத்துவாதீதமாய் எல்லாவற்றையுங்கடந்து நின்ற பொருள் எனலுமாம்; விட - நெகிழும்படி ; உள்உருக்கி - மனத்தை யுருகச் செய்து; உம்பர் - முத்தியுலகம். (சுரு) இழித்திட்டேன் - தாழ்வு படுத்தினேன். (சுஎ) கொம்பர் - பூங்கொம்பு ; ஆர் - நுண்ணிய. (சுஅ) கோமளம் - இளமை ; வாங்கிட - வளைக்க. (சுகூ) தீர்ந்த - சார்புகெட்ட; அன்பாய்-அன்புருவமாகிய; வார்ந்த - ஓங்கியெழுந்த;

தீர்ந்தவன் பாய வன்பர்க் கவரினு மன்ப போற்றி
பேர்ந்துமென் பொய்மையாட்கொண் டருளிடும் பெருமை போற்றி
வார்ந்தநஞ் சயின்று வானோர்க் கமுதமீ வள்ளல் போற்றி
ஆர்ந்த நின் பாத நாயேற் கருளிட வேண்டும் போற்றி. (௬௯)

போற்றியிப் புவன நீர்தீக் காலொடு வான மானாய்
போற்றியெவ் வுயிர்க்குந் தோற்ற மாகிநீ தோற்ற மில்லாய்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறாயீ றின்மை யானாய்
போற்றியைம் புலன்க ளின்னைப் புணர்கிலாப் புணர்க்கையானே.

---

௮ - வது ஆனந்தத்தழுந்தல்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

புணர்ப்ப தொக்க வெந்தை யென்னை யாண்டு பூண நோக்கினாய்
புணர்ப்ப தன்றி தென்ற போது நின்னொ டென்னொ டென்னிதாம்
புணர்ப்ப தாக வன்றி தாக வன்பு நின்க ழற்கணே
புணர்ப்ப தாக வங்க ணாள புங்க மான போகமே. (௭௧)

போகம் வேண்டி வேண்டி லேன்பு ரந்த ராதி யின்பமும்
ஏக நின்க ழலிணைய லாது லேனெ னெம்பிரான்
ஆகம் விண்டு கம்பம் வந்து குஞ்சி யஞ்ச லிக்கணே
ஆக வென்கை கண்க டாரை யாற தாக வையனே. (௭௨)

ஆர்ந்த - எங்குந்நிறைந்த. (௭௰) புணர்கிலா - அடையாத; புணர்க்கையானே - புதுமையை யுடையவனே.

(௭௧) புணர்ப்பதொக்க - ஆண்டான் அடிமையைத் தன்னோடு சேர்த்துக்கொள்வது போல; பூண - தற்போதம் மேலெழாவண்ணம் அழுந்தும்படி; இது - இத்தகைய கிருபாநோக்கம்; புணர்ப்பது அன்று என்றபோது - இலேசில் கிடைப்பதன்று என்றறிந்தபோது; என் இது ஆம்புணர்ப்பு - என்னதாகியிருந்த சகஜமலம்; நின்னோடு என்னோடு - என்னை நின்னோடும்; அதுஆக - அநந்நியமாய்க் கூட்டுவதாகவும்; அன்பு இதுஅன்று ஆக - பிரபஞ்சத்தின்மேல் வைத்த பற்று இப்போது அன்றாகவும்; நின்கழற்கணே புணர்ப்பதுஆக - நின்றிருவடிக்கண்மீளாது நிற்பதாகவும் ஆயின்; புங்கம் ஆன போகமே - (அதனால்) சிவானந்த போகமே உயர்ந்ததாயிற்று. (௭௨) போகம்வேண்டி - அநுபவிக்க விரும்பி; ஏகம்-ஒப்பில்லாத; ஆகம் - தேகம், விண்டு - பிளந்து; கம்பம் - நடுக்கம்; குஞ்சி - சிரசு; தாரை

ஐய நின்ன தல்ல தில்லை மற்றோர் பற்று வஞ்சனேன்
பொய்க லந்த தல்ல தில்லை பொய்மை யேனெ னெம்பிரான்
மைக லந்த கண்ணி பங்க வந்து நின்க ழற்கணே
மெய்க லந்த வன்ப ரன்பெ னக்கு மாக வேண்டுமே. (எ௩)

வேண்டும் நின்க ழற்க ணன்பு பொய்மை தீர்த்து மெய்ம்மையே
ஆண்டு கொண்டு நாயினேனை யாவ வென்ற ருளுநீ
பூண்டுகொண் டடிய னேனும் போற்றி போற்றி யென்று மென்றும்
மாண்டு மாண்டு வந்து வந்து மன்ன நின்வ ணங்கவே. (எ௪)

வணங்கு நின்னை மண்ணும் விண்ணும் வேத நான்கு மோலமிட்
டுணங்கு நின்னை யெய்த லுற்று மற்றொ ருண்மை யின்மையின்
வணங்கி யாம்வி டேங்க ளென்ன வந்து நின்ற ருளுதற்
கிணங்கு கொங்கை மங்கை பங்க வென்கொ லோநினைப்பதே.(எ௫)

நினைப்ப தாக சிந்தை செல்லு மெல்லை யேய வாக்கினால்
தினைத்த னையு மாவ தில்லை சொல்ல லாவ கேட்பவே
அனைத் துலகு மாய நின்னை யைம்பு லன்கள் காண்கிலா
எனைத்தெ னைத்த தெப்பு றத்த தெந்தை பாத மெய்தவே. (எ௬)

எய்த லாவ தென்று நின்னை யெம்பி ரானிவ் வஞ்சனேற்
குய்த லாவ துன்க ணன்றி மற்றொ ருண்மை யின்மையின்
பைத லாவ தென்று பாது காத்தி ரங்கு பாவியேற்
கீத லாது நின்க ணொன்றும் வண்ண மில்லை யீசனே. (எஎ)

ஆறதா – நீர்த்தாரை ஆறுய்ப்பெருக. (எ௩) நின்னது அல்லது – நின்னுடைய பற்றன்றி; கலந்தது – சேர்ந்திருந்தது; இல்லை-(மெய்) இல்லை. (எ௪) மெய்ம்மையே – உண்மையாகவே; பூண்டுகொண்டு– (உன் திருத்தொண்டை) மேற்கொண்டு; வந்துவந்து – பிறந்து பிறந்து. (எ௫) உணங்கும் – மெலியும்; எய்தலுற்று – அறியத் தொடங்கி; உண்மை – மெய்ப்பொருள்; விடேங்கள் என்ன – விடோமென்று சொல்ல; இணங்கு-நெருங்கின; என்கொல் நினைப் பது - திருவுளம்பற்றுவது என்னோ. (எ௬) எல்லைஎய – வரம்புண் டாக; எனைத்து எனைத்தது – அது எவ்வளவு அளவினது; எப்புறத் தது – எவ்விடத்தது. (எஎ) எய்தலாவது - அடைதலாவது; பைதல்ஆவது – துன்பமுண்டாம்; ஈது அலாது - இது வல்லாமல்; ஒன்றும் வண்ணம் – கூடும் வகை. (எகூ) முந்தையானகாலம் - முற்

ஈச னேநீ யல்ல தில்லை யிங்கு மங்கு மென்பதும்
பேசி னேனொர் பேத மின்மை பேதை யேனெ னெம்பிரான்
ஈச னேனை யாண்டு கொண்ட நின்ம லாவொர் நின்னலால்
தேச னேயோர் தேவ ருண்மை சிந்தி யாது சிந்தையே. (எஅ)

சிந்தை செய்கை கேள்வி வாக்குச் சீரி லைம்பு லன்களால்
முந்தை யான கால நின்னை யெய்தி டாத மூர்க்கனேன்
வெந்தை யாவி ழுந்தி லேனெ னுள்ளம் வெள்கி விண்டிலேன்
எந்தை யாய நின்னை யின்ன மெய்த லுற்றி ருப்பனே. (எகூ)

இருப்பு நெஞ்ச வஞ்ச னேனை யாண்டு கொண்ட நின்னதாள்
கருப்பு மட்டு வாய்ம டுத்தெ னைக்க லந்து போகவும்
நெருப்பு முண்டி யானு முண்டி ருந்த துண்ட தாயினும்
விருப்பு முண்டு நின்க ணென்க ணென்ப தென்ன விச்சையே.

கூ - வது ஆனந்தபரவசம்.

கலிநிலைத்துறை.

விச்சுக் கேடு பொய்க் காகா தென்றிங் கெனைவைத்தாய்
இச்சைக் கானா ரெல்லாரும் வந்துன்றாள் சேர்ந்தார்
அச்சத் தாலே யாழ்ந்திடு கின்றே னாருரெம்
பிச்சைத் தேவா வென்னான் செய்கேன் பேசாயே. (அக)

பேசப் பட்டே னின்னடி யாரிற் றிருநீறே
பூசப் பட்டேன் பூதல ராலுன் னடியானென்
றேசப் பட்டே னினிப்படு கின்ற தமையாதால்
ஆசைப் பட்டே னாட்பட் டேனுன் னடியேனே. (அஉ)

அடியேனல்லேன்கொல்லோதானெனையாட்கொண்டிலைகொல்லோ
அடியா ரானா ரெல்லாரும் வந்துன் றாள்சேர்ந்தார்

காலத்தில்; விண்டிலேன்-நெஞ்சு வெடித்திலேன்; எய்தல் உற்று — அடைய உத்தேசித்து. (அ௰) கருப்புமட்டு - கருப்பஞ்சாறு; போகவும் - பிரியவும்.

(அக) விச்சு - வித்து, வேர்; இச்சை - அன்பு; பிச்சைத் தேவா - பிக்ஷாடன மூர்த்தியே. (அஉ) பூதலர் - உலகத்தார்;

செடிசே ருடல மிதுநீக்க மாட்டே னெங்கள் சிவலோகா
கடியே னுன்னைக் கண்ணாரக் காணுமாறு காணேனே. (௮௩)

காணு மாறு காணே னுன்னை யந்நாட் கண்டேனும்
பாணே பேசி யென்றன்னைப் படுத்த தென்ன பரஞ்சோதி
ஆணே பெண்ணே யாரமுதே யத்தா செத்தே போயினேன்
ஏணு ணில்லா நாயினே னென்கொண் டெழுகேனெம்மானே. (௮௪)

மானேர் நோக்கி யுடையாள் பங்கா மறையீ றறியா மறையோனே
தேனே யமுதே சிந்தைக் கரியாய் சிறியேன் பிழைபொறுக்குங்
கோனே சிறிதே கொடுமை பறைந்தேன் சிவமா நகர்குறுகப்
போனா ரடியார் யானும் பொய்யும் புறமே போந்தோமே. (௮௫)

புறமே போந்தோம் பொய்யும் யானு மெய்யன்பு
பெறவே வல்லே னல்லா வண்ணம் பெற்றேன்யான்
அறவே நின்னைச் சேர்ந்த வடியார் மற்றொன் றறியாதார்
சிறவே செய்து வழிவந்து சிவனே நின்றாள் சேர்ந்தாரே. (௮௬)

தாரா வுடையா யடியேற் குன்றா ளிணையன்பு
போரா வுலகம் புக்கா ரடியார் புறமே போந்தேன்யான்
ஊரா மிலைக்கக் குருட்டா மிலைத்திங் குன்றா ளிணையன்புக்
காரா யடியே னயலே மயல்கொண் டழுகேனே. (௮௭)

அழுகே னின்பா லன்பா மனமா யழல்சேர்ந்த
மெழுகே யன்னார் மின்னார் பொன்னார் கழல்கண்டு
தொழுதே யுன்னைத் தொடர்ந்தா ரோடுந் தொடராதே
பழுதே பிறந்தே னென்கொண் டுன்னைப் பணிகேனே. (௮௮)

---

(௮௩) செடி-பாவம்; கடியேன்-கருமையுடையேன் (குரூரன்).(௮௪) பாண் - பாழ்; ஏண் - பெருமை; நாண் - வெட்கம்; எழுகேன் - உய்வேன். (௮௫) பறைந்தேன் - பேசினேன்; புறம் - வெளி; அறவே - (பிறவி) அறும்படியாக; சிறவு - சிறத்தல். (௮௭) போரா - செல்லுதற்கரிய; ஊர்ஆ - ஊர்ப்பசுக்கள்; மிலைக்க - போர்செய்ய; குருட்டுஆ - குருட்டுப்பசு; மிலைத்தாங்கு - போர் செய்தாற்போல; ஆராய் - உரிமையுடையேனாகி. (௮௮) தொடர்ந்தார் - பின்பற்றித் தொடர்ந்த அடியார்; பழுதே - வீணே.

பணிவார் பிணிதீர்த் தருளிப் பழைய வடியார்க்குன்
அணியார் பாதங் கொடுத்தி யதுவு மரிதென்றால்
திணியார் மூங்கி லனையேன் வினையைப் பொடியாக்கித்
தணியார் பாதம் வந்தொல்லை தாராய் பொய்தீர் மெய்யானே. (௪௯)

யானே பொய்யென் னெஞ்சும் பொய்யென் னன்பும்பொய்
ஆனால் வினையே னழுதா லுன்னைப் பெறலாமே
தேனே யமுதே கரும்பின் றெளிவே தித்திக்கும்
மானே யருளா யடியே னுனைவந் துறுமாறே. (௯௰)

(௯௰) அழுதால் பெறலாம்–அன்பினாலே உளங்கசிந்துருகிக்கண்ணீர் விட்டழுதால் அடையலாம். அஃதெவ்வாறெனின், தாயானவள் தன்குழந்தை எத்தகைய குற்றத்தைச்செய்யினும் அது அழுமாயின் அவள் சகியாள். அதுபோல கருவிகரணங்கள் யாவும் நைந்துருகி அன்பே வடிவா யழுதால் அவனும் அவளும் சகியார்களாதலால் இலேசாக அவனைப் பெறலாமென்பது அடிகளார் கருத்தாம். இதனால் மாயாகாரியமாகிய கரணங்கள்யாவும் பொய், கேவலம் ஞானத்தினாலேயே வீட்டை யடையலாமென்பது வீணும். அன்பு கலந்த ஞானமே உய்யும் நெறியாகும். "சிவமே அன்பு அன்பே சிவம்." ஆதலின் ஞானங்கனிந்த நலமாகிய அன்பே சிவநெறியாம். இதையே **செம்மை நலம்** என்று மற்றோரிடத்தில் சுவாமிகள் கூறியுள்ளார். அன்பு முதிரமுதிர உபாசிப்பவன் சொரூபமுழுதும் கருவிகரணங்களோடு அன்பு மயமாய்விடும். அப்போது நான் என்னும் அறிவு அடியோடு நழுவிப்போக முன்னிலையாயிருந்த சொரூபமும் நழுவிவிடும். பிறகு தன்மை முன்னிலையற்ற ஏகசொரூபமாய் (அகண்டமாய்) யாவும் விளங்கும். அதுவே பிரம்மானந்தம். தற்போதத்தால் விளையுந்தீங்கை வேரோடழிப்பதும் இவ்வன்பே. இதுகாரணமாக உண்டாகும் அழுகையே சிவத்தைப் பெறச்செய்யும். இவ்வன்பைக் கைவிட்டுக் கேவலம் ஞானத்தையே பேணுதல் தவக்குறைவாம். ஞானம் வித்தும், அன்பு அதன் முளையுமாமென்பது சுவாமிகள் தீர்மானம். ஆதலாற்றான் சாதனசதுஷ்டயம் கைவரப் பெற்ற பின்னரும் தெய்வ வழிபாடாகிய ஞானச்சரியையாதிகள் நான்கும் அவசியம் வேண்டற்பாற்றென்று வைதிக சைவ **சமாசம்** பகரும். "நான்கு சாதனமு மோர்ந்திட்டு ஆன நெறியாஞ் சரியையாதி சோபானமுறாறு" என்றதும் இக்கருத்துபற்றியே. இதுவே வைதிக சைவர்களுக்கும் போலி வேதாந்திகளுக்குமுள்ள வேற்றுமை.

௧௦ - வது ஆனந்தாதீதம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மாறி லாதமாக் கருணை வெள்ளமே
வந்து முந்திநின் மலர்கொ டாளிணை
வேறி லாப்பதப் பரிசு பெற்றநின்
மெய்மை யன்பருன் மெய்மை மேவினார்
ஈறி லாதநீ யெளியை யாகிவந்
தொளிசெய் மானுட மாக நோக்கியும்
கீறி லாதநெஞ் சுடைய நாயினேன்
கடைய னாயினேன் பட்ட கீழ்மையே. (௯௧)

மையி லங்குநற் கண்ணி பங்கனே
வந்தெ னைப்பணி கொண்ட பின்மழுக்
கையி லங்குபொற் கிண்ண மென்றலால்
அரியை யென்றுனைக் கருது கின்றிலேன்
மெய்யி லங்குவெண் ணீற்று மேனியாய்
மெய்மை யன்பருன் மெய்மை மேவினார்
பொய்யி லங்கெனைப் புகுத விட்டுநீ
போவ தோசொலாய் பொருத்த மாவதே. (௯௨)

பொருத்த மின்மையேன் பொய்மை யுண்மையேன்
போத வென்றெனைப் புரிந்து நோக்கவும்
வருத்த மின்மையேன் வஞ்ச முண்மையேன்
மாண்டி லேன்மலர்க் கமல பாதனே
அரத்த மேனியா யருள்செ யன்பரும்
நீயு மங்கெழுந் தருளி யிங்கெனை
இருத்தி னாய்முறை யோவெ னெம்பிரான்
வம்ப னேன்வினைக் கிறுதி யில்லையே. (௯௩)

(௯௧) பதப்பரிசுபெற்ற - பக்குவத்தன்மை வாய்ந்த; மெய்மை (பின்னையது) - உண்மைநிலை ; கீறு-பிளத்தல்; பட்டகீழ்மையே - உண்டாகிய தீவினைப்பயனோ. (௯௨) மழும் - மேன்மை; அரியை - அருமையுடையாய்; பொய்-அநித்தியமாகிய வுலகம். (௯௩) பொருத்தம்-தகுதி, இணக்கம்; போத-வருக; வருத்தம்-அநுதாபம்; அரத்தம்-

இல்லை நின்கழற் கன்ப தென்கணே
ஏல மேலுநற் குழலி பங்கனே
கல்லை மென்கனி யாக்கும் விச்சைகொண்
டென்னை நின்கழற் கன்ப னாக்கினாய்
எல்லை யில்லைநின் கருணை யெம்பிரான்
ஏது கொண்டுநா னேது செய்யினும்
வல்லை யேயெனக் கின்னு முன்கழல்
காட்டி மீட்கவும் மறுவில் வானனே. (௧௪)

வான நாடரு மறியொ ணாதநீ
மறையி லீறுமுன் றொடரொ ணாதநீ
ஏனை நாடருந் தெரியொ ணாதநீ
என்னை யின்னிதா யாண்டு கொண்டவா
ஊனை நாடக மாடு வித்தவா
உருகி நானுனைப் பருக வைத்தவா
ஞான நாடக மாடு வித்தவா
நைய வையகத் துடைய விச்சையே. (௧௫)

விச்ச தன்றியே விளைவு செய்குவாய்
விண்ணு மண்ணக முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்ச கப்பெரும்
புலைய னேனையுன் கோயில் வாயிலில்
பிச்ச னாக்கினாய் பெரிய வன்பருக்
குரிய னாக்கினாய் தாம்வ ளர்த்ததோர்
நச்சு மாமர மாயி னுங்கொலார்
நானு மங்ஙனே யுடைய நாதனே. (௧௬)

செவ்வரத்தம்பூ; அங்கு-மஹாசிவலோகம். (௧௪) என்கண் இல்லை—; ஏலம் ஏலும் - மயிர்ச்சாந்து பொருந்திய; மீட்கவும் வல்லை - திரும்பவும் சக்தியுடையை; மறு-மாசு. (௧௫) ஈறும்முன் - முடியும் அடியும்; ஏனை நாடு - பூமிபாதலம்; ஊனை நாடகம் - ஆன்மாக்களைப் பிறப்பிறப்புக்களில் அழுத்தும் திருக்கூத்து; ஞான நாடகம் - அவர்களை அவற்றினின்றும் எடுத்து முத்தியில்விடும் தாண்டவம்; இச்சை நைய- ஆசை ஒழிய. (௧௬) வைச்சு வாங்குவாய்-காத்து அழிப்பாய்; நச்சுமாமரம் - பெரிய எட்டிமரம்.

உடைய நாதனே போற்றி நின்னலால்
பற்று மற்றெனக் காவ தொன்றினி
உடைய னேபணி போற்றி யும்பரார்
தம்ப ராபரா போற்றி யாரினுங்
கடைய னாயினேன் போற்றி யென்பெருங்
கருணை யாளனே போற்றி யென்னைநின்
அடிய னாக்கினாய் போற்றி யாதியும்
அந்த மாயினாய் போற்றி யப்பனே. (கூஎ)

அப்ப னேயெனக் கமுத னேயா
னந்த னேயக நெகவள் ளூறுதேன்
ஒப்ப னேயுனக் குரிய வன்பரில்
உரிய னாயுனைப் பருக நின்றதோர்
துப்ப னேசுடர் முடிய னேதுணை
யாள னேதொழும் பாள ரெய்ப்பினில்
வைப்ப னேயெனை வைப்ப தோசொலாய்
நைய வையகத் தெங்கண் மன்னனே. (கூஅ)

மன்ன வெம்பிரான் வருக வென்னெனை
மாலு நான்முகத் தொருவன் யாரினும்
முன்ன வெம்பிரான் வருக வென்னெனை
முழுதும் யாவையு மிறுதி யுற்றநாள்
பின்ன வெம்பிரான் வருக வென்னெனைப்
பெய்க ழற்கணன் பாயெனா வினால்
பன்ன வெம்பிரான் வருக வென்னெனைப்
பாவ நாசநின் சீர்கள் பாடவே. (கூகூ)

பாட வேண்டுநான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்

(கூஎ) பணி - கட்டளையிடு. (கூஅ) வள் ஊறு - வளமாகச் சுரக்கின்ற; துப்பனே - ஞானசொரூபனே; வைப்பனே - சேமநிதியே. (கூகூ) மன்ன - தலைவனே; எனை வருக என்—; முன்ன - முன்னவனே; பின்ன - பின்னவனே; பன்ன - புகழ.

காட வேண்டுநான் போற்றி யம்பலத்
தாடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டுநான் போற்றி யிப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டுநான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே. (ஈ)

திருச்சிற்றம்பலம்.

(ஈ) பாடவேண்டும் - காமுகன் எப்பொழுதும் வனிதையைப் பாடுவதுபோல் தேவரீரைப் பாட எனக்கு விரைவும் அவாவும் மிக்குடைமை வேண்டும். கழல்போது - திருவடித் தாமரை; கூடு - உடம்பு; மெய்யர் - மெய்யன்பர், மெய்ப்பொருளை யுணர்ந்தவர்.

நீத்தல் விண்ணப்பம்.

பிரபஞ்ச வைராக்கியம்.

எ - து. பிரபஞ்சத்தை அசத்தேனக் காட்டி யருளிய முறைமை.

உத்தரகோசமங்கையிலருளிச் செயப்பட்டது.

கட்டளைக் கலித்துறை.

திருச்சிற்றம்பலம்.

கடையவ னேனைக் கருணையி னூற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின்றோல்
உடையவ னேமன்னு முத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேனெம்பி ரானென்னைத் தாங்கிக்கொள்ளே

கொள்ளேர் பிளவக லாத்தடங் கொங்கையர் கொவ்வைச்செவ்வாய்
விள்ளே னெனினும் விடுதிகண் டாய்நின் விழுத்தொழும்பின்
உள்ளேன் புறமல்லே னுத்தர கோசமங் கைக்கரசே
கள்ளே னொழியவுங் கண்டுகொண் டாண்டதெக் காரணமே. (உ)

(க) கலந்து - வலியவந்தடைந்து; விட்டிடுதி - விட்டுவிடு கின்றாயோ; விறல்-வலி. (உ) கொள் ஏர் பிளவு அகலா-கொள்ளின் அழகாகிய பிளவளவும் நீங்குதலில்லாத, அதாவது மிகவும் நெருங் கின; தடம் - மலை; விள்ளேன் - விட்டுநீங்கேன்; விழு - மேலாகிய; கண்டு - (நிலைமையைப்) பார்த்து. (இந்தப்பாசுரத்திலும் இதன்கீழ் வரும் பாசுரங்களினும் சுவாமிகள் தம்மை முழு காமுகனாகவும், இழிந்தோனாகவுங் கூறிக்கொண்டது தம்பொருட்டன்று. உலகை யீடேற்றும் வண்ணம் அவதரித்த அருட்குரவராதலின் இவரது

காருறு கண்ணிய ரைம்புல னாற்றங் கரைமரமாய்
வேருறு வேனை விடுதிகண் டாய்விளங் குந்திருவா
ரூருறை வாய்மன்னு முத்தர கோசமங் கைக்கரசே
வாருறு பூண்முலை யாள்பங்க வென்னை வளர்ப்பவனே. (௩)

வளர்கின்ற நின்கரு ணைக்கையில் வாங்கவு நீங்கியிப்பால்
மிளிர்கின்ற வென்னை விடுதிகண் டாய்வெண் மதிக்கொழுந்தொன்
றொளிர்கின்ற நீண்முடி யுத்தர கோசமங் கைக்கரசே
தெளிகின்ற பொன்னு மின்னும் மன்ன தோற்றச் செழுஞ்சுடரே.

செழிகின்ற தீப்புகு விட்டிலிற் சின்மொழி யாரிற்பன்னாள்
விழுகின்ற வென்னை விடுதிகண் டாய்வெறி வாயறுகால்
உழுகின்ற பூமுடி யுத்தர கோசமங் கைக்கரசே
வழிநின்று நின்னரு ளாரமு தூட்ட மறுத்தனனே. (௫)

மறுத்தனன் யானுன் னருளறி யாமையி லென்மணியே
வெறுத்தெனை நீவிட் டிடுதிகண் டாய்வினை யின்றொகுதி
ஒறுத்தெனை யாண்டுகொ ளுத்தர கோசமங் கைக்கரசே
பொறுப்பரன் றேபெரி யோர்சிறு நாய்கடம் பொய்யினையே. (௬)

பொய்யவ னேனைப் பொருளென வாண்டொன்று பொத்திக்கொண்ட
மெய்யவ னேவிட் டிடுதிகண் டாய்விட முண்மிடற்று
மையவ னேமன்னு முத்தர கோசமங் கைக்கரசே
செய்யவ னேசிவ னேசிறி யேன்பவந் தீர்ப்பவனே. (௭)

திருவாக்குகள் யாவும் ஆன்மாக்கள் உய்தற்குரிய அருண்மொழி களேயாம். அவற்றிலுள்ள இழிவுகள் அவர் மாட்டணுத்துணையும் எய்தப்பெறாவென்பது ஒருதலை. இவ்வுண்மை சிவபுண்ணிய முதிர் வினார்க்கே தோன்றும். சப்தார்த்த ஞானமுடையார்க்குவிளங்காது). (௩) கார்உறு - கருமை மிகுந்த; வேர் உறுவேனை - வேர் ஊன்று நிறவென்னை; வார்உறு - கச்சணிந்த. (௪) வாங்கவும் - வளைக்கவும்; இப்பால் - இவ்விடம்; மிளிர் - விளங்கு; மதிக்கொழுந்து - இளஞ் சந்திரன். (௫) விட்டில் - விட்டிற்பறவை; சின் - சில், அற்பம்; அறு கால் - வண்டுகள்; வழி - கெட்டுப்போகும் வழி. (௬) ஒறுத்து - தழித்து. (௭) ஒன்று பொத்திக்கொண்ட - ஒருபொருளை (முத் தியை) மறைத்துக்கொண்ட; மை - கருமை; பவம் - பிறவி, பாவம்.

தீர்க்கின்ற வாறென் பிழையைநின் சீருரு ளென்கொலென்று
வேர்க்கின்ற வென்னை விடுதிகண் டாய்விர வார்வெருவ
ஆர்க்கின்ற தார்விடை யுத்தர கோசமங் கைக்கரசே
ஈர்க்கின்ற வஞ்சொடச் சம்வினை யேனை யிருதலையே. (அ)

இருதலைக் கொள்ளியி னுள்ளெறும் பொத்து நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதிகண் டாய்வியன் மூவுலகுக்
கொருதலை வாமன்னு முத்தர கோசமங் கைக்கரசே
பொருதலை மூவிலை வேல்வல னேந்திப் பொலிபவனே. (கூ)

பொலிகின்ற நின்றாள் புகுதப்பெற் றாக்கையைப் போக்கப்பெற்று
மெலிகின்ற வென்னை விடுதிகண் டாயளி தேர்விளரி
ஒலிகின்ற பூம்பொழி லுத்தர கோசமங் கைக்கரசே
வலிநின்ற திண்சிலை யாலெரித் தாய்புர மாறுபட்டே. (ய)

மாறுபட் டஞ்சென்னை வஞ்சிப்ப யானுன் மணிமலர்த்தாள்
வேறுபட் டேனை விடுதிகண் டாய்வினை யேன்மனத்தே
ஊறுமட் டேமன்னு முத்தர கோசமங் கைக்கரசே
நீறுபட் டேயொளி காட்டும்பொன் மேனி நெடுந்தகையே. (கக)

நெடுந்தகை நீயென்னை யாட்கொள்ள யானைம்புலன்கள்கொண்டு
விடுந்தகை யேனை விடுதிகண் டாய்விர வார்வெருவ
அடுந்தகை வேல்வல்ல வுத்தரகோசமங் கைக்கரசே
கடுந்தகை யேனுண் ணுந் தெண்ணீ ரமுதப் பெருங்கடலே. (கஉ)

கடலினு ணாய்நக்கி யாங்குன் கருணைக் கடலினுள்ளம்
விடலரி யேனை விடுதிகண் டாய்விட லில்லடியார்

(அ) வேர்க்கின்ற - மனம் புழுங்குகின்ற; விரவார் - பகைவர்; தார் - கிண்கிணிமாலை; அஞ்சு - ஐம்புலவாசை; இருதலை - இரண்டுபக்கம். (கூ) வியன் - பெருமை; பொருதலை - போர்செய்யும் முனை; வலன்- வலக்கை. (ய) போக்கப்பெற்று - வீணிலே கழிக்கப்பெற்று; அளி - வண்டுகள்; விளரிஒலி - விளரிப்பண்; மாறுபட்டு - பகைத்து. (கக) அஞ்சு - பஞ்சேந்திரியங்கள்; ஊறும்மட்டே - சுரக்குந்தேனே; நெடுந்தகை - பெருங்குணத்தையுடையவன். (கஉ) விடும்-(உன்னை விட்டு) நீங்கும்; விரவார் - பகைவர்; வேல் - வேற்போர்; கடுந்தகை- தீக்குணம். (கங) கடலினுள் நாய் - ; விடல்அரியேன் - விடுதலில்

உடவில மேயன்னு முத்தர கோசமங் கைக்கரசே
மடலின்மட் டேமணி யேயமு தேயென் மதுவெள்ளமே. (கங)

வெள்ளத் தனுவற் றியாங்குன் னருள்பெற்றுத் துன்பத்தின்றும்
விள்ளக்கி லேனை விடுதிகண் டாய்விரும் பும்மடியார்
உள்ளத்துள் ளாய்மன்னு முத்தர கோசமங் கைக்கரசே
கள்ளத்து ளேற்கரு ளாய்களி யாத களியெனக்கே. (கச)

களிவந்த சிந்தையொ டுன்கழல் கண்டுங் கலந்தருள
வெளிவந்தி லேனை விடுதிகண் டாய்மெய்ச் சுடருக்கெல்லாம்
ஒளிவந்த பூங்கழ லுத்தர கோசமங் கைக்கரசே
எளிவந்த வெந்தைபி ரானென்னை யாளுடை யென்னப்பனே. (கரு)

என்னையப் பாவஞ்ச லென்பவ ரின்றிநின் றெய்த்தலைந்தேன்
மின்னையொப் பாய்விட் டிடுதிகண் டாயுவ மிக்கின்மெய்யே
உன்னையொப் பாய்மன்னு முத்தர கோசமங் கைக்கரசே
என்னையொப் பாயெனக் கத்தனொப் பாயென் னரும்பொருளே.

பொருளே தமியேன் புகலிட மேநின் புகழிகழ்வார்
வெருளே யெனைவிட் டிடுதிகண் டாய்மெய்ம்மை யார்விழுங்கும்
அருளே யணிபொழி லுத்தர கோசமங் கைக்கரசே
இருளே வெளியே யிகபர மாகி யிருந்தவனே. (கள)

இருந்தென்னை யாண்டுகொள் விற்றுக்கொ ளொற்றிவை யென்னி
விருந்தின னேனை விடுதிகண் டாய்மிக்க நஞ்சமுதா [னல்லால்
அருந்தின னேமன்னு முத்தர கோசமங் கைக்கரசே
மருந்தின னேபிற விப்பிணிப் பட்டு மடங்கினர்க்கே. (கஅ)

மடங்கவென் வல்வினைக் காட்டைநின் மன்னருட் டீக்கொளுவும்
விடங்கவென் றன்னை விடுதிகண் டாயென் பிறவியைவே

வாதவன்; விடல்இல் - விடுதலில்லாத; இல்லமே - வீட்டின் கண்ணே; மடல் - பூவிதழ். (கச) விள்ளக்கிலேனை-நீங்காதவென்னை; களியாதகளி - எப்பொழுதும் அனுபவிக்காத பெருங்களிப்பு. (கரு) வந்த - பொருந்திய; எளிவந்த - எளிதாயெழுந்தருளிவந்த. (கசு). உன்னையொப்பாய் - உன்னைநீயே நிகர்த்தி. (கள) வெருளே - பயங்கரனே; மெய்ம்மையார் - மெய்யன்பர்; வெளி - ஒளி. (கஅ) ஒற்றிவை - அடமானம் வைத்துக்கொள்; விருந்தினன் - புதியன்..

ரொடுங்களேந் தாண்டுகொ ளுத்தர கோசமங் கைக்கரசே
கொடுங்கரிக் குன்றுரித் தஞ்சுவித் தாய்வஞ்சிக் கொம்பினையே. (கக)

கொம்பரில் லாக்கொடி போல்ல மந்தனன் கோமளமே
வெம்புகின் றேனை விடுதிகண் டாய்விண்ணர் நண்ணுகில்லா
உம்பருள் ளாய்மன்னு முத்தர கோசமங் கைக்கரசே
அம்பர மேநில னேயனல் காலொடப் பானவனே. (உ0)

ஆனைவெம் போரிற் குறுந்தூ றெனப்புல னலைப்புண்
டேனையெந் தாய்விட் டிடுதிகண் டாய் வினை யேன்மனத்துத்
தேனையும் பாலையுங் கன்னலை யும்மமு தத்தையுமொத்
தூனையு மென்பினை யும்முருக் காநின்ற வொண்மையனே. (உக)

ஒண்மைய னேதிரு நீற்றையுத் தூளித் தொளிமிளிரும்
வெண்மைய னேவிட் டிடுதிகண் டாய்மெய் யடியவர்கட்
கண்மைய னேயென்றுஞ் சேயாய் பிறர்க்கறி தற்கரிதாம்
பெண்மைய னேதொன்மை யாண்மை யனேயலிப் பெற்றியனே.

பெற்றது கொண்டு பிழையே பெருக்கிச் சுருக்குமன்பின்
வெற்றடி யேனை விடுதிகண் டாய்விடி லோகெடுவேன்
மற்றடி யேன்றன்னைத் தாங்குந ரில்லையென் வாழ்முதலே
உற்றடி யேன்மிகத் தேறிநின் றேனெனக் குள்ளவனே. (உ௩)

உள்ளன வேநிற்க வில்லன செய்யுமை யற்றுழனி
வெள்ளனலேனை விடுதிகண் டாய்வியன் மாத்தடக்கைப்
பொள்ளனல் வேழத் துரியாய் புலனின்கட் போதலொட்டா
மெள்ளன வேமொய்க்கு நெய்க்குடந் தன்னை யெறும்பெனவே. ()

(கக) மடங்க - அழிய; விடங்க - அழகனே. (உ0) கொம்பர் - கொழு கொம்பு; அலமந்தனன் - சுழன்றேன்; உம்பர் - மேலுலகம். (உக) குறும் தூறென - சிறுசெடிபோல. (உஉ) ஒண்மை - ஒட்பம், நன்மை, அழகு முதலியன. (உ௩) பெற்றது - பெற்றஉடல்; வெற்றடியேன் - வெறுமையாகிய அடியேன், அடிமைத்தனமில்லாதவன்; உற்று - மிகவும்; உள்ளவனே - உள்ளிருப்பவனே. (உச) துழனிவெள்ளன் - ஒலியையுடைய வெள்ளப்பெருக்கில் ஆழ்ந்தவன்; அல்லேனை - (உனக்குரியன்) அல்லாதவென்னை; வியன் - பெரிய; மா - அழகிய; தடக்கை - நீண்ட துதிக்கை; பொள்ளல் - தொளை; நல் - சிறந்த. (உரு) நாங்கூழ் - நாகப்பூச்சி; கடி - மணம்;

எறும்பிடை நாங்கூ ழெனப்புல னாலரிப் புண்டலந்த
வெறுந்தமி யேனை விடுதிகண் டாய்வெய்ய கூற்றொடுங்க
உறுங்கடிப் போதவை யேயுணர் வுற்றவ ரும்பரும்பர்
பெறும்பத மேயடி யார்பெய ராத பெருமையனே. (உரு)

பெருநீ றறச்சிறு மீன்றுவண் டாங்கு நினைப்பிரிந்த
வெருநீர் மையேனை விடுதிகண் டாய்வியன் கங்கைபொங்கி
வருநீர் மடுவுண் மலைச்சிறு தோணி வடிவின்வெள்ளைக்
குருநீர் மதிபொ தியுஞ்சடை வானக் கொழுமணியே. (உசு)

கொழுமணி யேர்நகை யார்கொங்கைக் குன்றிடைச் சென்றுகுன்றி
விழுமடி யேனை விடுதிகண் டாய்மெய்ம் முழுதுங்கம்பித்
தழுமடி யாரிடை யார்த்துவைத் தாட்கொண் டருளியென்னைக்
கழுமணி யேயின்னுங் காட்டுகண் டாய்நின் புலன்கழலே. (உஎ)

புலன்கடி கைப்பிக்க யானுந்திகைத் திங்கொர் பொய்ந்நெறிக்கே
விலங்குகின் றேனை விடுதிகண் டாய்விண்ணு மண்ணுமெல்லாம்
கலங்கமுந் நீர்நஞ் சமுதுசெய் தாய்கரு ணாகரனே
துலங்குகின் றேனடி யேனுடை யாயென் றொழுகுலமே. (உஅ)

குலங்களைந் தாய்களைந் தாயென்னைக் குற்றங்கொற் றச்சிலையாம்
விலங்கலெந் தாய் விட் டிடுதிகண் டாய்பொன்னின் மின்னுகொன்
அலங்கலந் தாமரை மேனியப் பாவொப்பி லாதவனே [றை
மலங்களைந் தாற்சுழல் வன்றயி ரிற்பொரு மத்துறவே. (உகூ)

போது - தாமரைமலர்; உறும் - சென்ற; உம்பர் (முன்னையது) - தேவர்கள்; உம்பர்(பின்னையது) - மேல்; எய்-அடைந்த. (உசு) அற-வற்ற; துவண்டாங்கு - வாடினாற்போல; வெரு - அச்சம்; நீர்மை - குணம்; மலை - தடுமாற்றம்; வடிவின் - உருவம்போல; வெள்ளை குருநீர் - வெண்ணிறத்தன்மை; பொதியும் - தவழும்; (உஎ) குன்றி-மெலிந்து; ஆர்த்துவைத்து - பொருத்திவைத்து; கழுமணி - கழுவியமாணிக்கம்; புலன்கழல் - ஞானமாகிய திருவடி. (உஅ) திகைப்பிக்க - பிரமிக்கும்படிச்செய்ய; துலங்கு - கலங்கு. (உகூ) குலம் களைந்தாய் - ஜாதிப்பற்றை அகற்றினவனே; கொற்றம் - வெற்றி; சிலை - வில்; விலங்கல் - மலை, மேருமலை; மலங்கள் ஐந்து - ஐந்து மலங்கள், அவை ஆணவமலம், கன்மமலம் மாயாமலம், மாயேயமலம், திரோதாயிமலம் என ஐவகைப்படும். அவற்றுள் ஆணவம் -

மத்துறு தண்டயி ரிற்புலன் றீக்கது வக்கலங்கி
வித்துறு வேனை விடுதிகண் டாய்வெண்ட லைமிலைச்சிக்
கொத்துறு போது மிலைந்துகுடர்நெடு மாலைசுற்றித்
தத்துறுநீறுட னாரச்செஞ் சாந்தணி சச்சையனே. (௬௰)

சச்சைய னேமிக்க தண்புனல் விண்கா லிலநெருப்பாம்
விச்சைய னேவிட் டிடுதிகண் டாய்வெளி யாய்கரியாய்
பச்சைய னேசெய்ய மேனிய னேயொண் படவரவக்
கச்சைய னேகடந் தாய்தடந் தாள வடற்கரியே. (௬க)

அடற்கரி போலைம் புலன்களுக் கஞ்சி யழிந்தவென்னை
விடற்கரி யாய்விட் டிடுதிகண் டாய்விழுத் தொண்டர்க்கல்லால்
தொடற்கரி யாய்சுடர் மாமணி யேசுடு தீச்சுழலக்
கடற்கரி தாயெழு நஞ்சமு தாக்குங் கறைக்கண்டனே. (௬உ)

ஆன்மாவின் வியாபகஅறிவை அணுத்தன்மை செய்யும், அதன் தொழிலை முழுதும் மறைக்கும், அதன்பேரின்பத்துக்குத் தாரகமாயுள்ள திருவருளையும் மறைக்கும், அதற்குத்தேகாதிப் பிரபஞ்சத்திலே விருப்பத்தையுண்டுபண்ணும், அதற்குக் கன்மமலத்திலே இச்சையை எழுப்பும். **கன்மம்** - ஆன்மாவுக்குப் பொய்ம்மை செய்கின்ற சுகதுக்கங்களைத் தோற்றுவிக்கும், ஆன்மா ஆணவமலத்தைப் பொருந்தி மலத்தொழிலிலிருக்கிறபோது அத்தொழில்மயமாயுமிருக்கும். **மாயை** - ஆன்மாவுக்குச் சுகதுக்கங்கள் தோன்றுதற்கு அநுகூலமாகத் தநுகரண புவனபோகங்களைத் தோற்றுவிக்கும். **மாயேயம்** - மாயாகாரியங்களாகிய தநுகரண புவன போகங்களாம். **திரோதாயி** - பெத்தகாலத்தில் ஆன்மாவோடு மறைந்துநின்று ஆணவமலம் நசிக்கும்படிக் காரியப்படுத்தும்; சுழல்வன் - சுழல்வேன், அது நிலையில்லாத கொள்ளிவட்டமும் காற்றாடியும்போல பலமுறை சுழற்சியுற்று ஜனனமரணத்தைப்பொருந்தி பூமி, நரகம், சுவர்க்கங்களிலே போக்குவரவுடைத்தாய்த்திரிவது. இவ்வாறு ஐந்து மலங்களும் ஆன்மாவைப்பந்தித்தலால் அவற்றைத்தம் மேலேற்றிக் கூறியது உபசாரமும் உலகுய்யும் நெறிகாட்டும் பொருட்டுமாம். (௬௰) புலன்தீ - புலன்களாகிய நெருப்பு; கதுவ - பற்ற; வித்துறு வேனை - விதையாயிருக்கிற வென்னை; கொத்து உறுபோது - கொத்தாகிய கொன்றைமலரை; மிலைந்து - அணிந்து; தத்துஉறு - பரவிய; சாந்து - சந்தனம்; சச்சையனே - சத்தாயுள்ளவனே, மெய்ப்பொருளே. (௬க) விச்சை - வித்தை; அடல் - வலி. (௬உ).

கண்டது செய்து கருணைமட் டுப்பருகிக் களித்து
மிண்டுகின் றேனை விடுதிகண் டாய்நின் விரைமலர்த்தாள்
பண்டுதந் தாற்போற் பணித்துப் பணிசெயக் கூவித்தென்னைக்
கொண்டெனெந் தாய்களை யாய்களை யாய குதுகுதுப்பே. (௧௩)

குதுகுதுப் பின்றிநின் றென்குறிப் பேசெய்து நின்குறிப்பில்
விதுவிதுப் பேனை விடுதிகண் டாய்விரை யார்ந்தினிய
மதுமதுப் போன்றென்னை வாழைப் பழத்தின் மனங்கனிவித்
தெதிர்வதெப் போது பயில்விக் கயிலைப் பரம்பரனே. (௧௪)

பரம்பர னேநின் பழவடி யாரொடு மென்படிறு
விரும்பர னேவிட் டிடுதிகண்டாய் மென் முயற்கறையின்
அரும்பர நேர்வைத் தணிந்தாய் பிறவியை வாயரவம்
பொரும்பெரு மான்வினை யேன்மன மஞ்சிப் பொதும்புரவே. (௧௫)

பொதும்புறு தீப்போற் புகைந்தெரி யப்புலன் றீக்கதுவ
வெதும்புறு வேனை விடுதிகண் டாய்விரை யார்நறவம்
ததும்புமந் தாரத்திற் றாரம் பயின்றுமந் தம்முரல்வண்
டதும்புங் கொழுந்தே னவிர்சடை வானத் தடலரைசே. (௧௬)

அரைசே யறியாச் சிறியேன் பிழைக்கஞ்ச லென்னினல்லால்
விரைசேர் முடியாய் விடுதிகண் டாய்வெண் ணகைக்கருங்கண்
திரைசேர் மடந்தை மணந்த திருப்பொற் பதப்புயங்கா
வரைசேர்ந் தடர்ந்தென்ன வல்வினை தான்வந் தடர்வனவே. (௧௭)

சந்தி - உடலைவத்தி. (௧௩) மட்டு - தேன்; மிண்டுகின்றேனை - மதங்கொண்டு திரிகின்ற என்னை; பணித்து - கொடுத்து; கூவித்து - கூவி அழைத்து; கொண்டு - ஏற்றுக்கொண்டு; களை ஆய - அயர் வாகிய; குதுகுதுப்பு - வெதுவெதுப்பு. (௧௪) குறிப்பு - நினைப்பு; விதுவிதுப்பேனை - விருப்பஞ்செய்கின்ற என்னை; எதிர்வது - எதிர்ப்படுவது; பயில் - சொல்; விக்கயிலை - அறிவுருவாகிய கயிலை மலை. (௧௫) படிறு - பொய்யொழுக்கம்; விரும்பு அரனே—; முயற் கறையின் அரும்பு - மதிக்கொழுந்து; அர - அரா, பாம்பு; ஐவாய் அரவம்-ஐந்தலை நாகம்; பொரும் - போர் செய்கின்றது; பொதும் பர - பொந்தையடைய. (௧௬) கதுவ - பற்ற; வெதும்புறு - வெப்பமடைகின்ற; நறவம் - தேன்; தாரம் - வல்லிசை; முரல்- சத்தம்; அதும்பும் - அழுந்தும்; அவிர் - பிரகாசிக்கிற; வானம் -

அடர்புல னானிற் பிரிந்தஞ்சி யஞ்சொனல் லாரவர்தம்
விடர்விட லேனை விடுதிகண் டாய்விரிந் தேயெரியுஞ்
சுடரனை யாய்சுடு காட்டர சேதொழும் பர்க்கமுதே
தொடர்வரி யாய்தமி யேன்றனி நீக்குந் தனித்துணையே. (௩௮)

தனித்துணை நீநிற்க யான்றருக் கித்தலை யானடந்த
வினைத்துணை யேனை விடுதிகண் டாய்வினை யேனுடைய
மனத்துணை யேயென்றன் வாழ்முத லேயெனக் கெய்ப்பில்வைப்பே
தினைத்துணை யேனும் பொறேன்றுய ராக்கையின் றிண்வலையே. ( )

வலைத்தலை மானன்ன நோக்கியர் நோக்கின் வலையிற்பட்டு
மிலைத்தலைந் தேனை விடுதிகண் டாய்வெண் மதியினொற்றைக்
கலைத்தலை யாய்கரு ணாகர னேகயி லாயமென்னும்
மலைத்தலை வாமலை யாண்மண வாளவென் வாழ்முதலே. (௪௰)

முதலைச்செவ் வாய்ச்சியர் வேட்கை வெந்நீரிற் கடிப்பமூழ்கி
விதலைச்செய் வேனை விடுதிகண் டாய்விடக் கூன்மிடைந்த
சிதலைச்செய் காயம் பொறேன்சிவ னேமுறை யோமுறையோ
திதலைச்செய் பூண்முலை மங்கைபங் காவென் சிவகதியே. (௪௧)

கதியடி யேற்குன் கழறந் தருளவு மூன்கழியா
விதியடி யேனை விடுதிகண் டாய்வெண் டலைமுழையில்
பதியுடை வாளரப் பார்த்திறை பைத்துச் சுருங்கவஞ்சி
மதிநெடு நீரிற் குளித்தொளிக் குஞ்சடை மன்னவனே. (௪௨)

பரமாகாசம். (௩௭) நகை - பல்; திரைசேர் மடந்தை - கங்காதேவி; வரை - மலை; அடர்வன - வருத்துகின்றன. (௩௮) நிற்பிரிந்து - நின்னைப்பிரிந்து; அம்சொல் நல்லார் - அழகிய சொல்லினையுடைய மாதர்; விடர் - பிளப்பு, அதாவது பெண்குறி. (௩௯) பொறேன் - ஆற்றேன்; வலை - வலைப்பிணிப்பு. (௪௰) வலைத்தலை - வலையினிடத் தகப்பட்ட; மிலைத்து - பிரமித்து. (௪௧) செவ்வாய்ச்சியர் - சிவந்த அதரத்தையுடைய மாதர்; வெந்நீர்-கொடுங்குணம்; விதலைச்செய் - நடுக்கஞ்செய்; விடக்கு - தசை; ஊன் - நிணம்; மிடைந்த - நெருங்கிய; சிதலை - நோய்; திதலைச்செய் - தேமல்படர்ந்த. (௪௨) கதி - புகலிடம், ஆதரவு; ஊன்-உடம்பு; வெண்தலை முழையில் - வெள்ளியதலையாகிய வளையில்; பதிஉடை - பொருந்துதலையுடைய; இறை - சிறிது; பைத்து - படம்விரித்து. (௪௩) ஒன்றும் - சிறி

மன்னவ னேயொன்று மாறறி யாச்சிறி யேன்மகிழ்ச்சி
மின்னவ னேவிட் டிடுதிகண் டாய்மிக்க வேதமெய்ந்நூல்
சொன்னவ னேசொற் கழிந்தவ னேகழி யாத்தொழும்பர்
முன்னவ னேபின்னு மானவ னேயிம் முழுதையுமே. (சாஙு)

முழுதயில் வேற்கண் ணியரென்னு மூரித் தழன்முழுகும்
விழுதனை யேனை விடுதிகண் டாய்நின் வெறிமலர்த்தாள்
தொழுதுசெல் வானத் தொழும்பரிற் கூட்டிடு சோத்தெம்பிரான்
பழுதுசெய் வேனை விடேலுடை யாயுன்னைப் பாடுவனே. (சச)

பாடிற்றி லேன்பணி யேன்மணி நீயொளித் தாய்க்குப்பச்சூன்
வீடிற்றி லேனை விடுதிகண் டாய்வியந் தாங்கலறித்
தேடிற்றி லேன்சிவ னெவ்விடத் தானெவர் கண்டனரென்
றோடிற்றி லேன்கிடந் துள்ளுரு கேனின் றுழைத்தனனே. (சரு)

உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப்பழத் தீயினொப்பாய்
விழைதரு வேனை விடுதிகண் டாய்விடின் வேலைநஞ்சுண்
மழைதரு கண்டன் குணமிலி மானிடன் றேய்மதியன்
பழைதரு மாபர னென்றென் றறைவன் பழிப்பினையே. (சசு)

பழிப்பினின் பாதப் பழந்தொழும் பெய்தி விழப்பழித்து
விழித்திருந் தேனை விடுதிகண் டாய்வெண் மணிப்பணிலங்
கொழித்துமந் தாரமந் தாகினி நுந்தும்பந் தப்பெருமை
தழிச்சிறை நீரிற் பிறைக்கலஞ் சேர்தரு தாரவனே. (சஎ)

தம்; மாறு – கைம்மாறு; மகிழ்ச்சிமின் அவனே - ஆநந்தரூபியாகிய உமாதேவியை யுடையவனே; கழிந்தவனே - கடந்தவனே; முன்னவனே – எதிர்நிற்பவனே. (சச) முழுதுஅயில் – மிக்க கூர்மை; மூரித்தழல் - பெருநெருப்பு; விழுது - வெண்ணெய்; சோத்து - சோத்தம், அதாவது இழிந்தோர் செய்யும் அஞ்சலி. (சரு) பச்சூன் - பச்சதத்தசை; வீடிற்றிலேன் - விட்டு நீங்காத என்னை; உழைத்தனன் – வருந்தினேன். (சசு) உழை - மான்; ஈயின்-ஈச்கு; மழை - நீலமேகம். (சஎ) பழிப்புஇல் - பழிப்பற்ற; விழப்பழித்து - மிகவும் நிந்தித்து; வெள்மணி - வெண்மணி, அதாவது முத்து; பணிலம்-சங்கு; கொழித்து - ஒதுக்கி; மந்தாகினி - ஆகாயகங்கை; பந்தம் - அழகு; பெருமைதழி – பெருமையைக்கொண்ட; சிறைநீர் - தடுக்கப்பட்ட நீர்; பிறைக்கலம் - பிறையாகிய தோணி; தாரவனே -

தாரகை போலுந் தலைத்தலை மாலைத் தழலரப்பூண்
வீரவென் றன்னை விடுதிகண் டாய்விடி லென்னைமிக்கார்
ஆரடி யானென் னினுத்தர கோசமங் கைக்கரசின்
சீரடியா ரடியானென்று நின்னைச் சிரிப்பிப்பனே. (சஅ)

சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத் தொழும்பையு மீசற்கென்று
விரிப்பிப்ப னென்னை விடுதிகண் டாய்விடின் வெங்கரியின்
உரிப்பிச்சன் றோலுடைப் பிச்சனஞ் சுண்பிச்ச னூர்சுடுகாட்
டெரிப்பிச்ச னென்னையு மாளுடைப் பிச்சனென் றேசுவனே. ()

ஏசினும் யானுன்னை யேத்தினு மென்பிழைக் கேகுழைந்து
வேசறு வேனை விடுதிகண் டாய்செம் பவளவெற்பிற்
றேசுடை யாயென்னை யாளுடை யாய்சிற் றுயிர்க்கிரங்கிச்
காய்சின வாலமுண் டாயமு துண்ணக் கடையவனே. (ருo)

திருச்சிற்றம்பலம்.

மாலையை யுடையவனே. (சகு) சீறும்பிழைப்பு - வெறுக்கின்ற வாழ்க்கை. (ருo) காய்சினம் - சுடுகின்ற கோபம்; கடையவன் - கடைந்தவன், திருமால்.

உ

திருச்சிற்றம்பலம்.

திருவெம்பாவை கருத்து.

ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரையும் இரவும், தை மாத முதல் ஆனி மாதம் வரை பகலுமாகத் தேவர்களுக் கொருநாளாகும். ஸம்ஹார காலத்திற்கும் சிருஷ்டி காலத்திற்கும் பிரமாணமாக இந்த ஆறு மாதமும் பிரிந்து நடக்கும். மார்கழிமாதம் உதய காலமாய்ச் சிருஷ்டிக் கேதுவாயிருக்கும்.

பிரபஞ்ச சிருஷ்டியைத் திருவுளத்தடைத்து வயிந்தவ சக்தியைச் சிருஷ்டிக்கத் தொடங்கும் அவசரம் திருப்பள்ளியெழுச்சி என வழங்கும்.

இனி, அந்தச் சுத்த மாயை நாதமாகவும், விந்துவாகவும், சாதாக்கியமாகவும், மகேசுரமாகவும், சுத்த வித்தையாகவும், அஞ்சுதலமாயிருக்கும். நாதமாகிய தலத்திலே பரமும், விந்துவாகிய தலத்திலே பரையும் அதிஷ்டிக்கும். சாதாக்கியமாகிய தலத்திலே சதாசிவ மூர்த்தி எழுந்தருளியிருப்பர். போகாங்களாகிய அணுசதாசிவர் சேவிக்கவும், இதன்கீழே ஈசுரற்கதிஷ்டானமாகிய மகேசுரதலத்திலே அனந்தாதி அஷ்டவித்தியேசுரர் சேவிக்கவும், இதன்கீழே உருத்திரமூர்த்திக்கு அதிஷ்டானமாகிய சுத்த வித்யாதலத்திலே மந்திரேசுரர் சேவிக்கவும், இப்படி பிரபஞ்ச அநுக்கிரக காரியமாகப் பராசத்தியிற் றோன்றிய ஞானமும் கிரியையும் ஒத்த இச்சையே திருமேனியான சதாசிவமூர்த்தியின் றிருவருளால் அந்த மகேசுர தத்துவத்திலே சத்தி மண்டலத்திலிருந்த மணோன்மணி என்னுஞ் சத்தி சர்வபூத தமனியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி பலப்பிரமதனியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி பலவிகரணியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி கலவிகரணியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி காளியைப்பிரேரிக்க, அந்தச் சத்தி ரௌத்திரியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி ஜ்யேஷ்டையைப் பிரேரிக்க, அந்தச் சத்தி வாமையைப் பிரேரிக்க இப்படி

நவசத்திகளின் பிரேரகத்தினுல் மாயையை அதிஷ்டித்திருக்கிற அனந்ததேவராலே அசுத்த மாயை காரியப்பட்டும் பிருதிவி முடிவான பிரபஞ்சகாரியம் நடவாநிற்கும். (பிரேரிக்க - ஏவ, காரியப்படுத்த; அதிஷ்டித்திருக்கிற - நிலைக்களமாகக் கொண்டு செலுத்துகிற.)

திருவெம்பாவையின் வரலாறு.

ஸ்ரீமந் மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணுமலையி லெழுந்தருளியிருந்தபொழுது மார்கழிமாதம் விடியற்காலத்தில் மாதர்கள் ஒருங்கு சேர்ந்து ஒருவர் வீட்டிற்கு ஒருவர் சென்று துயிலெழுப்பிக்கொண்டு கூட்டமாகப் போய்க் குளத்தில் நீராடினுர்கள். அதைக்கண்ட சுவாமிகள் அவர்கள் சொன்னதாக இத்திருவெம்பாவையைப் பாடியருளினுர்.

திருவெம்பாவையின் பாராயண காலம்.

தினந்தோறும் சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன்னுவது, இரண்டரை நாழிகைக்கு முன்னுவது, ஒன்றேமுக்கால் நாழிகைக்கு முன்னுவது நித்திரை விட்டெழுந்து புறத்தேசென்று இயன்றவளவு சுத்தி செய்துகொண்டு வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனும் இருந்து விபூதியை நெற்றியில் தரித்துக்கொண்டு கணபதியையும் குருவையும் நமஸ்கரித்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைச் சக்தியாநுசாரம் ஜபித்து மிக்க சிரத்தாபக்தியோடு இதைப் பாராயணஞ் செய்தல்வேண்டும். அவ்வாறு செய்ய அநுகூலப்படாதாயின் **மார்கழிமாதத்தி**லாவது அவசியஞ் செய்யவேண்டும். அங்ஙனஞ் செய்வோர் சிவபெருமானது கிருபாகடாக்ஷத்துக்குப் பாத்திரராய் திருவருண்ஞானம் பெறுவரென்பது திண்ணம். ஒவ்வொரு நாளும் விடியற்காலம் இருபத்தைந்து நாழிகை முதல் முப்பது நாழிகை வரையில் தேவகாலமாதலால் அக்காலம் **பிராம்ஹ** முகூர்த்தம் எனப்பெயர் பெறும். அக்காலமே சிவத்தியானத்துக்கு மனந்தெளியுங்காலம். அக்காலத்தில் விழித்திருக்கின் நோய்களும் அணுக அஞ்சும். சிவஞானயுமிது.

திருவெம்பாவை.

சத்தியை வியந்தது.

சத்திகளாவார் - அம்பிகை, கணாம்பிகை, கௌரி, கங்கை, உமை, பராசத்தி, ஆதிசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என ஒன்பதின்மர். இவர்கள் பிரபஞ்ச சிருஷ்டிக்காதாரமாய் நின்றமையின் வியந்துரைக்கப்பட்டார்கள்.

திருவண்ணாமலையிலருளிச் செயப்பட்டது.

வெண்டளையான்வந்த இயற்றரவிணைக் கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தா ளென்னே யென்னே
யீதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

இது மனோன்மணி என்னுஞ் சத்தி **சர்வபூததமனி** என்னுஞ் சத்தியைத் துயிலெழுப்பியதாகக் கூறப்பட்டது. (க)

(க) வாள் - ஒளி; தடம் - பெரிய; கண்வளர்தல் - நித்திரை செய்தல்; வன்செவி - செவிட்டுச்செவி; போது ஆர் அமளி - புஷ்பங்கள் நிறைந்த படுக்கை; ஏதேனும் - யாதொரு பொருளாயினும்; பரிசு - தன்மை; ஏல் - (யாம்சொல்வதை) ஏற்றுக்கொண்டு; ஓர் - (அதன்பொருளை) ஆராய்வாயாக; எம்பாவாய் - எம்முடைய பதுமை போன்ற பெண்ணே. (உ) பாசம்அன்பு - பேரன்பு; நேர் இழை

பாசம் பரஞ்சோதிக் கென்பா யிராப்பகனும்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் றில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யா மாரேலோ ரெம்பாவாய்.

இது **சர்வபூததமனி** என்னுஞ் சக்தி **பலப்பிரமதனி** என்னுஞ் சக்தியைத் துயிலெழுப்பியதாகக் கூறப்பட்டது. (உ)

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தனா னந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் னன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
யித்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய்.

இது **பலப்பிரமதனி** என்னுஞ் சக்தியும் அவளோடு வந்தவர்களும் **பலவிகரணி** என்னுஞ் சக்தியைத் துயிலெழுப்பியதாகக் கூறப்பட்டது. (ஙு)

ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோ மவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே

ஆய் - திருத்தமாகச் செய்யப்பட்ட ஆபரணத்தை அணிந்தவளே; தேசன் - ஒளியுருவன்; அன்புஆர் - அன்புபொருந்திய. (ஙு) நகை - பல்; அள்ளூறி - வாயூறி; கடை - கதவு; பத்து - பற்று; பாங்கு - உரிமை; புத்து - புதிய; அழகியார் - செம்மையையுடையார். (சு) ஒண் - ஒளி; நித்திலம் - முத்து; மருந்து-அமிர்தம்; விழுப்பொருள்-மேலான பொருள். (ரு) மலை - அண்ணமலை, அதாவது இறுமாப்

விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோ நீயேவந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய்.

இது பலவிகாணி என்னுஞ் சக்தியும் அவர்களோடு வந்தவர்களும் **கலவிகாணி** என்னுஞ் சக்தியைத் துயிலெழுப்பியதாகக் கூறப்பட்டது. (௪)

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோலமிடினு முணரா யுணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

இது கலவிகாணி என்னுஞ் சக்தியும் அவளோடு வந்தவர்களும் **காளி** என்னுஞ் சக்தியைத் துயிலெழுப்பியதாகக் கூறப்பட்டது. (௫)

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலு நாணாமே
போன திசைபகரா யின்னம் புலர்ந் தின்றோ
வானே நிலனே பிறவே யறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே யுருகா யுனக்கே யுறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.

இது காளி என்னுஞ் சக்தியும் அவளோடு வந்தவர்களும் **ரௌத்திரி** என்னுஞ் சக்தியை துயிலெழுப்பியதாகக் கூறப்பட்டது. (௬)

பப்படைத்தோர் சாரவொண்ணாமலை; (அண்ணுதல் - சார்தல்); பொக்கங்கள் - பொய்கள்; படிறீ - வஞ்சகியே; சீலம் - குணம்; ஏலம் - மயிர்ச்சாந்து. (௬) நென்னல் - முன்னைநாள், நேற்று;.

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமரர்
  உன்னற் கரியா னொருவ னிருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
  தென்னாவென் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை யென்னரைய னின்னமுதென் றெல்லோமும்
  சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
  என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.

இது ரௌத்திரி என்னுஞ் சக்தியும் அவளோடு வந்தவர்களும் ஜ்யேஷ்டை என்னுஞ் சக்தியைத் துயிலெழுப்பியதாகக் கூறப்பட்டது. (எ)

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
  ஏழி லியம்ப வியம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
  கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவாய்
  ஆழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற வொருவனை
  ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்.

இது ஜ்யேஷ்டை என்னுஞ் சக்தியும் அவளோடு வந்தவர்களும் வாமை யென்னுஞ் சக்தியைத் துயிலெழுப்பியதாகக் கூறப்பட்டது. இவ்வாறு நவசக்திகளாலும் பிரபஞ்சகாரியம் நடவா நிற்கும். (அ)

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
  பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே

புலர்ந்தின்றோ - விடிந்ததில்லையோ; தலை அளித்து - காத்து; வான் - மேன்மை; உறும் - தகும். (எ) உன்னற்கு - நினைத்தற்கு; ஒருவன் - ஒப்பற்றவன்; இருஞ்சீரான் பெரிய சிறப்பமைந்தவன்; என் ஆனை - என்யானை; வாளா - சும்மா. (அ) கோழிசிலம்ப - சேவல்கள்கூவ; சிலம்புங்குருகு - சப்திக்கும் பறவைகள்; ஏழில்- ஏழிசைபோல்; கேழ்இல் - ஒப்பில்லாத; ஆழியான் - சக்கரத்தை யுடையவன் (திருமால்); ஏழைபங்காளன் - ஏழைகள் பங்கிலிருப்பவன், உமையொருபாகன். (கூ) முன்னைப் பழம்பொருட்கும் -

உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
  உன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
  சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியேல்
  என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய்.

இந்தத் திருபாசுரமுதல் ஏனையவும் நவசக்திகள் றம்மிற்றுமே கூறினவாகும். (கூ)

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
  போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
  வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
ஓத வுலவா வொருதோழன் றொண்டருளன்
  கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூ ரேதவன்பே ராருற்றா ராரயலார்
  ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். (ய)

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
  கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி

அநாதியாயுள்ளவர்களுக்கெல்லாம்; பின்னை - பின்புள்ள; புதுமைக்கும் - அநுபவிப்பவர்களுக்கும்; பேர்த்தும் அப்பெற்றியனே - மேன்மேலும் நவநவமாகத்தோன்றும் இன்பத்தைக்கொடுப்பவனே; உன்னடியார் - அனுசதாசிவர், அஷ்டவித்தியேசுரர், சப்தகோடி மஹாமந்திரேசுரர்; சொன்னபரிசே தொழும்பாய்ப்பணிசெய்வோம் - சொன்னவண்ணம் தொண்டராகி ஏவல்செய்வோம், அதாவது அவர்களேவலால் அசுத்த மாயையைப் பிரேரியாநிற்போம்; நல்குதியேல் - கிருபை செய்வையாயின். (ய) சொல்கழிவு - சொல்லுக்கு அளவுபடாதது; ஒன்றல்லன் - ஒருவடிவல்லன்; உலவா - முடியாத; உளன் - உள்ளத்திலிருப்பவன்; குலத்து - மேன்மையுடைய; பிணாப்பிள்ளை - பெண்பிள்ளை, (வாமை முதலிய சிவசக்திகள்); "ஏது அவன் ஊர், ஏதுஅவன் பேர், ஆர் உற்றார், ஆர் அயலார், ஏது அவனைப்பாடும்பரிசு" என்றதனால் ஒன்றுமில்லாத பரமசிவத்தைப் பாசபந்திகளான ஜீவர்கள் மும்மலமும் நீங்கப்பெற்று அவரைப்போல் ஒன்றுமில்லாதவர்களானாற்றான் அவரை யடை

ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்கா ணாரழல்போல்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குன்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ யாட்கொண் டருளும் விளையாட்டில்
உய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய். (கக)

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடும்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமும்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய வணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். (கஉ)

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகி னத்தாற் பின்னு மரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலமபச் சிலம்பு கலந்தார்ப்பக்

யலாமென்பது கருத்தாம். (கக) மொய்யார் - வண்டுகள் நிறைந்த; முகேர் - ஓர்வகைச்சத்தம்; குடைந்து - முகந்து; செய்யா - செந்நிறமுடையவனே; மருங்குல் - இடை; விளையாட்டில் - லீலையில், அநாயாசமாய் எளிதாகச்செய்யுந்தொழிலில். அது சூரிய சந்நிதானத்தில் தாமரை முகைகள் விகசித்தல்போலச் சந்நிதான விசேஷமாய் நிகழ்வது. அதன்கருத்து என்னையோவெனின், ஆன்மாக்களுக்குப் பெத்தகாலத்துச் சுவர்க்காதிபோகங்களையும் முத்திகாலத்து வீடுபேற்றையும் கொடுத்தற்பொருட்டே. (கஉ) ஆர்த்த - பிணித்த; தீர்த்தன் - பரிசுத்தன்; குரு - வேதாகம சாஸ்திரவுணர்ச்சியும் உண்மை அறிவுமுள்ளோன்; குவலயம் - பூமண்டலம்; வார்கலைகள் - நெடிய ஆடைகள்; அரவம் - சத்தம்; குடைந்து - முழுகி. (கங) அங்கம் - அடையாளம்; குருகு - வளையல், பறவை; அரவம் - பாம்பு, சத்தம்; மலம் - மும்மலம், அழுக்கு; மடு - குளம்; சங்கம் -

கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். (கங)

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய். (கச)

ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
ஆரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
யேருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். (கரு)

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்

சங்குவளையல்; சிலம்பு - காற்சிலம்பு; பொங்க - பூரிக்க. (கச) காதார் குழை - காதிலுள்ள குண்டலம்; கலன் - ஆபரணம்; கோதை - பூமாலை; ஆடி - மூழ்கி; வேதப்பொருள் - சிவபிரான்; அப்பொருள் ஆமாறு - சிவபிரான் அந்த வேதப்பொருளாகும் வகை; திறம் - தன்மை; சூழ் - வளைவாகிய; தார் - மாலை; பெய்வளை - மிகுதியாயிடப்பட்ட வளையலையுடைய உமாதேவி. (கரு) ஓரொருகால் - ஒவ்வொருகாலத்திலும்; ஒருகால் - ஒருகாலும்; வாய் ஓவாள் - வாயினின்றும் நீங்காள்; பனிப்ப-துளிக்க; வித்தகர் - ஞான உருவினர்.

(கசு) முன் - எதிரிலுள்ள; கடல் - கடல்நீரை; சுருக்கி - உட்கொண்டு; இட்டு இடையின் - சிற்றிடைபோல; பொலிந்து -

என்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையாள்
தன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். (கசு)

செங்க ணவன்பாற் றிசைமுகன்பாற் றேவர்கள்பால்
எங்கு மிலாததோ ரின்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் மில்லங்க டோறு மெழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்க ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். (கஎ)

அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைக டாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். (கஅ)

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தால்
எங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க

பிரகாசித்து; சிலம்பி - சப்தித்து; குலவி - விளங்கப்பெற்று; முன்னி - முந்தி; அவண் - அவ்விடத்து; நமக்குமுன் - நம்மீது. (கஎ) கொங்குஉண் கருங்குழலி - மணந்தங்கிய கரிய கூந்தலையுடைய பெண்ணே; கோதாட்டி - சீராட்டி; அம்கண் - கிருபாநோக்கம். (கஅ) வீறு-ஒளி, பெருமை; கண்ஆர் - பெருமை பொருந்திய; இரவி - சூரியன்; கார் - மேகம்; கரப்ப - மறைய; தாரகைகள் - நட்சத்திரங்கள்; பிறங்கு ஒளிசேர் - விளங்குகின்ற ஒளிபொருந்திய. (கக) கங்குல் - இரவு; ஞாயிறு - சூரியன். (உ0) ஆதி - முதன்மை;

எங்கை டனக்கல்லா தேப்பணியுஞ் செய்யர்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். (௧௯)

போற்றி யருளுகநின் னாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறா மிணையடிகள்
போற்றிமா லான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். (௨௰)

திருச்சிற்றம்பலம்.

அந்தம் - முடிவிடம்; தோற்றம் - பிறப்பிடம்; போகம் - போகரூபம்; ஈறும் - லயமிடம்; நீர் ஆடு - நீராட்டம்.

செந்தளிர்கள், பூங்கழல்கள், புண்டரிகம் (தாமரை), பொன்மலர்கள் இவையாவும் பாதங்களையே உணர்த்துகின்றன.

தோற்றமாம், போகமாம், ஈறும், காணாத, ஆட்கொண்டருளும் ஆகிய இவ்வைந்தும் பஞ்சகிருத்தியங்களைத் தெரிக்கா நின்றன.

திருவம்மானை.

ஆநந்தக்களிப்பு

எ-து. சுகமேலீடு.

திருவண்ணாமலையி லருளிச் செயப்பட்டது.

ஒப்புமைபற்றிவந்தவாறடித்தரவு கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

செங்க ணெடுமாலுஞ் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமு மாட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கண னந்தணனா யறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்கா ணம்மானாய். (க)

பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார்புறத்தார்
ஆராலுங் காண்டற் கரியா னெமக்கெளிய
பேராளன் றென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி
வாரா வழியருளி வந்தென் னுளம்புகுந்த
ஆரா வமுதா யலைகடல்வாய் மீன்விசிறும்
பேராசை வாரியனைப் பாடுதுங்கா ணம்மானாய். (உ)

(க) இடந்தும் - பிளந்தும்; தரம் - கூட்டம்; தென் - அழகு; நன் - நன்மை; அறைகூவி - வலிய அழைத்து; அம்மானை-மகளிரது ஓர் விளையாட்டு. (உ) புறத்தார் - மற்றையுலகங்களிலுள்ளவர்கள்; பேராளன் - புகழையுடையவன்; வாராவழி - புனராவிருத்தியில்லா முத்திநெறி; விசிறும் - வலைவீசின; பேர்ஆசை வாரியனை - பெருங் கருணைக்கடலாயுள்ளவனை. (ந) அவனி - பூமி; எம்தரம் - எமது

இந்திரனு மாலயனு மேனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச் சிவனவனி வந்தருளி
எந்தரமு மாட்கொண்டு தோட்கொண்ட நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துருக்குஞ் சீரார் பெருந்துறையான்
பந்தம் பறியப் பரிமேற்கொண் டான்றந்த
அந்தமிலா வானந்தம் பாடுதுங்கா ணம்மானாய். (௩)

வான்வந்த தேவர்களு மாலயனோ டிந்திரனும்
கானின்று வற்றியும் புற்றெழுந்துங் காண்பரிய
தான்வந்து நாயேனைத் தாய்போற் றலையளித்திட்
டூன்வந் துரோமங்க ளுள்ளே யுயிர்ப்பெய்து
தேன்வந் தமுதின் றெளிவி னொளிவந்த
வான்வந்த வார்கழலே பாடுதுங்கா ணம்மானாய். (௪)

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் றென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம் பலமன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்கா ணம்மானாய். (௫)

கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
திட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாமேலை வீடெய்த
ஆட்டான்கொண் டாண்டவா பாடுதுங்கா ணம்மானாய். (௬)

கூட்டம்; கொண்ட - அணிந்த; பந்தம்பறிய - பிறவிப்பிணிப்பு அகல; பரி - குதிரை. (௪) கான் நின்று வற்றியும் - காட்டில் நின்று உலர்ந்தும்; ஊன உரோமங்கள்வந்து - உடம்பில் மயிர்சிலிர்த்து; ஒளிவந்த - ஒளிஉருவாயெழுந்தருளிவந்த; வான்வந்த - மேன்மையமைந்த. (௫) வல்லாளன் - பேராற்றலுடையவன்; கல்லை - மனமாகிய பாறையை; (௬) கிறி - மாயம்; திட்டு - சித்திரி; ஆள்தான்கொண்டு - ஆட்படுத்திக்கொண்டு. (௭) உன் - மனம்; உள்ளானை - அந்தர்யா

ஓயாதே யுள்குவா ருள்ளிருக்கு முள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னென் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நம்தம்மை யாட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே யுலகேழும்
ஆயானை யாள்வானைப் பாடுதுங்கா ணம்மானாய். (எ)

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவான் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்கா ணம்மானாய். (அ)

துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்
கொண்ட புரிநூலான் கோலமா வூர்தியான்
கண்டங் கரியான்செம் மேனியான் வெண்ணீற்றான்
அண்டமுத லாயினா னந்தமிலா வானந்தம்
பண்டைப் பரிசே பழவடியார்க் கீந்தருளும்
அண்டம் வியப்புறுமா பாடுதுங்கா ணம்மானாய். (௯)

விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளு மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண்ணார் கழல்காட்டி நாயேனை யாட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்கா ணம்மானாய். (௰)

மியை; தத்துவனை – உண்மையனை. (அ) பரிசு – வெகுமதி; வியன் – பெருமை; கலி – புகழ்; அகோவால் – அந்தப்பாண்டியராஜனால். (௯) துண்டப்பிறை - ஒற்றைக்கலை; கோலம் ஆ - அழகியரிஷபம்; அண்டம்முதல் – பிரபஞ்சகாரணன்; பரிசே – முறைப்படி. (௰) தமிழ் அளிக்கும் – தமிழைவளர்க்கும்; தமிழ் தென்மொழியெனவும் பெயர்பெறும். இது கைலாயத்திலும் வழங்கும் பாஷை. தனக்கு எம்மொழியும் இணையில்லாமல் இனிமையாய் விளங்கும். பிறபாஷைகளில்இல்லாத ழகரவொற்றை யுடைமையின் தனித்த ழகாரமுடைய

செப்பார் மலைபங்கன் றென்னன் பெருந்துறையான்
தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்குந் தன்மையினான்
அப்பாண்டி நாட்டை சிவலோக மாக்குவித்த
அப்பார் சடையப்ப னானந்த வார்கழலே
ஒப்பாக வொப்புவித்த வுள்ளத்தா ருள்ளிருக்கும்
அப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்கா ணம்மானாய். (கக)

மைப்பொலியுங் கண்ணிகேள் மாலயனோ டிந்திரனும்
எப்பிறவி யுந்தேட வென்னையுந்தன் னின்னருளால்
இப்பிறவி யாட்கொண் டினிப்பிறவா மேகாத்து
மெய்ப்பொருட்கட் டோற்றமாய் மெய்யே நிலைபேறாய்
எப்பொருட்குந் தானேயா யாவைக்கும் வீடாகும்
அப்பொருளா நஞ்சிவனைப் பாடுதுங்கா ணம்மானாய். (கஉ)

கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை யெங்குஞ் செறிந்தானை யன்பர்க்கு
மெய்யானை யல்லாதார்க் கல்லாத வேதியனை
ஐயா றமர்ந்தானைப் பாடுதுங்கா ணம்மானாய். (கங)

ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்
ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை

பாஷையாகும். இது ஐந்தெழுத்தோடு கூடியதால் உயிரெழுத்துப் பன்னிரண்டும், மெய்யெழுத்துப் பதினெட்டும், உயிர்மெய்யெழுத்து இருநூற்றுப்பதினாறும் இதில் அடங்கியிருப்பதைக் காணலாம். வேறுபாஷைகளில் இத்தகைய சிறப்பில்லை. வேண்டுதல் வேண்டாமை யில்லாத பரம்பொருள் இத்தமிழ்மொழியில் இனித்தனா யிருத்தலினாலே அனேக அரிய பெரிய அற்புதங்கள் செய்தமை பிரத்தியட்சம். இது சிவபெருமானாலே பாண்டிநாட்டில் வளர்க்கப்பட்டது. பேறு - விரும்புகின்ற; கண் - பெருமை. (கக) அப்பு ஆர் - கங்கை தங்கிய; அப்பாலைக்கு அப்பாலை - பிரகிருதிக்கு அப்பாற்பட்டவனை. (கஉ) தோற்றமாய் - காட்சியாய். (கங) ஆர் - அணியப்பெற்ற; சேர்ந்தறியாக் கையானை - இரண்டு கைகளும் ஒன்றாகச்சேர்த்துக் குவிக்காத கையை யுடையவனை, நமஸ்காரத்தின்பொருட்டுக் கூப்பியறியாதகையை யுடையனை; செறிந்தானை - வியாபித்தவனை.

ஊனையு நின்றுருக்கி யென்வினையை யோட்டுகந்து
தேனையும் பாலையுங் கன்னலையு மொத்தினிய
கோனவன்போல் வந்தென்னைத் தன்றொழும்பிற் கொண்டருளும்
வானவன் பூங்கழலே பாடுதுங்கா ணம்மானாய். (௧௪)

சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்றன் வேள்வியினில்
இந்திரனைத் தோணெரித்திட் டெச்சன் றலையரிந்
தந்தரமே செல்லு மலர்கதிரோன் பற்றகர்த்துச்
சிந்தித் திசைதிசையே தேவர்களை யோட்டுகந்த
செந்தார்ப் பொழில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதுங்கா ணம்மானாய். (௧௫)

ஊனா யுயிரா யுணர்வாயென் னுட்கலந்து
தேனா யமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோ ரறியா வழியெமக்குத் தந்தருளும்
தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார் சீரொளிசேர்
ஆனா வறிவா யளவிறந்த பல்லுயிர்க்கும்
கோனாகி நின்றவா கூறுதுங்கா ணம்மானாய். (௧௬)

சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்றிரடோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்
றூடுவேன் செவ்வாய்க் குருகுவே னுள்ளுருகித்
தேடுவேன் றேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்து மலர்வே னனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்கா ணம்மானாய். (௧௭)

கிளிவந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை
வெளிவந்த மாலயனுங் காண்பரிய வித்தகனைத்

---

(௧௪) கீடம்-புழு; பிற ஆய் - பிற உயிர்களுமாய்; ஓட்டு - ஓட்டுதல்; கன்னல்-சர்க்கரை; கோன் - தலைவன்; வானவன்-மேலோன். (௧௫) எச்சன் - யாககர்த்தா (தக்கன்); அந்தரம் - ஆகாயம்; சிந்தி - சிதறி; தார் - மலர்; மந்தாரம் - பஞ்சதருக்களில் ஒன்று. (௧௬) ஊன் - உடல்; ஒளிசேர் - ஒளிபொருந்திய; ஆனா - விட்டு நீங்காத. (௧௭) பூங்கொன்றை - பொலிவாகிய கொன்றைமலர்; முயங்கி - தழுவி; ஊடு - பிணங்கு; பேர்த்தும் - மீட்டும்; மலர்வேன் - களிப்பேன்.

தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையில்
எளிவந் திருந்திரங்கி யெண்ணரிய வின்னருளால்
ஒளிவந்தெ னுள்ளத்தி னுள்ளே யொளிதிகழ
அளிவந்த வந்தணனைப் பாடுதுங்கா ணம்மானாய். (கஅ)

முன்னானை மூவர்க்கு முற்றுமாய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மாதியலும் பாதியனைத்
தென்னானைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
என்னானை யென்னப்ப னென்பார்கட் கின்னமுதை
அன்னானை யம்மானைப் பாடுதுங்கா ணம்மானாய். (கக)

பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்னடியார்
குற்றங்க ணீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் றொல்புகழே
பற்றிப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்
பற்றியபே ரானந்தம் பாடுதுங்கா ணம்மானாய். (உ௰)

திருச்சிற்றம்பலம்.

(கஅ) தேழ்கிளரும் - ஒளிவிளங்குகின்ற; வெளிவந்த - (காண்போமென்று) வெளிப்பட்டுவந்த; அளிவந்த - கருணை செய்த. (கக) முன்னானை - முற்பட்டவனை; மன்னானை-நிலை பெற்றவனை; ஆனைக் காவானை - திருவானைக்காவினை புடையவனை; அமுதை அன்னானை - அமிர்தம் போன்றவனை. (உ௰) கொற்றம் - வெற்றி; தொடர்வு - சம்பந்தம்.

திருப்பொற்சுண்ணம்

ஆனந்தமனோலயம்

எ - து. தானன்றி நிற்றல்.

தில்லையி லருளிச் செயப்பட்டது.

எண்சீரடியாசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

முத்துநற் றாமம் பூமாலை தூக்கி
முளைக்குடந் தூபநற் றீபம் வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடு பல்லாண் டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தனை யாறனம் மானைப் பாடி
ஆடப்பொற் சுண்ண மிடித்து நாமே. (க)

பூவியல் வார்சடை யெம்பி ராற்குப்
பொற்றிருச் சுண்ண மிடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடு மின்கள்

(க) நல்முத்துதாமம் - நல்லமுத்துமாலை; தூக்கி-தொங்கவிட்டு; முளைக்குடம் - முளைப்பாலிகை; கவரி - சாமரம்; ஆட - ஆடுதற்கு; பொற்சுண்ணம் இடித்தும் - பொற்றூள் (கதம்பப்பொடி) இடிப்போம். (உ) பூஇயல்வார் - கொன்றைமலர் பொருந்தியநீண்ட; மாவின்வடுவகிர் - மாம்பிஞ்சின்பிளவு; புறம் - வெளியே; குனிமின்-

கூவுமின் றொண்டர் புறநி லாமே
குனிமின் றொழுமினெங் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மை யாளச்
செம்பொன்செய் சுண்ண மிடித்து நாமே. (உ)

சுந்தர நீற ணிந்தும் மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிப ரப்பி
இந்திரன் கற்பக நாட்டி யெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடி யெடுமின்
அந்தரர் கோன அயன்றன் பெருமான்
ஆழியா னாதனல் வேலன் றாதை
எந்தர மாளுமை யாள் கொழுநற்
கேய்ந்தபொற் சுண்ண மிடித்து நாமே. (ௐ)

காசணி மின்க ளுலக்கை யெல்லாம்
காம்பணி மின்கள் கறை யுரலை
நேச முடைய வடிய வர்கள்
நின்று நிலாவுக வென்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம்பன் செம்பொற் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற் சுண்ண மிடித்து நாமே. (௪)

அறுகெ டுப்பா ரயனும் மரியும்
அன்றி மற்றிந் திரனோ டமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்க வொட்டோம்

கூத்தாடுங்கள். (ௐ) நிதி - மங்கலதிரவியங்கள்; கற்பகம் - கற்பக மரம்; சுடர் - தீபங்கள்; ஆழியான்நாதன் - சக்கரமேந்திய திருமாலுக்குத் தலைவன்; எம்தரம்ஆள் - எமது இனத்தையும் ஆண்டருள்கின்ற. (௪) காசு - மணிவடம்; காம்பு - பூண்; கறைஉரல் - கருங்காலிமரத்தாற் செய்யப்பட்டஉரல். (ரு) அறுகு-குடவிளக்கு முதலியன; நறுமுது - நல்லமுதிய; செறிவு - நெருக்கம்; முறுவல் - தந்தம், பல்.

செறிவுடை மும்மதி லெய்த வில்லி
திருவேகம்பன் செம்பொற் கோயில் பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்க ணப்பற்
காடப்பொற் சுண்ண மிடித்து நாமே. (௫)

உலக்கை பலவோச் சுவார் பெரியர்
உலகமெ லாமுரல் போதா தென்றே
கலக்க வடியவர் வந்து நின்றார்
காண வுலகங்கள் போதா தென்றே
நலக்க வடியோமை யாண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்துபொற் சுண்ண மிடித்து நாமே. (௬)

சூடகந் தோள்வளை யார்ப்ப வார்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப வார்ப்ப
நாடவர் நந்தம்மை யார்ப்ப வார்ப்ப
நாமுமவர் தம்மை யார்ப்ப வார்ப்பப்
பாடக மெல்லடி யார்க்கு மங்கை
பங்கின னெங்கள் பரா பரனுக்
காடக மாமலை யன்ன கோவுக்
காடப்பொற் சுண்ண மிடித்து நாமே. (௭)

வாட்டடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை யார்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்தி லங்கச்
சோற்றெம் பிரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை யிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப்பொற் சுண்ண மிடித்து நாமே. (௮)

---

(௬) ஓச்சுவார் - வரவிடுவார்; மலை - மலையரையன். (௭) சூடகம் - கைவளையல்; ஆர்ப்ப - சப்திக்க, ஆரவாரிக்க; பாடகம் ஆர்க்கும் - பாடகம் சப்திக்கும். (௮) மடம் - இளமை; முண்டம் -

வையக மெல்லா முரல தாக
மாமேரு வென்னு முலக்கை நாட்டி
மெய்யெனு மஞ்ச ணிறைய வட்டி
மேதகு தென்னன் பெருந்து றையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொ னுலக்கை வலக்கை பற்றி
ஐயனணி தில்லை வாண னுக்கே
ஆடப்பொற் சுண்ண மிடித்து நாமே. (௯)

முத்தணி கொங்கைக ளாட வாட
மொய்குழல் வண்டின மாட வாடச்
சித்தஞ் சிவனொடு மாட வாடச்
செங்கயற் கண்பனி யாட வாடப்
பித்தெம் பிரானொடு மாட வாடப்
பிறவி பிறரொடு மாட வாட
அத்தன் கருணையொ டாட வாட
ஆடப்பொற் சுண்ண மிடித்து நாமே. (௰)

மாடுநகை வாணி லாவெ றிப்ப
வாய்திறந் தம்பவ ளந்து டிப்பப்
பாடுமி னந்தம்மை யாண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமி னெம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமி னம்பலத் தாடி னானுக்
காடப்பொற் சுண்ண மிடித்து நாமே. (௧௧)

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை

தலை; துதைந்து - நெருங்கி; சோத்து - அஞ்சலி; நாள்கொண்ட - (மலரும்) பருவங்கொண்ட. (௯) அட்டி - அப்பி; மேதகு-மேன்மை பொருந்திய. (௰) முத்து - முத்துவடம்; ஆட - அசைய; கயல் - கயல்மீன்; பனி - நீர்துளித்தல்; ஆட - உண்டாக. (௧௧) மாடு - பக்கம்; எறிப்ப - வீச; திகைத்து - பிரமித்து. (௧௨) அகப்படுத்து -

ஐயனை யையர் பிரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொ டித்தோள்
பையர வல்குன் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே. (௧௨)

மின்னிடைச் செந்துவர் வாய்க்க ருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொ ழியீர்
என்னுடை யாரமு தெங்க ளப்பன்
எம்பெரு மானிம வான்ம கட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்ற கப்பன்
தமையனெம் மையன் றாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே. (௧௩)

சங்க மரற்றச் சிலம்பொ லிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்

உட்படுத்தி; அரி - செவ்வரி; அரவுபை - பாம்பின்படம். (௧௨) மின் - மின்னற்கொடி; கேள்வன் - நாயகன்; மகன்தகப்பன் தமையன். - அக்கினிக்கு உஷ்ணம்போலச் சிவத்தில் அபின்னமாயடங்கி நின்ற அருள் வெளிப்பட்டுச் சத்தியாய் நின்றபோது அச்சத்திக் குச்சிவம் தந்தை முறையாகலின் **தகப்பன்** எனவும், பஞ்சசத்திகளி னிடமாகச் சதாசிவம் தோன்றியபோது அச்சிவம் சத்திக்குப்புத் திரன் முறையாகலின் **மகன்** எனவும், (தொழிற்பேதத்தால் சத்தி ஐந்து வகையாகக் கூறப்படினுஞ்சத்தி ஒன்றே), சத்தியின் கூறாகிய உமாதேவியார் தோன்றுவதற்கு முன்னரே சதாசிவம் தோன்றிய படியால் அச்சிவம் சத்திக்கு முன்னோன் முறையில் **தமையன்** எனவுங் கூறப்பட்டனர். இக்கருத்துபற்றியே ஆதிசக்தி (திரோ தான சக்தியின் கூறாகிய திருமால்) அம்பிகை தோன்றுவதற்கு முன்னரே தோன்றினபடியால் அவ்வம்பிகைக்கு அவர் தமையனு கின்றனர் என்று புராணேதிகாசங்கள் புகழ்ந்து பேசுகின்றன. சிவ சத்தியொன்றே சிவத்துக்குத் தேகமாயும், கரணமாயும், வஸ்திர மாயும், ஆபரணமாயும், ஆயுதமாயும், ஐசுவரியமாயும் இருப்பது போல அதுவே வியாபாரபேத வேறுபாடுகள்பற்றி இவ்வித முறை யைச்சிவத்துக்களித்ததென் றுணரற்பாற்று. (௧௩) சங்கம் - சங்க

செங்கனி வாயித ழுந்து டிப்பச்
    செயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை யிரைப்ப வரவி ரைக்குங்
    கற்றைச் சடைமுடி யான்க ழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
    பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே (௧௪)

ஞானக் கரும்பின் றெளியைப் பாகை
    நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை யாயி னானைச்
    சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
    கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
    பாடிப் பொற்சுண்ண மிடித்து நாமே. (௧௫)

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
    டாட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவி லுங்கண் டறியாச்
    செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவக மேந்திய வெல்கொ டியான்
    சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவக னாமங்கள் பாடிப் பாடிச்
    செம்பொன்செய் சுண்ண மிடித்து நாமே. (௧௬)

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
    சிவபுரம் பாடித் திருச்சடைமேல்

வளையல்; தாழ்குழல் - நீண்டகூந்தல்; சூழ்தரு-வளைந்த; சேஇழை - செம்மையாகிய ஆபரணம்; கற்றை - திரட்சி; பொங்கிய - மிகுந்த; பொங்க - விம்ம. (௧௫) நந்தா - (சுவை) குன்றாத; பழம் - முப்பழம், அதாவது வாழை, மா, பலா; பானல் - கருங்குவளை மலர். (௧௬) ஆவகை - உய்யும்வண்ணம்; வண்ணங்கள் - திறங்கள்; சேவகம் - வீரம். (௧௭) தேனகம் - தேனுக்குஇடம்; மதிப்பிள்ளை - இளஞ்சந்திரன்; ஊன்அகம்ஆம் - தசைக்குஇடமாகிய; போனகம் - உணவு.

வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரு மிம்பரு முய்ய வன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே. (௧௭)

அயன்றலை கொண்டுசெண் டாடல் பாடி
அருக்க னெயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலா லுதைத்தல் பாடி
இயைந்தன முப்புர மெய்தல் பாடி
ஏழையடி யோமை யாண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ண மிடித்து நாமே. (௧௮)

வட்டமலர்க் கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந் தென்றில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடு மரவம் பாடி
ஈசர்க்குச் சுண்ண மிடித்து நாமே. (௧௯)

வேதமும் வேள்வியு மாயி னார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையு மாயி னார்க்குச்
சோதியு மாயிரு ளாயி னார்க்குத்
துன்பமுமா யின்ப மாயி னார்க்குப்

(௧௮) கயம் - யானை; இயைந்தன - கூடின. (௧௯) மாசுணம் - பாம்பு; கவித்த - மூடின. (௨௰) மெய்ம்மை பொய்ம்மை, சோதிஇருள், துன்பம் இன்பம், பாதிமுற்று, பந்தம்வீடு, ஆதிஅந்தம் இவையாவும் சிவபிரானது பரிபூரணவியாபகத்தை விளக்கும். இதுவே வேதங்களிலே பிரதிபாதிக்கப்பட்ட ஸர்வாத்மிகவித்தை. பந்தமுமாயினார்

பாதிடு மாய் முற்று மாயி னார்க்குப்
பந்தமு மாய் வீடு மாயி னருக்
காதிடு மந்தமு மாயி னருக்
காடப்பொற் சுண்ண மிடித்து நாமே. (உ0)

திருச்சிற்றம்பலம்.

வீடுமாயினார் என்பது ஆதிடும் அந்தமுமில்லா இறைவன் கேவலம் ஆணவமலத்தில் கட்டுண்டிருந்த ஆன்மாவை வெளிப்படுத்தி, மாயா மலத்தைத் தநுகரண புவனபோகங்களாகக் காரியப்படுத்தி, அவற்றின் வழித்தாய் கன்மமலத்தையுங்காரியப்படுத்தி, அவற்றை அநுபவிக்கச்செய்து,பிறகு ஆணவமலத்தைத் தற்போதவழியில் நிறுத்தி, அவ்வழியால் அம்மலத்திற்குத் தளர்ச்சி வரச்செய்து, இவ்வாறு மூன்றுமலங்களையுங் காரியப்படுத்தி, அவற்றின் சக்திகளை பொருங்கே கெடுத்துப் பின்னர் முத்தாந்த நிலையில் ஏகபரிபூரணவறிவாய் நிற்கும்படிச்செய்வதால் பந்தமும் வீடுமாயினார் என்றருளியபடியாம்.

திருக்கோத்தும்பி.

சிவனோடைக்கியம்

எ - து. சிவனுடன் இடையறாது நிற்றல்.

தில்லையி லருளிச் செயப்பட்டது.

நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியு நாரணனு நான்மறையும்
மாவேறு சோதியும் வானவருந் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ. (க)

நானாரென் னுள்ளமார் ஞானங்களா ரென்னையாரறிவார்
வானோர் பிரானென்னை யாண்டிலனேன் மதிமயங்கி
ஊனா ருடைதலையி லுண்பலிதே ரம்பலவன்
தேனார் கமலமே சென்றூ தாய் கோத்தும்பீ. (உ)

தினைத்தனை யுள்ளதோர் பூவினிற்றே னுண்ணாதே
நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தோறு மெப்போதும்
அனைத்தெலும் புண்ணெக வானந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. (ங)

(க) கோன் - பிரமன்; செல்வி - சரஸ்வதி; மாஏறுசோதி - மேன்மைபொருந்திய ஒளி வடிவினராகிய ருத்ரமூர்த்தி; சேஏறுசே அடி - இடபமூர்ந்த திருவடி; கோ தும்பீ - அரசவண்டே. (உ) பலி தேர் - பிச்சையைத்தேர்கின்ற. (ங) தினைத்தனை - தினையளவு; குனிப்பு - திருவடியையெடுத்து மடித்துக்குனிந்தாடுங்கூத்து. இது அநுக்கிரஹ கிருத்தியத்தைக்குறிக்கும். அநுக்கிரகமாவது ஆன்மா

கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபின்
என்னப்ப னென்னொப்பி லென்னையுமாட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ. (ச)

அத்தேவர் தேவ ரவர்தேவ ரென்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேது மில்லாதென் பற்றற நான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ. (ரு)

வைத்த நிதிபெண்டிர் மக்கள்குலங் கல்வியென்னும்
பித்த வுலகிற் பிறப்போ டிறப்பென்னும்

வின் வியாபகநிலையில் ஸர்வஞ்ஞத்வாதி குணங்களை விளங்கச்செய்தல். திருவடியாவது இறைவனுடைய அருள். அதை உயரவெடுத்தலாவது அவ்வருளை ஆன்மாவினிடத்தில் மேலிடச்செய்தல். அதை மடித்தலாவது அவ்வருளை என்றும் நிலைபெறுவித்தல். துக்கநிவிருத்தியும் சுகப்பேறுமாகிய இருதொழில்கள் இறைவனது சக்தியால் நடைபெறுமென்பது தோன்ற அச்சக்திவடிவாகிய இரண்டு திருவடிகளில் ஒன்று (திரோபவ சக்தி) மலத்தைப் பக்குவப்படுத்தி மேலிடாது அழுத்த, மற்றொன்று (ஞான சக்தி) ஆன்மவியாபக முழுதும் மேற்பட்டு நின்று, நிரந்தரம் ஆனந்தத்தேன் சொரிந்து கொண்டு நிற்பதாம். இதுவே தாண்டவேசுரரது திருக்கூத்தின் பிரபாவம். (ச) கண்ணப்பன் ஒப்பது ஓர் அன்பு - கண்ணப்ப தேவனார் நிகர்த்ததாகிய ஒப்பற்றதலையன்பு. இதனால் கண்ணப்பதேவருக்கு ஒப்பானது அன்பும், அன்புக்கு ஒப்பானவர் கண்ணப்பதேவருமேயாம். அன்புக்கு வேறொரு உவமானப்பொருள் பிரபஞ்சத்தில் கிடையாது. அன்பும் சிவமும் இரண்டு பொருள்களல்ல வென்றும், அன்பேசிவம், சிவமே அன்பு என்றும் நஞ்சித்தாந்த சைவங்கூறும். ஆனமையின் கண்ணப்பதேவரே சிவமென்றறியற்பாலர். சிவத்திற்குரிய **ஞானவடிவம்** புறத்தே ஆசிரியவுருவத்திலும், அவரது **அன்புவடிவம்** அகத்தே ஆன்மாவினிலும் காண்டற்குரியதாம். என் ஒப்பு இல் - எனக்குச் சமானமில்லாத; வண்ணம் - நன்மை; சுண்ணம் - பொடி. (ரு) அத்தேவர் தேவர் - அந்தத்தேவரே தேவர்; அவர் தேவர் - அவரே தேவர்; பொய்த்தேவு - ஜீவலிங்கமாகிய பிறப்பிறப்புள்ள பொய்த்தேவர்கள்; பத்து - பற்று; மெய்த்தேவர் - பிறப்பிறப்புக்களை நீக்கும் மெய்யான தேவர். (சு) வைத்த - ஈட்டிவைத்த; பித்தவுலகு - பித்தங்கொண்டவுலகு. (எ) சட்டோ - செம்

சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ. (௬)

சட்டோ நினைக்க மனத்தமுதாஞ் சங்கரனைக்
கெட்டேன் மறப்பேனோ கேடுபடாத் திருவடியை
ஒட்டாத பாவித் தொழும்பரைநா முருவறியோம்
சிட்டாய சிட்டற்கே சென்றூதாய் கோத்தும்பீ. (௭)

ஒன்றாய் முளைத்தெழுந் தெத்தனையோ கவடுவிட்டு
நன்றாக வைத்தென்னை நாய்சிவிகை யேற்றுவித்த
என்றாதை தாதைக்கு மெம்மனைக்குந் தம்பெருமான்
குன்றாத செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ. (௮)

கரணங்க ளெல்லாங் கடந்துநின்ற கறைமிடற்றன்
சரணங்க ளேசென்று சார்தலுமே தானெனக்கு
மரணம் பிறப்பென் றிவையிரண்டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. (௯)

நோயுற்று மூத்துநா னுந்துகன்றா யிங்கிருந்து
நாயுற்ற செல்வ நயந்தறியா வண்ணமெல்லாம்
தாயுற்று வந்தென்னை யாண்டுகொண்ட தன்கருணைத்
தேயுற்ற செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ. (௰)

வன்னெஞ்சக் கள்வன் மனவலிய னென்னாதே
கன்னெஞ் சுருக்கிக் கருணையினா லாண்டுகொண்ட
அன்னந் திளைக்கு மணிதில்லை யம்பலவன்
பொன்னங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. (௧௧)

மையாக; ஒட்டாத-அடையவொட்டாத; சிட்டாய சிட்டன் - மேன்மையாகிய பெரியோன், சிரேஷ்டன். (௮) கவடு-கிளைகள்; சிவிகை-பல்லக்கு. (௯) கரணங்கள் - அகக்கரணம் புறக்கரணம்; கறை - விஷம்; மிடறு - கண்டம்; சரணங்கள் - திருவடிகள்; சார்தலுமே - அடைதலுமே,அது திருவருட்டுணையானே தற்போதங்கெட்டுச் சிவபோதம் மேலிட்டு ஜீவச்செயலெல்லாம் சிவச்செயலா யடைதலாம். (௰) நுந்து - தள்ளப்பட்ட; நாய் - நாயினேன்; உற்ற - மிக்க; தாயுற்றுவந்து - தாய்போ லெழுந்தருளிவந்து; தேயுற்ற - தேசுற்ற, ஒளிமிகுந்த. (௧௧) அன்னம் திளைக்கும் - அழகு நிரம்பின. (௧௨) சீ - இக.

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேது மில்லாதென் செய்பணிகள் கொண்டருளும்
தாயான வீசற்கே சென்றூதாய் கோத்தும்பீ. (கஉ)

நான்றனக் கன்பின்மை நானுந்தா னும்மறிவோம்
தானென்னை யாட்கொண்ட தெல்லாருந் தாமறிவார்
ஆன கருணையு மங்குற்றே தானவனே
கோனென்னைக் கூடக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ. (கங)

கருவா யுலகினுக் கப்புறமா யிப்புறத்தே
மருவார் மலர்க்குழன் மாதினொடும் வந்தருளி
அருவாய் மறைபயி லந்தணனா யாண்டுகொண்ட
திருவான தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ. (கச)

நானுமென் சிந்தையு நாயகனுக் கெவ்விடத்தோம்
தானுந்தன் றையலுந் தாழ்சடையோ னுண்டிலனேல்
வானுந் திசைகளு மாகடலு மாயபிரான்
தேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ. (கரு)

உள்ளப் படாத திருவுருவை யுள்ளுதலும்
கள்ளப் படாத களிவந்த வான்கருணை
வெள்ளப் பிரானெம் பிரானென்னை வேறேயாட்
கொள்ளப் பிரானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. (கசு)

பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாடோறும்
மெய்யாக் கருதிக் கிடந்தேனை யாட்கொண்ட
ஐயாவென் னாருயிரே யம்பலவா வென்றவன்றன்
செய்யார் மலரடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ. (கஎ)

ழ்ச்சி; ஏதம் - சிறிதும். (கங) ஆன - உண்டான; அங்குஉற்றே - அங்கு மருந்ததே. (கச) கரு - பிறப்பிடம்; திருஆன - அழகாகிய. (கசு) உள்ளப்படாத - நினைக்கமுடியாத; உள்குதலும் - பாவனாதீதமாய் அருளைக்கொண்டு நினைத்தலும்; களிவந்த - களிப்புமிகுந்த. (கஎ) அம்பலவா - பொன்னம்பலவனே; செய்யார்மலர் - செந்நிறம் பொருந்திய தாமரைமலர். (கஅ) துகில் - ஆடை; குழை - குண்ட

தோலுந் துகிலுங் குழையுஞ் சுருடோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமுந் தொக்க வளையு முடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ. (க௮)

கள்வன் கடியன் கலதியிவ னென்னாதே
வள்ளல் வரவர வந்தொழிந்தா னென்மனத்தே
உள்ளத் துறுதுய ரொன்றொழியா வண்ணமெல்லாம்
தெள்ளுங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. (க௯)

பூமே லயனோடு மாலும் புகலரிதென்
றேமாறி நிற்க வடியே னிருமாக்க
நாய்மேற் றவிசிட்டு நன்றாய்ப் பொருட்படுத்த
தீமேனி யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. (உ0)

திருச்சிற்றம்பலம்.

லம்; தொக்க - திரண்ட. இந்தப்பாசுரம் அர்த்தநாரீசுர பெரிய கோலத்தைக்கூறியதாகலின் தோல், குழை, நீறுமுதலியவை முதல்வனுக்கும், துகில், தோடு, பசுஞ்சாந்து முதலியவை முதல்விக்குங் கொள்ளக்கிடக்கின்றன. சூரியன் ஒரே பொருளாயிருப்பினும் குணத்தன்மை குணித்தன்மை என்னுந்தன்மை வேறுபாட்டால் சூரியன் ஒளி யென இருவகையாய் எண்ணப்படுவதுபோல் சிவம் ஒரே பொருளாயினும் குண குணிபாவத்தால் அம்மை அப்பாவென இருமையாக மதிக்கப்படுகின்றது. அவ்வுண்மை விளங்கவே இந்தப் பண்டைக்கோலம் ஏற்பட்டது. (அம்மையென்றால் பெண்ணுருவமன்று). உலகத்திலுள்ள எந்தப்பொருளினும் இவ்வித குணத்தன்மை குணித்தன்மை இல்லாம லிருக்கவில்லை யாதலின் அவையாவும் அம்மை யப்பனைப்போல் உள்பொருளே யன்றி மித்தையல்ல. ஆனாலவை காரியரூபத்தில் நிலையில்லாதன. காரணத்தில் உள்ளன. எனவே, காரணத்தில் தோன்றாது சூக்ஷ்மமாய் நின்று காரியத்தில் ஸ்தூலமாய் விளங்கித்தோன்றி நிற்கும். (க௯) கடியன் - கொடியன்; கலதி - மூதேவி; வரவர - நாளுக்குநாள்; தெள்ளும்-தெளிந்த. (உ0) ஏமாறிநிற்க - தடுமாறிநிற்க, எத்துணைப் பெரியாராயினும் அன்பரல்லாதார்க்கு அரியராய் மிகச்சேய்மைக் கண்ணும், அஃதுடையாரெவராயினும் அவர்களுக் கெளியராய் மிக அணிமைக்கண்ணும் இருப்பது அவரது அசாதாரணகுண மென்பது வலியுறுத்தப்பட்டது.

திருத்தெள்ளேணம்.

சிவனோடடைவு

௭ - து. சிவனுடனே சென்று கூடுதல்.

தில்லையிலருளிச் செய்யப்பட்டது.

இதுவுமது.

திருச்சிற்றம்பலம்.

திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநா மறியவோ ரந்தணனா யாண்டுகொண்டான்
ஒருநாம மோருருவ மொன்றுமில் லாற்காயிரம்
திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ. (௧)

திருவார் பெருந்துறை மேயபிரா னென்பிறவிக்
கருவே ரறுத்தபின் யாவரையுங் கண்டதில்லை
அருவா யுருவமு மாயபிரா னவன்மருவும்
திருவாரூர் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ. (௨)

அரிக்கும் பிரமற்கு மல்லாத தேவர்கட்கும்
தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம் வந்து நம்மை
உருக்கும் பணிகொள்ளு மென்பதுகேட் டுலகமெல்லாம்
சிரிக்குந் திறம்பாடித் தெள்ளேணங் கொட்டாமோ. (௩)

அவமாய தேவ ரவகதியி லழுந்தாமே
பவமாயங் காத்தென்னை யாண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலு நாமொழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. (௪)

---

(௧) உரு - வடிவம்; தெள்ளேணம் - மகளிர்விளையாட்டி லொன்று. (௨) திரு - அழகு, செல்வம்; மருவும் - எழுந்தருளி யிருக்கின்ற. (௪) அவமாய - வீணாகிய; தேவர் - பிறப்பிறப்பை.

அருமந்த தேவ ரயன்றிருமாற் கரியசிவம்
உருவந்து பூதலத்தோ ருகப்பெய்தக் கொண்டருளிக்
கருவெந்து வீழக் கடைக்கணித்தென் னுளம்புகுந்த
திருவந்த வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. (௫)

அரையாடு நாக மசைத்தபிரா னவனியின்மேல்
வரையாடு மங்கைதன் பங்கொடும்வந் தாண்டதிறம்
உரையாட வுள்ளொளியாட வொண்மாமலர்க் கண்களினீர்த்
திரையாடு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. (௬)

ஆவா வரியயனிந் திரன்வானோர்க் கரியசிவன்
வாவாவென் றென்னையும்பூ தலத்தேவலித் தாண்டுகொண்டான்
பூவா ரடிச்சுவ டென்றலைமேற் பொறித்தலுமே
தேவான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. (எ)

கறங்கோலை போல்வதோர் காயப்பிறப்போ டிறப்பென்னும்
அறம்பாவமென் றிரண்டச்சந் தவிர்த்தென்னை யாண்டுகொண்டான்
மறந்தேயுந் தன்கழலன் மறவாவண்ண நல்கியவத்
திறம்பாடல் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ. (அ)

கன்னா ருரித்தென்ன வென்னையுந்தன் கருணையினால்
பொன்னார் கழல்பணித் தாண்டபிரான் புகழ்பாடி
மின்னேர் நுடங்கிடைச் செந்துவர்வாய் வெண்ணகையீர்
தென்னா தென்னா வென்று தெள்ளேணங் கொட்டாமோ. (௯)

யுடைய தேவர்; பவம் – மாயம்; காத்து – பிறவி மயக்கத்தைத் தடுத்து; நவம் - புதிய; நாம் ஒழிந்து - நாம் என்னும் ஆன்ம அறிவு அற்று; சிவம் ஆன ஆறு – சிவ அறிவு மாத்திரையாய் ஆனவிதம்; எக்காலத்தும் சிவாநுபவச் செல்வராய் இறைவன் மலரடிக்கீழிருந்த இவர் அவ்வாறு மொழிந்தது உண்மை அறிவுறுத்தும் பொருட்டே. (௫) அருமந்த - அருமருந்தன்ன; கரு – பிறவிக்குமூலம்; கடைக் கணித்து - கடைக்கண்ணால் நோக்கி; திருவந்த – மேன்மையுண்டான. (௬) அரை – இடுப்பு; அசைத்த – கட்டிய; அவனி – பூமி; பங்கு - பாகம்; உள் - மனம்; ஒளி ஆட – ஒளி விளங்க; திரை ஆடும் – அலை வீசும். (எ) ஆவா – ஐயோ; பூஆர் – தாமரைமலர் போன்ற; பொறித்தல் – பதியவைத்தல்; தே – தெய்வத்தன்மை. (அ) கறங்கு ஓலை – சுழலுகிற சுருளோலை; காயப்பிறப்பு – தேகத்

கனவேயுந் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்
புனவே யனவளைத் தோளியொடும் புகுந்தருளி
நனவே யெனைப்பிடித்தாட் கொண்டவா நயந்துநெஞ்சம்
சினவேற்க ணீர்மல்கத் தெள்ளேணங் கொட்டாமோ. (௰)

கயன்மாண்ட கண்ணிதன் பங்கனெனைக்கலந் தாண்டலுமே
அயன்மாண் டருவினைச்சுற் றமுமாண் டவனியின்மேல்
மயன்மாண்டு மற்றுமுள்ள வாசகமாண் டென்னுடைய
செயன்மாண்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. (௧௧)

முத்திக் குழன்று முனிவர்குழா நனிவாட
அத்திக் கருளி யடியேனை யாண்டுகொண்டு
பத்திக் கடலுட் பதித்த பரஞ்சோதி
தித்திக்கு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. (௧௨)

பார்பாடும் பாதாளர் பாடும்விண் ணோர்தம்பாடும்
ஆர்பாடுஞ் சாரா வகையருளி யாண்டுகொண்ட
நேர்பாடல் பாடி நினைப்பரிய தனிப்பெரியோன்
சீர்பாடல் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ. (௧௩)

மாலே பிரமனே மற்றொழிந்த தேவர்களே
நூலே நுழைவரியா னுண்ணியனாய் வந்தடியேன்
பாலே புகுந்து பரிந்துருக்கும் பாவகத்தால்
சேலேர்கண் ணீர்மல்கத் தெள்ளேணங் கொட்டாமோ. (௧௪)

உருகிப் பெருகி யுளங்குளிர முகந்துகொண்டு
பருகற் கினிய பரங்கருணைத் தடங்கடலை

தோற்றம். (௯) பணித்து - வணங்குவித்து; நடங்கு - துவள்கின்ற. (௰) புனம் வேய் அன - புன மூங்கிலை யொத்த; வளை - தொடி; நனவு-சாக்கிராவஸ்தை. (௧௧) கயல் - கயல்மீன்; அயல்மாண்டு-அன்னியமானவை அற்று; வாசகம் - சொற்கள்; செயல் மாண்ட ஆறு - செய்கையற்ற விதம், அதாவது சும்மாவிருத்தல். எனது செயல் நினதுசெயல் என்றபடி அவ்விடத்து யானெனுந் தன்மையின்றாம். (௧௨) நனி - மிகவும்; அத்தி - யானை. (௧௩) பார்பாடும் - பூமியிலுள்ளோரிடத்தும்; பாதாளர் - பாதாள லோகத்தார்; விண்ணோர்தம் - தேவலோகத்தார்; ஆர்பாடும் - எவரிடத்தும். (௧௪) அடியேன்பால் - அடியேன் பக்கல்; பாவகம் - இயல்பாயுள்ள கருணைக்குணம். (௧௫)

மருவித் திகழ்தென்னன் வார்கழலே நினைந்தடியோம்
திருவைப் பரவிநாந் தெள்ளேணங் கொட்டாமோ. (கரு)

புத்தன் புரந்தரா தியயன்மால் போற்றிசெயும்
பித்தன் பெருந்துறை மேயபிரான் பிறப்பறுத்த
அத்த னணிதில்லை யம்பலவ னருட்கழல்கள்
சித்தம் புகுந்தவா தெள்ளேணங் கொட்டாமோ. (கசு)

உவலைச் சமயங்க ளொவ்வாத சாத்திரமாம்
சவலைக் கடலுள ளாய்க்கிடந்து தடுமாறும்
கவலைக் கெடுத்துக் கழலிணைக டந்தருளும்
செயலைப் பரவிநாந் தெள்ளேணங் கொட்டாமோ. (கஎ)

வான்கெட்டு மாருத மாய்ந்தழனீர் மண்கெடினுந்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்
கூன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டெ னுள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. (கஅ)

திரு - பாக்கியம், புண்ணியம். (கசு) புத்தன் - என்றும் புதுமையை யுடையவன். (கஎ) உவலைச்சமயங்கள் - பொய்மதங்கள்; அவை இம்மைக்கேற்ற சில சுகவழிகளை மட்டும் கவனித்தனவே யன்றி மறுமை, வீடு இவற்றிற்குரிய அறிவு படைத்தனவல்ல. அவற்றிற்குக் காரணம் அவரவரது அபக்குவ நிலையே. ஆதலாலவை சாவிபோம்சமயங்கள். சவலைக் கடல் - மெலிவுக்குக் காரணமாகிய கடல்; கவலை - துன்பம். (கஅ) கெட்டு - அழிந்து; சலிப்பு - சலித்தல்; ஊன் - இந்திரியம்; உயிர் - பிராணன்; உணர்வு - கரணவுணர்ச்சி; உள்ளம் - புருஷதத்துவம், உள்ளந்தக்கரண வுணர்ச்சி, சீவ அறிவு, தற்போதம், (அது ஆன்ம அறிவையிடமாகக் கொண்டிருப்பது); நான் - சேடமாய்த் தனித்துநின்ற ஆன்ம அறிவு; கெட்ட ஆறுபாடி - கெட்ட விதத்தைப்பாடி, அது அக்கினியானது விறகு முதலியவற்றைத் தகித்துவிட்டுத் தானும் நசித்துப்போகிறது போல் ஆன்ம அறிவும் துக்க நிவர்த்தி செய்துவிட்டுத் தானும் அடங்கிவிடும். உண்மை இவ்வாறிருக்க அந்தக் கரணதண்டம் புறக்கரணதண்டஞ் செய்ய சக்தியற்ற அற்ப அறிவிலிகளுங் கூட நீரில் பிரதிபிம்பிக்கின்ற கனிகளையருந்தி மகிழ்வார்போன்று நானே பிரமம், என்னிறைவே பரிபூரணம் என்று பிதற்றுதல் செய்துகொண்டு அன்பின்வழிநின்று அதனால் தூயகதிபெறுது பங்கயாசனன் முதல்தேவரும், பாருள பெரியோரும், கங்கையாதி தீர்த்தமும், தேசமும்,

விண்ணோர் முழுமுதல் பாதாளத் தார்வித்து
மண்ணோர் மருந்தயன் மாலுடைய வைப்படியோம்
கண்ணார வந்துநின்றான் கருணைக் கழல்பாடித்
தென்னாதென் னாவென்று தெள்ளேணங் கொட்டாமோ. (க௯)

குலம்பாடிக் கொக்கிற கும்பாடிக் கோல்வளையாள்
நலம்பாடி நஞ்சுண்ட வாபாடி நாடோறும்
அலம்பார் புனற்றில்லை யம்பலத்தே யாடுகின்ற
சிலம்பாடல் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ. (உ௰)

திருச்சிற்றம்பலம்.

காலமும், மறைநாலும், அங்கமாறும், மந்திரங்களும், தவங்களும் அசத்தியமென்று பறை யறைந்துகொண்டு வாணாளைக் கழிப்பது யாது பயன் கருதியோ! யமனுக்கு இரையாகவோ! அறியேம். ஆன்ம ஞானங் கைவரப்பெற்ற பின்னர் கூறினாலும் அடுத்த ஜன்மமாவது சைவமாஞ் சமயஞ்சார ஊழுண்டாகலாம். சிவதா! சிவதா!! அசுர வேதாந்தம் எற்றுக்கோ! (க௯) வைப்பு - புதையல்; கண்ணார - கண்களால் பருக. (உ௰) குலம் - மேன்மை; கோல் - அழகிய; அலம்பு ஆர் புனல் - சப்தித்தலையும் நிறைவையுமுடைய நீர்.

*திருச்சாழல்.

சிவனுடையகாருணியம்

எ - து. சிவனுடைய அருட்சத்தி விளையாட்டு.

தில்லையிலருளிச் செயப்பட்டது.

இதுவுமது.

திருச்சிற்றம்பலம்.

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதுந் திருவாயான் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவ னெவ்வுயிர்க்கு மியல்பானான் சாழலோ. (க)

(க) பொங்கு - சீறு; என்னை - யாதுபயன்; இயல்பு - உன்னில் உன்னும் உனுவிடில் விட்டிடும் என்னும் இயல்பு; சாழல் - மகளிர் விளையாட்டிலொன்று. (உ) எல்லார்க்கும் தான் ஈசன் -

* ஈழநாட்டரசனது புதல்வியாகிய ஊமைப்பெண்ணை நம் மணிவாசகப்பிரான் பார்த்து அவளது ஊமைத்தன்மையை நீக்கிய தன்றி வித்தியா சாமர்த்தியத்தையும் உண்டாக்கக் கருதி சிவபிரானது புகழ்களைப் பாட்டாகப் பாடி வினவினரெனவும், உடனே "விரும்புந் திருத்தில்லை யம்பலத்தானருள் மேவிலொரு, துரும்பும் படைத்தளிக்கும் அகிலாண்டத் தொகுதியையே." என்றபடி தற்சுதந்தரமில்லாத அவ்வூமைப்பெண் சிவாதிஷ்டானத்தினலே பாட்டாகவே விடைபகர்ந்தன ளெனவும் அறிக. அதுவே திருச்சாழலாம். அன்றியும், புத்தர் வினவிய தர்க்க வினக்களுக்கெல்லாம் அவ்வூமைப்பெண் அடிகளது கிருபாகடாக்ஷ வீக்ஷண்யத்தால் வேத சிவாகமங்களை யோதியுணர்ந்த மஹா பண்டிதையைப்போல் வசன ரூபமாக எதிருத்தரங் கூறினளெனவும், அவ்வினு வுத்தரங்களையே திருச்சாழல் என்னுந் திருவாசகமாக சுவாமிகள் ஓதியருளினரெனவும் புராணங் கூறும்.

என்னப்ப னெம்பிரா னெல்லார்க்குந் தானீசன்
துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது வென்னேடீ
மன்னுகலை துன்னுபொருண் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ. (உ)

கோயில் சுடுகாடு கொல்புலித்தோ னல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்றனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்றனிய னாயிடினும்
காயி லுலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ. (ங)

அயனை யனங்கனை யந்தகனைச் சந்திரனை
வயனங்கண் மாயா வடுச்செய்தான் காணேடீ
நயனங்கண் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்
சயமன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ. (ச)

தக்கனையு மெச்சனையுந் தலையறுத்துத் தேவர்கணம்
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதா னென்னேடீ
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்தருளி யருள்கொடுத்தங்
கெச்சனுக்கு மிகைத்தலைமற் றருளினன்காண் சாழலோ. (ரு)

அலரவனு மாலவனு மறியாமே யழலுருவாய்
நிலமுதற்கீ ழண்டமுற நின்றதுதா னென்னேடீ
நிலமுதற்கீ ழண்டமுற நின்றிலனே லிருவருந்தம்
சலமுகத்தா லாங்காரந் தவிரார்காண் சாழலோ. (சு)

ஸர்வ ஜீவராசிகளுக்கும் ஈசனாயிருப்பவன் தானொருவனே. எவ்வெவர் எவ்வெத் தேவரைக் குறித்து வழிபாடியற்றினும் முடிவில் அவ்வத் தேவரிடமாக நின்று அவற்றையேற்று அவரவர் வேண்டிய பலன்களை அளிக்கவல்ல முழுமுதற் கடவுள் சிவபெருமானொருவரே யாதலின் எல்லாருக்கும் அவரே ஈசராவர். துன்னம் பெய்கோவணம் - தைத்ததுணியை அணியத்தகுந்த கோவணமாக; துன்னுபொருள் - செறிந்த பல பொருள்கள். (ங) சுடுகாடு - மயானம்; காயின் - கோபிக்கின்; கற்பொடி - கற்றூள். (ச) அநங்கனை - மன்மதனை; அந்தகனை - யமனை; வயனங்கள் - வகைகள்; மாயா - கெடாத; வடு - தழும்பு. (ரு) எச்சன் - யாககர்த்தா; தொக்கனவந்து - ஓர்வித சப்தத்தோடுவந்து; மிகைத்தலை - மிகுதியாகிய தலை, அதாவது ஆட்டின் தலை. (சு) அலரவன் - பிரமன்; நிலமுதற் கீழ்

மலைமகளை யொருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தா லவன்சடையிற் பாயுமது வென்னேடீ
சலமுகத்தா லவன்சடையிற் பாய்ந்திலளேற் றரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாஞ் சாழலோ. (எ)

கோலால மாகிக் குரைகடல்வா யன்றெழுந்த
ஆலால முண்டா னவன் சதுர்தா னென்னேடீ
ஆலால முண்டிலனே லன்றயன்மா லுள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ. (அ)

தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ. (கூ)

தானந்த மில்லான் றனையடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ. (ய)

நங்காயி தென்னதவ நரம்போ டெலும்பணிந்து
கங்காளந் தோண்மேலே காதலித்தான் காணேடீ
கங்காள மாமாகேள் காலாந் தரத்திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ. (கக)

கானார் புலித்தோ லுடைதலையூண் காடுபதி
ஆனா லவனுக்கிங் காட்படுவா ராரேடி

பூமி முதல் கீழ் புவனங்களுக்குங் கீழாக; அண்டம் உற - ஆகாயத்தைப் பொருந்த; சலமுகத்தால் - கோபங்காரணமாக. (எ) சலமுகத்தால் - நீர் உருவால்; தரணி - பூமி; பிலம்முகத்தே - பாதாளத்தினிடத்தில்; (அ) கோலாலம் ஆகி - பேரிரைச்சல் செய்துகொண்டு; கடல்வாய் - கடலினிடத்து; ஆலாலம் - ஆலகால விஷம்; வீடுவர் - மடிவர். (கூ) தென்பால் - தென்றிசை; விண்பால் - விண்ணுலகம்; இயோகு எய்தி - யோகத்தையடைந்து; வீடுவர் - அடையப்பெறுவர். (ய) வான் உந்து - விண்ணுலகில் வாழ்கின்ற; வான்பொருள் - மேலான பொருள். (கக) கங்காளம் - தசையற்ற உடம்பின் முழு எலும்பு; ஆமா - ஆம்ஆறு, வந்தவிதம்; இருவர் - பிரம விஷ்ணுக்

ஆனாலுங் கேளா யயனுந் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார் சாழலோ. (௧௨)

மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்டிருவை
உலகறியத் தீவேட்டா னென்னுமது வென்னேடீ
உலகறியத் தீவேளா தொழிந்தனனே லுலகனைத்தும்
கலைநவின்ற பொருள்களெல்லாங் கலங்கிடுங்காண் சாழலோ. (௧௩)

தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது வென்னேடீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேற் றரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக் கூட்டாங்காண் சாழலோ. (௧௪)

கடகரியும் பரிமாவுந் தேருமுகந் தேறாதே
இடபமுகந் தேறியவா றெனக்கறிய வியம்பேடீ
தடமதில்க ளவைமூன்றுந் தழலெரித்த வந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் றிருமால்காண் சாழலோ. (௧௫)

நன்றாக நால்வர்க்கு நான்மறையி னுட்பொருளை
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தா னாயிடினும்
கொன்றான்காண் புரமூன்றுங் கூட்டோடே சாழலோ. (௧௬)

அம்பலத்தே கூத்தாடி யமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையுந் தேவனென்று நண்ணுமது வென்னேடீ
நம்பனையு மாமாகே ளான்மறைக ளாமறியா
எம்பெருமா னீசாவென் றேத்தினகாண் சாழலோ. (௧௭)

கள். (௧௨) கானர் - காட்டில் வசிக்கும்; தலையூண் - தலை ஓடு உண்கலம்; காடுபதி - மயானம் ஊர்; அரையன் - அரசன்; வாள் நுதல் - ஒளி பொருந்திய நெற்றி; தீவேட்டான் - அக்கினி முன் மணஞ் செய்தான்; கலைநவின்ற-சாஸ்திரஞ் சொன்ன. (௧௪) தேன் புக்க - தேன்பாய்கிற; பணை - வயல்; நட்டம் - நடனம்; ஊன்புக்க - தசைபொருந்திய; ஊட்டுஆம் - உண்பொருளாம். (௧௫) கடம்கரி - மதயானை; பரிமா - குதிரை; உகந்து - விரும்பி; தடம் - பெரிய; எரித்த - நீறாக்கின; கூட்டோடே - வேரோடு; கொன்றான் - அழித்தான். (௧௭) பலிதிரியும் - பிச்சைக்கு உழலாநின்ற; நண்ணுமது-அடைவது. (௧௮) தடிந்த - சேதித்த; நயனம் இடந்து - கண்

சலமுடைய சலந்தரன்ற னுடறடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ
நலமுடைய நாரணன்ற னயனமிடந் தரனடிக்கீழ்
அலராக விடவாழி யருளினன்காண் சாழலோ. (கஅ)

அம்பரமாம் புள்ளித்தோ லாலால மாரமுதம்
எம்பெருமா னுண்டசது றெனக்கறிய வியம்பேடீ
எம்பெருமா னேதுடுத்தங் கேதமுது செய்திடினும்
தம்பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ. (க௯)

அருந்தவருக் காலின்கீ ழறமுதலா நான்கனையும்
இருந்தவருக் கருளுமது வெனக்கறிய வியம்பேடீ
அருந்தவருக் கறமுதலு னன்றருளிச் செய்திலனேல்
திருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ. (உ௰)

திருச்சிற்றம்பலம்.

ணைத் தோண்டி; அலர் ஆகஇட - தாமரை மலராக இட. (க௯) அம்பரம் - ஆடை; ஆர் - அரிய. (உ௰) அருந்தவர் - சனகாதி நால்வர்; அறம் முதலாம் நான்கு - அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கு; திருந்து - திருந்திய; உலகுஇயற்கை - லௌகிக இயல்புகள்.

திருப்பூவல்லி.

மாயாவிசய நீக்குதல்

எ - து. மாயையின் பலத்தை மறுத்தல்.

தில்லையிலருளிச் செயப்பட்டது.

இதவுமது.

திருச்சிற்றம்பலம்.

இணையார் திருவடி யென்றலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்க ளத்தனையுந் துறந்தொழிந்தேன்
அணையார் புனற்றில்லை யம்பலத்தே யாடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ. (க)

எந்தையெந் தாய்சுற்ற மற்றுமெல்லா மென்னுடைய
பந்த மறுத்தென்னை யாண்டுகொண்ட பாண்டிப்பிரான்
அந்த விடைமருதி லானந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ. (உ)

நாயிற் கடைப்பட்ட நம்மையுமோர் பொருட்படுத்துத்
தாயிற் பெரிதுந் தயாவுடைய தம்பெருமான்

(க) இணையார் - தனக்குத்தானே நிகராயிருக்கிற; திருவடி - ஞானசத்தி கிரியாசத்தியென்னுந் திருவடிகள்; வைத்தலுமே - சூட்டுதலுமே, அது திருவடி தீக்ஷையாம். அத்தீக்ஷை ஆணவமல சத்தியைக் குன்றுவித்துப் பரமுத்திபயப்பித்தற்கு மிகச்சிறப்புடைத்து. துறந்து - விட்டு; அணைஆர் - அணைபொருந்திய; புணையாளன் - (பவக்கடல்கடக்க) மரக்கலம்போன்றவன். (உ) அந்தம் - அழகாகிய; இடைமருதில் - திருவிடைமருதூரில்; பொந்தை - பொந்துபோன்ற சிவபிரானை. (ங) பொடிஅட்டி - புழுதியைக் கொட்டி. (ச) பண்பட்ட - சீர்பொருந்திய; எண்பட்ட - மதிப்

மாயப் பிறப்பறுத் தாண்டானென் வல்வினையின்
வாயிற் பொடியட்டிப் பூவல்லி கொய்யாமோ. (௩)

பண்பட்ட தில்லைப் பதிக்கரசைப் பரவாதே
எண்பட்ட தக்க னருக்கனெச்ச னிந்துவனல்
விண்பட்ட பூதப் படைவீர பத்திரரால்
புண்பட்ட வாபாடிப் பூவல்லி கொய்யாமோ. (௪)

தேனாடு கொன்றை சடைக்கணிந்த சிவபெருமான்
ஊனாடி நாடிவந் துள்புகுந்தா னுலகர்முன்னே
நானாடி யாடிநின் றோலமிட நடம்பயிலும்
வானாடர் கோவுக்கே பூவல்லி கொய்யாமோ. (௫)

எரிமூன்று தேவர்க் கிரங்கியருள் செய்தருளிச்
சிரமூன் றறத்தன் றிருப்புருவ நெரித்தருளி
உருமூன்று மாகி யுணர்வரிதா மொருவனுமே
புரமூன் றெரித்தவா பூவல்லி கொய்யாமோ. (௬)

வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்
திணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கொ டணிதில்லை யம்பலத்தே யாடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. (௭)

நெறிசெய் தருளித்தன் சீரடியார் பொன்னடிக்கே
குறிசெய்து கொண்டென்னை யாண்டபிரான் குணம்பரவி
முறிசெய்து நம்மை முழுதுடற்றும் பழவினையைக்
கிறிசெய்த வாபாடிப் பூவல்லி கொய்யாமோ. (௮)

பமைந்த; அருக்கன் - சூரியன்; இந்து - சந்திரன்; அனல் - அக்கினிதேவன்; விண்பட்ட - ஆகாயத்தை அளாவிய; புண்பட்ட - காயப்பட்ட. (௫) ஊன் நாடிநாடி வந்து - மானுடசரீரத்தைத் தாங்கிக்கொண்டுவந்து; நாடிஆடி - தேடியாடி; பயிலும் - செய்யும். (௬) எரிமூன்றுதேவர் - எரிகின்றமுச்சுடர். (௭) அணங்கொடு - தெய்வத்தன்மையோடு; கூரப்பாடி - மிகவும்பாடி. (௮) நெறி - சன்மார்க்கம்; செய்தருளி - உண்டுபண்ணி; குறி - இலக்கு; முறி - அடிமை; உடற்றும் - வருந்துகின்ற; கிறிசெய்த-சூன்யமாக்கின. (௯) ஆகம் - மனது; துன்ன - பொருந்த; ஆனஆறு - (அருமை) ஆன விதம்;

பன்னாட் பரவிப் பணிசெய்யப் பாதமலர்
என்னாகந் துன்னவைத்த பெரியோ னெழிற்சுடராய்க்
கன்னா ருரித்தென்னை யாண்டுகொண்டான் கழலிணைகள்
பொன்னான வாபாடிப் பூவல்லி கொய்யாமோ. (௯)

பேராசை யாமிந்தப் பிண்டமறப் பெருந்துறையான்
சீரார் திருவடி யென்றலைமேல் வைத்தபிரான்
காரார் கடனஞ்சை யுண்டுகந்த காபாலி
போரார் புரம்பாடிப் பூவல்லி கொய்யாமோ. (௰)

பாலு மமுதமுந் தேனுடனும் பராபரமாய்க்
கோலங் குளிர்ந்துள்ளங் கொண்டபிரான் குரைகழல்கள்
ஞாலம் பரவுவார் நன்னெறியா மந்நெறியே
போலும் புகழ்பாடிப் பூவல்லி கொய்யாமோ. (௧௧)

வானவன் மாலயன் மற்றுமுள்ள தேவர்கட்கும்
கோனவ னாய்நின்று கூடலிலாக் குணக்குறியோன்
ஆன நெடுங்கட லாலால மமுதுசெய்யப்
போனக மானவா பூவல்லி கொய்யாமோ. (௧௨)

அன்றால நீழற்கீ ழருமறைக ளானருளி
நன்றாக வானவர் மாமுனிவர் நாடோறும்
நின்றார வேத்து நிறைகழலோன் புனைகொன்றைப்
பொன்றாது பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. (௧௩)

படமாக வென்னுள்ளே தன்னிணைப்போ தவையளித்திங்
கிடமாகக் கொண்டிருந் தேகம்ப மேயபிரான்
தடமா மதிற்றில்லை யம்பலமே தானிடமா
நடமாடு மாபாடிப் பூவல்லி கொய்யாமோ. (௧௪)

அங்கி யருக்க னிராவணனந் தகன்கூற்றன்
செங்க ணரியய னிந்திரனுஞ் சந்திரனும்

(௰) பிண்டம் - உடம்பு; காரார் - கருமைபொருந்திய; காபாலி - கபாலத்தையுடையவன்; புரம் - திரிபுரதகனஞ்செய்தமை. (௧௨) போனகம் - உணவு. (௧௩) ஆர - நிரம்ப. (௧௫) பரிசு - குணம்;

பங்கம் றக்கனு மெச்சனுந்தம் பரிசழியப்
பொங்கியசீர் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. (கரு)

திண்போர் விடையான் சிவபுரத்தார் போரேறு
மண்பான் மதுரையிற் பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் றன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. (கசு)

முன்னாய மாலயனும் வானவருந் தானவரும்
பொன்னார் திருவடி தாமறியார் போற்றுவதே
என்னாக முள்புகுந் தாண்டுகொண்டா னிலங்கணியாம்
பன்னாகம் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. (கள)

சீரார் திருவடித் திண்சிலம்பு சிலம்பொலிக்கே
ஆராத வாசையதா யடியே னகமகிழத்
தேரார்ந்த வீதிப் பெருந்துறையான் றிருநடஞ்செய்
பேரானந் தம்பாடிப் பூவல்லி கொய்யாமோ. (கஅ)

அத்தி யுரித்தது போர்த்தருளும் பெருந்துறையான்
பித்த வடிவுகொண் டிவ்வுலகிற் பிள்ளையுமாம்
முத்தி முழுமுதலுத் தரகோச மங்கைவள்ளல்
புத்தி புகுந்தவா பூவல்லி கொய்யாமோ. (கசு)

* மாவார வேறி மதுரைநகர் புகுந்தருளித்
தேவார்ந்த கோலந் திகழப் பெருந்துறையான்
கோவாகி வந்தெம்மைக் குற்றேவல் கொண்டருளும்
பூவார் கழல்பரவிப் பூவல்லி கொய்யாமோ. (உ0)

திருச்சிற்றம்பலம்.

பொங்கிய - கோபித்த. (கசு) ஏறு - சிங்கம்; தண்டு - பிரம்பு; புண் பாடல் - புண்ணைப்பற்றிய பாடல். (கள) முன்னாய - முதன்மை யாகிய; ஆகம்உள் - மனத்துள்; இலங்குஅணி - விளங்குகின்ற ஆபர ணம்; பல்நாகம் - பலநாகாபரணங்கள். (கஅ) சிலம்புஒலிக்கே - சப் திக்கிற சப்தத்துக்கே. * இத் திருப்பாசுரஞ்சில பிரதிகளிற் காணப் பட்டிருத்தலானும் திருப்பதிகத் தொகையைக் குறிக்குஞ் செய்யு ளினும் திருப்பூவல்லி இருபது திருப்பாசுரங்களை யுடைத்து எனக் கூறியிருப்பதனானுஞ் சேர்க்கப்பட்டது.

திருவுந்தியார்.

ஞானவெற்றி

எ - து. அருட்சத்தியினுடைய சாமர்த்தியம்.

தில்லையிலருளிச் செயப்பட்டது.

கலித்தாழிசை.

திருச்சிற்றம்பலம்.

வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புர முந்தீபற
ஒருங்குடன் வெந்தவா றுந்தீபற. (க)

ஈரம்பு கண்டில மேகம்பர் தங்கையில்
ஓரம்பே முப்புர முந்தீபற
ஒன்றும் பெருமிகை யுந்தீபற. (உ)

தச்சு விடுத்தலுந் தாமடி யிட்டலும்
அச்சு முறிந்ததென் றுந்தீபற
அழிந்தன முப்புர முந்தீபற. (ஙூ)

உய்யவல் லாரொரு மூவரைக் காவல்கொண்
டெய்யவல் லானுக்கே யுந்தீபற
இளமுலை பங்கனென் றுந்தீபற. (ச)

(க) பூசல் - போர்; உளைந்தன - வருந்தின; உந்தீபற - குழாங் கூடிய மகளிரது ஓர் விளையாட்டு (அது, உம் தீ பற - உம்முடைய குற்றமாகிய மும்மலங்கள் உம்மை விட்டகலும்படி இவ்வுந்தியாரின் கருத்தே கருத்தாகக் கொள்க என்பதாம்). (உ) ஒன்றும் - ஓரம்பும்; மிகை - குற்றம். (ஙூ) தச்சு - தச்சுத்தொழில். (ச) மூவர் - இறவாமல் இருந்த மூன்றசுரர். (ரு) சாடிய - அழிக்கப்பட்ட; சரிந்

சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்
ஓடிய வாபாடி யுந்தீபற
உருத்திர நாதனுக் குந்தீபற. (ரு)

ஆவா திருமா லவிப்பாகங் கொண்டன்று
சாவா திருந்தானென் றுந்தீபற
சதுர்முகன் றாதையென் றுந்தீபற. (சு)

வெய்யவ னங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தானென் றுந்தீபற
கலங்கிற்று வேள்வியென் றுந்தீபற. (எ)

பார்ப்பதி யைப்பகை சாற்றிய தக்கனைப்
பார்ப்பதென் னேயேடி யுந்தீபற
பணைமுலை பாகனுக் குந்தீபற. (அ)

புரந்தர னாரொரு பூங்குயி லாகி
மரந்தனி லேறினா ருந்தீபற
வானவர் கோனென்றே யுந்தீபற. (கூ)

வெஞ்சின வேள்வி வியாத்திர னார்தலை
துஞ்சின வாபாடி யுந்தீபற
தொடர்ந்த பிறப்பற வுந்தீபற. (ய)

ஆட்டின் றலையை விதிக்குத் தலையாகக்
கூட்டிய வாபாடி யுந்தீபற
கொங்கை குலுங்கநின் றுந்தீபற. (கக)

உண்ணப் புகுந்த பகனொளித் தோடாமே
கண்ணைப் பறித்தவா றுந்தீபற
கருக்கெட நாமெலா முந்தீபற. (கஉ)

திட - அழிய. (சு) ஆவா - ஐயோ; அவி - தேவருணவு; பாகம்-பங்கு. (எ) வெய்யவன் - உஷ்ணமுடையவன்; அங்கி - அக்கினித் தேவன்; விழுங்க - உண்ண. (அ) பகைசாற்றிய - விரோதமாகப் பேசிய; பார்ப்பதென் - கண்ணோட்டஞ் செய்வதென். (கூ) புரந்தரன் - தேவேந்திரன்; (ய) வேள்வி வியாத்திரனார் - யாககுரு; துஞ்சின ஆறு - அற்றவிதம். (கக) விதி - தக்ஷன், சிறுவிதி. (கஉ) பகன் - சூரியன்; கருகெட - பிறவியொழிய. (கங) பட -

நாமக ளூசி சிரம்பிர மன்படச்
சோமன் முகனெரித் துந்திபற
தொல்லை வினைகெட வுந்திபற. (கங)

நான்மறை யோனு மகத்திய மான்படப்
போம்வழி தேடுமா றுந்திபற
புரந்தரன் வேள்வியி லுந்திபற. (கச)

சூரிய னார்தொண்டை வாயினிற் பற்களை
வாரி நெரித்தவா றுந்திபற
மயங்கிற்று வேள்வியென் றுந்திபற. (கரு)

தக்கனா ரன்றே தலையிழந் தார்தக்கன்
மக்களைச் சூழநின் றுந்திபற
மடிந்தது வேள்வியென் றுந்திபற. (கசு)

பாலக னார்க்கன்று பாற்கட லீந்திட்ட
கோலச் சடையற்கே யுந்திபற
குமரன்றன் றாதைக்கே யுந்திபற. (கஎ)

நல்ல மலரின்மே னான்முக னார்தலை
ஒல்லை யரிந்ததென் றுந்திபற
உகிரா லரிந்ததென் றுந்திபற. (கஅ)

தேரை நிறுத்தி மலையெடுத் தான்சிரம்
ஈரைந்து மிற்றவா றுந்திபற
இருபது மிற்றதென் றுந்திபற. (கக)

* ஏகாச மிட்ட விருடிகள் போகாமல்
ஆகாசங் காவலென் றுந்திபற
அதற்கப்பா லுங்காவலென் றுந்திபற. (உ0)

திருச்சிற்றம்பலம்.

அறுபட; நெரித்து - தேய்த்து. (கச) அகத்து இயமான்பட - உள்ளிருக்கும் உயிர் அழிய; போம் வழி - தப்பியோடும் வழி. (கரு) தொண்டை வாய் - கோவைக்கனி போலும் வாய்; வாரிநெரித்த - தகர்த்தெறியப்பட்ட. (கசு) மக்களைச் சூழநின்று - மக்களால் சூழப்பட்டிருந்து. (கஎ) கோலம் சடை - அழகிய சடை. (கஅ) ஒல்லை - விரைவு; உகிர் - நகம். (கக) இற்ற ஆறு - நெரிந்தவிதம்.

* இத்திருப்பாசுரமும் சில பிரதிகளிற் காணப்பட்டிருத்தலானும் திருப்பதிகத் தொகையின்படி இருபதாகலானுஞ் சேர்க்கப்பட்டது.

திருத்தோணோக்கம்.

பிரபஞ்ச சுத்தி

எ - து. ஆன்மாக்களைச் சுத்திகரித்தல்.

தில்லையிலருளிச் செயப்பட்டது.

நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே யெனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறும் பேதைகுண மாகாமே
தீர்த்தாய் திகழ்தில்லை யம்பலத்தே திருநடஞ்செய்
கூத்தா வுன்சேவடி கூடும்வண்ணந் தோணோக்கம். (க)

என்றும் பிறந்திறந் தாழாமே யாண்டுகொண்டான்
கன்றால் விளவெறிந் தான்பிரமன் காண்பரிய
குன்றாத சீர்த்தில்லை யம்பலவன் குணம்பரவித்
துன்றார் குழலினீர் தோணோக்க மாடாமோ. (உ)

பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலச வூனமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்
கருட்பெற்று நின்றவா தோணோக்க மாடாமோ. (ங)

(க) ஆரும் - நிரம்பியிருக்கிற; பேய்த்தேர் - கானல்நீர்; முகக்குறும் - மொள்ளத் தொடங்கும்; தோணோக்கம் - மகளிர் விளையாட்டிலொன்று. (உ) கன்றால் விளவு எறிந்தான் - கன்றைக் கொண்டு விளாங்கனியை எறிந்த திருமால்; துன்று ஆர் - நெருங்கிய. (ங) பொருள்பற்றி - (பூசைக்குரிய) பொருள்களைக்கொண்டு; வாய்க்கலசம் - வாயாகியகுடம்; வேடனார் - கண்ணப்பதேவர்; சேடு - பெருமை. (ச) நல்பால் படுத்து - நல்ல பகுதியில் உட்

கற்போலு நெஞ்சங் கசிந்துருகக் கருணையினால்
நிற்பானைப் போலவென் னெஞ்சினுள்ளே புகுந்தருளி
நற்பாற் படுத்தென்னை நாடறியத் தானிங்ஙன்
சொற்பால தானவா தோணோக்க மாடாமோ. (ச)

நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்
உலகே ழெனத்திசை பத்தெனத்தா னொருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ. (ரு)

புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம்
தத்த மதங்களிற் றட்டுளுப்புப் பட்டுநிற்கச்
சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்
அத்தன் கருணையினாற் றோணோக்க மாடாமோ. (சு)

படுத்திக்கொண்டு; சொல்பாலது ஆன - புகழின்பாற் பட்டதான. (ரு) உயிர் - வாயு; விசும்பு - ஆகாயம்; புலன்ஆய மைந்தன் - அறிவுடைய ஆன்மா; நின்ற - வியாபித்து நின்ற. (சு) இந்தப் பாசுரத்தின் முதலிரண்டடியிலும் பௌத்த முதலிய சமயங்களை இழித்துக்கூறிய காரணமென்னை யெனின், அவற்றின் பொருள் நிச்சய தாரதம்மியங்களை விளக்கும் பொருட்டே. அதாவது, எந்தச் சமயத்தில் நின்றாலும் முத்தி கிடைக்குமென்பது கூடாமை. ஆத்மா இல்லையென்பார் ஆத்மாவைப் பெறமாட்டார். கடவுள் இல்லையென்பார் கடவுளை வணங்கமாட்டார். மலமாயை கன்மங்கள் இல்லையென்பார் அவைகளினின்றும் நீங்கமாட்டார். ஆகையால் அவரவர் கூறும் பொருள் நிச்சயத்துக் கேற்பவே ஞானமும் ஒழுக்கமும் பயனும் வேறு வேறாயிருக்குமாதலின் அவர்கள் யாவரும் ஒரே பயனடைய ந்யாயமின்று. அதனால் அந்தந்தச் சமயவிதிப்படி யொழுகினால் பரமுத்தியடைவ தெப்படியென்பதை யோர்க. அன்றியும் வேத போதனையிலமையாத மிலேச்சமதங்கள் பலவிருக்கின்றன. அவை சரீர தத்துவங்களைப் பற்றியாவது, கன்மவிளைவைப்பற்றியாவது, இன்பதுன்ப விளைவுகளைப் பற்றியாவது, ஆன்மாவைப் பற்றியாவது, கடவுளைப் பற்றியாவது அறியாதவைகளாகவே யிருக்கின்றன. **சமரசம் சமரசம்** என்று கூறி எல்லா மதங்களும் ஒன்றேயென்று குழப்புவது சிறிதும் பொருத்தமின்று. அவையாவும் அவ்வக்கால நிலைமைக்குத் தக்கவாறே ஆண்டவனே அறிஞர் மூலமாய் அறிவுறுத்தினராதலின் அவையாவும் சமரச சன்மார்க்கமாகிய சித்தாந்த செந்நெறிக்குச் சோபானங்களாம். அவற்றைக் குறைகூறியது

தீதில்லை மாணி சிவகருமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் றாதைதனைத் தாளிரண்டும்
சேதிப்ப வீசன் றிருவருளாற் றேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம். (எ)

மான மழிந்தோ மதிமறந்தோ மங்கைநல்லீர்
வானந் தொழுந்தென்னன் வார்கழலே நினைந்தடியோம்
ஆனந்தக் கூத்த னருள்பெறினு மவ்வணமே
ஆனந்த மாகிநின் றாடாமோ தோணோக்கம். (அ)

எண்ணுடை மூவ ரிராக்கதர்க ளெரிபிழைத்துக்
கண்ணுத லெந்தை கடைத்தலைமு னின்றதற்பின்
எண்ணிலி யிந்திர ரெத்தனையோ பிரமர்களும்
மண்மிசை மால்பலர் மாண்டனர்காண் டோணோக்கம். (கூ)

பங்கய மாயிரம் பூவினிலோர் பூக்குறையத்
தங்க ணிடந்தரன் சேவடிமேற் சாத்தலுமே
சங்கர னெம்பிரான் சக்கரமாற் கருளியவா
றெங்கும் பரவிநாந் தோணோக்க மாடாமோ. (ய)

காம னுடலுயிர் காலன்பற் காய்கதிரோன்
நாமக ளுசி சிரம்பிரமன் கரமெரியைச்
சோமன் கலைதலை தக்கனையும் மெச்சனையும்
தூய்மைகள் செய்தவா தோணோக்க மாடாமோ. (கக)

பிரம னரியென் றிருவருந்தம் பேதைமையால்
பரம மியாம்பரம மென்றவர்கள் பதைப்பொடுங்க

இழிவை இழிவென்றுணர்ந்தால் உயர்வை எவருந் தேடுவர் என்னுங் கருணையே. தட்டுளுப்புப்பட்டு - தடுமாற்றமடைந்து; சித்தம் சிவமாக்கி - சித்தத்தை அன்பு மயமாகச்செய்து. (எ) மாணி - பிரமசாரி, தண்டியடிகள்; சிவகருமம் - சிவபூசை; பாதகம் - பாவம்; சோறு - அறம், சிவபுண்ணியம். (அ) மதி - அறிவு; ஆனந்தம்ஆகி - இன்பவடிவாகி (ஆன்மா சார்ந்ததின வண்ணம் சாரும் இயல்புடையதாகலின்).(கூ) எண் - மதிப்பு; எரி - நெருப்பு; கடைத்தலை-முதல் வாயில். (ய) பங்கயம் - தாமரை; இடந்து - தோண்டி; பரவி - துதித்து, பரவச்செய்து. (கக) எரி - அக்கினிதேவன்; (கஉ)

அரனு ரழலுருவா யங்கே யளவிறந்து
பரமாகி நின்றவா தோணோக்க மாடாமோ. (௧௨)

எழைத் தொழும்பனே னெத்தனையோ காலமெல்லாம்
பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே
ஊழி முதற் சிந்தாத நன்மணிவந் தென்பிறவித்
தாழைப் பறித்தவா தோணோக்க மாடாமோ. (௧௩)

உரைமாண்ட வுள்ளொளி யுத்தமன்வந் துளம்புகலும்
கரைமாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே
இரைமாண்ட விந்திரியப் பறவை யிரிந்தோடத்
துரைமாண்ட வாபாடித் தோணோக்க மாடாமோ. (௧௪)

திருச்சிற்றம்பலம்.

பதைப்பு - பதற்றம், துடிப்பு. (௧௩) தொழும்பன் - தொண்டன்; பாழுக்கு - பாழ்நிலத்துக்கு, வீணுக்கு; சிந்தாத - அழியாத; நல்மணி- சிறந்த மாணிக்கம் போன்ற சிவபிரான்; தாழை - தாளை, வேரை. (௧௪) உரைமாண்ட - சொல்லிறந்த; கரைமாண்ட - கரையற்ற; இரைமாண்ட - இரையாகிய புலன்களை (விடயங்களை) அற்ற; இரிந்து ஓட - அஞ்சியோட; துரை - துறை, (தங்குவதற்கு) இடம்.

திருப்பொன்னூசல்.

அருட்சுத்தி

எ - து. அருளோடுகலத்தல்.

தில்லையிலருளிச் செயப்பட்டது.

ஒப்புமைபற்றிவந்த ஆறடித்தரவு கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

சீரார் பவளங்கான் முத்தங் கயிறாக
வாரும் பொற்பலகை யேறி யினிதமர்ந்து
நாரா யணனறியா நாண்மலர்த்தா ளுடியேற்
கூராகத் தந்தருளு முத்தர கோசமங்கை
ஆரா வமுதி னருட்டா ளிணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூச லாடாமோ. (க)

மூன்றங் கிலங்கு நயனத்தன் மூவாத
வான்றங்கு தேவர்களுங் காணு மலரடிகள்
தேன்றங்கித் தித்தித் தமுதூறித் தான்றெளிந்தங்
கூன்றங்கி நின்றுருக்கு முத்தர கோசமங்கைக்
கோன்றங் கிடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றங் கனநடையீர் பொன்னூச லாடாமோ. (உ)

(க) கான் - கால்; முத்தம் - முத்துமாலை; நாள்மலர் - புதிதாகிய தாமரை மலர்; அருள்தாள் - அருளுருவாகிய திருவடி; போர் ஆர் - போர்த் தொழிலமைந்த. (உ) அங்குஇலங்கு - அவ்விடத்து விளங்கா நின்ற; தேன் - தேனின் சுவை; ஊன் - உடம்பு; குலம் - மேன்மை; அனநடை - அன்னம் போன்ற நடை. (௩) முன் -

முன்னீறு மாதியு மில்லான் முனிவர்குழாம்
பன்னூறு கோடி யிமையோர்க டாநிற்பத்
தன்னைத் தெனக்கருளித் தன்கருணை வெள்ளத்து
மன்னூற மன்னுமணி யுத்தர கோசமங்கை
மின்னேறு மாட வியன்மா ளிகைபாடிப்
பொன்னேறு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ. (௩)

நஞ்சமர் கண்டத்த னண்டத் தவர்நாதன்
மஞ்சதோய் மாடமணி யுத்தர கோசமங்கை
அஞ்சொலா டன்னோடுங் கூடி யடியவர்கள்
நெஞ்சுளே நின்றமுத மூறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்பறுப்பான் றூய புகழ்பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூச லாடாமோ. (௪)

ஆனை வலியோ வரிவையோ வென்றிருவர்
காணாக் கடவுள் கருணையினாற் றேவர்குழாம்
நாணாமே யுய்யவாட் கொண்டருளி நஞ்சுதனை
ஊணாக வுண்டருளு முத்தர கோசமங்கைக்
கோணார் பிறைச்சென்னிக் கூத்தன் குணம்பரவிப்
பூணார் வனமுலையீர் பொன்னூச லாடாமோ. (௫)

மாதாடு பாகத்த னுத்தர கோசமங்கைத்
தாதாடு கொன்றைச் சடையா னடியாருள்
கோதாட்டி நாயேனை யாட்கொண்டென் றொல்பிறவித்
தீதோடா வண்ணந் திகழப் பிறப்பறுப்பான்
காதாடு குண்டலங்கள் பாடிக் கசிந்தன்பால்
போதாடு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ. (௬)

நிலைக்கின்ற; பலநூறு - பலநூறு; மன் ஊறமன்னும் - பெருமை வளரும்படி நிலைபெற்ற; மணி - அழகாகிய; மின்எறு - ஒளிமிகுந்த; வியன் - மேன்மை; பொன்எறு - தேமல்படர்ந்த. (௪) மஞ்சு - மேகம்; சொல்லாள் - மொழியாளாகிய உமாபிராட்டியார்; துஞ்சல் - இறத்தல்; புஞ்சம்ஆர் - கூட்டமாகப் பொருந்திய; வெள்வளை - சங்கவளையல். (௫) நாணாமே - அஞ்சாமே; கோண் - கோணல் (வளைவு); வனம் - அழகு. (௬) ஆடு - தங்கு; போது - தாமரையின் பேரரும்பு. (எ) பன்னி - சொல்லி; பொன் - திருமகள். (அ) குடுமி-

உன்னற் கரியதிரு வுத்தர கோசமங்கை
மன்னிப் பொலிந்திருந்த மாமறையோன் றன்புகழே
பன்னிப் பணிந்திறைஞ்சப் பாவங்கள் பற்றறுப்பான்
அன்னத்தின் மேலேறி யாடு மணிமயில்போல்
என்னத்த னென்னையுமாட் கொண்டா னெழில்பாடிப்
பொன்னொத்த பூண்முலையீர் பொன்னூச லாடாமோ. (எ)

கோல வரைக்குடுமி வந்து குவலயத்துச்
சால வமுதுண்டு தாழ்கடலின் மீதெழுந்து
ஞால மிகப்பரிமேற் கொண்டு நமையாண்டான்
சீலந் திகழுந் திருவுத்தர கோசமங்கை
மாலுக் கரியானை வாயார நாம்பாடிப்
பூலித் தகங்குழைந்து பொன்னூச லாடாமோ. (அ)

தெங்குலவு சோதித் திருவுத்தர கோசமங்கை
தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமு மாட்கொள்வான்
பங்குலவு கோதையுந் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குலவு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ. (௯)

திருச்சிற்றம்பலம்.

உச்சி, சிகரம்; குவலயம் - பூமண்டலம்; தாழ் - ஆழ்ந்த; பூலித்து - பூரித்து (உடல் புளகித்து). (௯) தெங்குஉலவு - விர்த்தியடைகிற தெங்கு; தங்குஉலவு - தங்கி விளங்குகிற; எம்தரமும் - எங்கள் இனத்தையும்; கோதை - பூமாலையணிந்த உமாதேவி; கொங்கு - மணம்; குணம் - கலியாண குணம்; பொங்கு - விளக்கம், பிரகாசம்.

* அன்னைப் பத்து.

ஆத்தும பூரணம்

எ - து. ஆன்மா சிவனுடனே நிறைதல்.

தில்லையிலருளிச் செயப்பட்டது.

கலிவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

வேத மொழியர் வெண்ணீற்றர் செம்மேனியர்
நாதப் பறையின ரன்னே யென்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கு
நாதரிந் நாதனு ரன்னே யென்னும். (க)

கண்ணஞ் சனத்தர் கருணைக் கடலினர்
உண்ணின் றுருக்குவ ரன்னே யென்னும்
உண்ணின் றுருக்கி யுலப்பிலா வானந்தக்
கண்ணீர் தருவரா லன்னே யென்னும். (உ)

நித்த மணாளர் நிரம்ப வழகியர்
சித்தத் திருப்பரா லன்னே யென்னும்
சித்தத் திருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தரா னந்தரா லன்னே யென்னும். (ங)

ஆடரப் பூணுடைத் தோல்பொடிப் பூசிற்றோர்
வேட மிருந்தவா றன்னே யென்னும்
வேட மிருந்தவா கண்டுகண் டென்னுள்ளம்
வாடுமி தென்னே யன்னே யென்னும். (ச)

---

* இந்தத் திருப்பத்து ஒரு பெண் தன் தாய்க்குச் சொல்லியதாகக் கூறப்பட்டது. (க) நாதப்பறையினர்-நாததத்துவமாகிய முரசையுடையவர்; என்னும் - என்பாள்; (உ) அஞ்சனம் - மை; உலப்பு இலா - அழிவில்லாத. (ங) நித்தம் - எப்பொழுதும்; மணாளர் - மணவாளர்; நிரம்ப அழகியர் - பூரண அழகுடையவர், (எம்முருகனைப்

நீண்ட கரத்தர் நெறிதரு குஞ்சியர்
பாண்டிநன் னாடரா லன்னே யென்னும்
பாண்டி நன்னாடர் பரந்தெழு சிந்தையை
ஆண்டன்பு செய்வரா லன்னே யென்னும். (ரு)

உன்னற் கரியசி ருத்தர மங்கையர்
மன்னுவ தென்னெஞ்சி லன்னே யென்னும்
மன்னுவ தென்னெஞ்சின் மாலயன் காண்கிலார்
என்ன வதிசய மன்னே யென்னும். (சு)

வெள்ளைக் கலிங்கத்தர் வெண்டிரு முண்டத்தர்
பள்ளிக்குப் பாயத்த ரன்னே யென்னும்
பள்ளிக்குப் பாயத்தர் பாய்பரி மேல்கொண்டென்
உள்ளங் கவர்வரா லன்னே யென்னும். (எ)

தாளி யறுகினர் சந்தனச் சாந்தினர்
ஆளெம்மை யாள்வரா லன்னே யென்னும்
ஆளெம்மை யாளு மடிகளார் தங்கையில்
தாள மிருந்தவா றன்னே யென்னும். (அ)

தையலோர் பங்கினர் தாபத வேடத்தர்
ஐயம் புகுவரா லன்னே யென்னும்
ஐயம் புகுந்தவர் போதலு மென்னுள்ளம்
நையுமது வென்னே யன்னே யென்னும். (கூ)

கொன்றை மதியமுங் கூவிள மத்தமும்
துன்றிய சென்னிய ரன்னே யென்னும்
துன்றிய சென்னியின் மத்தமுன் மத்தமே
இன்றெனக் கானவா றன்னே யென்னும். (ய)

திருச்சிற்றம்பலம்.

போல்). (ச) ஆடுஅரவூண் - ஆடுகின்ற பாம்பு ஆபரணம். (ரு) நெறிதரு - நெறிந்த; குஞ்சி - சடை, (எ) கலிங்கம் - பட்டாடை; வெண் திருமுண்டத்தர் - அழகிய வெண்தலையையுடையவர்; பள்ளி குப்பாயத்தர் - ஆனந்த நித்திரை என்னும் மேற்போர்வையையுடையவர். (அ) தாளி - தாளிக்கொடி; சாந்து - கலவை. (கூ) தாபதவேடம் - தவவேடம். (ய) மதியம் - பிறை; கூவிளம் - வில்வம்; மத்தம் - ஊமத்தம்; துன்றிய - பொருந்திய; உன்மத்தம் - மயக்கம்.

குயிற்பத்து.

ஆத்துமவிரக்கம்

௭ - து. சிவனைக்கண்டிரங்குதல்.

தில்லையிலருளிச் செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கீத மினிய குயிலே கேட்டியே லெங்கள் பெருமான்
பாத மிரண்டும் வினவிற் பாதாள மேழினுக் கப்பால்
சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்ற தொன்மை
ஆதிகுண மொன்று மில்லா னந்தமி லான்வரக் கூவாய். (௧)

ஏர்தரு மேழுல கேத்த வெவ்வுரு வுந்தன் னுருவாய்
ஆர்கலி சூழ்தென் னிலங்கை யழகமர் வண்டோ தரிக்குப்
பேரரு ளின்ப மளித்த பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி நாடனைக் கூவாய். (௨)

நீல வுருவிற் குயிலே நீண்மணி மாட நிலாவுங்
கோல வழகிற் றிகழுங் கொடிமங்கை யுள்ளுறை கோயில்
சீலம் பெரிது மினிய திருவுத் தரகோச மங்கை
ஞாலம் விளங்க விருந்த நாயக னைவரக் கூவாய். (௩)

---

(௧) ஆதிகுணம் - முதலும் பிரகிருதிகுணங்களும். (௨) ஏர்தரும் - அழகைச்செய்கிற; ஆர்கலி - கடல்; வண்டோதரி - இராவணன்மனைவி. (௩) உரு - நிறம்; கோலம்அழகின் - பேரழகோடு; கொடிமங்கை - திருமகள்; சீலம் - குணம். (௪) பயிலும் - சஞ்சரிக்

தேன்பழச் சோலை பயிலுஞ் சிறுகுயிலே யிதுகேணீ
வான்பழித் திம்மண் புகுந்து மனிதரை யாட்கொண்ட வள்ளல்
ஊன்பழித் துள்ளம் புகுந்தென் னுணர்வது வாய வொருத்தன்
மான்பழித் தாண்ட மென்னோக்கி மணாளனை நீவரக் கூவாய். (௪)

சுந்தரத் தின்பக் குயிலே சூழ்சுடர் ஞாயிறு போல
அந்தரத் தேநின் றிழிந்திங் கடியவ ராசை யறுப்பான்
முந்து நடுவு முடிவு மாகிய மூவ ரறியாச்
சிந்துரச் சேவடி யானைச் சேவக னைவரக் கூவாய். (௫)

இன்பந் தருவன் குயிலே யேழுலகும் முழு தாளி
அன்ப னமுதளித் தூறு மானந்தன் வான்வந்த தேவன்
நன்பொன் மணிச் சுவடொத்த நற்பரி மேல்வரு வானைக்
கொம்பின் மிழற்றுங் குயிலே கோகழி நாதனைக் கூவாய். (௬)

உன்னை யுகப்பன் குயிலே யுன்றுணைத் தோழியு மாவன்
பொன்னை யழித்த நன்மேனிப் புகழிற் றிகழு மழகன்
மன்னன் பரிமிசை வந்த வள்ளல் பெருந்துறை மேய
தென்னவன் சேரலன் சோழன் சீர்ப்புயங் கன்வரக் கூவாய். (௭)

வாவிங்கே நீகுயிற் பிள்ளாய் மாலொடு நான்முகன் றேடி
ஓவியவ ருன்னி நிற்ப வொண்டழல் விண்பிளந் தோங்கி
மேவியன் றண்டங் கடந்து விரிசுடராய் நின்ற மெய்யன்
தாவிவரும் பரிப்பாகன் றாழ்சடை யோன்வரக் கூவாய். (௮)

காருடைப் பொன்றிகழ் மேனிக் கடிபொழில் வாழுங் குயிலே
சீருடைச் செங்கம லத்திற் றிகழுரு வாகிய செல்வன்

கும்; வான் - விண்ணுலகம்; மான் - மானினதுநோக்கம்; மெல் நோக்கி - மென்மையாகிய நோக்கத்தையுடைய உமாதேவி. (௫) சுந்தரத்து - அழகினால்; சுடர் - கிரணம்; ஆசு - குற்றம்; சிந்துரம் - சிவப்பு. (௬) ஆளி - ஆள்வோன்; சுவடு - தழும்பு; மிழற்றும் - குழறிப்பேசும். (௭) பொன்னையழித்த - பொன்னைத் தோற்கடித்த, பொன்னினும் மிக்க ஒளியுள்ள; புயங்கன் - புயங்கம்என்னும் கூத்துடையவன். (௮) ஓவி - (தேடுந்தொழிலினின்று) நீங்கி; உன்னி - தியானித்து; ஒண்தழல் - ஒட்பமாகிய நெருப்பு; மெய்யன் - திருமேனியுடையவன். (௯) கார்உடை - கருநிறத்தையுடைய; கடி -

பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாச மறுத்தெனை யாண்ட
ஆருடை யம்பொனின் மேனி யமுதினை நீவரக் கூவாய். (௯)

கொந்தண வும்பொழிற் சோலைக் கூங்குயி லேயிது கேணீ
அந்தண னாகிவந் திங்கே யழகிய சேவடி காட்டி
எந்தம ராமிவ னென்றிங் கென்னையு மாட்கொண் டருளும்
செந்தழல் போற்றிரு மேனித் தேவர் பிரான்வரக் கூவாய். (௰)

திருச்சிற்றம்பலம்.

திருத்தசாங்கம்.

அடிமைகொண்ட முறைமை

எ - து. பத்து அடையாளத்தாலாண்டமை.

அவையாவன:—தலைவனது நாமம், நாடு, பதி, ஆறு, மலை, வாகனம், ஆயுதம், முரசு, தார், கொடி என்பனவாம்.

நேரிசைவெண்பா.

திருச்சிற்றம்பலம்.

ஏரா ரிளங்கிளியே யெங்கள் பெருந்துறைக்கோன்
சீரார் திருநாமந் தேர்ந்துரையாய்—ஆரூரன்
செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான் செப்புவபோல்
எம்பெருமான் றேவர்பிரா னென்று. (௧)

மணம்; ஆர் - ஆத்திமாலை. (௰) கொந்துஅணவும் - பூங்கொத்துக்கள் பொருந்திய; தமர் - அன்பர்.

(௧) செம்பெருமான் - சிவந்தமேனியையுடைய உருத்திரமூர்த்தி; வெண்மலரான் - வெண்மையானதாமரைமலரை ஆசனமாகவுடைய பிரமதேவன்; பால்கடலான் - பாற்கடலையுடைய திருமால்; (பரமசிவத்தை எம்பெருமானேயென்று துதித்தல் மிகச்சிறப்புடைத்து). (௨) ஏதம் - குற்றம்; மரகதமே - பச்சைக்கிளியே;

ஏதமிலா வின்சொன் மரகதமே யேழ்பொழிற்கும்
நாதனமை யாளுடையா னுடுரையாய்—காதலவர்க்
கன்பாண்டு மீளா வருள்புரிவா னுடென்றுந்
தென்பாண்டி நாடே தெளி. (உ)

தாதாடு பூஞ்சோலைத் தத்தாய் நமையாளும்
மாதாடும் பாகத்தன் வாழ்பதியென்—கோதாட்டிப்
பத்தரெல்லாம் பார்மேற் சிவபுரம்போற் கொண்டாடும்
உத்தரகோ சமங்கை யூர். (ங)

செய்யவாய்ப் பைஞ்சிறகிற் செல்வீநஞ் சிந்தைசேர்
ஐயன் பெருந்துறையா னாறுரையாய்—தையலாய்
வான்வந்த சிந்தை மலங்கழுவ வந்திழியும்
ஆனந்தங் காணுடையா னாறு. (ச)

கிஞ்சுகவா யஞ்சுகமே கேடில் பெருந்துறைக்கோன்
மஞ்சன் மருவு மலைபகராய்—நெஞ்சத்
திருளகல வாள்வீசி யின்பமரு முத்தி
அருளுமலை யென்பதுகா ணாய்ந்து. (ரு)

இப்பாடே வந்தியம்பு கூடுபுக லென்கிளியே
ஒப்பாடாச் சீருடையா னூர்வதென்னே—எப்போதும்
தேன்புரையுஞ் சிந்தையராய்த் தெய்வப்பெண் ணேத்திசைப்ப
வான்புரவி யூரு மகிழ்ந்து. (சு)

கோற்றேன் மொழிக்கிள்ளாய் கோதில் பெருந்துறைக்கோன்
மாற்றாரை வெல்லும் படைபகராய்—ஏற்றார்
அழுக்கடையா நெஞ்சுருக மும்மலங்கள் பாயும்
கழுக்கடைகாண் கைக்கொள் படை. (எ)

அன்புஆண்டு - கருணையினால் ஆட்கொண்டு. (ங) தாது - மகரந்தம்; தத்தாய் - கிள்ளையே; என் - என்றுசொல். (ச) செல்வீ - செல்வியே (பெண்கிளியே); ஆறு - நதி; வான்வந்த-பெருமையமைந்த. (ரு) கிஞ்சுகம் - முருக்கம்பூ; அம்சுகமே - அழகியகிளியே; மஞ்சன்- அழகன். (சு) இபாடே - இவ்விடத்தே; ஊர்வது - ஊர்தி; புரையும் - நிகர்க்கும்; பெண் - மாதர்; வான் - சிதாகாசம். (எ) கோல் தேன் - கொம்பிற்கட்டியதேன்; கிள்ளாய் - கிள்ளையே; படை -

இன்பான் மொழிக்கிள்ளா யெங்கள் பெருந்துறைக்கோன்
முன்பான் முழங்கு முரசியம்பாய்—அன்பால்
பிறவிப் பகைகலங்கப் பேரின்பத் தோங்கும்
பருமிக்க நாதப் பறை. (௮)

ஆய மொழிக்கிள்ளா யள்ளூறு மன்பர்பால்
மேய பெருந்துறையான் மெய்த்தாரென்—தீயவினை
நாளுமணு காவண்ணம் நாயேனை யாளுடையான்
தாளியறு காமுவந்த தார். (௯)

சோலைப் பசுங்கிளியே தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம் பொலியுங் கொடிகூறாய்—சாலவும்
எதிலார் துண்ணென்ன மேல்விளங்கி யேர்காட்டுங்
கோதிலா வேறுங் கொடி. (௰)

திருச்சிற்றம்பலம்.

ஆடகம்; எற்றார் - எதிர்த்தவர்; கழுக்கடை - சூலம். (௮) இன்பால் - இனியபால்; முன்பால் - சந்நிதியில்; முரசு - பேரிகை; பருமிக்க - பெருமைமிகுந்த. (௯) பால் - இடத்து; மெய்த்தார் - உண்மையான மாலை. (௰) நீர் - குணம்; கோலம்பொலியும் - அழகுமிகுந்த; கொடி - துவசம்; எதிலார் - பகைவர்; துண்ணென்ன - அஞ்சும்படி; ஏறு - ரிஷபம்.

* திருப்பள்ளியெழுச்சி.

திரோதானசுத்தி

எ - து. ஏகமாகிய திரோதாயி மறைப்பான மலத்தை நீக்கல்.

திருப்பெருந்துறையி லருளிச்செயப்பட்டது.

ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் றிருமுகத் தெமக்கருண் மலரும்
எழினகை கொண்டுநின் றிருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கண் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (க)

அருணனிந் திரன்றிசை யணுகின னிருள்போய்
அகன்றது வுதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரிய னெழவெழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணும்

* இந்தத்திருப்பதிகத்தைத் தினந்தோறும் அதிகாலையில் பாராயணஞ்செய்வோர் சிவப்பிரசாதத்துக்குப் பாத்திரராவார். ஆணவமலமும் அணுவணுவாகத் தேய்ந்துபோம்.

(க) போற்றி - நமஸ்காரம்; வாழ்முதல் - பேரின்ப வாழ்வுக்கு முதற்காரணம்; புலர்ந்தது - பொழுதுவிடிந்தது; இணை - இரண்டு; துணை - ஒப்பு; ஏற்றி - துதித்து; நகை - முறுவல்; பள்ளி - சயனம். (உ) அருணன் - சூரியன்; இந்திரன்திசை - கீழ்த்திசை; எழஎழ -

திரணிரை யறுபத முரல்வன விவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருணிதி தரவரு மானந்த மலையே
அலைகட லேபள்ளி யெழுந்தரு ளாயே. (உ)

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுக ளியம்பின வியம்பின சங்கம்
ஓவின தாரகை யொளியொளி யுதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழற் றாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரு மறிவரியா யெமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (ந)

இன்னிசை வீணைய ரியாழின ரொருபால்
இருக்கொடு தோத்திர மியம்பின ரொருபால்
துன்னிய பிணைமலர்க் கையின ரொருபால்
தொழுகைய ரழுகையர் துவள்கைய ரொருபால்
சென்னியி லஞ்சலி கூப்பின ரொருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையு மாண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (ச)

பூதங்க டோறுநின் றாயெனி னல்லால்
போக்கிலன் வரவில னெனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுத லாடுத லல்லால்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைச்

உதித்தெழ; மலர - விரிய; அண்ணல் - பெருமை; திரள்நிரை அறுபதம் - கூட்டமான வரிசையாகிய வண்டுகள்; ஓர் - உணர்; அருள்நிதி - அருட்செல்வம். (ந) குருகுகள் - பறவைகள்; இயம்பின - ஒலித்தன; சங்கம்இயம்பின - சங்கங்கள் முழங்கின; தாரகை- நட்சத்திரங்கள்; ஒளிஓவின - ஒளிமழுங்கின; ஒளி-சூரியன்; தேவ - தேவனே; செறி - நெருங்கிய. (ச) இருக்கு - வேதம்; தோத்திரம்- திராவிடதுதி; பிணைமலர்-தொடுக்கப்பட்டமலர்மாலை; துவள்கையர் - அசைதலையுடையவர். (ரு) பூதங்கள்-உயிர்கள்; ஏதங்கள்-குற்றங்கள்.

சீதங்கொள் வயற்றிருப் பெருந்துறை மன்னு
சிந்தனைக் கும்மரி யாயெங்கண் முன்வந்
தேதங்க ளறுத்தெம்மை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (ரு)

பப்பற வீட்டிருந் துணருநின் னடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றாரணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கண் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (சு)

அதுபழச் சுவையென வமுதென வறிதற்
கரிதென வெளிதென வமரரு மறியார்
இதுவவன் றிருவுரு விவனவ னெனவே
எங்களை யாண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழிற்றிரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுவெமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (எ)

முந்திய முதனடு விறுதியு மானாய்
மூவரு மறிகில ரியாவர்மற் றறிவார்
பந்தணை விரலியு நீயுநின் னடியார்
பழங்குடி லொறுமெழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. (அ)

(சு) பப்புஅற-ஒப்பில்லாத; வீடு-மனத்துறவு; பந்தனை-பிறவிப் பிணிப்பு; மைப்புஉறுகண்-மைதீட்டியகண் ; அணங்கு - உமாதேவி; செப்புஉறு - பெருமையாகச் சொல்லப்படுகிற. (அ) மூவர்-பிரமன்,

விண்ணகத் தேவரு நண்ணவு மாட்டா
    விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
    வண்டிருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
    கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாயுல குக்குயி ரானாய்
    எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (௯)

புவனியிற் போய்ப்பிற வாமையி னாணாம்
    போக்குகின் றோமவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
    திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவு மலரவ னாசைப்
    படவுநின் னலர்ந்தமெய்க் கருணையு நீயும்
அவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்
    ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. (௰)

திருச்சிற்றம்பலம்.

விஷ்ணு, உருத்திரன்; பந்துஅணைவிரலி - பந்தை ஏந்திய விரலையுடைய உமாதேவி; அந்தணன் - அழகியதட்பத்தையுடையவன், அருளுடையோன், அறவோன். (௯) விழுப்பொருளே - மேலான பொருளே; தொழுப்பு - தொழும்பு; எண் அகத்தாய் - மனதின்கண் உள்ளவனே. (௰) புவனி - பூமி; நாள்நாம் போக்குகின்றோம் - நாம் நாள் கழிக்கின்றோம்; அவமே - வீணே; ஆறு - வழி (இங்கே இடம்); மலரவன் - பிரமன்; அலர்ந்த - பரந்த; கருணை - கருணை சக்தி; அவனி - பூமி. (ஈண்டு பூமியைச்சிறப்பித்துக்கூறிய காரணம் இம்மைமறுமைப் பயன்களையடைவதற்கு மூர்த்தி, தலம், தீர்த்தம் சாதனமாதலாலும், பரமுத்தியையடைவதற்குச் சரியையாதி சன்மார்க்க வழிபாடுகள் காரணமாதலாலும் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டுச் சிவபெருமான் ஆட்கொள்ளுமிடம் இதுவேயாகலின் பூமி மற்ற உலகங்களைவிடச் சிறப்புடைத்தாயிற்று).

கோயின்மூத்த திருப்பதிகம்.

அநாதியாகிய சற்காரியம்.

தில்லையிலருளிச் செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்குமரு ளைப்புரியாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ண முன்னின்றே. (க)

முன்னின் றாண்டா யெனைமுன்ன மியானு மதுவே முயல்வுற்றுப்
பின்னின் றேவல் செய்கின்றேன் பிற்பட் டொழிந்தேன் பெம்மா
என்னின் றருளி வரநின்று போந்தி டென்னு விடிலடியார் [னே
உன்னின் றிவனு ரென்னுரோ பொன்னம் பலக்கூத் தாகந்தானே.

(க) உடையாள் உன்றன் நடுவிருக்கும் - பஞ்சகிருத்திய அதிகாரத்தினின்றும் நீங்கிச் சுத்த அறிவாய்ப் புறப்பொருளை நோக்காது நிற்கும் உண்மை நிலையில் (சொரூபலக்ஷணத்தில்) தேவரீர் வசப்பட்டு அருட்சத்தி நிற்கும்; உடையாள் நடுவுள் நீயிருத்தி - புறப்பொருளைநோக்கி உலகெலாமாய், வேறாய், உடனுமாய் உயிர்களின் வழிநிற்குநிலையில் (தடஸ்தலக்ஷணத்தில்) அருட்சத்தியின் வசம் தேவரீர் இருப்பீர்; அடியேன்நடுவுள்.........புரியாய் - நீங்களிருவரும் அருள்வசப்பட்டு அதுவாயிருக்கின்ற என்வசத்தில் இருக்கப்பெறின் அடியேன் அடியார் வசப்பட்டு நிற்றல் திண்ணமாதலின் அத்தகைய கருணையைத்தேவரீர் புரிந்தருளவேண்டும். இதன் ரகஸியப்பொருளை **இருதலைமாணிக்கம்** என்னும் ஸ்ரீ பஞ்சாக்ஷரமந்திரத்தில் குருமுகமாயறிந்து தெளிக. இந்தச்செய்யுளே திருவாசக ஹிருதய மந்த்ர சுலோகமென்று வழங்கப்பெறும். (உ) முன்னின்றாண்டாய்......ஒழிந்தேன் - இவ்விரண்டடியும் ஒருதலை **மாணிக்கம்** என்னும் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை விளக்கவெழுந்தது. எவ்

உகந்தா னேயன் புடையடிமைக் குருகா வுள்ளத் துணர்விலியேன்
சகந்தா னறிய முறையிட்டாற் றக்க வாறன் றென்னாரோ
மகந்தான் செய்து வழிவந்தார் வாழ வாழ்ந்தா யடியேற்குன்
முகந்தான் றாரா விடின்முடிவேன் பொன்னம் பலத்தெம் முழுமுத [லே.

முழுமுத லேயைம் புலனுக்கு மூவர்க்கு மென்றனக்கும்
வழிமுத லேநின் பழவடி யார்திரள் வான்குழுமிக்
கெழுமுத லேயரு டந்திருக்க விரங்குங் கொல்லோவென்
றழுமது வேயன்றி மற்றென் செய்கேன் பொன்னம் பலத்தரைசே.

வாறெனின், தேவரீரே முன்னின்று என்னைப் பின்னே வைத்து ஆண்டீர். நானும் பின்னேயிருந்து தேவரீர் அருள்வழி நின்றேன். பின்னர் நானுமொழிந்து தேவரீரே ஆனேன். இதனை இன்னும் விளக்கின், **அஹம் ப்ரஹ்மம்** (நான் பிரமம்) என்னும் வாக்கியத்தில் பிரமத்தையன்றி அஹமெனும் பதார்த்தமில்லையாயினும், அஹம் முற்பட்டிருத்தலின் ஆன்ம அறிவே எப்போதும் முனைத்துத் தோன்றிக்கொண்டிருக்கும். **ப்ரஹ்மமாஹம்** (பிரமம்நான்), **சிவோஹம்** (சிவம்நான்) என்னும் வாக்கியங்களில் பிரமம் முற்பட்டிருத்தலின் முதல்வனறிவே எப்போதும் முனைத்துத் தோன்றிக்கொண்டிருக்கும். அப்போது யாவும் இன்பமயமாய் விளங்கும். ஆதலின் மயக்கவாக்கியமாகிய நான்பிரமம் என்று பாவிப்பதினும் தெளி வாக்கியமாகிய பிரமம் நானென்று பாவிப்பதே சாலச்சிறப்புடைத்தாம். என்னை! துன்பத்தைப் பாவித்தலால் துன்பமயமாயும், இன்பத்தைப்பாவித்தலால் இன்பமயமாயும் இருப்பதுபோல பிரமத்தை நான் என்று பாவிப்பதால் பிரம்மமாவது திண்ணம். கண்ணை ஆதித்தனென்று பாவிக்கின் அந்தகாரம் நீங்காது. அதுபோல **அஹத்தைப்** பிரமமென்று பாவிக்கின் அஞ்ஞானவாசனை நீங்காது. ஆத்மானந்தம் ஒன்றே பிராப்தமாகும். ஏனெனின், ஆத்மா ஆணவமலத்தால் அறிவுகெட்டு, கன்மமலத்தால் மருளடைந்து, மாயாமலத்தால் மயங்கிக்கிடப்பதன்றோ. ஆகவின் எப்போதும் பின்னிற்பதே பிரம்மானந்தத்திற்கு ஏதுவாம். இதனைத் தன்கண் நிகழும் அநுபவ நிகழ்ச்சியாலறிந்தடங்குக. முயல்வுற்று - முயன்று; என்னின்று - என்னை நீயாகநின்று; அருளிவர - அருட்செய்யும்பொருட்டு; நின்று - கண்ணெதிரேநின்று; போந்திடு - வா; உன்னின்று - உன்னைப் பார்த்துநின்று. (௩) தக்கஆறு - தகுந்தவழி; மகம் - யாகம்; வழி வந்தார் - வழிவழியாய்வந்தோர்; முடிவேன் - இறப்பேன். (௪) ஐம்புலன் - பஞ்சேந்திரியம்; வான்குழுமி - விண்ணுலகத்தில் கூடி; கெழுமுதலே - அநுபவியாநின்ற முதற்பொருளே; அருள்தந்திருக்க-

அரைசே பொன்னம் பலத்தாடு மமுதே யென்றுன் னருணோக்கி
இரைதேர் கொக்கொத் திரவுபக லேசற் றிருந்தே வேசற்றேன்
கரைசே ரடியார் களிசிறப்பக் காட்சி கொடுத்துன் னடியேன்பால்
பிரைசேர் பாலி னெய்போலப் பேசா திருந்தா லேசாரோ. (௫)

ஏசா நிற்ப ரென்னையுனக் கடியா னென்று பிறரெல்லாம்
பேசா நிற்ப ரியான்றானும் பேணா நிற்பே னின்னருளே
தேசா நேசர் சூழ்ந்திருக்குந் திருவோ லக்கஞ் சேவிக்க
ஈசா பொன்னம் பலத்தாடு மெந்தா யினித்தா னிரங்காயே. (௬)

இரங்கு நமக்கம் பலக்கூத்த னென்றென் றேமாந் திருப்பேனை
அருங்கற் பனைகற் பித்தாண்டா யாள்வா ரிலிமா டாவேனோ
நெருங்கு மடியார் களுநீயு நின்று நிலாவி விளையாடும்
மருங்கே சார்ந்து வரவெங்கள் வாழ்வே வாவென் றருளாயே. (௭)

அருளா தொழிந்தா லடியேனை யஞ்சே லென்பா ராரிங்குப் [த்தா
பொருளா வென்னைப் புகுந்தாண்ட பொன்னே பொன்னம் பலக்கூ
மருளார் மனத்தோ டுனைப்பிரிந்து வருந்து வேனை வாவென்றுன்
றெருளார் கூட்டங் காட்டாயேற் செத்தே போனாற் சிரியாரோ. (அ)

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு திரண்டுன் றிருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வே றிருந்துன் றிருநாமம்
தரிப்பார் பொன்னம் பலத்தாடுந் தலைவா வென்பா ரவர்முன்னே
நரிப்பாய் நாயே னிருப்பேனோ நம்பி யினித்தா னல்காயே. (௯)

அருள்புரிய. (௫) தேர் - தேடு; ஏசற்று - துக்கித்து; வேசற்றேன் - மெலிந்தேன்; கரை - முத்திக்கரை; பிரைசேர்பாலில் நெய்போல - பிரைகலந்தபாலில் நெய் மறைந்திருத்தல்போல; ஏசாரோ - வையாரோ. (௬) பேணா - விரும்பா; நேசர் - அன்பர். (௭) என்று என்று - என்றுசொல்லி; கற்பனை - புதியமுறை; மாடாவேனோ - மாடுபோல்வேனோ; நிலாவி - விளங்கி; மருங்கே - பக்கத்தே. (அ) மருள் ஆர் - மயக்கம்நிறைந்த; தெருள் - தெளிவு. (௯) தேனிப்பார் - தியானிப்பார்; தரிப்பர் - உச்சரிப்பர்; நரிபாய் நாயேன் இருப்பேனோ - நரியைப் பாய்கின்ற நாய்போன்று நான் இருப்பேனோ. (௰) நீர் மல்கா - நீர்நிரம்பி; வாழ்த்தா - வாழ்த்தி; குழறா - குழறி; வணங்கா - வணங்கி; ஒல்காநிற்கும் - தளராநிற்கும்.

நல்கா தொழியா னமக்கென்றன் ஞமம் பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறா வணங்கா மனத்தா னினைந்துருகிப்
பல்கா லுன்னைப் பாவித்துப் பரவிப் பொன்னம் பலமென்றே
ஒல்கா நிற்கு முயிர்க்கிரங்கி யருளா யென்னை யுடையானே. (ய)

திருச்சிற்றம்பலம்.

கோயிற்றிருப்பதிகம்.

அநுபோகவிலக்கணம்

எ - து. சிவானுபூதிக்கடையாளம்.

தில்லையிலருளிச் செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னு ளெழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் றெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்களியாவையுங் கடந்த
இன்பமே யென்னுடை யன்பே. (க)

அன்பினா லடியே னாவியோ டாக்கை
ஆனந்த மாய்க்கசிந் துருக

(க) மாறிநின்ற - பகைத்துநின்று; தேறல் - தேன்; பதங்கள் யாவையும் - பதவிகளனைத்தையும். அவை ஸ்ரீ கண்டருத்ரபதம், அனந்தேசுரபதம், சதாசிவமூர்த்தி பதம், பரசிவபதம் ஆகிய இந்

என்பர மல்லா வின்னரு டந்தாய்
யானிதற் கிலனொர்கைம் மாறு
முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடைச் சிவபுரத் தரைசே. (உ)

அரைசனே யன்பர்க் கடியனே னுடைய
அப்பனே யாவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னு மமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோ ருணர்வே
யானுன்னை யுரைக்குமா றுணர்த்தே. (ங)

உணர்ந்தமா முனிவ ரும்பரோ டொழிந்தார்
உணர்வுக்குந் தெரிவரும் பொருளே
இணங்கிலி யெல்லா வுயிர்கட்கு முயிரே
எனைப்பிறப் பறுக்குமெம் மருந்தே
திணிந்ததோ ரிருளிற் றெளிந்ததூ வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கடா மில்லா வின்பமே யுன்னைக்
குறுகினேற் கினியென்ன குறையே. (ச)

நான்குபதங்கள். (உ) என்பரம் - என்பொறுப்பு; பரந்த - வியாபித்த; முத்தனே - மலரகிதனே. (ங) புரைபுரைகனிய - உட்டுளைதோறும் கனியும்படி; பொய்இருள் - மூனத்துநில்லாத ஆணவம், (அதைப்பொய்யென்று சொன்னது பெத்த காலத்திலே மேற்பட்டு நின்று தன்றொழிலைச்செய்த அது, முத்திகாலத்திலே ஒளி முன்னிருள்போலத்தனது சத்தியடங்கிச்சூனியம்போல் நின்றமையான்) திரைபொரா - அலையெறியாநின்ற; தெண்கடலே - தெளிவாகிய சாகரமே; உரை உணர்வுஇறந்து - சொல்லும்மனமும் அற்று; உணர்வே - அறிவுருவே. (ச) உணர்ந்த - ஸர்வகலைகளையும் ஐயந்திரிபற உணர்ந்த; ஒழிந்தார் - மற்றையோரும்; இணங்குஇலி - ஒப்

குறைவிலா நிறைவே கோதிலா வமுதே
 ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
 மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போற் சிந்தைவாய்ப் பாயும்
 திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் னுடலிடங் கொண்டாய்
 இனியுன்னை யென்னிரக் கேனே. (ரு)

இரந்திரந் துருக வென்மனத் துள்ளே
 எழுகின்ற சோதியே யிமையோர்
சிரந்தனிற் பொலிடங் கமலச்சே வடியாய்
 திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தரா காய நீர்நிலந் தீகா
 லாயவை யல்லையா யாங்கே
கரந்ததோ ருருவே களித்தன னுன்னைக்
 கண்ணுறக் கண்டுகொண் டின்றே. (சு)

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
 தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தேன்
 நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றும்
 திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
 யாருன்னை யறியகிற் பாரே. (எ)

பில்லாதவனே; திணிந்தது - செறிந்தது; தூவெளியே - சிதா காசமே; குணங்கள் - பிரகிருதி குணங்கள். (ரு) மன்னே - இறைவனே; சிறைபெறா - கரைகோலப்பெறாத; நீர் - வெள்ளம்; சிந்தைவாய் - மனதில். (சு) நிரந்த - நிறைந்த; கண்ணுறக்கண்டு - கண்ணாரக்கண்டு. (எ) இருள் - அறியாமை, ஆணவமலசக்தி; ஞாயிறு - சூரியன்; தன்மை - விதம், அதுபடலம் நீங்கினகண்ணுக்கு ஆதித்தன் விளக்குவதுபோல் மலம் நீங்கின பக்குவான்மாவுக்கு ஆசிரியர் அறிவுறத்தந்தன்மை; சென்றுசென்று அணுவாய் தேய்ந்து

பார்பத மண்ட மனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே
நீருறு தீயே நினைவதே லரிய
நின்மலா நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை யெழுந்ததோர் தேனே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாருற வெனக்கிங் காரய லுள்ளார்
ஆனந்த மாக்குமென் சோதீ. (அ)

சோதியாய்த் தோன்று முருவமே யருவாம்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே யந்தமே பந்த
மறுக்குமா னந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் னிணையடி தந்தே. (கூ)

தேய்ந்து ஒன்றும் - தத்துவதாத்விகங்களைத்தையும் கொஞ்சங் கொஞ்சமாகவிட்டு நீங்கிச் சேடமாய் நின்ற ஆன்மஅறிவு முழுமுதற் பரமபொருளையே நோக்கிச் சென்று சென்று, கற்பூரதீபத்தைப் போல அப்பரம்பொருளினது அறிவு மேலிடமேலிட, அணு அணு வாகத்தேய்ந்து, (போயொளித்து), முடிவில் தானும் எதிருங் கழன்று அவ்வறிவுருவாய் நிற்றலாகிய பரிபூரண ஏகமாம். இதைத் தான் தன்மை முன்னிலையற்ற ஆனந்தமயமான ஒரே அகண்ட சொரூபமென்பர். இவ்வுண்மை முத்தியில் முதல்வன் ஆன்மா என்னும் இருபொருளுமுண்டென்று கூறும் சித்தாந்த சைவத்துக்கு முரணகாதோவெனின்! ஆகாது. அவ்விடத்து அவ்விருபொருளிருப் பினும் பிரிக்கக்கூடாமைபற்றியும், எண்குணங்களும் விளங்கித் தோன்று முறைமைபற்றியும் அவை ஏகமாம். யானாகியவென்னை விழுங்கி வெறுந்தானாக நின்றது தற்பரமன்றோ. (அ) பார் - பூமி; பதம் - அந்தரிட்சம், அது ஆகாயமும், அதிலுள்ள உலகங்களும்; அண்டம் - சுவர்க்கலோகங்கள்; பரந்து - வியாபித்து; நீர் உறு தீயே - நீரிற்பொருந்திய அக்கினிபோன்றவனே; நின்மலா - மலரஹிதனே. (ம) தந்தது உன்றன்னை - உன்னறிவையும், உன்னருளை யும், உன் ஐந்தெழுத்தையுங்கொடுத்தாய்; கொண்டது என்றன்னை -

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா வார்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா வானந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே யீசா வுடலிடங் கொண்டாய்
யானிதற் கிலனோர் கைம் மாறே. (௰)

திருச்சிற்றம்பலம்.

செத்திலாப்பத்து.

சிவானந்தமளவறுக்கொணுமை

எ - து. சிவானந்தமனுகிச் சேயிக்கப்படாமை.

திருப்பெருந்துறையி லருளிச்செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பொய்யனே னகநெகப் புகுந்தமு தூறும்
புதுமலர்க் கழலிணையடி பிரிந்தும்
கையனே னின்னுஞ் செத்திலே னந்தோ
விழித்திருந் துள்ளக் கருத்தினை யிழந்தேன்

என்னுயிரையும், என்னுடலையும், என்பொருளையும் ஏற்றுக்கொண்டாய்; சதுரர் - சாமர்த்தியமுள்ளவர்; உடலிடங்கொண்டாய் - உடம்பையே இடமாகக்கொண்டருளினீர். அதனுல் என்னுடைய சிந்தையுஞ்செயலும் நின்னுடையனவே. "நாமற்றபின் நாதன்தன் செயல்தானே" எனவும், "தன்னையே தந்தான்" எனவுங்கூறிய அருண்மொழியைச் சிந்திக்க.

(௧) அகம்நெக - மனம் நெகிழும்படி; கையனேன் - சிறுமை,

ஐயனே யரசே யருட்பெருங் கடலே
அத்த னேயயன் மாற்கறி யொண்ணாச்
செய்யமே னியனே செய்வகை யறியேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. (க)

புற்று மாய்மர மாய்ப்புனல் காலே
உண்டியா யண்ட வாணரும் பிறரும்
வற்றி யாருநின் மலரடி காணா
மன்ன வென்னையோர் வார்த்தையுட் படுத்துப்
பற்றி னாய் பதையேன் மனமிக வுருகேன்
பரிகி லேன்பரி யாவுட றன்னைச்
செற்றி லேனின்னுந் திரிதரு கின்றேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. (உ)

புலைய னேனையும் பொருளென நினைந்துன்
அருள்பு ரிந்தனை புரிதலுங் களித்துத்
தலையி னாடந் தேன்விடைப் பாகா
சங்கரா வெண்ணில் வானவர்க் கெல்லாம்
நிலைய னேயலை நீர்விட முண்ட
நித்த னேயடை யார்புர மெரித்த
சிலைய னேயெனைச் செத்திடப் பணியாய்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. (ங)

அன்ப ராகிமற் றருந்தவ முயல்வார்
அயனு மாலுமற் றழலுறு மெழுகாம்
என்ப ராய்நினை வாரெ னைப்பலர்
நிற்க விங்கெனை யெற்றினுக் காண்டாய்
வன்ப ராய்முரு டொக்குமென் சிந்தை
மரக்க ணென்செவி யிரும்பினும் வலிது

யேன். (உ) அண்டவாணர்-விண்ணுலகத்தில் வாழுந்தேவர்; வற்றி-உடம்புமெலிந்து; மன்ன-இறைவனே; பரிகிலேன்-வருந்துகிலேன்; பரியாஉடல் - தாங்கவொண்ணாத உடம்பு; செற்றிலேன் - வருந்திலேன். (ங) நிலையனே-இருப்பிடமானவனே; அடையார்-பகைவர்; சிலையனே-வில்லையுடையவனே. (ச) என்பராய்-என்னையுடையராய்; வல்பராய்முருடு - வலியபராய்க்கட்டை; தென் - அழகிய.

தென்ப ராய்த்துறை யாய்சிவ லோகா
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. (௪)

ஆட்டுத் தேவர்தம் விதியொழித் தன்பால்
ஐய னேயென்றுன் னருள்வழி யிருப்பேன்
நாட்டுத் தேவரு நாடரும் பொருளே
நாத னேயுனைப் பிரிவுறா வருளைக்
காட்டித் தேவநின் கழலிணை காட்டிக்
காய மாயத்தைக் கழித்தருள் செய்யாய்
சேட்டைத் தேவர்தந் தேவர்பி ரானே
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. (௫)

அறக்கி லேனுட றணிபடத் தீப்புக்
கார்கி லேன்றிரு வருள்வகை யறியேன்
பொறுக்கி லேனுடல் போக்கிடங் காணேன்
போற்றி போற்றியென் போர்விடைப் பாகா
இறக்கி லேனுனைப் பிரிந்தினி திருக்க
என்செய் கேனிது செய்கவென் றருளாய்
சிறைக்க ணேபுன னிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. (௬)

மாய னேமறி கடல்விட முண்ட
வான வாமணி கண்டத்தெம் மமுதே

---

(௫) ஆட்டுத்தேவர் - ஆட்டப்பட்டதேவர், அவர் மும்மூர்த்திகள் முதலாயினோர்; விதி - நியமனம்; நாட்டுத்தேவர் - பூசரர்; காயம் மாயம் - உடம்பாகிய பொய்ப்பொருள்; சேட்டைத்தேவர் - பெருமையுடைய தேவர்கள். (இந்தத் திருப்பாட்டில் கரும்பு ஒன்றாயிருக்கினும் பகுதிபற்றி சாரமும் பலனும் வேறுபடுதல்போலச் சகல தேவதைகளும் பரம்பொருளொன்றின் உறுப்புக்களாகக் கூறப்படினும் அவர்களின் தன்மைபற்றி பலன் வேறுபடுகின்றமையால் அவர்களையொழித்து அருள்வழி நிற்பேன் என்று அறிவுறுத்தினர்). (௬) ஆர்கிலேன் - தங்கிலேன்; பொறுக்கிலேன் - தாங்கமாட்டேன்; சிறைக்கணே - கரைகோலின இடங்களிலே; புனல்நிலவிய - நீர்நிலை பெற்ற. (௭) மறிகடல் - அலைகள்மறிக்கின்றகடல்; மணிகண்டம் - நீலகண்டம்; பேயன் - பேய்த்தன்மையுடையவன். அது சிவபெருமானைத்தரிசிக்க உத்தேசித்தமாத்திரத்திலே செல்வேன் செல்வேன்

நாயி னேனுனை நினையவு மாட்டேன்
நமச்சி வாயவென் றுன்னடி பணியாப்
பேய னாகிலும் பெருநெறி காட்டாய்
பிறைகு லாஞ்சடைப் பிஞ்ஞக னேயோ
சேய னாகினின் றலறுவ தழகோ
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. (எ)

போது சேரயன் பொருகடற் கிடந்தோன்
புரந்த ராதிக ணிற்கமற் றென்னைக்
கோது மாட்டிநின் குரைகழல் காட்டிக்
குறிக்கொள் கென்றுநின் றொண்டரிற் கூட்டாய்
யாது செய்வதென் றிருந்தனன் மருந்தே
அடிய னேனிடர்ப் படுவது மினிதோ
சீத வார்புன னிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. (அ)

ஞால மிந்திர னான்முகன் வானவர்
நிற்க மற்றெனை நயந்தினி தாண்டாய்
கால னாருயிர் கொண்டபூங் கழலாய்
கங்கை யாயங்கி தங்கிய கையாய்
மாலு மோலமிட் டலறுமம் மலர்க்கே
மரக்க ணேனையும் வந்திடப் பணியாய்

என்றியம்பும் ஆசைப்பேயும், தரிசித்த வழிச் செல்வேனென்று செப்பிச் செல்லுதலின்றித் தனது சத்தி அணுவணுவாகத் தேய்ந்து செல்லும் ஆணவப்பேயும், தரிசித்தும் விரோதமின்றிச் சிலகாலமிருந்து செல்லும் பிராரத்துவப்பேயும், இதனோடு யானுஞ்சேல்வேனென்று இரந்துநிற்கும் மாயைப்பேயும் ஆகிய இவற்றால் பீடிக்கப் பட்டுள்ளபேயன். பெருநெறி – முத்திநெறி; பிறைகுலாம் – பிறை விளங்கும்; பிஞ்ஞகன் – தலைக்கோலமுடையவன், அதாவது பிறை, கங்கை, சர்ப்பம், கொன்றைமாலை, கொக்கினிறகு முதலியவற்றைச் சடை முடியிலணிந்தவன். இறைவன் இத்தகைய கோலங்களைத் தரித்தது ஆன்மாக்கள்மீது கொண்ட கருணையினாலேயே. (அ) பொரு – அலைமோதுகின்ற; கோதும்ஆட்டி – சீராட்டி; குறிக் கொள்க என்று – உறுதியாய்ப்பிடியென்று; வார்புனல் – பெருநீர். (கூ) ஓலமிட்டு – அச்சத்தாற்கதறி; சேலும்நீலமும்-கயல்மீன்களும்

சேலு நீலமு நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. (௯)

அளித்து வந்தெனக் காவவென் றருளி
அச்சந் தீர்த்தநின் னருட்பெருங் கடலில்
திளைத்துந் தேக்கியும் பருகியு முருகேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே
வளைக்கை யானொடு மலரவ னறியா
வான வாமலை மாதொரு பாகா
களிப்பெ லாமிகக் கலங்கிடு கின்றேன்
கயிலை மாமலை மேவிய கடலே. (௰)

திருச்சிற்றம்பலம்.

அடைக்கலப்பத்து

பக்குவ நிண்ணயம்

எ - து. வித்துமங்குரமும் போல வென்றல்.

திருப்பெருந்துறையி லருளிச்செயப்பட்டது.

கலவைப் பாட்டு.

திருச்சிற்றம்பலம்.

செழுக்கமலத் திரளனநின் சேவடி சேர்ந்தமைந்த
பழுத்தமனத் தடியருடன் போயினர்யான் பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப் பொல்லாக்கல்வி ஞானமிலா
அழுக்குமனத் தடியே னுடையாயுன் னடைக்கலமே. (௧)

நீலமலர்களும். (௰) அளித்து - கருணைசெய்து; ஆவஎன்று - ஐயோ வென்று; திளைத்தும் - குளித்தும்; தேக்கியும் - ஏப்பமிட்டும்; வளை - சங்கு. (௧) அமைந்த - அமைவுபெற்ற; பழுத்த - கனிந்த; நுடை -

வெறுப்பன வேசெய்யு மென்சிறு மையைநின் பெருமையினால்
பொறுப்பவ னேயராப் பூண்பவ னேபொங்கு கங்கைசடைச்
செறுப்பவ னேநின் றிருவரு ளாலென் பிறவியைவேர்
அறுப்பவ னேயுடை யாயடி யேனுன் னடைக்கலமே. (௨)

பெரும்பெருமா னென்பிறவியை வேரறுத்துப் பெரும்பிச்சுத்
தரும்பெருமான் சதுரப் பெருமானென் மனத்தினுள்ளே
வரும்பெருமான் மலரோ னெடுமாலறி யாமனின்ற
அரும்பெருமா னுடையா யடியேனுன் னடைக்கலமே. (௩)

பொழிகின் றதுன்பப்பு யல்வெள்ளத் தினின் கழற்புணைகொண்
டிழிகின்ற வன்பர்களேறி னர்வான்யா னிடர்க் கடல்வாய்ச்
சுழிசென்று மாதர்த்திரை பொரக்காமச் சுறவெறிய
அழிகின் றனனுடையா யடியேனுன் னடைக்கலமே. (௪)

சுருள்புரி கூழையர் சூழலிற் பட்டுன் றிறமறந்திங்
கிருள்புரி யாக்கையி லேகிடந் தெய்த்தனன் மைத்தடங்கண்
வெருள்புரி மானன்ன நோக்கிதன் பங்கவிண் ணோர்பெருமான்
அருள்புரி யாயுடை யாயடி யேனுன் னடைக்கலமே. (௫)

மாழைமைப் பாவிய கண்ணியர் வன்மத் திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர்போ ற்றளர்ந்தேன் றடமலர்த்தாள்
வாழியெப் போதுவந் தெந்நாள் வணங்குவன் வல்வினையேன்
ஆழியப் பாவுடை யாயடி யேனுன் னடைக்கலமே. (௬)

மின்கணினார் நுடங்குமிடையார் வெகுளிவலையி லகப்பட்டுப்
புன்கணனாய்ப் புரள்வேனைப் புரளாமற் புகுந்தருளி

தெளி; புன்குரம்பை - இழிவாகிய உடல்; உன் அடைக்கலமே - உனக்கு அடைக்கலப்பொருளே. (௨) செறுப்பவனே - அடக்கின வனே. (௩) சதுரம் - சாதுரியம். (௪) வான் - முத்தியுலகம்; கடல் வாய் - கடலில்; சுழிசென்று - சுழிகளிற்சிக்கி; பொர - மோத; சுறவு - மகரமீன். (௫) சுருள்புரி - சுருளாகச்செய்யப்பட்ட; கூழை யர் - கூந்தலையுடையமாதர்; சூழல் - கூட்டம்; வெருள்புரி - அச் சத்தையுண்டுபண்ணும். (௬) மாழை-அழகு; மைபாவிய-மைபரந்த; வன்மத்திட - வலியமத்திட்டுக்கடைய; உடைந்து - சிதறி; தாழி - மிடா,பானை; ஆழிஅப்பா-கருணைக்கடலாகிய அப்பனே. (௭) நுடங் கும்இடை - துவளுகின்றஇடை; புன்கண்ணன்ஆய் - துன்பத்தை

என்கணிலே யமுதூறித் தித்தித்தென் பிழைக்கிரங்கும்
அங்கணனே யுடையா யடியேனுன் னடைக்கலமே. (எ)

மாவடு வகிரன்ன கண்ணிபங் காநின் மலரடிக்கே
கூவிடுவாய் கும்பிக்கே யிடுவாய்நின் குறிப்பறியேன்
பாவிடை யாடுகுழல் போற்கரந்து பரந்ததுள்ளம்
ஆகெடுவே னுடையா யடியேனுன் னடைக்கலமே. (அ)

பிறிவறி யாவன்பர் நின்னருட் பெய்கழற் றாளிணைக்கீழ்
மறிவறி யாச்செல்வம் வந்துபெற் றாருன்னை வந்திப்பதோர்
நெறியறி யேனின்னை யேயறி யேனின்னை யேயறியும்
அறிவறி யேனுடை யாயடி யேனுன் னடைக்கலமே. (கூ)

வழங்குகின் றாய்க்குன் னருளா ரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன் வினையேனென் விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர்பருகத்தந் துய்யக்கொள்ளாய்
அழுங்குகின்றே னுடையா யடியேனுன் னடைக்கலமே. (ய)

திருச்சிற்றம்பலம்.

புடையவனாய்; ஊறி - சுரந்து; அம்கண்ணனே - கிருபைக்கண்ணனே. (அ) மாவடு - மாம்பிஞ்சு; வகிர்அன்ன - பிளவுபோன்ற; கும்பி - நரகம்; பாஇடை - பாவினிடத்து; குழல்-நெய்வோர்கருவி; ஆ - ஐயோ. (கூ) கழல்பெய் - வீரக்கழலணிந்த; மறிவுஅறியா - தடைப்படுதலில்லாத; செல்வம் - முத்திச்செல்வம். (ய) விதி - நல்லூழ்; தழங்கு - சப்திக்கின்ற; அழுங்குகின்றேன் - வருந்தாநின்றேன்.

ஆசைப்பத்து.

ஆத்துமவிலக்கணம்

எ - து. ஆன்ம ரூபத்தை யறிதல்.

திருப்பெருந்துறையி லருளிச்செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கருடக் கொடியோன் காணமாட்டாக் கழற்சே வடியென்னும்
பொருளைத் தந்திங் கென்னை யாண்ட பொல்லா மணியேயோ
இருளைத் துரந்திட் டிங்கே வாவென் றங்கே கூவும்
அருளைப் பெறுவா னாசைப் பட்டேன் கண்டா யம்மானே. (க)

மொய்ப்பா னரம்பு கயிறாக மூளை யென்பு தோல்போர்த்த
குப்பா யம்புக் கிருக்ககில்லேன் கூவிக் கொள்ளாய் கோவேயோ
எப்பா லவர்க்கு மப்பா லாமென் னாரமு தேயோ
அப்பா காண வாசைப் பட்டேன் கண்டா யம்மானே. (உ)

(க) பொல்லா மணி-பொள்ளாமணி (தொளைக்கப்படாத மணி). அம்மான்-தந்தை. இந்தத் திருப்பாட்டில் ஒவ்வொருவரும் அருளைப் பெறவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. கண்ணொளியானது விளக்கொளியோடு கலந்து அதனோடுகூட ஒருருவைக் கலந்தாலொழிய அவ்வுருவங்காணப்படாது. அதுபோல, அறிவிக்க அறியும் இயல்பினையுடைய ஆன்மா அருளோடு கலந்து அதனோடு சிவத்தைக் கலந்து நின்றாலொழிய சிவாநந்தாநுபவம் எய்தமுடியாது. ஆதலின், முதன்மையான அருளை முதலிற் பெறவேண்டியது அவசியம். "அருளா லெவையும் பாரென்றான்" என்றதுமிது பற்றியே. "அருள்கொண்டறியா ரறியுந்தரமோ" என்றதையுஞ் சிந்திக்க. (உ) மொய்ப்பு ஆன் - நெருக்கத்தையுடைய; குப்பாயம் - சட்டை, மேற்போர்வை; கூவிக்கொள் - அழைத்துக் கொள்; எப்பாலவர்க்கும் - எப்பகுதியோருக்கும். (ங) சீவார்ந்து -

சீவார்ந் தீமொய்த் தழுக்கொடு திரியுஞ் சிறுகுடி லிதுசிதையக்
கூவாய் கோவே கூத்தா காத்தாட் கொள்ளுங் குருமணியே
தேவா தேவர்க் கரியானே சிவனே சிறிதென் முகநோக்கி
ஆவா வென்ன வாசைப் பட்டேன் கண்டா யம்மானே. (௩)

மிடைந்தெலும் பூத்தை மிக்கழுக் கூறல் வீறிலி நடைக்கூடந்
தொடர்ந்தெனை நலியத் துயருறுகின்றேன் சோத்தமெம்பெருமானே
உடைந்துநைந் துருகி யுன்னொளி நோக்கி யுன்றிரு மலர்ப்பாதம்
அடைந்து நின்றிடுவா னாசைப் பட்டேன் கண்டா யம்மானே. (௪)

அளிபுண் ணகத்துப் புறந்தோன்மூடி யடியே னுடையாக்கை
புளியம் பழமொத் திருந்தே னிருந்தும் விடையாய்ப் பொடியாடீ
எளிவந் தென்னை யாண்டு கொண்ட வென்னா ரமுதேயோ
அளியே னென்ன வாசைப் பட்டேன் கண்டா யம்மானே. (௫)

எய்த்தே னாயே னினியிங் கிருக்க கில்லே னிவ்வாழ்க்கை
வைத்தாய் வாங்காய் வானோ ரறியா மலர்ச்சே வடியானே
முத்தா வுன்றன் முகவொளி நோக்கி முறுவல் நகைகாண
அத்தா சால வாசைப் பட்டேன் கண்டா யம்மானே. (௬)

பாரோர் விண்ணோர் பரவி யேத்தும் பரனே பரஞ்சோதீ
வாராய் வாரா வுலகந் தந்து வந்தாட் கொள்வானே
பேரா யிரமும் பரவித் திரிந்தெம் பெருமா னெனவேத்த
ஆரா வமுதே யாசைப் பட்டேன் கண்டா யம்மானே. (௭)

கையாற் றொழுதுன் கழற்சே வடிகள் கழுமத் தழுவிக்கொண்
டெய்யா தென்றன் றலைமேல் வைத்தெம்பெருமான் பெருமானென்

சீயொழுகி; குடில் - குடிசை; இது சிதைய - இந்த உடல் அழிய. (௪) எலும்பு மிடைந்து - எலும்புகள் நெருங்கி; அழுக்கு ஊறல் - அழுக்கு ஊற்று; வீறிலி - பெருமையில்லாத; நடைகூடம் - நடைவீடு; சோத்தம் - அஞ்சலி; உடைந்து - மனமுடைந்து. (௫) அகத்து அளி புண் - உள்ளே கனிந்த புண்; இருந்தேன் - பற்றற் றிருந்தேன்; அளியேன் - கிருபையுடையவன்; என்ன - என்று நீ சொல்லும்வண்ணம். (௬) வாங்காய் - அழைத்துக் கொள்வாய்; முறுவல்நகை - பல்லொளி. (௭) வாராஉலகம் - மீட்டும் பிறவிக்கு வாராத முத்திஉலகம், மறுா சிவலோகம். (௮) கழும - பொருந்த; எய்யாது - இளைக்காமல்; பெருமான் - பெருமையுடையவனே,

றையா வென்றன் வாயா லரற்றி யழல்சேர் மெழுகொப்ப
ஐயாற் றரசே யாசைப் பட்டேன் கண்டா யம்மானே. (அ)

செடியா ராக்கைத் திறமற வீசிச் சிவபுர நகர்புக்குக்
கடியார் சோதி கண்டு கொண்டேன் கண்ணிணை களிகூரப்
படிதா னில்லாப் பரம்பர னேயுன் பழவடி யார்கூட்டம்
அடியேன் காண வாசைப் பட்டேன் கண்டா யம்மானே. (கூ)

வெஞ்சே லனைய கண்ணார்தம் வெகுளி வலையி லகப்பட்டு
நைஞ்சே னேயேன் ஞானச் சுடரே நானோர் துணைகாணேன்
பஞ்சே ரடியாள் பாகத் தொருவா பவளத் திருவாயால்
அஞ்சே லென்ன வாசைப் பட்டேன் கண்டா யம்மானே. (ய)

திருச்சிற்றம்பலம்.

பெருமையுடையா ரெல்லாருள்ளும் பெருமையுடையோனே. (கூ) செடி ஆர் - குற்றம்நிறைந்த; திறம் - தன்மை; கடி ஆர் - விளக்கம் நிறைந்த; படி-ஒப்பு. (ய) நைஞ்சேன் - நைந்தேன்; துணை- உதவி.

அதிசயப்பத்து.

முத்தியிலக்கணம்

எ - து. மோட்சத்தினடையாளம்.

திருப்பெருந்துறையி லருளிச்செயப்பட்டது.

ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

வைப்புமாடென்றுமாணிக்கத்தொளியென்றுமனத் திடையுருகாதே
செப்பு நேர்முலைமடவர லியர் தங்கடி றத்திடை நைவேனை
ஒப்பி லாதன வுவமனி லிறந்தன வொண்மலர்த் திருப்பாதத்
தப்ப னாண்டுதன் னடியரிற் கூட்டிய வதிசயங் கண்டாமே. (க)

நீதி யாவன யாவையு நினைக்கிலே னினைப்பவ ரொடுங்கூடேன்
ஏத மேபிறந் திறந்துழல் வேன்றனை யென்னடி யானென்று
பாதி மாதொடுங் கூடிய பரம்பர னிரந்தர மாய்நின்ற
ஆதி யாண்டுதன் னடியரிற் கூட்டியவதிசயங் கண்டாமே. (உ)

முன்னை யென்னுடைவல்வினை போயிட முக்கண துடையெந்தை
தன்னை யாவரு மறிவதற் கரியவ னெளியவ னடியார்க்குப்
பொன்னை வென்றதோர் புரிசடைமுடிதனி லிளமதி யதுவைத்த
அன்னையாண்டுதன் னடியரிற் கூட்டிய வதிசயங் கண்டாமே. (ங)

பித்த னென்றெனை யுலகவர் பகர்வதோர் காரண மிதுகேளீர்
ஒத்துச் சென்றுதன் றிருவருட் கூடிடு முபாயம தறியாமே

(க) வைப்பு - புதையல்; மாடு - பொன்; மடவரலியர் - மாதர்கள்; திறத்திடை - குணங்களால். (உ) ஏதம் - குற்றம்; நிரந்தரம் - எப்பொழுதும். (ச) ஒத்து - இணங்கி; அருநாகு - சகித்தற்கரிய

செத்துப் போயரு நரகிடை வீழ்வதற் கொருப்படு கின்றேனை
அத்த னாண்டுதன் னடியரிற் கூட்டிய வதிசயங் கண்டாமே. (௪)

பரவு வாரவர் பாடுசென் றணைகிலேன் பன்மலர் பறித்தேற்றேன்
குரவு வார்குழ லார்திறத் தேநின்று குடிகெடு கின்றேனை
இரவு நின்றெரி யாடிய வெம்மிறை யெரிசடை மிளிர்கின்ற
அரவ னாண்டுதன் னடியரிற் கூட்டிய வதிசயங் கண்டாமே. (௫)

எண்ணி லேன்றிரு நாமவஞ் செழுத்துமென் னேழைமை யதனாலே
நண்ணி லேன்கலை ஞானிகடம்மொடு நல்வினை நயவாதே
மண்ணி லேபிறந் திறந்துமண் ணாவதற் கொருப்படு கின்றேனை
அண்ண லாண்டுதன் னடியரிற் கூட்டிய வதிசயங் கண்டாமே. (௬)

பொத்தை யூன்சுவர் புழுப்பொதிந் துளுத்தசும் பொழுகிய பொய்க்
[கூரை
இத்தைமெய்யெனக் கருதிநின் றிடர்க்கடற் சுழித்தலைப் படுவேனை
முத்து மாமணிமாணிக்க வயிரத்த பவளத்தின் முழுச்சோதி
அத்தனாண்டுதன் னடியரிற்கூட்டிய வதிசயங் கண்டாமே. (௭)

நீக்கி முன்னெனைத்தன்னொடு நிலாவகை குரம்பையிற் புகப்பெய்து
நோக்கிநுண்ணியநொடியனசொற்செய்துநுகமின்றிவிளாக்கைத்துத்
தூக்கி முன்செய்த பொய்யறத்துகளறுத் தெழுதருசுடர்ச்சோதி
ஆக்கி யாண்டுதன் னடியரிற் கூட்டிய வதிசயங் கண்டாமே. (௮)

உற்ற வாக்கையி னுறுபொரு ணறுமல ரெழுதரு நாற்றம்போல்
பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொரு ளப்பொருள் பாராதே
பெற்ற வாபெற்ற பயனது நுகர்ந்திடும் பித்தர்சொற் றெளியாமே
அத்த னாண்டுதன் னடியரிற் கூட்டிய வதிசயங் கண்டாமே. (௯)

இருடிணிந்தெழுந் திட்டதோர் வல்வினைச் சிறுகுடி விதுவித்தைப்
பொருளெ னக்களித் தருநர கத்திடை விழப்புகு கின்றேனைத்

நரகு. (௫) அவர்பாடு – அவரிடத்தே; குரவு – குராமலர். (௬) ஏழைமை – பேதமை; நண்ணிலேன் – சேர்ந்திலேன். (௭) பொத்தை – பருமை; அசும்பு–கசிவு; பொய்க்கூரை - நிலையில்லாதசிறுவீடு. (௮) குரம்பை – உடம்பு; சொல்செய்து – சொல்லைச்சொல்லி; நுகம் இன்றி – நுசத்தடியில்லாமல்; விளாக்கைத்து தூக்கி – கைப்பற்றி யெடுத்து; துகள் – குற்றம். (௯) எழுதரு – உண்டாகாநின்ற; பற்

தெருளு மும்மதி னொடிவரை யிடிதரச் சினப்பதத் தொடு செந்தீ
அருளு மெய்ந்நெறி பொய்ந்நெறி நீக்கிய வதிசயங் கண்டாமே. (ம)

திருச்சிற்றம்பலம்.

புணர்ச்சிப் பத்து.

அத்துவிதவிலக்கணம்

எ-து. பதியும் பசுவும் ஒன்றிரண்டல்லவென்றல்.

திருப்பெருந்துறையி லருளிச்செயப்பட்டது.

ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

சுடர்பொற் குன்றைத் தோளா முத்தை
வாளா தொழும்புகந்து
கடைபட் டேனை யாண்டுகொண்ட
கருணாலயனைக் கருமால்பிரமன்
தடைப்பட் டின்னுஞ் சாரமாட்டாத்
தன்னைத்தந்த வென்னாரமுதைப்
புடை பட்டிருப்ப தென்று கொல்லோ வென்
பொல்லா மணியைப் புணர்ந்தே. (க)

நல்குவது - பற்றுதற்கேற்றதாகிய. (ம) இருள் - ஆணவவிருள்; திணிந்து - நெருங்கி; இது - இந்தஉடம்பு; இத்தை - இதனை; தெருளும் - தெளிந்த; நொடிவரை - நொடிப்பொழுதில்; இடிதர - இடிந்தழிய; சினப்பதத்தொடு - கோபக்குறியோடு; செந்தீ அருளும் - சிவந்தநெருப்பை அருள்செய்த; மெய்ந்நெறி - உண்மைநெறிப் பயனுடைய சிவபிரான்.

(க) கருணாலயனை - கருணைக்கு உறைவிடமாயிருப்பவனை; தடைபட்டு - தடைசெய்யப்பட்டு; புடைபட்டிருப்பது - அருகிலிருப்பது; என்றுகொல்லோ - எப்பொழுதோ. (உ) விருப்புஇல்

ஆற்றகில்லே னடியேனரசே
யவனி தலத்தைம் புலனுய
சேற்றி லழுந்தாச் சிந்தைசெய்து
சிவனெம் பெருமா னென்றேத்தி
ஊற்று மணற்போ னெக்குநெக் குள்ளே
யுருகி யோலமிட்டுப்
போற்றிநிற்ப தென்று கொல்லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே. (உ)

நீண்டமாலு மயனும் வெருவ
நீண்டநெருப்பை விருப்பி லேனை
ஆண்டு கொண்டவென்னு ரமுதை
யள்ளூ றுள்ளத் தடியார்முன்
வேண்டுந் தனையும் வாய்விட் டலறி
விரையார் மலர் தூவிப்
பூண்டு கிடப்ப தென்றுகொல்லோவென்
பொல்லாமணியைப் புணர்ந்தே. (௩)

அல்லிக் கமலத் தயனுமாலு
மல்லாதவரு மமரர் கோனும்
சொல்லிப்பரவு நாமத்தானைச்
சொல்லும் பொருளு மிறந்தசுடரை
நெல்லிக்கனியைத் தேனைப் பாலை
நிறையின் னமுதை யமுதின்சுவையைப்
புல்லிப் புணர்வதென்று கொல்லோவென்
பொல்லாமணியைப் புணர்ந்தே. (௪)

திகழத்திகழு மடியுமுடியுங்
காண்பான் கீழ்மே லயனும் மாலும்
அகழப்பறந்துங் காணமாட்டா
வம்மா னிம்மா னில முழுதும்

லேனை - அன்பில்லாத என்னை; வேண்டுந்தனையும் - வேண்டுமளவும்; பூண்டு - அடைந்து. (௪) இறந்த - கடந்த; புல்லிப்புணர்வது - நெருங்கித்தழுவுவது. (ரு) திகழத்திகழும் - அதிகமாய் விளங்குகின்ற; அகழபறந்தும் - அகழ்ந்தும்பறந்தும்; நிகழ-விளங்க; நீர்மை -

நிகழப்பணிகொண் டென்னையாட்கொண்
டாவா வென்ற நீர்மையெல்லாம்
புகழப்பெறுவ தென்றுகொல்லோ வென்
பொல்லாமணியைப் புணர்ந்தே. (௫)

பரிந்துவந்து பரமானந்தம்
பண்டே யடியேற் கருள் செய்யப்
பிரிந்துபோந்து பெருமா னிலத்தி
லருமா லுற்றே னென்றென்று
சொரிந்தகண்ணீர் சொரியவுண்ணீ
ருரோமஞ் சிலிர்ப்ப வுகந்தன்பாய்
புரிந்துநிற்ப தென்று கொல்லோ வென்
பொல்லாமணியைப் புணர்ந்தே. (௬)

நினையப்பிறருக் கரியநெருப்பை
நீரைக் காலை நிலனை விசும்பைத்
தனையொப்பாரை யில்லாத்தனியை
நோக்கித் தழைத்துத் தழுத்தகண்டம்
கனையக்கண்ணீ ரருவிபாயக்
கையுங்கூப்பிக் கடி மலரால்
புனையப்பெறுவ தென்று கொல்லோ வென்
பொல்லா மணியைப் புணர்ந்தே. (௭)

நெக்குநெக்கு ளுருகியுருகி
நின்று மிருந்துங் கிடந்து மெழுந்தும்
நக்குமழுதுந் தொழுதும் வாழ்த்தி
நானா விதத்தாற் கூத்துநவிற்றிச்
செக்கர்போலுந் திருமேனி
திகழ நோக்கிச் சிலிர் சிலிர்த்துப்
புக்குநிற்ப தென்றுகொல்லோ வென்
பொல்லாமணியைப் புணர்ந்தே. (௮)

குணம்; புகழப்பெறுவது – புகழக்கிடைப்பது. (௬) பிரிந்துபோந்து–பிரிந்துவந்து; மால் – மயக்கம்; சொரிந்தகண்ணீர்சொரிய–பொழிந்த கண்ணீர் பொழிந்தபடியிருக்க; உண்ணீர் – உள்ளன்பு; புரிந்துநிற்பது–விரும்பிநிற்பது. (௭) தழைத்து – களித்து; தழுத்த – தழுதழுத்த;

தாதாய் மூவே ழுலகுக்குந்
தாயே நாயேன் றனையாண்ட
பேதாய்பிறவிப் பிணிக்கோர் மருந்தே
பெருந்தேன்பில்க வெப்போதும்
மேதாமணியே யென்றென்றேத்தி
யிரவும் பகலு மெழிலார் பாதப்
போதாய்ந்தணைவ தென்று கொல்லோ வென்
பொல்லாமணியைப் புணர்ந்தே. (௯)

காப்பாய் படைப்பாய் கரப்பாய்முழுதுங்
கண்ணார் விசும்பின் விண்ணோர்க்கெல்லாம்
மூப்பாய்மூவா முதலாய் நின்ற
முதல்வா முன்னே யெனையாண்ட
பார்ப்பானேயெம் பரமாவென்று
பாடிப் பாடிப் பணிந்து பாதப்
பூப்போதணைவ தென்று கொல்லோ வென்
பொல்லாமணியைப் புணர்ந்தே. (௰)

திருச்சிற்றம்பலம்.

கண்டம்கனைய-கண்டங்கனைத்தலுண்டாக. (௮) நெக்கு-நெகிழ்ந்து நக்கும் - சிரித்தும்; நவிற்றி - செய்து; செக்கர் - செவ்வானம்; திகழ நோக்கி - விளங்கப்பார்த்து. (௯) தாதாய் - தந்தையே; பேதாய் - எளியையாய்; பில்க - சிந்த; மேதாமணியே - ஞானமணியே; ஆய்ந்து அணைவது - ஆராய்ந்து அணுகப்பெறுவது. (௰) கண்ஆர் - இடம் நிறைந்த; மூப்பாய் - முதியோனே; பூபோது-அழகிய தாமரைமலர்.

வாழாப் பத்து.

முத்தியுபாயம்

எ - து. பிரபஞ்சமயனீங்கி பரபோகத்தைக் கூடுதற்குபாயம்.

திருப்பெருந்துறையி லருளிச்செயப்பட்டது.

ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பாரொடு விண்ணாய்ப் பரந்தவெம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகே னார்க்கெடுத்துரைக்கேன்
ஆண்டநீ யருளிலை யானால்
வார்கட லுலகில் வாழ்கிலேன்கண்டாய்
வருகவென் றருள்புரியாயே. (௧)

உம்பனேன் றன்னை யாண்டமாமணியே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
உம்பரு மறியா வொருவனேயிருவர்க்
குணர்விறந் துலகமூ டுருவும்

(௧) நான்மற்றுபற்று இலேன் - நான்வேறு பற்றுடையேனல்லேன்; பொலிவாய்-விளங்குவோனே; வார்கடல்உலகில்-நெடியகடல்சூழ்ந்த உலகத்தில்; வருகஎன்று அருள்புரியாய்-வாவென்று அருள்செய்வாயாக. "வருகவென்றழைத்தாலன்றி வாழ்வுண்டோ" என்றருளிச் செய்ததும் இக்கருத்துபற்றியே. (௨) உணர்வுஇறந்து -

செம்பெரு மானே சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எம்பெரு மானே யென்னையாள்வானே
என்னைநீ கூவிக்கொண் டருளே. (உ).

பாடிமால் புகழும் பாதமேயல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேடிநீ யாண்டாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஊடுவ துன்னோ டுவப்பதுமுன்னை
உணர்த்துவ துனக்கெனக் குறுதி
வாடினே னிங்கு வாழ்கிலேன்கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே. (௩).

வல்லைவா ளரக்கர் புரமெரித்தானே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
தில்லைவாழ் கூத்தா சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எல்லைமூ வுலகு முருவியன் றிருவர்
காணுநா ளாதியீ றின்மை
வல்லையாய் வளர்ந்தாய் வாழ்கிலேன்கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே. (௪).

பண்ணினேர் மொழியாள் பங்கநீயல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திண்ணமே யாண்டாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எண்ணமே யுடல்வாய் மூக்கொடுசெவிகண்
என்றிவை நின்கணே வைத்து

(அவர்களுடைய) அறிவைக்கடந்து. (௩) ஊடுவது - பிணங்குவது; உவப்பதும் - விரும்புவதும்; உணர்த்துவதும் - விண்ணப்பஞ்செய்வதும. (௪) வல்லை-விரைவு; வாள்அரக்கர்-வாளேந்திய அசுரர் (திரிபுராதியர்கள்); எல்லைஉருவி-எல்லைகடந்து; வல்லையாய் - சமர்த்தனாய்.

மண்ணின்மே லடியேன் வாழ்கிலேன்கண்டாய்
உருகவென் றருள்புரி யாயே. (௫)

பஞ்சின்மெல் லடியாள் பங்கநீயல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செஞ்செவே யாண்டாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
அஞ்சினே னாயே னாண்டுநீயளித்த
அருளினை மருளினான் மறந்த
வஞ்சனே னிங்கு வாழ்கிலேன்கண்டாய்
உருகவென் றருள்புரி யாயே. (௬)

பரிதிவா ழொளியாய் பாதமேயல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திருவுயர் கோலச் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
கருணையே நோக்கிக் கசிந்துளமுருகிக்
கலந்துநான் வாழுமா றறியா
மருளனே னுலகில் வாழ்கிலேன்கண்டாய்
உருகவென் றருள்புரி யாயே. (௭)

பந்தணை விரலாள் பங்கநீயல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செந்தழல் போல்வாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
அந்தமி லமுதே யரும்பெரும்பொருளே
ஆரமு தேயடி யேனை
வந்துய வாண்டாய் வாழ்கிலேன்கண்டாய்
உருகவென் றருள்புரி யாயே. (௮)

---

(௫) திண்ணமே - உண்மையாகவே. (௬) செஞ்சவே - செம்மையாகவே; மருளினால் - மயக்கத்தினால். (௭) பரிதிவாழ் ஒளியாய் - ஆதித்தனில் உறைகின்ற ஒளியுருவினனே; திருஉயர்கோலம் - செல்வத்தாற்சிறந்த அழகு. (௯) முழங்கு அழலாய் - சப்திக்கின்ற

பாவநா சாவுன் பாதமே யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேவர்தந் தேவே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
மூவுல குருவ விருவர்கீழ் மேலாய்
முழங்கழ லாய்நிமிர்ந் தானே
மாவுரி யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே. (கூ).

பழுதிறுல் புகழாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செழுமதி யணிந்தாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ வெனக்கோர்
துணையென நினைவனோ சொல்லாய்
மழவிடையானே வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே. (ய).

திருச்சிற்றம்பலம்.

அக்கினிவடிவாய்; மாஉரியானே - யானைத்தோலை உடையவனே
(ய) பழுதுஇல்தொல் - குற்றமற்றபழமை; மழவிடையானே -
இளமையாகிய இடபவாகனனே.

அருட்பத்து.

மகாமாயாசுத்தி

எ - து. மாயையினின்றும் விலகுதல்.

திருப்பெருந்துறையி லருளிச்செயப்பட்டது.

ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே யடியே னாதரித் தழைத்தால்
அதெந்துவே யென்றருளாயே. (க)

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே புன்னை யோலமிட் டலறி
உலகெலாந் தேடியுங் காணேன்

(க) சுரிகுழல் - சுழற்சியையுடைய கூந்தல்; பால்கொள் - பால்நிறத்தைக்கொண்ட; அதெந்துவே - அஞ்சாதே. (உ) ஒருத்தனே - ஏகனே; திருத்தமாம்பொய்கை - தீர்த்தத்தின்பெயர்; அது தன்னிடத்து மூழ்குவோருடைய பாவங்களைப் போக்குந்தூய்மை பொருந்திய புண்ணிய நீரையுடைய தீர்த்தம்; அருத்தனே -

திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருத்தனே யடியே னுதரித் தழைத்தால்
அதெந்துவே யென்றரு ளாயே. (உ)

எங்க ணாயகனே யென்னுயிர்த் தலைவா
ஏலவார் குழலிமாரிருவர்
தங்க ணாயகனே தக்கநற் காமன்
றனதுட றழலெழ விழித்த
செங்க ணாயகனே திருப்பெருந் துறையில்
செழுமலர்க்குருந்தமே வியசீர்
அங்க ணாவடியே னுதரித் தழைத்தால்
அதெந்துவே யென்றரு ளாயே. (௩)

கமலநான் முகனுங் கார்முகி னிறத்துக்
கண்ணனு நண்ணுதற் கரிய
விமலனே யெமக்கு வெளிப்படா யென்ன
வியன்றழல் வெளிப்பட்ட வெந்தாய்
திமிலநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அமலனே யடியே னுதரித் தழைத்தால்
அதெந்துவே யென்றரு ளாயே. (௪)

துடிகொணே ரிடையாள் சுரிகுழன் மடந்தை
துணைமுலைக் கண்சுடோய் சுவடு
பொடிகொள்வான் றழலிற் புள்ளிபோ லிரண்டு
பொங்கொளி தங்குமார் பினனே

செல்வனே. (௩) ஏலம்வார் - மயிர்ச்சாந்தணிந்த நீண்ட; குழலிமார்இருவர் - கூந்தலையுடைய இரண்டு தேவிமார் (பார்வதி, கங்கை); தக்கநல் - தகுதியாகிய அழகிய; செங்கண்-செம்மையாகிய அக்கினிக்கண்; அம்கண்ணா - கிருபைக்கண்ணனே. (௪) வியன் தழல் - பெரியநெருப்பு; திமிலம் - பேரொலி. (௫) துடிகொள் - உடுக்கையின் உருவமைந்த; நேர்இடை - நேரியஇடை; துணை - இரண்டு; சுவடு - தழும்பு; பொடி - நீறு; பொங்குஒளி - விளங்குகின்றஒளி; செடிகொள் - ஒளியைக்கொண்ட. (௬) துப்பனே -

செடிகொள்வான் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அடிகளே யடியே ஞாதரித் தழைத்தால்
அதெந்துவே யென்றரு ளாயே. (ரு)

துப்பனே தூயாய் தூயவெண் ணீறு
துதைந்தெழு துளங்கொளி வயிரத்
தொப்பனே யுன்னை யுள்குவார் மனத்தின்
உறுசுவை யளிக்குமா ரமுதே
செப்பமா மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அப்பனே யடியே ஞாதரித் தழைத்தால்
அதெந்துவே யென்றரு ளாயே. (சு)

மெய்யனே விகிர்தா மேருவே வில்லா
மேவலர் புரங்கண் மூன்றெரித்த
கையனே காலாற் காலனைக் காய்ந்த
கடுந்தழற் பிழம்பன்ன மேனிச்
செய்யனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
ஐயனே யடியே ஞாதரித் தழைத்தால்
அதெந்துவே யென்றரு ளாயே. (எ)

முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டறா மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யும்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அத்தனே யடியே ஞாதரித் தழைத்தால்
அதெந்துவே யென்றரு ளாயே. (அ)

அறிவுடையோனே; துதைந்து – படிந்து; துளங்குஒளி – விளக்கமாகியஒளி; உறுசுவை – மிகுந்தசுவை. (எ) விகிர்தா – பொய்யனே; மேவலர் – பகைவர்; காய்ந்த – கோபித்த; கடுதழல் பிழம்புஅன்ன – வேகமாகிய அக்கினித்தூண்போன்ற. (அ) முத்தனே – இயல்பா

மருளனேன் மனத்தை மயக்கற நோக்கி
மறுமையோ டிம்மையுங் கெடுத்த
பொருளனே புனிதா பொங்குவா ளரவம்
கங்கைநீர் தங்குசெஞ் சடையாய்
தெருளுநான் மறைசேர் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருளனே யடியே னுதரித் தழைத்தால்
அதெந்துவே யென்றரு ளாயே. (க)

திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
இருந்தவா றெண்ணி யேசரு நினைந்திட்
டென்னுடை யெம்பிரா னென்றன்
றருந்தவா நினைந்தே யாதரித் தழைத்தால்
அலைகட லதனுளே நின்று
பொருந்தவா கயிலை புகுநெறி யிதுகாண்
போதரா யென்றரு ளாயே. (ய)

திருச்சிற்றம்பலம்.

கவே பாசங்களினின்றும் நீங்கினவனே; மொட்டுஅறு - முகிழ்த் தன்மை நீங்காத; பாகதி - முத்தி. (க) மருளனேன் - மருட்சியை யுடையேன்; பொருளனே - பெருஞ்செல்வனே; நீர் - நதி; ஆத ரித்து - அன்புசெய்து. (ய) திருந்து - திருந்திய; வார் - நீண்ட; அருந்து அவாநினைந்து-அநுபவிக்கும் ஆசையினலே கருதி; அலை கடல் அதன் உள்ளநின்று - அலைகடற்கு உள்ளிடமாகிய உலகத்தி னின்று; பொருந்த வா - (என்னை) அடையவருவாயாக; போதராய் என்று - வருகவென்று.

திருக்கழுக்குன்றப்பதிகம்.

குருதரிசனம்

எ - து. பசுத்துவங் கேட்டவிடம்.

திருக்கழுக்குன்றத்தி லருளிச்செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பிணக்கிலாத பெருந்துறைப் பெருமானுன் னாமங்கள் பேசுவார்க்
கிணக்கிலாத தோரின்பமே வருந் துன்பமே துடைத் தெம்பிரான்
உணக்கிலாத தோர் வித்துமேல்விளையாம லென்வினை யொத்தபின்
கணக்கிலாத் திருக்கோலநீ வந்துகாட்டினாய் கழுக் குன்றிலே. (க)

பிட்டுநேர்பட மண் சுமந்த பெருந்துறைப் பெரும் பித்தனே
சட்டநேர்பட வந்தி லாத சழக்கனே னுனைச் சார்ந்திலேன்
சிட்டனே சிவலோகனே சிறு நாயினுங் கடை யாயவெங்
கட்டனேனையு மாட்கொள்வான் வந்து காட்டினாய் கழுக் குன்றிலே.

மலங்கினேன் கண்ணி னீரைமாற்றி மலங் கெடுத்த பெருந்துறை
விலங்கினேன் வினைக்கேடனே னினி மேல் விளைவ தறிந்திலேன்

(க) பிணக்கு - மாறுபாடு; இணக்கு - ஒப்பு; உணக்கு-கெடுதி; வித்து - பிறவிவித்து; வினை ஒத்தபின் - நல்வினை தீவினைகள் சமமான பின்பு. அஃதுவே இருவினையொப்பு. அது நல்வினையால் வரும் இன்பத்திலும், தீவினையால் வரும் துன்பத்திலும் முறையே விருப்பம் வெறுப்புமின்றிச் சமபுத்தி பண்ணுவது. (ஓடும் பொன்னும், உறவும் பகையும், கேடுஞ் செல்வமும், கீர்த்தியும் நிந்தையும், வீடுங் கானமும் ஒப்ப நோக்குவதாம்). கணக்கு - அளவு; காட்டினாய் - குருவடிவைத் தரிசிப்பித்தாய். (உ) பிட்டுநேர்பட - பிட்டினைப் பெற; சட்டநேர்பட - செம்மையாய சத்து கோசரமாக; சிட்டனே - பெரியோனே; வெம்சட்டனேனையும் - கொடிய துன்பத்தையுடையேனாகிய என்னையும். (ங) மலங்கினேன்-கலங்கினேன்;

இலங்குகின்ற நின் சேவடிக ளிரண்டும் வைப்பிட மின்றியே
கலங்கினேன் கலங் காமலே வந்து காட்டினாய் கழுக் குன்றிலே.(ங)

பூணொணாததொ ரன்பு பூண்டு பொருந்தி நாடொறும் போற்றவும்
நாணொணாததொர் நாண மெய்தி நடுக்கட லு ளழுந்தி நான்
பேணொணாத பெருந்துறைப் பெருந் தோணி பற்றி யுகைத்தலும்
காணொணாத் திருக்கோலநீ வந்து காட்டினாய் கழுக் குன்றிலே. (ச)

கோலமேனி வராகமே குண மாம் பெருந்துறைக் கொண்டலே
சீலமேது மறிந்திலாத வென் சிந்தை வைத்த சிகாமணி
ஞாலமே கரியாக நானுனை நச்சி நச்சிட வந்திடும்
காலமேயுனை யோத நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே. (ரு)

பேதமில்லதொர் கற்பளித்த பெருந்துறைப் பெருவெள்ளமே
ஏதமேபல பேசநீ யெனை ஏதிலார் முன மென்செய்தாய்
சாதல்சாதல் பொல்லாமை யற்ற தனிச்சரண் சரண மெனக்
காதலா லுனை யோதநீ வந்து காட்டினாய் கழுக் குன்றிலே. (சு)

இயக்கிமா ரறுபத்து நால்வரை எண்குணஞ் செய்த வீசனே
மயக்கமாய தொர்மும் மலப்பழ வல்வினைக்கு ளழுந்தவும்
துயக்கறுத் தெனையாண்டு கொண்டுநின் றூய்மலர்க் கழ றந்தெனைக்
கயக்கவைத் தடியார்முனே வந்து காட்டினாய்க் கழுக் குன்றிலே.(எ)

திருச்சிற்றம்பலம்.

விலங்கினேன் - விட்டு விலகினேன்; கேடனேன் - கெடுதியை யுடையேன்; சேவடிகள் இரண்டும் - அருளுருவாகிய ஞானசத்தி கிரியாசத்தி என்னும் இரண்டு திருவடிகளையும்; வைப்பிடம்-வைத் தற்குரிய இடம், அதாவது என்னுடைய ஞானசத்தி கிரியாசத்தி கள் அடங்கி ஒன்றுபட்டு நிற்குமிடம், அது திருவருட்பூரண நிறைவு. (ச) பூண் ஒணாதது - அடையப்பெற வொண்ணாதது; நாண் ஒணாதது - மதிக்க வொண்ணாதது; பேண் ஒணாத - விரும்பு தற்கரிய. (ரு) கோலம் - அழகு; வராகமே - மலையே; குணம் - எண்குணம்; சீலம் - நல்லொழுக்கம்; வைத்த - அமைத்த; ஞாலம் - உலகத்திலுள்ளோர்; கரி - சாக்ஷி; நச்சிநச்சிட - மிகவும் விரும்ப; காலமே - காலதத்துவக் கடவுளே. (சு) கற்பு - கல்வி; ஏதம் - குற் றம்; ஏதிலார் - அயலார்; சரண் - (முன்னையது) திருவடி, (பின்னை யது) அடைக்கலம்; (எ) செய்த - அடையச் செய்த; துயக்கு - தளர்வு; கயக்க வைத்த - மெலிய வைத்த.

கண்டபத்து.

நிருத்ததரிசனம்.

தில்லையிலருளிச் செயப்பட்டது.

கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

இந்திரிய வயமயங்கி யிறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோ யருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அந்தமிலா வானந்த மணிகொடில்லை கண்டேனே. (க)

(க) "இந்திரியவயமயங்கி இறப்பதற்குக் காரணம்" என்பது எப்பொழுதும் பிரபஞ்ச விஷயங்களை இந்திரியங்கள் வாங்கிக் கொடுக்க, அவற்றை மனம் பற்ற, அவற்றை அகங்காரம் உள்ளே கொண்டு செல்ல, அவற்றைப் புத்தி தத்துவம் குணத்துக்கேற்ப சுகமாகவோ, துக்கமாகவோ, மோகமாகவோ நிச்சயிக்க, அவற்றை வித்தையாயிலாக ஆன்மா அறிந்து, அவற்றின் வசப்பட்டு, மயங்கி இறப்பதுவே ஆன்மாவின் தொழிலாதலின் அவ்வாறு கூறப்பட்டது. அன்றியும், மும்மலச் சுழலிற்பட்டு மயங்கி வருந்துதல் காட்சிப்புலனாதலின்று. காட்சிப்புலனாய் எளிதில் அறியப்படுவது ஐம்பொறிச் சுழலாதலின் அவ்வண்ணமுரைக்கப்பட்டது. அந்தரமே - வேறுபட்டே; சிவம் ஆக்கி - சிவத்துவத்தை விளக்கி; ஆனந்தம் - ஆனந்த நடராஜமூர்த்தி. இவர் உருத்திரமஹேசுவர மூர்த்திகளுக்கு அப்பாற்பட்டவர். திருவருளே திருமேனியாகக்கொண்டு ஆனந்த நிருத்தஞ் செய்யும் சம்புபக்ஷத்து அதிதெய்வமாயிருப்பவர். இவருடைய சிற்கன வடிவம் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தால் அமைந்தது. இவர் முத்தான்மாக்கள் ஆனந்தாநுபவம் பெறும்பொருட்டே ஐந்தொழில் நடத்துபவர். இடைப் பஞ்சப்ரஹ்மஷடங்க மந்திரங்களைக்கொண்டு பாவிக்கப்படாது. (மற்றவை எமது தனி விஷய சூசனத்தில் காண்க); தில்லை - தில்லையம்பலம், அதாவது பரையின் வடிவாய் விளங்கும் ஞானமன்றாகிய சிற்சபை. (உ) இணைஇலி - உவமை

வினைப்பிறவி யென்கின்ற வேதனையி லகப்பட்டுத்
தனைச்சிறிது நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை
எனைப்பெரிது மாட்கொண்டென் பிறப்பறுத்த வினையிலியை
அனைத்துலகுந் தொழுந்தில்லை யம்பலத்தே கண்டேனே. (உ)

உருத்தெரியாக் காலத்தே யுள்புகுந்தென் னுளமன்னிக்
கருத்திருத்தி யூன்புக்குக் கருணையினா லாண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்குஞ் சிவபதத்தை
அருத்தியினா னையடியே னணிகொடில்லை கண்டேனே. (ஙு)

கல்லாத புல்லறிவிற் கடைபட்ட நாயேனை
வல்லாள னாய்வந்து வனப்பெய்தி யிருக்கும்வண்ணம்
பல்லோருங் காணவென்றன் பசுபாச மறுத்தானை
எல்லோரு மிறைஞ்சுதில்லை யம்பலத்தே கண்டேனே. (ச)

சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை யல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் னுரைமாய்த்துக்
கோதிலமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே. (ரு)

பிறவிதனை யறமாற்றிப் பிணிமூப்பென் றிவையிரண்டும்
உறவினொடு மொழியச்சென் றுலகுடைய வொருமுதலைச்

யிலான்; அனைத்து உலகம் - மண்முதல் நாதமீறாகச்சொல்லப்பட்ட தத்துவங்களில் கோப்புண்டு கிடக்கின்ற எல்லாவுலகங்களும். (ஙு) மன்னி - நிலைபெற்று; கரு - பிறவிக்குக் காரணமாகியவினை; ஊன்- உடம்பு; அருத்தி - ஆசை. (ச) வல்லாளன் - வன்மையுடையவன்; வனப்பு - சிவதேஜசு; எல்லோரும் - பாரார், விசும்புளார், பாதாளத் தார், புறத்தார் ஆகிய இவர்களெல்லோரும். (ரு) (சாதி, குலம், பிறப்பு ஆகியவிவற்றின் விசேடம் உண்மையறிவதற்கு வேண்டிய தில்லை. அவை பெருங்கட்டாம். ஆதலாற்றான் சைவத்தினெய்தி அதன் முடிபாகிய சித்தாந்த நெறியுணர்ந்து சிவத்தை வழிபட வேண்டுமென்று வைதிக சைவம் பகர்கின்றது. சமயப்பற்று, சாதிப் பற்று மேல் நிலையில் அநாவசியம். ஞானப்பற்றொன்றே வேண் டும்). ஆதம் இலி - ஆதரவில்லாதன்; அல்லல் - துன்பம்; பேதைகுணம் - பேதைமைக் குணம்; குலாவு - யாவராலுங் கொண்டாடுகிற. (சு) அறமாற்றி - முழுதும் ஒழித்து; மறையவர் -

செறிபொழில்சூழ் தில்லைநகர்த் திருச்சிற்றம் பலமன்னி
மறையவரும் வானவரும் வணங்கிடநான் கண்டேனே. (௬)

பத்திமையும் பரிசுமிலாப் பசுபாச மறுத்தருளிப்
பித்தனிவ னெனவென்னை யாக்குவித்துப் பேராமே
சித்தமெனுந் திண்கயிற்றாற் றிருப்பாதங் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே. (௭)

அளவிலாப் பாவகத்தா லமுக்குண்டிங் கறிவின்றி
விளைவொன்று மறியாதே வெறுவியனாய்க் கிடப்பேனுக்
களவிலா வானந்த மளித்தென்னை யாண்டானைக்
களவிலா வானவருந் தொழுந்தில்லை கண்டேனே. (௮)

பாங்கினொடு பரிசொன்று மறியாத நாயேனை
ஓங்கியுளத் தொளிவளர வுலப்பிலா வன்பருளி
வாங்கிவினை மலமறுத்து வான்கருணை தந்தானை
நான்குமறை பயிறில்லை யம்பலத்தே கண்டேனே. (௯)

பூதங்க ளைந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்க ளனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை
வேதங்க டொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே. (௰)

திருச்சிற்றம்பலம்.

வேதியர். (௭) பரிசு - நல்லொழுக்கம்; வித்தகனார் - சிற்கனமூர்த்தி. (௮) பாவகம் - எண்ணம்; விளைவு - மேல்விளைய இருப்பது; வெறுவியன் - வெறுமையன்; களவு - கள்ளம். (௯) பாங்கு - முறைமை; பரிசு - குணம்; உலப்பு இல்லா - கெடுதலில்லாத; வாங்கிவினை - வினையை நீக்கி; வான் - மேலான. (௰) பேதங்கள் - வேறுபாடுகள்;. கேதங்கள் கெடுத்து - துன்பங்களை அழித்து; மரகதம் - பச்சை.

பிரார்த்தனைப்பத்து.

சதாமுத்தி

எ-து. ஆன்மாக்களுக்கு முத்திநிச்சயம் பண்ணுதல்.

திருப்பெருந்துறையிலருளிச் செயப்பட்டது.

ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கலந்து நின்னடி யாரோ டன்று வாளா களித்திருந்தேன்
புலர்ந்து போன காலங்கள் புகுந்து நின்ற திடர்பின்னாள்
உலர்ந்து போனே னுடையானே யுலவா வின்பச் சுடர்காண்பான்
அலந்து போனே னருள்செய்யா யார்வங் கூர வடியேற்கே. (க)

அடியார் சிலருன் னருள்பெற்றா ரார்வங் கூர யானவமே
முடையார் பிணத்தின் முடிவின்றி முனிவாலடியேன்மூக்கின்றேன்
கடியேனுடைய கடுவினையைக் களைந்துன்கருணைக்கடல்பொங்க
உடையா யடியே னுள்ளத்தே யோவா துருக வருளாயே. (உ)

அருளா ரமுதப் பெருங்கடல்வா யடியா ரெல்லாம் புக்கழுந்த
இருளா ராக்கை யிதுபொறுத்தே யெய்த்தேன்கண்டா யெம்மானே
மருளார்மனத் தோருன்மத்தன் வருமாலென்றிங் கெனைக்கண்டார்
வெருளாவண்ண மெய்யன்பை யுடையாய்பெற நான்வேண்டுமே.

(க) புலர்ந்து - கழிந்து; இடர் - துன்பம்; உலர்ந்து - வாடி; உலவா - கெடாத; அலந்து - துன்பப்பட்டு; ஆர்வங்கூர-அன்புமிக. (உ) அவமே - வீணே; முடைஆர் - நாற்றம்பொருந்திய; மூக்கின்றேன் - முதிர்கின்றேன்; கடியேன் - கடுமையையுடையேன்; ஓவாது - இடையறாது. (ங) ஆர் - அரிய; புக்குஅழுந்த - புகுந்து

வேண்டும் வேண்டு மெய்யடியா ருள்ளே விரும்பியெனையருளால்
ஆண்டா யடியே னிடர்களைந்த வமுதே யருமா மணிமுத்தே
தூண்டாவிளக்கின் சுடரனையாய் தொண்டனேற்குமுண்டாங்கொல்
வேண்டாதொன்றும் வேண்டாது மிக்கவன்பே மேவுதலே. (ச)

மேவு மூன்ற னடியாருள் விரும்பி யானு மெய்ம்மையே
காவி சேருங் கயற்கண்ணாள் பங்கா வுன்றன் கருணையினால்
பாவி யேற்கு முண்டாமோ பரமானந்தப் பழங்கடல்சேர்ந்
தாவி யாக்கை யானெனதென் றியாதுமின்றி யறுதலே. (ரு)

அறவே பெற்றார் நின்னன்ப ரந்த மின்றி யகநெகவும்
புறமே கிடந்து புலைநாயேன் புலம்புகின்றே னுடையானே
பெறவே வேண்டு மெய்யன்பு பேரா வொழியாப் பிரிவில்லா
மறவா நினையா வளவிலா மாளா வின்ப மாகடலே. (சு)

கடலே யனைய வானந்தங்கண்டா ரெல்லாங்கவர்ந்துண்ண
விடரேபெருக்கி யேசற்றிங் கிருத்த லழகோ வடிநாயேன்
உடையாய் நீயே யருளுதியென் றுணர்த்தா தொழிந்தே கழிந்
[தொழிந்தேன்
சுடரா ரருளா லிருணீங்கச் சோதி யினித்தான் றுணியாயே. (எ)

துணியா வுருகா வருள்பெருகத்தோன் றுந்தொண்டரிடைப்புகுந்து
திணியார் மூங்கிற் சிந்தையேன் சிவனே நின்று தேய்கின்றேன்

மூழ்க; இருள்ஆர் - அறியாமைநிறைந்த; மெய்யன்பைபெறவேண்டும் - உன்னன்பைப் பெறுதல்வேண்டும். ஏனெனின், உள்ளன்பென்னும் நிலத்தைக்கோலி, அருளென்னும்வித்திட்டு, அதிற்றோன்றுவதாகிய சிவஞானமென்னும் விருக்ஷத்தை வளர்த்துப், பின்னர் அதிற்பழுக்கும் முத்திப்பழத்தையுண்டு வாழவேண்டியிருத்தலின் அடிகளார் அவ்வாறு கூறியருளினார். (ச) வேண்டும்வேண்டும் - பலகாலும் வேண்டுகிற; வேண்டாது ஒன்றும் வேண்டாது - விரும்பப்படாத எதையும் விரும்பாமல்; மேவுதல் - பொருந்துதல். (ரு) காவி - நீலமலர்; அறுதல் - அற்றொழிதல். (சு) அறவே-(இன்பம்) முழுமையும்; பேரா - நிலைபெயராத; ஒழியா - அழியாத; பிரிவுஇல்லா - நீங்காத; மறவா - மறவாத; நினையா - நினையாத; அளவுஇல்லா - அளவில்லாத; மாளா-குறையாத; இன்பம்-ஆனந்தம். (எ) உண்ண - அநுபவிக்க; ஏசற்று - துக்கித்து; கழிந்து - பிரிந்து; சுடர்ஆர் அருளால் - அரியஅருட்சுடரால்; துணியாய் - நிச்சயிப்பாயாக. (அ)

அணியா ரடியா ருனக்குள்ள வன்புந் தாரா யருளளியத்
தணியா தொல்லை வந்தருளித் தளிர்ப்பொற் பாதந் தாராயே. (அ)

தாராவ ருளொன் றின்றியே தந்தா யென்றுன் றமரெல்லாம்
ஆரா நின்றா ரடியேனு மயலார் போல வயர்வேனோ
சீரா ரருளாற் சிந்தனையைத் திருத்தி யாண்ட சிவலோகா
பேரா னந்தம் பேராமை வைக்க வேண்டும் பெருமானே. (௯)

மானோர் பங்கா வந்திப்பார் மதுரக் கனியே மனநெகா
நானோர்தோளாச் சுரையொத்தா னம்பி யித்தால் வாழ்ந்தாயே
ஊனே புகுந்த வுனையுணர்ந்தே யுருகிப் பெருகு முள்ளத்தைக்
கோனே யருளுங் காலந்தான் கொடியேற் கென்றோ கூடுவதே. (௰)

கூடிக் கூடி யுன்னடியார் குனிப்பார் சிரிப்பார் களிப்பாரா
வாடி வாடி வழியற்றேன் வற்றன் மரம்போ னிற்பேனோ
ஊடி யூடி யுடையாயொடு கலந் துள்ளுருகிப் பெருகிநெக்
காடி யாடி யானந்த மதுவே யாக வருள்கலந்தே. (கக)

திருச்சிற்றம்பலம்.

துணியா - துணிந்து; உருகா - உருகி; திணிஆர் - வலிமைபொருந்திய; தேய்கின்றேன் - மெலிகின்றேன்; உனக்குஉள்ள - உனக்குச் செய்கின்ற; அருள்அளிய - அருள்கனிய; தணியாது - தாழ்க்காமல். (௯) தாரா-தரவொண்ணாத; ஒன்றுஇன்றி-முழுதும்; ஆராநின்றார் - அநுபவியாநின்றார். (௰) தோளா - தொளைக்காத. (கக) குனிப்பார்- கூத்தாடுவார்; ஆ - ஆகியிருக்க; வற்றல் - உலர்ந்த; ஊடிஊடி - பிணங்கிப்பிணங்கி; ஒடு - உன்னோடு; நெக்கு - நெகிழ்ந்து; ஆனந்த மதுவேயாக - ஆனந்தவுருவமாகும்படி; கலந்து அருள் - (என்னைக்) கூடிஅருள்செய்.

குழைத்தபத்து.

ஆத்துமநிவேதனம்

எ - து. சேயத்தோடொன்றல்.

திருப்பெருந்துறையி லருளிச்செய்யப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

குழைத்தாற் பண்டைக் கொடுவினைநோய் காவாயுடையாய் கொடு-
வினையேன், உழைத்தா லுறுதி யுண்டோதா னுமையாள் கணவா
வெனையாள்வாய், பிழைத்தாற் பொறுக்க வேண்டாவோ பிறைசேர்
சடையாய் முறையோவென், றழைத்தா லருளா தொழிவதே யம்
மானே யுன்னடியேற்கே. (௧)

அடியே னல்ல லெல்லாமுன் னகல வாண்டா யென்றிருந்தேன்
கொடியே ரிடையாள் கூறுவெங் கோவே யாவா வென்றருளிச்
செடிசே ருடலைச் சிதையாத தெத்துக் கெங்கள் சிவலோகா, உடை
யாய் கூவிப் பணிகொள்ளா தொறுத்தா லொன்றும் போதுமே. (௨)

ஒன்றும் போதா நாயேனை யுய்யக் கொண்ட நின்கருணை
இன்றே யின்றிப் போய்த்தோதா னேழை பங்கா வெங்கோவே
குன்றே யனைய குற்றங்கள் குணமா மென்றே நீகொண்டால்
என்றான் கெட்ட திரங்கிடா யெண்டோண் முக்க ணெம்மானே.

---

(௧) குழைத்தால் - மெலிவித்தால்; பண்டை - பழைய, அது ஜன்மாந்தரங்களில் செய்த; வினைநோய் - வினைகளும்நோய்களும்; உழைத்தால் - வருத்தினால்; உறுதி - நன்மை; உமையாள் - உமாதேவி, அது உயிர்கண்மேல் வைத்த இரக்கமாகியஅருள். (௨) கொடியேர் - பூங்கொடிபோலும்; செடி - பாவம்; ஒறுத்தால் - வருத்தினால். (௩) போதா - பற்றாத; போய்த்தோ - இல்லாதுபோய்விட்டதோ;

மானேர் நோக்கி மணவாளா மன்னே நின்சீர் மறப்பித்திவ்
வூனே புகவென் றனைநூக்கி யுழலப் பண்ணு வித்திட்டாய்
ஆனா லடியே னறியாமை யறிந்துநீயே யருள் செய்து
கோனே கூவிக் கொள்ளுநா ளென்றென் றுன்னைக் கூறுவதே. (௫)

கூறு நாவே முதலாகக் கூறுங் கரண மெல்லாநீ
தேறும் வகைநீ திகைப்புநீ தீமை நன்மை முழுதுநீ
வேறோர் பரிசிங் கொன்றில்லை மெய்ம்மையுன்னை விரித்துரைக்கின்
தேறும் வகையென் சிவலோகா திகைத்தாற் றேற்றவேண்டாவோ.

வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டு மயன்மாற் கரியோய்நீ வேண்டி யென்னைப் பணிகொண்
டாய், வேண்டி நீயா தருள் செய்தா யானுமதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னி லதுவு முன்றன் விருப்பன்றே.

அன்றே யென்ற னாவியு முடலு முடைமை யெல்லாமும்
குன்றே யனையா யென்னை யாட்கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோ ரிடையூறெனக்குண்டோவெண்டோண் முக்கணெம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ விதற்கு நாயகமே. (எ)

நாயிற் கடையா நாயேனை நயந்துநீயே யாட் கொண்டாய்
மாயப் பிறவி யுன்வசமே வைத்திட் டிருக்கு மதுவன்றி
ஆயக் கடவே னானோதா னென்ன தோவிங் கதிகாரம்
காயத் திடுவா யுன்னுடைய கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே. (அ)

கண்ணார் நுதலோய் கழலிணைகள் கண்டேன் கண்கள் களிகூர
எண்ணா திரவும் பகலுநா னவையே யெண்ணு மதுவல்லால்

குணம் - நன்மை; என்தான்கெட்டது - என்னத்தான் கெட்டுப் போயிற்று. (௫) நூக்கி - தள்ளி; கூறுவது - புகழ்வது. (௬) கூறும் - (உன்னைப்) புகழ்கின்ற; தேறும் - தெளியும்; பரிசு - வகை; ஒன்று - சிறிதும்; தேற்ற - தெளிவிக்க. (௭) பரிசு - தன்மை; உன்றன் விருப்பு - உன்னுடைய விருப்பம். அதாவது ஞானிகள் வழிபாடு எப்போதும் அருள்துணையாகவே நடப்பது. அது தம்மை விழுங்கிய அருளுக்குள்ளே தாமடங்கியொடுங்கியிருத்தல். ஆதலின் ஏதாவதோர் விருப்பம் நிகழுமாயின் அது இறைவனுடைய விருப்பமேயாம். (எ). அன்றே - குருமூர்த்தமாயெழுந்தருளி ஆட்கொண்ட அன்றைய தினமே; ஆயக்கடவேன் - ஆராயக்கடவேன். (அ) களிகூரகண்

மண்மேல் யாக்கை விடுமாறும் வந்துன் கழற்கே புகுமாறும்
அண்ணா வெண்ணக் கடவேனோ வடிமை சால வழகுடைத்தே. (௯)

அழகே புரிந்திட் டடிநாயே னரற்று கின்றே னுடையானே
திகழா நின்ற திருமேனி காட்டி யென்னைப் பணிகொண்டாய்
புகழே பெரிய பதமெனக்குப் புராண நீதந் தருளாதே
குழகா கோல மறையோனே கோனே யென்னைக் குழைத்தாயே.

திருச்சிற்றம்பலம்.

உயிருண்ணிப்பத்து.

சிவானந்தமேலிடுதல்

எ-து. நேயமேலிடுதல்.

திருப்பெருந்துறையிலருளிச் செயப்பட்டது.

கலிவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பைந்நாப்பட வரவேரல்கு லுமைபாகம தாயென்
மெய்ந்நா டொறும் பிரியாவினைக் கேடாவிடைப்பாகா
செந்நாவலர் பரசும் புகழ்த் திருப்பெருந்துறை யுறைவா
எந்நாட்களித் தெந்நாளிறு மாக்கேனினி யானே. (௧)

டேன் - களிப்புமிகும்படிகண்டேன். (உடல், பொருள், ஆவியாகிய மூன்றையுந் தத்தஞ்செய்த ஞானானுபவிக்குக் குருபாதஸ்மரணைத் தவிர வேறொன்றுமில்லையாதலால் அவ்வாறு கூறினர்.)(௰)அரற்று கின்றேன் - அழாநின்றேன்; பதம் - திருவடி; புராண - பழையோனே; குழகா - சந்தரனே.

(௧) பைநா - பசியநா; ஏர்-அழகிய; மெய் - சரீரம் (இங்கு உள்ளம்); செந்நாவலர் - செவ்விய நாவன்மையுள்ளவர் (அறிஞர்); பரசும் - துதிக்கும்; இறுமாக்கேன் - இறுமாந்திருப்பேன், (இது திரு

நாயேடி யணைவாரொரு நாய்க்குத்தவி சிட்டிங்
கூனுடல் புகுந்தானுயிர் கலந்தானுளம் பிரியான்
தேனார்சடை முடியான்மன்னு திருப்பெருந்துறை யுறைவான்
வானோர்களு மறியாததோர் வளமீந்தன னெனக்கே. (உ)

எனைநானென்ப தறியேன்பக லிரவாவது மறியேன்
மனவாசகங் கடந்தானெனை மத்தோன் மத்தனாக்கிச்
சினமால்விடை யுடையான்மன்னு திருப்பெருந்துறை யுறையும்
பனவனெனைச் செய்தபடி றறியேன்பரஞ் சுடரே. (ங)

வினைக்கேடரு முளரோபிறர் சொல்லீர்விய னுலகில்
எனைத்தான்புகுந் தாண்டானென தென்பின்புரை யுருக்கிப்
பினைத்தான்புகுந் தெல்லேபெருந் துறையிலுறை பெம்மான்
மனத்தான்கண்ணி னகத்தான்மறு மாற்றத்திடை யானே. (ச)

பற்றாங்கவை யற்றீர்பற்றும் பற்றாங் கதுபற்றி
நற்றாங்கதி யடைவோமெனிற் கெடுவீரோடி வம்மின்
தெற்றார்சடை முடியான்மன்னு திருப்பெருந்துறை யிறைசீர்
கற்றாங்கவன் கழல்பேணின ரொடுங் கூடுமின் கலந்தே. (ரு)

வருளை யடைந்ததனால் உண்டாகிய செருக்கு). (உ) அணைவான் - அணையும்பொருட்டு; தேன் - வண்டுகள்; வளம் - செல்வம். (ங) எனை - ஆன்மசொரூபத்தை; மனவாசகங் கடந்தான் - மனம்வாக்குக்கு எட்டாதவன்; மத்தோன் மத்தன்ஆக்கி-மிகவும் களிப்புடையவனாகச்செய்து; பனவன் - வேதியன்; படிறு - வஞ்சகம். (ச) கேடர் - கெடுப்பவர்; புரை - உட்டுளை; பினைத்தான் - மறுபடியும்; எல்லே - பகிரங்கமாக. (ரு) பற்று - விடவேண்டிய பற்றுக்கள்; பற்றும்பற்று - பற்றுதற்குரிய பற்று; அது - இறைவன்பற்று; நற்றாம் - நல்லதாகிய; தெற்றுஆர் - அழகினை யுடையதாகிய. அரிய; கலந்துகூடுமின் - கூடிக்கலந்திருங்கள். இந்தத் திருப்பாட்டில் இரண்டுவித பற்றுக்கள்கூறி ஒன்றைவிட வேண்டுமென்றும் மற்றொன்றைப்பற்றி வாழ வேண்டுமென்றுங் கூறியிருக்கின்றது. அதை விளக்கின், ஆன்மா எதையெதைப் பற்றுகிறதோ அதை யதைப்பற்றி வாழும் இயல்புடையது. உடம்பும், உலகவாழ்க்கையும், இன்பதுன்பங்களும், தொடர்பாய் வரும் பிறப்பிறப்புக்களும் ஆகிய விவையெல்லாம் பற்றினாலே வந்ததும் வருவதுமாயுள்ளன. ஆன்மாவுக்கு முதல்முதல் ஆணவமலத்தில் பற்றுண்டாயிற்று. அது

கடலின்றிரை யதுபோல்வரு கலக்கமல மறுத்தென்
உடலும்மென துயிரும்புகுந் தொழியாவண்ண நிறைந்தான்
சடருஞ்சுடர் மதிசூடிய திருப்பெருந்துறை யுறையும்
படருஞ்சடை மகுடத்தெங்கள் பரன்றான்செய்த படிறே. (சு)

வேண்டேன்புகழ்வேண்டேன்செல்வம் வேண்டேன்மண்ணும்விண்
வேண்டேன்பிறப் பிறப்புச்சிவம் வேண்டார் தமைநாளும் [ணும்
தீண்டேன்சென்று சேர்ந்தேன்மன்னு திருப்பெருந் துறையிறை
பூண்டேன்புறம் போகேனினிப்புறம்போகவொட்டேனே. [தாள்()

கோற்றேனெனக் கென்கோகுறை கடல்வாயமு தென்கோ
ஆற்றேனெங்க ளரனேயரு மருந்தேயென தரசே
சேற்றார்வயல் புடைசூழ்தரு திருப்பெருந்துறை யுறையும்
நீற்றார்தரு திருமேனிநின் மலனேயுனை யானே. (அ)

எச்சம்மறி வேனுனெனக் கிருக்கின்றதை யறியேன்
அச்சோவெங்க ளரனேயரு மருந்தேயென தமுதே

முதலில்வந்த தீங்கு. இரண்டாவது **மாயையில்** பற்றுண்டாயிற்று. அது இரண்டாவதாய் வந்த தீங்கு. மூன்றாவது **கன்மத்தில்** பற்றுண்டாயிற்று. அது மூன்றாவது வந்த தீங்கு. இந்த மூன்றினாலே மற்ற எல்லாப் பற்றுக்களுமுண்டாயின. எல்லாத் தீங்குகளும் வந்து பொருந்தின. இந்தப்பற்றுக்களை யொழிப்பதென்றால் இலேசான காரியமன்று. மலங்களின் வலி மிகவும் பெரிது. அதைத் தானே ஒழித்துக்கொள்ள ஆன்மாவுக்கு வன்மையில்லை. அதனாற்றான் அதில் சிக்கி யுழல்கின்றது. மலங்களாகிய பற்றுக்களை யொழிக்க வேண்டுமானால் அம்மலங்களின் வலியைக்காட்டிலும் பேராற்றல்பெற்ற ஒருவர் துணைவேண்டும். அப்படிப்பட்ட ஆற்றல் வகித்தவர் கருக்குழிநாற்றந் தமழப்பெறாத சிவபிரானொருவரே. அவருடைய ஆற்றலுக்குமுன்னே ஆணவமலம் வலிபெறாது அடங்கிவிடும். மாயாமலம் இருந்தவிடந் தெரியாது மறைந்து போகும். கன்மமலம் வறுத்தவித்தாய்ச் செயலற்றுவிடும். ஆதலால் அவருடைய புகழைக்கற்று அவரடியாரோடு கலந்திருக்க வேண்டுமென்று அடிகளார் ஆணைதந்துள்ளார்.

(சு) கலக்கம் மலம் - கலக்குவதற்கேதுவாகிய மலம்; சுடரும் சுடர் மதி - விளக்குகின்ற ஒளியையுடைய பிறை; படிறு - வஞ்சகம். (எ) புறம்போகல் ஒட்டேன் - (திருத்தாளை) புறத்துச்செல்லவு மொட்டேன். (அ) கோல்தேன் - கொம்பிற்கட்டிய தேன்; நீற்று

செச்சைமலர் புரைமேனியன் றிருப்பெருந்துறையுறைவன்
நிச்சம்மென நெஞ்சின்மன்னி யாஞகிநின் ருனே. (கூ)

வான்பாவிய வுலகத்தவர் தவமேசெய வவமே
ஊன்பாவிய வுடலேச்சுமந் தடவிமர மானேன்
தேன்பாய்மலர்க் கொன்றைமன்னு திருப்பெருந்துறை யுறைவாய்
நான்பாவிய னுஞலுனை நல்காயென லாமே. (ய)

திருச்சிற்றம்பலம்.

அச்சப்பத்து.

ஆனந்தமுறுதல்

எ - து. நேயத்திலேயொன்றுபட்டுச் சிக்கென அழுந்தினமை.

தில்லையிலருளிச் செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

புற்றில்வா ளரவுமஞ்சேன் பொய்யர்தம் மெய்யுமஞ்சேன்
கற்றைவார் சடையெம்மண்ணல் கண்ணுதல் பாதநண்ணி
மற்றுமோர் தெய்வந்தன்னை யுண்டென நினைந்தெம் பெம்மான்
கற்றிலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சுமாறே. (க)

ஆர்தரு - திருவெண்ணீற்ருல் நிறைந்த. (கூ) எச்சம் - குறை; செச்சைமலர் - வெட்சிமலர்; நிச்சம்என - அனவரதமும் என்னுடைய; யாஞகிநின்ருன் - (ஆன்மவறிவு முனைத்திடாதபடி) நானேயாய் நின்ருன். (ய) வான்பாவிய உலகத்தவர் - விண்ணிலுள்ள உலகத்தவராகிய தேவர்கள்; அடவிமரம் - காட்டுமரம்.

(க) மெய்யும் - மெய்ச்சொற்களையும்; கற்றைவார் - திரட்சியாகிய நீண்ட; எம்பெம்மான் கற்றிலாதவர் - எம்மிறைவனுடைய புகழைக் கல்லாதவர்; நாம் அஞ்சும் ஆறு - நாம் அஞ்சும் வகையா

வெருவரேன் வேட்கைவந்தால் வினைக்கடல் கொளினுமஞ்சேன்
இருவரால் மாறுகாணா வெம்பிரான் றம்பிரானும்
திருவரு ளன்றிமற்றோர் தேவரெத் தேவரென்ன
அருவரா தவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே. (௨)

வன்புலால் வேலுமஞ்சேன் வளைக்கையார் கடைக்கணஞ்சேன்
என்பெலா முருகநோக்கி யம்பலத் தாடுகின்ற
என்பொலா மணியையேத்தி யினிதருள் பருகமாட்டா
அன்பிலா தவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே. (௩)

கிளியனார் கிளவியஞ்சே னவர்கிறி முறுவலஞ்சேன்
வெளியநீ றாடுமேனி வேதியன் பாதநண்ணித்
துளியுலாங் கண்ணராகித் தொழுதழு துள்ளநெக்கிங்
களியிலா தவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே. (௪)

பிணியெலாம் வரினுமஞ்சேன் பிறப்பினோ டிறப்புமஞ்சேன்
துணிநிலா வணியினான்றன் றொழும்பரோ டழுந்தியம்மால்
திணிநிலம் பிளந்துங்காணாச் சேவடி பரவிவெண்ணீ
றணிகிலா தவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே. (௫)

வாளுலா மெரியுமஞ்சேன் வரைபுரண் டிடினுமஞ்சேன்
தோளுலா நீற்றனேற்றன் சொற்பதங் கடந்தவப்பன்
தாளதா மரைகளேத்தித் தடமலர் புனைந்துநையும்
ஆளலா தவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே. (௬)

தகைவிலாப் பழியுமஞ்சேன் சாதலைமுன்ன மஞ்சேன்
புகைமுகந் தெரிகைவீசிப் பொலிந்த வம்பலத்துளாடும்

யிராநின்றது. (௨) வெருவரேன் - பயப்படேன்; வேட்கை - காமவிச்சை; கொளினும் - சூழ்ந்து கொண்டாலும்; எத்தேவர் என்ன- என்ன தேவர்களென்று; அருவராதவர் - அருவருக்காதவர். (௪). கிளியனார் - கிளிபோன்றமாதர்; கிளவி - சொல்; கிறி-வஞ்சகம்; வேதியன் - வேதப்பிரதிபாத்தியன்; துளிஉலாம் - துளிசிந்துகின்ற; களியிலாதவர் - களித்து உருகாதவர். (௫) துணிநிலா - துண்டப்பிறை. (௬) வாள்உலாம் எரி - ஒளிவீசுகின்ற நெருப்பு; வரை - மலை; ஏற்றன் - ரிஷபத்தை யுடையவன்; சொல்பதம் - சொல்லளவு; புனைந்து - அலங்கரித்து; நையும் - மனமுருகும்; ஆள்-அடிமை. (௭) தகைவுஇலா-தடுத்தற்கரிய; புகைமுகந்த எரி-

முகைநகைக் கொன்றைமாலை முன்னவன் பாதமேத்தி
அகநெகா தவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே. (எ)

தறிசெறி களிறுமஞ்சேன் றழல்விழி யுழுவையஞ்சேன்
வெறிகமழ் சடையனப்பன் விண்ணவர் நண்ணமாட்டாச்
செறிதரு கழல்களேத்திச் சிறந்தினி திருக்கமாட்டா
அறிவிலா தவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே. (அ)

மஞ்சுலா முருமுமஞ்சேன் மன்னரோ டுறவுமஞ்சேன்
நஞ்சமே யமுதமாக்கு நம்பிரா னெம்பிரானுய்ச்
செஞ்சவே யாண்டுகொண்டான் றிருமுண்டந் தீட்டமாட்டா
தஞ்சுவா ரவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே. (கூ)

கோணிலா வாளியஞ்சேன் கூற்றுவன் சீற்றமஞ்சேன்
நீணிலா வணியினானை நினைந்துநைந் துருகிநெக்கு
வாணிலாங் கண்கள்சோர வாழ்த்திநின் றேத்தமாட்டா
ஆணலா தவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே. (ய)

திருச்சிற்றம்பலம்.

புகையைக் கொண்ட நெருப்பு, அது மழுப்படை; முகை-மொட்டு; நகை - ஒளி. (அ) தறி-கட்டுத்தறி; களிறு - யானை; உழுவை-புலி. (கூ) மஞ்சு - மேகம்; உரும் - இடி; திரு - விபூதி; முண்டம் - நெற்றி. இந்தத் திருப்பாட்டில் விபூதி தாரணம் அவசியமென்று கூறப்பட்டுள்ளது. ஏனெனின், விருப்பு வெறுப்பற்ற பரனையடையவேண்டுமாயின் அவனுடைய திருநீற்றின் தொண்டின் வழியன்றி வேறு எவ்வழியானும் அடையமுடியாது. சூரியனைக் காணவேண்டுமாயின் அவனது கிரணங்களின் உதவிவேண்டும். அதுபோல சிவபெருமானைப் பெறவேண்டின் அவனது திருநீறு இன்றியமையாதது. திருநீறு திருவருண்மயமன்றோ! "நீற்றுப்பதிகம் நிகழ்த்துங்காலை மாற்றுப்பரையின் வரலாறாகும்." என்றதையோர்க. திருவெண்ணீறு அவனது தடஸ்தத்திருமேனியில் இயற்கையாகப் பூத்தது. இதன் விரிவெல்லாம் எமது விபூதி ருத்ராக்ஷ மஹத்வ விளக்கத்தில் காண்க. (ய) கோண் - கோணுதல்; வாளி - அம்பு; சீற்றம் - கோபம்; வாள்நிலாம் - ஒளி நிலைபெற்றிருக்கிற; சோர - நீரொழுக; ஆண் அலாதவர் - ஆண்மையில்லாதவர்.

திருப்பாண்டிப்பதிகம்.

சிவானந்தவிளைவு

எ - து. சுகமேலீடு

திருப்பெருந்துறையிலருளிச் செயப்பட்டது.

கட்டளைக்கலித்துறை.

திருச்சிற்றம்பலம்.

பருவரை மங்கைதன் பங்கரைப் பாண்டியற் காரமுதாம்
ஒருவரை யொன்றுமி லாதவரைக்கழற் போதிறைஞ்சித்
தெரிவர நின்றுருக்கிப் பரிமேற்கொண்ட சேவகனார்
ஒருவரை யன்றி யுருவறியாதென்றனுள்ளமதே. (க)

சதுரைமறந்தறி மால்கொள்வர் சார்ந்தவர் சாற்றிச்சொன்னோம்
கதிரை மறைத்தன்ன சோதிகழுக்கடை கைப்பிடித்துக்
குதிரையின் மேல்வந்து கூடிடுமேற் குடிகேடுகண்டீர்
மதுரையர் மன்னன் மறுபிறப்போட மறித்திடுமே. (உ)

நீரின்பவெள்ளத்து நீந்திக் குளிக்கின்ற நெஞ்சங்கொண்டீர்
பாரின்பவெள்ளங் கொளப்பரி மேற்கொண்ட பாண்டியனார்
ஓரின்பவெள்ளத் துருக்கொண்டு தொண்டரையுள்ளங் கொண்டார்
பேரின்பவெள்ளத்துட் பெய்கழலே சென்று பேணுமினே. (௩)

(க) பருவரை - பருத்தமலை (இமையமலை). ஒன்றும் - உருவம், அருவம், அருவுருவம் ஆகிய இவற்றில் ஒன்றும்; கழற்போது - திருவடித்தாமரை; தெரிவரநின்று - தோன்றும்படிநின்று; உருவறியாது - வேறொருதெய்வத்தின் உருவறியமாட்டாது. (உ) சதுர் - திறம்; அறிமால்கொள்வர் - அறிவுமயங்கப்பெறுவர்; சாற்றி - பறைஅறைந்து; கதிர் - சூரியன்; கழுக்கடை - ஈட்டி (குதிரைவீரர்கையிலுள்ளது ஈட்டியே); குடிகேடு - குடிக்குக்கெடுதி; மறித்திடும் - மீண்டும்வாராதபடி தடுக்கும். (௩) கொண்டார்-கவர்ந்தார். (௪) ஆனந்

செறியும் பிறவிக்கு நல்லவர்செல்லன்மின் றென்னனன்னாட்
டிறைவன் கிளர்கின்ற காலமிக்காலமெக் காலத்துள்ளும்
அறிவொண் கதிர்வா ளுறைகழித்தானந்த மாக்கடவி
எறியும் பிறப்பை யெதிர்ந்தார் புரளவிருநிலத்தே. (௪)

காலமுண் டாகவே காதல்செய் துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்பிரான்றன் னடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்கு கின்றான்வந்து முந்துமினே. (௫)

ஈண்டியமாயா விருள்கெட வெப்பொருளும் விளங்கத்
தூண்டிய சோதியை மீனவனுஞ்சொல்ல வல்லனல்லன்
வேண்டியபோதே விலக்கிலைவாய்தல் விரும்புமின்றாள்
பாண்டியனாருள் செய்கின்றமுத்திப் பரிசிதுவே. (௬)

மாயவனப்பரி மேல்கொண்டு மற்றவர் கைக்கொளலும்
போயறுமிப்பிறப் பென்னும் பகைகள் புகுந்தவருக்
காயவரும்பெருஞ் சீருடைத் தன்னருளே யருளும்
சேயநெடுங் கொடைத் தென்னவன்சேவடி சேர்மின்களே. (௭)

அழிவின்றி நின்றதொ ரானந்தவெள்ளத் திடையழுத்திக்
கழிவில் கருணையைக் காட்டிக்கடிய வினையகற்றிப்
பழமலம் பற்றறுத் தாண்டவன்பாண்டிப் பெரும்பதமே
முழுதுல குந்தரு வான்கொடையே சென்று முந்துமினே. (௮)

விரவிய தீவினை மேலைப்பிறப்பு முந்நீர்கடக்கப்
பரவிய வன்பரை யென்புருக்கும்பரம் பாண்டியனார்

தம் மா கடவி - ஆனந்தப்பரியைச்செலுத்தி. (௫) மூலபண்டாரம் - மூலபொக்கிஷம், அதாவது முத்திச்செல்வம். இந்தச்செல்வமிருக்குமிடம் நமக்குத்திருமுறைகளே. இவை சிவனடியார்களின் உள்ளத்தின்கட் கிடக்கப்பெறுதலின் இவர்களுக்கும் **பண்டாரம்** எனப் பெயர் போந்தது. (௬) ஈண்டிய - நெருங்கிய; விலக்கு இல்லை - தடையில்லை; தாள்வாய்தல்விரும்புமின் - திருவடிப்பேறு கிடைத்தலை விரும்புங்கள்; முத்திப்பரிசு - முத்தித்திறம். (௭) மாய - மாயமாகிய; கைக்கொளலும் - ஏற்றுக்கொள்ளுதலும்; புகுந்தவருக்கு - சரணடைந்தவருக்கு; சீர்உடை - சிறப்பையுடைய; சேய்நெடும் - மிகப்பெரிய. (௮) கழிவுஇல் - நீங்குதலில்லாத; பெரும்பதம் - பெரியஇடம். (௯) விர

புரவியின் மேல்வரப் புந்திகொளப்பட்ட பூங்கொடியார்
மரவியன் மேல்கொண்டு தம்மையுந்தாமறி யார்மறந்தே. (௯).

கூற்றைவென் றுங்கைவர் கோக்களையும் வென்றிருந்தழகால்
வீற்றிருந்தான் பெருந்தேவியுந் தானுமோர் மீனவன்பால்
ஏற்றவந்தா ருயிருண்டதிற லொற்றைச் சேவகனே
தேற்றமிலாதவர் சேவடி சிக்கெனச் சேர்மின்களே. (௰).

திருச்சிற்றம்பலம்.

விய - கலந்த; தீவினை - கொடியதீவினைகள்; முந்நீர் - கடல்; பரம் - மேலான; புந்திகொளப்பட்ட - அறிவிழந்த; பூங்கொடியார் - பூங்கொடிபோன்ற மாயாசத்திகள்; மரஇயல் - மரப்பான்மை. (சிவபிரான் ஒப்பற்ற வேதப்புரவியின்மீது பல்லோருங்காணச் சேவகராய் வந்தமையின், மாயையும் அவள் புத்திரிகளாகிய தத்துவங்களும் மிக்க ஏக்கங்கொண்டு இனி நாமென்ன செய்யப்போகிறோம், இதகாறும் ஆன்மாக்களைக் கருவிற்றள்ளி பெருந்துன்பத்துக்கு ஆளாக்கிவைத்தோம், இனியவ்வாறு செய்யமுடியாமற்போகுமே என்று மரப்பான்மையெய்தித் தம்மைமறந்தார்கள்). (௰) ஐவர்கோக்கள் - ஐம்புலன்கள்; ஏற்றவந்தார் - எதிர்த்துவந்தார்; தேற்றமில்லாதவர் - தெளிவில்லாதவர்; சிக்கென - உறுதியாக.

பிடித்தபத்து.

முத்திக்கலப்புரைத்தல்

எ-து. மற்றுள்ள ஆன்மாக்களுக்கு முத்தியின் சுகத்தைச் சொல்லியது.

திருத்தோணிபுரத்தி லருளிச்செயப்பட்டது.

ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

உம்பர்கட் கரசே யொழிவற நிறைந்த
யோகமே யூற்றையேன் றனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. (க)

விடைவிடா துகந்த விண்ணவர் கோவே
வினையனே னுடைய மெய்ப்பொருளே
முடைவிடா தடியேன் மூத்தற மண்ணாய்
முழுப்புழுக் குரம்பையிற் கிடந்து

(க) ஒழிவுஅற - நீக்கமற; ஊற்றையேன் - அழுக்குடம் புடையேன்; வம்பு - புதுமை; பழுத்து - கனிந்து, இரங்கி; வாழ்வுஅற - பிறப்பற; செம்பொருள் துணிவே - செவ்விய நூற்பொருளின் துணிவே; சிக்கென - உறுதியாக. (உ) விடை - ரிஷபம்; முடை - புலால்நாற்றம்; மூத்து - முதிர்ந்து; அற - மிகவும்; குரம்பை - கூடு;

கடைபடா வண்ணங் காத்தெனை யாண்ட
　　கடவுளே கருணைமா கடலே
இடைவிடா துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
　　எங்கெழுந் தருளுவ தினியே. (உ)

அம்மையே யப்பா வொப்பிலா மணியே
　　அன்பினில் விளைந்தவா ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
　　புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
　　செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
　　எங்கெழுந் தருளுவ தினியே. (ஈ)

அருளுடைச் சுடரே யளிந்ததோர் கனியே
　　பெருந்திற லருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
　　போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
　　செல்வமே சிவபெரு மானே
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
　　எங்கெழுந் தருளுவ தினியே. (௪)

ஒப்புனக் கில்லா வொருவனே யடியேன்
　　உள்ளத்து ளொளிர்கின்ற வொளியே
மெய்ப்பத மறியா வீறிலி யேற்கு
　　விழுமிய தளித்ததோ ரன்பே

கடைபடா - கடையாகாத. (ஈ) அம்மையே - தாயே, தனக்கொரு தாயைவேண்டாது தானே யாவர்க்குந்தாயாயுள்ளவனே; அப்பா - தந்தையே, தனக்கொரு அப்பனைவேண்டாது தானே யாவர்க்கும் அப்பனுடள்ளவனே; பொய்ம்மையே - பொய்த்தொழில்களையே; பொழுது - வாழ்நாள்; அலைபுலையன் - அலைந்து திரிகின்ற நீசன். (௪) அளிந்தது - கனிந்தது; பெருந்திறல் - பேராற்றல்; கலையே - நூலே; போகமே - இன்பமே; தெருள் இடத்து - தெளிவுள்ள; இருள்இடத்து - அஞ்ஞானவிருள் செறிந்த இவ்வுலகில். (ரு) வீறு

செப்புதற் கரிய செழுஞ்சுடர் மூர்த்தி
செல்வமே சிவபெரு மானே
எய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. (ரு)

அறவையேன் மனமே கோயிலாக் கொண்டாண்
டளவிலா வானந்த மருளிப்
பிறவிவே ரறுத்தென் குடிமுழு தாண்ட
பிஞ்ஞகா பெரியவெம் பொருளே
திறவிலே கண்ட காட்சியே யடியேன்
செல்வமே சிவபெரு மானே
இறவிலே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. (சு)

பாசவே ரறுக்கும் பழம்பொரு டன்னைப்
பற்றுமா றடியனேற் கருளிப்
பூசனை யுகந்தென் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே
தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தி
செல்வமே சிவபெரு மானே
ஈசனே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. (எ)

அத்தனே யண்ட ரண்டமாய் நின்ற
ஆதியே யாதுமீ றில்லாச்
சித்தனே பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெரு மானே
பித்தனே யெல்லா வுயிருமாய்த் தழைத்துப்
பிழைத்தவை யல்லையாய் நிற்கும்
எத்தனே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. (அ)

இலியேற்கு - பெருமையில்லாதவெனக்கு; விழுமியது - சிறந்த பதம், முத்திப்பேறு; எய்ப்பு இடத்து - இளைத்தவிடத்தில். (சு) அறவையேன் - ஆதரவற்றவன்; திறவிலே - பகிரங்கத்திலே; இறவிலே - இறுதியிலே. (அ) அண்டர் - உலகத்துயிர்கள்; அண்

பாலினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
    பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி
    உலப்பிலா வானந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
    செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
    எங்கெழுந் தருளுவ தினியே. (௯)

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
    பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலா முருக்கி யெளியையா யாண்ட
    ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே யிறப்பொடு மயக்காந்
    தொடக்கெலா மறுத்த நற்சோதி
இன்பமே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
    எங்கெழுந் தருளுவ தினியே. (௰)

திருச்சிற்றம்பலம்.

டம் - உலகம்; யாதும் - சிறிதும்; சித்தனே - ஞானவுருவனே; பிழைத்து - தவறி; அவை அல்லவாய் - அவை யல்லவுமாய்; எத்தனே - உபாயமுடையவனே. (௯) உலப்புஇலா - அழிவில்லாத; புறம்புறம் திரிந்த - காக்கும்பொருட்டுத் தாயைப்போல நான்கு பக்கங்களிலும் பிரியாமல் பின்னோடி அங்குமிங்குமாகச் சுற்றித் திரிந்த. (௰) புலால்யாக்கை - புலாலுடம்பை; புரைபுரை கனிய - உட்டுளைகள்தோறும் அளிய; தொடக்கு - கட்டு.

திருவேசறவு.

சுட்டறிவொழித்தல்

எ - து. தன்செயலறநிற்றல்.

திருப்பெருந்துறையிலருளிச் செயப்பட்டது.

கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

இரும்புதரு மனத்தேனை யீர்த்தீர்த்தெ னென்புருக்கிக்
கரும்புதரு சுவையெனக்குக் காட்டினையுன் கழலிணைகள்
ஒருங்குதிரை யுலவுசடை யுடையானே நரிகளெல்லாம்
பெருங்குதிரை யாக்கியவா றன்றேயுன் பேரருளே. (க)

பண்ணார்ந்த மொழிமங்கை பங்காநின் னாளானார்க்
குண்ணார்ந்த வாரமுதே யுடையானே யடியேனை
மண்ணார்ந்த பிறப்பறுத்திட் டாள்வாய்நீ வாவென்னக்
கண்ணார வுய்ந்தவா றன்றேயுன் கழல்கண்டே. (உ)

ஆதமிலி யான்பிறப் பிறப்பென்னு மருநரகில்
ஆர்தமரு மின்றியே யழுந்துவேற் காவாவென்
றோதமலி நஞ்சுண்ட வுடையானே யடியேற்குன்
பாதமலர் காட்டியவா றன்றேயெம் பரம்பரனே. (ங)

பச்சைத்தா லரவாட்டீ படர்சடையாய் பாதமலர்
உச்சத்தார் பெருமானே யடியேனை யுய்யக்கொண்

(க) தரு-போன்ற; ஈர்த்து ஈர்த்து-இழுத்து இழுத்து; ஒருங்கு-ஒருங்கே; திரை - அலை, (அன்று, ஏ-அசைகள்). (உ) உண் ஆர்ந்த-உண்பதற்குரிய; மண்ணார்ந்த - பூமியில் பிறந்த. (ங) ஆதம் இலி - ஆதரவு இல்லாதவன்; ஆர்தமரும் இன்றியே - உற்றார் ஒருவருமில்லாமல்; ஓதம்மலி - கடலில் பெருகிய. (ச) தாலு - நாக்கு;

டெச்சத்தார் சிறுதெய்வ மேத்தாதே யச்சோவென்
சித்தத்தா றுய்ந்தவா றன்றேயுன் றிறநினைந்தே. (௪)

கற்றறியேன் கலைஞானங் கசிந்துருகே னாயிடினும்
மற்றறியேன் பிறதெய்வம் வாக்கியலால் வார்கழல்வந்
துற்றிறுமாந் திருந்தேனெம் பெருமானே யடியேற்குப்
பொற்றவிசு நாய்க்கிடுமா றன்றேநின் பொன்னருளே. (௫)

பஞ்சாய வடிமடவார் கடைக்கண்ணா லிடர்ப்பட்டு
நஞ்சாய துயர்கூர நடுங்குவே னின்னருளால்
உய்ஞ்சேனெம் பெருமானே யுடையானே யடியேனை
அஞ்சேலென் றாண்டவா றன்றேயம் பலத்தமுதே. (௬)

என்பாலைப் பிறப்பறுத்திங் கிமையவர்க்கு மறியவொண்ணாத்
தென்பாலைத் திருப்பெருந் துறையுறையுஞ் சிவபெருமான்
அன்பாளி யகநெகவே புகுந்தருளி யாட்கொண்ட
தென்பாலே நோக்கியவா றன்றேயெம் பெருமானே. (௭)

மூத்தானே மூவாத முதலானே முடிவில்லா
ஒத்தானே பொருளானே யுண்மையுமா யின்மையுமாய்ப்
பூத்தானே புகுந்திங்குப் புரள்வேனைக் கருணையினால்
பேர்த்தேநீ யாண்டவா றன்றேயெம் பெருமானே. (௮)

மருவினிய மலர்ப்பாத மனத்தில்வளர்ந் துள்ளுருகத்
தெருவுதோ றுமிகவலறிச் சிவபெருமா னென்றேத்திப்
பருகியநின் பரங்கருணைத் தடங்கடலிற் படிவாமா
றருளெனக்கிங் கிடைமருதே யிடங்கொண்ட வம்மானே. (௯)

படர் - விரிந்த; உச்சத்தார் - உயர்ந்தவர்களாகிய தேவர்கள்; எச்சத்துஆர் - குறைகள் பொருந்திய; அச்சோ - அதிசயமோ; சித்தத்து ஆறு - சித்தத்தின்படி; திறன் - தன்மை. (௫) வாக்கு இயலால் - வாக்கின் இயல்பால்; வந்துற்று - வந்தடைந்து; பொன்தவிசு - பொற்பீடம்; பொன் அருள் - அழகிய அருள், அது பசுத்துவம் நீக்கிப் பதித்துவம் பயக்கும் தெய்வத்திருவருள். (௬) ஆய-போன்ற; கூர - அதிகரிக்க. (௭) என்பால் பிறப்பு - என்பாற்பட்ட பிறவித் தளை; தென்பால் - தென்திசை; என்பாலே நோக்கியஆறு - என்னிடத்தே நோக்கம் வைத்தபடி. (௮) மூத்தானே - மூத்தவனே; ஒத்தானே - வேதப்பிரதிபாத்தியனே; பொருளானே - எல்லாப் பொருள்களையும் உடைமையாக உடையவனே; பூத்தானே -

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரு முயிர்வாழ்க்கை யொறுத்தன்றே வெறுத்திடவே. (௰).

திருச்சிற்றம்பலம்.

பொலிந்தவனே. (௯) மரு - மணம்; பருகிய-பருக; படிவுஆம்ஆறு -- படியும் வண்ணம். (௰) சிவாயநம - சூக்ஷ்மபஞ்சாக்ஷரம். அது ஒருதலைமாணிக்கம். அது சிவம், அருள், ஆன்மா, திரோதம், மலம் என்று எழுத்துவகையால் ஐம்பொருளாயுள்ளது. பதி, பசு, பாசம் என்னும் பதவகையால் முப்பதங்களாயுள்ளது. சிவம், சத்திஎன்னும் பொருள் வகையால் இருபொருளாயுள்ளது. சிவம் என்னும் அநுபவ வகையால் ஒரே பொருளாயுள்ளது. அதனுள்ளீட்டைக் குருநாதனிடத்து உபதேசக்கிரமத்தாலுணர்ந்து, பின்னர் ஓதுமுறையினும் உணருமுறையினும், நிற்குமுறையினும் சலியாது நின்று சிவத்தினருளால் சிவமாந்தன்மையடையப் பெறுதலாம். அதுவே முத்திசாதனமாயும், முத்திநிலையாயும், முத்தியநுபவமாயுமுள்ளது. அதைத்தான் "அறிவாகிச்சற்றே நின்றாற்றெரியும்" என்று சொன்னது. (அறிவு - சிவம்). அன்றியும், "அஞ்செழுத்தி னுண்மையதுவான வப்பொருளை - நெஞ்சழுத்தி யொன்றாகி நிற்குநா ளெந்நாளோ" என்றதையு மோர்க்க. ஆய் - போல; ஊன்ஆரும் - உடம்போடு கூடிய; ஒறுத்து - (உபவாச முதலியவற்றால்) வருத்தி.

திருப்புலம்பல்.

சிவானந்தமுதிர்வு

எ-து. சிவாநந்தம் பெறுவிச்சை.

திருவாரூரிலருளிச் செயப்பட்டது.

கொச்சகக் கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

பூங்கமலத் தயனொடுமா லறியாத நெறியானே
கோங்கலர்சேர் குவிமுலையாள் கூறாவெண் ணீறாடீ
ஓங்கெயில்சூழ் திருவாரூ ருடையானே யடியேனின்
பூங்கழல்க ளவையல்லா தெவையாதும் புகழேனே. (க)

சடையானே தழலாடீ தயங்குமூ விலைச்சூலப்
படையானே பரஞ்சோதீ பசுபதீ மழவெள்ளை
விடையானே விரிபொழில்சூழ் பெருந்துறையா யடியேனுன்
உடையானே யுனையல்லா துறுதுணைமற் றறியேனே. (உ)

(க) பூ-அழகிய; நெறி - வழி; கோங்கு அலர் - கோங்கரும்பு; பூகழல் - பொலிவாகிய திருவடி; எவை - வேறெவற்றை; யாதும்- சிறிதும். (உ) சடையானே - ஜடாபாரத்தை யுடையவனே, (இறைவனைப்பற்றிப் பேசும்போதெல்லாம் வேணி வர்ணனையே விசேஷமென்று வேதங்கூறுகிறது. வேணியில் உரோமங்கள் எப்படி பின்னியிருக்கின்றனவோ அப்படியே அவனிடத்தில் மெய்யன்பு பின்னியிருக்க வேண்டுமென்றும், அப்பொழுதுதான் அவன் பேரருளுண்டாகுமென்றும் அது தெரிவிக்கின்றது). தழலாடீ - அழலாடியே; தயங்கும் - விளங்குகின்ற; பசுபதீ - ஆன்மாக்களுக்குத் தலைவனே. (ஆன்மாவுக்குப் பாச சம்பந்தம் பற்றியே பசுவென வழக்குண்டானமையின், பசு வென்றதனால் பசுபாசம் இரண்டும் கொள்ளக்கிடக்கின்றன. அதனால் சேதனம் அசேதனமுமான எல்லாப்பொருள்களுக்கும் சிவபெருமானே பதியாவர்); மழவு-இளமை.

உற்றாரை யான்வேண்டே னூர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவு மினியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே. (௫)

திருச்சிற்றம்பலம்.

---

(௫) அமையும்-போதும்; குரைகழல்கே - ஒலிக்கின்ற வீரகண்டையணிந்த திருவடிக்கே; கற்றா - கன்றுஆ, கன்றையுடைய பசு. அது தன்கன்றை நினைத்துக் கதறுவதுபோல் சிற்றறிவும், சிறுதொழிலும், சின்னாளும், பல பிணியோடுங்கூடிய ஆன்மா, உள்ளமுதலிய தத்துவங்களெல்லாம் ஒன்றவுருகி, **அம்மா அப்பா**வென்றலறினால் உடனே பரங்கருணைத் தடங்கடலாகிய பரமசிவம் அம்மையோடும் ஓடிவந்து மார்ச்சாலத்தைப் போல (மார்ச்சாலம் - பூனை) தாமே வலிந்து பற்றிக்கொண்டு, தேகமுள்ளளவும் பால் நினைந்தூட்டும் அன்னையைப் போலப் பிரியாமல் புறம்புறஞ்சுற்றித் திரிந்து காப்பாற்றி, **வீட்டை வேண்டாதிருக்கவும் தாமே தூயகதியினிற்** சேர்ப்பன். ஆதலின் கசிந்துருகும் அன்பின் அடிமைத்திறமே வேண்டுமென்றனர் அழுது அழுது அடியடைந்த அன்பர். ஆனை இவ்வாறிருக்க, ஒரு சாரார் உள்ள முதலியன மாயாகாரியங்களாதலின் அவற்றின் தொடக்கு ஆகாவெனவிட்டு, அருளையும் மறந்து, கேவலம் ஞானத்தினாலேயே பிரம்மமேயாய் நிற்கப்பெறுவோமென்பர். அது எவ்வளவு உண்மையோ அவர்கள் சுவாநுபவத்துக்குத்தான் வெளிச்சம். அவர்களது ஆன்ம நிறைவு பிரம்ம நிறைவன்று. "நின்னிறைவே தாரகமாய் நின்று சுகமெய்தாமல் - என்னிறைவே பாவித்தேனென்னே பராபரமே" என்றதும் இதுபற்றியே.

குலாப்பத்து.

அநுபவமிடையீடுபடாமை

எ-து. விட்டுப்பற்றாமல் ஒருதன்மையாயது.

தில்லையிலருளிச் செய்யப்பட்டது.

கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

ஓடுங் கவந்தியுமே யுறவென்றிட் டுள்கசிந்து
தேடும் பொருளுஞ் சிவன்கழலே யெனத்தெளிந்து
கூடு முயிருங் குமண்டையிடக் குனித்தடியேன்
ஆடுங் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே. (க)

துடியே ரிடுகிடைத் தூய்மொழியார் தோணசையால்
செடியேறு தீமைக ளெத்தனையுஞ் செய்திடினும்
முடியேன் பிறவே னெனைத்தனதாண் முயங்குவித்த
அடியேன் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே. (உ)

என்புள் ளுருக்கி யிருவினையை யிடழித்துத்
துன்பங் களைந்து துவந்துவங்க டூய்மைசெய்து
முன்புள்ள வற்றை முழுதழிய வுள்புகுந்த
அன்பின் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே. (ங)

(க) ஓடும் கவந்தியும் - ஓட்டையும் கோவணத்தையும்; உறவென்றிட்டு - உறவென்றுதுணிந்து; கூடும் - உடலும்; குமண்டையிட - நிறைந்துதெவிட்ட; குனித்து - நடித்து; குலாத்தில்லை - விளங்குகின்ற சிதம்பரம்; கொண்டன்று - பற்றினேன். (உ) துடி - உடுக்கை; இடுகு - சுருங்கிய; நசை - விருப்பம்; செடி - குற்றம், பாவம்; முடியேன் - இறவேன்; தாள்முயங்குவித்த - திருவடிகளைத் தழுவும்படிச்செய்த. (ங) ஈடு-பெருமை; துவந்துவங்கள் - சார்புகள்;

குறியு நெறியுங் குணமுமிலார் குழாங்கடமைப்
பிறியு மனத்தார் பிறிவரிய பெற்றியனைச்
செறியுங் கருத்தி லுருத்தமுதாஞ் சிவபதத்தை
அறியுங் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே. (ச)

பேருங் குணமும் பிணிப்புறுமிப் பிறவிதனைத்
தூரும் பரிசு துரிசறுத்துத் தொண்டரெல்லாம்
சேரும் வகையாற் சிவன்கருணைத் தேன்பருகி
ஆருங் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே. (ரு)

கொம்பி லரும்பாய்க் குவிமலராய்க் காயாகி
வம்பு பழுத்துடல மாண்டிங்ஙன் போகாமே
நம்புமென் சிந்தை நணுகும்வண்ண நானணுகும்
அம்பொன் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே. (சு)

மதிக்குந் திறலுடைய வல்லரக்கன் றோணெரிய
மிதிக்குந் திருவடி யென்றலைமேல் வீற்றிருப்பக்
கதிக்கும் பசுபாச மொன்றுமிலோ மெனக்களித்திங்
கதிர்க்குங் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே. (எ)

இடக்குங் கருமுருட் டேனப்பின் கானகத்தே
நடக்குந் திருவடி யென்றலைமே னட்டமையால்
கடக்குந் திறலைவர் கண்டகர்தம் வல்லாட்டை
அடக்குங் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே. (அ)

பாழ்செய் விளாவிப் பயனிலியாய்க் கிடப்பேற்குக்
கீழ்ச்செய் தவத்தாற் கிழியீடு நேர்பட்டுத்
தாட்செய்ய தாமரைச் சைவனுக்கென் புன்றலையால்
ஆட்செய் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே. (கூ)

முன்புஉள்ளவற்றை - இனிமேல்வருவனவற்றை. (ச) குறி-அடையாளம்; நெறி - வழி; குழாங்கள் - பாசக்கூட்டங்கள்; பெற்றியனை - தன்மையுடையவனை; செறியும்கருத்து-நெருங்கியமனம்; உருத்து-உருக்கொண்டிருந்த. (ரு) தூரும்பரிசு - நிரவும்வண்ணம்; துரிசு அறுத்து - பற்றறுத்து. (சு) வம்பு - வீணே; உடலம் - உடம்பு. (எ) கதிக்கும் - பெருகும்; அதிர்க்கும் - ஆரவாரிக்கும். (அ) இடக்கும் - இடக்குச்செய்யும்; ஏனம் - பன்றி; கானகம் - காடு; கடக்கும்-வெல்லும்; ஐவர்கண்டகர் - ஐம்பொறிகளென்னுந்துஷ்டர்கள்; வல்

கொம்மை வரிமுலைக் கொம்பனையாள் கூறனுக்குச்
செம்மை மனத்தாற் றிருப்பணிகள் செய்வேனுக்
கிம்மை தரும்பய னித்தனையு மீங்கொழிக்கும்
அம்மை குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே. (௰)

திருச்சிற்றம்பலம்.

அற்புதப்பத்து.

அநுபவமாற்றாமை.

ஏ - து. அநுபவமுற்றுதல்பொறாமைவிம்முதல்.

திருப்பெருந்துறையி லருளிச்செயப்பட்டது.

ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்.

மையலா யிந்த மண்ணிடை வாழ்வெனு மாழியு ளகப்பட்டுத்
தையலா ரெனுஞ் சுழித்தலைப் பட்டுநான் றலைதடு மாறுமே
பொய்யெ லாம்விடத் திருவரு டந்துதன் பொன்னடி யிணைகாட்டி
மெய்யனாய் வெளிகாட்டி முன்னின்ற தோரற்புதம் விளம்பேனே..

எய்ந்தமா மலரிட்டுமுட் டாததோரியல்பொடும் வணங்காதே
சாந்தமார் முலைத் தையனல் லாரொடுந்தலைதடு மாறாகிப்
போந்தியான் றுயர்புகாவண மருள்செய்து பொற்கழலிணைகாட்டி
வேந்தனாய் வெளியே யென்முனின்ற தோரற்புதம் விளம்பேனே.

அட்டை - வலியஅட்டத்தை. (௯) செய்-வயல்: விளாவி - சேர்ந்து; கீழ்செய் - முன்செய்த; கிழியீடு - பொற்கிழி; சைவன் - சிவப் பிராமணன், அநாதிசைவன். (௰) கொம்மைவரி - திரட்சியாகிய தேமல்; கூறன் - பாகன்; அம்மை - அன்னை.

(௧) மையல்ஆய் - மயக்கங்கொண்டு; ஆழி - கடல்; தலைப்பட்டு- சிக்கி. (௨) எய்ந்த - (இறைவனுக்கு) ஏற்ற; முட்டாதது - தடை

கடித்துமண் ணிடைப்பொய்யினைப்பலசெய்துநானெனதெனுமாயக்
கடித்தவாயிலே நின்றுமுன்வினை மிகக்கழறியே திரிவேனைப்
பிடித்துமுன்னின்றப் பெருமறைதேடிய வரும்பொருளடியேனை
அடித் தடித்துவக் காரமுன் றீற்றியவற்புத மறியேனே. (௩)

பொருந்துமிப்பிறப்பிறப்பிவைநினையாது பொய்களேபுகன்றுபோ
கருங் குழலினார் கண்களா லேறுண்டு கலங்கியே கிடப்பேனைத் [ய்க்
திருந்து சேவடிச் சிலம்பவை சிலம்பிடத்திருவொடு மகலாதே
அருந்துணைவனையாண்டு கொண்டருளியவற்புத மறியேனே. (௪)

மாடுஞ் சுற்றமு மற்றுள போகமுமங்கையர் தம்மோடும்
கூடி யங்குள குணங்களா லேறுண்டுகுலாவியே திரிவேனை
வீடுதந்தென் றன் வெந்தொழில்வீட்டிட மென்மலர்க் கழல்காட்டி
ஆடு வித்தென தகம்புகுந் தாண்டதோரற்புத மறியேனே. (௫)

வணங்கு மிப்பிறப்பிறப்பிவைநினையாதுமங்கையர் தம்மோடும்[னைக்
பிணைந்து வாயிதழ்ப் பெருவெள்ளத் தழுந்திநான்பித்தனாய்த்திரிவே
குணங்களுங்குறிகளுமிலாக்குணக்கடல்கோமளத்தொடுங்கூடி
அணைந்து வந்தெனையாண்டு கொண்டருளியவற்புத மறியேனே.

இப்பிறப்பினிலிணைமலர்கொய்துநா னியல்பொடஞ்செழுத்தோதித்
தப்பிலாதுபொற் கழல்களுக் கிடாதுநான் றடமுலையார்தங்கள்
மைப்புலாங் கண்ணா லேறுண்டுகிடப்பேனை மலரடியிணைகாட்டி
அப்பனென்னைவந் தாண்டுகொண்டருளிய வற்புதமறியேனே. (௭)

ஊச லாட்டுமிவ் வுடலுயிராயின விருவினை யறுத்தென்னை
ஓசை யாலுணர்வார்க் குணர்வரியவ னுணர்வுதந் தொளியாக்கிப்
பாச மானவை பற்றறுத் துயர்ந்ததன் பரம்பெருங் கருணையால்
ஆசை தீர்த்தடி யாரடிக் கூட்டிய வற்புதமறியேனே. (௮)

படாதது, குற்றமற்ற. (௩) மாயம் - மாயப்பாம்புகள்; வாயில் - இடத்தில்; அக்காரம் - சர்க்கரை; தீட்டிய - ஊட்டின. (௪) ஏறுண்டு - கலக்கப்பட்டு; திருஒடும் - உமாதேவியாரோடும். (௫) மாடு - பொன்; போகம் - செல்வம்; குலாவி - கொண்டாடி; வீடுதந்து - விடுவித்து. (௬) பிணைந்து - கலந்து; கோமளம் - உமாதேவி; அணைந்து - தழுவி. (௭) இணைமலர் - தொடுத்தற்குரியமலர்கள்; இயல்பொடு - ஓதுமுறையோடு; மைப்புஉலாம் - கருமைபொருந்திய. (௮) ஆயின -

பொச்சையான விப்பிறவியிற் கிடந்து நான்புழுத்தலை நாய்போல
இச்சை யாயின வேழையர்க்கே செய்தங் கிணங்கியே திரிவேனை
இச்சகத் தரியயனுமெட் டாததன் விரைமலர்க் கழல்காட்டி
அச்ச னென்னையு மாண்டுகொண் டருளியவற்புத மறியேனே. (௯)

செறியு மிப்பிறப் பிறப்பிவை நினையாது செறிகுழலார் செய்யும்
கிறியுங்கீழ்மையுங் கெண்டையங் கண்களு முன்னியே கிடப்பேனை
இறைவ னெம்பிரானெல்லை யில்லாததன் னிணைமலர்க்கழல்காட்டி
அறிவுதந்தெனை யாண்டுகொண் டருளிய வற்புத மறியேனே. (௰)

திருச்சிற்றம்பலம்.

காரணமான; பரம் - மேன்மையான. (௯) பொச்சைஆன - காடு போன்ற, பலவகையான; இச்சைஆயின - விருப்பமானகாரியங்கள்; ஏழையர்க்கே-ஏழைகளுக்கே; அச்சன்-அத்தன், தந்தை. (௰) கிறி-பொய்யொழுக்கம்; கெண்டை அம்கண்கள்-கெண்டைமீன்போலும் அழகியகண்கள்.

செ ன் னி ப் ப த் து.

சி வ வி ளை வு

எ - து. சீவனுக்குநிச்சயப்படுத்தல்.

திருப்பெருந்துறையிலருளிச் செயப்பட்டது.

ஆ சி ரி ய வி ரு த் த ம்.

திருச்சிற்றம்பலம்.

தேவதேவன் மெய்ச்சேவகன் றென்பெருந்துறை நாயகன்
மூவராலு மறியொணுமுத லாயவானந்த மூர்த்தியான்
யாவராயினு மன்பரன்றி யறியொணுமலர்ச் சோதியான்
தூயமாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னிமன்னிச் சுடருமே. (க)

அட்டமூர்த்தி யழகனின்னமு தாயவானந்த வெள்ளத்தான்
சிட்டன்மெய்ச்சிவ லோகநாயகன் றென்பெருந்துறைச் சேவகன்
மட்டுவார்குழன் மங்கையாளையோர் பாகம்வைத்த வழகன்றன்
வட்டமாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னிமன்னி மலருமே. (உ)

(க) சேவகன்-வீரன்; முதல்ஆய-முதல்வனுகிய; மா-பெருமை; சென்னி - தலை; மன்னிசுடரும் - பொருந்தி ஒளிசெய்யும். இந்தப் பாட்டின்மூன்ருமடியில் குறிப்பிட்டது எத்தகைய மேலோராயினும் அஹம் என்பதை வேரோடழித்து முதல்வனிடத்து அன்பு செய்யவல்லாராயின் அவரிடத்து எவ்வித ஞானமுடையோராலும் காண்பதற்கரிய முழுமுதல் முன்னிலைப்படுமெனவும், அவர்களே அம்முதலையறிவரெனவும் வற்புறுத்தினமையாம். அன்பை வேண்டுவோர் வீட்டையும் வேண்டார். அதுதானுகவே வந்து பொருந்தும் என்பது ஒருதலை. (உ) தென் - தென்றிசை; மட்டு - தேன்; வட்டம்ஆம் - வட்டவடிவாகிய; பொலியும் - விளங்கும். (ச) சித்தர் -

நங்கைமீரெனை நோக்குமின்னங்க ணாதனம்பணி கொண்டவன்
தெங்குசோலைகள் சூழ்பெருந்துறை மேயசேவக னாயகன்
மங்கைமார்கையில் வளையுங்கொண்டெம் முயிருங்கொண்டெம் பணி
[கொள்வான்
பொங்குமாமலர்ச்சேவடிக்கணஞ் சென்னிமன்னிப்பொலியுமே.

பத்தர்சூழப் பராபரன் பாரில்வந்து பார்ப்பானெனச்
சித்தர்சூழச் சிவபிரான் றில்லைமூதூர் நடஞ்செய்வான்
எத்தனாகிவந் தில்புகுந்தெமை யாளுங்கொண்டெம் பணிகொள்வான்
வைத்தமாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னிமன்னி மலருமே. (ச)

மாயவாழ்க்கையை மெய்யென்றெண்ணி மதித்திடா வகைநல்கினான்
வேயதோளுமை பங்கனெங்க டிருப்பெருந்துறை மேவினான்
காயத்துள்ளமு தூறவூறநீ கண்டுகொள் ளென்று காட்டிய
சேயமாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னிமன்னி மலருமே. (ரு)

சித்தமேபுகுந் தெம்மையாட்கொண்டு தீவினைகெடுத் துய்யலாம்
பத்திதந்துதன் பொற்கழற்கணே பன்மலர்கொய்து சேர்த்தலும்
முத்திதந்திந்த மூவுலகுக்கு மப்புறத்தெமை வைத்திடும்
அத்தன்மாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னிமன்னி மலருமே. (சு)

பிறவியென்னுமிக் கடலைநீந்ததன் பேரருடந் தருளினான்
அறவையென்றடி யார்கடங்க ளருட்குழாம்புக விட்டுநல்
உறவுசெய்தெனை யுய்யக்கொண்ட பிரான்றனுண்மைப்பெருக்கமாம்
திறமைகாட்டிய சேவடிக்கணஞ் சென்னிமன்னித் திகழுமே. (எ)

அறிஞர்; எத்தன் - எய்க்கிறவன்; ஆளுங்கொண்டு - ஆளாகவுங் கொண்டு. (ரு) ஊறவூற - சுரக்கச் சுரக்க. (சு) உய்யலாம் - உய்தற் குரியதாகிய; இந்த மூவுலகுக்கு அப்புறத்து - இந்தப் பிரகிருதி மாயை, அசுத்தமாயை, சுத்தமாயை ஆகியவிம்மூன்றில் கோப்புண்டு கிடக்கின்ற எல்லாவுலகங்களுக்கும் அப்பாற்பட்ட அத்துவதாநந்த முத்தி என்னும் சிவாநந்தாநுபவமாகிய சுவாநுபவநிலையில். இதனால் எவ்விதமாயையின் ஓர் பகுதியும் மோக்ஷநிலையாகாதெனவும், மாயை யின் ஓர் பகுதியை முத்திநிலையாகக்கூறும் எத்தகைய சமயமும் மோக்ஷத்துக்கு நேர்வாயல்லவெனவும் தெரிவித்ததாயிற்று. அன்றி யும், இந்தப்பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம் ஆகிய மூன்றுக்கும் அப் பாற்பட்ட ஸோமலோகமெனவும் ஒருசாரார் கூறுப. (எ) அறவை -

புழுவினுற்பொதிந் திடுகுரம்பையிற் பொய்தனையொழி வித்திடும்
எழில்கொள்சோதி யெம்மீசனெம்பிரா னென்னுடையப்ப னென்
றென்று, தொழுதகையின ராகித்தூய்மலர்க்கண்கணீர்மல்குந்தொண்
டர்க்கு, வழுவிலாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னிமன்னி மலருமே.

வம்பனுய்த்திரி வேனைவாவென்று வல்வினைப்பகை மாய்த்திடும்
உம்பரானுல கூடறுத்தப் புறத்தனுய்நின்ற வெம்பிரான்
அன்பரானவர்க் கருளிமெய்யடி யார்கட்கின்பந் தழைத்திடுஞ்
செம்பொன்மாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னித்திகழுமே.(கூ)

முத்தனை முதற்சோதியை முக்க ணப்பனை முதல் வித்தினைச்
சித்தனைச் சிவலோகனைத் திருநாமம்பாடித் திரிதரும்
பத்தர்கா ளிங்கே வம்மி னீருங்கள் பாசந்தீரப் பணிமினே
சித்தமார்தருஞ் சேவடிக்கணஞ் சென்னிமன்னித் திகழுமே. (ய)

திருச்சிற்றம்பலம்.

அநாதை; பேரருள் - பெரியஅருட்புணை. (கூ) உம்பரான் - மேலிடத்தையுடையவன்; உலகு ஊடு அறுத்து - ஸர்வவுலகங்களையும் ஸம்ஹாரஞ்செய்து அவற்றைக் கடந்து சென்று; அப்புறத்தனுய் - பரமாகாசத்திலிருப்பவனுய்; நின்ற - தனித்துநின்ற. (ய) முத்தனை - இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கினவனை; முதல்வித்தினை - மூலவித்தினை; சித்தனை-அறிவுருவனை; சித்தம் ஆர்தரும் - உண்மைநிறைந்த. இந்தத் திருப்பதிகத்தில் மலர்ச்சேவடிக்கண் நம்சென்னி (மன்னிச்சுடருமே), (மன்னிமலருமே), (மன்னிப்பொலியுமே), (மன்னித்திகழுமே) என்றுசொன்னது சித்தசித்துப் பிரபஞ்சங்களாகவிரிந்த திருவருள் நிறைவில் தாம் தாடலைபோல் இரண்டற்று அடங்கியிருத்தலை.

திருவார்த்தை.

அறிவித்தன்புறுதல்

என்பது. நின்னாலறியப்படாததுரைக்க அறிவையென்றது.

திருப்பெருந்துறையி லருளிச்செயப்பட்டது.

ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மாதிவர் பாகன் மறைபயின்ற
வாசகன் மாமலர் மேயசோதி
கோதில் பரங்கருணை யடியார்
குலாவுநீதி குணமாக நல்கும்
போதலர் சோலைப் பெருந்துறையெம்
புண்ணியன் மண்ணிடை வந்திழிந்
தாதிப் பிரமம் வெளிப்படுத்த
அருளறிவா ரெம்பிரா னாவாரே. (௧)

மாலயன் வானவர் கோனும்வந்து
வணங்க வவர்க்கருள் செய்தவீசன்

(௧) மாதிவர் - மாது தங்கிய; மலர் - இருதயமலர்; மேய - தங்கிய; கருணை - அருள்வடிவு; குலாவுநீதி - கைப்பற்றின முறைமைகள்; போது - அரும்புகள்; இழிந்துவந்து - இறங்கிவந்து; ஆதிப்பிரமம் - முதற்பொருளாகிய பிரமம். அது மங்களமும் இன்பமுமான பொருள். சிவம். பிரமமாகவே, சிவசக்தியைப் பிரமக்கிழத்தியென்று சித்தாந்த சாஸ்திரங்கூறும்; அருள் - கருணையின்தன்மை. (௨) மணிஅணி - மணி

ஞால மதனிடை வந்திழிந்து
    நன்னெறி காட்டி நலந்திகழும்
கோல மணியணி மாடநீடு
    குலாவு மிடைவை மடநல்லாட்குச்
சீலமிகக் கருணை யளிக்குந்
    திறமறிவா ரெம்பிரா னாவாரே. (உ)

அணிமுடி யாதி யமரர்கோமான்
    ஆனந்தக் கூத்த னறுசமயம்
பணிவகை செய்து படவதேறிப்
    பாரொடு விண்ணும் பரவியேத்தப்
பிணிகெட நல்கும் பெருந்துறையெம்
    பேரரு ளாளன்பெண் பாலுகந்து
மணிவலை கொண்டுவான் மீன்விசிறும்
    வகையறிவா ரெம்பிரா னாவாரே. (௩)

வேடுரு வாகி மகேந் திரத்து
    மிகுகுறை வானவர் வந்துதன்னைத்
தேட விருந்த சிவபெருமான்
    சிந்தனை செய்தடி யோங்களுய்ய
ஆடலமர்ந்த பரிமா வேறி
    ஐயன் பெருந்துறை யாதியந்நாள்
ஏடர்களை யெங்குமாண்டு கொண்ட
    இயல்பறிவா ரெம்பிரா னாவாரே. (௪)

வந்திமை யோர்கள் வணங்கியேத்த
    மாக்கருணைக் கடலா யடியார்
பந்தனை விண்டற நல்குமெங்கள்
    பரமன் பெருந்துறை யாதியந்நாள்

களால் அலங்கரி; இடைவை - திருவிடைமருதூர். (௩) அணிமுடி ஆதி - அலங்கரிக்கப்பட்ட சென்னியையுடைய முதல்வன்; படவு- தெப்பம்; பெண்பால் - பெண்பாகம். (௪) மிகுகுறைவானவர் - மிகுந்தகுறைகளையுடைய தேவர்கள்; ஆடல் - வெற்றி; ஏடர்கள் - தோழர்கள். (ரு) விண்டுஅற - நீங்கிஒழிய; உந்துதிரை - எழுகின்ற

உந்து திரைக்கட லைக்கடந்தன்
     றோங்குமதி லிலங்கை யதனில்
பந்தணை மெல்விர லாட்கருளும்
     பரிசறிவா ரெம்பிரா னாவாரே. (௫)

வேவத் திரிபுரஞ் செற்றவில்லி
     வேடுவனாய்க் கடிநாய்கள் சூழ
ஏவற் செயல்செய்யுந் தேவர்முன்னே
     யெம்பெருமான் றானியங்கு காட்டில்
ஏவுண்ட பன்றிக் கிரங்கியீசன்
     எந்தை பெருந்துறை யாதியன்று
கேவலங் கேழலாய்ப் பால்கொடுத்த
     கிடப்பறிவா ரெம்பிரா னாவாரே. (௬)

நாத முடைய தோர் நற்கமலப்
     போதினி னண்ணிய நன்னுதலார்
ஓதிப் பணிந்தலர் தூவியேத்த
     ஒளிவளர் சோதியெம் மீசன் மன்னும்
போதலர் சோலைப் பெருந்துறையெம்
     புண்ணியன் மண்ணிடை வந்துதோன்றிப்
பேதங் கெடுத்தருள் செய்பெருமை
     அறியவல்லா ரெம்பிரா னாவாரே. (௭)

பூவலர் கொன்றைய மாலைமார்பன்
     போருகிர் வன்புலி கொன்றவீரன்
மாதுநல் லாளுமை மங்கைபங்கன்
     வண்பொழில் சூழ்தென் பெருந்துறைக்கோன்
ஏதில் பெரும்புக ழெங்களீசன்
     இருங்கடல் வாணற்குத் தீயிற்றோன்றும்

அலைகள்; மெல்விரலாள் - மென்மையாகிய விரலையுடையவள் (வண்டோதரி). (௬) கடிநாய்-வேகத்தையுடைய நாய்கள்; ஏவுண்ட- அம்புதைத்த; கேவலம் - அற்பமாகிய; கேழல் - பன்றி; கிடப்பு- வகை. (௭) நல்நுதலார் - அழகிய நெற்றியையுடையவர் (திருமகள், கலைமகள்); பேதம் கெடுத்து - (அவர்களுடைய) வேறுபாட்டை யழித்து. (௮) உகிர்-நகம்; கடல்வாணற்கு-வருணனுக்கு; ஓவியம்-

ஓவிய மங்கையர் தோள்புணரும்
உருவறிவா ரெம்பிரா னாவாரே. (அ)

தூவெள்ளை நீறணி யெம்பெருமான்
சோதி மகேந்திர நாதன்வந்து
தேவர் தொழும்பதம் வைத்தவீசன்
தென்னன் பெருந்துறை யாளியன்று
காதல் பெருகக் கருணை காட்டித்
தன்கழல் காட்டிக் கசிந்துருகக்
கேதங் கெடுத்தென்னை யாண்டருளுங்
கிடப்பறிவா ரெம்பிரா னாவாரே. (கூ)

அங்கண னெங்களமரர் பெம்மான்
அடியார்க் கமுத னவனிவந்த
எங்கள் பிரானிரும் பாசந்தீர
இகபர மாயதோ ரின்பமெய்தச்
சங்கங் கவர்ந்து வண்சாத்தி னோடும்
சதுரன் பெருந்துறை யாளியன்று
மங்கையர் மல்கு மதுரைசேர்ந்த
வகையறிவா ரெம்பிரா னாவாரே. (ய)

திருச்சிற்றம்பலம்.

சித்திரம். (கூ) பதம்-திருவடி; கேதம் - துன்பம்; கிடப்பு - இருப்பு, நிலைமை. (ய) அங்கணன் - கிருபைக்கண்ணான்; பெம்மான் - பெருமான்; சங்கம் - வளையல்; கவர்ந்து - எடுத்து; சாத்து-தலைக்கோலம்; மல்கும் - நிறைந்த.

எண்ணப்பதிகம்.

ஒழியாவின்பத்துவகை

எ-து. தேகமுதலாகிய ஆசையையறுத்தல்.

தில்லையிலருளிச் செயப்பட்டது.

ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பாருருவாய பிறப்பறவேண்டும் பத்திமையும் பெறவேண்டும்
சீருருவாய சிவபெருமானே செங்கமல மலர்போல்
ஆருருவாய வென்னாரமுதேயுன் னடியவர் தொகைநடுவே
ஓருருவாய நின்றிருவருள்காட்டியென்னையுமுய்யக்கொண்டருளே..

உரியேனல்லேனுனக்கடிமையுன்னைப்பிரிந்திங்கொருபொழுதும்
தரியேனாயே னின்னதென்றறியேன் சங்கரா கருணையினால்
பெரியோனொருவன்கண்டுகொளென்றுன்பெய்கழலடிகாட்டிப்
பிரியேனென்றென்றருளியவருளும்பொய்யோஎங்கள்பெருமானே.

என்பேயுருக நின்னருளளித்துன் னிணைமலரடிகாட்டி
முன்பேயென்னை யாண்டுகொண்ட முனிவா முனிவர் முழுமுதலே
இன்பேயருளி யெனையுருக்கி யுயிருண்கின்ற வெம்மானே
நண்பேயருளா யென்னுயிர்நாதா நின்னருணாணாமே. (ங).

பத்திலனேனும்பணிந்திலனேனுமுன்னுயர்ந்தபைங்கழல்காணப்
பித்திலனேனும் பிதற்றிலனேனும் பிறப்பறுப்பா யெம்பெருமானே

(க) பார்உருஆய - பூமியில் உருக்கொண்ட; ஆர்உருஆய-அரிய உருவாகிய; தொகை - கூட்டம். (உ) ஒருபொழுதும் - சிறிதுபொழுதும்; பெய்கழல் அடி - வீரக்கழலணிந்த திருவடி. (ங) நண்பே -

முத்தனையானே மணியனையானே முதல்வனே முறையோவென்
றெத்தனையானும் யான்றொடர்ந்துனனை யினிப்பிரிந்தாற்றேனே.

காணுமதொழிந்தே னின்றிருப்பாதங் கண்டுகண் களிகூரப் [னே
பேணுமதொழிந்தேன் பிதற்றுமதொழிந்தேன்பின்னையெம்பெருமா
தாணுவேயழிந்தேனின்னினைந்துருகுந்தன்மையென்புன்மைகளாற்
காணுமதொழிந்தே னியினிவரினுங் காணவு நாணுவனே. (ரு)

பாற்றிருநீற்றெம் பரமனைப்பரங் கருணையோடு மெதிர்ந்து, தோற்றி
மெய்யடியார்க்கருட்டுறையளிக்குஞ் சோதியைநீதியிலேன்,போற்றி
யென்னமுதே யெனநினைந்தேத்திப் புகழ்ந்தழைத்தலறி யென்னுள்
ளே, ஆற்றுவனாக வுடையவனேயெனை யாவவென்றருளாயே. (கு).

திருச்சிற்றம்பலம்.

நட்பையே; நாணுமே - கூசாமல். (ரு) பின்னை-மேலும்; தாணுவே --ஸ்திரமாயுள்ளவனே. அடிகளார் இந்தப் பாசுரத்தில் தம்மைப்பசுத் தன்மையுடையராய்க் கூறிக்கொண்டார். அது உபசாரமே. அவர் எப் பொழுதுஞ் சிவசொரூபியே. அவரது கருவிகரணாதிகளுமப்படியே. அவர் அவறம் (நான்) என்பதையறிந்தவரன்று. சிவத்தையே முத லென்றறிந்தவர். எனதென்பதையறிந்தவரன்று. அநளென்பதையே யுணர்ந்தவர். அவர் சதா சிவச்செயலும் சிவத்தன்மையுமே யுடைய வர். அப்படியிருந்தும் தாம்கொண்டகோலத்திற்கேற்ப பெருமாயைச் சுழலில் அகப்பட்டு வருந்தும் ஆன்மாக்கள் அருளைக்கொள்ளை கொள்ளும் விதமாக வழிகாட்டினார். அத்தனையும் அவரது கருணைப் பெருக்கே. (கு) பால் - வெண்மை; தோற்றி - காணப்பட்டு; ஆற்று வன்ஆக - உறுதிசெய்வேனாக.

யாத்திரைப்பத்து.

அநுபவாதீதமுரைத்தல்

எ - து. அநுபவத்தேட்டாமையையறிவுறுத்தல்.

தில்லையிலருளிச் செயப்பட்டது.

ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பூவார் சென்னி மன்னனெம் புயங்கப் பெருமான் சிறியோமை
ஓவாதுள்ளங் கலந்துணர்வா யுருக்கும்வெள்ளக் கருணையினால்
ஆவா வென்னப் பட்டன்பா யாட்பட்டீர்வந் தொருப்படு மின்
போவோங்காலம்வந்ததுகாண்பொய்விட்டுடையான் கழல்புகவே. (க)

புகவே வேண்டா புலன்களினீர் புயங்கப் பெருமான் பூங்கழல்கள்
மிகவே நினைமின் மிக்கவெல்லாம் வேண்டா போகவிடுமின்கள்
நகவே ஞாலத் துள்புகுந்து நாயேயனைய நமையாண்ட
தகவே யுடையான் றனைச்சாரத் தளராதிருப்பார் தாந்தாமே. (உ)

தாமேதமக்குச் சுற்றமுந் தாமேதமக்கு விதிவகையும்
யாமா ரெமதார் பாசமா ரென்னமாய மிவைபோகக் [கொண்டு
கோமான் பண்டைத் தொண்டரொடு மவன்றன் குறிப்பேகுறிக்
போமா றமைமின் பொய்நீக்கிப் புயங்கனாள்வான் பொன்னடிக்கே.

(க) பூ - கொன்றைப்பூ; புயங்கம் - பாம்பு, புயங்கமென்னும் ஓர் கூத்து; ஓவாது - நீங்காமல்; உணர்வுஆய் - அறிவுருவாகி; வந்தது - நேர்ந்தது; பொய் - உடம்பு; கழல்புக - திருவடிநிழலில் புகுத. (உ) புகவே - நுழையவே; மிக்க எல்லாம் - மற்றைய எல்லாப் பொருள்கள்; நகவே - சிரிக்கவே; நாயேஅனைய - நாயே நிகர்த்த; தகவே - கிருபையையே. (ங) தாமே - சிவபிரான் தாமே; தமக்கு - எமக்கு; விதிவகை - விதிமுறை; என்னமாயம் - என்ன

அடியாரானீ ரெல்லீரு மகலவிடுமின் விளையாட்டைக்
கடிசேரடியே வந்தடைந்துகடைக்கொண்டிருமின் றிருக்குறிப்பைச்
செடிசேருடலைச் செலநீக்கிச் சிவலோகத்தே நமைவைப்பான்
பொடிசேர்மேனிப் புயங்கன்றன் பூவார்கழற்கே புகவிடுமே. (௪)

விடுமின்வெகுளி வேட்கைநோய் மிகவோர்கால மினியில்லை [மின்
உடையானடிக்கீழ்ப்பெருஞ்சாத்தோடுடன்போவதற்கேயொருப்படு
அடைவோநாம்போய்ச் சிவபுரத்து ளணியார்கதவ தடையாமே
புடைபட்டுருகிப் போற்றுவோம் புயங்களுள்வான் புகழ்களையே.

புகழ்மின் றொழுமின் பூப்புனைமின் புயங்கன்றாளே புந்திவைத்திட்
டிகழ்மினெல்லா வல்லலையு மினியோரிடையூ றடையாமே
திகழுஞ்சீரார் சிவபுரத்துச் சென்றுசிவன்றாள் வணங்கிநாம்
நிகழுமடியார் முன்சென்று நெஞ்சமுருகி நிற்போமே. (௬)

நிற்பார்நிற்க நில்லாவுலகி னில்லோ மினிநாஞ் செல்வோமே
பொற்பாலொப்பாந் திருமேனிப் புயங்களுள்வான் பொன்னடிக்கே
நிற்பீரெல்லாந் தாழாதே நிற்கும்பரிசே யொருப்படுமின்
பிற்பானின்று பேழ்கணித்தாற் பெறுதற்கரியன் பெம்மானே. (எ)

பெருமான்பேரா னந்தத்துப் பிரியாதிருக்கப் பெற்றீர்காள்
அருமாலுற்றுப் பின்னைநீ ரம்மாவழுங்கி யரற்றாதே
திருமாமணிசேர் திருக்கதவந் திறந்தபோதே சிவபுரத்துத்
திருமாலறியாத் திருப்புயங்கன் றிருத்தாள்சென்று சேர்வோமே. ()

மாயமாயிருக்கின்றது; இவைபோக - இவை போகட்டும்; குறிக்கொண்டு - உறுதியாகக்கொண்டு; அமைமின் - அமையுங்கள். (௪) கடி - வாசனை; கடைக்கொண்டு - கடைப்பிடித்து; புகவிடும் - புகவிடுவன். (௫) வெகுளி - கோபம்; நோய் - விருப்பாகிய நோய்; சாத்து - திருவிழா; அணிஆர் - அழகுபொருந்திய; புடைபட்டு - பக்கத்திருந்து. (௬) புந்திவைத்திட்டு - மனதில்வைத்து; அல்லல் - துன்பம்; நிகழும் அடியார் - (சிவபுரத்தில்) வாழ்கின்ற அடியார்கள், முத்தான்மாக்கள்; (எ) நிற்பார்-(பொய்யுலகத்தில்) நிற்பவர்; நில்லா - அநித்தியமாகிய; பொற்பால்-அழகினால்; ஒப்புஆம்-(தனக்குத்தானே) சமானமாகிற; பரிசே - தன்மைக்கே; பின்பால் - பின்னிடத்தே; பேழ்கணித்தால் - விழித்தால். (அ) அருமால் உற்று - அரிய மயக்கமடைந்து; பின்னை - பிறகு; அழுங்கி - துன்பப்பட்டு; திருமாமணி -

சோக்கருதிச் சிந்தனையைத் திருந்தவைத்துச் சிந்திமின்
போரிற்பொலியும் வேற்கண்ணாள் பங்கன்புயங்க னருளமுதம்
ஆரப்பருகி யாராத வார்வங்கூர வழுந்துவீர்
போரப்புரிமின் சிவன்கழற்கே பொய்யிற்கிடந்து புரளாதே. (௯)

புரள்வார் தொழுவார் புகழ்வாரா யின்றேவந்தா ளாகாதீர்
மருள்வீர் பின்னைமதிப்பாரார் மதியுட்கலங்கி மயங்குவீர்
தெருள்வீராகி லிதுசெய்மின் சிவலோகக்கோன் றிருப்புயங்கன்
அருளார் பெறுவா ரகலிடத்தே யந்தோவந்தோவந்தோவே. (௰)

திருச்சிற்றம்பலம்.

திருப்படையெழுச்சி.

பிரபஞ்சப்போர்

எ - து. மலவிளைவற்றது.

தில்லையிலருளிச் செயப்பட்டது.

கலிவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

ஞானவா ளேந்து மையர்நாதப் பறையறைமின்
மானமா வேறுமையர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற்றுக் கவச மடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோநா மாயப் படைவாராமே. (௧)

அழகும் பெருமையுமுள்ள மணி. (௯) ஆர-நிறைய; ஆராத-தெவிட்டாத; ஆர்வங்கூர - அன்புமிக; அழுந்துவீர் - மூழ்குவீர்; பொய் - பொய்யுலகத்தில்; போரப்புரிமின் - மிகவும் அன்பு செய்யுங்கள். (௰) ஆள் ஆகாதீர் - அடிமையாகாதவர்களே; தெருள்வீர் ஆகில் - (அம்மயக்கம் நீங்கி) தெளிவீராகில்; அகல் இடத்து - அகன்ற பூமியில்.

தொண்டர்கா டேசெல்லீர் பத்தர்காள் சூழப்போகீர்
ஒண்டிறல் யோகிகளே பேரணியுந் தீர்கள்
திண்டிறற் சித்தர்களே கடைக் கூழைசென்மின்கள்
அண்டர்நா டாள்வோநா மல்லற் படைவாராமே. (௨)

திருச்சிற்றம்பலம்.

(க) மானம் மா - பெருமை பொருந்திய யானை; மதி - பூர்ணசந்திரன்; ஆன - முத்தியைத் தருவதான; கவசம்-சட்டை; அடைய-முழுதும்; வானவூர் - உயர்ந்த உலகம்; கொள்வோம் - கைக்கொள்வோம்; மாயப்படை-மாயா காரியங்களாகிய சேனை. (௨) தூசி-முற்படை, கொடிப்படை; பேரணி - பெரியபடை வகுப்பு; உந்தீர்கள் - செலுத்துங்கள்; கடைக்கூழை-பிற்படை, பின்னணி; அண்டர்நாடு-முத்தியுலகம்; அல்லல்படை - சர்வவித துன்பங்களுக்கும் மூலமாயிருக்கிற மும்மலப் படை.

இவ்விரண்டு திருவெண்பாக்களும் பிரபஞ்சத்தோடு போர் செய்தலைச் செப்புகின்றன. அதாவது ஆன்மாக்களுக்கு எந்தக் காலத்திலும் பகைவர்களாயுள்ளவர்கள் ஆணவம், கன்மம், மாயை என்னும் மூவர்கள். அவர்களை வெல்ல அவர்களுக்குப் போதிய சக்தியில்லை. ஆதலின் மலரஹிதராயுள்ள சிவபெருமான் கருணை மேலீட்டால் தனது ஆதிசத்தியின் பேதமாகிய ஆரணி, ஜனனி, ரோத்யித்ரி என்னும் மூன்று சக்திகளைக்கொண்டு ஐந்து தொழிலாகிய யுத்தத்தைச் செய்கின்றனர். ஆன்மா அவரை உள்ளன்போடு வழிபடின் முதல் யுத்தத்தில் மாயாசேனை ஸம்ஹரிக்கப்படும். இரண்டாவதில் கன்மமல சேனை நாசமடையும். மூன்றாவதாகிய கடைசிபோரில் ஆணவமல சக்திகள் அடியோடு மாண்டுபோம். இவ்வாறு மும்மலச் சேனையும் அற்றொழிய இறைவரது நாதப் பறையைக் கொட்டுங்கள். சுத்த ஸத்துவகுணத்தை ஏந்திக்கொள்ளுங்கள். திருவெண்ணீற்றுக் கவசத்துக்குள் முழுதும் புகுங்கள். அவ்வாறு செய்யின் முத்தியுலகத்தைக் கைக்கொள்ளலாம், அதை யாளலாம், என அடிகளார் வற்புறுத்தியருளினர்.

திருவெண்பா.

அணைந்தோர்தன்மை

எ - து. பரிசவேதிபோல என்றது.

திருப்பெருந்துறையிலருளிச் செயப்பட்டது.

நேரிசை வெண்பா.

திருச்சிற்றம்பலம்.

வெய்ய வினையிரண்டும் வெந்தகல மெய்யுருகிப்
பொய்யும் பொடியாகா தென்செய்கேன்—செய்ய
திருவார் பெருந்துறையான் றேனுந்து செந்தீ
மருவா திருந்தேன் மனத்து. (க)

ஆர்க்கோ வரற்றுகோ வாடுகோ பாடுகோ
பார்க்கோ பரம்பரனே யென்செய்கேன்—தீர்ப்பரிய
ஆனந்த மாலேற்று மத்தன் பெருந்துறையான்
றாளென்பா ராரொருவர் தாழ்ந்து. (உ)

செய்த பிழையறியேன் சேவடியே கைதொழுதே
உய்யும் வகையி னுயிர்ப்பறியேன்—வையத்
திருந்துறையுள் வேன்மடுத்தென் சிந்தனைக்கே கோத்தான்
பெருந்துறையின் மேய பிரான். (ங)

முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன்—தென்னன்

(க) மெய் - உடல்; பொய் - பொய்யொழுக்கங்கள்; செய்ய - செவ்விய; செந்தீ - சிவந்ததீயையொத்ததிருமேனி. (உ) ஆர்க்கோ - ஆரவாரஞ்செய்யவோ; தீர்ப்புஅரிய - நீக்குதற்கரிய; தாழ்ந்து - வணங்கி. (ங) உயிர்ப்பு - உயிர்வாழ்தல்; வேல்மடுத்து-வேலெடுத்து.

பெருந்துறையின் மேய பெருங்கருணை யாளன்
வருந்துயரந் தீர்க்கு மருந்து. (௪)

அறையோ வறிவார்க் கனைத்துலகு மீன்ற
மறையோனு மாலுமால் கொள்ளும்—இறையோன்
பெருந்துறையுண் மேய பெருமான் பிரியா
திருந்துறையு மென்னெஞ்சத் தின்று. (௫)

பித்தென்னை யேற்றும் பிறப்பறுக்கும் பேச்சரிதாம்
மத்தமே யாக்கும்வந் தென்மனத்தை—அத்தன்
பெருந்துறையா னாட்கொண்டு பேரருளா னோக்கும்
மருந்திறவாப் பேரின்பம் வந்து. (௬)

வாரா வழியருளி வந்தெனக்கு மாறின்றி
ஆரா வமுதா யமைந்தன்றே—சீரார்
திருத்தென் பெருந்துறையா னென்சிந்தை மேய
ஒருத்தன் பெருக்கு மொளி. (௭)

யாவர்க்கு மேலா மளவிலாச் சீருடையான்
யாவர்க்குங் கீழா மடியேனை—யாவரும்

---

(௪) பேர்ஆளன் - திருநாமமுடையவன். (௫) அறையோ - முறையோ. (௬) பேச்சுஅரிதுஆம் - பேசுதல் அருமையாகிய; மத்தம்ஆக்கும் - உன்மத்தமாக்கும்; பேரின்பம் - நித்தியானந்தம், நிரதிசயானந்தம், நிர்மலானந்தம். இது சிற்றின்பத்துக்கு வேறாயது. சிற்றின்பத்துக்கும் இதற்குமுள்ள பேதம் யாதெனின், சிற்றின்பம் - கருவிகரணங்களால் நுகரப்படுவது. பேரின்பம் அறிவினால் அநுபவிக்கப்படுவது. சிற்றின்பம் - உடம்போடு கூடியநுபவிக்கப்படுவது. பேரின்பம் ஆன்மாநேரே அநுபவிப்பது. சிற்றின்பம் - ஏகதேச அறிவால் அநுபவிக்கப்படுவது. பேரின்பம் ஆன்மவியாபக முழுதும் விளங்கியுள்ள பூரணஞானத்தால் அநுபவிக்கப்படுவது. சிற்றின்பம் - தற்போதங்கொண்டு அநுபவிக்கப்படுவது. பேரின்பம் தற்போதயற்று சிவபோதங்கொண்டு சிவானந்தத்துள்ளழுந்தி அநந்நியமாய்நின்று அநுபவிக்கப்படுவது. சிற்றின்பம் - இடையிடையே விட்டுவிட்டு நீங்கி மாறிமாறிவருவது. பேரின்பம் - சாசுவதமாய் நித்தியமாய் நிலைபெற்றுள்ளது. (௭) வாராவழி - மீட்டும்பிறவிக்குவாராத முத்திநெறி; மாறுஇன்றி - மாறுபடுதலின்றி; அமைந்தன்று - அமைந்தது; பெருக்கும்ஒளி - பெருகச்செய்கிற ஞானவொளி. (அ) வைத்

பெற்றறியா வின்பத்துள் வைத்தாய்க்கென் னெம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை. (அ)

மூவரு முப்பத்து மூவரு மற்றொழிந்த
தேவருங் காணாச் சிவபெருமான்—மாவேறி
வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க
மெய்யகத்தே யின்ப மிகும். (கூ)

இருந்தென்னை யாண்டா னிணையடியே சிந்தித்
திருந்திரந்து கொண்ணெஞ்சே யெல்லாந்—தருங்காண்
பெருந்துறையின் மேய பெருங்கருணை யாளன்
மருந்துருவா யென்மனத்தே வந்து. (ய)

இன்பம் பெருக்கி யிருளகற்றி யெஞ்ஞான்றும்
துன்பந் தொடர்வறுத்துச் சோதியாய்—அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையா னென்னுடைய சிந்தையே
யூராகக் கொண்டா னுவந்து. (கக)

திருச்சிற்றம்பலம்.

தாய்க்கு - வைத்தவுனக்கு; செய்யும் - (கைம்மாறு) செய்யும். (கூ) முப்பத்துமூவர் - ஆதித்தர் - கஉ, அசுவினிதேவர் - உ, உருத்திரர் - கக, வசுக்கள் - அ. மாவேறி-குதிரையேறி; மெய்அகத்தே - உண்மையாகிய சித்தத்தின்கண்ணே. (ய) தொடர்வு - பற்று.

பண்டாய நான்மறை.

அநுபவத்துக்கைய மின்மையுரைத்தல்.

திருப்பெருந்துறையிலருளிச் செயப்பட்டது.

நேரிசை வெண்பா.

திருச்சிற்றம்பலம்.

பண்டாய நான்மறையும் பாலணுகா மாலயனும்
கண்டாரு மில்லைக் கடையேனைத்—தொண்டாகக்
கொண்டருளுங் கோகழியெங் கோமாற்கு நெஞ்சமே
உண்டாமோ கைம்மா றுரை. (க)

உள்ள மலமூன்று மாய வுகுபெருந்தேன்
வெள்ளந் தரும்பரியின் மேல்வந்த—வள்ளல்
மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள் வாழ்த்தக்
கருவுங் கெடும்பிறவிக் காடு. (உ)

காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்
நாட்டிற் பரிப்பாக னம்வினையை—வீட்டி
அருளும் பெருந்துறையா னங்கமல பாதம்
மருளுங் கெடநெஞ்சே வாழ்த்து. (௩)

வாழ்ந்தார்க ளாவாரும் வல்வினையை மாய்ப்பாருந்
தாழ்ந்துலக மேத்தத் தருவாருஞ்—சூழ்ந்தமரர்
சென்றிறைஞ்சி யேத்துந் திருவார் பெருந்துறையை
நன்றிறைஞ்சி யேத்து நமர். (௪)

(க) பண்டுஆய - பழமையாகிய. (உ) உள்ள - உள்ளதாகிய; உகு - சிந்துகின்ற; வள்ளன் - வள்ளல்; கருவும்கெடும் - வேரோடு அழியும். (௩) வலைவாணன் - வலையன்; வீட்டி - கெடுத்து; மருளும் கெட - பிறவிமயக்கம்அழிய. (ரு) கழியாது இருந்தவன் - நீங்காதிருந்

நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல
எண்ணி யெழுகோ கழிக்கரசைப்—பண்ணின்
மொழியாளோ டுத்தர கோசமங்கை மன்னிக்
கழியா திருந்தவனைக் காண். (௫)

காணுங் கரணங்க ளெல்லாம்பே ரின்பமெனப்
பேணு மடியார் பிறப்பகலக்—காணும்
பெரியானை நெஞ்சே பெருந்துறையி லென்றும்
பிரியானை வாயாரப் பேசு. (௬)

பேசும் பொருளுக் கிலக்கிதமாம் பேச்சிறந்த
மாசின்மணியின் மணிவார்த்தை—பேசிப்
பெருந்துறையே யென்று பிறப்பறுத்தே னல்ல
மருந்தினடி யென்மனத்தே வைத்து. (௭)

திருச்சிற்றம்பலம்.

தவன். (௭) இலக்குஇதம்ஆம் - இலக்காயும் இதமாயும் இருக்கிற; மாசஇல்மணி - மாசிலாமணியாகிய சிவபிரான்; மணி-திரு; மருந்தின் அடி - மருந்துபோல்பவனது திருவடி.

திருப்படையாட்சி.

சீவோபாதியொழிதல்

எ - து. கிரியாசூனியம்.*

தில்லையிலருளிச் செயப்பட்டது.

ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கண்க ளிரண்டு மவன்கழல் கண்டு களிப்பன வாகாதே
காரிகை யார்கடம் வாழ்விலென் வாழ்வு கடைப்படு மாகாதே
மண்களில் வந்து பிறந்திடு மாறு மறந்திடு மாகாதே
மாலறியா மலர்ப் பாத மிரண்டும் வணங்குது மாகாதே
பண்களிகூர்தரு பாடலொ டாடல் பயின்றிடு மாகாதே
பாண்டி நன் னுடை யான்படை யாட்சிகள் பாடுது மாகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து வெளிப்படு மாகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படு மாயிடிலே. (க)

ஒன்றினொடொன் றுமோ ரைந்தினொ டைந்து முயிர்ப்பது மாகாதே
உன்னடி யாரடி யாரடி யோமென வுய்ந்தன வாகாதே
கன்றை நினைந்தெழு தாயென வந்த கணக்கது வாகாதே
காரண மாகு மனுதி குணங்கள் கருத்துறு மாகாதே

---

* இதன்கருத்து யாதெனின், ஞானநந்த வஸ்துவாகிய சிவத்தைத் தரிசித்தவர்கள் தூயஞானநாட்டம் பெற்றவர்களாதலின் அவர்களுக்கு வேறு விவகாரங்கள் நிகழலாகாவென்பதாம்.

(க) காரிகையார்கள் - மாதர்கள்; பண்களிகூர்தரு - பண்களின் களிப்பு மிகுந்த; வேதகம் - வேறுபடுத்தல், அதாவது ஆன்மாவின் சீவத்துவத்தை நீக்கி சிவத்துவத்தையருளல். ஈண்டுஅது சிவபிரானுக்காயிற்று. (உ) ஒன்றினோடொன்று - ஒன்றேடொன்று, அதா

நன்றிது தீதென வந்த நடுக்க நடந்தன வாகாதே
நாமுமே லாமடி யாருட னேசெல நண்ணுது மாகாதே
என்றுமே னன்பு நிறைந்த பராவமு தெய்துவ தாகாதே
ஏறுடை யானெனை யாளுடை நாயக னென்னுள் புகுந்திடிலே. (உ)

பந்த விகார குணங்கள் பறிந்து மறிந்திடு மாகாதே
பாவனை யாய கருத்தினில் வந்த பராவமு தாகாதே
அந்த மிலாத வகண்டமு நம்மு ளகப்படு மாகாதே
ஆதி முதற்பர மாய பரஞ்சுட ரண்ணுவ தாகாதே
செந்துவர் வாய்மட வாரிட ரானவை சிந்திடு மாகாதே
சேலன கண்க ளவன்திரு மேனி திளைப்பன வாகாதே
இந்திர ஞால விடர்ப் பிறவித்துய ரேகுவ தாகாதே
என்னுடை நாயக னாகிய வீச னெதிர்ப்படு மாயிடிலே. (௩)

என்னணி யார்முலை யாக மளைந்துட னின்புறு மாகாதே
எல்லையின் மாக்கரு ணைக்கட லின்றினி தாடுது மாகாதே
நன்மணி நாத முழங்கி யெனுள்ளுற நண்ணுவ தாகாதே
நாத னணித்திரு நீற்றினை நித்தலு நண்ணுவ தாகாதே
மன்னிய வன்பரி லென்பணி முந்துற வைகுவ தாகாதே
மாமறை யும்மறி யாமலர்ப் பாதம் வணங்குது மாகாதே
இன்னியற் செங்கழு நீர்மல ரென்றலை யெய்துவ தாகாதே
என்னை யுடைப் பெருமா னருளீச னெழுந்தருளப் பெறிலே. (௪)

மண்ணினின் மாயை மதித்து வகுத்த மயக்கறு மாகாதே
வானவ ரும்மறி யாமலர்ப் பாதம் வணங்குது மாகாதே
கண்ணிலி கால மனைத்தினும் வந்த கலக்கறு மாகாதே
காதல்செ யும்மடி யார்மன மின்று களித்திடு மாகாதே
பெண்ணலி யாணென நாமென வந்த பிணக்கறு மாகாதே
பேரறி யாத வனேக பவங்கள் பிழைத்தன வாகாதே

உது சித்தசித்து; ஐந்திரெண்டுஐந்து - பத்து, அதாவது தசேந்திரியங்கள்; உயிர்ப்பதும் - பிழைத்திருத்தலும்; கணக்கது - முறைமை; நண்ணுதும் - மனதிற்கொள்ளுதலும். (௩) பந்தம் - பிறவிக்கட்டு; பறிந்துமறிந்திடும் - வெளிப்பட்டு மீளுதலும்; அண்ணுவது - அணுகுவது; திளைப்பன - அநுபவிப்பன; ஏகுவது - ஒழிந்துபோவது. (௪) ஆகம் - மார்பு; இயல் - குணம். (௫) கண்இலி - நினைத்தற்கரிய;

எண்ணிலி யாகிய சித்திகள் வந்தெனை யெய்துவ தாகாதே
என்னை யுடைப் பெருமா னருளீச னெழுந்தருளப் பெறிலே. (ரு)

பொன்னிய லுந்திரு மேனிவெண் ணீறு பொலிந்திடு மாகாதே
பூமழை மாதவர் கைகள் குவிந்து பொழிந்திடு மாகாதே
மின்னிய நுண்ணிடை யார்கள் கருத்து வெளிப்படு மாகாதே
வீணை முரன்றெழு மோசையி லின்ப மிகுத்திடு மாகாதே
தன்னடி யாரடி யென்றலை மீது தழைப்பன வாகாதே
தானடி யோமுட னேயுய வந்து தலைப்படு மாகாதே
இன்னிய மெங்கு நிறைந்தினி தாக வியம்பிடு மாகாதே
என்னமு னுடை யீச னனத்த னெழுந்தருளப் பெறிலே. (சு)

சொல்லிய லாதெழு தூமணி யோசை சுவைதரு மாகாதே
துண்ணென வென்னுள மன்னிய சோதி தொடர்ந்தெழு மாகாதே
பல்லியல் பாய பரப்பற வந்த பராபர மாகாதே
பண்டறி யாத பரானு பவங்கள் பரந்தெழு மாகாதே
வில்லிய னன்னுத லார்மயலின்றுவிளைந் திடு மாகாதே
விண்ணவரும் மறியாத விழுப்பொரு ளிப்பொரு ளாகாதே
எல்லையி லாதன வெண்குண மானவை யெய்திடு மாகாதே
இந்து சிகாமணி யெங்களை யாள வெழுந்தருளப் பெறிலே. (எ)

சங்கு திரண்டு முரன்றெழு மோசை தழைப்பன வாகாதே
சாதி விடாத குணங்க ணம்மொடு சலித்திடு மாகாதே
அங்கிது நன்றிது நன்றெனு மாயை யடங்கிடு மாகாதே
ஆசை யெலாமடி யாரடி யோமெனு மத்தனை யாகாதே
செங்கய லொண்கண் மடந்தையர் சிந்தை திளைப்பன வாகாதே
சீரடி யார்கள் சிவானு பவங்க டெரிந்திடு மாகாதே

பவங்கள் - பிறவிகள்; பிழைத்தன - தப்புவன. (சு) பொன் இயலும்- பொன்னிறம்பொருந்திய; தலைப்படும் - கலத்தலும்; இயம் - வாத்தி யங்கள். (எ) துண்ணென - விரைவாக; பரப்பு - (விஷய நுகர்ச்சி யில்) விரைவு; வில்இயல் - வில்லலங்கார்த்த; இந்து - சந்திரன். (அ) முரன்று - சப்தித்து; ஓசை - பிராணவாயுவானது சுழிமுனை வாயி லாக மேற்சென்று துவாதசாந்தத்தையடைந்தபோது அவ்விடத்தி லெழும் நடனச்சிலம்போசை. அத்தனை - சிறிதும்; திளைப்பன - நுகர்வன.

எங்கு நிறைந்தமுதூறு பரஞ்சுட ரெய்துவ தாகாதே
ஈறறியா மறையோனெனை யாள வெழுந்தருளப் பெறிலே. (அ)

திருச்சிற்றம்பலம்.

ஆ ன ந் த மா லை.

சிவானுபவவிருப்பம்

௭-து. சிவானந்தமேலீட்டில் கிரியாசத்தி யழிவுரைத்தல்.

தில்லையிலருளிச் செயப்பட்டது.

ஆ சி ரி ய வி ரு த் த ம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னேரனைய பூங்கழல்க ளடைந்தார் கடந்தார் வியனுலகம்
பொன்னேரனைய மலர்கொண்டு போற்றாநின்றா ரமரரெல்லாம்
கன்னேரனையமனக்கடையாய்க் கழிப்புண்டவலக் கடல்வீழ்ந்த
என்னேரனையே னினியுன்னைக் கூடும்வண்ண மியம்பாயே. (க)

என்னாலறியாப் பதந்தந்தா யானதறியா தேகெட்டேன்
உன்னாலொன்றுங் குறைவில்லை யுடையா யடிமைக்காரென்பேன்
பன்னாளுன்னைப் பணிந்தேத்தும் பழையவடிய ரொடுங்கூடா
தென்னாயகமே பிற்பட்டிங் கிருந்தேனோய்க்கு விருந்தாயே. (உ)

(க) ஏர் - அழகு; வியன்உலகம் - பெரிய பிரபஞ்சமாயை; அவலம் - துன்பம்; என்நேர்அனையேன் - எனக்கு நானே நிகர்த்தவனாகிய நான். (உ) பதம் - அத்துவிதமாயியைந்து ஒன்றுபட்டு நிற்கும் நிலை. பழைய அடியாரொடுங்கூடாது—(வெளிப்படை) தொண்டர் கூட்டுறவு எற்றுக்கெனின், முத்தியை நல்குவதுஞானம். அதைக்கெடுப்பது மலம். அம்மலவாசனை ஞானநிஷ்டை கூடினு

சீலமின்றி நோன்பின்றிச் செறிவேயின்றி யறிவின்றித்
தோலின்பாவைக் கூத்தாட்டாய்ச் சுழன்றுவிழுந்து கிடப்பேனை
மாலுங்காட்டி வழிகாட்டி வாராவுலக நெறியேறக்
கோலங்காட்டி யாண்டானைக் கொடியேனென்றோ கூடுவதே. (௩)

கெடுவேன்கெடுமாகெடுகின்றேன்கேடிலாதாய்பழிகொண்டாய்
படுவேன் படுவதெல்லாநான் பட்டாற் பின்னைப் பயனென்னே
கொடுமாநரகத் தழுந்தாமே காத்தாட் கொள்ளுங் குருமணியே
நடுவாய்நில்லா தொழிந்தக்கா லன்றோ வெங்கணாயகமே. (௪)

தாயாய்முலையைத் தருவானே தாராதொழிந்தாற் சவலையாய்
நாயேன்கழிந்து போவேனோ நம்பியினித்தா னல்குதியே
தாயேயென்றுன் றாளடைந்தேன் தயாநீயென்பா லில்லையே
நாயேனடிமை யுடனாக வாண்டாய் நான்றான் வேண்டாவோ. (௫)

கோவேயருள வேண்டாவோ கொடியேன் கெடவேயமையுமே
ஆவாவென்னா விடிலென்னை யஞ்சேலென்பா ராரோதான்
சாவாரெல்லா மென்னளவோ தக்கவாறன் றென்னாரோ
தேவேதில்லை நடமாடீ திகைத்தே னினித்தான் றேற்றாயே. (௬)

நரியைக்குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லா நிகழ்வித்துப்
பெரியதென்னன் மதுரையெல்லாம்பிச்சதேற்றும்பெருந்துறையாய்
அரியபொருளே யவநாசியப்பா பாண்டி வெள்ளமே
தெரியவரிய பரஞ்சோதீ செய்வதொன்று மறியேனே. (௭)

திருச்சிற்றம்பலம்.

ரிடத்தும் பிராரத்துவ தேகமுள்ளவரை யாதானுமோர் வழியால் நுழைந்து, அவரது நல்லுணர்ச்சியைச் சிதைத்துப், பிறவிக் கேதுவாகிய உபாதியையுண்டுபண்ணுமாதலின், அம்மலத்தை நிர்மூலப் படுத்த அருட்டுணையும் தொண்டர் கூட்டுறவும்வேண்டும். (௩) சீலம் - ஒழுக்கம்; நோன்பு - விரதம்; செறிவு - அடக்கம்; தோலின் பாவை - தோலினாற்செய்த பிரதிமை; மாலும் - விருப்பமும்; வழி - நன்னெறி; வாராஉலகம் - மீளாவுலகம் (முத்தியுலகம்); நெறிஏற - முறையுடனேற. (௪) கெடும் மா - கெடும்வண்ணம். (௫) சவலை - மெலிந்தகுழந்தை; நாயேன் அடிமை - நாயினேனும் எனது அடிமைத் திறமும்; நான்தான் - நான்மாத்திரம்; தேற்றாய் - தெளிவிப்பாய்.

அச்சோப்பதிகம்.

அநுபவ வழியறியாமை

எ - து. அநுபவத்ததிசயம்.

தில்லையிலருளிச் செயப்பட்டது.

கலிவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே. (க)

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்று மில்லாத கூத்தன்றன் கூத்தையெனக்
கறியும்வண்ண மருளியவா றார்பெறுவா ரச்சோவே. (உ)

(க) நெறி - மார்க்கம்; மூர்க்கர் - அகங்காரிகள், கீழ்மக்கள்; முயல்வேனை - முயன்று திரிகின்ற என்னை; பத்திநெறி - அன்பு மார்க்கம்; பாறும் - நீங்கும்; மலம்அறுத்து - பாசக்ஷயஞ் செய்வித்து; சிவம்ஆக்கி - சிவத்துவத்தையளித்து, அதாவது ஸர்வஞ்ஞத்வாதி குணங்களைநல்கி; அத்தன் - ஸர்வ உயிர்களுக்கும் தந்தையாயுள்ளவன், ஸர்வசேதனு சேதனப் பொருள்களையுமுடையவன், ஸர்வ வேதாகமப் பொருளாயுள்ளவன், எனக்குப் பொற்குவையா யிருப்பவன்; அருளியஆறு - அளித்தவிதம். அளித்தது திருவடி. திருவடியாவது அருள். அதைப்பெற்றுத் தானும் எதிருங்கழன்று அறிவுருவாயிருத்தலே முத்தி. அத்தகைய முத்தியை யளித்தவிதம்; அச்சோ - அதிசயம். (உ) நெறியல்லாநெறி - தீயநெறிகள்; சிறுநெறிகள் - அன்பு மார்க்கமில்லாத பிறசமயங்கள்; குறி - அடையா

பொய்யெல்லா மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளித்
தையலிடங் கொண்டபிரான் றன்கழலே சேரும்வண்ணம்
ஐயனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே. (௩)

மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டுவிழக் கடவேனை
எண்ணமிலா வன்பருளி யெனையாண்டிட் டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீ றணிவித்துத் தூய்நெறியே சேரும்வண்ணம்
அண்ணலெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே. (௪)

பஞ்சாய வடிமடவார் கடைக்கண்ணா லிடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேனுன் னருள்பெற்றேன்

ளம். (௩) புணர் - நெருங்கிய; மையல்உற - மயக்கமிக. (௪) எய்த்து - இளைத்து; எண்ணம் இல்லா - அளவில்லாத; சுண்ணம் - பொடி; தூய்நெறி - பரிசுத்தம் பொருந்திய **சமாசநெறி**. அது சித்தாந்த சைவநெறி, சைவத்திறம், சைவத்துறை, அருள்நெறி. அது தூய்மையாவது எங்ஙனமெனின், சுருங்கச்சொல்லின், பிறந்திறந்துழலாதது எதுவோ அதுவே **பதி**யென்னுங் **கடவுள்**. பிறந்திறந்துழல்வது எதுவோ அதுவே **பசு**வென்னும் **ஆன்மா**. அவ்வான்மா பிறந்திறந்துழல்வதற்குக் காரணமாயிருப்பது எதுவோ அதுவே **பாசம்** என்னும் **மும்மலம்**. அவைதான் அம்மூன்றுக்குமுள்ள முக்கிய பேதம். அவற்றைத் தெளிவாக விளக்கிக்காட்டுவதே மெய்ச்சமயம். அச்சமயம் கடவுளருளைப் பெறுவதற்கு உண்மையான **அன்பின் தொண்டே** முக்கிய சாதனமெனப்பகரும். அவ்வன்பின்றி சரீரபழக்கத்தாற் செய்யும் அநுஷ்டானம், ஜபம், ஆலயந்தொழுதல், பணியாற்றல், பிறகிரியைகளும் அவ்வருளையுண்டாக்க மாட்டாதென்று முடித்துப்பேசும். சாதாரணமாய் அன்பின்றித்தரும் உணவினைச் சிற்றறிவினராகிய நாமே அங்கீகரிக்கமாட்டோமென்றால், அன்பில்லாமற் செய்யுங் கிரியைகளை முற்றறிவினையுடைய முதல்வன் எவ்வாறங்கீகரிப்பன். ஆகையினாலே கசிந்துருகும் அடிமைத்திறத்தையுணர்த்தும் மெய்யன்பின் தொண்டின் நெறியே தூய்நெறியாம். அதுதான் இங்கு குறிப்பிக்கப்பட்டது. அதைச் சித்தாந்த நூல்கள் சித்தாந்தமாய்க் கூறினபடியால் அடிகளாரும் அதனையே தமது மதுரவாசகத்தின் இறுதிப்பதிகத்தில் சித்தாந்தப் படுத்தினார். முத்தாந்தத்துக்கு நேர் **இராஜவீதி** அதுவே. அதுவே வேதாந்தத்தின் முடிபிலுள்ள சித்தாந்தம். அப்படிக்கின்றி கேவலாத்வைத வேதாந்தத்தையும், சுத்தாத்வைத சித்தாந்தத்தையும் ஒன்றெனக் குழப்பி அதுவே **சமாசம்** என்றுகூறுவோரது கொள்கை அடாது. **வேதாந்த**

உய்ஞ்சேனு னுடையானே யடியேனை வருகவென்
றஞ்சேலென் றருளியவா றார்பெறுவா ரச்சோவே. (௫)

வெந்துவிழு முடற்பிறவி மெய்யென்று வினைபெருக்கிக்
கொந்துகுழற் கோல்வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்
பந்தமறுத் தெனையாண்டு பரிசறவென் றுரிசுமறுத்
தந்தமெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே. (௬)

தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழுருவி
உய்யுநெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை
ஐயனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே. (௭)

சாதல்பி றப்பென்னுந் தடஞ்சுழியிற் றடுமாறிக்
காதலின்மிக் கணியிழையார் கலவியிலே விழுவேனை
மாதொருகூ றுடையபிரான் றன்கழலே சேரும்வண்ணம்
ஆதியெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே. (௮)

செம்மைநல மறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமல மறுவித்து முதலாய முதல்வன்றான்
நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை யேற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே. (௯)

திருச்சிற்றம்பலம்.

முடிபே வேதாந்த சித்தாந்தம். ஒரும்வேதாந்த மென்றுச்சியிற் பழுத்த ஆராவின்ப வருங்கனியைப் பிழிந்த சாரமிதுதான். கடைப்பிடிக்க. (௫) உய்ஞ்சேன் நான்-உய்ந்தேன். (௬) கொந்துகுழல்-பூங்கொத்து அணிந்த குழல்; பரிசு - பிரகிருதி குணங்கள்; துரிசு - மலக்குற்றம்; அந்தம் - முடிவான பொருள். (௭) தையலார் - அழகுடைய மாதர்; உருவி - வாங்கி; ஓங்காரத்து உட்பொருள்-சிவம், சத்தாகிய வஸ்து, பிரமம். (௮) அணி இழையார் - ஆபரணங்களை யணிந்தவர். (௯) **செம்மைநலம் - ஞானங்கனிந்த அன்பு**; சிதடர் - அறிவில்லாதவர்; சிவிகை - பல்லக்கு, உன்னதமான இடம். அது ஆன்மபோதமுங் கண்ணொளியும் போலச் சிவமும் ஆன்மாவும் இரண்டறவொற்றுமைப்பட்டு கேவலம் அறிவாய்நிற்கும் நிலை. அதுவே ஞானிகளிடம். அருள்நிலயம். அந்நிலயம் பெற்றாரே பிறவாமை பெற்றார்.

ஆகத்திருப்பதிகங்கள் - ௫௧. அகவலோடு செய்யுள் - ௬௫௮.

திருவாசகம் முற்றுப்பெற்றது.

உ

திருச்சிற்றம்பலம்.

மாணிக்கவாசக சுவாமிகள்

திருக்கோவையார் செய்யுட்டிரட்டு.

நூற்சிறப்பு.

* ஆரணங் காணென்ப ரந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலதென்பர்
ஏரணங் காணென்ப ரெண்ண ரெழுத்தென்ப ரின்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே.

திருச்சிற்றம்பலம்.

காட்சி.

திருவளர் தாமரை சீர்வளர் காவிக ளீசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்குதெய்வம்
மருவளர் மாலையோர் வல்லியி னொல்கி யனநடைவாய்ந்
துருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன் றொளிர்கின்றதே. (௧)

பாங்கனை நினைதல்.

பூங்கனை யார்புனற் றென்புலி யூர்புரிந் தம்பலத்துள்
ஆங்கெனை யாண்டுகொண் டாடும்பி ரானடித் தாமரைக்கே
பாங்கனை யானன்ன பண்பனைக் கண்டிப் பரிசுரைத்தால்
ஈங்கெனை யார்தடுப் பார்மடப் பாவையை யெய்துதற்கே (௨)

---

* இச்செய்யுள் பிற்காலத்தான்றொருவராற் செய்யப்பட்டது.

(௧) திரு - அழகு; காவிகள் - நீலமலர்கள்; குரு - வரைப்பு, எல்லை; ஒல்கி - நுடங்கி. (௨) கனை - சப்தித்தல்; பாங்கனை - உரிமையுள்ளவனை; பண்பனை - இயல்பையுடையவனை. (௩) ஒருத்தன் - ஒப்பிலாதவன்; குடுமி - உச்சி; திருத்தம் - தீர்த்தம், புண்ணியநீர்; கூய் - அழைத்து. (௪) திமில் - மரக்கலம்; மடுக்கோ -

வாட்டம் வினாதல்.

நிருத்தம் பயின்றவன் சிற்றம் பலத்துநெற் றித்தனிக்கண்
ஒருத்தன் பயிலுங் கயிலை மலையி னுயர்குடுமித்
திருத்தம் பயிலுஞ் சுனைகுடைந் தாடிச் சிலம்பெதிர்கூய்
வருத்தம் பயின்றகொல் லோவல்லி மெல்லியல் வாடியதே. (௩)

துறையுற்று நிற்றல்.

மடுக்கோ கடலின் விடுதிமி லன்றி மறிதிரைமீன்
படுக்கோ பணிலம் பலகுளிக் கோபரன் றில்லைமுன்றில்
கொடுக்கோ வளைமற்று நம்மையர்க் காயகுற் றேவல்செய்கோ
தொடுக்கோ பணியி ரணியீர் மலர்நுஞ் சுரிகுழற்கே (௪)

பிறைதொழு கென்றல்.

மைவார் கருங்கண்ணி செங்கரங் கூப்பு மறந்துமற்றப்
பொய்வா னவரிற் புகாதுதன் பொற்கழற் கேயடியேன்
உய்வான் புகவொளிர் தில்லைநின் றோன்சடை மேலதொத்துச்
செவ்வா னடைந்த பசுங்கதிர் வெள்ளைச் சிறுபிறைக்கே. (௫)

ஆற்ற துரைத்தல்.

பொருளா வெனைப்புகுந் தாண்டு புரந்தரன் மாலயன்பால்
இருளா யிருக்கு மொளிநின்ற சிற்றம் பலமெனலாம்
சுருளார் கருங்குழல் வெண்ணகைச் செவ்வாய்த் துடியிடையீர்
அருளா தொழியி னொழியா தழியுமென் னாருயிரே. (௬)

தழைகொண்டு சேறல்.

தேமென் கிளவிதன் பங்கத் திறையுறை தில்லையன்னீர்
பூமென் றழையுமம் போதுங்கொள் ளீர்தமி யேன்புலம்ப
ஆமென் றருங்கொடும் பாடுகள் செய்துநுங் கண்மலராம்
காமன் கணைகொண் டலைகொள்ள வோமுற்றக் கற்றதுவே. (௭)

செலுத்துவேனே; பணிலம் - சங்கு; வளை - சங்கவளைகள்; பணியீர்- சொல்லுமின். (௫) மைவார் - மையையுடைய; பொய்வானவர் - பிறப்பிறப்புக்களையுடைய தேவர், அவர் அயன்மால் முதலினோர். (௬) துடி - உடுக்கை. (௭) தேமென் கிளவி - தேன்போலும் மெல்லியமொழி; அன்னீர் - ஒப்பீர்; கொடும்பாடுகள் - கொடுமைகள்.

இரவுக் குறிவேண்டல்.

மருந்துநம் மல்லற் பிறவிப் பிணிக்கம் பலத்தமிர்தாய்
இருந்தனர் குன்றினின் றேங்கு மருவிசென் றேர்திகழப்
பொருந்தின மேகம் புதைந்திரு டேங்கும் புனையிறும்பின்
விருந்தினன் யானுங்கள் சீறு ரதனுக்கு வெள்வளையே. (அ)

மணமுரசு கூறல்.

பிரசந் திகழும் வரைபுரை யானையின் பீடழித்தார்
முரசந் திகழும் முருகிய நீங்கு மெவர்க்குமுன்னும்
அரசம் பலத்துநின் றாடும்பி ரானருள் பெற்றவரில்
புரைசந் தமேகலை யாய்துயர் தீரப் புகுந்துநின்றே. (கூ)

பிரிவறிவித்தல்.

மூப்பா னிளையவன் முன்னவன் பின்னவன் முப்புரங்கள்
வீப்பான் வியன்றில்லை யானரு ளால்விரி நீருலகம்
காப்பான் பிரியக் கருதுகின் றார்நமர் கார்க்கயற்கண்
பூப்பா னலமொளி ரும்புரி தாழ்குழற் பூங்கொடியே. (ய)

வாட்டங் கூறல்.

முனிவரு மன்னரு முன்னுவ பொன்னான் முடியுமெனப்
பனிவருங் கண்பர மன்றிருச் சிற்றம் பலமனையாய்
துணிவரு நீர்மையி தென்னென்று தாநீர் தெளித்தளிப்ப
நனிவரு நாளிது வோவென்று வந்திக்கு நன்னுதலே. (கக)

(அ) ஏர் - அழகு; புனைஇறும்பு - செய்காடு; சீறூர் - வேடஊர்; வெள்வளை - வெண்மையாகிய வளையல்களையுடையவள். (கூ) பிரசம் - தேன்; பீடு - வலி; முருகியம் - குறிஞ்சிநிலப்பறை; எவர்க்கும்முன்னும் அரசு - திரிமூர்த்திகளுக்கும் முற்பட்ட இறைவன். (ய) மூப்பான் - எல்லார்க்கும் மூத்தவன்; இளையவன் - என்றும் நிலை பெற்ற இளமையையுடையவனாதலின் எல்லார்க்கும் இளையவன், (எம்முருகனைப்போல்); பூப்பால்-பூவின்கண்; நலம் - நறுநாற்றமாகிய நன்மை. (கக) முனிவரும் - துறந்தாரும்; பொன்னால் - பொருளால்; துனி - துன்பம்; அளிப்ப - தலையளிசெய்ய; நன்னுதல் - நல்ல நெற்றியையுடையவள்.

ஊதிய மேடுத்துரைத் தூடல் தீர்த்தல்.

காரணி கற்பகங் கற்றவர் நற்றுணை பாணரொக்கல்
சீரணி சிந்தா மணியணி தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் றக்கோர்தஞ் சங்க நிதிவி திசேர்
ஊருணி யுற்றவர்க் கூரன்மற் றியாவர்க்கு மூதியமே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

திருக்கோவையார் செய்யுட்டிரட்டு

முற்றுப்பெற்றது.

அபியுக்தர்.

உருவாருந் தமிழ்ச்சங்கத் தடம்பொய்கைத் தோன்றி
உயர்ந்தோங்கு மெய்ஞ்ஞான வொளியை யுடைத்தாகி
மருவாருங் கிளவியிதழ் நானூ றாகி
மதுப்பொருள்வாய் மதிப்புலவர் வண்டா யுண்ணத்
தருவாரும் புலியூரி னுலகுய்யக் குனிப்போன்
தடங்கருணை யெனுமிரவி தன்கதிரா லலரும்
திருவாத வூராளி திருச்சிற்றம் பலவன்
திருவடித்தா மரைச்சாத்துந் திருவளர் தாமரையே.

இலக்கணக் கோத்துரை.

பல்காற் பழகினுந் தெரியா வுளவேல்
தொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினு முழங்கு மாண்டினு மிலையேல்
வடமொழி வெளிபெற வழங்கு மென்க.

(கஉ) கார் - மேகம்; ஒக்கல் - சுற்றம்; உற்றவர் - சுற்றத்தார்; ஊதியம் - பயன்.

திருவாசகப்

பாட்டு முதற்குறிப் பகராதி.

முற்றிற்று.

திருக்கோவையார் பாட்டு முதற் குறிப்பகராதி.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

ஒன்பதாந் திருமுறை

என்னும்

திருவிசைப்பா திருப்பல்லாண்டு.

திருவிசைப்பா.

(க) திருமாளிகைத்தேவர். (உ) சேந்தனார். (ங) கருவூர்த்தேவர். (ச) பூந்துருத்திநம்பி காடநம்பி. (ரு) கண்டராதித்தர். (சு) வேணாட்டடிகள். (எ) திருவாலியமுதனார். (அ) புருடோத்தம நம்பி. (கூ) சேதிராயர் ஆகிய ஒன்பதின்மர் அருளிச்செய்த திருமுறை.

திருப்பல்லாண்டு.

சேந்தனார் அருளிச்செய்தது.

திருச்சிற்றம்பலம்.

ஒன்பதின்மர் திருநாமமும், திருப்பதிக வகையும், பண்ணின் வகையும் தெரியுமடைவு.

செம்பொன்மணி யம்பலத்து நிருத்த ணர்க்குத்
திருவிசைப்பா வுரைத்தவர்தந் திருப்பேர் சொல்லில்
பம்புபுகழ் செறிதிருமா ளிகைமெய்த் தேவர்
பரிவுடைய சேந்தனார் கருவூர்த் தேவர்
நம்பிகா டவர்கோனற் கண்டரா தித்தர்
நன்குயர்வே ணாட்டடிக டிருவாலி யமுதர்
அம்புவியோர் புகழ்புருடோத் தமர்சேதி ராயர்
ஆகவிவ ரொன்பதின்மர் தாமுறைகண் டடைவே. (௧)

அடைவுறுமா ளிகைத்தேவர் நான்கு சேந்தர்
அன்புறுபல் லாண்டொன்றோ டிசைப்பா மூன்று
திடமுடைய கருவூரர் பத்து வீறில்
சிறந்தகா டவரிரண்டு கண்டர்வே ணாடர்
படிபுகழோவ் வொன்றுதிரு வாலி நான்கு
பன்னுபுரு டோத்தமனா ரிரண்டுசேதி ராயர்
உடையதிருக் கடைக்காப்பொன் றாகவிரு பத்தொன்
பானோது செய்யுண்முந்நூற் றறுபதினோ டைந்தே. (௨)

இந்துடனல் உருமுரைத்த திருக்கடைக்காப் பிற்பண்
அறையின்மா ளிகைத்தேவர் நான்கிலொன்றுகாந்தாரம்
முந்துகரு வூரர்பத்தி னிரண்டுபுற நீர்மை
மொழிந்திடுகாந் தாரமொன்று காடவர்கோ னிரண்டின்
நந்தலில்சா ளரபாணி யொன்றுவேணாட் டடிகள்
நவின்றதொன்று புறநீர்மை திருவாலி யமுதர்
பந்தமறச் சொன்னான்கி னொன்றுநட்ட ராகம்
பகர்ந்திடினென் றிந்தளமற் றெவையும்பஞ் சமமே. (௩)

சில திருப்பதிகங்களிலே

சில திருப்பாசுரங்கள் இறந்து விட்டன.

சிவமயம்.

திருவிசைப்பா.

திருமாளிகைத்தேவர் திருவிசைப்பா.

க. கோயில்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துட் டித்திக்குந் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே. (க)

இடர்கெடுத் தென்னை யாண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கி னுள்ளொளி விளங்கும்
தூயநற் சோதியுட் சோதீ
அடல்விடைப் பாகா வம்பலக் கூத்தா
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே. (உ)

(க) ஒன்றே - ஒப்பற்றபொருளே; தெளி - தூய்மை; அளி - அன்பு; அரங்கு - சபை; விளம்புமாறு - புகழுமாறு. (உ) பிழம்பு -

தற்பரம் பொருளே சசிகண்ட சிகண்டா
சாமகண் டாவண்ட வாணா
நற்பெரும் பொருளா யுரைகலந் துன்னை
என்னுடை நாவினா னவில்வான்
அற்பனேன் றுன்னத் தனவிலா வுன்னைத்
தந்தபொன் னம்பலத் தாட
கற்பமா யுலகா யல்லையா னாயைத்
தொண்டனேன் கருதுமா கருதே. (௩)

பெருமையிற் சிறுமை பெண்ணொடா ணாயென்
பிறப்பிறப் பறுத்தபே ரொளியே
கருமையின் வெளியே கயற்கணா ளிமவான்
மகளுமை யவள்களை கண்ணே
அருமையின் மறைநான் கோலமிட் டாற்றும்
அப்பனே யம்பலத் தமுதே
ஒருமையிற் பலபுக் குருவினின் றாயைத்
தொண்டனே னுரைக்குமா றுரையே. (௪)

கோலமே மேலை வானவர் கோவே
குணங்குறி யிறந்ததோர் குணமே
காலமே கங்கை நாயகா வெங்கள்
காலகா லாகாம நாசா
ஆலமே யமுதுண் டம்பலஞ் செம்பொன்
கோயில்கொண் டாடவல் லானே
ஞாலமே தமியே னற்றவத் தாயைத்
தொண்டனே னணுகுமா நணுகே. (௫)

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே

திரட்சி; பணியே - நியமித்தருள்வாயாக. (௩) சசிகண்ட - சந்திரனைக் காத்தவீர; சிகண்டா - ஸ்ரீகண்டனே; சாமகண்டா - நீலகண்டத்தையுடையவனே; அண்டவாணா - சிதாகாசத்திலுறைபவனே; உரை - சொற்கள்; கற்பமாய் - ஊழிகாலமாய். (௪) வெளியே - ஒளியே; கனைகண்ணே - ஆதாரமே. (௫) நல்தவத்தாயை - நல்ல யோகியாகிய உன்னை. (௬) வேறணி - வெவ்வேறாகிய அழகு; போகமே-போகங்களைத் தங்களா யிருப்பவனே. (௭) தனதன்-குபேரன்;.

வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
அம்பொன்செ யம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே. (௬).

தனதனற் றோழா சங்கரா சூல
பாணியே தாணுவே சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே
கண்கண்மூன் றுடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக
அம்பலத் தமரசே கரனே
உனகழ லிணையென் னெஞ்சினு ளினிதாத்
தொண்டனே னுகருமா றுகரே. (௭).

திறம்பிய பிறவிச் சிலதெய்வ நெறிக்கே
திகைக்கின்றேன் றனைத்திகை யாமே
நிறம்பொன்னு மின்னு நிறைந்தசே வடிக்கீழ்
நிகழ்வித்த நிகரிலா மணியே
அறம்பல திறங்கண் டருந்தவர்க் கரசாய்
ஆலின்கீ ழிருந்தவம் பலவா
புறஞ்சமண் புத்தப் பொய்கள்கண் டாயைத்
தொண்டனேன் புணருமா புணரே. (௮).

தக்கனற் றலையு மெச்சன்வன் றலையும்
தாமரை நான்முகன் றலையும்
ஒக்கவிண் டுருள வொண்டிருப் புருவம்
நெறித்தரு ளியவுருத் திரனே
அக்கணி புலித்தோ லாடைமே லாட
ஆடப்பொன் னம்பலத் தாடும்

அனகனே - பரிசுத்தனே; சனக - பிதாவே; சேகரனே - சிகாமணியே; இனிதாஆ - இனிதாகவிருக்க. (௮) திறம்பிய - வரம்பு கடந்த; கண்டாயை - உண்டாக்கிய உன்னை. (௯) விண்டு உருள - அற்று உருளும்படி; சொக்கனே - அழகனே. (௰) மடங்கலாய் -

சொக்கனே யெவர்க்குந் தொடர்வரி யாயைத்
தொண்டனேன் றொடருமா தொடரே. (௯)

படங்கலாய்க் கனகன் மார்புகீண் டானுக்
கருள்புரி வள்ளலே மருளார்
இடங்கொண்முப் புரம்வெந் தவியவை திகத்தேர்
ஏறிய வேறுசே வகனே
அடங்கவல் லரக்க னருட்டிரு வரைக்கீழ்
அடர்த்தபொன் னம்பலத் தரசே
விடங்கொள்கண் டத்தெம் விடங்கனே புன்னைத்
தொண்டனேன் விரும்புமா விரும்பே. (௰)

மறைகளு மமரர் கூட்டமு மாட்டா
தயன்றிரு மாலொடு மயங்கி
முறைமுறை முறையிட் டோர்வரி யாயை
மூர்க்கனேன் மொழிந்தபுன் மொழிகள்
அறைகழ லரன்சீ ரறிவிலா வெறுமைச்
சிறுமையிற் பொறுக்குமம் பலத்துள்
நிறைதரு கருணா நிலயமே புன்னைத்
தொண்டனே னினையுமா நினைவே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

காசினிக்களை; கனகன் - இரணியன்; அடங்க - ஒடுங்கும்படி; விடங்கனே - அழகனே. (௧௧) மாட்டாது - அறியமாட்டாமல்; ஓர்வு அரியாயை - அறிதற்கரியவனை; வெறுமை - பயனின்மை.

உ. கோயில் - உயர்கொடியாடை.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்

உயர்கொடி யாடை மிடைபட லத்தின்
    ஓமதா மப்பட லத்தின்
பெயர்நெடு மாடத் தகிற்புகைப் படலம்
    பெருகிய பெரும்பற்றப் புலியூர்ச்
சியரொளி மணிக ணிரந்துசேர் கனகம்
    நிறைந்தசிற் றம்பலக் கூத்தா
மயர்வறு மமரர் மகுடந்தோய் மலர்ச்சே
    வடிகளென் மனத்துவைத் தருளே. (௧)

கருவளர் மேகந் தகடுதோய் மகுடக்
    கனகமா ளிகைகலந் தெங்கும்
பெருவளர் முத்தீ நான்மறைத் தொழில்சால்
    எழின்மிகு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் தெய்வப் பதிவதி நிதியம்
    திரண்டசிற் றம்பலக் கூத்தா
உருவள ரின்பச் சிலம்பொலி யலம்பும்
    உன்னடிக் கீழதென் னுயிரே. (௨)

வரம்பிரி வாளை மிளிர்மடுக் கமலம்
    கரும்பொடு மாந்துமே திகள்சேர்
பரம்பிரி செந்நெற் கழனிச்செங் கழுநீர்ப்
    பழனஞ்சூழ் பெரும்பற்றப் புலியூர்ச்

---

(௧) ஆடை - சீலைகள்; மிடைபடலம் - நெருங்கினகூட்டம்; ஓமதாமம் - ஓமப்புகை; சியர் - சிறந்த; நிரந்துசேர் - வரிசையாய்ச் சேர்ந்த; மயர்வுஅறும் - மயக்கமற்ற. (௨) அகடு - வயிறு, நடு; சால் - மிகுந்த; வதி - பொருந்திய; உருவளர் - அழகு மிகுந்த. (௩) இரி வாளை - துள்ளிவிழுகின்ற வாளைமீன்கள்; மிளிர் - மிகுதியாயுள்ள; மாந்தும் - மேய்கின்ற; மேதிகள் - எருமைகள்; பரம்புஇரி - பரம்பு அடித்த; பழனம் - வயல்கள்; முடிபுணர் - முடிதரித்த; நிரந்தரம் -

சிரம்புணர் முடிவா னவரடி முறையால்
இறைஞ்சசிற் றம்பலக் கூத்தா
நிரந்தர முனிவர் நினைதிருக் கணைக்கால்
நினைந்துநின் றொழிந்ததென் னெஞ்சே. (௩)

தேர்மலி விழவிற் குழலொலி தெருவில்
கூத்தொலி யேத்தொலி யோத்தின்
பேரொலி பரந்து கடலொலி மலியப்
பொலிதரு பெரும்பற்றப் புலியூர்ச்
சீர்நில விலயத் திருநடத் தியல்பின்
திகழ்ந்தசிற் றம்பலக் கூத்தா
வார்மலி முலையாள் வருடிய திரண்மா
மணிக்குறங் கடைந்ததென் மதியே. (௪)

நிறைதழை வாழை நிழற்கொடி நெடுந்தெங்
கிளங்கமு குளங்கொணீள் பலமாப்
பிறைதவழ் பொழில்சூழ் கிடங்கிடைப் பதணம்
முதுமதிற் பெரும்பற்றப் புலியூர்ச்
சிறைகொணீர்த் தரளத் திரள்கொணித் திலத்த
செம்பொற்சிற் றம்பலக் கூத்த
பொறையணி நிதம்பப் புலியத ளாடைக்
கச்சுநூல் புகுந்ததென் புகலே. (௫)

அதுமதி யிதுவென் றலந்தலை நூல்கற்
றழைப்பொழிந் தருமறை யறிந்து
பிதுமதி வழிநின் றொழிவிலா வேள்விப்
பெரியவர் பெரும்பற்றப் புலியூர்ச்

எப்பொழுதும். (௪) ஓத்து - வேதம்; குறங்கு - தொடை; மதி - அறிவு; நிழல் - ஒளி. (௫) பலம் - பழங்கள்; மாபிறை - அழகிய சந்திரன்; கிடங்கு - அகழி; பதணம் - உள்மேடை; சிறை - காவல்; தரளத்திரள்கொள் - அசைவைக்கொண்ட திரட்சியையுடைய; நித்திலம் - முத்து; பொறைஅணி - பாரத்தையுடைய; நிதம்பம் - அரை; புலிஅதள் - புலித்தோல். (௬) மதி - அறிவு; பிதுமதிவழி - பிதாவாகிய மநு நூலின்வழி; (மக்கள் மநுவின்வழி வந்தவர்களாதலின் அவர்களுக்கு மநுடர், மாநுடர், மனிதர், மாநவர் முதலிய

செதுமதிச் சமணுந் தேரருஞ் சேராச்
செல்வச்சிற் றம்பலக் கூத்த
மதுமதி வெள்ளத் திருவயிற் றுந்தி
வளைப்புண்டென் னுண்மகிழ்ந் ததுவே. (௬)

பொருவரைப் புயத்தின் மீமிசைப் புலித்தோல்
பொடியணி பூணநூ லகலம்
பெருவரை புரைதிண் டோளுடன் காணப்
பெற்றவர் பெரும்பற்றப் புலியூர்த்
திருமரு வுதரத் தார்திசை மிடைப்ப
நடஞ்செய்சிற் றம்பலக் கூத்த
உருமரு வுதரத் தனிவடந் தொடர்ந்து
கிடந்ததென் னுணர்வுணர்ந் துணர்ந்தே. (௭)

கனியெரி விசிறு கரந்துடி விடவாய்க்
கங்கணஞ் செங்கைமற் றபயம்
பிணிகெட விவைகண் டரன்பெரு நடத்தில்
பிரிவிலார் பெரும்பற்றப் புலியூர்த்
திணிமணி நீல கண்டத்தென் னமுதே
சீர்கொள்சிற் றம்பலக் கூத்த
அணிமணி முறுவற் பவளவாய்ச்செய்ய
சோதியு ளடங்கிற் றென் னறிவே. (அ)

திருநெடு மாலிந் திரனயன் வானோர்
திருக்கடைக் காவலி னெருக்கிப்
பெருமுடி மோதி யுகுமணி முன்றில்
பிறங்கிய பெரும்பற்றப் புலியூர்ச்

பெயர்களுண்டு); செதுமதி - தாழ்ந்தஅறிவு; மதுமதிவெள்ளம் - தேன்போலும் இனிய அறிவின்பெருக்கம். (எ) அகலம் - மார்பு; உதரத்தார் - உதரமாலை; மிடைப்ப - தடுக்க; உருமருவு - அழகு பொருந்திய; உதரவடம் - உதரபந்தனம், அரைப்பட்டிகை. (அ) கனிஎரிவிசிறு - மழுவானது அக்கினியை வீசுகிற; துடி-உடுக்கை; திணிமணி - செறிந்தநீலமணி; அணிமணி-அழகியமுத்து; முறுவல் - பல். (௯) திருக்கடைக்காவல் - கோயிலின் வாயிற்படி; பிறங்கிய - விளங்கிய; கருவடி - பிறவிக்கடல்வற்ற; குழை - குண்டலம்.

செருநெடு மேரு வில்லின்முப் புரந்தீ
விரித்தசிற் றம்பலக் கூத்த
கருவடி குழைக்கா தமலச்செங் கமல
மலர்முகங் கலந்ததென் கருத்தே. (௯)

ஏர்கொள்கற் பகமொத் திருசிலைப் புருவம்
பெருந்தடங் கண்கண்மூன் றுடையோன்
பேர்களா யிரநூ றாயிரம் பிதற்றும்
பெற்றியோர் பெரும்பற்றப் புலியூர்ச்
சீர்கொள்கொக் கிறகுங் கொன்றையுந் துன்று
சென்னிச்சிற் றம்பலக் கூத்த
நீர்கொள்செஞ் சடைவாழ் மதிபுது மத்தம்
நிகழ்ந்தவென் சிந்தையு ணிறைந்தே. (௰)

காமனைக் காலன் றக்கன்மிக் கெச்சன்
படக்கடைக் கணித்தவ னல்லாப்
பேய்மனம் பிறிந்த தவப்பெருந் தொண்டர்
தொண்டனேன் பெரும்பற்றப் புலியூர்ச்
சேமநற் றில்லை வட்டங்கொண் டாண்ட
செல்வச்சிற் றம்பலக் கூத்த
பூமல ரடிக்கீழ்ப் புராணபூ தங்கள்
பொறுப்பரோன் புன்சொலின் பொருளே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

(௰) நீர்-கங்கை; மதி-பிறை; மத்தம்-ஊமத்தமலர். (௧௧) பட - மடிய; கடைக்கணித்தவன் - கடைக்கண்ணாற் பார்த்தவன்; சேமம் - காவல்; பூ - பொலிவாகிய, அழகிய.

௩ - கோயில் - உறவாகியயோகம்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

உறவா கியயோகமும் போக முமாய்
உயிராளி யென்னுமென் பொன்னொ ருநாள்
சிறவா தவர்புரஞ் செற்ற கொற்றச்
சிலைகொண்டு பன்றிப்பின் சென்று நின்ற
மறவா வென்னும்மணி நீர ருவி
மகேந்திர மாமலை மேலு றையும்
குறவா வென்னுங்குணக் குன்றே யென்னும்
குலாத்தில்லை யம்பலக் கூத்த னையே. (க)

காடாடு பல்கணஞ் சூழக் கேழல்
கடும்பின் னெடும்பகற் கான டந்த
வேடாம கேந்திர வெற்பா வென்னும்
வினையேன் மடந்தை விம்மா வெருவும்
சேடாவென் னுஞ்செல்வர் மூவா யிரம்
செழுஞ்சோ தியந்தணர் செங்கை தொழும்
கோடாவென் னுங்குணக் குன்றே யென்னும்
குலாத்தில்லை யம்பலக் கூத்த னையே. (உ)

கானே வருமுர ணேன மெய்த
களியார் புளினநற் காளா யென்னும்
வானே தடவு நெடுங்கு டுமி
மகேந்திர மாமலை மேலி ருந்த

(க) உயிர்ஆளி - உயிர்களை ஆள்பவனே; பொன் - பொன் போன்ற மகள்; சிறவாதவர் - கீழ்மக்கள்; கொற்றம்சிலை - வெற்றி வில்; மறவா - வேடனே. (உ) கேழல் - பன்றி; விம்மாவெருவும் - விம்மி அஞ்சுகிறாள்; சேடா - பெருமையுடையோனே, எல்லாம் அழிந்தகாலத்தும் அழியாது எஞ்சிநிற்பவனே; கோடா - முடிந்த பொருளே. (௩) களி-செருக்கு; புளினக்காளாய் - வேடக்காளையே; குடுமி - சிகரம்; திருவாளர் - சிற்பரச்செல்வர். (௪) வெறிஎறு -

தேனே யென்னுந் தெய்வவாய் மொழியார்
திருவாளர் மூவா யிரவர் தெய்வக்
கோனே யென்னுங்குணக் குன்றே யென்னும்
குலாத்தில்லை யம்பலக் கூத்த னையே. (௩)

வெறியேறு பன்றிப்பின் சென்றொ ருநாள்
விசயற் கருள்செய்த வேந்தே யென்னும்
மறியேறு சாரன் மகேந் திரமா
மலைமே லிருந்த மருந்தே யென்னும்
நெறியேயென் னுநெறி நின்ற வர்கள்
நினைக்கின்ற நீதி வேதாந் தநிலைக்
குறியேயென் னுங்குணக் குன்றே யென்னும்
குலாத்தில்லை யம்பலக் கூத்த னையே. (௪)

செழுந்தென்ற லன்றிலித் திங்கள் கங்குல்
திரைவீரை தீங்குழல் சேவின் மணி
எழுந்தின்றென் மேற்பகை யாட வாடும்
எனைநீ நலிவ தென்னே யென்னும்
அழுந்தா மகேந்திரத் தந்த ரப்புட்
கரசுக் கரசே யமரர் தனிக்
கொழுந்தே யென்னுங்குணக் குன்றே யென்னும்
குலாத்தில்லை யம்பலக் கூத்த னையே. (௫)

வண்டார் குழலுமை நங்கை முன்னே
மகேந்திரச் சாரல் வராகத் தின்பின்
கண்டார் கவலவில் லாடி வேடர்
கடிநா யுடன்கை வளைந்தா யென்னும்
பண்டாய மலரயன் றக்க னெச்சன்
பகலோன் றலைபற் பசுங்கண்
கொண்டா யென்னுங்குணக் குன்றே யென்னும்
குலாத்தில்லை யம்பலக் கூத்த னையே. (௬)

கோபம்மிகுந்த; மறிஎறு - மான்கள் மிகுந்த; குறியே - லக்ஷியமே. (௫) அன்றில் - கிரவுஞ்சபக்ஷி; கங்குல் - இரவு; வீரை - கடல்; தீங்குழல் - இனிமையான குழலோசை. (௬) கவல - கவலைப்படும்படி;.

கடுப்பாய்ப் பறைகறங்கக் கடுவெஞ் சிலையும்
கருவலையுங் கவணுங் கைக்கொண்
டுடுப்பாய் தோல்செருப் புச்சு ரிகை
வராகமுன் னோடி விளியு ளைப்ப
நடப்பாய் மகேந்திர நாதநா தாந்தத்
தரையா வென்பார்க்கு நாதாந் தபதங்
கொடுப்பா யென்னுங்குணக் குன்றே யென்னும்
குலாத்தில்லை யம்பலக் கூத்த னையே. (௭)

சேவேந்து வெல்கொடி யானே யென்னும்
சிவனேயென் சேமத் துணையே யென்னும்
மாவேந்து சாரன் மகேந்தி ரத்தில்
வளர்நாய காவிங்கே வாரா யென்னும்
பூவேந்தி மூவா யிரவர் தொழப்
புகழேந்து மன்று பொலிய நின்ற
கோவேயென் னுங்குணக் குன்றே யென்னும்
குலாத்தில்லை யம்பலக் கூத்த னையே. (௮)

தரவார் புனஞ்சு னைதா ழருவித்
தடங்கல் லுறையு மடங்க லமர்
மரவார் பொழிலெழில் வேங்கை யெங்கும்
மழைசூழ் மகேந்திர மாம லைமேல்
சுரவா வென்னுஞ் சுடர்நீண்முடி மாலயன்
இந்தி ரன்முதற் றேவர்க் கெல்லாம்
குரவா வென்னுங்குணக் குன்றே யென்னும்
குலாத்தில்லை யம்பலக் கூத்த னையே. (௯)

வில்ஆடி-வில்லையேந்தி; கைவளைந்தாய்-கைவளைத்தவனே; கொண்டாய் - வாங்கினவனே. (௭) கடுப்பாய் - கடுமையாய்; கவண் - கல்லெறிகயிறு; உடுப்பாய் - தரித்தவனாய்; சுரிகை - சிறுகத்தி; விளி உளைப்ப - கூக்குரல்முழங்க; அரையா - அரசனே. (௮) சே - இடபம்; மா - பெருமை; மன்று - அம்பலம். (௯) தரவு - பயன்றருதல்; தாழ்அருவி - இழிந்துவருகின்றஅருவி; கல் - கற்பாறை; மடங்கல் - சிங்கம்; மழை - மேகம்; சுரவா - தேவனே; குரவா - ஆசிரியனே.

திருநீ றிடாவுருத் தீண்டே னென்னும்
திருநீறு மெய்த்திரு முண்டத் திட்டுப்
பெருநீ லகண்டன் றிறங்கொண் டிவள்
பிதற்றிப் பெருந்தெ ருவே திரியும்
வருநீ ரருவி மகேந்தி ரப்பொன்
மலையின் மலைமக ளுக்க ருளும்
குருநீ யென்னுங்குணக் குன்றே யென்னும்
குலாத்தில்லை யம்பலக் கூத்த னையே. (ய)

உற்றாயென் னுமுன்னை யன்றி மற்றொன்
றுணரே னென்னு முணர்வுகள் கலக்கப்
பெற்றாய வைந்தெ ழுத்தும் பிதற்றிப்
பிறைதிர வெண்ணீ றிடப்பெற்றே னென்னும்
சுற்றாய சோதி மகேந்தி ரஞ்சூழ
மனத்திருள் வாங்கிச் சூழாத நெஞ்சிற்
குற்றாயென் னுங்குணக் குன்றே யென்னும்
குலாத்தில்லை யம்பலக் கூத்த னையே. (கக)

வேறா கவுள்ளத் துவகை விளைத்
தவனிச் சிவலோக வேத வென்றி
மாறா தமூவா யிரவரையு மெனையும்
மகிழ்ந் தாள வல்லா யென்னும்
ஆறார் சிகர மகேந்தி ரத்தன்
அடியார் பிழைபொ றுப்பாய் மாதோர்
கூறா யென்னுங்குணக் குன்றே யென்னும்
குலாத்தில்லை யம்பலக் கூத்த னையே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

(ய) முண்டம் - நெற்றி; பொன் - அழகிய. (கக) பிதற்றி - இடையறாது ஜபித்து; உற்றாய் - பொருந்தினவனே. (கஉ) அவனி - பூமி; வென்றி - வெற்றி, மேம்பாடு; ஆறுஆர் - அருவியாறுகள் நிறைந்த.

ச - கோயில் - இணங்கிலாவீசன்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

இணங்கிலா வீச னேசத் திருந்தசித் தத்தி னேற்கு
மணங்கொள்சீர்த் தில்லை வாணன் மணவடி யார்கள் வண்மைக்
குணங்களைக் கூறா வீறிற் கோறைவாய்ப் பீறற் பிண்டப்
பிணங்களைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. (க)

எட்டுரு விரவி யென்னை யாண்டவ னீண்டு சோதி
விட்டிலங் கலங்கற் றில்லை வேந்தனைச் சேர்ந்தி லாத
துட்டரைத் தூர்த்த வார்த்தைத் தொழும்பரைப் பிழம்பு பேசும்
பிட்டரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. (உ)

அருட்டிரட் செம்பொற் சோதி யம்பலத் தாடு கின்ற
இருட்டிரட் கண்டத் தெம்மா னின்பருக் கன்பு செய்யா
அரட்டரை யரட்டுப் பேசு மழுக்கரைக் கழுக்க ளாய
பிரட்டரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. (ங)

துணுக்கென வயனு மாலுந் தொடர்வருஞ் சுடரா யிப்பால்
அணுக்கருக் கணிய செம்பொ னம்பலத் தாடிக் கல்லாச்
சிணுக்கரைச் செத்தற் கொத்தைச் சிதம்பரைச் சீத்தை யூத்தைப்
பிணுக்கரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. (ச)

திசைக்குமிக் குலவு சீர்த்தித் தில்லைக்கூத் துகந்து தீய
நசிக்கவெண் ணீற தாடு நமர்களை நணுகா நாய்கள்

(க) இணங்கு - ஒப்பு; வண்மைக்குணம் - உதாரகுணம்; வீறு இல் - மேன்மையில்லாத; பீறல் பிண்டம் - தொளைகளையுடைய உடம்பு. (உ) எட்டு உரு - அஷ்ட மூர்த்தம்; ஈண்டு - மிகுந்த; விட்டு - வீசி; பிழம்பு - இடம்பம்; பிட்டர் - பிரஷ்டர். (ங) இருள் திரள் - இருள்திரண்ட; அரட்டர் - காட்டில் வசிக்கின்றவர்கள்; அரட்டுப்பேசும் - அச்சமுண்டாகும்படி பேசும்; பிரட்டர் - பிரஷ்டர். (ச) அணுக்கருக்கு - அணுகினவருக்கு; சிணுக்கர், சிதம்பர், பிணுக்கர் ஆகிய இவர்கள் கீழ்மக்கள் (நீசர்). (ரு) அசிக்க - வெறுக்கத்தக்க; ஆரியங்கள் ஓதும் - பெருமைகள் பேசும்; ஆதரை - அறி

அசிக்கவா ரியங்க ளோது மாதரைப் பேத வாதப்
பிசக்கரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. (௫)

ஆடர வாட வாடு மம்பலத் தமிர்தே யென்னும்
சேடர்சே வடிகள் சூடத் திருவிலா வுருவி னோரைச்
சாடரைச் சாட்கை மோடச் சழக்கரைப் பிழுக்கப் பிட்கப்
பேடரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. (௬)

உருக்கியென் னுள்ளத் துள்ளே யூறலந் தேறன் மாறாத்
திருக்குறிப் பருளுந் தில்லைச் செல்வன்பாற் செல்லுஞ் செல்வில்
அருக்கரை யள்ளல் வாய கள்ளரை யவியாப் பாவப்
பெருக்கரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. (௭)

செக்கரொத் திரவி நூறா யிரத்திர ளொப்பாந் தில்லைச்
சொக்கரம் பலவ ரென்னுஞ் சுருதியைக் கருத மாட்டா
எக்கரைக் குண்ட மிண்ட வெத்தரைப் புத்த ராதிப்
பொக்கரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. (௮)

எச்சனைத் தலையைக் கொண்டு செண்டடித் திடப மேறி
அச்சங்கொண் டமர ரோட நின்றவம் பலவற் கல்லாக்
கச்சரைக் கல்லாப் பொல்லாக் கயவரைப் பசுநூல் கற்கும்
பிச்சரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. (௯)

விண்ணவர் மகுட கோடி மிடைந்தொளிர் மணிகள் வீசும்
அண்ணலம் பலவன் கொற்ற வரசனுக் காசை யில்லாத்
தெண்ணரைத் தெருளா வுள்ளத் திருளரைத் திட்டைமுட்டைப்
பெண்ணரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. (௰)

விலிசனை; பிசக்கரை - பொய்யர்களை. (௬) சேடர் - அடியார்; திருவில்லா - பாக்கியமில்லாத; சாடர், சழக்கர், பேடர் ஆகிய இவர்கள் கொடுமை செய்கிறவர்கள். (௭) தேறல் - தேன்; அருக்கரை - குறுகிய மனத்தையுடையவரை; பெருக்கரை - மிகுதியுடையவரை. (௮) செக்கர் - செவ்வானம், அந்திவானம்; எக்கரை - இறுமாப்புடையவரை; எத்தரை - ஏய்க்கிறவரை; பொக்கரை - பொய்யுடையவரை. (௯) கச்சரை - துணிவுடையவரை; கயவரை-கீழ்மக்களை; பசுநூல் - பசுக்களைப் பதியென்று கூறும் நூல்; பிச்சரை- பித்தரை. (௰) தெண்ணரை - தெளிவில்லாதவரை; திட்டைமுட்டைப்பெண்ணரை - வம்புகள் பேசும் பெண்தன்மையுடைய

சிறப்புடை யடியார் தில்லைச் செம்பொனம் பலவற் காளாம்
உறைப்புடை யடியார் கீழ்க்கீ ழுறைப்பர்சே வடிநீ றுடார்
இறப்பொடு பிறப்பி னுக்கே யினியராய் மீண்டு மீண்டும்
பிறப்பரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சேந்தனர் திருவிசைப்பா.

க-திருவீழிமிழலை.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஏகநா யகனை யிமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை யெதிரில்
போக நாயகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோக நாயகனை யன்றிமற் றொன்றும்
உண்டென வுணர்கிலேன் யானே. (க)

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்

உரை. (கக) உறைப்பு - மனவுறுதி; சேஅடிநீறு - சிறந்ததிருவருள் நீறு. (க) போக நாயகன் - ஆன்மாக்களுக்கும் போகங்களை யூட்டுவதில் முதன்மையானவன்; மேகநாயகன் - மேகம்போலும் கைம்மாறு கருதாது அருளைப் பொழிகின்ற நாயகன்; யோகநாயகன் - யோகங்களுக்குத் தலைவன் (பிரதமாசாரியன்). (உ) கற்றவர் - திரிபதார்த்த லக்ஷணங்களை உள்ள உள்ளவாறு உணர்ந்த உண்மையறி

செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே. (உ)

மண்டலத் தொளியை விலக்கியா னுகர்ந்த
மருந்தையென் மாறிலா மணியைப்
பண்டல ரயன்மாற் கரிதுமா யடியார்க்
கெளியதோர் பவளமால் வரையை
விண்டலர் மலர்வாய் வேரிவார் பொழில்சூழ்
திருவீழி மிழலையூ ராளும்
கொண்டலங் கண்டத் தெங்குரு மணியைக்
குறுகவல் வினைகுறு காவே. (ங)

தன்னடி நிழற்கீ ழென்னையுந் தகைத்த
சசிகுலா மவுலியைத் தானே
என்னிடைக் கமல மூன்றினுட் டோன்றி
எழுஞ்செழுஞ் சுடரினை யருள்சேர்
மின்னெடுங் கடலுள் வெள்ளத்தை வீழி
மிழலையுள் விளங்கு வெண்பளிங்கின்
பொன்னடிக் கடிமை புக்கினிப்போக
விடுவனோ பூண்டுகொண் டேனே. (ச)

இத்தெய்வ நெறிநன் றென்றிருண் மாயப்
பிறப்பறா விந்திர சாலப்
பொய்த்தெய்வ நெறிநான் புகாவகை புரிந்த
புராணசிந் தாமணி வைத்த
மெய்த்தெய்வ நெறிநான் மறையவர் வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்

வுடையோர்; மற்றவர் - கற்றவரல்லாதவர். (ங) மண்டலத்து ஒளியை - பிரபஞ்ச வாசனையை; மாறு இல்லா - ஒப்பில்லா; மால் - பெரிய; விண்டு - வெடித்து; வேரி - தேன்; கொண்டல் - மேகம். (ச) தகைத்த - தடுத்தாட்கொண்ட; சசிகுலாம்மவுலி - சந்திரன் விளங்குகிற திருமுடி, சந்திரசேகரன்; கமலம் மூன்று - இருதயம் நேத்திரம், துவாதசாந்தம் ஆகிய மூன்று கமலங்கள். (ரு) புராணம் -

அத்தெய்வ நெறியிற் சிவமலா தவமும்
அறிவரோ வறிவுடை யோரே. (௫)

அக்கனா வனைய செல்வமே சிந்தித்
தையவரோ டழுந்தி யானவமே
புக்கிடா வண்ணங் காத்தெனை யாண்ட
புனிதனை வனிதைபா கனையெண்
திக்கெலாங் குலவும் புகழ்த்திரு வீழி
மிழலையான் றிருவடி நிழற்கீழ்ப்
புக்குநிற் பவர்தம் பொன்னடிக் கமலப்
பொடியணிந் தடிமைபூண் டேனே. (௬)

கங்கைநீ ரரிசிற் கரையிரு மருங்கும்
கமழ்பொழி றழுவிய கழனித்
திங்கணேர் தீண்ட நீண்டமா ளிகைசூழ்
மாடநீ டுயர்திரு வீழித்
தங்குசீர்ச் செல்வத் தெய்வத்தான் றோன்றி
நம்பியைத் தன்பெருஞ் சோதி
மங்கையோர் பாகத் தென்னரு மருந்தை
வருந்திநான் மறப்பனோ வினியே. (எ)

ஆயிரங் கமல ஞாயிறா யிரமுக்
கண்முக கரசர ணத்தோன்
பாயிருங் கங்கை பனிநிலாக் கரந்த
படர்சடை மின்னுபொன் முடியோன்
வேயிருந் தோளி யுமைமண வாளன்
விரும்பிய மிழலைசூழ் பொழிலைப்
போயிருந் தேயும் போற்றுவார் கழல்கள்
போற்றுவார் புரந்தரா திகளே. (அ)

பழைமை; அவமும் - அவமாய தேவரையும். (௬) அ கனா அனைய - அந்தச் சொப்பனத்தை நிகர்த்த; ஐவர் – ஐம்பொறிகள்; வனிதை – பெண், உமாதேவி; பொடி – துகள். (எ) அரிசில்கரை - அரிசில் என்னும் நதியின் கரை; தான் தோன்றி நம்பியை-தானேயுண்டான சுயம்புமூர்த்தியை. (௯) அரக்கன் – இராவணன்; கரி–கயமுகாசுரன்;.

எண்ணில்பல் கோடி சேவடி முடிகள்
எண்ணில்பல் கோடிதிண் டோள்கள்
எண்ணில்பல் கோடி திருவுரு நாமம்
ஏர்கொண்முக் கண்முக மியல்பும்
எண்ணில்பல் கோடி யெல்லைக்கப் பாலாய்
நின்றைஞ்ஞூற் றந்தண ரேத்தும்
எண்ணில்பல் கோடி குணத்தரோர் வீழி
இவர்நம்மை யாளுடை யாரே. (௯)

தக்கன்வெங் கதிரோன் சலந்தரன் பிரமன்
சந்திர னிந்திர னெச்சன்
மிக்கநெஞ் சரக்கன் புரங்கரி கருடன்
மறலிவே ளிவர் மிகை செகுத்தோன்
திக்கெலா நிறைந்த புகழ்த்திரு வீழி
மிழலையான் திருவடி நிழற்கீழ்ப்
புக்கிருந் தவர்தம் பொன்னடிக் கமலப்
பொடியணிந் தடிமைபூண் டேனே. (௰)

உளங்கொள மதுரக் கதிர்விரித் துயிர்மேல்
அருள்சொரி தருமுமா பதியை
வளங்கிளர் நதியு மதியமுஞ் சூடி
மழவிடை மேல்வரு வானை
விளங்கொளி வீழி மிழலைவேந் தேயென்
றுந்தனைச் சேந்தன்று தையையான்
களங்கொள வழைத்தாற் பிழைக்குமோ வடியேன்
கைக்கொண்ட கனகக்கற் பகமே. (௧௧)

பாடலங் காரப் பரிசில்கா சருளிப்
பழுத்தசெந் தமிழ்மலர் சூடி
நீடலங் காரத் தெம்பெரு மக்கள்
நெஞ்சினு ணிறைந்துநின் றானை

மறலி - எமன்; வேள் - மன்மதன்; மிகை - வரம்பு கடந்த நடக்கை; செகுத்தோன்-அழித்தவன். (௧௧) சேந்தன் - முருகன்; ஆந்தனை - ஆமளவும்; களங்கொள் - வாய்நிறைய; பிழைக்குமோ - தவறுமோ.

வேடலங் காரக் கோலத்தி னமுதைத்
திருவிழி மிழலையூ ராளும்
கேடிலங் கீர்த்திக் கனககற் பகத்தைக்
கெழுமுதற் கெவ்விடத் தேனே. (௧௨)

திருச்சிற்லம்பலம்;

உ - திருவாவடுதுறை.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பொய்யாத வேதியர் சாந்தைமெய்ப் புகழா ளராயிரம் பூசுரர்
மெய்யே திருப்பணி செய்சீர் மிகுகா விரிக்கரை மேய
ஐயா திருவா வடுதுறை யமுதே யென்றுன்னை யழைத்தக்கால்
மையார் தடங்கண்மடந்தைக்கொன்றருளாதொழிவது மாதிமையே.

மாதி மணங்கம ழும்பொழின் மணிமாட மாளிகை வீதிசூழ்
சோதி மதிலணி சாந்தைமெய்ச் சுருதி விதிவழி யோர்தொழும்
ஆதி யமரர்பு ராணனா மணியா வடுதுறை நம்பிநின்ற
நீதி யறிகிலள் பொன்னெடுந் திண்டோள்'புணரநி னைக்குமே. (உ)

நினைக்கு நிரந்தர னேயென்னு நிலாக்கோலச் செஞ்சடைக்கங்கைநீர்
நனைக்கு நலங்கிளர் கொன்றைமே னயம்பேசு நன்னுத னங்கைமீர்
மனக்கின்ப வெள்ள மலைமகண் மணவாள நம்பிவண் சாந்தையூர்
தனக்கின்ப னாவடு தண்டுறைத் தருணேந்து சேகர னென்னுமே.

---

(௧௨) காசு-பொற்காசு; பெருமக்கள்-பெரியோர் (திருத்தொண்டர்); வேடு - வேடுவன்; கெழுமுதற்கு - அடைவதற்கு.

(௧) சாந்தை - சாந்தையூர்; பூசுரர் - வேதியர்; மடந்தைக்கு - என் மகளுக்கு; ஒன்று - ஒரு வார்த்தை; மாதிமையே - அழகோ. (உ) மாதி - அழகு; சுருதி விதிவழியோர் - வேதம் விதித்த நெறியில் நிற்போர், வேதியர்; அமரர் புராணன் - தேவர்களுக்கு முன்னோன் (பழையோன்). (௩) நினைக்கும் - நினைப்பாள்; நிரந்தரனே - என்றுமுள்ளவனே; நிலாக்கோலம் - சந்திரிகையின் அழகு; நலம் - அழகு; நயம் - விருப்பம்; தருணஇந்துசேகரன் - இளஞ்சந்திரனைத்.

தருணேந்துசேகரனேயெனுந்தடம்பொன்னித்தென்கரைச்சாந்தை யூர்ப், பொருணேர்ந்தசிந்தையவர்தொழப்புகழ்செல்வமல்குபொற் கோயிலுள், அருணேர்ந்தமர்திருவாவடுதுறையாண்டவாண்டகை யம்மானே, தெருணேர்ந்தசித்தம்வலியவாதிலகநுதலிதிறத்திலே.

திலக நுதலுமை நங்கைக்குந் திருவா வடுதுறை நம்பிக்கும், குலக வடியவர்க் கென்னையாட் கொடுத்தாண்டுகொண்டகுணக்கடல், அல தொன்றறிகின்றிலேமெனுமணியும் வெண்ணீறஞ்செழுத்தால், வல தொன்றிலனிதற்கென்செய்கேன்வயலந்தண் சாந்தையர்வேந்தனே.

வேந்தன் வளைத்தது மேருவில் லரவுநாண்வெங்கணைசெங்கண்மால் போந்த மதிலணி முப்புரம் பொடியாட வேதப் புரவித்தேர் சாந்தை முதலயன் சாரதி கதியருளென்னுமித் தையலை ஆந்தண் டிருவா வடுதுறை யான்செய்கை யாரறிகிற்பாரே. (௬)

கிற்போ மெனத்தக்கன் வேள்விபுக்கெடுத்தோடிக்கெட்டவத்தேவர் கள், சொற்போலுமெய்ப்பயன்பாவிகாளென்சொல்லிச் சொல்லுமித் துமொழி, கற்போன்மனங்கனிவித்தவெங்கருணலயாவந்திடாயெ ன்றால், பெற்போபெருந்திருவாவடுதுறையாளி பேசாதொழிவதே.

ஒழிவொன் றிலாவுண்மை வண்ணமு முலப்பில ளூறின்ப வெள்ள மும், மொழிவொன் றிலாப்பொன்னித் தீர்த்தமு முனிகோடி கோ டியா மூர்த்தியும், அழிவொன் றிலாச்செல்வச் சாந்தையூரணியாவடு துறையாடிஞன், இழிவொன் றிலாவகை யெய்திநின் றிறுமாக்கு மென்னினை மானனே. (அ)

தரித்த திருமுடியை யுடையவன். (௫) பொன்னி - காவிரிநதி; பொருள்நேர்ந்த - மெய்ப்பொருள் சேர்ந்த; அருள்நேர்ந்து - அரு ளொடுகூடி; வலியவா-வலிதாயிருந்தவிதம்யாது; நுதலி திறத்திலே- நெற்றியையுடையவளாகிய என் பெண் விஷயத்திலே. (௫) குலக அடியவர் - கூட்டமாகிய தொண்டர்; ஒன்று - வேறொன்று; வல் லது - செய்யவல்லது. (௬) கணை - அம்பு; போந்த - உண்டாகிய. (எ) கிற்போம் - வல்லோம்; எடுத்து ஓடிகெட்ட - ஓட்டெடுத்து அழிந்த; சொல் - புகழ்; மெய்ப்பயன் - உடலின்பயன்; கருணலயா- கருணைக்கு இருப்பிடமாயுள்ளவனே; பெற்போ - அழகோ. (அ) உலப்பிலன் - கேடுதலில்லாதவன்; முனி மூர்த்தியும் - முனியுருவங்

மானேர் கலைவளை யுங்கவர்ந் துளங்கொள்ளை கொள்ளவழக்குண்டே
தேனே யமுதேயென் சித்தமே சிவலோக நாயகச் செல்வமே
யானே யலம்புபு னற்பொன்னி யணியா வடுதுறை யன்பர்தங்
கோனேநின் மெய்யடி யார்மனக் கருத்தை முடித்திடுங் குன்றமே.

குன்றேந்தி கோகன கத்தய னறியா நெறியென்னைக் கூட்டினாய்
என்றேங்கி யேங்கிய ழைக்கின்றா ளிளவல்லி யெல்லைக டந்தனள்
அன்றேய லம்புபு னற்பொன்னி யணியா வடுதுறை யாடினாள்
நன்றே யிவணம் பரமல்ல ணவலோக நாயகன் பாலளே. (௰)

பாலு மமுதமுந் தேனுமா யானந்தந் தந்துள்ளே பாலிப்பான்
போலுமெ னாருயிர்ப் போகமாம் புரகால காமபு ராந்தகன்
சேலுங் கயலுந் திளைக்குநீர்த் திருவா வடுதுறை வேந்தனோ
டாலு மதற்கே முதலுமா மறிந்தோ மரிவைபொய் யாததே. (௰க)

திருச்சிற்றம்பலம்.

களும்; இளமான்அனே - இளமான் போல்பவளாகிய பெண். (௯)
மான் - பெண்; வழக்கு உண்டே - நியாயமுண்டோ; ஆனே - இடப
மே; அலம்புபுனல் - சப்திக்கின்றநீர். (௰) கோகனகத்து - தாமரை
மலரை ஆசனமாகவுடைய; இளவல்லி - இளங்கொடி போல்பவளா
கிய பெண்; ஆடினாள் - அடைந்தாள்; நவம்-நூதனம். (கக) புரகால
காம புராந்தகன் - முப்புரம், யமன், காமன் ஆகிய இவர்களுக்கு
யமன்; ஆலுமதற்கே - விளையாடுதற்கே; முதலுமாம்-முந்துவாளாம்;
அரிவை - பெண்.

௩ - திருவிடைக்கழி.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மாலுலா மனந்தந் தென்கையிற் சங்கம்
வவ்வினான் மலைமகன் மதலை
மேலுலாந் தேவர் குலமுழு தாளும்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தனென் சேந்தன்
என்னுமென் மெல்லிய லிவளே. (௧)

இவளைவா ரிளமென் கொங்கைபீர் பொங்க
எழில்கவர்ந் தானிளங் காளை
கவளமா கரிமேற் கவரிசூழ் குடைக்கீழ்க்
கனகக்குன் றெனவருங் கள்வன்
திவளமா ளிகைசூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
குவளைமா மலர்க்க ணங்கையா னைக்குங்
குழகனல் லழகனங் கோவே. (௨)

கோவினைப் பவளக் குழமணக் கோலக்
குழாங்கள்சூழ் கோழிவெல் கொடியோன்

---

(௧) மால் உலாம் - ஆசையுடைய; மனம்தந்து - மனத்தைக் கொடுத்து; சங்கம் - சங்கவளையல்; மேல் உலாம் - விண்ணுலகத்தில் வாழ்கின்ற; வேல் உலாம் - வேலேந்திய; சேந்தன் - (சேந்து - சிவப்பு) சிவந்த அக்கினி வடிவன், செந்நிறமுடையோன், முருகன்; மெல்லியல் - மெல்லிய சாயையுடையவள். (௨) வார்இள - கச்சணிந்த இளமை பொருந்திய; பீர் - பசலைநிறம்; மாகரி - பெரியயானை; திவள - விளங்க; நங்கை யானைக்கும் - பெண்ணாகிய தெய்வயானைக்கும்; குழகன் - மணாளன். (௩) பவளம் குழ - பவளம் போன்ற இளமையாகிய; காவல் நற்சேனை - சேனாபதி; தேவின் - தெய்வங்களுக்கு; தூவி - இறகு; பீலி - தோகை.

காவனற் சேனை யென்னக்காப் பவனென்
பொன்னைமே கலைகவர் வானை
தேவினற் றலைவன் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
தூவிநற் பீலி மாமயி லூருஞ்
சுப்பிர மண்ணியன் றானே. (௩)

தானமர் பொருது வானவர் சேனை
மடியச்சூர் மார்பினைத் தடிந்தோன்
மானமர் தடக்கை வள்ளறன் பிள்ளை
மறைநிறை சட்டறம் வளரத்
தேனமர் பொழில்சூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
கோனமர் கூத்தன் குலவிளங் களிறென்
கொடிக்கிடர் பயப்பதுங் குணமே. (௪)

குணமணிக் குருளைக் கொவ்வைவாய் மடந்தை
படுமிடர் குறிக்கொளா தழகோ
மணமணி மறையோர் வானவர் வையம்
உய்யமற் றடியனேன் வாழத்
திணமணி மாடத் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
கணமணி பொருநீர்க் கங்கைதன் சிறுவன்
கணபதி பின்னிளங் கிளையே. (௫)

கிளையிளஞ் சேயக் கிரிதனைக் கீண்ட
வாண்டகை கேடில்வேற் செல்வன்
வளையிளம் பிறைச்செஞ் சடையரன் மதலை
கார்நிற மாறிரு மருகன்

---

(௪) அமர் பொருது - போர்செய்து; தடிந்தோன் - பிளந்தவன்; மான்அமர் - மானேந்திய; சட்ட - செம்மையாகிய; தேன் - வண்டு; குலம் இளங்களிறு - மேன்மை பொருந்திய இளையயானை; குணமே- குணமோ. (௫) அணிகுருளை - அழகிய சிறுமி; மணம்அணி - மணத் திணலழகு பெற்ற; திண்அம் - உறுதியாகிய அழகிய; பொரும் - கொழிக்கின்ற. (௬) கிளை - அடியார்க்கு உறவாயிருப்பவன்; அக்கிரி

திளையிளம பொழில்சூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
மூளையிளங் களிறென் மொய்குழற் சிறுமிக்
கருளுங்கொல் முருகவேள் பரிந்தே. (சு)

பரிந்தசெஞ் சுடரோ பரிதியோ மின்னோ
பவளத்தின் குழவியோ பசும்பொன்
சொரிந்தசிந் தூரமோ தூமணித் திரளோ
சுந்தரத் தரசிது வென்னத்
தெரிந்தவை திகர்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
வரிந்தவெஞ் சிலைக்கை மைந்தனை யஞ்சொல்
மையல்கொண் டையுறும் வகையே. (எ)

வகைமிகு மசுரர் மாளவந் துழிஞை
வானமர் விளைத்ததா ளாளன்
புகைமிகு மனலிற் புரம்பொடி படுத்த
பொன்மலை வில்லிதன் புதல்வன்
திகைமிகு கீர்த்தித் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
தொகைமிகு நாமத் தவன்றிரு வடிக்கென்
றுடியிடை மடமொழி டங்கினளே. (அ)

தொடங்கினள் மடலென் றணிமுடித் தொங்கல்
புறவிதழ் தாகிலு மருளான்
இடங்கொளக் குறத்தி திறத்திலு மிறைவன்
மறத்தொழில் வார்த்தையு முடையன்
திடங்கொள்வை திகர்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற

தனைக் கிண்ட - அந்தக் கிரவுஞ்சமலையைப் பிளந்த; திளை - நிறைந்த. (எ) பரிந்த - இரக்கங்கொண்ட; பரிதி - சூரியன்; அம்சொல் - அழகிய சொல்லையுடையவளாகிய பெண். (அ) வகை - வகுப்பு; உழிஞை - உழிஞைமாலை; தாளாளன் - முயற்சியையுடையோன்; மிகுகீர்த்தி - கடந்தபுகழ்; மடல் - மடலேற. (கூ) தொங்கல் - மாலை; மறத்தொழில் - கோபத்தொழில்; பன்னிரு நயனம் -

மடங்கலை மலரும் பன்னிரு நயனத்
தறுமுகத் தமுதினை மருண்டே. (௬)

மருண்டுறை கோயின் மல்குநன் குன்றப்
பொழில்வளர் மகிழ்திருப் பிடவூர்
வெருண்டமான் விழியார்க் கருள்செயா விடுமே
விடலையே யெவர்க்குமெய் யன்பர்
தெருண்டவை திகர்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
குருண்டபூங் குஞ்சிப் பிறைச்சடை முடிமுக்
கண்ணுடைக் கோமளக் கொழுந்தே. (ம)

கொழுந்திரள் வாயார் தாய்மொழி யாகத்
தாய்மொழி யமரர்கோ மகனைச்
செழுந்திரட் சோதிச் செப்புறைச் சேந்தன்
வாய்ந்தசொல் லிவைசுவா மியையே
செழுந்தடம் பொழில்சூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
எழுங்கதி ரொளியை யேத்துவார் கேட்பார்
இடர்கெடு மாலுலா மனமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

மலர்ந்த பன்னிரண்டு கண்கள். (ம) மல்கும் - நிறைந்த; குருண்ட - சுருண்ட; குஞ்சி - மயிர்; விடலையே - காளைப்பருவமுடையவனே; கோமளக் கொழுந்தே - முருகவேளே. (கக) கோமகனை - இறைவனை; சுவாமியை - கந்தசுவாமியை, சுப்பிரமணியரை; மால்உலாம் மனம் - மயக்கத்தையுடைய மனம்.

கருவூர்த்தேவர் திருவிசைப்பா.

க - கோயில்.

பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

கணம்விரி குடுமிச் செம்மணிக் கவைநாக்
கறையணற் கட்செவிப் பகுவாய்ப்
பணம்விரி துத்திப் பொறிகொள்வெள் ளெயிற்றுப்
பாம்பணி பரமர்தங் கோயில்
மணம்விரி தருதே மாம்பொழின் மொழுப்பில்
மழைதவழ் வளரிளங் கமுகம்
திணர்நிரை யரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. (க)

இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
ஏழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை யென்றால்
அஞ்சலென் றருள்செய்வான் கோயில்
கைவரும் பழனங் குழைத்தசெஞ் சாலிக்
கடைசியர் களைதரு நிலம்
செய்வரம் பரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. (உ)

(க) குடுமி - உச்சி; கவைநா - பிளவுபட்ட நாவு; கறை அணல்-விடம்பொருந்திய மேல்வாய்; பகுவாய் - பிளந்தவாய்; பணம் விரி - விரிந்த படம்; எயிறு - பல்; விரிதரு - பரவிய; மொழுப்பில் - உச்சியில்; மழை - மேகம்; திணர் - தாறுகள்; நிறை அரும்பு - வரிசையாய் அரும்புகிற. (உ) பௌவம் - கடல்; ஐவர் - ஐம்பொறிகள்; கைவரும் - பழகிய; பழனம் - வயல்; குழைத்த - செழித்த; செய் - கழனி; வரம்பு-வரப்பு. (ங) மணி முருக்கு அலர-அழகிய முருக்கம்.

தாயினே ரிரங்குந் தலைவவோ வென்றும்
தமியனேன் றுணைவவோ வென்றும்
நாயினே னிருந்து புலம்பினு லிரங்கி
நலம்புரி பரமர்தங் கோயில்
வாயினே ரரும்பு மணிமுறுக் கலர
வளரிளஞ் சோலைமாந் தளிர்செந்
தீயினே ரரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. (ந)

துந்துபி குழல்யாழ் மொந்தைவா னியம்பத்
தொடர்ந்திரு டியர்கணந் துதிப்ப
நந்திகை முழவ முகிலென முழங்க
நடம்புரி பரமர்தங் கோயில்
அந்தியின் மறைநான் காரணம் பொதிந்த
அரும்பெறன் மறைப்பொருண் மறையோர்
சிந்தையி லரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. (ச)

கண்பனி யரும்பக் கைகண்மொட் டித்தென்
களைகணே யோலமென் றோலிட்
டென்பெலா முருகு மன்பர்தங் கூட்டத்
தென்னையும் புணர்ப்பவன் கோயில்
பண்பல தெளிதேன் பாடிநின் றாடப்
பனிமலர்ச் சோலைசூழ் மொழுப்பில்
செண்பக மரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. (௫)

நெஞ்சிட ரகல வகம்புகுந் தொடுங்கும்
நிலைமையோ டிருள்கிழித் தெழுந்த

பூமலர. (ச) மொந்தை - ஓர் கட்பறை; ஆரணம் பொதிந்த-ஆரணங்களோடு கூடின (ஆரணம்-வேதத்தின் ஞானபாகம்); அரும்பும்-விட்டு நீங்காதிருக்கும். (௫) மொட்டித்து - குவிந்து, அஞ்சலிசெய்து; களைகணே - ஆதரவே; தெளிதேன் - தேர்ந்த வண்டுகள்; ஆட - விளையாட. (சு) வெம்சுடர் - வெப்பமாகிய சூரிய கிரணங்கள்; சுடர்வ-

வெஞ்சுடர் சுடர்வ பொன்றொலி துளும்பும்
விரிசடை யடிகடங் கோயில்
அஞ்சுடர்ப் புரிசை யாழிசூழ் வட்டத்
தகம்படி மணிநிரை பரந்த
செஞ்சுட ரரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. (௬)

பூத்திர ளுருவஞ் செங்கதிர் விரியாப்
புந்தியில் வந்தமால் விடையோன்
தூத்திரட் பளிங்கிற் றோன்றிய தோற்றந்
தோன்றநின் றவன்வளர் கோயில்
நாத்திரண் மறையோர்ந் தோமகுண் டத்து
நறுநெயான் மறையவர் வளர்த்த
தீத்திர ளரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. (௭)

சீர்த்தநின் புவன முழுவது மேனைத்
திசைகளோ டண்டங்க ளனைத்தும்
போர்த்தநம் பெருமை சிறுமைபுக் கொடுங்கும்
புணர்ப்புடை யடிகடங் கோயில்
ஆர்த்தவந் தமரித் தமரரும் பிறரும்
அலைகட லிடுதிரைப் புனிதத்
தீர்த்தநீ ரரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. (௮)

பின்னுசெஞ் சடையும் பிறைதவழ் மொழுப்பும்
பெரியதங் கருணையுங் காட்டி
அன்னதேன் கலந்தின் னமுதுகந் தளித்தாங்
கருள்புரி பரமர்தங் கோயில்

பிரகாசிப்பது; அம்சுடர் - அழகிய ஒளி; புரிசை - மதில்; பரந்த - நிறைந்த; அரும்பும் - வீசும். (௭) கதிர் - ஒளி; ஓர்ந்து - அறிந்து. (௮) சீர்த்த - சிறப்புப் பொருந்திய; அமரித்து - பொருந்தி. (௯) மொழுப்பு - திருமுடி; பொழில் அகம் - சோலைகளிடத்து; பொறி-

புன்னைதேன் சொரியும் பொழிலகங் குடைந்து
பொறிவரி வண்டினம் பாடும்
தென்னதே னரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. (௯)

உம்பர்நா டிம்பர் விளங்கியாங் கெங்கும்
ஒளிவளர் திருமணிச் சுடர்கான்
றெம்பிரா னடஞ்செய் சூழலங் கெல்லாம்
இருட்பிழம் பறவெறி கோயில்
வம்புலாங் கோயில் கோபுரங் கூடம்
வளர்நிலை மாடமா ளிகைகள்
செம்பொனா லரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. (௰)

இருந்திரைத் தரளப் பரவைசூ ழகலத்
தெண்ணிலங் கண்ணில்புன் மாக்கள்
திருந்துயிர்ப் பருவத் தறிவுறு கருவூர்த்
துறைவளர் தீந்தமிழ் மாலை
பொருந்தருங் கருணைப் பரமர்தங் கோயில்
பொழிலகங் குடைந்துவண் டுறங்கச்
செருந்திநின் றரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

புள்ளி; கீற்று - வரி; தென்ன-அழகுடைய. (௰) கான்று-உமிழ்ந்து; சூழல் அங்கு எல்லாம் - இடங்களெல்லாம்; பிழம்பு - கூட்டம்; வம்பு உலாம் - புதுமை பொருந்திய; அரும்பும் - செய்யப்பட்ட. (௧௧) தரளம் - முத்து; அகலத்து - உலகில்; கண் - அறிவு; பொருந்து அரு- பெறுதற்கரிய; குடைந்து - கிண்டி; செருந்தி - செருந்திமரங்கள்.

உ - திருக்களந்தையாதித்தேச்சரம்.

பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

கலைகடம் பொருளு மறிவுமா யென்னைக்
கற்பினிற் பெற்றெடுத் தெனக்கே
முலைகடந் தருளுந் தாயினு நல்ல
முக்கண னுறைவிடம் போலும்
மலைகுடைந் தனைய நெடுநிலை மாடம்
மருங்கெலா மறையவர் முறையோத்
தலைகடன் முழங்கு மந்தணீர்க் களந்தை
அணிதிக ழாதித்தேச் சரமே. (௧)

சந்தன களபந் துதைந்தநன் மேனித்
தவளவெண் பொடிமுழு தாடும்
செந்தழ லுருவிற் பொலிந்துநோக் குடைய
திருநுத லவர்க்கிடம் போலும்
இந்தன விலங்க லெறிபுனந் தீப்பட்
டெரிவதொத் தெழுநிலை மாடம்
அந்தண ரழலோம் பலைபுனற் களந்தை
அணிதிக ழாதித்தேச் சரமே. (௨)

கரியரே யிடந்தான் செய்யரே யொருபால்
கழுத்திலோர் தனிவடஞ் சேர்த்தி
முரிவரே முனிவர் தம்மொடா னிழற்கீழ்
முறைதெரிந் தோருடம் பினராம்
இருவரே முக்க ணாற்பெருந் தடந்தோள்
இறைவரே மறைகளுந் தேட
அரியரே யாகி லவரிடங் களந்தை
அணிதிக ழாதித்தேச் சரமே. (௩)

---

(௧) கற்பினில் - கற்பு நெறியால்; மருங்கு - இடங்கள்; ஒத்து - வேதங்கள்; களந்தை - களத்தூர். (௨) துதைந்த - பூசப்பட்ட; நோக்கு - கண்; இந்தனம் - விறகு; விலங்கல் - மலை. (௩) முரிவர் —

பழையராந் தொண்டர்க் கெளியரே மிண்டர்க்
கரியரே பாவியேன் செய்யும்
பிழையெலாம் பொறுத்தென் பிணிபொறுத் தருளாப்
பிச்சரே நச்சரா மிளிரும்
குழையராய் வந்தென் குடிமுழு தாளுங்
குழகரே யொழுகுநீர்க் கங்கை
அழகரே யாகி லவரிடங் களந்தை
அணிதிக ழாதித்தேச் சரமே. (௪)

பவளமே மகுடம் பவளமே திருவாய்
பவளமே திருவுடம் பதனில்
தவளமே களபந் தவளமே புரிநூல்
தவளமே முறுவலா டரவம்
துவளுமே கலையுந் துகிலுமே யொருபால்
துடியிடை யிடமருங் கொருத்தி
அவளுமே யாகி லவரிடங் களந்தை
அணிதிக ழாதித்தேச் சரமே. (௫)

நீலமே கண்டம் பவளமே திருவாய்
நித்தில நிரைத்திலங் கினவே
போலுமே முறுவ னிறையவா னந்தம்
பொழியவே திருமுக மொருவர்
கோலமே யச்சோ வழகிதே யென்று
குழைவரே கண்டவ ருண்ட
தாலமே யாகி லவரிடங் களந்தை
அணிதிக ழாதித்தேச் சரமே. (௬)

திக்கடா நினைந்து நெஞ்சிடிந் துருகுந்
திறத்தவர் புறத்திருந் தலச
மைக்கடா வனைய வென்னையாள் விரும்பி
மற்றொரு பிறவியிற் பிறந்து

விளங்குவர்; முறை - மௌனநிலை. (௪) மிண்டர் - துஷ்டர்; குழகர் - அழகர். (௫) களபம் - விபூதி; தவளமே - வெண்மையே; துவளுமே - தொங்குமே; துடி - உடுக்கை. (௬) முறுவல் - நகை; ஒரு

பொய்க்கடா வண்ணங் காத்தெனக் கருளே
புரியவும் வல்லரே யெல்லே
அக்கடா வாகி லவரிடங் களந்தை
அணிதிக ழாதித்தேச் சரமே. (எ)

மெய்யரே மெய்யர்க் கிடுதிரு வான
விளக்கரே யெழுதுகோல் வளையாண்
மையரே வையம் பலிதிரிந் துறையும்
மயானரே யுளங்கலந் திருந்தும்
பொய்யரே பொய்யர்க் கடுத்தவான் பளிங்கின்
பொருள்வழி யிருள்கிழித் தெழுந்த
ஐயரே யாகி லவரிடங் களந்தை
அணிதிக ழாதித்தேச் சரமே. (அ)

குமுதமே திருவாய் குவளையே களமுங்
குழையதே யிருசெவி யொருபால்
விமலமே கலையு முடையரே சடைமேல்
மிளிருமே பொறிவரி நாகம்
கமலமே வதனங் கமலமே நயனம்
கனகமே திருவடி நிலைநீர்
அமலமே யாகி லவரிடங் களந்தை
அணிதிக ழாதித்தேச் சரமே. (கூ)

நீரணங் கசும்பு கழனிசூழ் களந்தை
நிறைபுக ழாதித்தேச் சரத்து
நாரணன் பரவுந் திருவடி நிலைமேல்
நலமலி கலைபயில் கருவூர்
ஆரண மொழிந்த பவளவாய் சுரந்த
அமுதமூ றியதமிழ் மாலை

வர்கோலமே - ஒப்பற்றவாது அழகோ. (எ) திக்குஅடர் - திசைகளில் அடுத்து; மைகடா - கரிய எருமைக்கடா. (அ) கோல்வளை ஆண்மையாரே - அழகிய வளையலணிந்த உமாதேவியை யாள்பவரே. (கூ) குமுதம் - செவ்வல்லிமலர்; களம் - கண்டம்; பொறி - புள்ளி; வதனம் - முகம்; நீர் - குணம். (ய) அணங்கு அசும்பு - அழகாகச் சுரக்கிற; இருள் - அஞ்ஞானம்.

ஏரணங் கிருநான் கிரண்டிவை வல்லோர்
இருள்கிழித் தெழுந்தசிந் தையரே. (ய)

திருச்சிற்றம்பலம்.

ரு - திருக்கீழ்கோட்டூர்மணியம்பலம்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

தளிரொளி மணிப்பூம் பதஞ்சிலம் பலம்பச்
சடைவிரித் தலையெறி கங்கைத்
தெளிரொளி மணிநீர்த் திவலைமுத் தரும்பித்
திருமுக மலர்ந்துசொட் டட்டக்
கிளரொளி மணிவண் டறைபொழிற் பழனங்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வளரொளி மணியம் பலத்துணின் றாடும்
மைந்தனென் மனங்கலந் தானே. (க)

தூண்டவெண் பிறையும் படர்சடை மொழுப்பும்
சுழியமுஞ் சூலமு நீல
கண்டமுங் குழையும் பவளவா யிதழும்
கண்ணுதற் றிலகமுங் காட்டிக்
கெண்டையுங் கயலு முகளுநீர்ப் பழனங்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வண்டறை மணியம் பலத்துணின் றாடும்
மைந்தனென் மனங்கலந் தானே. (உ)

திருநுதல் விழியும் பவளவா யிதழும்
திலகமு முடையவன் சடைமேல்

(க) சொட்டு அட்ட - துளிசிந்த, கெழுவுகம்பலை - பொருந்திய ஆரவாரம்; மைந்தன் - திண்ணியன், அழியாதவன். (உ) மொழுப்பு - மகுடம்; சுழியம் - உச்சிக்கொண்டை; உகளும் - குதிக்

புரிதரு மலரின் றாதுநின் றூதப்
போய்வரும் தும்பிகா ளிங்கே
கிரிதவழ் முகிலின் கீழ்த் தவழ்மாடம்
கெழுவுகம் பலசெய்கீழ்க் கோட்டூர்
வருதிறன் மணியம் பலவனைக் கண்டென்
மனத்தையுங் கொண்டு போதுமினே. (ங)

தெள்ளுநீ றவன்நீ றென்னுடல் விரும்பும்
செவியவ னறிவுநூல் கேட்கும்
மெள்ளவே யவன்பேர் விளம்பும்வாய் கண்கள்
விமானமே நோக்கிவெவ் வுயிர்க்கும்
கிள்ளைபூம் பொதும்பிற் கொஞ்சிமாம் பொழிற்கே
கெழுவுகம் பலசெய்கீழ்க் கோட்டூர்
வள்ளலே மணியம் பலத்துணின் றாடும்
மைந்தனே யென்னுமென் மனனே. (ச)

தோழியாஞ் செய்த தொழிலெனெம் பெருமான்
துணைமலர்ச் சேவடி காண்பான்
ஊழிதோ றூழி யுணர்ந்துளங் கசிந்து
நெக்குநைந் துளங்கரைந் துருக்கும்
கேழலும் புள்ளு மாகிநின் றிருவர்
கெழுவுகம் பலசெய்கீழ்க் கோட்டூர்
வாழிய மணியம் பலவனைக் காண்பான்
மயங்கவு மாலொழி யோமே. (ரு)

என்செய்கோந் தோழி தோழிநீ துணையாய்
இரவுபோம் பகல்வரு மாகில்
அஞ்சலோ வென்று ளாழியுந் திரையும்
அலமரு மாறுகண் டயர்வன்
கிஞ்சுக மணிவா யரிவையர் தெருவில்
கெழுவுகம் பலசெய்கீழ்க் கோட்டூர்

-கும். (ச) நீறு அவன் - நீற்றையுடையவன்; வெவ்வுயிர்க்கும் - வெய்துயிர்க்கும். (ரு) கேழல் - பன்றி; புள் - அன்னம்; மால் - ஆசை. (சு) அலமரும் - கலங்கும்; கிஞ்சுகம் - முருக்கமலர்; மஞ்சு -

மஞ்சணி மணியம் பலவவோ வென்று
மயங்குவன் மாலையம் பொழுதே. (௬)

தழைதவழ் மொழுப்புந் தவளநீற் றொளியும்
சங்கமுஞ் சகடையின் முழக்கும்
குழைதவழ் செவியுங் குளிர்சடைத் தெண்டும்
குண்டையுங் குழாங்கொடு தோன்றும்
கிழைதவழ் கனகம் பொழியுநீர்ப் பழனம்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மழைதவழ் மணியம் பலத்துணின் றாடும்
மைந்தர்தம் வாழ்வுபோன் றதுவே. (௭)

தன்னக மழலைச் சிலம்பொடு சதங்கை
தமருகந் திருவடி திருநீ
றின்னகை மழலை கங்கைசோங் கிதழி
இளம்பிறை குழைவள ரிளமான்
கின்னர முழவ மழலையாழ் வீணை
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மன்னவன் மணியம் பலத்துணின் றாடும்
மைந்தனென் மனத்துள் வைத்தனனே. (௮)

யாதுநீ நினைவ தெவரையா முடைய
தெவர்களும் யாவையுந் தானாய்ப்
பாதுகை மழலைச் சிலம்பொடு புகுந்தென்
பணிமலர்க் கண்ணுணின் றகலான்
கேதகை நிழலைக் குருகென மருவிக்
கெண்டைகள் வெருவுகீழ்க் கோட்டூர்
மாதவன் மணியம் பலத்துணின் றாடு
மைந்தனென் மனம்புகுந் தானே. (௯)

அழகு. (௭) மொழுப்பு - சிகை; சகடை - ஓர்வாச்சியம்; தெண்டும் - முடியும்; குண்டை - எருது; குழாம் கொடு - திரளாக; கிழை தவழ் - ஒளியுள்ள; மழை - மேகம். (௮) மழலை - மெல்லிய; இதழி - கொன்றை; முழவம் - மத்தளம். (௯) கேதகை - தாழம்பூ; மாதவன் - உமைபாகன். (௰) அங்கு - அந்திவானம்; அலங்கல் - அலை;.

அந்திபோ லுருவு மந்தியிற் பிறைசேர்
அழகிய சடையும்வெண் ணீறும்
சிந்தையா ளினையிற் சிந்தையுங் காணேன்
செய்வதென் றெளிபுன லலங்கல்
செந்தியா வுகளுங் கெண்டைபுண் டரீகம்
கிழிக்குந்தண் பணைசெய்கீழ்க் கோட்டூர்
வந்தநாண் மணியம் பலத்துளின் றாடும்
மைந்தனே யறியுமென் மனமே. (௰)

தித்திநின் றாடு மரிவையர் தெருவில்
கெழுவுகம் பலசெய்கீழ்க் கோட்டூர்
மத்தனை மணியம் பலத்துளின் றாடும்
மைந்தனை யாரணம் பிதற்றும்
பித்தனேன் மொழிந்த மணிநெடு மாலை
பெரியவர்க் ககலிரு விசும்பின்
முத்தியா மென்றே யுலகரேத் துவரேல்
முகமலர்ந் தெதிர்கொளுந் திருவே. (௰௧)

திருச்சிற்றம்பலம்.

புண்டரீகம் - தாமரை; வந்த - எழுந்தருளிய; நாள் - புதிய. (கக)
தித்தி - மகளிர் விளையாட்டிலொன்று.

௪ - திருமுகத்தலை.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

புவனநா யகனே யகவுயிர்க் கமுதே
பூரணா வாரணம் பொழியும்
பவளவாய் மணியே பணிசெய்வார்க் கிரங்கும்
பசுபதீ பன்னகா பரணா
அவனிஞா யிறுபோன் றருள்புரிந் தடியேன்
அகத்திலு முகத்தலை மூதூர்த்
தவளமா மணிப்பூங் கோயிலு மமர்ந்தாய்
தனியனேன் றனிமைநீங் குதற்கே. (க)

புழுங்குதீ வினையேன் வினைகெடப் புகுந்து
புணர்பொரு ளுணர்வுநூல் வகையால்
வழங்குதேன் பொழியும் பவளவாய் முக்கண்
வளரொளி மணிநெடுங் குன்றே
முழங்குதீம் புனல்பாய்ந் திளவரா லுகளும்
முகத்தலை யகத்தமர்ந் தடியேன்
விழுங்குதீங் கனியா யினியவா னந்த
வெள்ளமா யுள்ளமா யினையே. (உ)

கன்னெகா வுள்ளக் கள்வனே னின்கட்
கசிவிலேன் கண்ணினீர் சொரியேன்
முன்னகா வொழியே னாயினுஞ் செழுநீர்
முகத்தலை யகத்தமர்ந் துறையும்
பன்னகா பரணா பவளவாய் மணியே
பாவியே னாவியுள் புகுந்த
தென்னகா ரணநீ யேழைநா யடியேற்
கெளிமையோ பெருமையா வதுவே. (௩)

(உ) உணர்வுநூல் - அறிவுநூல், வீட்டுநூல். (௩) கல்நெகா - உருகாதகல்; நகாஒழியேன் - சிரித்து நீங்கேன்; அமர்ந்து - விரும்பி.

கேடிலா மெய்ந்நூல் கெழுமியுஞ் செழுநீர்க்
கிடையனா ருடையவென் னெஞ்சில்
பாடிலா மணியே மணியுமிழ்ந் தொளிரும்
பரமனே பன்னகா பரணா
மேடெலாஞ் செந்நெற் பசுங்கதிர் விளைந்து
மிகத்திகழ் முகத்தலை மூதூர்
நீடினா யெனினு முள்புகுந் தடியேன்
நெஞ்செலா நிறைந்துநின் றாயே. (௪)

அக்கனா வனைய செல்வமே சிந்தித்
தைவரோ டென்னொடும் விளைந்த
இக்கலா முழுது மொழியவந் துள்புக்
கென்னையா ளாண்டநா யகனே
முக்கணா யகனே முழுதுல கிறைஞ்ச
முகத்தலை யகத்தமர்ந் தடியேன்
பக்கலா னந்த மிடையறா வண்ணம்
பண்ணினாய் பவளவாய் மொழிந்தே. (௫)

புனல்பட வுருகி மண்டழல் வெதும்பிப்
பூம்புனல் பொதிந்துயி ரளிக்கும்
வினைபடு நிறைபோ னிறைந்தவே தகத்தென்
மனநெக மகிழ்ந்தபே ரொளியே
முனைபடு மதின்மூன் றெரித்தநா யகனே
முகத்தலை யகத்தமர்ந் தடியேன்
வினைபடு முடனீ புகுந்துநின் றமையால்
விழுமிய விமானமா யினதே. (௬)

விரியுநீ ராலக் கருமையுஞ் சாந்தின்
வெண்மையுஞ் செந்நிறத் தொளியும்

---

(௪) கெழுமியும் - பழகியும்; கிடைஅனார் உடைய - சடை (தக்கை) போன்ற; பாடு - அழிவு; மேடு - மேட்டுநிலங்கள். (௫) இ கலாம் - இந்தக் கலகம். (௬) மண்டு - அதிகம்; நிறை - தராசு; வேதகத்து - வேறுபாட்டினால்; முனைபடு - முனைந்துவந்த; வினைபடும் - வினைவினாலெடுத்த. (௭) விரியுநீர் ஆலம் - கடல் நீரிற் பிறந்த ஆலகாலம்;

கரியுநீ றுடுங் கனலுமொத் தொளிரும்
கழுத்திலோர் தனிவடங் கட்டி
முரியுமா றெல்லா முரிந்தழ கியையாய்
முகத்தலை யகத்தமர்ந் தாயைப்
பிரியுமா றுளதே பேய்களோஞ் செய்த
பிழைபொறுத் தாண்டபே ரொளியே. (எ)

என்னையுன் பாத பங்கயம் பணிவித்
தென்பெலா முருகநீ யெளிவந்
துன்னையென் பால்வைத் தெங்குமெஞ் ஞான்றும்
ஒழிவற நிறைந்தவொண் சுடரே
முன்னையென் பாச முழுவது மகல
முகத்தலை யகத்தமர்ந் தெனக்கே
கன்னலும் பாலுந் தேனுமா ரமுதும்
கனியுமா யினியையா யினையே. (அ)

அம்பரா வனலா வனிலமே புவிநீ
அம்புவே யிந்துவே யிரவி
உம்பரா லொன்று மறியொணு வணுவாய்
ஒழிவற நிறைந்தவொண் சுடரே
மொய்ம்பராய் நலஞ்சொன் மூதறி வாளர்
முகத்தலை யகத்தமர்ந் தெனக்கே
எம்பிரா னுகி யாண்டநீ மீண்டே
எந்தையுந் தாயுமா யினையே. (௯)

மூலமாய் முடிவாய் முடிவிலா முதலாய்
முகத்தலை யகத்தமர்ந் தினிய
பாலுமா யமுதாம் பன்னகா பரணன்
பனிமலர்த் திருவடி யிணைமேல்

சாந்து-திருநீறு; கரியும்-சுடப்பட்ட; முரியுமாறு எல்லாம் முரிந்து - தோற்றுவகையெல்லாவற்றையுந் தோற்றி. (அ) கன்னல் - சர்க்கரை, கருப்பஞ்சாறு. (௯) அம்பரா - ஆகாயமாயுள்ளவனே; அனிலமே - வாயுவாயுள்ளவனே; அம்புவே - நீராயுள்ளவனே; இந்து - சந்திரனு யுள்ளவனே; இரவி - சூரியனுயுள்ளவனே; ஒன்றும் - சிறிதும்;

ஆலையம் பாகி னனையசொற் கருவூர்
அமுதரம் தீந்தமிழ் மாலை
சிலையாப் பாடு மடியவ ரெல்லாம்
சிவபதங் குறுகிநின் றாரே. (ய)

திருச்சிற்றம்பலம்.

ரு - திரைலோக்கிய சுந்தரம்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

நீரோங்கி வளர்கமல நீர்பொருந்தாத் தன்மையன்றே
ஆரோங்கி முகமலர்ந்தாங் கருவினையேன் றிறமறந்தின்
றாரோங்கும் பழிபாரா தன்பாலே விழுந்தொழிந்தேன்
சீரோங்கும் பொழிற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே. (க)

நையாத மனத்தினனை நைவிப்பா னித்தெருவே
ஐயாநீ யுலாப்போந்த வன்றுமுத லின்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ வருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே. (உ)

அம்பளிங்கு பகலோன்பா லடைப்பற்று யிவண்மனத்தின்
முன்பளிந்த காதலுநின் முகந்தோன்ற விளங்கிற்றால்
வம்பளிந்த கனியேயென் மருந்தேநல் வளர்முக்கண்
செம்பளிங்கே பொழிற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே. (ங)

மைஞ்ஞின்ற குழலாடன் மனந்தரவும் வளைதாரா
திஞ்ஞின்ற கோவணவ னிவன்செய்த தியார்செய்தார்
மெய்ஞ்ஞின்ற தமர்க்கெல்லா மெய்ஞ்ஞிற்கும் பண்பினுறு
செய்ஞ்ஞன்றி யிலன்கோடைத்திரைலோக்கிய சுந்தரனே. (ச)

மொய்ம்பர்ஆய் - மனவுறுதியுடையராய். (ய) ஆலைபாகு - கறுப்பஞ்சாறு; உறழ் - ஒத்த.

(க) ஆர்ந்ங்கி - அருமைமிகுந்து; பழி - நிந்தை. (உ) நையாத - உருகாத; உலாப்போதல் - பவனிவருதல். (ச) செய்ஞ்ஞன்றி -

நீவாரா தொழிந்தாலு நின்பாலே விழுந்தேழை
கோவாத மணிமுத்துங் குவளைமலர் சொரிந்தனவால்
ஆவாவென் றருள்புரியா யமரர்கணந் தொழுதேத்துந்
தேவாதென் பொழிற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே. (ரு)

முழுவதுநீ யாயினுமிம் மொய்குழலாண் மெய்ம்முழுதும்
பழுதெனவே நினைந்தோராள் பயில்வதுநின் னொருநாமம்
அழுவதுநின் றிறநினைந்தே யதுவன்றே பெறும்பேறு
செழுமதில்சூழ் பொழிற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே. (சு)

தன்சோதி யெழுமேனித் தபனியப்பூஞ் சாய்க்காட்டாய்
உன்சோதி யெழில்காண்பா னேலிடவு முருக்காட்டாய்
துஞ்சாகண் ணிவளுடைய துயர்திரு மாறுரையாய்
செஞ்சாலி வயற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே. (எ)

அரும்பேதைக் கருள்புரியா தொழிந்தாய்நின் னவிர்சடைமேல்
நிரம்பாத பிறைதூவு நெருப்பொடுநின் கையிலியாழ்
நரம்பாலு முயிரீர்ந்தாய் நளிர்புரிசைக் குளிர்வனம்பா
திரம்போது சொரிகோடைத் திரைலோக்கிய சுந்தரனே. (அ)

ஆறாத பேரன்பி னவருள்ளங் குடிகொண்டு
வேறாகப் பலர்சூழ வீற்றிருத்தி யதுகொண்டு
வீறாடி யிவளுன்னைப் பொதுநீப்பான் விரைந்தின்னம்
தேறாடென் பொழிற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே. (கூ)

சரிந்ததுகி றளர்ந்தவிடை யவிழ்ந்தகுழ லிளந்தெரிவை
இருந்தபரி சொருநாள்கண் டிரங்காயெம் பெருமானே
முரிந்தநடை மடந்தையர்த முழங்கொலியும் வழங்கொலியும்
திருந்துவிழ வணிகோடைத் திரைலோக்கிய சுந்தரனே. (ய)

செய்நன்றி. (ரு) குவளைமலர் - கண்கள். (சு) பழுது - நிலையில்லாதது; ஓராள் - ஆராயமாட்டாள். (எ) தபனியம் - பொன்; பூ சாய் - அழகியநிறம். (அ) ஈர்ந்தாய் - பிளந்தாய்; புரிசை - மதில்; வனம் - சோலை; பாதிரம் - பாதிரிமரம்; போது - பூக்கள். (கூ) வீறு ஆடி - மேன்மைஅடைந்து; பொது - பொதுத்தன்மையில். (ய) தளர்ந்த இடை - துவண்டஇடை; முரிந்தநடை-ஒடிந்தநடை, துள்ளுநடை;

ஆரணத்தேன் பருகியருந் தமிழ்மாலை கமழவரும்
காரணத்தி னிலைபெற்ற கருவூரன் றமிழ்மாலை
பூரணத்தா லீரைந்தும் போற்றிசைப்பார் காந்தாரம்
சீரணைத்த பொழிற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே. (௧௧).

திருச்சிற்றம்பலம்.

௬ - கங்கைகொண்ட சோளேச்சரம்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

அன்னமாய் விசும்பு பறந்தயன் றேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையான் விரும்பி யென்மனம் புகுந்த
எளிமையை யென்றுநான் மறக்கேன்
முன்னமா லறியா வொருவனு மிருவா
முக்கணு நாற்பெருந் தடந்தோள்
கன்னலே தேனே யமுதமே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (௧).

உண்ணெகிழ்ந் துடல நெக்குமுக் கண்ணா
ஓலமென் றோலமிட் டொருநாள்
மண்ணினின் றலறேன் வழிமொழி மாலை
மழலையஞ் சிலம்படி முடிமேல்
பண்ணிநின் றுருகேன் பணிசெயே னெனினும்
பாவியே னாவியுள் புகுந்தென்
கண்ணினின் றகலா னென்கொலோ கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (௨).

அற்புதத் தெய்வ மிதனின்மற் றுண்டே
அன்பொடு தன்னையஞ் செழுத்தின்

(௧௧) காந்தாரம்இசைப்பார் - காந்தாரப்பண்ணோடு பாடுவோர்.
(௧) இருவா - பெருமையுடையோனே, இரண்டுருவாயிருப்பவனே (அர்த்தநாரீசுவரனே). (௩) சொற்பதத்துள் - சொல்லி

சொற்பதத் துள்வைத் துள்ளமள் ளூறுந்
தொண்டருக் கெண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலு முழுதுமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (௩)

ஐயபொட் டிட்ட வழகுவா ணுதலும்
அழகிய விழியும்வெண் ணீறும்
சைவம்விட் டிட்ட சடைகளுஞ் சடைமேல்
தரங்கமுஞ் சதங்கையுஞ் சிலம்பும்
மொய்கொளெண் டிக்குங் கண்டநின் றொண்டர்
முகமலர்ந் திருகணீ ரரும்பக்
கைகண்மொட் டிக்கு மென்கொலோ கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (௪)

சுருதிவா னவனுந் திருநெடு மாலாம்
சுந்தர விசும்பினிந் திரனும்
பரிதிவா னவனும் படர்சடை முக்கட்
பகவனு மகவுயிர்க் கமுதாம்
எருதுவா கனனு மெயில்கண்மூன் றெரித்த
ஏறுசே வகனுமாம் பின்னும்
கருதுவார் கருது முருவமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (௫)

அண்டமோ ரணுவாம் பெருமைகொண் டணுவோர்
அண்டமாஞ் சிறுமைகொண் டடியேன்
உண்டவூ ணுனக்காம் வகையென துள்ளம்
உள்கலந் தெழுபரஞ் சோதி

ளிடத்து; அள்ளூறும் - களிக்கும்; பல்பத குவை - பல ஒளியுள்ள குவியல். (௪) ஐய - அழகையுடைய; சைவம்விட்டிட்ட - சிவசின்னமாகத் தொங்கவிடப்பட்ட; தரங்கம் - அலை (கங்கை); மொய்கொள் - நெருங்கிய; மொட்டிக்கும் - குவியும், கூம்பும். (௫) சுருதிவானவன் - பிரமன்; சுந்தரவிசும்பு - அழகிய சுவர்க்கலோகம்; பரிதிவானவன் - சூரியன். (௬) நாண்கொண்ட - நாண்பூட்டிய; குறுகலர் - பகைவர்;

கொண்டநாண் பாம்பாம் பெருவரை வில்லில்
குறுகலர் புரங்கண்மூன் றெரித்த
கண்டனே நீல கண்டனே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (சு)

மோதலைப் பட்ட கடல்வயி றுதித்த
முழுமணித் திரளமு தாங்கே
தாய்தலைப் பட்டங் குருகியொன் றாய
தன்மையி லென்னைமுன் னின்ற
நீதலைப் பட்டா லியானுமவ் வகையே
நிசிசர ரிருவரோ டொருவர்
காதலிற் பட்ட கருணையாய் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (எ)

தத்தையங் கனையார் தங்கண்மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட்
டத்திலங் கொருகூ றுன்கண்வைத் தவருக்
கமருல களிக்குநின் பெருமை
பித்தனென் றொருகாற் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம டியேன்சென் னிமேல்வைத்த கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (அ)

பண்ணிய தழல்காய் பாலளா நீர்போல்
பாவமுன் பறைந்துபா லனைய
புண்ணியம் பின்சென் றறிவினுக் கறியப்
புகுந்ததோர் யோகினிற் பொலிந்து
நுண்ணியை யெனினு நம்பநின் பெருமை
நுன்னிடை யொடுங்கநீ வந்தென்
கண்ணினுண் மணியிற் கலந்தனை கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (கூ)

கண்டனே - வீரனே. (எ) வயிறு - நடு; தாய்தலைப்பட்டு - தாயின் தன்மையடைந்து; நீதலைப்பட்டால் - நீவந்து பொருந்தினால்; நிசிசரர் - அவுணர். (அ) தத்தை - கிளி; அத்தில் - அதில். (கூ) பண்ணிய - மூட்டிய; பால்அளாம் - பாலுடன்சேர்ந்த; முன்பறைந்து -

அங்கைகொண் டமரர் மலர்மழை பொழிய
அடிச்சிலம் பலம்பவந் தொருநாள்
உங்கைகொண் டடியேன் சென்னிவைத் தென்னை
உய்யக்கொண் டருளினை மருங்கில்
கொங்கைகொண் டனுங்குங் கொடியிடை காணில்
கொடியளென் றவிர்சடை முடிமேல்
கங்கைகொண் டிருந்த கடவுளே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (௰)

மங்கையோ டிருந்தே யோகுசெய் வானை
வளரிளந் திங்களை முடிமேல்
கங்கையோ டணியுங் கடவுளைக் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானை
அங்கையோ டேந்திப் பலிதிரி கருவூர்
அறைந்தசொன் மாலையா லாழிச்
செங்கையோ டுலகி லரசுவீற் றிருந்து
திளைப்பதுஞ் சிவனருட் கடலே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

எ - திருப்பூவணம்.

பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

திருவருள் புரிந்தா ளாண்டுகொண் டிங்ஙன்
சிறியனுக் கினியது காட்டிப்
பெரிதருள் புரிந்தா னந்தமே தருநின்
பெருமையிற் பெரியதொன் றுளதே
மருதர சிருங்கோங் ககின்மரஞ் சாடி
வரைவளங் கவர்ந்திழி வைகைப்

முன்னேயோட; யோகினில் - யோகம்போல. (௰) அனுங்கும் - அசையும்; அவிர் - பிரகாசிக்கின்ற. (௧௧) அரசு - சக்கரவர்த்தி; திளைப்பதும் - மூழ்குவதும்.

பொருதிரை மருங்கோங் காவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. (௧)

பாம்பணைத் துயின்றோ னயன்முதற் றேவர்
பன்னெடுங் காலநிற் காண்பான்
எம்பலித் திருந்த வென்னுளம் புகுந்த
எளிமையை யென்றுநான் மறக்கேன்
தேம்புனற் பொய்கை வாளைவாய் மடுப்பத்
தெளிதரு தேறல்பாய்ந் தொழுகும்
பூம்பணைச் சோலை யாவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. (உ)

கரைகட லொலியிற் றமருகத் தரையில்
கையினிற் கட்டிய கயிற்றால்
இருதலை யொருநா வியங்கவந் தொருநாள்
இருந்திடா யெங்கள்கண் முகப்பே
விரிதிகழ் விழவின் பின்செல்வோர் பாடல்
வேட்கையின் வீழ்ந்தபோ தவிழ்ந்த
புரிசடை துகுக்கு மாவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. (௩)

கண்ணியன் மணியின் குழல்புக் கங்கே
கலந்துபுக் கொடுக்கினேற் கங்ஙன்
நண்ணியை யெனினு நம்பநின் பெருமை
நண்ணிமை யிறந்தமை யறிவன்
மண்ணியன் மரபிற் றங்கிருண் மொழுப்பின்
வண்டினம் பாடநின் றாடும்
புண்ணிய மகளி ராவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. (௪)

---

(௧) இனிது - இனிதாகிய பொருள்; சாடி - எறிந்தொண்டு; மருங்கு - திருபுரம்; ஆவணவீதி - கடைவீதி. (உ) எம்பலித்து - அக்கலாய்த்து; தேம் - தேன்; வாய்மடுப்ப - வாயில்விழ; தேறல் - தேன்; பூம்பணை - அழகிய வயல்கள். (௩) இருதலை - இரண்டு பக்கம்; முகப்பே - எதிரே; துகுக்கும் - கட்டுகின்ற. (௪) கண் இயல் - கண்ணிற் பொருந்திய; குழல் - உள்ளிடம்; இறந்தமை - அளவு

கடுவினைப் பாசக் கடல்கடந் தைவர்
கள்ளரை மெள்ளவே துரந்துன்
அடியிணை யிரண்டு மடையுமா றடைந்தேன்
அருள்செய்வா யருள்செயா தொழிவாய்
நெடுநிலை மாடத் திரவிருள் கிழிக்க
நிலைவிளக் கலகில்சா லேகம்
புடைகிடந் திலங்கு மாவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. (ரு)

செம்மனக் கிழவோ ரன்புதா வென்றுன்
சேவடி பார்த்திருந் தலச
எம்மனங் குடிகொண் டிருப்பதற் கியானோர்
என்னுடை யடிமைதா னியாதே
அம்மனங் குளிர்நாட் பலிக்கெழுந் தருள
அரிவைய ரவிழ்குழற் சுரும்பு
பொம்மென முரலு மாவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. (௬)

சொன்னவின் முறைநான் காரண முணராச்
சூழல்புக் கொளித்தநீ யின்று
கன்னவின் மனத்தென் கண்வலைப் படுமிக்
கருணையிற் பெரியதொன் றுளதே
மின்னவில் கனக மாளிகை வாய்தல்
விளங்கிளம் பிறைதவழ் மாடம்
பொன்னவில் புரிசை யாவண வீதிப் * *
பூவணங் கோயில்கொண் டாயே. (எ, அ,௯)

கடந்தமை; மொழுப்பின் - சோலைகளில். (ரு) கடல் - பிறவிக்கடல்; இணை - தனக்குத்தானே நிகராயிருக்கிற; சாலேகம் - பலகணி, சன்னல். (௬) கிழவோர் - பெரியோர் (விஷயங்களிற் செல்லாமற் இறைவனிடத்தே பதிந்திருக்கின்ற நெஞ்சமுடையவர்); அலச - வருந்தாநிற்க; அடிமை - அடிமைத்திறம்; சுரும்பு - வண்டு. (எ) நவில் - உச்சரிக்கிற; ஆரணம் - வேதம்; சூழல் - இடம்; கல்நவில் - கல்லைநிகர்த்த; மின்நவில் - மின்னுதலைச் செய்கின்ற; வாய்தல் - முற்றம். * எட்டாம் ஒன்பதாந் திருப்பாசுரங்கள் இறந்துவிட்டன.

பூவணங் கோயில் கொண்டெனை யாண்ட
புனிதனை வனிதைபா கனைவெண்
கோவணங் கொண்டு வெண்டலை யேந்துங்
குழகனை யழகெலாநிறைந்த
தீவணன் றன்னைச் செழுமறை தெரியும்
திகழ்கரு வூரனே னுரைத்த
பாவணத் தமிழ்கள் பத்தும்வல் லார்கள்
பரமன துருவமா குவரே. (ய)

திருச்சிற்றம்பலம்.

அ - திருச்சாட்டியக்குடி.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பெரியவா கருணை யிளநிலா வெறிக்கும்
பிறைதவழ் சடைமொழுப் பவிழ்ந்து
சரியமா சுழியங் குழைமிளிர்ந் திருபால்
தாழ்ந்தவா காதுகள் கண்டம்
கரியவா தாமுஞ் செய்யவாய் முறுவல்
காட்டுமா சாட்டியக் குடியார்
இருகைகூம் பினகண் டலர்ந்தவா முகமேழ்
இருக்கையி லிருந்தவீ சனுக்கே. (க)

பாந்தள்பூ ணாரம் பரிகலங் கபாலம்
பட்டவர்த் தனமெரு தன்பர்
வார்ந்தகண் ணருவி மஞ்சன சாலை
மலைமகள் மகிழ்பெருந் தேவி

(ய) தீவண்ணன்தன்னை - தீ நிறத்தையுடையவனை; வண்ணம் - அழகு: பரமனது உருவம் - சிவசாரூபம்.

(க) பெரியவாறு, சரியமாறு, கரியவாறு, காட்டுமாறு, அலர்ந்தவாறு ஆகிய இவற்றின் ஈற்றிலுள்ள றுகரம் தொகுத்தலாயிற்று.

(உ) பாந்தள் - பாம்பு; பூணாரம் - ஆபரணம்; பரிகலம் - பிக்ஷாபாத்-

சாந்தமுந் திருநீ றருமறை கீதம்
சடைமுடி சாட்டியக் குடியார்
ஏந்தெழி லிதயங் கோயின் மாளிகையேழ்
இருக்கையு ளிருந்தவீ சனுக்கே. (உ).

தொழுதுபின் செல்வ தயன்முதற் கூட்டந்
தொடர்வன மறைகளுன் றெனினும்
கழுதுறு கரிகா டுறைவிடம் போர்வை
கவந்திகை கரியுரி திரிந்தூண்
தழலுமி ழரவங் கோவணம் பளிங்கு
செபவடஞ் சாட்டியக் குடியார்
இழுதநெய் சொரிந்தோம் பழவொளி விளக்கேழ்
இருக்கையி லிருந்த வீசனுக்கே. (௩).

பதிகநூன் மறைதும் புருவுநா ரதரும்
பரிவொடு பாடுகாந் தர்ப்பர்
கதியெலா மரங்கம் பிணையன்மூ வுலகில்
கடியிருட் டிருநடம் புரியும்
சதியிலார் கதியி லொலிசெயுங் கையில்
தமருகஞ் சாட்டியக் குடியார்
இதயமாங் கமலங் கமலவர்த் தனையேழ்
இருக்கையி லிருந்தவீ சனுக்கே. (௪).

திருமகன் முருகன் றேவியே லுமையாள்
திருமகண் மருமகன் றாயாம்
மருமகன் மதனன் மாமனே லிமவான்
மலையுடை யரையர்தம் பாவை

திரம்; பட்டவர்த்தனம் - பட்டவர்த்தனமென்னும் யானை; சாந்தமும் - பூச்சும்; சடை - சடை; முடி - மகுடம்; ஏந்துஎழில் - அழகு பொருந்திய. (௩) கழுதுஉறு - பேய்கள்சஞ்சரிக்கிற; கரிகாடு - சுடுகாடு; கவந்திகை - உணவு; திரிந்தஊண் - திரிந்துஏற்கும்பிச்சை;. இழுதநெய் - நெகிழ்வாகியநெய். (௪) காந்தர்ப்பர் - கந்தருவர்; கதி - இடம்; தமருகம்-உடுக்கை. (௫) தாயாம் - தாயாகப்பெற்ற; மருமகன்-பொருந்தியபுதல்வன்; மதனன் - மன்மதன்; சிவபுரன் - சிவபிரான்;. இருமுழங்கு - பெரிதும்ஒலிக்கின்ற. (௬) அனலமே - நெருப்பே;.

தருமலி வளனுஞ் சிவபுரன் றேழன்
தனபதி சாட்டியக்குடியார்
இருமுகங் கழன்மூன் றேழுகைத் தலமேழ்
இருக்கையி லிருந்தவீ சனுக்கே. (ரு)

அனலமே புனலே யனிலமே புவனி
அம்பரா வம்பரத் தளிக்கும்
கனகமே வெள்ளிக் குன்றமே யென்றன்
களைகணே களைகண்மற் றில்லாத்
தனியனே னுள்ளங் கோயில்கொண் டருளும்
சைவனே சாட்டியக் குடியார்க்
கினியநீங் கனியா யொழிவற நிறைந்தேழ்
இருக்கையி லிருந்தவா றியம்பே. (சு)

செம்பொனே பவளக் குன்றமே நின்ற
திசைமுகன் மான்முதற் கூட்டத்
தன்பரா னவர்கள் பருகுமா ரமுதே
அத்தனே பித்தனே னுடைய
சம்புவே யணுவே தாணுவே சிவனே
சங்கரா சாட்டியக் குடியார்க்
கின்பனே யெங்கு மொழிவற நிறைந்தேழ்
இருக்கையி லிருந்தவா றியம்பே. (எ)

செங்கணா போற்றி திசைமுகா போற்றி
சிவபுர நகருள்வீற் றிருந்த
அங்கணா போற்றி யமரனே போற்றி
அமரர்க டலைவனே போற்றி
தங்களுன் மறைநூல் சகலமுங் கற்றோர்
சாட்டியக் குடியிருந் தருளும்
எங்கணா யகனே போற்றியே ழிருக்கை
இறைவனே போற்றியே போற்றி (அ)

சித்தனே யருளாய் செங்கணா வருளாய்
சிவபுர நகருள்வீற் றிருந்த

அனிலமே - காற்றே; களைகணே - ஆதரவே. (கூ) தந்து - தாவு

அத்தனே யருளா யமரரே யருளாய்
அமரர்க ளதிபனே யருளாய்
தத்துநீர்ப் படுகர்த் தண்டலைச் சூழல்
சாட்டியக் குடியுளே ழிருக்கை
முத்தனே யருளாய் முதல்வனே யருளாய்
முன்னவா துயர்கெடுத் தெனக்கே. (கூ)

தாட்டரும் பழனப் பைம்பொழிற் படுகர்த்
தண்டலைச் சாட்டியக் குடியார்
ஈட்டிய பொருளா யிருக்குமே ழிருக்கை
இருந்தவன் றிருவடி மலர்மேல்
காட்டிய பொருட்கலை பயில்கரு வூரன்
கழறுசொன் மாலையீ ரைந்தும்
மாட்டிய சிந்தை மைந்தருக் கன்றே
வளரொளி விளங்குவா னுலகே. (ய)

திருச்சிற்றம்பலம்.

கூ - தஞ்சையிராசராசேச்சரம்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

உலகெலாந் தொழவந் தெழுகதிர்ப் பரிதி
ஒன்றுநூ றாயிர கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம் பச்சோ
அங்ஙனே யழகிதோ வரணம்

கின்ற; படுகர் - வயல்கள்; தண்டலை - சோலை. (ய) தாள்தரும்பழனம் - உழவுத்தொழில் செய்யப்பெற்ற வயல்கள்; படுகர் - குளங்கள்; தண்தலை - குளிர்ந்தஇடங்கள்; மாட்டிய - பதித்த; மைந்தர்-புருடர்.

(க) ஒன்று - பொருந்திய; அலகுஎலாம் - அளவுமுழுதும்; ஓவர் - சித்திரக்காரர்; அண்அம் - பொருந்திய அழகு; பல்குலாம் - பலவாய் விளங்குகிற; ஞாங்கர் - பக்கம்; பதணத்து - மதிலுண்

பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்
பருவரை ஞாங்கர்வெண் டிங்கள்
இலகுலாம் பதணத் திஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (௧)

நெற்றியிற் கண்ணென் கண்ணினின் றகலா
நெஞ்சினி லஞ்சிலம் பலைக்கும்
பொற்றிரு வடியென் குடிமுழு தாளப்
பகுந்தன போந்தன வில்லை
மற்றெனக் குறவேன் மறிதிரை வடபால்
வண்புனன் மதகில்வாழ் முதலை
எற்றுநீர்க் கிடங்கி லிஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (௨)

சடைகெழு மகுடந் தண்ணிலா விரிய
வெண்ணிலா விரிதரு தரளக்
குடைநிழல் விடைமேற் கொண்டுலாப் போதும்
குறிப்பெனோ கோங்கிண ரனைய
குடைகெழு நிருபர் முடியொடு முடிதேய்ந்
துக்கநெஞ் சுடர்ப்படு குவையோம்
கிடைகெழு மாடத் திஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (௩)

வாழியம் போதத் தருகுபாய் விடையம்
வரிசையின் விளக்கலி னடுத்த
சூழலம் பளிங்கின் பாசல ராதிச்
சுடர்விடு மண்டலம் பொலியக்
காழகில் கமழு மாளிகை மகளிர்
சங்குல்வா யங்குலி கெழும
யாழொலி சிலம்பு மிஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (௪)

மேடையனிடத்து; இஞ்சி - மதில். (௨) அலைக்கும் - வருத்துகிற; போந்தனவில்லை - வெளிப்பட்டன இல்லை; எற்றும் - எறிகின்ற; கிடங்கு - அகழி. (௩) இணர் - கொத்து; நிருபர் - அசுரர்; உக்க - சிந்தின; படுகுவை - மணிக்குவியல்கள்; இடைகெழு - இடம்

எவருமா மறைக ளவையும்வா னவர்கள்
ஈட்டமுந் தாட்டிருக் கமலத்
தவருமா லவனு மறிவரும் பெருமை
அடலழ லுமிழ்தழற் பிழம்பர்
உவரிமா கடலி னொலிசெய்மா மறுகில்
உறுகளிற் றரசின தீட்டம்
இவருமால் வரைசெ யிஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (௫)

அருளுமா றருளி யாளுமா றுள
அடிகட மழகிய விழியும்
குருளும்வார் காதுங் காட்டியான் பெற்ற
குயிலினை மயல்செய்வ தழகோ
தரளவான் குன்றிற் றண்ணிலா வொளியும்
தருகுவால் பெருகுவான் றெருவில்
இருளெலாங் கிழியு மிஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (௬)

தனிப்பெருந் தாமே முழுதுறப் பிறப்பின்
தளிரிறப் பிலையுதிர் வென்றால்
நினைப்பருந் தம்பாற் சேறலின் றேனும்
நெஞ்சிடித் தருகுவ தென்னே
சுனைப்பெருங் கலங்கற் பொய்கையங் கழுநீர்ச்
சூழன்மா ளிகைசுடர் வீசும்
எனைப்பெரு மணஞ்செ யிஞ்சூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (௭)

பன்னெடுங் காலம் பணிசெய்து பழையோர்
தாம்பல ரேம்பலித் திருக்க
என்னெடுங் கோயி னெஞ்சுவீற் றிருந்த
எளிமையை யென்றுநான் மறக்கேன்

பொருந்திய. (௫) உவரி - உப்புச்சுவை; மறுகு - தெரு; ஈட்டம் - கூட்டம்; இவரும் - ஓங்கும். (௬) குருள் - புன்சடை; குவால் - குவியல்கள்; வான் - பெரிய. (௮) விலங்கல் - மலை. (௯) மங்குல் -

மின்னெடும் புருவத் திளமயி லனையார்
விலங்கல்செய் நாடக சாலை
இன்னடம் பயிலு மிஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (௯).

மங்குல்சூழ் போதி னொழிவற நிறைந்து
வஞ்சகர் நெஞ்சகத் தொளிப்பார்
அங்கழற் சுடரா மவர்க்கிள வேனல்
அலர்கதி ரனையவா ழியரோ
பொங்கெழிற் றிருநீ றழிபொசி வனப்பில்
புனறுளும் பவிர்சடை மொழுப்பர்
எங்களுக் கினிய ரிஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (௧).

தனியரேத் தனையொ ராயிர வருமாந்
தன்மைய ரென்வயத் தினராம்
கனியரத் தருதிங் கரும்பர்வெண் புரிநூல்
கட்டிய ரட்டவா ரமிர்தர்
புனிதர்பொற் கழலர் புரிசடா மகுடர்
புண்ணியர் பொய்யிலா மெய்யர்க்
கினியரேத் தனையு மிஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (௰).

சரளமந் தார சண்பக வகுள
சந்தன நந்தன வனத்தின்
இருள்விரி மொழுப்பி னிஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவரை
அருமருந் தருந்தி யல்லறீர் கருவூர்
அறைந்தசொன் மாலையி மைந்தின்
பொருண்மருந் துடையோர் சிவபத மென்னும்
பொன்னெடுங் குன்றுடை யோரே. (௧௧).

திருச்சிற்றம்பலம்.

மேகம்; போதஇன் - காலம்போல். (௰) அட்டஆர் - காய்ச்சின அரிய. (௧௧) சரளம் - சிவதை; வகுளம் - மகிழ்; அருமருந்து - அரிய தேவாமிர்தம்.

௰ - திருவிடைமருதூர்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

வெய்யசெஞ் சோதி மண்டலம் பொலிய
வீங்கிரு ணடுநல்யா மத்தோர்
பையசெம் பாந்தள் பருமணி யுமிழ்ந்து
பாவியேன் காதல்செய் காதில்
ஐயசெம் பொற்றோட் டவிர்சடை மொழுப்பின்
அழிவழ கியதிரு நீற்று
மையசெங் கண்டத் தண்டவா னவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே. (௧)

இந்திர லோக முழுவதும் பணிகேட்
டிணையடி தொழுதெழத் தாம்போய்
ஐந்தலை நாக மேகலை யரையா
அகந்தொறும் பலிதிரி யடிகள்
தந்திரி வீணை கீதமும் பாடச்
சாதிகின் னரங்கலந் தொலிப்ப
மந்திர கீதந் தீங்குழ லெங்கும்
மருவிடந் திருவிடை மருதே. (௨)

பனிபடு மதியம் பயில்கொழுந் தன்ன
பல்லவம் வல்லியென் றிங்ஙன்
வினைபடு கனகம் போலயா வையுமாய்
வீங்குல கொழிவற நிறைந்து
துனிபடு கலவி மலைமக ளுடனாய்த்
தூங்கிருணடுநல்யா மத்தென்
மனனிடை யணுகி நுணுகியுள் கலந்தோன்
மருவிடந் திருவிடை மருதே. (௩)

(௧) செஞ்சோதி - சூரியன்; வீங்கு - மிக்க; பைய - படத்தை யுடைய; செம்பாந்தள் - செம்பாம்பு; ஐய - அழகையுடைய. (௨) அரையா - அரையிற்கட்டப்பட்டு அசையாநிற்க. (௩) மதியம் -

அணியுமிழ் சோதி மணியினுள் கலந்தாங்
கடியனே னுள்கலந் தடியேன்
பணிமகிழ்ந் தருளு மரிவைபா கத்தன்
படர்சடை விடமிடற் றடிகள்
துணியுமி ழாடை யரையிலோ ராடை
சுடருமிழ் தரவத னருகே
மணியுமிழ் நாக மணியுமிழ்ந் திமைப்ப
மருவிடந் திருவிடை மருதே. (௪)

பந்தமும் பிரிவுந் தெரிபொருட் பனுவல்
படிவழி சென்றுசென் றேறிச்
சிந்தையுந் தானுங் கலந்ததோர் கலவி
தெரியினுந் தெரிவுறா வண்ணம்
எந்தையுந் தாயும் யானுமென் றிங்ஙன்
எண்ணில்பல் லூழிக ளுடனாய்
வந்தணு காது நுணுகியுள் கலந்தோன்
மருவிடந் திருவிடை மருதே. (௫)

எரிதரு கரிகாட் டிடுபிண நிணமுண்
டேப்பமிட் டிலங்கெயிற் றழல்வாய்த்
தருகழு தொடும்பேய்க் கணமெழுந் தாடுந்
தூங்கிரு ணடுநல்யா மத்தே
அருள்புரி முறுவன் முகிழ்நிலா வெறிப்ப
அந்திபோன் றொளிர்திரு மேனி
வரியரா வாட வாடுமெம் பெருமான்
மருவிடந் திருவிடை மருதே. (௬)

எழிலையாழ் செய்கைப் பசுங்கலன் விசும்பின்
இன்றுளி படநனைந் துருகி
அழலையாழ் புருவம் புனலொடுங் கிடந்தாங்
காதனேன் மாதரார் கலவித்

பிறை; பல்லவம் - தளிர்; வல்லி - கொடி; வீங்கு - பெருத்த; துணி - சிறப்பிணைக்கு; தூங்குஇருள் - பேரிருள். (௫) பந்தம் - பிறவிக்கட்டு; பிரிவு - நீக்கம், வீடு; பனுவல்படிவழி - ஞானநூலின் வழியே;

தொழிலையாழ் நெஞ்ச மிடர்படா வண்ணம்
தூங்கிரு ணடுநல்யா மத்தோர்
மழலையாழ் சிலம்ப வந்தகம் புகுந்தோன்
மருவிடந் திருவிடை மருதே. (௭)

வையவாம் பெற்றம் பெற்றமே றுடையார்
மாதவர் காதல்வைத் தென்னை
வெய்யவாஞ் செந்தீப் பட்டவிட் டிகைபோல்
விழுமியோன் முன்புபின் பென்கோ
நொய்யவா றென்ன வந்துள்வீற் றிருந்த
நூறுநூ றுயிர கோடி
மையவாங் கண்டத் தண்டவா னவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே. (௮)

கலங்கலம் பொய்கைப் புனற்றெளி விடத்துக்
கலந்தமண் ணிடைக்கிடந் தாங்கு
நலங்கலந் தடியேன் சிந்தையுட் புகுந்த
நம்பனே வம்பனே னுடைய
புலங்கலந் தவனே யென்றுநின் றுருகிப்
புலம்புவா ரவம்புகா ரருவி
மலங்கலங் கண்ணிற் கண்மணி யனையான்
மருவிடந் திருவிடை மருதே. (௯)

ஒருங்கிருங் கண்ணி னெண்ணில்புன் மாக்கள்
உறங்கிரு ணடுநல்யா மத்தோர்
கருங்கணின் றிமைக்குஞ் செழுஞ்சுடர் விளக்கம்
கலந்தெனக் கலந்துணர் கருவூர்
தருங்கரும் பனைய தீந்தமிழ் மாலை
தடம்பொழின் மருதயா ழுதிப்ப
வருங்கருங் கண்டத் தண்டவா னவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே. (௰)

திருச்சிற்றம்பலம்.

கலவி - கலப்பு. (௬) கரிகாடு–சுடுகாடு; எயிறு–பல்; நுரு–நெருங்கிய; முகிழ்நிலா–இளநிலா; அந்தி–செவ்வானம். (௭) ஆதனேன்–அறிவிலியாகிய நான்; தூங்கு - மிக்க. (௮) விட்டிகை–விட்டில்; மை அவாம் - மேகங்கள் விரும்பும். (௯) கலந்த - பொருந்திய; கலம் - ஆபரணம்.

பூந்துருத்திநம்பிகாடநம்பி திருவிசைப்பா.

க - திருவாரூர்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கைக்குவான் முத்தின் சரிவளை பெய்து
  கழுத்திலோர் தனிவடங் கட்டி
முக்கணா யகராய்ப் பவனிபோந் திங்ஙன்
  முரிவதோர் முரிவுமை யளவும்
தக்கசீர்க் கங்கை யளவுமன் றென்னே
  தம்மொருப் பாடுல கதன்மேல்
மிக்கசீ ராரூ ராதியாய் வீதி
  விடங்கராய் நடங்குலா வினரே. (க)

பத்தியா யுணர்வோ ரருளைவாய் மடுத்துப்
  பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா விருக்குந் தேவர்கா ளிவர்தந்
  திருவுரு விருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமா யுலகெலாம் படைத்த
  தனிமுழு முதலுமா யதற்கோர்
வித்துமா யாரூ ராதியாய் வீதி
  விடங்கராய் நடங்குலா வினரே. (உ)

திருச்சிற்றம்பலம்.

(க) வால் - வெண்மையான; சரி - கூட்டம்; வடம் - ஆரம்; முரிவது - தோன்றுவது; முரிவு - தோற்றம்; ஒருப்பாடு - சம்மதம்; குலாவினர் - ஆடுகின்றனர். (உ) பத்தியாய் உணர்வோர் - அன்புடையவராகிய சிவஞானிகள்; வாய்மடுத்து - வாய்வைத்து.

உ - கோயில்.

பண் - சாளரபாணி.

திருச்சிற்றம்பலம்.

முத்து வயிரமணி மாணிக்க மாலைகண்மேல்
தொத்து மிளிர்வனபோற் றூண்டு விளக்கேய்ப்ப
எத்திசையும் வானவர்க ளேத்து மெழிற்றில்லை
அத்தனுக்கு மம்பலமே யாடரங்க மாயிற்றே. (௧)

கடியார் கணம்புல்லர் கண்ணப்ப ரென்றுன்
அடியா ரமருலக மாளநீ யாளாதே
முடியாமுத் தீவேள்வி மூவா யிரவரொடும்
குடிவாழ்க்கை கொண்டுநீ குலாவிக்கூத் தாடினையே. (௨)

அல்லியம் பூம்பழனத் தாமூர்நா வுக்கரசைச்
செல்ல நெறிவகுத்த சேவகனே தென் றில்லைக்
கொல்லை விடையேறிக் கூத்தா டரங்காகச்
செல்வ நிறைந்தசிற் றம்பலமே சேர்ந்தனையே. (௩)

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட் டெமையாளும்
சம்பந்தன் காழியர்கோன் றன்னையுமாட் கொண்டருளி
அம்புந்து கண்ணாளுந் தானு மணி தில்லைச்
செம்பொன்செ யம்பலமே சேர்ந்திருக்கை யாயிற்றே. (௪)

களையா வுடலோடு சேரமா னாரூரன்
விளையா மதமாறா வெள்ளானை மேல்கொள்ள
முளையா மதிசூடி மூவா யிரவரொடும்
அளையா விளையாடு மம்பலநின் னாடரங்கே. (௫)

---

(௧) தொத்து - பூங்கொத்து; எய்ப்ப - நிகர்த்த; ஆடரங்கம் - நடனசபை. (௨) கடிஆர் - விளக்கம்பொருந்திய; முடியா - அழியாத. (௩) கொல்லை - கொல்லுந் தொழிலையுடைய அழகிய. (௪) அம்புஉந்து - அம்பு போன்ற. (௫) களையா - நீங்காத; முளை ஆம்மதி - பிறைச்சந்திரன்; அளையா - கலந்து. (௬) தற்சூழ - தன்னைச்

அகலோக மெல்லா மடியவர்க டற்சூழப்
புகலோக முண்டென்று புகுமிடநீ தேடாதே
புவலோக நெறிபடைத்த புண்ணியங்க ணண்ணியசீர்ச்
சிவலோக மாவதுவுந் தில்லைச்சிற் றம்பலமே. (௬)

கனக மணிமாடஞ் சூளிகைசூழ் மாளிகைமேல்
அளக மதிநுதலா ராயிழையார் போற்றிசைப்ப
ஒளிகொண்ட மாமணிக ளோங்கிருளை யாங்ககற்றும்
தெளிகொண்ட தில்லைச்சிற் றம்பலமே சேர்ந்தனையே. (௭)

பாடகமு நூபுரமும் பல்சிலம்பும் பேர்ந்தொலிப்பச்
சூடகக் கைநல்லார் தொழுதேத்தத் தொல்லுலகில்
நாடகத்தின் கூத்தை நவிற்றுமவர் நாடோறும்
ஆடகத்தான் மேய்ந்தமைந்த வம்பலநின் னாடரங்கே. (௮)

உருவத் தெரியுருவா யூழிதோ றெத்தனையும்
பரவிக் கிடந்தயனு மாலும் பணிந்தேத்த
இரவிக்கு நேராகி யெய்ந்திலங்கு மாளிகைசூழ்ந்
தரவிக்கு மம்பலமே யாடரங்க மாயிற்றே. (௯)

சேட ருறைதில்லைச் சிற்றம் பலத்தான்றன்
ஆட லதிசயத்தை யாங்கறிந்து பூந்துருத்திக்
காடன் றமிழ்மாலை பத்துங் கருத்தறிந்து
பாடு மிவைவல்லார் பற்றுநிலை பற்றுவரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

சூழும்படி; உண்டு - உளது. (௭) கனகம் - கழகம், கல்வி பயிலும் இடம்; சூளிகை - நிலாமுற்றம்; அளகம் - கூந்தல். (௮) நூபுரம் - பாதகிண்கிணி; சூடகம் - கைவளை; வேய்ந்துஅமைந்த - மூடப்பட்டுள்ள. (௯) இரவி - சூரியன்; எய்ந்து - பொருந்தி; அரவிக்கும் - ஆரவாரஞ்செய்யும். (௰) சேடர் - அடியார் (சேடி - இறைவர்). வடமொழியில் சேஷ சேஷி என்று கூறப்படும்.

கண்டராதித்தர் திருவிசைப்பா.

கோயில்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னா ருருவ மேல் விளங்க வெண்கொடி மாளிகைசூழப்
பொன்னார் குன்ற மொன்று வந்து நின்றது போலுமென்னாத்
தென்னா வென்று வண்டு பாடுந் தென்றில்லை யம்பலத்துள்
என்னா ரமுதை யெங்கள் கோவை யென்றுகொ லெய்துவதே. (க)

ஓவா முத்தீ யஞ்சு வேள்வி யாறங்க நான்மறையோர்
ஆவே படுப்பா ரந்த ணாள ராகுதி வேட்டுயர்வார்
மூவா யிரவர் தங்க ளோடு முன்னரங் கேறிநின்ற
கோவே யுன்றன் கூத்துக் காணக் கூடுவ தென்றுகொலோ. (உ)

முத்தீ யாளர் நான்ம றையர் மூவா யிரவர்நின்னோடு
ஒத்தே வாழுந் தன்மை யாள ரோதிய நான்மறையைத்
தெத்தே யென்று வண்டு பாடுந் தென்றில்லை யம்பலத்துள்
அத்தா வுன்ற னாடல் காண வணைவது மென்றுகொலோ. (ங)

மானைப் புரையு மடமென் னோக்கி மாமலை யாளோடும்
ஆனஞ் சாடுஞ் சென்னி மேலோ ரம்புலி சூடுமரன்
தேனைப் பாலைத் தில்லை மல்கு செம்பொனி னம்பலத்துக்
கோனை ஞானக் கொழுந்து தன்னைக் கூடுவ தென்றுகொலோ. (ச)

களிவா னுலகிற் கங்கை நங்கை காதல னேயருளென்
றொளிமான் முன்னே வரங்கி டக்க வுன்னடி யார்க்கருளும்
தெளிவா ரமுதே தில்லை மல்கு செம்பொனி னம்பலத்துள்
ஒளிவான் சுடரே யுன்னை நாயே னுறுவது மென்றுகொலோ. (ரு)

(க) மின்னார் - மாதர். (உ) ஆவேபடுப்பார் - பசுயாகஞ்செய்வோர். (ச) மடம் - இளமை; மேல் - மேன்மை; அம்புலி - சந்திரன். (ரு) வானுலகில் கங்கை - ஆகாயகங்கை. (எ) இலைஆர் - இலைவடிவு

பாரோர் முழுதும் வந்தி றைஞ்சப் பதஞ்சலிக் காட்டுகந்தான்
வாரார் முலையாண் மங்கை பங்கன் மாமறை யோர்வணங்கச்
சீரான் மல்கு தில்லைச் செம்பொ னம்பலத் தாடுகின்ற
காரார் மிடற்றெங் கண்ட னாரைக் காண்பது மென்றுகொலோ. (௬)

இலையார் கதிர்வே லிலங்கை வேந்த னிருபது தோளுமிற
மலைதா னெடுத்த மற்ற வற்கு வாளொடு நாள்கொடுத்தான்
சிலையாற் புரமூன் றெய்த வில்லி செம்பொனி னம்பலத்துக்
கலையார் மறிபொற் கையி னானைக் காண்பது மென்றுகொலோ. (௭)

வெங்கோல் வேந்தன் றென்ன னாடு மீழமுங் கொண்டதிறல்
செங்கோற் சோழன் கோழி வேந்தன் செம்பியன் பொன்னணிந்த
அங்கோல் வளையார் பாடி யாடு மணிதில்லை யம்பலத்துள்
எங்கோ னீச னெம்மி றையை யென்றுகொ லெய்துவதே. (௮)

நெடியா னோடு நான்மு கனும் வானவரு நெருங்கி
முடியான் முடிகண் மோதி யுக்க முழுமணி யின்றிரளை
அடியா ரலகி னாற்றி ரட்டு மணிதில்லை யம்பலத்துக்
கடியார் கொன்றை மாலை யானைக் காண்பது மென்றுகொலோ. (௯)

சீரான் மல்கு தில்லைச் செம்பொ னம்பலத் தாடிதன்னைக்
காரார் சோலைக் கோழி வேந்தன் றஞ்சையர் கோன்கலந்த
ஆரா வின்சொற் கண்டரா தித்த னருந்தமிழ் மாலைவல்லார்
பேரா வுலகிற் பெருமை யோடும் பேரின்ப மெய்துவரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

அமைந்த; நாள் - ஆயுள்; கலைஆர்மறி - மானின்இளங்கன்றை. (௮) வெங்கோல் - கொடுங்கோல்; கோழி - உறையூர்; அம்கோல் - அழகும்வளைவும். (௯) நெடியான் - திரிவிக்கிரமன்; உக்க - உதிர்ந்த; அலகு - துடைப்பம்; கடி - மணம். (௰) பேராஉலகு - எக்காலத்தும்அழியாத முத்திஉலகு.

வேணாட்டடிகள் திருவிசைப்பா.

கோயில்.

பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

துச்சான செய்திடினும் பொறுப்பரன்றே யாளுகப்பார்
கைச்சாலுஞ் சிறுகதலி யிலைவேம்புங் கறிகொள்வார்
எச்சார்வு மில்லாமை நீயறிந்து மெனதுபணி
நச்சாய்காண் டிருத்தில்லை நடம்பயிலு நம்பானே. (க)

தம்பானை சாய்ப்பற்ரு ரென்னு முதுசொல்லும்
எம்போல்வார்க் கில்லாமை யென்னளவே யறிந்தொழிந்தேன்
வம்பாளுர் பணியுகத்தி வழியடியேன் றொழிலிறையும்
நம்பாய்காண் டிருத்தில்லை நடம்பயிலு நம்பானே. (உ)

பொசியாதோ கீழ்க்கொம்பு நிறைகுளமென் றதுபோலத்
திசைநோக்கிப் பேழ்கணித்துச் சிவபெருமா னேயெனினும்
இசையாளு லென்றிறத்து மெனையுடையா ளுரையாடாள்
நசையானேன் றிருத்தில்லை நடம்பயிலு நம்பானே. (ங)

ஆயாத சமயங்க ளவரவர்கண் முன்பென்னை
நோயோடு பிணிநலிய விருக்கின்ற வதனாலே
பேயாவித் தொழும்பனைத்தம் பிரானிகழு மென்பித்தாய்
நாயேனைத் திருத்தில்லை நடம்பயிலு நம்பானே. (ச)

நின்றுநினைந் திருந்துகிடந் தெழுந்துதொழுந் தொழும்பனேன்
ஒன்றியொரு கானினையா திருந்தாலு மிருக்கவொட்டாய்

(க) துச்சான - இழிவானதொழில்கள்; ஆள் - அடிமை; நச்சாய் - விரும்பாய். (உ) வம்புஆளுர் - புதியராயினர்; தொழில் - தொண்டு; இறையும் - அற்பமும். (ங) பேழ்கணித்து - வாயைத் திறந்து; நசைஆனேன் - ஆசைப்பட்டேன். (ரு) வரவுநில்லாய் -

கன்றாபிரி கற்றாப்போற் கதறுவித்தி வரவுநில்லாய்
நன்றிதுவோ திருத்தில்லை நடம்பயிலு நம்பானே. (௫)

படமதமு மிடவயிறு முடையகளி றுடையபிரான்
அடியறிய வுணர்த்துவது மகத்தியனுக் கோத்தன்றே
இடுவதுபுல் லோரெருதுக் கொன்றினுக்கு வையிடுதல்
நடுவிதுவோ திருத்தில்லை நடம்பயிலு நம்பானே. (௬)

மண்ணோடு விண்ணளவு மனிதரொடு வானவர்க்கும்
கண்ணாவாய் கண்ணாகா தொழிதலுநான் மிகக்கலங்கி
அண்ணாவோ வென்றண்ணாந் தலமந்து விளித்தாலும்
கண்ணாயாற் றிருத்தில்லை நடம்பயிலு நம்பானே. (௭).

வாடாவாய் நாப்பிதற்றி யுனைநினைந்து நெஞ்சுருகி
வீடாஞ்செய் குற்றேவ லெற்றேமற் றிதுபொய்யில்
கூடாமே கைவந்து குறுகுமா றியானுன்னை
நாடாயாற் றிருத்தில்லை நடம்பயிலு நம்பானே. (௮).

வாளாமா லயன்வீழ்ந்து காண்பரிய மாண்பிதனைத்
தோளாரக் கையாரத் துணையாரத் தொழுதாலும்
ஆளோநீ யுடையதுவு மடியேனுன் றாள்சேரும்
நாளென்றோ திருத்தில்லை நடம்பயிலு நம்பானே. (௯).

பாவார்ந்த தமிழ்மாலை பத்தரடித் தொண்டனெடுத்
தோவாதே யழைக்கின்றா னென்றருளி நன்றுமிகத்
தேவேதென் றிருத்தில்லைக் கூத்தாடி நாயடியேன்
சாவாயு நினைக்காண்ட லினியுனக்குத் தடுப்பரிதே. (௰).

திருச்சிற்றம்பலம்.

வந்தெதிரில் நிற்கவுமாட்டாய். (௬) மிட - மிடா; அடி - மூலம்;
வை - வைக்கோல். (௭) கண் ஆகாது - ஆதரவுஇல்லாமல். (௮) வாடா
வாய் - வாய்வாடி; எற்றே - எத்தன்மைத்தோ. (௯) வாளா - சும்மா.
(௰) சாவாயும் - செத்தாலும்.

திருவாலியமுதனார் திருவிசைப்பா.

க - கோயில் - பாதாதிகேசம்.

பண் — பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மையன்மாதொரு கூறன்மால்விடை யேறிமான்மறி யேந்தியதடங்
கையன்கார்புரை யுங்கறைக் கண்டன் கனன்மழுவான்
ஐயனாரழ லாடுவானணி நீர்வயற்றில்லை யம்பலத்தான்
செய்யபாதம் வந்தென் சிந்தையுள்ளிடங் கொண்டனவே. (க)

சலம்பொற்றாமரைதாழ்ந்தெழுந்த தடமுந்தடம்புனல் வாய்மலர்தழீ
அலம்பிவண் டறையுமணி யார்தில்லை யம்பலவன் [இ
புலம்பிவானவர் தானவர்புகழ்ந் தேத்தவாடுபொற் கூத்தனார்கழல்
சிலம்புகிங் கிணியென் சிந்தையுள்ளிடங் கொண்டனவே. (உ)

குருண்டவார்குழற் கோதைமார்குயில் போன்மிழற்றிய கோலமாளி
திரண்ட தில்லைதன்னுட் டிருமல்கு சிற்றம்பலவன் [கை
மருண்டுமாமலை யான்மகடொழ வாடுங்கூத்தன் மணிபுரைதரு
திரண்ட வான்குறங்கென் சிந்தையுள்ளிடங் கொண்டனவே. (௩)

போழ்ந்தியானை தன்னைப்பொருப்பன் மகளுமையச்சங் கண்டவன்
தாழ்ந்த தண்புனல்சூழ் தடமல்கு சிற்றம்பலவன்
சூழ்ந்தபாய்புலித் தோன்மிசைத்தொடுத் துவீக்கும்பொன்னூறன்னி
னொடு, தாழ்ந்த கச்சதன்றே தமியேனைத் தளர்வித்ததே. (௪)

(க) மையல் - மோகம்; மான்மறி - மான்கன்று. (உ) சலம் — நீர்; தாழ்ந்துஎழுந்த - தங்கிவிளங்குகிற; தடம்புனல்வாய் - மிக்கநீரி லுள்ள; அலம்பி - கிண்டி; தானவர் — அசுரர். (௩) குருண்ட — சுருண்ட; மிழற்றிய - கொஞ்சிப்பேசுகிற; குறங்கு - தொடை. (௪) போழ்ந்து — பிளந்து; பொருப்பன் - மலையரசன்; தடம்மல்கு — தடாகங்கள்நிறைந்த; வீக்கும் — கட்டும்; பொன்னூல் - உபவீதம்.

பந்தபாச மெலாமறப்பசு பாசநீக்கிய பன்முனிவரோ
டந்தணர் வணங்கு மணியார்தில்லை யம்பலவன்
செந்தழல்புரை மேனியுந்திக ழுந்திருவயி றும்வயிற்றினுள்
உந்திவான்சுழி யென்னுள்ளத் துள்ளிடங் கொண்டனவே. (௫)

குதிரைமாவொடு தேர்பலகுவிந் தீண்டுதில்லையுட் கொம்பனாரொடு
மதுரவாய் மொழியார் மகிழ்ந்தேத்து சிற்றம்பலவன்
அதிரவார்கழல் வீசிநின்றழ காநடம்பயில் கூத்தன்மேல்
திகழுதர பந்தனமென் னுள்ளத்துள்ளிடங் கொண்டனவே. (௬)

படங்கொள்பாம்பணை யானொடுபிர மன்பரம்பர மாவருளென்று
தடங்கையாற் றொழுவுந் தழலாடுசிற் றம்பலவன்
தடங்கைநான்குமத் தோள்களுந்தட மார்பினிற்பூண் கண்மேற்றிசை
விடங்கொள் கண்டமன்றே வினையேனை மெலிவித்ததே- (௭)

செய்யகோடுடன்கமலமலர்சூழ்தரு தில்லைமாமறையோர்கடாந்தொழ
வைய முய்யநின்று மகிழ்ந்தாடு சிற்றம்பலவன்
செய்யவாயின் முறுவலுந்திகழுந் திருக்காதுங்காதினின் மாத்திரை
களோ, டைய தோடுமன்றே யடியேனையாட் கொண்டனவே. (௮)

செற்றவன்புரந் தீயெழச்சிலை கோலியாரழ லூட்டினானவன்
எற்றி மாமணிக ளெறிநீர்த்தில்லை யம்பலவன்
மற்றைநாட்டமி ரண்டொடுமல ருந்திருமுகமு முகத்தினுள்
நெற்றி நாட்டமன்றே நெஞ்சுளேதிளைக் கின்றனவே. (௯)

தொறுக்கள் வான்கமல மலருழக்கக் கரும்புநற் சாறுபாய்தர
மறுக்கமாய்க் கயல்கண் மடைபாய்தில்லை யம்பலவன்
முறுக்குவாசிகை தன்னொடுமுகிழ்த்தவவ்வகத்தி மொட்டொடுமத்த
மும், பிறைக்கொள் சென்னியன்றே பிரியாதென்னு ளின்றனவே.

---

(௫) பந்தபாசம் - பிறவிக்கட்டு. (௬) மா - யானை; குவிந்து ஈண்டு-கூடிநெருங்கின; மதுரவாய்மொழியார் - அடியார்; உதரபந்தனம் - அரைப்பட்டிகை. (௮) கோடு - சங்கு; மாத்திரை - காதணிகளில் ஒன்று. (௯) கோலி - வளைத்து; எற்றிஎறி - எடுத்தெறிகிற; நாட்டம் - கண்; திளைக்கின்றன - பதிந்தன. (௰) தொறுக்கள் - பசுக்கூட்டங்கள்; உழக்க - அலைக்க; மறுக்கமாய் - மயக்கமடைந்து; முறுக்கு - முறுக்கப்பட்ட; வாசிகை - பூமாலை.

தூவிநீரொடு பூவவைதொழு தேத்துகையின ராகிமிக்கதோர்
ஆவியுண் ணிறுத்தி யமர்ந்தூறிய வன்பினராய்த்
தேவர்தாந்தொழ வாடியதில்லைக் கூத்தனைத்திரு வாலிசொல்லிவை
மேவ வல்லவர்கள் விடையானடி மேவுவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

உ - கோயில் - பவளமால்வரை.

பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பவளமால் வரையைப் பனிபடர்ந் தனையதோர் படரொளி தருதிரு
நீறுங், குவளைமாமலர்க் கண்ணியுங்கொன்றையுந் துன்றுபொற்குழற்
றிருச்சடையும்,திவள்மாளிகைசூழ்தருதில்லையுட்டிருநடம்புரிகின்ற
தவளவண்ணனைநினைதொறுமென்மனந்தழன்மெழுகொக்கின்றதே.

ஒக்க வோட்டந்த வந்தியு மதியமு மலைகட லொலியோடு
நெக்கு வீழ்தரு நெஞ்சினைப் பாய்தலு நிறையழிந் திருப்பேனைச்
செக்கர் மாளிகை சூழ்தரு தில்லையுட் டிருநடம் வகையாலே
பக்க மோட்டந்த மன்மதன் மலர்க்கணை படுந்தொறு மலந்தேனே.

அலந்து போயினே னம்பலக் கூத்தனே யணிதில்லை நகராளீ
சிலந்தி யையர சாள்கவென் றருள்செய்த தேவ தேவீசனே
உலந்த மார்க்கண்டிக் காகியக் காலனை யுயிர்செக வுதைகொண்ட
மலர்ந்த பாதங்கள் வனமுலை மேலொற்ற வந்தருள் செய்யாயே.

அருள்செய் தாடுநல் லம்பலக் கூத்தனே யணிதில்லை நகராளீ
மருள்செய் தென்றனை வனமுலை பொன்பயப் பிப்பது வழக்காமோ

(௧௧) பூஅவை - மலர்களாகிய அவைகளை; மேவ - துதிக்க.

(௧) மால் - பெரிய; குழல் - சுருட்டி முடிக்கின்ற; திவள - நுட்பமாகிய வேலைகளமைந்த; தவளவண்ணனை - வெண்ணிற முடையவனை. (௨) ஒக்க ஓட்டந்த - ஒக்க ஓடின; அந்தியும் - அந்திக்காலமும்; நிறை - கற்பின் வரம்பு. (௩) உலந்த - வருந்தின; உயிர் செக - உயிர் நீங்க; வனம் - அழகிய. (௪) பொன் - தேமல்;

திரளு நீண்மணிக் கங்கையைத் திருச்சடைச்சேர்த்தியச்செய்யாளுக்
குருவம் பாகமு மீந்தநல் லந்தியை யொண்ணுதல் வைத்தோனே.

வைத்த பாதங்கண் மாலவன் காண்கிலன் மலரவன் முடிதேடி
எய்த்து வந்திழிந் தின்னமுந் தறிக்கின்றானெழின்மறையவற்றாலே
செய்த்த லைக்கம லம்மலர்ந் தோங்கிய தில்லையம் பலத்தானைப்
பத்தி யார்சென்று கண்டிட வென்மனம் பதைபதைப் பொழியாதே.

தேய்ந்துமெய்வெளுத் தகம்வளைந் தரவினையஞ்சித் தானிருந்தேயும்
காய்ந்து வந்துவந் தென்றலை வலிசெய்து கதிர்நிலா வெரிதூவும்
ஆய்ந்த நான்மறை யந்தணர் தில்லையு ளம்பலத் தானுடல்
வாய்ந்தமாமலர்ப்பாதங்கள்காண்பதோர்மனத்தினையுடையேற்கே.

உடையும் பாய்புலித் தோலுநல் லரவமு முண்பதும் பலிதேர்ந்து
விடைய தூர்வது மேவிடங் கொடுவரை யாகினு மென்னெஞ்சம்
மடைகொள்வாளைகள் குதிகொளும் வயற்றில்லை யம்பலத்தனலாடும்
உடைய கோவினை யன்றிமற் றாரையு முள்ளுவ தறியேனே. (௭)

அறிவு மிக்கநன் ஞானமு நிறைமையு மாசையு மிங்குள்ள
உறவும் பெற்றநற் றாயொடு தந்தையு முடன்பிறந் தவரோடும்
பிறியவிட்டினை யடைந்தனனென்றுகொள் பெரும்பற்றப்புலியூரின்
மறைக ணான்குங்கொண் டந்தண ரேத்தநன் மாநட மகிழ்வானே.

வான நாடுடை மைந்தனே யோவென்பன் வந்தரு ளாயென்பன்
பானெ யைந்தாட லாடிய படர்சடைப் பால்வண்ண னேயென்பன்
தேன மர்பொழில் சூழ்தரு தில்லையுட் டிருநடம் புரிகின்ற
ஏன மாமணிப் பூணணி மார்பனே யெனக்கருள் புரியாயே. (௯)

புரியும் பொன்மதில் சூழ்தரு தில்லையுட் பூசுரர் பலர்போற்ற
எரிய தாடுமெம் மீசனைக் காதலித் தினையவண் மொழியாக

செய்யாள் - உமாதேவி; அந்தியை - அக்கினியை; ஒள்நுதல் - அழகிய நெற்றி. (௫) செய்தலை - வயல்களில். (௬) வளைந்து - வாடி; காய்ந்து - கோபித்து; கதிர் - ஒளி; எரி - நெருப்பு. (௭) மேவு இடம் - பொருந்தும் இடம். (௯) வான நாடு - சிவபுரம்; மைந்தனே - வல்லமையுடையவனே; ஏனம் - பன்றிக்கொம்பு. (௰) புரியும் - விரும்புகிற; இனையவள் - வருந்தினவள்.

வரைசெய் மாமதின் மயிலையர் மன்னவன் மறைவல திருவாலி
பரவல் பத்திவை வல்லவர் பரமன தடியிணை பணிவாரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---

௫ - கோயில்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

அல்லாய்ப் பகலா யருவா யுருவா யாரா வமுதமாய்க்
கல்லா னிழலாய் கயிலை மலையாய் காண வருளென்று
பல்லா யிரம்பேர் பதஞ்ச லிகள் பரவ வெளிப்பட்டுச்
செல்வாய் மதிற் றில்லைக் கருளித் தேவ னடுமே. (௧)

அன்ன நடையா ரமுத மொழியா ரவர்கள் பயிற்றில்லைத்
தென்னன் றமிழு மிசையுங் கலந்த சிற்றம் பலந்தன்னுள்
பொன்னு மணியு நிரந்த தலத்துப் புலித்தோல் பியற்கிட்டு
மின்னி னிடையா ளுமையாள் காண விகிர்த னடுமே. (௨)

இளமென் முலையா ரெழின்மைந் தரொடு மேரா ரமளிமேல்
திளையு மாடத் திருவார் தில்லைச் சிற்றம் பலந்தன்னுள்
வளர்பொன் மலையுள் வயிர மலைபோல் வலக்கை கவித்துநின்
றளவில் பெருமை யமரர் போற்ற வழக னடுமே. (௩)

சந்து மகிலுந் தழைப்பீ லிகளுஞ் சாதி பலவுங்கொண்
டுந்தி யிழியு நிவவின் கரைமே லுயர்ந்த மதிற்றில்லைச்
சிந்திப் பரிய தெய்வப் பதியுட் சிற்றம் பலந்தன்னுள்
நந்தி முழவங் கொட்ட நட்ட நாத னடுமே. (௪)

---

(௧) அல் - இரவு; செல்வாய் - மேகங்கள் தவழ்கின்ற. (௨) பயில் - நெருங்கிய; பியல் - பிடர்; விகிர்தன் - மெய்யன். (௩) அமளி-சயனம்; திளையும் - (இன்பத்தை) அநுபவிக்கும்; கவித்து - குவித்து. (௪) சந்து - சந்தனமரம்; பீலி - மயிற்றோகை; நிவவின் - நிவவு நதிக்கரையின் மீது; முழவம் - மத்தளம்; நட்டம் -

ஓமப் புகையு மகிலின் புகையு முயர்ந்து முகிலோயத்
தீமெய்த் தொழிலார் மறையோர் மல்கு சிற்றம் பலந்தன்னுள்
வாமத் தொழிலா ரெடுத்த பாத மழலைச் சிலம்பார்க்கத்
தீமெய்ச் சடைமேற் றிங்கள் சூடித் தேவனாடுமே. (ரு)

குரவங் கோங்கங் குளிர்புன்னை கைதை குவிந்த கரைகண்மேல்
திரைவந் தலைவுந் தில்லை மல்கு சிற்றம் பலந்தன்னுள்
வரைபோன் மலிந்த மணிமண் டபத்து மறையோர் மகிழ்ந்தேத்த
அரவ மாட வனல்கை யேந்தி யழக னாடுமே. (சு)

சித்தர் தேவ ரியக்கர் முனிவர் தேனார் பொழிற்றில்லை
அத்தா வருளா யணியம் பலவா வென்றென் றவரேத்த
முத்து மணியு நிரந்த தலத்துண் முளைவெண் மதிசூடிக்
கொத்தார் சடைக டாழ நட்டங் குழக னாடுமே. (எ)

அதித்த வரக்க னெரிய விரலா லடர்த்தா யருளென்று
துதித்து மறையோர் வணங்குந் தில்லைச் சிற்றம் பலந்தன்னுள்
உதித்த போழ்தி லிரவிக் கதிர்போ லொளிர்மா மணியெங்கும்
பதித்த தலத்துப் பவள மேனிப் பரம னாடுமே. (அ)

மாலோ டயனு மமரர் பதியும் வந்து வணங்கிநின்
றால கண்டா வரனே யருளா யென்றென் றவரேத்தச்
சேலா டும்வயற் றில்லை மல்கு சிற்றம் பலந்தன்னுள்
பாலா டுமுடிச் சடைக டாழப் பரம னாடுமே. (கூ)

நெடிய சமணு மறைசாக் கியரு நிரம்பாப் பல்கோடிச்
செடியுந் தவத்தோ ரடையாத் தில்லைச் சிற்றம் பலந்தன்னுள்
அடிக ளவரை யாரூர் நம்பி யவர்க ளிசைபாடக்
கொடியும் விடையு முடைய கோலக் குழக னாடுமே. (௰)

கூத்து. (ரு) வாமத்து - இடது பாகத்தில்; மழலை - மென்மை. (சு) குரவம் - குராமலர்; கோங்கம் - கோங்கமலர்; கைதை - தாழை மலர். (எ) தேன் ஆர் - தேன்பொருந்திய; நிரந்த - நிரம்பிய; முளைமதி - இளந்திங்கள் (ஒற்றைக்கலைச்சந்திரன்) (அ) அதித்த - ஆரவாரித்த; பரமன் - மேலானவன். (கூ) சேல் ஆடும் - சேல்கள் குதிக்கும்; பால் ஆடும் - பாலினால் அபிஷேகஞ் செய்யப்படும். (௰) நிரம்பா-அடையாமல்;செடியும்-குற்றம் பொருந்திய;கொடி-துவஜம்.

வானோர் பணிய மண்ணோ ரேத்த மன்னி நடமாடும்
தேனார் பொழில்சூழ் தில்லை மல்கு சிற்றம் பலத்தானைத்
தூநான் மறையா னமுத வாலி சொன்ன தமிழ்மாலைப்
பானேர் பாடல் பத்தும் பாடப் பாவ நாசமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

௪ - கோயில்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கோல மலர்நெடுங்கட் கொவ்வைவாய்க்கொடி யேரிடையீர்
பாலினை யின்னமுதைப் பரமாய பரஞ்சுடரைச்
சேலுக ளும்வயல்சூழ் தில்லைமாநகர்ச் சிற்றம்பலத்
தேல்வுடை யெம்மிறையை யென்றுகொல் காண்பதுவே. (௧)

காண்பதி யானென்றுகொல் கதிர்மாமணி யைக்கனலை
ஆண்பெண் ணருவுருவென் றறிதற்கரி தாயவனைச்
சேண்பணை மாளிகைசூழ் தில்லைமாநகர்ச் சிற்றம்பலம்
மாண்புடை மாநடஞ்செய் மறையோன்மலர்ப் பாதங்களே. (௨)

கள்ளவிழ் தாமரைமேற் கண்டயனொடு மால்பணிய
ஒள்ளெரி யின்னடுவே யுருவாய்ப்பரந் தோங்கியசீர்த்
தெள்ளிய தண்பொழில்சூழ் தில்லைமாநகர்ச் சிற்றம்பலத்
துள்ளெரி யாடுகின்ற வொருவனை யுணர்வரிதே. (௩)

அரிவையோர் கூறுகந்தா னழகன்னெழின் மால்கரியின்
உரிவைநல் லுத்தரிய முகந்தானும்ப ரார்தம்பிரான்
புரிபவர்க் கின்னருள்செய் புலியூர்த்திருச் சிற்றம்பலத்
தெரிமகிழ்ந் தாடுகின்ற வெம்பிரானென் னிறையவனே. (௪)

---

(௧) ஏல்வுஉடை - எழுந்தருளியிருத்தலையுடைய. (௨) பணை - பருத்த. (௩) கள் - தேன். (௪) மால்கரி - பெரியயானை. (௫) உயிர்ப்

இறைவனை யென்கதியை யென்னுளேயுயிர்ப் பாகிநின்ற
மறைவனை மண்ணும் விண்ணு மலிவான்சுட ராய்மலிந்த
சிறையணி வண்டறையுந் தில்லைமாநகர்ச் சிற்றம்பலம்
நிறையணி யாமிறையை நினைத்தேனினிப் போக்குவனே. (௫)

நினைத்தேனினிப் போக்குவனோ நிமலத்திர ளைநினைப்பார்
மனத்திரு ளேயிருந்த மணியைமணி மாணிக்கத்தைக்
கனைத்திழி புங்கழனிக் கனகங்கதி ரொண்பவளம்
சினத்தொடு வந்தெறியுந் தில்லைமாநகர்க் கூத்தனையே. (௬)

கூத்தனை வானவர்தங் கொழுந்தைக்கொழுந் தாயெழுந்த
மூத்தனை மூவருவின் முதலைமுத லாகிநின்ற
ஆத்தனைத் தான்படைக்கு மந்தணர்தில்லை யம்பலத்துள்
ஏத்தநின் றாடுகின்ற வெம்பிரானடி சேர்வன்கொலோ. (௭)

சேர்வன்கொ லோவன்னைமீர் திகழும்மலர்ப் பாதங்களை
ஆர்வங்கொ ளத்தழுவி யணிநீறென் முலைக்கணியச்
சீர்வங்கம் வந்தணவுந் தில்லைமாநகர்ச் சிற்றம்பலத்
தேர்வங்கை மான்மறிய னெம்பிரானென்பொ னேசனையே. (௮)

நேசமு டையவர்க ணெஞ்சுளேயிடங் கொண்டிருந்த
காய்சின மால்விடையூர் கண்ணுதலைக் காமருசீர்த்
தேசமி குபுகழோர் தில்லைமாநகர்ச் சிற்றம்பலத்
தீசனை யெவ்வுயிர்க்கு மெம்மிறைவனென் றேத்துவனே. (௯)

இறைவனை யேத்துகின்ற விளையாண்மொழி யின்றமிழால்
மறைவல நாவலர்கண் மகிழ்ந்தேத்துசிற் றம்பலத்தை
அறைசெந்நெல் வான்கரும்பி னணியாலைகள் சூழ்மயிலை
மறைவல வாலிசொல்லை மகிழ்ந்தேத்துக வானெளிதே. (௰)

திருச்சிற்றம்பலம்.

பாகி - உசவாசநிசுவாசமாகி. (௭) மூத்தனை - மூப்பனை. (௮) வங்கம் - மரக்கலம்; ஏர்வஅம்கை - எழுச்சியையுடைய அழகியகரம்; பொனேசன் - புவனேசன். (௯) காமர்சீர் - அழகிய சிறப்புவாய்ந்த. (௰) அறை - ஒலி.

புருடோத்தமநம்பி திருவிசைப்பா.

க. கோயில்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

வாரணிநறுமலர்வண்டுகிண்டு பஞ்சமஞ்செண்பகமாலைமாலை, வாரணி வனமுலை மெலியும்வண்ணம் வந்துவந்திவை நம்மைமயக்குமாலோ சீரணிமணிதிகழ் மாடமோங்கு தில்லையம்பலத்தெங்கள் செல்வன்வாரான், ஆரெனையருள்புரிந் தஞ்சலென்பா ராவியின் பரமென்றனாதரவே. (க)

ஆவியின் பரமென்ற னாதரவு மருவினை யேனைவிட் டம்மவம்ம
பாவிவன்மனமிதுபையவேபோய்ப்பனிமதிச்சடையான்பாலதாலோ
நீவியு நெகிழ்ச்சியு நிறையழிவு நெஞ்சமுந் தஞ்சமி லாமையாலே
ஆவியின் வருத்தமி தாரறிவா ரம்பலத் தருநட மாடுவானே. (உ)

அம்பலத் தருநட மாடவேயு மியாது கொல் விளைவதென்றஞ்சிநெஞ்சம், உம்பர்கள்வன்பழி யாளர்முன்னேயூட்டினர்நஞ்சையென் றேயுமுய்யேன், வன்பலபடையுடைப்பூதஞ்சூழவானவர்கணங்களை மாற்றியாங்கே,என்பெரும் பயலைமை தீரும்வண்ண மெழுந்தரு ளாயெங்கள் வீதியூடே. (௩)

எழுந்தருளாயெங்கள் வீதியூடேயேதமின்முனிவ ரொடெழுந்த ஞானக், கொழுந்தது வாகிய கூத்தனேநின் குழையணி காதினின்மாத்திரையும், செழுந்தட மலர்புரை கண்கண்மூன்றுஞ் செங்கனி வாயுமென் சிந்தைவெளவ, வழுந்துமென் னாருயிர்க் கென்செய்கேனோ வரும்புன லலமருஞ் சடையினானே. (௪)

(க) வார் - நீர்; கிண்டு - பாடு; பஞ்சமம் - பஞ்சமப்பெண்; மாலை (பின்னையது) - மாலைக்காலம்; பாரம் - தாரகம். (உ) ஆதரவும் - ஆசையும்; நீவியும் - ஒட்டியாணமும்; அழிவும் - கேடும். (௩) மாற்றி - ஒழித்து; பயலைமை - பசலைத்தன்மை. (௪) மாத்திரை - ஒர்வித

அரும்புன லலம்புஞ் சடையினானை யமரர்க ளடிபணிந் தரற்றவங்·
நான், பெரும்புர மெரிசெய்த சிலையின்வார்த்தை பேசவு நையுமென்
பேதைநெஞ்சம், கருந்தட மலர்புரை கண்டவண்டார் காரிகை யார்
முன்பெண்பெண்மைதோற்றேன், திருந்திய மலரடி நசையினாலே·
தில்லையம்பலத்தெங்க டேவதேவே. (௫)

தில்லையம் பலத்தெங்க டேவதேவைத் தேறிய வந்தணர் சிந்தைசெய்·
யும், எல்லைய தாகிய வெழில்கொள்சோதியென் னுயிர் காவல்கொண்
டிருந்தவெந்தாய், பல்லையார் பசுந்தலை யோடிடறிப் பாதமென்மல·
ரடி நோவநீபோய், அல்லினி லருநட மாடிலெங்க ளாருயிர்காவலிங்·
கரிதுதானே. (௬)

ஆருயிர் காவலிங் கருமையாலே யந்தணர் மதலைநின் னடிபணியக்·
கூர்நுனைவேற்படைக்கூற்றஞ்சாயக் குரைகழல் பணிகொள மலைந்த
தென்றால், ஆரினி யமரர்கள்குறைவிலாதா ரவரவர் படுதுயர்களைய·
நின்ற, சிருயி ரேயெங்க டில்லைவாணா சேயிழை யார்க்கினி வாழ்·
வரிதே. (௭)

சேயிழையார்க்கினிவாழ்வரிதுதிருச்சிற்றம்பலத்தெங்கள்செல்வனே
நீ,தாயினுமிகநல்லையென்றடைந்தேன்றனிமையைநினைகிலைசங்கரா
வுன், பாயிரும்புலியதளின்னுடையும்பையமேலெடுத்தபொற்பாதமு·
ங்கண், டேயிழந்ததுசங்கமாவாளெங்களையாளுடையீசனேயோ.

எங்களை யாளுடையீசனேயோவிளமுலைமுகநெகமுயங்கி நின்பொற்
பங்கயம் புரைமுக நோக்கிநோக்கிப் பனிமதிநிலவதென் மேற்படரச்
செங்கயல்புரை கண்ணிமார் கண்முன்னே திருச்சிற்றம்பல முடனே
புகுந்து, அங்குனபணிபலசெய்து நாளு மருள்பெறினகலிடத்திருக்க
லாமே. (௯)

அருள்பெறி னகலிடத்திருக்கலாமென் றமரர்கடலைவ னுமயனுமாலும்·
இருவரு மறிவுடையாரின்மிக்கா ரேத்துகின்றா ரின்னமெங்கள்கூத்·

காதலா. (௫) வார்த்தை - புகழ். (௬) தேறிய - உள்ளந்தெளிந்த.
(௭) மதலை - மார்க்கண்டன்; கூற்றம் - யமன்; மலைந்தது - உதைத்
தது; சிருயிரே - பரமாத்மாவே. (௮) அதள் - தோல்; சங்கம்-வளை
யல். (௯) நெக - அழுங்க; முயங்கி - அணைந்து; மதிநிலவு - சந்திர
கிரணம்; அகலிடம் - நிலவுலகம். (௰) இருவரும் - பதஞ்சலிவியாக்·

தை, மருள்படு மழலைமென்மொழி யுமையாள் கணவனை வல்வினை யாட்டியேனுன், அருள்பெற வலமரு நெஞ்சமாவா வாசையை யளவறுத்தாரிங்காரே. (௰)

ஆசையை யளவறுத்தாரிங்காரேயம்பலத்தருநடமாடுவானை, வாசநன் மலரணிகுழன் மடவார் வைகலுங் கலந்தெழு மாலைப்பூசல், மாசிலா மறைபலவோதுநாவன்வண்புருடோத்தமன்கண்டுரைத்த,வாசகமலர்கள்கொண் டேத்தவல்லார் மலைமகள் கணவனை யணைவர்தாமே.(௧௧)

திருச்சிற்றம்பலம்.

உ - கோயில்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

வானவர்கள் வேண்ட வளர்நஞ்சை யுண்டார்தாம்
ஊனமிலா வென்கை யொளிவளைகள் கொள்வாரோ
தேனல்வரி வண்டறையுந் தில்லைச்சிற் றம்பலவர்
நானமரோ வென்றே நாடகமே யாடுவரே. (௧)

ஆடிவருங் காரரவு மைம்மதியும் பைங்கொன்றை
சூடிவரு மாகண்டேன் றோள்வளைக டோற்றூலும்
தேடியிமை யோர்பரவுந் தில்லைச்சிற் றம்பலவர்
ஆடிவரும் போதருகே நிற்கவுமோ வொட்டாரே. (௨)

ஒட்டா வகையவுணர் முப்புரங்க ளோரம்பால்
பட்டாங் கழல்விழுங்க வெய்துகந்த பண்பினர்
சிட்டார் மறையோவாத் தில்லைச்சிற் றம்பலவர்
கொட்டா நடமாடக் கோல்வளைகள் கொள்வாரே. (௩)

கிரபாதரும். (௧௧) மாலைப்பூசல் - மாலைக்காலத்துப்போர், அதாவது அந்திவானம் முதலியவற்றை நோக்கி மாதர் இரங்குதல்.

(௧) கொள்வாரோ-கவர்வாரோ;வரிவண்டு-இசைப்பாட்டுடைய வண்டுகள். (௨) தோள்வளைகள் - கேயூர முதலிய அணிகள். (௩) ஒட்டா-பொருந்தாத; கொட்டா-கைகொட்டி. (௪) இவை படுவார் -

ஆரேயிவை படுவா ரையங் கொளவந்து
போரேடி யென்று புருவ மிடுகின்றார்
தேரார் விழவோவாத் தில்லைச்சிற் றம்பலவர்
தீராநோய் செய்வாரை யொக்கின்றார் காணீரே. (௪)

காணீரே யென்னுடைய கைவளைகள் கொண்டார்தாம்
சேணார் மணிமாடத் தில்லைச்சிற் றம்பலவர்
பூணார் வனமுலைமேற் பூவம்பாற் காமவேள்
ஆணாடு கின்றவா கண்டு மருளாரே. (௫)

ஏயிவரே வானவர்க்கும் வானவரே யென்பாரால்
தாயிவரே யெல்லார்க்குந் தந்தையுமா மென்பாரால்
தேய்மதியஞ் சூடிய தில்லைச்சிற் றம்பலவர்
வாயின கேட்டறிவார் வையகத்தா ராவாரே. (௬)

ஆவா விவர்தந் திருவடிகொண் டந்தகன்றன்
மூவா வுடலவியக் கொன்றுகந்த முக்கண்ணர்
தேவா மறைபயிலுந் தில்லைச்சிற் றம்பலவர்
கோவா வினவளைகள் கொள்வாரோ வென்னையே. (௭)

என்னை வலிவாரா ரென்ற விலங்கையர்கோன்
மன்னு முடிக ணெரித்த மணவாளர்
செந்நெல் விளைகழனித் தில்லைச்சிற் றம்பலவர்
முன்னந்தான் கண்டறிவா ரொவ்வாரிம் முத்தரே. (௮)

முத்தர் முதுபகலே வந்தென்ற னில்புகுந்து
பத்தர் பலியிடுக வென்றெங்கும் பார்க்கின்றார்
சித்தர் கணம்பயிலுந் தில்லைச்சிற் றம்பலவர்
கைத்தலங்கள் வீசிநின் றாடுங்கா ணேக்காரே. (௯)

இத்துன்பங்களை அநுபவிப்பார்; புருவ மிடுகின்றார் - கண் வைக்கின்றார். (௫) ஆண் நாடுகின்றவாறு - ஆண்மை செலுத்துவதைப் பார்த்தும். (௬) ஏய் - பொருந்திய; தேய்மதி - ஒருகலைச் சந்திரன்; வாயின் - வாய்மொழியாகிய வேத சிவாகமங்கள். (௭) மூவா - முதிராத; தேவு ஆம் - தெய்வத்தன்மை பொருந்திய; கோவா - கோத்த; இனம் - கூட்டம். (௮) முத்தர் - பாசத்தினின்றும் நீங்கினவர். (௯) முதுபகல் - உச்சிக்காலம்; பலி - பிச்சை; கைத்-

நோக்காத தன்மையா னோக்கிலோ மியாமென்று
மாற்காழி யீந்து மலரோனை நிந்தித்துச்
சேக்காத லித்தேறுந் தில்லைச்சிற் றம்பலவர்
ஊர்க்கேவந் தென்வளைகள் கொள்வாரோ வொண்ணுதலீர். (௰)

ஒண்ணுதலி காரணமா வும்பர் தொழுதேத்துங்
கண்ணுதலான் றன்னைப் புருடோத்த மன்சொன்ன
பண்ணுதலைப் பத்தும் பயின்ருடிப் பாடினுர்
எண்ணுதலைப் பட்டங் கினிதா விருப்பாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சேதிராயர் திருவிசைப்பா.

கோயில்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

சேலு லாம்வயற் றில்லையு ளீருமைச்
சால நாளயன் சார்வதி னுலிவள்
வேலை யார்விட முண்டுகந் தீரென்று
மால தாகுமென் வாணு தலே. (௧)

வாணு தற்கொடி மாலது வாய்மிக
நாண மற்றன ளுனறி யேனினிச்
சேணு தற்பொலி தில்லையு ளீருமைக்
காணி லெய்ப்பிலள் காரி கையே. (௨)

தலங்கள் - கைகள். (௰) சே - இடபம்; ஒண்நுதல் - அழகிய நெற்றி. (௧௧) பண்நுதல் - பண்களோடு கூடிய; எண்ணுதலைப் பட்டு - மதிக்கப்பட்டு; அங்கு - சிவலோகம்.

(௧) வாள்நுதல் - ஒளிபொருந்திய நெற்றியையுடையவள். (௨) எய்ப்பு - மெலிவு. (௩) வேரி - வாசனை. (௪) செம்மலோர் - பெரு

காரி கைக்கரு ளீர்கரு மால்கரி
ஈரு ரித்தெழு போர்வையி னீர்மிகு
சேரி யற்றில்லை யாய்சிவ னேயென்று
வேரி நற்குழ லாளிவள் விம்முமே. (௩)

விம்மி விம்மியே வெய்துயிர்த் தாளெனும்
உம்மை யேநினைந் தேத்துமொன் றாகிலள்
செம்ம லோர்பயி றில்லையு ளீரெங்கள்
அம்ம லோதி யயர்வு றுமே. (௪)

அயர்வுற் றஞ்சலி கூப்பியந் தோவெனை
உயவன் கொன்றையந் தாரரு ளாயெனும்
செயலுந் தார்மதிற் றில்லையு ளீரிவள்
மயலுற் றாளென்றன் மாதி வளே. (௫)

மாதொர் கூறன்வண் டார்கொன்றை மார்பனென்
றோதி யுய்வனென் பைங்கிளி யேயெனும்
சேதித் தீர்சிர நான்முக னைத்தில்லை
வாதித் தீரென் மடக்கொடி யையே. (௬)

கொடியைக் கோமளச் சாதியைக் கொம்பிளம்
பிடியை யென்செய்திட் டீர்பகைத் தார்புரம்
இடியச் செஞ்சிலை கால்வளைத் தீரென்று
முடியு நீர்செய்த மூச்ச றவே. (௭)

அரவ னேயென்று பன்றிப்பி னேகிய
மறவ னேயெனை வாதைசெய் யேலெனும்
சிறைவண் டார்பொழிற் றில்லையு ளீரெனும்
பிறைகு லாநுதற் பெய்வ ளையே. (௮)

மையுடையோர்; அம்மலோதி - அழகிய வளம்பொருந்திய கூந்தலையுடையவள். (௫) செயல்உற்று-நட்பமாகிய தொழில்கள் அமைந்து. (௬) வாதித்தீர் - வருத்தினீர். (௭) கோமளச்சாதியை - மெல்லியலை; முடியும் - இறந்துபடுவள்; நீர் - நல்லகுணம். (௮) சிறைவண்டு - சிறகுகளுடையவண்டு; குலாம் - பிரகாசிக்கிற; பெய்வளை - இடப்பட்ட வளையல்களையுடையவள். (௯) கோள்இழைத்தீர் - உதைத்

அன்ற ருக்கனைப் பல்லி றுத் தானையைக்
கொன்று காலனைக் கோளிழைத் தீரெனும்
தென்ற லார்பொழிற் றில்லையு ளீரிவள்
ஒன்று மாகில ளும்பொ ருட்டே. (௯)

ஏயு மாறெழிற் சேதிபர் கோன்றில்லை
நாய னாரை நயந்துரை செய்தன
தூய வாறுரைப் பார்துறக் கத்திடை
ஏய வின்ப மெய்தியி ருப்பரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

ஆகத் திருப்பதிகம் - உ௮.

திருவிசைப்பா முற்றுப்பெற்றது.

தீர்; ஒன்றும்ஆகிலள். ஒருபொருளுமாகிலன். (௰) துறக்கம் - சிவலோகம்; இன்பம் - பேரின்பம்.

உ

சிவமயம்.

சேந்தனாரருளிச்செய்த

திருப்பல்லாண்டு.

கோயில்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள் வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்துபுவனியெல்லாம்விளங்க
அன்ன நடைமட வாளுமை கோனடி யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்தபித்தற்குப்பல்லாண்டுகூறுதுமே.

மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்துவம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட்செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளள வில்லதோ ரானந்த வெள்ளப்பொருள்
பண்டுமின் றுமென்று முள்ளபொருளென்றேபல்லாண்டுகூறுதுமே.

நிட்டையி லாவுட லித்தென்னை யாண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்சி ராட்டுந் திறங்களு மேசிந்தித்
தட்ட மூர்த்திக்கென் னகநெக வூறு மமிர்தினுக் காலநிழல்
பட்டனுக் கென்னைத் தன்பாற் படுத்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே.

(க) போய் - நீங்கி; பின்னைப்பிறவி - இனிமேல் வரக்கடவதாகிய பிறவி; நெறி - முத்திநெறி, சித்தாந்த ஞானமார்க்கம். (உ) மிண்டுமனத்தவர் - மாறுபடுகின்ற மனத்தையுடையவர்; குடிகுடி - வழிவழி; பண்டும் இன்றும் என்றும் - முற்காலத்தும் இக்காலத்தும் எக்காலத்தும்; உள்ள - நித்தியமாயுள்ள; பொருள் - வஸ்து, சத்தாகிய பொருள். (ங) வண்ணங்கள் - விதங்கள்; பட்டன் - வேதியன்,.

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்ததூய் மனத்தொண்டருள்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில தேவர் சிறுநெறி சேராமே [ளீர்
வில்லாண் டகன கத்திரண் மேருவில் விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும பதங்கடந் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

புரந்தரன் மாலயன் பூசலிட் டோலமிட் டின்னம் புகலரிதாய்
இரந்திரந்தழைப்பவென்னுயிராண்ட கோவினுக்கென்செயவல்லமெ
கரந்துங் கரவாத கற்பக னாகிக் கரையில் கருணைக்கடல் [ன்றும்
பரந்து நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே. (௫)

சேவிக்க வந்தய னிந்திரன் செங்கண்மா லெங்குந் திசைதிசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக் குழாங்குழா மாய்நின்று கூத்தாடும்
ஆவிக் கமுதையென் னார்வத் தனத்தினை யப்பனை யொப்பமரர்
பாவிக்கும் பாவகத் தப்புறத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. (௬)

சீருந்திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத வறிவுபெற் றேன்பெற்ற தார்பெறு வாருலகில்
ஊரு முலகுங் கழற வுழறி யுமைமண வாளனுக்காள்
பாரும் விசும்பு மறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே. (எ)

சேலுங் கயலுந் திளைக்குங்கண் ணாரிளங் கொங்கையிற்செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்குமென் று புண்ணியர்போற்றிசைப்ப
மாலு மயனு மறியா நெறிதந்து வந்தென் மனத்தகத்தே
பாலு மமுதமு மொத்துநின் றானுக்கே பல்லாண்டு கூறுதுமே. (அ)

பிரதமாசாரியன், தக்ஷிணாமூர்த்தி. (௪) சொல்லாண்ட-புகழ்பெற்ற; சிதையும்-அழியும்; வில்ஆண்ட-ஒளியையுடைய; விடங்கன்-அழகன்; பதம்-சொல். (௫) கற்பகன்ஆகி-கற்பகம்போல்பவனாகி; வரம்பு-எல்லை; பாங்கன் - தோழன், நன்மை செய்பவன். (௬) திசைதிசையன - திசைகள்தோறும்; கவர்ந்து - தழுவி; ஆர்வம் தனத்தினை - விருப்பம் பொருந்திய செல்வத்தினை; பாவிக்கும் பாவகத்து - சிந்திக்கும் சிந்தனைக்கு. (எ) ஊரும் - ஊரிலுள்ளாரும்; உலகும் - உலகத்திலுள்ளாரும்; கழற - புகழ்ந்துபேச; உழறி - குழறி; ஆள் - அடிமை; அறியும்பரிசு - அறியும்வண்ணம். (அ) திளைக்கும் - நெருங்கியிருப்பது போல; பொடி - திருவெண்ணீறு; போற்றிசைப்ப - புகழ, துதிக்க. (௯) பாலன் - உபமன்யு பகவான்; ஆலிக்

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப் பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே பல்லாண்டு கூறுதுமே. (௯)

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கு மண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற் கோயிலும்போனக முமருளிச்
சோதி மணிமுடித் தாமமு நாமமுந் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. (௰)

குழலொலியாழொலிகூத்தொலியேத்தொலியெங்குங்குழாம்பெருகி
விழவொலி விண்ணள வுஞ்சென்று விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடியெம் மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

ஆரார் உந்தா ரமரர் குழாத்தி லணியுடை யாதிரைநாள்
நாரா யணனொடு நான்முக னங்கி யிரவியு மிந்திரனும்
தேரார் வீதியிற் றேவர் குழாங்க டிசையனைத் துநிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியு மாடியும் பல்லாண்டு கூறுதுமே. (௧௨)

எந்தையெந் தாய்சுற்றமுற்றுமெமக்கமுதாமெம்பி ரானென்றென்று
சிந்தைசெய் யுஞ்சிவன் சீரடி யாரடி நாய்செப்புரை [மேல்
அந்தமி லானந்தச் சேந்தனெ னைப்புகுந் தாண்டுகொண் டாருயிர்
பந்தம் பிரியப் பரிந்தவ னேயென்று பல்லாண்டு கூறுதுமே. (௧௩)

திருச்சிற்றம்பலம்.

திருப்பல்லாண்டு முற்றுப்பெற்றது.

கும் - களிப்படைந்திருக்கும்; பாலித்து - கொண்டு. (௰) அண்டத்தோடும் - தேவர்களோடும்; போனகம் - சோறு; தாமம் - மாலை; வைத்தான் - கொடுத்தான். (௧௧) விம்மிமிகு - மேன்மேலும் அதிகரிக்கிற. (௧௨) பாரார் - பூமி முழுதும் நிறைந்த. (௧௩) அடிநாய் - அடிமைசெய்யும் நாயேன்; உயிர்மேல் - உயிரைப் பொருந்திய; பந்தம் - பிறவித்தளை; பரிந்தவனே - கருணை செய்தவனே.

உ

திருவிசைப்பா

திருப்பாசுர முதற்குறிப் பகராதி.

திருப்பல்லாண்டு

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

பத்தாந் திருமுறை.

என்னும்

* திருமந்திரம் மூவாயிரம்.

இந்த ஞானநூலாகிய திருமுறையை யருளிச்செய்தவர் திருமூலநாயனர். இவர் சிற்பரச் செல்வர்களாகிய உண்மை நாயன்மார் அறுபத்து மூவருளொருவர். இவர் ஸ்ரீ கைலாசத்திலே திருநந்திதேவரது திருவருள் பெற்றுச் சிவயோகியராய் வீற்றிருந்தபோது பொதிகைமலையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அகஸ்திய மஹாமுனிவரைக் காணும்பொருட்டு ஸ்ரீ கயிலையங்கிரியினின்றும் நீங்கித் தென் தேசத்தை நோக்கிச் சென்றனர். மார்க்கத்தில் காவிரி

* தமிழில் **திருமந்திரம்** எனற்பாலதே வடமொழியில் **ஸ்ரீ மந்த்ர மாலிகா** எனப்படும். திரு என்னும் பல பொருளொரு சொல் மேன்மையுடைய எப்பொருட்கும் விசேஷண மொழியாகி அவற்றிற்கு முன்னே மகிமைப்பொருளை யுணர்த்திவரும். "ஸ்ரீ என்பது ருக், யஜுர், ஸாமம் என்னும் மூன்றுவேதங்களின் மேற்று. அந்த ஸ்ரீயானது சத்துக்களுக்கு அமிர்தமாயிருப்பதன்றோ." என்று தைத்திரீயப் ப்ராஹ்மணம் புகன்றபடி, இத்திருமந்திரத்தில் இம்மூன்று வேதங்களின் முடிந்தபொருள்களும், ஆகமங்களின் நுண்ணிய உண்மைப் பொருள்களும் செறிந்து கிடக்கின்றமையால் வடமொழியில் இப்பெயர் போந்தது. எல்லா வேதங்களையும் ஆகமங்களையும் நன்குணர்ந்து தம் ஞானனந்த நிஷ்டையிலும் அவற்றை அஞ்ஞானம், சந்தேகம், விபரீதமறக்கண்டவர் நம் திருமூலத் தேவராதலால் அவர் அருளிச்செய்த இத்திருமுறைக்கு இப்பெயர் மிகவும் பொருத்தமுடையதே. **மந்திரம்** என்பதின் பொருள் தன்னை மநநம் பண்ணுபவனைக் காப்பதென்பது. மந்-மநநம், திரம் – காப்பது.

நதி சூழ்ந்த சாத்தனூரில் **மூலன்** என்னும் இடையன் வினைவயத்தால் இறந்து கிடப்பதையும், அவனைச் சுற்றி ஆவினங்கள் கதறிக் கதறிப் புலம்பித் துயரப்பட்டுக் கொண்டிருப்பதையுங் கண்டு, மனம் பொறாது அன்பினாலே உள்ளமுருகி, அவற்றின் துயரத்தையகற்றுவான் தமது திருமேனியைச் சேமித்துவைத்து, அவனுடலிற் பிரவேசித்துத் **திருமூலராய்** எழுந்து நின்றனர். உடனே அப்பசுக்களெல்லாம் அவரைப்பார்த்துச் சந்தோஷ மிகுதியாற் கனைத்துத் துள்ளியோடின. பின்னர் திருமூலர் அவ்வுடம்போடிருந்து திருவாவடுதுறை என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தையடைந்து ஓரரச மரத்தடியில் மூவாயிர வருஷம் சிவராஜயோக ஞான நிஷ்டையிலிருந்து, வருஷத்திற்கொரு மந்திரமாக மூவாயிரம் மந்திரங்களாலாய **இத்திருமந்திர மாலை**யைத் திருவாய்மலர்ந்தருளினார். ஆதலால், இத்திருமந்திரம் இவரது தவத்தின் பயனாக விளங்கிக்கொண்டிருக்கின்றதெனலாம். இவர் தமது பரமசிவ தியான நிஷ்டையிலே அகவுணர்ச்சியில் அநுபவித்துச் சுகித்த மெய்த்தோற்றங்களையே அரியபெரிய மந்திரங்களாக உலகுக்குதவினர். ஆதலின், இது சர்வ வேதங்களுக்கும் ஆகமங்களுக்கும் உட்கிடையாயுள்ள வேதாந்த பரம ரஹஸ்யமாகவும், வேதோக்தாகம பரமபவித்திரமாகவும் பாவிக்கப்பட்டு வருகின்றதென்பது ஒருதலை.

இந்தத் **திருமந்திர மாலை**யானது சிறப்புப்பாயிரம் நீங்கலாக ஒன்பது தந்திரங்களாய் வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தந்திரத்திலும் அனேக அத்தியாயங்கள் உள. அவ்வத்தியாயங்களும் தலைக்குறிப்போடு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. அவ்வத்தியாயங்களுக்கு இன்றியமையாது வேண்டப்படும் வேறு சில விஷயங்களையுஞ் சேர்த்துச் சுருங்கச்சொல்லி விளங்க வைத்துள்ளன. தலைப்பில் காட்டியுள்ள குறிப்பினாலேயே அத்தியாயங்கள், விஷயங்கள் ஆகிய இவற்றின் நோக்கங்கள் கரதலாமலகம் போல் நன்குணரக் கிடக்கின்றன. மோக்ஷாபேக்ஷையுடைய புண்ணியசீலர்களொவ்வொருவரும் இதிற் கூறப்பட்டுள்ள சாதன முறைகளை இடையறா ஊக்கத்தோடு பயிற்சிசெய்து அநுஷ்டித்து வருவாராயின் அவர்கள் மும்மலச் சுழலினின்றும் நீங்கி, மெய்யுணர்வு பெற்றுச் சிவஞானம் மேலிட்டுப் பேரின்பப் பெருவெள்ளத்தில்

ழுழ்குவார்களென்பதற்கு யாதொரு ஐயமுமின்று. இது சத்தியம்! முக்காலுஞ் சத்தியம்!!

இத்திருமூலர் மரபில் வந்தவரே நந்தாயுமான சுவாமிகள். இவர் கொள்கை ஆசிரியர் கொள்கைக்குச் சிறிதும் மாறுபாட்டிலது. அங்ஙனமிருந்தும், சைவத்திறத்தின் நுட்பத்தை நுனித்த மதி கொண்டு அறியாத சிலர் கேவலாத்வைத சித்தாந்த முடிபுகளையே சுவாமிகள் தம்பாடலில் ஆங்காங்கு மொழிந்துள்ளாரென்றும், அம் முடிபுகள் சிவஞானபோத முதலிய சித்தாந்த நூல்களுக்கு வெகு தூரமென்றும், வேறு சிலர் முத்தித்திறத்தில் மாத்திரம் இரண்டும் அபேதமென்றும் பிதற்றித் திரிகின்றார்கள். சித்தாந்த சாஸ்திர மெய்யுணர்வு இல்லாக் குறைவே இவர்களை இவ்வண்ணம் புகலும் படிச் செய்கின்றது. கேவலாத்வைத முத்தி ஆன்ம பரிபூரண மெய்தல். சித்தாந்தமுத்தி சிவபரிபூரண மெய்தல். இவ்விரண்டுக் கும் பேதம் பெரிது. இவ்வுண்மையை உண்மை வேதாந்திகளாகிய சித்தாந்த சைவர்பாற் கேட்டுத் தெளிக:

"மூவர் தமிழும் முனிமொழியும்—கோவைத், திருவாசகமும் திருமூலர் சொல்லும், ஒரு வாசகமென் றுணர்" என்னும் ஔவை வாக்கையும், "கற்றதுங் கேட்டதுந் தானே யேதுக்காகக், கடபட மென்றுருட்டுதற்கோ கல்லாலெம்மான், குற்றமறக் கைகாட்டுங் கருத்தைக்கண்டு, குணங்குறியற் றின்பநிட்டை கூடவன்றோ," என்னும் தாயுமானவர் வாக்கையும் இனியாவது கவனித்துய்வார்க ளாக. திருமூலர் மரபு **வேதாந்த சித்தாந்தம்** என்னும் **வைதிக சைவமே**. அதுவே **சமரசம்**; அன்பு மார்க்கம். அதுதான் இரண்டு ஒன்று என்னுமோர் மானத விகற்பமறவென்று நிற்பது. கேவலாத் வைத கொள்கை ஜீவாத்மா பரமாத்மா என்பவை சொல் மாத்திரமே யன்றி தனிமுதற் பொருள்களல்ல வென்பதாம்.

திருமூலர் இம்மூவாயிரஞ் செய்யுளன்றி வைத்தியத்திலும் ௬௦௰, ௩௰ என்னுங் கோவைகளையுஞ் செய்திருக்கின்றனர்.

இவர் திருநட்சத்திரம் ஐப்பசிமீ அசுவனி.

சோ, சிவ அ.

திருத்தொண்டர் திருவந்தாதி.

குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் றன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டெனுச்சி
அடிமன்ன வைத்தபிரான் மூலனு கின்ற வங்கணனே.

திருத்தொண்டர் புராணசாரம்.

கயிலாயத் தொருசித்தர் பொதியிற் சேர்வார்
காவிரிசூழ் சாத்தனூர்க் கருதுமூலன்
பயிலாநோ யுடன்வியத் துயர நீடும்
பசுக்களைக்கண் டவனுடலிற் பாய்ந்துபோத
அயலாகப் பண்டையுட லருளான் மேவி
ஆவடுதண் டுறையாண்டுக் கொருபாவாகக்
குயிலாரு மரசடியி லிருந்து கூறிக்
கோதிலா வடகயிலை குறுகினாரே.

திருமுறைகண்ட புராணம்.

ஆகவனர் திருமுறையே ழருட்டிருவா சகமொன்று
யோகமெறி திருவிசைப்பா மாலைமுறை யொன்றுசிவ
போகமிகு மந்திரமா முறையொன்று புகழ்பெறவே
பாகமிகுந் திருமுறைகள் பத்தாக வைத்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.

திருமந்திரத் திரட்டு

விநாயகர் காப்பு.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

சிறப்புப்பாயிரம்.

போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை
நாற்றிசைக் கும்நல்ல மாதுக்கு நாதனை
மேற்றிசைக் குட்டென் றிசைக்கொரு வேந்தனும்
கூற்றுதைத் தானையான் கூறுகின் றேனே. (க)

ஒன்றவன் றானே யிரண்டவ னின்னருள்
நின்றன னூன்றினு ளுன்குணர்ந் தானைந்து
வென்றன னாறு விரிந்தன னேழும்பர்ச்
சென்றவன் றானிருந் தானுணர்ந் தெட்டே. (உ)

ஒக்கநின் றானை யுலப்பிலி தேவர்கள்
நக்குநின் றேத்திடு நாதனை நாடொறும்
பக்கநின் றாரறி யாத பரமனைப்
புக்குநின் றுன்னியான் போற்றிசெய் வேனே. (௩)

சிவனொ டொக்குந் தெய்வந் தேடினு மில்லை
அவனொடொப் பாரிங் கியாவரு மில்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவளச் சடைமுடித் தாமரை யானே. (௪)

அவனை யொழிய வமரரு மில்லை
அவனன்றிச் செய்யு மருந்தவ மில்லை
அவனன்றி மூவரா லாவதொன் றில்லை
அவனன்றி யூர்புகு மாறறி யேனே. (ரு)

முன்னையொப் பாயுள்ள மூவர்க்கு மூத்தவன்
தன்னையொப் பாயொன்று மில்லாத் தலைமகன்
தன்னையப் பாவென்னி லப்பனு மாயுளன்
பொன்னையொப் பாகின்ற போதகத் தானே. (சு)

தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
ஆயினு மீச னருளறி வாரில்லை
சேயினு நல்ல னணியனல் லன்பர்க்குத்
தாயினு நல்லனற் றாழ்சடை யோனே. (எ)

பிறப்பிலி பிஞ்ஞகன் பேரரு ளாளன்
இறப்பிலி யாவர்க்கு மின்ப மருளும்
துறப்பிலி தன்னைத் தொழுமின் றொழுதால்
மறப்பிலி மாயா விருத்தமு மாமே. (அ)

அப்பனை நந்தியை யாரா வமுதினை
ஒப்பிலி வள்ளலை யூழி முதல்வனை
எப்பரி சாயினு மேத்துமி னேத்தினால்
அப்பரி சீச னருள்பெற லாமே. (௯)

வாழ்த்தவல் லார்மனத் துள்ளுறு சோதியைத்
தீர்த்தனை யங்கே திளைக்கின்ற தேவனை
ஏத்தியு மெம்பெரு மானென் றிறைஞ்சியும்
ஆத்தஞ்செய் தீச னருட்பெற லாமே. (௰)

மனையி லிருந்தவர் மாதவ ரொப்பர்
நினைவு ளிருந்தவர் நேசத்து ளிற்பர்
பனையு ளிருந்த பருந்தது போல
நினையா தவர்க்கில்லை நின்னின்பந் தானே. (௧௧)

சூடுவ னெஞ்சிடை வைப்பன் பிரானென்று
பாடுவன் பன்மலர் தூவிப் பணிந்துநின்

ரூடுவ ஞடி யமரர் பிரானென்று
நாடுவ ஞனின் றறிவது தானே. (௧௨)

வேதச்சிறப்பு.

வேதத்தை விட்ட வறமில்லை வேதத்தின்
ஓதத் தகுமற மெல்லா முளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை யோதியே வீடுபெற் ருர்களே. (௧௩)

ஆகமச்சிறப்பு.

மாரியுங் கோடையும் வார்பனி தூங்கநின்
றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்து
ஆரிய முந்தமி ழும்முடனே சொல்லிக்
காரிகை யார்க்குங் கருணை செய்தானே. (௧௪)

அவிழ்க்கின்ற வாறு மதுகட்டு மாறும்
சிமிட்டலைப் பட்டுயிர் போகின்ற வாறும்
தமிழ்ச்சொல் வடசொல் லெனுமிவ் விரண்டும்
உணர்த்து மவனை யுணரலு மாமே. (௧௫)

குருபாரம்பரியம்.

நந்தி யருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திக ளால்வர் சிவ யோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரயர்
என்றிவ ரென்னோ டெண்மரு மாமே. (௧௬)

திருமூலர் வரலாறு.

நந்தி யிணையடி நான்றலை மேற்கொண்டு
புத்தியி னுள்ளே புகப்பெய்து போற்றிசெய்
தந்தி மதிபுனை யரனடி நாடொறும்
சிந்தைசெய் தாகமஞ் செப்பலுற் றேனே. (௧௭)

செப்புஞ் சிவாகம மென்னுமப் பேர்பெற்று
அப்படி நல்கு மருணந்தி தாள்பெற்று
தப்பிலா மன்றிற் றனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பி லெழுகோடி யுகமிருந் தேனே. (௧௮)

நான்பெற்ற வின்பம் பெறுகவிவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்குவன்
ஊன்பற்றி நின்ற வுணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே. (கக)

நந்தி யருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி யருளாலே சதாசிவ னாயினேன்
நந்தி யருளாலே மெய்ஞ்ஞானத்து ணண்ணினேன்
நந்தி யருளாலே நானிருந் தேனே. (உ0)

திருமந்திரத் தொகைச்சிறப்பு.

மூல னுரைசெய்த மூவாயிரந் தமிழ்
ஞால மறியவே நந்தி யருளது
காலை யெழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவ ரன்றே. (உக)

முதற்றந்திரம்.

உபதேசம்.

பதிபசு பாச மெனப்பகர் மூன்றில்
பதியினைப் போற்பசு பாச மனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாச நிலாவே. (உஉ)

சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தஞ் சூழ்பஞ்சைச் சுடமாட்டா
சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்
ஆரியன் றோற்றமு னற்ற மலங்களே. (உங)

வெளியின் வெளிபோய் விரவிய வாறும்
அளியி னளிபோ யடங்கிய வாறும்
ஒளியி னொளிபோ யொடுங்கிய வாறும்
தெளியு மவரே சிவசித்தர் தாமே. (உச)

முப்பது மாறும் படிமுத்தி யேணியாய்
ஒப்பிலா வானந்தத் துள்ளொளி புக்குச்
செப்ப வரிய சிவங்கண்டு தான்றெளிந்
தப்பரி சாக வமர்ந்திருந் தாரே. (௨௫)

தூங்கிக்கண் டார்சிவ லோகமுந் தம்முள்ளே
தூங்கிக்கண் டார்சிவ யோகமுந் தம்முள்ளே
தூங்கிக்கண் டார்சிவ போகமுந் தம்முள்ளே
தூங்கிக்கண் டார்நிலை சொல்வதெவ் வாறே. (௨௬)

யாக்கைநிலையாமை.

பண்டம்பொய்க் கூரை பழகி விழுதலால்
உண்டவப் பெண்டிரு மக்களும் பின்செலார்
கொண்ட விரதமு ஞானமு மல்லது
மண்டி யவருடன் வழிநட வாதே. (௨௭)

ஊரெலாங் கூடி யொலிக்க வழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடை கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே. (௨௮)

ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரு மக்களும்
ஊர்த்துறை காலே யொழிவா ரொழிந்தபின்
வேர்த்தலை போக்கி விறகிட்டெரி மூட்டி
நீர்த்தலை மூழ்குவர் நீதியி லோரே. (௨௯)

வளத்திடை முற்றத்தோர் மாநில முற்றும்
குளத்தின்மண் கொண்டு குயவன் வனைந்தான்
குடமுடைந் தாலவை யோடென் றுவைப்பர்
உடலிறந் தாலிறைப் போதும்வை யாரே. (௩௰)

செல்வ நிலையாமை.

அருளு மரசரு மானையுந் தேரும்
பொருளும் பிறர்கொள்ளப் போவதன் முன்னம்
தெருளு முயிரொடுஞ் செல்வனைச் சேரின்
மருளும் பினையவன் மாதவ மன்றே. (௩௧)

வாழ்வு மனைவியு மக்க ளுடன்பிறந்
தாரு மளவே தமக்கென்ப ரொண்பொருள்
மேவு மதனை விரிவுசெய் வார்கட்குக்
கூறுந் துணையொன்று கூறலு மாமே. (௩௨)

இளமை நிலையாமை.

பால னிளையன் விருத்த னெனநின்ற
காலங் கழிவன கண்டு மறிகிலார்
ஞாலங் கடந்தண்ட மூடறுத் தானடி
மேலுங் கிடந்து விரும்புவ ளுனே. (௩௩)

உயிர் நிலையாமை.

மத்தளி யொன்றுள தாள மிரண்டுள
அத்தன்னே வாழு மரசரு மஞ்சுள
அத்தன்னை வாழு மரசன் புறப்பட்டான்
மத்தளி மண்ணாய் மயங்கிய வாறே. (௩௪)

கொல்லாமை.

கொல்விடு குத்தென்று கூறிய மாக்களை
வல்விடிக் காரர் வலிக்கயிற் றாற்கட்டிச்
செல்விடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்விடு மென்று நிறுத்துவர் தாமே. (௩௫)

புலால் மறுத்தல்.

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண வியமன்றன் றூதுவர்
செல்லாகப் பற்றிய தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே. (௩௬)

கொலையே களவுகட் காமம்பொய் கூறல்
மலைவான பாதக மாமவை நீக்கித்
தலையாஞ் சிவனடி சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க்
கிலையா மிவைஞான னந்தத் திருத்தலே. (௩௭)

பிறர்மனை நயவாமை.

ஆத்த மனையா ளகத்தி லிருக்கவே
காத்த மனையாளைக் காமுறுங் காளையர்

காச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக் கிடருற்ற வாறே. (௩௮)

அந்தணரொழுக்கம்.

அந்தண ராவோ ரறுதொழிற் பூண்டுளோர்
செந்தழ லோம்பிமுப் போது நியமஞ்செய்
தந்தவ நற்கரு மத்துநின் றாங்கிட்டுச்
சந்தியு மோதிச் சடங்கறுப் போர்களே. (௩௯)

பெருநெறி யான பிரணவ மோர்ந்து
குருநெறி யாலுரை கூடினல் வேதத்
திருநெறி யான திருகை யிருத்திச்
சொருபம தானோர் துகளில் பார்ப்பாரே. (௪௰)

வேதாந்தங் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தங் கேட்டுத்தம் வேட்கை யொழிந்திலர்
வேதாந்த மாவது வேட்கை யொழிந்திடம்
வேதாந்தங் கேட்டவர் வேட்கைவிட் டாரே. (௪௧)

சத்திய மின்றித் தனிஞான நாந்தானின்றி
ஒத்த விடையம் விட்டோரு முணர்வின்றிப்
பத்தியு மின்றிப் பரனுண்மை யின்றியூண்
பித்தேறு மூடர் பிராமணர் தாமன்றே. (௪௨)

இராசதோஷம்.

கல்லா வரசனுங் காலனு நேரொக்கும்
கல்லா வரசனிற் காலன் மிகநல்லன்
கல்லா வரச னறமோரான் கொல்லென்பான்
நல்லாரைக் கால னணுகி நில்லானே. (௪௩)

வேட நெறிநில்லார் வேடம்பூண் டென்பயன்
வேட நெறிநிற்போர் வேடமே மெய்வேடம்
வேட நெறிநில்லார் தம்மை விறல்வேந்தன்
வேடநெறி செய்தால் வீடது வாகுமே. (௪௪)

ஆவையும் பாரையு மற்றற வோரையும்
தேவர்கள் போற்றுந் திருவேடத் தாரையும்

காவலன் காப்பவன் காவா தொழிவனேல்
மேவு மறுமைக்கு மீளா நரகமே. (௪௫)

தத்தஞ் சமயத் தகுதிநில் லாதாரை
அத்தன் சிவன்சொன்ன வாகம நூனெறி
எத்தண் டமுஞ்செயு மம்மையி லிம்மைக்கே
மெய்த்தண்டஞ் செய்வதவ் வேந்தன் கடனே. (௪௬)

ஈந்தார்க் கீதல்.

யாவர்க்கு மாமிறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்குமா முண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க் கின்னுரை தானே. (௪௭)

அறஞ்செயான் றிறம்.

எட்டி பழுத்த விருங்கனி வீழ்ந்தன
ஒட்டிய நல்லறஞ் செய்யா தவர்செல்வம்
வட்டிகொண் டீட்டியே மண்ணின் முகந்திடும்
பட்டப் பதகர் பயனறி யாரே. (௪௮)

இருமலுஞ் சோகையு மீளையும் வெப்பும்
தருமஞ் செய்யாதவர் தம்பால தாகும்
உருமிடி நாக முரோணி கழலைத்
தருமஞ் செய்வார் பக்கற் றுழகி லாவே. (௪௯)

அன்புடைமை.

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே. (௫௰)

என்பே விறகா யிறைச்சி யறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி யகங்குழை வார்க்கன்றி
என்பொன் மணியினை யெய்த வொண்ணாதே. (௫௧)

என்னன் புருக்கி யிறைவனை யேத்துமின்
முன்னன் புருக்கி முதல்வனை நாடுமின்
பின்னன் புருக்கிப் பெருந்தகை நந்தியும்
தன்னன் பெனக்கே தலைநின்ற வாறே. (௫௨)

அன்புசெய்வாரை யறிவன் சிவன்.

இகழ்ந்ததும் பெற்றது மீச னறியும்
உகந்தருள் செய்திடு முத்தம நாதன்
கொழுந்தன்பு செய்தருள் கூரவல் லார்க்கு
மகிழ்ந்தன்பு செய்யு மருளது வாமே. (௫௩)

புணர்ச்சியு ளாயிழை மேலன்பு போல
உணர்ச்சியு ளாங்கே யொடுங்கவல் லார்க்குக்
குணர்ச்சியில் லாது குலாவி யுலாவி
அணைத்த தணைத்தின்ப மதுவிது வாமே. (௫௪)

கல்வி.

கற்றறி வாளர் கருதிய காலத்து
கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு
கற்றறி வாளர் கருதி யுரைசெய்யும்
கற்றறி காட்டக் கனலுள வாக்குமே. (௫௫)

கல்வி யுடையார் கழிந்தோடிப் போகின்றார்
பல்லி யுடையார் பாம்பரிந் துண்கின்றார்
எல்லியுங் காலையு மேத்து மிறைவனை
வல்லியுள் வாதித்த காயமு மாமே. (௫௬)

ஆய்ந்துகொள் வார்க்கர னங்கே வெளிப்படும்
தோய்ந்த நெருப்பது தூய்மணி சிந்திடும்
எய்ந்த விளமதி யெட்டவல் லார்கட்கு
வாய்ந்த மனமல்கு நூலேணி யாமே. (௫௭)

கேள்வி கேட்டமைதல்.

அறங்கேட்டு மந்தணர் வாய்மொழி கேட்டும்
மறங்கேட்டும் வானவர் மந்திரங் கேட்டும்

புறங்கேட்டும் பொன்புனை மேனியம் மீசன்
திறங்கேட்டும் பெற்ற சிவகதி தானே. (௫௮)

தேவர் பிரான்றனைத் திவ்விய மூர்த்தியை
யாவ ரொருவ ரறிவா ரறிந்தபின்
ஓதுமின் கேண்மி னுணர்மி னுணர்ந்தபின்
ஓதி புணர்ந்தவ ரோங்கிநின் றாரே. (௫௯)

கல்லாமை.

கணக்கறிந் தார்க்கன்றிக் காண வொண்ணாது
கணக்கறிந் தார்க்கன்றிக் கைகூடாக் காட்சி
கணக்கறிந் துண்மையைக் கண்டண்ட நிற்கும்
கணக்கறிந் தார்கல்வி கற்றறிந் தாரே. (௬௰)

கல்லாத மூடரைக் காணவு மாகாது
கல்லாத மூடர்சொற் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லாராம்
கல்லாத மூடர் கருத்தறி யாரே. (௬௧)

கற்றாஞ் சிவஞான மில்லாக் கலதிகள்
சுற்றமும் விடார் துரிசறார் மூடர்கள்
மற்றும் பலதிசை காணார் மதியிலோர்
கற்றன்பி னிற்போர் கணக்கறிந் தார்களே. (௬௨)

நடுவு நிலைமை.

நடுவுநின் றார்க்கன்றி ஞானமு மில்லை
நடுவுநின் றார்க்கு நரகமு மில்லை
நடுவுநின் றார்நல்ல தேவரு மாவர்
நடுவுநின் றார்வழி நானுநின் றேனே. (௬௩)

நடுவுநின் றார்சிலர் ஞானிக ளாவர்
நடுவுநின் றார்சிலர் தேவரு மாவர்
நடுவுநின் றார்சிலர் நம்பனு மாவர்
நடுவுநின் றாரொடு நானுநின் றேனே. (௬௪)

கள்ளுண்ணாமை

சித்த முருக்கிச் சிவமாஞ் சமாதியில்
ஒத்துச் சிவானந்த மோவாத தேறலைச்

சுத்த மதுவுண்ணச் சிவானந்தம் விட்டிடா
நித்த லிருத்தல் கிடத்தல்கீழ்க் காலே. (௬௫)

காமமுங் கள்ளுங் கலதிகட் கேயாகும்
மாமல முஞ்சம யத்துள் மயலுறும்
போமதி யாகும் புனித னிணையடி
ஓமய வானந்தத் தேற லுணர்வுண்டே. (௬௬)

மயக்குஞ் சமய மலமன்னு மூடர்
மயக்கு மதுவுண்ணு மாமூடர் தேரார்
மயக்குறு மாயையின் மாமாயை வீடு
மயக்கிற் றெளியின் மயக்குறு மன்றே. (௬௭)

சத்தியை வேண்டிச் சமயத்தோர் கள்ளுண்பர்
சத்தி யழிந்தது தம்மை மறத்தலால்
சத்தி சிவஞானந் தன்னிற் றலைப்பட்டுச்
சத்திய ஞானவா னந்தத்திற் சார்தலே. (௬௮)

யோகிகள் கால்கட்டி யொண்மதி யானந்த
போத வமுதைப் புசித்தவ ரெண்சித்தி
மோகியர் கள்ளுண்டு மூடராய் மோகமுற்
றூறு மதத்தா லறிவழிந் தாரே. (௬௯)

இரண்டாந் தந்திரம்.

பதிவலியில் வீரட்டமெட்டு.

அப்பணி செஞ்சடை யாதி புராதனன்
முப்புரஞ் செற்றன னென்பர்கண் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புர மெய்தமை யாரறி வாரே. (௭௰)

இலிங்கபுராணம்.

திரிகின்ற முப்புரஞ் சென்ற பிரானை
அரியனென் றெண்ணி யயர்வுற வேண்டாம்

புரிவுடை யாளர்க்குப் பொய்யல னீசன்
பரிவொடு நின்ற பரிசறி வானே. (எக)

பிரளயம்.

கருவரை மூடிக் கலந்தெழும் வெள்ளத்
திருவருங் கோவென் றிகல விறைவன்
ஒருவனு நீருற வோங்கொளி யாகி
அருவரை யாய்நின் றருள்புரிந் தானே. (எஉ)

அடிமுடி தேடல்.

பிரமனு மாலும் பிரானேநா னென்னப்
பிரமன்மா றங்கடம் பேதமை யாலே
பரம னனலாய்ப் பரந்துமுன் னிற்க
அரனடி தேடி யரற்றுகின் றாரே. (எ௩)

சர்வசிருஷ்டி.

ஆதியோ டந்த மிலாத பராபரம்
போதம தாகப் புணரும் பராபரை
சோதி யதனிற் பரந்தோன்றத் தோன்றுமாம்
தீதில் பரையதன் பாற்றிகழ் நாதமே. (எச)

புவனம் படைப்பா னொருவ னொருத்தி
புவனம் படைப்பார்க்குப் புத்திர ரைவர்
புவனம் படைப்பானும் பூமிசை யானாய்
புவனம் படைப்பானப் புண்ணியன் றானே. (எரு)

ஆகாய மாதி சதாசிவ ராதியென்
போகாத சத்தியுட் போந்துடன் போந்தனர்
மாகாய வீச னரன்மால் பிரமனும்
ஆகாயம் பூமியுங் காண வளித்தலே. (எசு)

ஒருவனு மேயுல கேழும் படைத்தான்
ஒருவனு மேயுல கேழு மளந்தான்
ஒருவனு மேயுல கேழுங் கடந்தான்
ஒருவனு மேயுட லோடுயிர் தானே. (எஎ)

திதி.

தானே திசையொடு தேவருமாய் நிற்கும்
தானே யுடலுயிர் தத்துவ மாய்நிற்கும்
தானே கடன்மலை யாழியு மாய்நிற்கும்
தானே யுலகிற் றலைவனு மாமே. (எஅ)

உடலா யுயிரா யுலகம தாகிக்
கடலாய்க் கார்முகி னீர்பொழி வானாய்
இடையா யுலப்பிலி யெங்குந்தா னாகி
அடையார் பெருவிழி யண்ணலின் றானே. (எகூ)

தாமொரு காலந் தனிச்சுட ராய்நிற்கும்
தாமொரு கால்சண்ட மாருத மாய்நிற்கும்
தாமொரு காலந் தண்மழை யாய்நிற்கும்
தாமொரு காலந்தண் மாயனு மாமே. (அ0)

சங்காரம்.

அங்கிசெய் தீச னகலிடஞ் சுட்டது
அங்கிசெய் தீச னலைகடற் சுட்டது
அங்கிசெய் தீச னசுரரைச் சுட்டது
அங்கியவ் வீசற்குக் கையம்பு தானே. (அக)

திரோபவம்.

உள்ளத் தொருவனை யுள்ளுறு சோதியை
உள்ளம்விட் டோரடி நீங்கா வொருவனை
உள்ளமுந் தானு முடனே யிருக்கினும்
உள்ள மவனை யுருவறி யாதே. (அஉ)

மண்ணொன்று தான்பல நற்கல மாயிடும்
உண்ணின்ற யோனிக ளெல்லா மொருவனே
கண்ணொன்று தான்பல காணுந் தனைக்காணா
அண்ணலு மவ்வண்ண மாகிநின் றானே. (அங)

அநுக்கிரகம்.

உச்சியி லோங்கி யொளிதிகழ் நாதத்தை
நச்சியே யின்பங்கொள் வார்க்கு நமனில்லை

விச்சம் விரிசுடர் மூன்று மூலகுக்கும்
வைச்சு மகனை சமைக்கவல் லானே. (௮௪)

குசவன் றிரிகையி லேற்றிய மண்ணைக்
குசவன் மனத்துற்ற தெல்லாம் வனைவன்
குசவனைப் போலெங்கள் கோனந்தி வேண்டில்
அசைவி லுலக மதுவிது வாமே. (௮௫)

ஆதி படைத்தன னைம்பெரும் பூதங்கள்
ஆதி படைத்தன னையபல் லூழிகள்
ஆதி படைத்தன னெண்ணிலி தேவரை
ஆதி படைத்தவை தாங்கிநின் றானே. (௮௬)

கர்ப்பக்கிரியை.

இன்புறு காலத் திருவர் முன்பூறிய
துன்புறு பாசத் துயர்மனை வாழுளன்
பண்புறு காலமும் பார்மிசை வாழ்க்கையும்
அன்புறு காலத் தமைத்தொழிந் தானே. (௮௭)

பூவின் மணத்தைப் பொருந்திய வாயுவும்
தாவி யுலகிற் றரிப்பித்த வாறுபோல்
மேவிய சீவனில் மெல்லநீர் வாயுவும்
கூவி யுயிருங் குறிக்கொண்ட போதே. (௮௮)

மாண்பது வாக வளர்கின்ற வன்னியைக்
காண்பது வாண்பெண் ணலியெனுங் கற்பனை
பூண்பது மாதா பிதாவழி போலவே
ஆம்பதி செய்தானச் சோதிதன் றண்மையே. (௮௯)

மாதா வுதர மலமிகின் மந்தனாம்
மாதா வுதரஞ் சலமிகின் மூகையாம்
மாதா வுதர மிரண்டொக்கில் கண்ணில்லை
மாதா வுதரத்தில் வந்த குழவிக்கே. (௯௰)

குழவியு மாணா மலத்தது வாகில்
குழவியும் பெண்ணா மிடத்தது வாகில்
குழவி யிரண்டா மபான னெதிர்க்கில்
குழவி யலியாகுங் கொண்டகா லொக்கிலே. (௯௧)

பாத்திரம்.

திலமத் தனைபொன் சிவஞானிக் கீந்தால்
பலமுத்தி சித்தி பரபோக முந்தரும்
நிலமத் தனைபொன்னை நின்மூடர்க் கீந்தால்
பலமுமற் றேபர போகமுங் குன்றுமே. (௬உ)

அபாத்திரம்.

மண்மலை யத்தனை மாதன மீயினும்
அண்ண லிவனென் றஞ்சலி யத்தனாய்
எண்ணி யிறைஞ்சாதார்க் கீந்த விருவரும்
நண்ணுவ ரேழா நரகக் குழியிலே. (௬௩)

தீர்த்தம்.

உள்ளத்தி னுள்ளே யுளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்துநின் றாடார் வினைகெடப்
பள்ளமு மேடும் பரந்து திரிவரேல்
கள்ள மனமுடைக் கல்வியி லோரே. (௬௪)

திருக்கோயிலிழிவு.

தாவர லிங்கம் பறித்தொன் றிற் றாபித்தால்
ஆவதன் முன்னே யரசு நிலைகெடும்
சாவதன் முன்னே பெருநோ யடுத்திடும்
காவலன் பேர்நந்தி கட்டுரைத் தானே. (௬௫)

ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்றிருக் கோயில்க ளானவை
சாற்றிய பூசைகள் தப்பிடிற் றானே. (௬௬)

முன்னவ னார்கோயில் பூசைகண் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினி
என்னரு நந்தி யெடுத்துரைத் தானே. (௬எ)

பேர்கொண்ட பார்ப்பான் பிரான்றனை யர்ச்சித்தால்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்

பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமு மாமென்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே. (கஅ)

சிவநிந்தை.

முளிந்தவர் வானவர் தானவ ரெல்லாம்
விளிந்தவர் மெய்நின்ற ஞான முணரார்
அளிந்தமு தூறிய வாதிப் பிரானைத்
தளிந்தவர்க் கல்லது தாங்கவொண் ணாதே. (கக)

குருநிந்தை.

ஓரெழுத் தொருபொரு ளுணரக் கூறிய
சீரெழுத் தாளரைச் சிதையச் செப்பினோர்
ஊரிடைச் சுணங்களாய்ப் பிறந்தங் கோருகம்
பாரிடைக் கிருமியாய்ப் படிவர் மண்ணிலே. (ர)

மந்திர மோரெழுத் துரைத்த மாதவர்
சிந்தை நொந்திடத் தீமைகள் செய்தவர்
நந்திய சுணங்களாய்ப் பிறந்து நூறுரு
வந்திடும் புலையராய் மாய்வர் மண்ணிலே. (ரக)

ஈச னடியா ரிதயங் கலங்கிடத்
தேசமு நாடுஞ் சிறப்பு மழிந்திடும்
வாசவன் பீடமு மாமன்னர் பீடமும்
நாசம தாகுமே நம்நந்தி யாணையே. (ரஉ)

மூன்றாந் தந்திரம்.

அட்டாங்கயோகம்.

இயம நியமமே யெண்ணிலா வாதனம்
நயமுறு பிராணாயாம நண்பிரத்தி யாகாரம்
சயமிகு தாரணை தியானஞ் சமாதி
அயமுறு மட்டாங்க மாவது மாமே. (ரங)

இயமம் - நியமம்.

கொல்லான் பொய்கூறான் களவிலா னெண்குணன்
நல்லா னடக்க முடையா னடுச்செய்ய
வல்லான் பகுந்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லா னியமத் திடையினின் றானே. (௩௪)

தூய்மை யருளூண் சுருக்கம் பொறைசெம்மை
வாய்மைநிலைமை வளர்த்தலே மற்றிவை
காமங் களவு கொலையெனக் காண்பவை
நேமியீ ரைந்து நியமத்த னாமே. (௩௫)

தபஞ் சபஞ் சந்தோட மாத்திகந் தானம்
சிவன்றன் விரதமே சித்தாந்தக் கேள்வி
மகஞ்சிவ பூசையொண் மதிசொல்லீ ரைந்தும்
நிவம்பல செய்யி னியமத்த னாமே. (௩௬)

பிராணாயாமம்.

ஐவர்க்கு நாயக னவ்வூர்த் தலைமகன்
உய்யக்கொண் டேறுங் குதிரைமற் றொன்றுண்டு
மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்குங் கொடாதுபோய்ப்
பொய்யரைத் துள்ளி விழுத்திடுந் தானே. (௩௭)

ஆரிய நல்லன் குதிரை யிரண்டுள
வீசிப் பிடிக்கும் விரகறி வாரில்லை
கூரிய நாதன் குருவி னருள்பெற்றால்
வாரிப் பிடிக்க வசப்படுந் தானே. (௩௮)

புள்ளினு மிக்க புரவியை மேற்கண்டால்
கள்ளுண்ண வேண்டாந் தானே களிதரும்
துள்ளி நடப்பிக்குஞ் சோம்பு தவிர்ப்பிக்கும்
உள்ளது சொன்னோ முணர்வுடை யோருக்கே. (௩௯)

வளியினை வாங்கி வயத்தி லடக்கில்
பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்
தெளியக் குருவின் திருவருள் பெற்றால்
வளியினும் வேட்டு வளியனு மாமே. (௪௰)

ஏற்றி யிறக்கி யிருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே. (ககக)

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கில்
உறுப்புச் சிவக்கு முரோமங் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே. (ககஉ)

பிரத்தியாகாரம்.

கண்டுகண் டுள்ளே கருத்துற வாங்கிடில்
கொண்டுகொண் டுள்ளே குணம்பல காணலாம்
பண்டுகந் தெங்கும் பழமறை தேடியை
இன்றுகண் டிங்கே யிருக்கலு மாமே. (ககங)

நாபிக்குங் கீழே பன்னிரண் டங்குலம்
தாபிக்கு மந்திரந் தன்னை யறிகிலர்
தாபிக்கு மந்திரந் தன்னை யறிந்தபின்
கூவிக்கொண் டீசன் குடிபுகுந் தானே. (ககச)

மூலத் துவாரத்தை மூக்கார விட்டிரு
மேலைத் துவாரத்தின் மேன்மனம் வைத்திரு
வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு
காலத்தை வெல்லுங் கருத்தது தானே. (ககரு)

புறப்பட்ட வாயுப் புகவிடா வண்ணம்
திறப்பட்ட நிச்சயஞ் சேர்ந்துட னின்றால்
உறப்பட்டு நின்றது வுள்ளமு மங்கே
புறப்பட்டுப் போகான் பெருந்தகை யானே. (ககசா)

தாரணை.

கோணா மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி
வீணாத் தண்டூடே வெளியுறத் தானோக்கிக்
காணாக்கண் கேளாச் செவியென் றிருப்பார்க்கு
வாணா ளடைக்கும் வழியது வாமே. (ககஎ)

மேலை நிலத்தினுள் வேதகப் பெண்பிள்ளை
மூல நிலத்தி லெழுகின்ற மூர்த்தியை
ஏல வெழுப்பி யிவளுடன் சந்திக்கப்
பாலனு மாவான் பார்நந்தி யாணையே. (௧௧௮)

தியானம்.

கண்ணாக்கு மூக்குச் செவிஞானக் கூட்டத்துள்
பண்ணாக்கி நின்ற பழம்பொரு ளொன்றுண்டு
வண்ணாக்கி னுள்ளே பகண்ட வொளிகாட்டிப்
புண்ணாக்கி நம்மைப் பிழைப்பித்த வாறே. (௧௧௯)

ஒண்ணா நயனத்தி லுற்ற வொளிதன்னைக்
கண்ணாரப் பார்த்துக் கலந்தங் கிருந்திடில்
விண்ணாறு வந்து வெளிகண் டிடவோடிப்
பண்ணாம னின்றது பார்க்கலு மாமே. (௧௨௰)

மனத்து விளக்கினை மான்பட வேற்றிச்
சினத்து விளக்கினைச் செல்ல நெருக்கி
அனைத்து விளக்குந் திரியொக்கத் தூண்ட
மனத்து விளக்கது மாயா விளக்கே. (௧௨௧)

எண்ணாயிரத் தாண்டு யோக மிருக்கினும்
கண்ணா ரமுதனைக் கண்டறி வாரில்லை
உண்ணாடி யுள்ளே யொளிபெற நோக்கில்
கண்ணாடி போலக் கலந்திருந் தானே. (௧௨௨)

நாட்ட மிரண்டு நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமு மில்லை மனைக்கு மழிவில்லை
ஓட்டமு மில்லை யுணர்வில்லை தானில்லை
தேட்டமு மில்லை சிவனவ னாமே. (௧௨௩)

நயன மிரண்டு நாசிமேல் வைத்திட்
டுயர்வி ழா வாயுவை யுள்ளே யடக்கித்
துயரற நாடியே தூங்கவல் லார்க்குப்
பயனிது காயம் பயமில்லை தானே. (௧௨௪)

நாத முடியிலே நல்லா ளிருப்பது
நாத முடிவிலே நல்யோக மிருப்பது
நாத முடிவிலே நாட்ட மிருப்பது
நாதமுடிவிலே நஞ்சுண்ட கண்டனே. (கஉரு)

மூக்குண மூடற வாயுவை மூலத்தே
சிக்கென மூடித் திரித்துப் பிடித்திட்டுத்
தக்க வலமிட நாழிகை சாதிக்க
வைக்கு முயிர்நிலை வானவர் கோனே. (கஉசு)

சமாதி.

மன்மன மெங்குண்டு வாயுவு மங்குண்டு
மன்மன மெங்கில்லை வாயுவு மங்கில்லை
மன்மனத் துள்ளே மகிழ்ந்திருப் பார்க்கு
மன்மனத் துள்ளே மனோலய மாமே. (கஉஎ)

மூல நாடி முக்கட் டலத்துச்சியுள்
நாலு வாச னடுவு ளிருப்பிர்காள்
மேலை வாசல் வெளியுறக் கண்டபின்
காலன் வார்த்தை கனாவிலு மில்லையே. (கஉஅ)

நம்பனை யாதியை நான்மறை யோதியைச்
செம்பொனி னுள்ளே திகழ்கின்ற சோதியை
அன்பினை யாக்கி யருத்தி யொடுக்கிப்போய்க்
கொம்பேறிக் கும்பிட்டுக் கூட்டமிட் டாரே. (கஉகூ)

மூலத்து மேலது முச்சது ரத்தது
காலத் திவாசயிற் கலக்கின்ற சந்தினில்
மேலைப் பிறையினுள் நெற்றிநேர் நின்ற
கோலத்தின் கோலங்கள் வெவ்வேறு கொண்டதே. (கநய)

கற்பனை யற்றுக் கனல்வழி யேசென்று
சிற்பனை யெல்லாஞ் சிருட்டித்த பேரொளிப்
பொற்பினை நாடிப் புணர்மதி யோடுற்று
தற்பர மாகத் தகுந்தண் சமாதியே. (கநக)

சமாதிசெய் வார்க்குத் தரும்பல யோகம்
சமாதிகள் வேண்டா மிறையுட னேகில்
சமாதிதா னில்லைத் தானவ னாகில்
சமாதியி லெட்டெட்டுச் சித்தியு மெய்துமே. (௧௩௨)

அட்டாங்கயோகப்பேறு.

நியமம்.

பற்றிப் பதத்தன்பு வைத்துப் பரன்புகழ்
கற்றிருந் தாங்கே கருது மவர்கட்கு
முற்றெழுந் தாங்கே முனிவ ரெதிர்வரத்
தெற்றுஞ் சிவபதஞ் சேர்தலு மாமே. (௧௩௩)

பிராணாயாமம்.

செம்பொற் சிவகதி சென்றெய்துங் காலத்துக்
கும்பத் தமரர் குழாம்வந் தெதிர்கொள்ள
எம்பொற் றலைவ னிவனா மெனச்சொல்ல
இன்பக் கலவி யிருக்கலு மாமே. (௧௩௪)

பிரத்தியாகாரம்.

சேருறு காலந் திசைநின்ற தேவர்கள்
ஆரிவ னென்ன வரனா மவனென்ன
வேருறு தேவர்க ளெல்லா மெதிர்கொள்ளக்
காருறு கண்டனை மெய்கண்ட வாறே. (௧௩௫)

தியானம்.

தூங்கவல் லார்க்குந் துணையேழ் புவனமும்
வாங்கவல் லார்க்கும் வலிசெய்து நின்றிட்டுத்
தேங்கவல் லார்க்குந் திளைக்கு மமுதமும்
தாங்கவல் லார்கட்குந் தன்னிட மாமே. (௧௩௬)

அட்டமாசித்தி - பாகாயப் பிரவேசம்.

குரவ னருளிற் குறிவழிமூலப்
பரையின் மணமிகு சங்கட்டம் பார்த்துத்
தெரிதரு சாம்பவி கேசரி சேரப்
பெரிய சிவகதி பேறெட்டாஞ் சித்தியே. (௧௩௭)

சித்தந் திரிந்து சிவமய மாகியே
முத்தந் தெரிந்துற்ற மோனர் சிவமுத்தர்
சுத்தம் பெறலாக வைந்திற் றடக்கற்றோர்
சித்தம் பரத்திற் றிருநடத் தோரே. (௧௩௮)

சரீரசித்தியுபாயம்.

உடம்பா ரழியி லுயிரா ரழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கு முபாய மறிந்தே
உடம்பை வளர்த்தே னுயிர்வளர்த் தேனே. (௧௩௯)

உடம்பினை முன்ன மிழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே யுத்தமன் கோயில்கொண் டானென்
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே. (௧௪௰)

சத்தியார் கோயி லிடம்வலஞ் சாதித்தால்
மத்தியா னத்திலே வாக்கியங் கேட்கலாம்
தித்தித்த கூத்துஞ் சிவனும் வெளிப்படும்
சத்தியஞ் சொன்னோஞ் சதாநந்தி யாணையே. (௧௪௧)

நீல நிறமுடை நேரிழை யாளொடும்
சாலவும் புல்லிச் சதமென் றிருப்பார்க்கு
ஞால மறிய நரைதிரை மாறிடும்
பாலனு மாவர் பராநந்தி யாணையே. (௧௪௨)

அண்டஞ் சுருக்கி லதற்கோ ரழிவில்லை
பிண்டஞ் சுருக்கிற் பிராண னிலைபெறும்
உண்டி சுருக்கி லுபாயம் பலவுள
கண்டங் கறுத்த கபாலியு மாமே. (௧௪௩)

ஆயுள்பரீட்சை.

ஓசைபு மீசனு மொக்கு முணர்வின்கண்
ஓசை யிறந்தவ ரீசனை யுள்குவர்
ஓசை யிறந்தவர் நெஞ்சினு ளீசனும்
ஓசை யுணர்ந்த வுணர்வித வாமே. (௧௪௪)

ஆமே யழிகின்ற வாயுவை நோக்கிடின்
ஆமே லுறைக்கின்ற நன்மை யளித்திடும்
பூமே லுறைகின்ற போதகம் வந்திடும்
தாமே யுலகிற் றலைவனு மாமே. (௧௭௫)

வாரசூலை.

வாரத்திற் சூலம் வரும்வழி கூறுங்கால்
நேரொத்த திங்கள் சனிகிழக் கேயாகும்
பாரொத்த செய்புத னுத்தரம் பானுநாள்
நேரொத்த வெள்ளி குடக்காக நிற்குமே. (௧௭௬)

தெக்கண மாகும் வியாழத்துச் சேர்திசை
அக்கணி சூலமு மாமிடம் பின்னாகில்
துக்கமு மில்லை வலமுன்னே தோன்றிடின்
மிக்கது மேல்வினை மேன்மேல் விளையுமே. (௧௭௭)

கேசரியோகம்.

கட்டக் கழன்று கீழ்நான்று வீழாமல்
அட்டத்திற் கட்டி யடுப்பை யணைகோலி
விட்டத்தைப் பூட்டி மேற்பையைத் தாட்கோத்து
நட்ட மிருக்க நமனில்லை தானே. (௧௭௮)

வண்ணா னொலிக்குஞ் சதுரப் பலகைமேல்
கண்ணாறு மோழை படாமற் கரைகட்டி
விண்ணாறு பாச்சிக் குளத்தை நிரப்பினால்
அண்ணாந்து பார்க்க வழுக்கற்ற வாறே. (௧௭௯)

இடக்கை வலக்கை யிரண்டையு மாற்றித்
துதிக்கையா லுண்பார்க்குச் சோரவும் வேண்டாம்
உறக்கத்தை நீக்கி யுணரவல் லார்கட்
கிறக்கவும் வேண்டா மிருக்கலு மாமே. (௧௮௰)

நாவி னுனியி னடுவே சிவிறிடில்
சீவனு மங்கே சிவனு முறைவிடம்
மூவரு முப்பத்து மூவருந் தோன்றுவர்
சாவது மில்லை சதகோடி யூனே. (௧௮௧)

ஊனூறல் பாயு முயர்வரை யுச்சிமேல்
வானூறல் பாயும் வகையறி வாரில்லை
வானூறல் பாயும் வகையறி வாளர்க்குத்
தேனூற லுண்டு தெளிதலு மாமே. (௪௯௨)

மேலை யணுவில் விரைந்திரு காலிடில்
காலனு மில்லை கதவுந் திறந்திடும்
ஞால மறிய நரைதிரை மாறிடும்
பாலனு மாவான் பராநந்தி யாணையே. (௪௯௩)

ஊனீர் வழியாக வுண்ணாவை யேறிட்டுத்
தேனீர் பருகிச் சிவாய நமவென்று
கானீர் வரும்வழி கங்கை தருவிக்கும்
வானீர் வரும்வழி வாய்ந்தறி வீரே. (௪௯௪)

பரியங்கயோகம்.

பரியங்கி யோகத்துப் பஞ்ச கடிகை
அரியவிவ் வியோக மடைந்தவர்க் கல்லது
சரிவளை முன்கைச்சிச் சந்தனக் கொங்கை
உருகத் தழுவ வொருவர்க் கொணாதே. (௪௯௫)

ஒண்ணாத யோகத்தை யுற்றவ ராரென்னில்
விண்ணார்ந்த கங்கை விரிசடை வைத்தவன்
பண்ணா ரமுதினைப் பஞ்ச கடிகையில்
எண்ணா மெனவெண்ணி யிருந்தா னிருந்ததே. (௪௯௬)

எழுகின்ற தீயின்முன் னேகொண்டு சென்றிட்டால்
மெழுகுரு கும்பரி செய்திடு மெய்யை
உழுகின்ற தில்லை யொளியை யறிந்தபின்
விழுகின்ற தில்லை வெளியறி வார்க்கே. (௪௯௭)

வெளியை யறிந்து வெளியி னடுவே
ஒளியை யறியி லுளிமுறி யாமே
தெளியை யறிந்து செழுநந்தி யாலே
வெளியை யறிந்தனன் மேலறியேனே. (௪௯௮)

மின்னிடை யாளுமின் னாளனுங் கூட்டத்துப்
பொன்னிடை வட்டத்தி னுள்ளே புகப்பெய்து
தன்னொடு தன்னைத் தலைப்பெய்த வல்லிரேல்
மண்ணிடைப் பல்லூழி வாழலு மாங்கே. (கருக)

அமரிதாரணை.

உடலிற் கிடந்த வுறுதிக் குடிநீர்க்
கடலிற் சிறுகிணற் றேற்றமிட் டாலொக்கும்
உடலி லொருவழி யொன்றுக் கிறைக்கில்
நடலைப் படாதுயிர் நாடலு மாமே. (கசூ0)

தெளிதரு மிந்தச் சிவநீர் பருகில்
ஒளிதரு மோராண்டி லூனமொன் றில்லை
வளியுறு மெட்டின் மனமு மொடுங்கும்
களிதருங் காயங் கனகம தாமே. (கசூக)

நூறு மிளகு நுகருஞ் சிவத்தினீர்
மாறு மிதற்கு மருந்தில்லை மாந்தர்கள்
தேறி லிதனைத் தெளியுச்சி கப்பிடின்
மாறு மிதற்கு மறுமயி ராமே. (கசூஉ)

கரையரு கேகின்ற கான லுவரி
வரைவரை யென்பர் மதியிலா மாந்தர்
நுரைதிரை நீக்கி நுகரவல் லார்க்கு
நரைதிரை யாறு நமனுமங் கில்லையே. (கசூ௩)

அளக நன்னுத லாயோ ரதிசயம்
களவு காயங் கலந்தவிந் நீரிலே
மிளகு நெல்லியு மஞ்சளும் வேம்பிடில்
இளகிடு மேனி யிருளுங் கபாலமே. (கசூச)

வீர மருந்தென்றும் விண்ணோர் மருந்தென்றும்
நாரி மருந்தென்றும் நந்தி யருள்செய்தான்
ஆதி மருந்தென் றறிவா ரகலிடம்
சோதி மருந்திது சொல்லவொண் ணாதே. (கசூரு)

சந்திரயோகம்.

பத்து மிரண்டும் பகலோ னுயர்கலை
பத்தினொ டாறு முயர்கலை யான்மதி
ஒத்தநல் லங்கியி னெட்டெட் டுயர்கலை
அத்திற னின்றமை யாய்ந்துகொள் வீரே. (௧௬௬)

எட்டெட்டு மீராறு மீரெட்டுந் தீக்கதிர்
சுட்டிட்ட சோமனிற் றோன்றுங் கலையெனக்
கட்டப் படுந்தா ரகைகதிர் நாலுள
கட்டிட்ட தொண்ணூற் றொடாறுங் கலாதியே. (௧௬௭)

எல்லாக் கலையு மிடைபிங் கலைநடுச்
சொல்லா நடுநாடி யூடே தொடர்மூலம்
செல்லா வெழுப்பிச் சிரத்துடன் சேர்தலால்
நல்லோர் திருவடி நண்ணிநிற் போரே. (௧௬௮)

காணும் பருதியின் காலை யிடத்திட்டு
மாணு மதியதன் காலை வலத்திட்டுப்
பேணி யிவ்வாறு பிழையாமற் செய்வீரேல்
ஆணி கலங்காதவ் வாயிரத் தாண்டே. (௧௬௯)

பாலிக்கு நெஞ்சம் பறையோசை யொன்பதில்
ஆலிக்கு மங்கே யமரர் பராபரன்
மேலைக்கு முன்னே விளக்கொளி யாய்நிற்கும்
காலைக்குச் சங்கு கதிரவன் றானே. (௧௭௰)

மாறு மதியுமா தித்தனு மாறின்றித்
தாறு படாமல்தண் டோடே தலைப்படில்
ஊறு படாதுடல் வேண்டு முபாயமும்
பாறு படாவின்பம் பார்மிசைப் பொங்குமே. (௧௭௧)

நான்காந்தந்திரம்.

அசபை.

தேவ ருறைகின்ற சிற்றம் பலமென்றும்
தேவ ருறைகின்ற சிதம்பர மென்றும்
தேவ ருறைகின்ற திருவம் பலமென்றும்
தேவ ருறைகின்ற தென்பொது வாமே. (கஎஉ)

ஆமேபொன் னம்பல மற்புத மானந்தம்
ஆமே திருக்கூத் தனவரத தாண்டவம்
ஆமே பிரளய மாகுமத் தாண்டவம்
ஆமே சங்காரத் தருந்தாண்ட வங்களே. (கஎங)

அமலம் பதிபசு பாசங்க ளாகமம்
அமலந் திரோதாயி யாகுமா னந்தமாம்
அமலஞ்சொல் லாணவ மாயை காமியம்
அமலந் திருக்கூத்தங் காடு மிடந்தானே. (கஎச)

வாறே சிவாய நமச்சி வாயநம
வாறே செபிக்கில் வரும்பேர் பிறப்பில்லை
வாறே யருளால் வளர்கூத்துக் காணலாம்
வாறே செபிக்கில் வருஞ்செம்பு பொன்னே. (கஎரு)

பொன்னான மந்திரம் புகலவு மொண்ணாது
பொன்னான மந்திரம் பொறிகிஞ் சுகத்தாகும்
பொன்னான மந்திரம் புகையுண்டு பூரிக்கில்
பொன்னாகும் வல்லார்க் குடம்புபொற் பாதமே. (கஎசு)

பொற்பாதங் காணலாம் புத்திர ருண்டாகும்
பொற்பாதத் தாணையே செம்புபொன் னாயிடும்
பொற்பாதங் காணத் திருமேனி யாயிடும்
பொற்பாத நன்னடஞ் சிந்தனை சொல்லுமே. (கஎஎ)

சூக்கும மெண்ணா யிரஞ்செபித் தாலுமேல்
சூக்கும மான வழியிடைக் காணலாம்
சூக்கும மான வினையைக் கெடுக்கலாம்
சூக்கும மான சிவனதா னந்தமே. (௧௭௮)

திருவம்பலச்சக்கரம்.

அரகர வென்ன வரியதொன் றில்லை
அரகர வென்ன வறிகிலர் மாந்தர்
அரகர வென்ன வமரரு மாவர்
அரகர வென்ன வறும்பிறப் பன்றே. (௧௭௯)

நாடும் பிரணவ நடுவிரு பக்கமும்
ஆடு மவர்வா யமர்ந்தங்கு நின்றது
நாடு நடுவுண் முகநமசி வாய
ஆடுஞ் சிவாயநம புறவட்டத் தாயதே. (௧௮௰)

அஞ்செழுத் தாலைந்து பூதம் படைத்தனன்
அஞ்செழுத் தாற்பல யோனி படைத்தனன்
அஞ்செழுத் தாலிவ் வகலிடந் தாங்கினன்
அஞ்செழுத் தாலே யமர்ந்து நின்றானே. (௧௮௧)

உண்ணு மருந்து முலப்பிலி காலமும்
பண்ணுறு கேள்வியும் பாடலு மாய்நிற்கும்
விண்ணின் றமரர் விரும்பி யடிதொழ
எண்ணின் றெழுத்தஞ்சு மாகிநின் றானே. (௧௮௨)

ஐந்தின் பெருமை யகலிட மாவது
ஐந்தின் பெருமையே யாலய மாவது
ஐந்தின் பெருமை யறவோன் வழக்கமும்
ஐந்தின் வகைசெயப் பாலனு மாமே. (௧௮௩)

நகார மகாரஞ் சிகார நடுவாய்
வகார மிரண்டும் வளியுடன் கூடி
ஒகார முதற்கொண் டொருக்கா லுரைக்க
மகார முதல்வன் மனத்தகத் தானே. (௧௮௪)

சிகார வகார யகார முடனே
நகார மகார நடுவுற நாடி
ஒகார முடனே யொருக்கா லுரைக்கு
மகார முதல்வன் மதித்து நின்றானே. (௧அ௫)

எட்டு மிரண்டு மினிதறி கின்றிலர்
எட்டு மிரண்டு மறியாத வேழையர்
எட்டு மிரண்டு மிருமூன்று நான்கெனப்
பட்டது சித்தாந்த சன்மார்க்க பாதமே. (௧அ௬)

அர்ச்சனை.

அம்புய நீலங் கழுநீ ரணிநெய்தல்
வம்பவிழ் பூக முமாதவி மந்தாரம்
தும்பை வகுளஞ் சுரபுன்னை மல்லிகை
செண்பகம் பாதிரி செவ்வந்தி சாத்திடே. (௧அ௭)

சாங்கம தாகவே சந்தொடு சந்தனம்
தேங்கமழ் குங்குமங் கற்பூரங் காரகில்
பாங்கு படப்பனி நீராற் குழைத்துவைத்
தாங்கே யணிந்துநீ ரர்ச்சியு மன்பொடே. (௧அ௮)

அன்புட னேநின் றமுதமு மேற்றியே
பொன்செய் விளக்கும் புகைதீபந் திசைதொறும்
துன்ப மகற்றித் தொழுவோர் நினையுங்கால்
இன்ப முடனேவந் தெய்திடு முத்தியே. (௧அ௯)

எய்தி வழிப்படி லெய்தா தனவில்லை
எய்தி வழிப்படி னிந்திரன் செல்வமுன்
எய்தி வழிப்படி லெண்சித்தி யுண்டாகும்
எய்தி வழிப்படி லெய்திடு முத்தியே. (௧௯0)

வேண்டார்கள் கன்மம் விமலனுக் காட்பட்டோர்
வேண்டார்கள் கன்ம மதிலிச்சை யற்றபேர்
வேண்டார்கள் கன்ம மிகுசிவ யோகிகள்
வேண்டார்கள் கன்ம மிகுதியோ ராய்ந்தன்பே. (௧௯௧)

தெளிவரு நாளிற் சிவவமு தூறும்
ஒளிவரு நாளி லோரெட்டி லுகளும்
ஒளிவரு மப்பதத் தோரிரண் டாகில்
வெளிதரு நாதன் வெளியா யிருந்தே. (ககஉ)

நவதுண்டம்.

எந்தை பிரானுக் கிருமூன்று வட்டமாய்த்
தந்தைதன் முன்னே சண்முகந் தோன்றலால்
கந்தன் சுவாமி கலந்தங் கிருத்தலால்
மைந்த னிவனென்ன மாட்டிக்கொ ளீரே. (ககங)

கலந்திரு பாத மிருகர மாகும்
மலர்ந்திரு குண்ட மகாரத்தோர் மூக்கும்
மலர்ந்தெழு செம்முக மற்றைக்கண் ணெற்றி
உணர்ந்திரு குஞ்சியங் குத்தம ஞர்க்கே. (ககச)

பார்த்திட மெங்கும் பரந்தெழு சோதியை
ஆத்தம தாகவே யாய்ந்தறி வாரில்லை
காத்துட லுள்ளே கருதி யிருந்தவர்
மூத்துடல் கோடி யுகங்கண்ட வாறே. (ககரு)

சத்திபேதம் - திரிபுரைச்சக்கரம்.

திரிபுரை சுந்தரி யந்தரி சிந்துரப்
பரிபுரை நாரணி யாம்பால வன்னத்தி
இருள்புரை யீசி மனோன்மணி யென்ன
வருபல வாய்நிற்கு மாமாது தானே (ககசு)

அவளை யறியா வமரரு மில்லை
அவளன்றிச் செய்யு மருந்தவ மில்லை
அவளன்றி யைவரா லாவதொன் றில்லை
அவளன்றி யூர்புகு மாறறி யேனே. (ககஎ)

அறிவார் பராசத்தி யானந்த மென்பார்
அறியா ரறிவுரு வாமவ ளென்பார்
அறிவார் கரும மவளிச்சை யென்பார்
அறிவார் பரனு மவளிடந் தானே, (ககஅ)

தானெங் குளதங் குளதையன் மாதேவி
ஊனெங் குளவங் குள்ளுயிர்க் காவலன்
வானெங் குளவங் குளேவந்துமப் பாலதாம்
கோனெங்கு நின்ற குறிபல பாரே. (௧௧௯)

போகஞ்செய் சத்தி புரிகுழ லாளொடும்
பாகஞ்செய் தாங்கே பராசத்தி யாய்நிற்கும்
ஆகஞ்செய் தாங்கே யடியவர் நாடொறும்
பாகஞ்செய் ஞானம் படர்கின்ற கொம்பே. (௨௰)

கொம்பனை யாளைக் குவிமுலை மங்கையை
வம்பவிழ் கோதையை வானவர் நாடியைச்
செம்பவ ளத்திரு மேனிச் சிறுமியை
நம்பியென் னுள்ளே நயந்துவைத் தேனே. (௨௱௧)

உண்டில்லை யென்ற துருச்செய நின்றது
வண்டில்லை மன்றினுள் மன்னி நிறைந்தது
கண்டிலர் காரண காரணி தம்மொடு
மண்டல மூன்றுற மன்னிநின் றாளே. (௨௱௨)

ஓங்காரி யென்பா ளவளொரு பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை யுடையவள்
ஆங்காரி யாகியே யைவரைப் பெற்றிட்டு
ரீங்காரத் துள்ளே யினிதிருந் தாளே. (௨௱௩)

தானே தலைவி யெனநின்ற தற்பரை
தானே யுயிர்வித்தாய்த் தந்த பதினலும்
வானோர் தலமு மனமுநற் புத்தியும்
தானே சிவகதி தன்மையு மாமே. (௨௱௪)

வயிரவிமந்திரம்.

சூலங் கபாலங்கை யேந்திய சூலிக்கு
நாலாங் கரமுள நாகபா சாங்குசம்
மாலங் கயனறி யாத வடிவுக்கு
மேலங்க மாய்நின்ற மெல்லிய லாளே. (௨௱௫)

காணும் பலபல தெய்வங்கள் வெவ்வேறு
பூணும் பலபல பொன்போலத் தோற்றிடும்
பேணுஞ் சிவனும் பிரமனு மாயனும்
காணுந் தலைவிநற் காரணி காணே. (உ௲கூ).

ஆதி வயிரவி கன்னித் துறைமன்னி
ஓதி யுணரி லுடலுயி ரீசனும்
பேதை யுலகிற் பிறவிக ளாசமாம்
ஓத வுலவாத கோலமொன் றாகுமே. (உ௲எ).

தையனல் லாளைத் தலத்திற் றலைவியை
மையலை நோக்கு மனோன்மணி மங்கையைப்
பையநின் றேத்திப் பணிமின் பணிந்தபின்
வெய்ய பவமினி மேவகி லாவே. (உ௲அ).

நாடிய கண்மூன்று நடுவெழு ஞானத்துக்
கூடி யிருந்த குமரி குலக்கன்னி
ஆடகச் சீறடி யம்பொற் சிலம்பொலி
ஊடக மேவி யுறங்குகின் றாளே. (உ௲கூ).

அஞ்சொன் மொழியா ளருந்தவப் பெண்பிள்ளை
செஞ்சொன் மடமொழி சீருடைச் சேயிழை
தஞ்சமென் றெண்ணித்தன் சேவடி போற்றுவார்க்
கிஞ்சொ லளிக்கு மிறைவியென் றாரே. (உ௲ம).

பிதற்றிக் கழிந்தனர் பேதை மனிதர்
முயற்றியின் முத்தி யருளு முதல்வி
கயற்றிகழ் முக்கண்ணுங் கம்பலைச் செவ்வாய்
முகத்தரு ளோக்கமு முன்னுள்ள தாமே. (உகக).

பூரணசத்தி.

உணர்ந்தில ரீசனை யூழிசெய் சத்தி
புணர்ந்தது பூரணம் புண்ணியர் தங்கள்
கணங்களைத் தன்னருட் செய்கின்ற கன்னி
குணர்ந்த வழிகொண்டு கும்பக மாகுமே. (உகஉ).

ஆதாரவாதேயம்.

மாதுநல் லாளு மணாள னிருந்திடப்
பாதிநல் லாளும் பகவரு மானது
சோதிநல் லாளைத் துணைப்பெய்ய வல்லிரேல்
வேதனை தீர்தரும் வெள்ளடை யாமே. (உகங)

தானே யிருநிலந் தாங்கிவிண் ணாய்நிற்கும்
தானே சுடுமங்கி ஞாயிறுந் திங்களும்
தானே மழைபொழி தையலு மாய்நிற்கும்
தானே வடவரைத் தண்கடற் கண்ணே. (உகச)

கண்ணுடை யாளைக் கலந்தங் கிருந்தவர்
மண்ணுடை யாரை மனிதரிற் கூட்டொணாப்
பண்ணுடை யார்கள் பதைப்பற் றிருந்தவர்
விண்ணுடை யார்களை மேலுறக் கண்டே. (உகரு)

கண்டெண் டிசையுங் கலந்து வருங்கன்னி
பண்டெண் டிசையும் பராசத்தி யாய்நிற்கும்
விண்டெண் டிசையும் விரைமலர்க் கைக்கொண்டு
தொண்டெண் டிசையுந் தொழநின்ற கன்னியே. (உகசு)

வாயு மனமுங் கடந்த மனோன்மணி
பேயுங் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயு மறிவுங் கடந்த வரனுக்குத்
தாயு மகளுநற் றாரமு மாமே. (உகஎ)

அதுவிது வென்னு மவாவினை நீக்கித்
துதியது செய்து சுழியுற நோக்கில்
விதியது தன்னையும் வென்றிட லாகும்
மதிமல ராள்சொன்ன மண்டல மூன்றே. (உகஅ)

மார்க்கங்க ளீன்ற மனோன்மணி மங்கலி
யார்க்கு மறிய வரியா ளவளாகும்
வாக்கு மனமு மருவியொன் றாய்விட்ட
நோக்கும் பெருமைக்கு நுண்ணறி வாமே. (உககூ)

அதுவிது வென்றவ மேகழி யாதே
மதுவிரி பூங்குழன் மங்கைநல் லாளைப்
பதிமது மேவிப் பணியவல் லார்க்கு
விதிவழி தன்னையும் வென்றிட லாமே. (உஉ0)

வென்றிட லாகும் விதிவழி தன்னையும்
வென்றிட லாகும் வினைப்பெரும் பாசத்தை
வென்றிட லாகும் விழைபுலன் றன்னையும்
வென்றிடு மங்கைதன் மெய்யுணர் வோர்க்கே. (உஉக)

சத்தியி னோடு சயம்புவு நேர்படில்
வித்தது வின்றியே யெல்லாம் விளைந்தன
அத்தகை யாகிய வைம்பத் தொருவரும்
சித்தது மேவித் திருந்திடு வாரே. (உஉஉ)

பெற்றான் பெருமை பெரிய மனோன்மணி
நற்றா ளிறைவனே நன்பய னேயென்பர்
கற்றா னறியுங் கருத்தறி வார்கட்குப்
பொற்றா ளுலகம் புகல்தனி யாமே. (உஉ௩)

அம்மையு மத்தனு மன்புற்ற தல்லது
அம்மையு மத்தனு மாரறி வாரென்னை
அம்மையொ டத்தனு மியானு முடனிருந்
தம்மையொ டத்தனை யான்புரிந் தேனே. (உஉ௪)

புவனபதிசக்கரம்.

பூசிக்கும் போது புவன பதிதன்னை
ஆசற் றகத்தினி லாவா கனம்பண்ணிப்
பேசிப் பிராணப் பிரதிட்டை யதுசெய்து
தேசுற் றிடவே தியான மதுசெய்யே. (உஉ௫)

நவாக்கரி சக்கரம்.

நலந்தரு ஞானமுங் கல்வியு மெல்லாம்
உரந்தரு வல்வினை யும்மைவிட் டோடும்
சிரந்தரு தீவினை செய்வ தகற்றி
வரந்தரு சோதியும் வாய்த்திடுங் காணே. (உஉ௬)

வழுத்திடு நாவுக் கரசிவ டன்னைப்
பகுத்திடும் வேதமெய் யாகம மெல்லாம்
தொகுத்தொரு நாவிடை சொல்லவல் லானை
முகத்துள்ளு முன்னெழக் கண்டுகொ ளீரே. (உஉஎ)

ஒளிக்கும் பசாசத்தி யுள்ளே யமரின்
களிக்குமிச் சிந்தையிற் காரணங் காட்டித்
தெளிக்கு மழையுடன் செல்வ முண்டாக்கும்
அளிக்கு மிவளை யறிந்துகொள் வார்க்கே. (உஉஅ)

கேடில்லை காணுங் கிளரொளி கண்டபின்
நாடில்லை காணு நாண்முத லற்றபின்
மாடில்லை காணும் வரும்வழி கண்டபின்
காடில்லை காணுங் கருத்துற் றிடத்துக்கே. (உஉக)

அண்டத்தி னுள்ளே யளப்பரி தானவள்
பிண்டத்தி னுள்ளே பெருவெளி கண்டவள்
குண்டத்தி னுள்ளே குணம்பல காணிலும்
கண்டத்தி னின்ற கலப்பறி யார்களே. (உ௩௰)

உணர்ந்திருந் துள்ளே யொருத்தியை நோக்கின்
கலந்திருந் தெங்குங் கருணை பொழியும்
மணந்தெழு மோசை யொலியது காணும்
தணந்தெழு சக்கரந் தான்றரு வாளே. (உ௩க)

அமுதம தாக வழகிய மேனி
படிகம தாகப் பரந்தெழு முள்ளே
குமுதம தாகக் குளிர்ந்தெழு முத்து
கெமுதம தாகிய கேடிலி தானே. (உ௩உ)

இல்லடைந் தானுக்கு மில்லாத தொன்றில்லை
இல்லடைந் தானுக் கிரப்பது தானில்லை
இல்லடைந் தானுக் கிமையவர் தாமொவ்வார்
இல்லடைந் தானுக்கு வில்லாதில் லானையே. (உ௩௩)

ஐ ந் தா ந் த ந் தி ர ம்.

சுத்தசைவம்.

கற்பயா கற்றுக் கலைமன்னு மெய்யோகம்
முற்பத ஞான முறைமுறை நண்ணியே
தொற்பத மேவித் துரிசற்று மேலான
தற்பரங் கண்டுளோர் சைவசித் தாந்தரே. (உ௲௪)

வேதாந்தஞ் சுத்தம் விளங்கிய சித்தாந்தம்
நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற காட்சியர்
பூதாந்த போதாந்த மாகப் புனஞ்செய்ய
நாதாந்த பூரணர் ஞானநே யத்தரே. (உ௲௫)

மார்க்கசைவம்.

வேதாந்தங் கண்டோர் பிரமமித் தியாதரர்
நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற யோகிகள்
வேதாந்த மில்லாத சித்தாந்தம் கண்டுளோர்
சாதாரண மன்ன சைவ ருபாயமே. (உ௲௬)

ஒன்று மிரண்டு மிலதுமா யொன்றாக
நின்று சமய நிராகார நீங்கியே
நின்று பராபரை நேயத்தைப் பாதத்தால்
சென்று சிவமாதல் சித்தாந்த சித்தியே. (உ௲௭)

கடுஞ்சுத்தசைவம்.

வேடங் கடந்து விகிர்தன்றன் பான்மேவி
ஆடம் பரமின்றி யாசாபா சஞ்செற்று
பாடொன்று பாசம் பசுத்துவம் பாழ்படச்
சாடுஞ் சிவபோ தகர்சுத்த சைவரே. (உ௲௮)

சுத்தச் சிவனுரை தானத்திற் றோயாமல்
முத்தர் பதப்பொருண் முத்திவித் தாமூலம்
அத்தகை யான்மா வரனையடைந் தற்றால்
சுத்தச் சிவமாவ ரேசுத்த சைவரே. (உ௲௯)

நானென்றுந் தானென்று நாடிநான் சாரவே
தானென்று நானென் றிரண்டிலாத் தற்பதம்
தானென்று நானென்ற தத்துவ நல்கலால்
தானென்று நானென்றுஞ் சாற்றகிலேனே. (உ௪0)

சரியை.

காடு நகரமு நற்றிரு கோயிலும்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே. (உ௪க)

கிரியை.

அன்பி னுருகுவ னாளும் பணிசெய்வன்
செம்பொன் செய்மேனி கமலத் திருவடி
முன்புநின் றாங்கே மொழிவ தெனக்கருள்
என்பினுட் சோதி யிலங்குகின் றானே. (உ௪உ)

யோகம்.

பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோல்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது
ஓவியம் போல வுணர்ந்தறி வாளர்க்கு
நாவி யணைந்த நடுதறி யாமே. (உ௪௩)

விரும்பிநின் றேசெயின் மெய்த்தவ ராகும்
விரும்பிநின் றேசெயின் மெய்யுரை யாகும்
விரும்பிநின் றேசெயின் மெய்த்தவ மாகும்
விரும்பிநின் றேசெயில் விண்ணவ னாகுமே. (உ௪௪)

ஞானம்.

ஞானத்தின் மிக்க வறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமு நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவா
ஞானத்தின் மிக்கார் நரரின்மிக் காரே. (உ௪௫)

சத்தமுஞ் சத்த மனனுந் தருமனம்
உய்த்த வுணர்வு முணர்த்து மகந்தையும்

சித்தமென் றிம்மூன்றுஞ் சிந்திக்குஞ் செய்கையும்
சத்தங் கடந்தவர் பெற்றசன் மார்க்கமே. (உசகு)

அறிவு மடக்கமு மன்பு முடனே
பிறியா நகர்ம ன்னும் பேரரு ளாளன்
குறியுங் குணமுங் குறைகழ வீங்கா
நெறியறி வார்க்கிது நீர்த்தொனி யாமே. (உசஎ)

நண்ணிய ஞானத்தின் ஞானாதி நண்ணுவோன்
புண்ணிய பாவங் கடந்த பிணக்கற்றோன்
கண்ணிய நேயங் கரைஞானங் கண்டுளோன்
திண்ணிய சுத்தன் சிவமுத்தன் சித்தனே. (உசஅ)

சன்மார்க்கம்.

சாற்றுஞ்சன் மார்க்கமாந் தற்சிவ தத்துவத்
தோற்றங்க ளான சுருதி சுடர்க்கண்டு
சீற்ற மொழிந்து சிவயோக சித்தராய்க்
கூற்றத்தை வென்றார் குறிப்பறிந் தார்களே. (உசகூ)

தெரிசிக்கப் பூசிக்கச் சிந்தனை செய்யப்
பரிசிக்கக் கீர்த்திக்கப் பாதகஞ் சூடக்
குருபத்தி செய்யுங் குவலயத் தோர்க்குத்
தருமுத்தி சார்பூட்டுஞ் சன்மார்க்கந் தானே. (உருo)

தெளிவறி யாதார் சிவனை யறியார்
தெளிவறி யாதார் சீவனு மாகார்
தெளிவறி யாதார் சிவமாக மாட்டார்
தெளிவறி யாதவர் தீரார் பிறப்பே. (உருக)

பசுபாச நீங்கிப் பதியுடன் கூடிக்
கசியாத நெஞ்சங் கசியக் கசிவித்
தொசியாத வுண்மைச் சொருபோ தயத்துற்
றசைவான தில்லாமை யானசன் மார்க்கமே. (உருஉ)

சகமார்க்கம்.

யோகச் சமாதியி னுள்ளே யகலிடம்
யோகச் சமாதியி னுள்ளே யுளரொளி

யோகச சமாதியி னுள்ளே யுளசத்தி
யோகச் சமாதி யுகந்தவர் சித்தரே. (உ௫௩)

யோகமும் போகமும் யோக்கியர்க் காகுமால்
யோகஞ் சிவரூப முற்றிடு முள்ளத்தோர்
போகம் புவியிற் புருடார்த்த சித்திய
தாகு மிரண்டு மழியாத யோகிக்கே. (உ௫௪)

சற்புத்திரமார்க்கம்.

பூசித்தல் வாசித்தல் போற்றல் சபித்திடல்
ஆசற்ற நற்றவம் வாய்மை யழுக்கின்மை
நேசித்திட் டன்னமு நீசுத்தி செய்தன்மற்
றூசற்ற சற்புத் திரமார்க்க மாகுமே. (உ௫௫)

உயர்ந்தும் பணிந்தும் முகந்துந் தழுவி
வியர்ந்து மரனடிக் கேமுறை செய்மின்
பயந்தும் பிறவிப் பயனது வாகும்
பயந்து பரிக்கிலப் பான்மைய னாமே. (உ௫௬)

நின்று தொழுவன் கிடந்தெம் பிரான்றன்னை
என்றுந் தொழுவ னெழிற்பரஞ் சோதியைத்
துன்று மலர்தூவித் தொழுமின் றொழுந்தோறுஞ்
சென்று வெளிப்படுந் தேவர் பிரானே. (உ௫௭)

தாசமார்க்கம்.

எளியன தீப மிடுமலர் கொய்தல்
அளிதின் மெழுக லதுதூர்த்தல் வாழ்த்தல்
பளிமணி பற்றல் பன்மஞ் சனமாதி
தளிதொழில் செய்வது தான்றாச மார்க்கமே. (உ௫௮)

சாலோகம்.

சாலோக மாதி சரியாதி யிற்பெறும்
சாலோக சாமீபந் தங்குஞ் சரியையாம்
மாலோகஞ் சேரில் வழியாகுஞ் சாரூபம்
பாலோக மில்லாப் பரனுரு வாமே. (உ௫௯)

சாமீபம்.

பாசம் பசுவான தாகுமிச் சாலோகம்
பாச மருளான தாகுமிச் சாமீபம்
பாசஞ் சிவமான தாகுமிச் சாரூபம்
பாசங் கரைபதி சாயுச் சியமே. (உ௬௰)

சாரூபம்.

தங்கிய சாரூபந் தானெட்டாம் யோகமாம்
தங்குஞ் சன்மார்க்கந் தனிலன்றிக் கைகூடா
அங்கத் துடல்சித்தி சாதன ராகுவர்
இங்கிவ ராக விழிவற்ற யோகமே. (உ௬௧)

சாயுச்சியம்.

சைவஞ் சிவனுடன் சம்பந்த மாவது
சைவந் தனையறிந் தேசிவஞ் சாருதல்
சைவஞ் சிவந்தன்னைச் சாராம னீவுதல்
சைவஞ் சிவானந்தஞ் சாயுச் சியமே. (உ௬௨)

சாயுச் சியஞ்சாக்கி ராதீதஞ் சாருதல்
சாயுச் சியமுப சாந்தத்துத் தங்குதல்
சாயுச் சியஞ்சிய மாதல் முடிவிலாச்
சாயுச் சியமனத் தானந்த சத்தியே. (உ௬௩)

சத்திநிபாதம் – மந்தம்.

இருட்டறை மூலை யிருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடற் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி யவனை மணம்புரிந் தாளே. (உ௬௪)

இருணீக்கி யெண்ணில் பிறவி கடத்தி
அருணீங்கா வண்ணமே யாதி யருளும்
மருணீங்கா வானவர் கோனொடுங் கூடிப்
பொருணீங்கா வின்பம் புலம்பயில் தானே. (உ௬௫)

மந்ததாரம்.

மருட்டிப் புணர்ந்து மயக்கமு நீக்கி
வெருட்டி வினையறுத் தின்பம் விளைத்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
அருட்டிகழ் ஞான மதுபுரிந் தானே. (உசுசு)

கன்னித் துறைபடிந் தாடிய வாடவர்
கன்னித் துறைபடிந் தாடுங் கருத்திலர்
கன்னித் துறைபடிந் தாடுங் கருத்துண்டேல்
பின்னைப் பிறவிப் பிறிதில்லை தானே. (உசுஎ)

தீவிரம்.

அண்ணிக்கும் பெண்பிள்ளை யப்பனர் தோட்டத்தில்
எண்ணிக்கு மேழேழ் பிறவி யுணர்விக்கும்
உண்ணிற்ப தெல்லாம் பொழிய முதல்வனைக்
கண்ணுற்று நின்ற கனியது வாகுமே. (உசுஅ)

பிறப்பை யறுக்கும் பெருந்தவ நல்கும்
மறப்பை யறுக்கும் வழிபட வைக்கும்
குறப்பெண் குவிமுலை கோமள வல்லி
சிறப்பொடு பூசனை செய்யநின் றார்க்கே. (உசுக)

தீவிரதாரம்.

இருவினை நேரொப்பி லின்னருட் சத்தி
குருவென வந்து குணம்பல நீக்கித்
தருமரன் ஞானத்தாற் றன்செய லற்றால்
திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே. (உஎ0)

இரவும் பகலு மிலாத விடத்தே
குரவஞ் செய்கின்ற குழலியை யுன்னி
அரவஞ் செய்யாம லவளுடன் சேரப்
பரிவொன் றிலாளும் பராபரை தானே. (உஎக)

புறச்சமய தூஷணம்.

ஆயத்து ணின்ற வறுசம யங்களும்
காயத்து ணின்ற கடவுளைக் காண்கிலா

மாயக் குழியில் விழுவர் மனைமக்கள்
பாசத்தி லுற்றுப் பதைக்கின்ற வாறே. (௨௭௨)

ஆறு சமயமுங் கண்டவர் கண்டிலர்
ஆறு சமயப் பொருளும் பயனில்லை
தேறுமின் றேறித் தெளிமின் றெளிந்தபின்
மாறுத லின்றி மனைபுக லாமே. (௨௭௩)

சிவமல்ல தில்லை யறையோ சிவமாம்
தவமல்ல தில்லை தலைப்படு வார்க்கிங்
கவமல்ல தில்லை யறுசம யங்கள்
தவம்வல்ல நந்திதாட் சார்ந்துய்ய நீரே. (௨௭௪)

சிவகதி யேகதி மற்றுள்ள வெல்லாம்
பவகதி பாசப் பிறவியொன் றுண்டு
தவகதி தன்னொடு நேரொன்று தோன்றில்
அவகதி மூவரு மவ்வகை யாமே. (௨௭௫)

கற்றுங் கழுதைகள் போலுங் கலதிகள்
சுத்த சிவனெங்குந் தோய்வுற்று நிற்கின்றான்
குற்றந் தெரியாதார் குணங்கொண்டு கோதாட்டார்
பித்தேறி நாளும் பிறந்திறப் பாரே. (௨௭௬)

ஆன சமய மதுவிது நன்றெனும்
மாய மனிதர் மயக்க மதுவொழி
கானங் கடந்த கடவுளை நாடுமின்
ஊனங் கடந்த வுருவது வாமே. (௨௭௭)

நிராகாரம்.

பாங்கமர் கொன்றைப் படர்சடை யானடி
தாங்கு மனிதர் தரணியி னேரொப்பர்
நீங்கிய வண்ண நினைவுசெய் யாதவர்
ஏங்கி யுலகி லிருந்தழு வாரே. (௨௭௮)

உட்சமயம்.

ஒன்றது பேரூர் வழியா றதற்குள
என்றது போல விருமுச் சமயமும்

நன்றிது தீதிது வென்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயையொத் தார்களே. (உஎக)

சைவப் பெருமைத் தனிநா யகன்றன்னை
உய்ய வுயிர்க்கின்ற வொண்சுடர் நந்தியை
மெய்ய பெருமையர்க் கன்பனை யின்பஞ்செய்
வையத் தலைவனை வந்தடைந் துய்மினே. (உஅ0)

சைவச் சமயத் தனிநா யகனந்தி
உய்ய வகுத்த குருநெறி யொன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய
வையத்து ளார்க்கு வகுத்துவைத் தானே. (உஅக)

ஆறாந் தந்திரம்.

சிவகுருதரிசனம்.

எல்லா வுலகிற்கு மப்பாலோ னிப்பாலாய்
நல்லா ருள்ளத்து மிக்கரு ணல்கலால்
எல்லாரு முய்யக்கொண் டிங்கே யளித்தலால்
சொல்லார்ந்த நற்குரு சுத்த சிவமே. (உஅஉ)

சிவனே சிவஞானி யாதலாற் சுத்த
சிவனே யெனவடி சேரவல் லார்க்கு
நவமான தத்துவ நன்முத்தி நண்ணும்
பவமான தின்றிப் பரலோக மாமே. (உஅங)

குருவே சிவமெனக் கூறின னந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே. (உஅச)

திருவாய சித்தியு முத்தியுஞ் சீர்மை
மருளா தருளு மயக்கறும் வாய்மைப்
பொருளாய வேதாந்தப் போதமு நாதன்
உருவா யருளா விடிலோர வொண்ணாதே. (உஅரு)

பத்தியு ஞானவை ராக்கிய மும்பர
சித்திக்கு வித்தாஞ் சிவோகமே சேர்தலால்
முத்தியின் ஞான முளைத்தலா லம்முளை
சத்தி யருடரிற் றுனெளி தாமே. (உஅ௬)

சிவமான ஞானந் தெளியவொண் சித்தி
சிவமான ஞானந் தெளியவொண் முத்தி
சிவமான ஞானஞ் சிவபரத் தேயேகச்
சிவமான ஞானஞ் சிவானந்த நல்குமே. (உஅ௭)

திருவடிப்பேறு.

இசைந்தெழு மன்பி லெழுந்த படியே
பசைந்தெழு மீசரைப் பாசத்து ளேகச்
சிவந்த குருவந்து சென்னிகை வைக்க
உவந்த குருபத முள்ளத் துவந்ததே. (உஅஅ)

உரையற் றுணர்வற் றுயிர்பர மற்றுத்
திரையற்ற நீர்போற் சிவமாத நீர்த்துக்
கரையற்ற சத்தாதி நான்குங் கடந்த
சொரூபத் திருத்தினன் சொல்லிறந் தோமே. (உஅ௯)

இதயத்து நாட்டத்து மென்றன் சிரத்துப்
பதிவித்த பாதம் பராபர நந்தி
கதிவைத்த வாறுமெய் காட்டிய வாறும்
விதிவைத்த வாறும் விளம்பவொண் ணாதே. (உ௯௰)

திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்கும்
திருவடி ஞானஞ் சிறைமல மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே. (உ௯௧)

மந்திர மாவது மாமருந் தாவதும்
தந்திர மாவதுந் தானங்க ளாவதும்
சுந்தர மாவதுந் தூய்நெறி யாவதும்
எந்தை பிரான்ற னிணையடி தானே. (உ௯உ)

ஞாதுருஞானஞேயம்.

காணாத கண்ணுடன் கேளாத கேள்வியும்
கோணாத போகமுங் கூடாத கூட்டமும்
நாணாத நாணமு நாதாந்த போதமும்
காணா யெனவந்து காட்டினன் நந்தியே. (உ௧௩)

மோனங்கை வந்தோர்க்கு முத்தியும் கைகூடும்
மோனங்கை வந்தோர்க்குச் சித்தியு முன்னிற்கும்
மோனங்கை வந்தூமை யாமொழி முற்றுங்காண்
மோனங்கை வந்தைங் கருமமு முன்னுமே. (உ௧௪)

துறவு.

அறவன் பிறப்பிலி யாரு மிலாதான்
உறைவது காட்டக முண்பது பிச்சை
துறவெனுங் கண்டீர் துறந்தவர் தம்மைப்
பிறவி யறுத்திடும் பித்தன்கண் டீரே. (உ௧௫)

நெறியைப் படைத்தா னெருஞ்சில் படைத்தான்
நெறியில் வழுவி னெருஞ்சில்முட் பாயும்
நெறியில் வழுவா தியங்கவல் லார்க்கு
நெறியி னெருஞ்சின்முட் பாயகி லாவே. (உ௧௬)

தவம்.

ஒடுங்கு நிலைபெற்ற வுத்தம ருள்ளம்
நடுங்குவ தில்லை நமனுமங் கில்லை
இடும்பையு மில்லை யிராப்பக லில்லை
படும்பய னில்லை பற்றுவிட் டோர்க்கே. (உ௧எ)

எம்மா ருயிரு மிருநிலத் தோற்றமும்
செம்மா தவத்தின் செயலின் பெருமையும்
அம்மான் திருவருட் பெற்றவர்க் கல்லாது
இம்மா தவத்தி னியல்பறி யாரே. (உ௧அ)

பிறப்பறி யார்பல பிச்சைசெய் மாந்தர்
சிறப்பொடு வேண்டிய செல்வம் பெறுவர்

மறப்பில ராகிய மாதவஞ் செய்வார்
பிறப்பினை நீக்கும் பெருமைபெற் றூரே. (உகக)

இருந்து வருந்தி யெழிற்றவஞ் செய்யும்
பெருந்தன்மை யாளரைப் பேதிக்க வென்றே
இருந்திந் திரனே யெவரே வரினும்
திருந்துந்தன் சிந்தை சிவனவன் பாலே. (௩௰)

சாத்திர மோதுஞ் சதிர்களை விட்டுநீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்தவிப் பார்வை பசுமரத் தாணிபோல்
ஆர்த்த பிறவி யகலவிட் டோடுமே. (௩௰க)

தவம்வேண்டு ஞானந் தலைப்பட வேண்டில்
தவம்வேண்டா ஞான சமாதிகை கூடில்
தவம்வேண்டா மச்சக சமார்க்கத் தோர்க்குத்
தவம்வேண்டா மாற்றந் தனையறி யாரே. (௩௰உ)

தவதூடணம்.

ஓதலும் வேண்டா முயிர்க்குயி ருள்ளுற்றால்
காதலும் வேண்டாமெய்க் காய மிடங்கண்டால்
சாதலும் வேண்டாஞ் சமாதிகை கூடினால்
போதலும் வேண்டாம் புலன்வழி போகார்க்கே. (௩௰௩)

சுத்தவும் வேண்டாங் கருத்தறிந் தாறினால்
சத்தமும் வேண்டாஞ் சமாதிகை கூடினால்
சுத்தமும் வேண்டாந் துடக்கற்று நிற்றலால்
சித்தமும் வேண்டாஞ் செயலற் றிருக்கிலே. (௩௰௪)

அருளுடைமையின் ஞானம்வருதல்.

பிரானரு ளுண்டெனி லுண்டு நற்செல்வம்
பிரானரு ளுண்டெனி லுண்டுநன் ஞானம்
பிரானரு ளிற்பெருந் தன்மையு முண்டு
பிரானரு ளாற்பெருந் தெய்வமு மாமே. (௩௰௫)

புண்ணிய பாவ மிரண்டுள பூமியில்
நண்ணும் பொழுதறிவார்சில ஞானிகள்

எண்ணி யிரண்டையும் வேராறுத் தப்புறத்
தண்ண விருப்பிட மாய்ந்துகொள் வீரே. (௩௱௬)

சிவனரு ளாற்சிலர் தேவரு மாவர்
சிவனரு ளாற்சிலர் தெய்வத்தோ டொப்பர்
சிவனரு ளால்வினை சேரகி லாமை
சிவனருட் கூறிலச் சிவலோக மாமே. (௩௱எ)

புண்ணிய னெந்தை புனித னிணையடி
நண்ணி விளக்கென ஞானம் விளைந்தது
மண்ணவ ராவதும் வானவ ராவதும்
அண்ண லிறைவ னருட்பெற்ற போதே. (௩௱அ)

அவவேடம்.

ஆடம் பரங்கொண் டடிசிலுண் பான்பயன்
வேடங்கள் கொண்டு வெருட்டிடும் பேதைகாள்
ஆடியும் பாடியு மழுது மாற்றியும்
தேடியுங் காணீர் சிவனவன் றாள்களே. (௩௱௯)

ஞான மிலார்வேடம் பூண்டிந்த நாட்டிடை
ஈன மதேசெய் திரந்துண் டிருப்பினும்
ஆன நலங்கெடு மப்புவி யாதலால்
ஈனவர் வேடங் கழிப்பித்த லின்பமே. (௩௱௰)

பொய்த்தவம் செய்வார் புகுவார் நரகத்துப்
பொய்த்தவம் செய்தவர் புண்ணிய ராகாரேல்
பொய்த்தவ மெய்த்தவம் போகத்துட் போக்கியம்
சத்திய ஞானத்தாற் றங்குந் தவங்களே. (௩௱௧௧)

தவவேடம்.

பூதி யணிவது சாதன மாதியில்
காதணி தாம்பிர குண்டலங் கண்டிகை
ஓதி யவர்க்கு முருத்திர சாதனம்
தீதில் சிவயோகி சாதனந் தேரிலே. (௩௱௧௨)

காதணி குண்டலங் கண்டிகை நாதமும்
ஊதுநற் சங்கு முயர்சட்டிக் கப்பரை

ஏதமில் பாதக மியோகாந்த மாதனம்
ஏதமி லியோகப் படந்தண்ட மீரைந்தே. (ருகரு)

திருநீறு.

நூலும் சிகையு முணரார்நின் மூடர்கள்
நூலது வேதாந்த நுண்சிகை ஞானமாம்
பாலொன்று மந்தணர் பார்ப்பார் பரமுயிர்
ஓரொன் றிரண்டினி லோங்கார மோதிலே. (ருகச)

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூச மகிழ்விரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே. (ருகரு)

ஞானவேடம்.

சிவஞானி கட்குஞ் சிவயோகி கட்கும்
அவமான சாதன மாகாது தேரில்
அவமா மவர்க்கது சாதன நான்கும்
உவமான மில்பொரு ளுள்ளுற லாமே. (ருகசு)

சிவவேடம்.

அருளா லரனுக் கடிமைய தாகிப்
பொருளாந் தனதுடற் பொற்பதி நாடி
இருளான தின்றி யிருஞ்செய லற்றோர்
தெருளா மடிமைச் சிவவேடத் தாரே. (ருகஎ)

மயலற் றிருளற்று மாமன மற்றுக்
கயலுற்ற கண்ணியர் கையிணைக் கற்றுத்
தயலற் றவரோடுந் தாமேதா மாகிச்
செயலற் றிருந்தார் சிவவேடத் தாரே. (ருகஅ)

அபக்குவன்.

குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே. (ருகக)

வாயொன்று சொல்ல மனமொன்று சிந்திக்க
நீயொன்று செய்ய லுறுதி நெடுந்தகாய்
தீயென்றிங் குன்னைத் தெளிவன் றெளிந்தபின்
பேயென்றிங் கென்னைப் பிறர்தெளி யாரே. (ருஉ0)

கன்றலுங் கருதலுங் கருமஞ் செய்தலும்
தின்றலுஞ் சுவைத்தலுந் தீமை செய்தலும்
பின்றலும் பிறங்கலும் பெருமை கூறலும்
என்றிவை யிறைபா லியற்கை யல்லவே. (ருஉக)

பக்குவன்.

கொள்ளினு நல்ல குருவினைக் கொள்ளுக
உள்ள பொருளுட லாவி யுடனீக
எள்ளத் தனையு மிடைவிடா தேநின்று
தெள்ளி யறியச் சிவபதந் தானே. (ருஉஉ)

வேட்கை விடுநெறி வேதாந்த மாதலால்
வாழ்க்கைப் புலன்வழி மாற்றிச்சித் தாந்தத்து
வேட்கை விடுமிக்க வேதாந்தி பாதமே
தாழ்க்குந் தலையினேன் சற்சீட ஞமே. (ருஉங)

சற்குணம் வாய்மை தயாவிவே கந்தன்மை
சற்குரு பாதமே சாயைபோ னீங்காமே
சிற்பர ஞானந் தெளியத் தெளிவோர்தல்
அற்புத மேதோன்ற லாகுஞ்சற் சீடனே. (ருஉச)

ஏழாந் தந்திரம்.

அண்டலிங்கம்.

இலிங்கம தாவ தியாரு மறியார்
இலிங்கம தாவது வெண்டிசை யெல்லாம்
இலிங்கம தாவது வெண்ணெண் கலையும்
இலிங்கம தாக வெடுத்த துலகே. (ருஉரு)

மறையவ ரர்ச்சனை வண்படி கந்தான்
இறையவ ரர்ச்சனை யேயபொன் னாகும்
குறைவிலா வயிசியர்க் குக்கோ மளமாம்
திறையுடை சூத்திரர் தொல்வாண லிங்கமே. (௩௨௬)

பிண்டலிங்கம்.

மானுட ராக்கை வடிவு சிவலிங்கம்
மானுட ராக்கை வடிவு சிதம்பரம்
மானுட ராக்கை வடிவு சதாசிவம்
மானுட ராக்கை வடிவு திருக்கூத்தே. (௩௨௭)

கோயில்கொண் டன்றே குடிகொண்ட தைவரும்
வாயில்கொண் டாங்கே வழிநின் றருளுவீர்
தாயில்கொண் டாற்போற் றலைவனென் னுட்புக
வாயில்கொண் டீசனு மாளவந் தானே. (௩௨௮)

சதாசிவலிங்கம்.

நடுவு கிழக்கு தெற்குத் தரமேற்கு
நடுவு படிகநற் குங்கும வன்னம்
அடையுள வஞ்சனஞ் செவ்வரத் தம்பால்
அடியேற் கருளிய முகமிவை யஞ்சே. (௩௨௯)

நெஞ்சு சிரஞ்சிகை நீள்கவசங் கண்ணும்
வஞ்சமில் வந்து வளர்நிறம் பச்சையாம்
செஞ்சுறு செஞ்சுடர் சேகரி மின்னாகும்
செஞ்சுடர் போலுந் தெசாயுதந் தானே. (௩௩௦)

சத்திநாற் கோணஞ் சலமுற்று நின்றிடும்
சத்தி யறுகோணஞ் சயனத்தை யுற்றிடும்
சத்திநல் வட்டஞ் சலமுற் றிருந்திடும்
சத்தி யுருவாஞ் சதாசிவன் றானே. (௩௩௧)

ஆன்மலிங்கம்.

விந்துவு நாதமு மேவு மிலிங்கமாம்
விந்துவ தேபீட நாத மிலிங்கமாம்
அந்த விரண்டையு மாதார தெய்வமாய்
வந்த கருவைந்துஞ் செய்யு மவையைந்தே. (௩௩௨)

ஞானலிங்கம்.

தேவர் பிரானைத் திசைமுக நாதனை
நால்வர் பிரானை நடுவுற்ற நந்தியை
ஏவர் பிரானென் றிறைஞ்சுவ ரவ்வழி
யாவர் பிரானடி யண்ண லுமாமே. (ருருரு)

சத்தி சிவன்விளை யாட்டா முயிராகி
ஒத்த விருமாயா கூட்டத் திடையூட்டிச்
சுத்தம தாகுந் துரியம் பிறிவித்துச்
சித்தம் புகுந்து சிவமக மாக்குமே. (ருருச)

சிவலிங்கம்.

மலர்ந்த வயன்மா லுருத்திரன் மகேசன்
பலந்தரு மைம்முகன் பரவிந்து நாதம்
நலந்தருஞ் சத்தி சிவன்வடி வாகிப்
பலந்தரு லிங்கம் பராநந்தி யாமே. (ருருரு)

சம்பிரதாயம்.

உடல்பொரு ளாவி யுலகத்தார் கொண்டு
படர்வினைப் பற்றறப் பார்த்துகை வைத்து
நொடியி னடிவைத்து நுண் ணுணர் வாக்கிக்
கடியப் பிறப்பறக் காட்டின னந்தியே. (ருருசு)

உணர்வுடை யார்கட் குலகமுந் தோன்றும்
உணர்வுடை யார்கட் குறுதுய ரில்லை
உணர்வுடை யார்க ளுணர்ந்தவக் காலம்
உணர்வுடை யார்க ளுணர்ந்துகண் டாரே. (ருருஎ)

காயப் பரப்பி லலைந்து துரியத்துச்
சால விரிந்து குவிந்து சகலத்தில்
ஆயவவ் வாறு றடைந்து திரிந்தோர்க்குத்
தூய வருடந்த நந்திக்கென் சொல்வதே. (ருருஅ)

நானென நீயென வேறில்லை நண் ணுதல்
ஊனென வூனுயி ரென்ன வுடனின்று

வானென வானவர் நின்று மனிதர்கள்
தேனென வின்பந் திளைக்கின்ற வாறே. (௩௩௯)

பெருந்தன்மை தானென யானென வேறாய்
இருந்தது மில்லைய தீச னறியும்
பொருந்து முடலுயிர் போலுமை மெய்யே
திருந்தமுன் செய்கின்ற தேவர் பிரானே. (௩௪0)

திருவருள்வைப்பு.

இருபத மாவ திரவும் பகலும்
உருவது வாவ துயிரு முடலும்
அருளது வாவ தறமுந் தவமும்
பொருளது வுண்ணின்ற போகம தாமே. (௩௪௧)

தேர்ந்தறி யாமையின் சென்றன காலங்கள்
பேர்ந்தறி வானெங்கள் பிஞ்ஞக னெம்மிறை
ஆர்ந்தறி வாரறி வேதனை யாமெனச்
சார்ந்தறி வான்பெருந் தன்மைவல் லானே. (௩௪௨)

அருட்கண் ணிலாதார்க் கரும்பொரு டோன்றா
அருட்கண் ணுளோர்க்கெதிர் தோன்று மரனே
இருட்கண்ணி னோர்க்கங் கிரவியுந் தோன்றாத்
தெருட்கண்ணி னோர்க்கெங்குஞ் சீரொளி யாமே. (௩௪௩)

அருளொளி.

ஆடியும் பாடியு மழுது மரற்றியும்
தேடியுங் கண்டேன் சிவன்பெருந் தன்மையைக்
கூடிய வாறே குறியாக் குறிதந்தென்
னூடுநின் றானவன் றன்னரு ளாற்றே. (௩௪௪)

விளக்கினை யேற்றி வெளியை யறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடை யார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே. (௩௪௫)

புரமே திரிந்தேனைப் பொற்கழல் சூட்டி
நிரமே புகுந்தென்னை நின்மல னாக்கி

அறமே புகுந்தெனக் காரமு தீந்த
திறமேதென் றெண்ணித் திகைத்திருந் தேனே. (ருசசு)

சிவபூசை.

உள்ளம் பெருங்கோயி லூனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே. (ருசஎ)

புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ண லதுகண் டருள்புரி யாநிற்கும்
எண்ணிலி பாவிக ளெம்மிறை யீசனை
நண்ணறி யாம னழுவுகின் றாரே. (ருசஅ)

சாணாகத் துள்ளே யழுந்திய மாணிக்கம்
காணு மளவுங் கருத்தறி வாரில்லை
பேணிப் பெருக்கிப் பெருக்கி நினைவோர்க்கு
மாணிக்க மாலை மனம்புகுந் தானே. (ருசகூ)

ஊழிதோ றூழி யுணர்ந்தவர்க் கல்லது
ஊழி லுயிரை யுணரவுந் தாமொட்டா
ஆழி யமரு மரியய னென்றுளோர்
ஊழி கடந்துமோ ருச்சியு ளானே. (ருருய)

குருபூசை.

உச்சியுங் காலையு மாலையு மீசனை
நச்சுமின் னச்சி நமவென்று நாமத்தை
விச்சுமின் விச்சி விரிசுடர் மூன்றினும்
நச்சுமின் பேர்நந்தி நாயக னாகுமே. (ருருக)

இராப்பக லற்ற விடத்தே யிருந்து
பராக்கற வானந்தத் தேறல் பருகி
இராப்பக லற்ற விறையடி யின்பத்
திராப்பகன் மாயை யிரண்டிடித் தேனே. (ருருஉ)

மயேசுரபூசை.

படமாடக் கோயிற் பகவற்கொன் றீயின்
நடமாடக் கோயி னம்பர்க்கங் காகா

நடமாடக் கோயி னம்பர்க்கொன் றீயின்
படமாடக் கோயிற் பகவற்க தாமே. (௫௫௩)

தண்டறு சிந்தை தபோதனர் தாமகிழ்ந்
துண்டது மூன்று புவனமு முண்டது
கொண்டது மூன்று புவனமுங் கொண்டதென்
றெண்டிசை நந்தி யெடுத்துரைத் தானே. (௫௫௪)

மாத்திரை யொன்றினின் மன்னி யமர்ந்துறை
ஆத்தனுக் கீந்த வரும்பொரு ளானது
மூர்த்திகண் மூவர்க்கு மூவேழ் குரவர்க்கும்
தீர்த்தம தாமது தேர்ந்துகொள் வீரே. (௫௫௫)

அகர மாயிர மந்தணர்க் கீயிலென்
சிகர மாயிரஞ் செய்து முடிக்கிலென்
பகரு ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரில்லை யென்பது நிச்சயந் தானே. (௫௫௬)

ஆறிடும் வேள்வி யருமறை நூலவர்
கூறிடு மந்தணர் கோடிபே ருண்பதில்
நீறிடுந் தொண்டர் நினைவின் பயனில்லை
பேறெனி லோர்பிடி பேறது வாகுமே. (௫௫௭)

வித்தக மாகிய வேடத்த ருண்டவூண்
அத்த னயன்மா லருந்திய வண்ணமாம்
சித்தந் தெளிந்தவர் சேடம் பருகிடின்
முத்தியா மென்றுநம் மூலன் மொழிந்ததே. (௫௫௮)

அடியார் பெருமை.

அவன்பா லணுகியே யன்புசெய் வார்கள்
சிவன்பா லணுகுதற் செய்யவும் வல்லன்
அவன்பா லணுகியே நாடு மடியார்
இவன்பாற் பெருமை யிலயம தாமே. (௫௫௯)

சிவயோக ஞானி செறிந்தவத் தேசம்
அவயோக மின்றி யறிவோருண் டாகும்
நவயோகங் கைகூடும் நல்லியல் காணும்
பவயோக மின்றிப் பரலோக மாமே. (௫௬௰)

மேலுணர் வான்மிகு ஞாலம் படைத்தவன்
மேலுணர் வான்மிகு ஞாலங் கடந்தவன்
மேலுணர் வார்மிகு ஞாலத் தமரர்கள்
மேலுணர் வார்சிவன் மெய்யடி யார்களே. (௫௬௧)

பிக்ஷா விதி.

பரந்துல கேழும் படைத்த பிரானை
இரந்துணி யென்பர்க ளெற்றுக் கிரக்கும்
நிரந்தர மாக நினையு மடியார்
இரந்துண்டு தன்கழ லெட்டச்செய் தானே. (௫௬௨)

முத்திரைபேதம்.

மோனத்து முத்திரை முத்தர்க்கு முத்திரை
ஞானத்து முத்திரை நாதர்க்கு முத்திரை
தேனிக்கு முத்திரை சித்தாந்த முத்திரை
கானிக்கு முத்திரை கண்ட சமயமே. (௫௬௩)

பூரணக்குகைநெறிச்சமாதி.

சிவயோகி ஞானி செறிந்துடல் விட்டால்
தவலோகஞ் சேர்ந்துபின் றான்வந்து கூடிச்
சிவயோக ஞானத்தாற் சேர்ந்தவர் நிற்பர்
புவலோகம் போற்றுநர் புண்ணியத் தோரே. (௫௬௪)

ஊனமின் ஞானிநல் யோகி யுடல்விட்டால்
தானற மோனச் சமாதியுட் டங்கியே
தானவ னாகும் பரகாயஞ் சாராதே
ஊனமின் முத்தராய் மீளா ருணர்வுற்றே. (௫௬௫)

சமாதிக்கிரியை.

அந்தமின் ஞானி யருளை யடைந்தக்கால்
அந்த வுடறான் குகைசெய் திருத்திடில்
சுந்தர மன்னருந் தொல்புவி யுள்ளோரும்
அந்தமி லின்ப வருள்பெறு வாரே. (௫௬௬)

நவமிகு சாலேல நல்லாழஞ் செய்து
குவைமிகு சூழவைஞ் சாணுகக் கோட்டித்

தவமிகு குகைமுக் கோணமுச் சாணுக்கிப்
பவமறு நற்குகை பத்மா சனமே. (௩௬௭)

ஆதித்தநிலை-அண்டாதித்தன்.

தானே யுலகுக்குத் தவத்துவ னாய்நிற்கும்
தானே யுலகுக்குத் தையலு மாய்நிற்கும்
தானே யுலகுக்குச் சம்புவு மாய்நிற்கும்
தானே யுலகுக்குத் தண்சுட ராகுமே. (௩௬௮)

பாருக்குக் கீழே பகலோன் வரும்வழி
யாருக்குங் காணவொண் ணாத வரும்பொருள்
நீருக்குந் திக்கு நடுவே யுதிப்பவன்
ஆருக்கு மெட்டாத வாதித்தன் றானே. (௩௬௯)

மண்ணை யிடந்தின் கீழொடு மாதித்தன்
விண்ணை யிடந்து வெளிசெய்து நின்றிடும்
கண்ணை யிடந்து களிதந்த வானந்தம்
எண்ணுங் கிழமைக் கிசைந்துநின் றானே. (௩௭௦)

பாரை யிடந்து பகலோன் வரும்வழி
யாரு மறியா ரருங்கடை நூலவர்
தீர னிருந்த திருமலை சூழென்பார்
ஊரை யுணர்ந்தா ருணர்ந்திருந் தாரே. (௩௭௧)

பிண்டாதித்தன்.

நின்று மிருந்துங் கிடந்து நடந்தும்
கன்றாய நந்திக் கருத்து ளிருந்தனன்
கொன்று மலங்கள் குழல்வழி யோடிட
வென்று விளங்கும் விரிசுடர் காணுமே. (௩௭௨)

ஆதித்த னோடி யடங்கு மிடங்கண்டு
சாதிக்க வல்லவர் தம்மை யுணர்ந்தவர்
பேதித் துலகம் பிதற்றும் பிதற்றெலாம்
ஆதித்த னோடே யடங்குகின் றாரே. (௩௭௩)

உருவிப் புறப்பட் டுலகை வலம்வந்து
சொருகிக் கிடக்குந் துறையறி வாரில்லை

சொருகிக் கிடக்குந் துறையறி வாளர்க்
குருகிக் கிடக்குமென் னுள்ளன் புதானே. (௫௭௪)

மனவாதித்தன்

சந்திரன் சூரியன் றன்வரிற் பூசனை
முந்திய பானுவி லிந்துவந் தேய்முறை
அந்த விரண்டு முபய நிலத்தில்
சிந்தை தெளிந்தார் சிவமாயி னாரே. (௫௭௫)

ஈரண்டத் தப்பா லியங்கிய வவ்வொளி
ஓரண்டத் தார்க்கு முணரா வுணர்வது
பேரண்டத் தூடே பிறங்கொளியாய் நின்ற
தாரண்டத் தக்கா ரறியத்தக் காரே. (௫௭௬)

ஞானாதித்தன்.

உள்ள வருணோ தயத்தெழு மோசைதான்
தெள்ளும் பரநாதத் தின்செய லென்பதால்
வள்ளல் பரவிந்து வைகரி யாதிவாக்
குள்ளன வைங்கலைக் கொன்று முதயமே. (௫௭௭)

பொய்யிலன் மெய்யன் புவனா பதியெந்தை
மெய்யிரு ணீக்கு மதியங்கி ஞாயிறு
செய்யிரு ணீக்குந் திருவுடை நந்தியென்
கையிரு ணீங்கக் கலந்தெழுந் தானே. (௫௭௮)

மண்டலத் துள்ளே மலர்ந்தெழு மாதித்தன்
கண்டிடத் துள்ளே கதிரொளி யாயிடும்
சென்றிடத் தெட்டுத் திசையெங்கும் போய்வரும்
நின்றிடத் தேநிலை நேரறி வார்க்கே. (௫௭௯)

நாபிக்கண் ணாசி நயன நடுவினும்
தூபியோ டைந்துஞ் சுடர்விடு சோதியைத்
தேவர்க ளீசன் றிருமால் பிரமனும்
மூவரு மாக வுணர்ந்திருந் தாரே. (௫௮௰)

சிவாதித்தன்.

அன்றிய பாச விருளுமஞ் ஞானமும்
சென்றிடு ஞானச் சிவப்பிர காசத்தால்

ஒன்று மிருசுட ராமரு ளோதயம்
தன்றிரு ணீங்குதல் போலத் தொலைந்ததே. (௫௮௧)

தானே விரிசுடர் மூன்றுமொன் றாய்நிற்கும்
தானே யயன்மா லெனநின்று தாபிக்கும்
தானே யுடலுயிர் வேறன்றி நின்றுளன்
தானே வெளியொளி தானிருட் டாமே. (௫௮௨)

அணு.

அணுவு ளவனு மவனு ளணுவும்
கணுவற நின்ற கலப்ப துணரார்
இணையிலி யீச னவனெங்கு மாகித்
தணிவற நின்றான் சராசரந் தானே. (௫௮௩)

சீவன்.

மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு
மேவிய கூறது வாயிர மாயினால்
ஆவியின் கூறுநூ றாயிரத் தொன்றே. (௫௮௪)

ஏனோர் பெருமைய னாயினு மெம்மிறை
ஊனே சிறுமையி னுட்கலந் தங்குளன்
வானோ ரறியு மளவல்லன் மாதேவன்
தானே யறியுந் தவத்தி னளவே. (௫௮௫)

பசு.

கற்ற பசுக்கள் கதறித் திரியினும்
கொற்ற பசுக்கள் குறிகட்டி மேயினும்
உற்ற பசுக்க ளொருகுடம் பால்போதும்
மற்றைப் பசுக்கள் வறள்பசு தானே. (௫௮௬)

போதன்.

சிவ னெனச்சிவ னென்னவே றில்லை
சிவ னார்சிவ னாரை யறிகிலர்
சிவ னார்சிவ னாரை யறிந்தபின்
சிவ னார்சிவ னாயிட் டிருப்பரே. (௫௮௭)

ஐந்திந்திரிய மடக்குமருமை.

கருத்தினன் னூல்கற்றுக் கால்கொத்திப் பாகன்
திருத்தலும் பாய்மாத் திகைத்தன் றிப் பாயா
எருத்துற வேறி யிருக்கிலு மாங்கே
வருத்தினு மம்மா வழிநட வாதே. (ரு அஅ)

அசற்குருநெறி.

குருடர்க்குக் கோல்காட்டிச் செல்லுங் குருடர்
முரணும் பழங்குழி வீழ்வர்கண் முன்பின்
குருடரும் வீழ்வர்கண் முன்பின் னறவே
குருடரும் வீழ்வார் குருடரோ டாகியே. (ரு அக)

சற்குருநெறி.

கறுத்த விரும்பே கனகம தானல்
மறித்திரும் பாகா வகையது போலக்
குறித்தவப் போதே குருவருள் பெற்ருல்
மறித்துப் பிறவியில் வந்தணு காரே. (ரு கூ)

பரிசன வேதி பரிசித்த தெல்லாம்
வரிசை தரும்பொன் வகையாகு மாபோல்
குருபரி சித்த குவலய மெல்லாம்
திரிமலந் தீர்ந்து சிவகதி யாமே. (ரு கூக)

வரும்வழி போம்வழி மாயா வழியைக்
கருவழி கண்டவர் காணு வழியை
பெரும்வழி யாநந்தி பேசும் வழியைக்
குருவழி யேசென்று கூடலு மாமே. (ரு கூஉ)

கேடுகண்டிரங்கல்.

விரைந்தன்று நால்வர்க்கு மெய்ப்பதி சூழ்ந்து
புரந்தகல் லானிழற் புண்ணியன் சொன்ன
பரந்தன்னை யோராப் பழிமொழி யாளர்
உரந்தன்மை யாக வொருங்கிநின் ருர்களே. (ரு கூரு)

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணுர்

பெறுதற் கரியபிரானடி களெல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே. (ருகச)

இதோபதேசம்.

ஒன்றே குலமு மொருவனே தேவனும்
நன்றே நினைமி னமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே. (ருகரு)

இக்காய நீக்கி யினியொரு காயத்தில்
புக்குப் பிறவாமற் போம்வழி தேடுமின்
எக்காலத் திவ்வுடல் வந்தமெக் கானதென்
றக்கால முன்ன வருள்பெற லாமே. (ருகசு)

ஏறுடை யாயிறை வாவெம் பிரானென்று
நீறிடு வாரடி யார்நிகழ் தேவர்கள்
ஆறணி செஞ்சடை யண்ண றிருவடி
வேறணி வார்க்கு வினையில்லை தானே. (ருகஎ)

சார்ந்தவர்க் கின்பங் கொடுக்குந் தழல்வண்ணன்
பேர்ந்தவர்க் கின்னாப் பிறவி கொடுத்திடும்
கூர்ந்தவர்க் கங்கே குரைகழல் காட்டிடும்
சேர்ந்தவர் தேவரைச் சென்றுணர் வாரே. (ருகஅ)

எட்டாந் தந்திரம்.

அவத்தைபேதம் - கீழாலவத்தை.

ஊமை யெழுத்தொடு பேசு மெழுத்துறில்
ஆமை யகத்தினி லஞ்சு மடங்கிடும்
ஓமய முற்றது வுள்ளொளி பெற்றது
நாமய மற்றது நாமறி யோமே. (ருகக)

ஆசான்முன் னேதுயில் மாண வகரைத்
தேசாய தண்டா லெழுப்புஞ் செயல்போல்
நேசாய வீசனு நீடா ணவத்தரை
ஏசாத மாயாடன் னாலே யெழுப்புமே. (சஉ)

மத்தியசாக்கிராவத்தை.

ஆகின்ற தொண்ணூற் றோடாறும் பொதுவென்பர்
ஆகின்ற வாறா றருஞ்சைவர் தத்துவம்
ஆகின்ற நாலேழ் வேதாந்தி வயிணவர்க்
காகின்ற நாலாறை யைந்துமாயா வாதிக்கே. (௨௱௧)

ஆணவ மாதி மலமைந் தலரோனுக்
காணவ மாதிநான் காயாற் கரனுக்கு
ஆணவ மாதிமூன் றீசர்க் கிரண்டென்ப
ஆணவ மொன்றே சதாசிவற் காவதே. (௨௱௨)

சுத்தநனவாதிபருவம்.

பசுக்கள் பலவண்ணம் பாலொரு வண்ணம்
பசுக்களை மேய்க்கின்ற வாய னொருவண்ணம்
பசுக்களை மேய்க்கின்ற வாயன்கோல் போடில்
பசுக்க டலைவனைப் பற்றி விடாவே. (௨௱௩)

ஈதென் றறிந்தில னித்தனை காலமும்
ஈதென் றறிந்தபி னேது மறிந்திலேன்
ஈதென் றறியு மறிவை யறிந்தபின்
ஈதென் றறியு மியல்புடை யோனே. (௨௱௪)

உயிர்க்குயி ராகி யுருவா யருவாய்
அயற்புணர் வாகி யறிவாய்ச் செறிவாய்
நயப்புறு சத்தியு நாத னுலகாதி
இயற்பின்றி யெல்லா மிருண்மூட மாமே. (௨௱௫)

அறியா தவற்றை யறிவா னறிவான்
அறிவா னறியாதான் றன்னறி வாகான்
அறியா தவத்தை யறிவானைக் கூட்டி
அறியா தறிவானை யாரறி வாரே. (௨௱௬)

கேவலசகல சுத்தம்.

பெத்தமு முத்தியும் பேணுந் துரியமும்
சுத்த வதீதமுந் தோன்றாமற் றானனும்

அத்த னருளென் றருளா லறிந்தபின்
சித்தமு மில்லை செயலில்லை தானே. (௫௱௭)

இருவினை யொத்திட வின்னருட் சத்தி
மருவிட ஞானத்தி லாதன மன்னிக்
குருவினைக் கொண்டருட் சத்திமுன் கூட்டிப்
பெருமல நீங்கிப் பிறவாமை சுத்தமே. (௫௱௮)

பராவத்தை.

ஆறாறுக் கப்பா லறிவா ரறிபவர்
ஆறாறுக் கப்பா லருளார் பெறுபவர்
ஆறாறுக் கப்பா லறிவா மவர்கட்கே
ஆறாறுக் கப்பா லரனினி தாமே. (௫௱௯)

பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணம்
தன்னை மறைத்தது தன்கர ணங்களாம்
தன்னின் மறைந்தது தன்கர ணங்களே. (௫௱௰)

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே. (௫௱௰௧)

கலவுசெலவு.

வெல்லு மளவில் விடுமின் வெகுளியைச்
செல்லு மளவுஞ் செலுத்துமின் சிந்தையை
அல்லும் பகலு மருளுடன் றூங்கினால்
கல்லும் பிளந்து கடுவெளி யாமே. (௫௱௰௨)

நின்மலாவத்தை.

காலங்கி நீர்பூக் கலந்தவா காயம்
மாலங்கி யீசன் பிரமன் சதாசிவன்
மேலஞ்சு மோடி விரவவல் லார்கட்குக்
காலனு மில்லை கருத்தில்லை தானே. (௫௱௰௩)

ஆனைக ளைந்து மடக்கி யறிவென்னும்
ஞானத் திரியைக் கொளுவி யதனுள்புக்
கூனை யிருளற நோக்கு மொருவற்கு
வானக மேற வழியெளி தாமே. (சகச)

முன்னை யறிவினிற் செய்த முதுதவம்
பின்னை யறிவினைப் பெற்றா லறியலாம்
தன்னை யறிவ தறிவா மஃதன்றிப்
பின்னை யறிவது பேயறி வாகுமே. (சகரு)

செயலற் றிருக்கச் சிவானந்த மாகும்
செயலற் றிருப்பார் சிவயோகந் தேடார்
செயலற் றிருப்பார் செகத்தொடுங் கூடார்
செயலற் றிருப்பார்க்கே செய்தியுண் டாகுமே. (சகசு)

அறிவிக்க வேண்டா மறிவற் றயர்வோர்க்கும்
அறிவிக்க வேண்டா மறிவிற் செறிவோர்க்கும்
அறிவற் றறியாமை யெய்திநிற் போர்க்கே
அறிவிக்கத் தம்மறி வாரறி வோரே. (சகஎ)

அவமுஞ் சிவமு மறியா ரறியார்
அவமுஞ் சிவமு மறிவா ரறிவார்
அவமுஞ் சிவமு மருளா லறிந்தால்
அவமுஞ் சிவமு மவனரு ளாமே. (சகஅ)

தீண்டற் கரிய திருவடி நேயத்தை
மீண்டுற் றருளால் விதிவழி யேசென்று
தூண்டிச் சிவஞான மாவினைத் தானேறித்
தாண்டிச் சிவனுடன் சாரலு மாமே. (சகக)

சார்ந்தவர் சாரணர் சித்தர் சமாதியர்
சார்ந்தவர் மெய்ஞ்ஞான தத்துவ சாத்தியர்
சார்ந்தவர் நேயந் தலைப்பட்ட வானந்தர்
சார்ந்தவர் சத்த வருட்டன்மை யாரே. (சஉ௰)

தானென் றவனென் றிரண்டென்பர் தத்துவம்
தானென் றவனென் றிரண்டற்ற தன்மையைத்

தானென் றிரண்டுன்ஞர் கேவலத் தானவர்
தானின்றித் தாஞகத் தத்துவ சுத்தமே. (சாஉக)

தன்னினிற் றன்னை யறியுந் தலைமகன்
தன்னினிற் றன்னை யறியத் தலைப்படும்
தன்னினிற் றன்னைச் சார்கில ஞகில்
தன்னினிற் றன்னையுஞ் சார்தற் கரியவே. (சாஉஉ)

அறிவுதயம்.

தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமற் ருனே கெடுகின்ருன்
தன்னை யறியு மறிவை யறிந்தபின்
தன்னையே யர்ச்சிக்கத் தானிருந் தானே. (சாஉ௩)

அறிவு வடிவென் றறியாத வென்னை
அறிவு வடிவென் றருள்செய்தா னந்தி
அறிவு வடிவென் றருளா லறிந்தே
அறிவு வடிவென் றறிந்திருந் தேனே. (சாஉச)

அறிவுக் கழிவில்லை யாக்கமு மில்லை
அறிவுக் கறிவல்ல தாதார மில்லை
அறிவே யறிவை யறிகின்ற தென்றிட்
டறைகின் றனமறை யீறுக டாமே. (சாஉரு)

என்னை யறிந்திலே னித்தனை காலமும்
உன்னை யறிந்தபி னேது மறிந்திலேன்
என்னை யறிந்திட் டிருத்தலுங் கைவிடா
தென்னையிட் டென்னை யுசாவுகின் ருனே. (சாஉசு)

ஆறந்தம்.

தாஞன வேதாந்தந் தானென்னுஞ் சித்தாந்தம்
ஆஞ துரியத் தனுவன் றனைக்கண்டு
தேஞர் பராபரஞ் சேர்சிவ யோகமாய்
ஆஞ மலமற் றருஞ்சித்தி யாதலே. (சாஉஎ)

சித்தம் பரஞே டுயிருற்று நீண்மனம்
சத்த முதலைந்துந் தத்துவத் தானிங்கிச்

சுத்த மசுத்தந் தொடரா வகைவினைந்
தத்தன் பரன்பா லடைதல்சித் தாந்தமே. (௪௨௮)

வேதாந்தஞ் சித்தாந்தம் வேறிலா முத்திரை
போதாந்த ஞானம் யோகாந்தம் பொதுஞேய
நாதாந்த மானந்தஞ் சீரோ தயமாகும்
மூதாந்த முத்திரை மோனத்து மூழ்கவே. (௪௨௯)

சித்தாந்தத் தேசிவன் முத்திசித் தித்தலால்
சித்தாந்தத் தேநிற்போர் முத்திசித் தித்தவர்
சித்தாந்த வேதாந்தஞ் செம்பொரு ளாதலால்
சித்தாந்த வேதாந்தங் காட்டுஞ் சிவனையே. (௪௩௰)

வேதமோ டாகம மெய்யா மிறைவனூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுள்ளன
நாத னுரையவை நாடி லிரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே. (௪௩௧)

பதிபசுபாச வேறின்மை.

அறிவறி வென்ற வறிவு மநாதி
அறிவுக் கறிவாம் பதியு மநாதி
அறிவினைக் கட்டிய பாச மநாதி
அறிவு பதியிற் பிறப்பறுந் தானே. (௪௩௨)

பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப்
பசுக்களைக் கட்டிய பாசமூன் றுண்டு
பசுத்தன்மை நீக்கியப் பாச மறுத்தால்
பசுக்க டலைவனைப் பற்றி விடாவே. (௪௩௩)

ஆய பதிதா னருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவு மடலே றெனநிற்கும்
ஆய பலிபீட மாகுநற் பாசமாம்
ஆய வரனிலை யாய்ந்துகொள் வார்கட்கே. (௪௩௪)

அடிதலையறியுந்திறங்கூறல்.

காலுந் தலையு மறியார் கலதிகள்
காலந்தச் சத்தி யருளென்பர் காரணம்

பாலொன்று ஞானமே பண்பார் தலையுயிர்
காலந்த ஞானத்தைக் காட்டவீ டாகுமே. (௫௩௫)

தலையடி யாவ தறியார் காயத்தில்
தலையடி யுச்சியி லுள்ளது மூலம்
தலையடி யான வறிவை யறிந்தோர்
தலையடி யாகவே தானிருந் தாரே. (௫௩௬)

கால் கொண்டென் சென்னியிற் கட்டறக் கட்டற
மால்கொண்ட நெஞ்சின் மயக்கிற் றுயக்கறப்
பால்கொண்ட வென்னைப் பரன்கொள்ள நாடினன்
மேல்கொண்டென் செம்மை விளம்ப வொண்ணாதே. (௫௩௭)

மூக்குற்றம்.

காமம் வெகுளி மயக்க மிவைகடிந்
தேமம் பிடித்திருந் தேனுக் கெறிமணி
ஓமெனு மோசையி னுள்ளே யுறைவதோர்
தாம மதனைத் தலைபட்ட வாறே. (௫௩௮)

மூப்பதம்.

போதந் தனையுன்னிப் பூதாதி பேதமும்
ஓதுங் கருவிதொண் ணூறுட னோராறும்
பேதமு நாதாந்தப் பெற்றியிற் கைவிட்டு
வேதஞ்சொல் தொம்பத மாகுதன் மெய்ம்மையே. (௫௩௯)

மூப்பரம்.

ஆறாறு தத்துவத் தப்புறத் தப்பரம்
கூறா வுபதேசங் கூறிச் சிவபரம்
வேறாய் வெளிப்பட்ட வேதப் பகவனார்
பேறாக வானந்தம் பேணும் பெருகவே. (௫௪௰)

பாலக்ஷணம்.

ஆதியு மந்தமு மில்லா வரும்பதி
சோதிப் பரஞ்சுடர் தோன்றத்தோன் றாமையின்
நீதிய தாய்நிற்கு நீடிய வப்பர
போத முணர்ந்தவர் புண்ணியத் தோரே. (௫௪௧)

துரியங் கடந்து துரியாதீ தத்தே
அரிய வியோகங்கொண் டம்பலத் தாடும்
பெரிய பிரானைப் பிரணவக் கூபத்தே
துரியவல் லார்க்குத் துரிசில்லை தானே. (௪௪௨)

முத்துரியம்.

தொட்டே யிருமின் றுரிய நிலத்தினை
எட்டா தெனினின் றெட்டு மிறைவனைப்
பட்டாங் கறிந்திடிற் பன்னு வுதடுகள்
தட்டா தொழிவதோர் தத்துவந் தானே. (௪௪௩)

மும்முத்தி.

சிவமாகி மும்மல முக்குணஞ் செற்றுத்
தவமான மும்முத்தி தத்துவத் தயிக்கியத்
துவமா கியநெறி சோகமென் போர்க்குச்
சிவமா மமலன் சிறந்தனன் றானே. (௪௪௪)

முச்சொருபம்.

மூன்றுள மாளிகை மூவ ரிருப்பிடம்
மூன்றினின் முப்பத் தாறு முதிப்புள
மூன்றினி னுள்ளே முளைத்தெழுஞ் சோதியைக்
காண்டலுங் காயக் கணக்கற்ற வாரே. (௪௪௫)

முக்காரணம்.

ஒளியை யொளிசெய்து வோமென் றெழுப்பி
வளியை வளிசெய்து வாய்த்திட வாங்கி
வெளியை வெளிசெய்து மேலெழ வைத்துத்
தெளியத் தெளியுஞ் சிவபதந் தானே. (௪௪௬)

முப்பாழ்.

உள்ள முருவென்று முருவ முளமென்றும்
உள்ளப் பரிசறிந் தோரு மவர்கட்குப்
பள்ளமு மில்லை திடரில்லை பாழில்லை
உள்ளமு மில்லை யுருவில்லை தானே. (௪௪௭)

காரிய காரணவுபாதி.

அகார முயிரே யுகாரம் பரமே
மகாரஞ் சிவமாய் வருமுப் பதத்துச்
சிகாரஞ் சிவமே வகாரம் பரமே
யகார முயிரென் றறையலு மாமே. (சுசஅ)

உபசாந்தம்.

முத்திக்கு வித்து முதல்வன்றன் ஞானமே
பத்திக்கு வித்துப் பணிந்துற்றுப் பற்றலே
சித்திக்கு வித்துச் சிவபரந் தானுதல்
சத்திக்கு வித்துத் தனதுப சாந்தமே. (சுசக)

புறங்கூறாமை.

நின்று மிருந்துங் கிடந்து நிமலனை
ஒன்றும் பொருள்க ளுரைப்பவ ராகிலும்
வென்றைம் புலனும் விரைந்து பிணக்கறுத்
தொன்று யுணரு மொருவனு மாமே. (சுரு0)

சித்தர் சிவத்தைக் கண்டவர் சீருடன்
சுத்தாசுத் தத்துடன் றோய்ந்துந்தோ யாதவர்
முத்தரம் முத்திக்கு மூலத்தர் மூலத்துச்
சத்தர் சதாசிவத் தன்மையர் தாமே. (சுருக)

சுத்தாசுத்தம்.

நாசி நுனியினி னன்குமூ விரலிடை
ஈச னிருப்பிட மியாரு மறிகிலர்
பேசி யிருக்கும் பெருமறை யம்மறை
கூசி யிருக்குங் குணமது வாமே. (சுருஉ)

மாயை மறைக்க மறைந்த மறைப்பொருள்
மாயை மறைய வெளிப்படு மப்பொருள்
மாயை மறைய மறைய வல் லார்கட்குக்
காயமுமில்லை கருத்தில்லை தானே. (சுருங)

இலக்ஷணத்திரயம்.

வில்லின் விசைநாணிற் கோத்திலக் கெய்தபின்
கொல்லுங் களிறைந்துங் கோலொடு சாய்ந்தன
வில்லு ளிருந்தெறி கூரு மொருவற்குக்
கல்கல னென்னக் கதிரெதி ராமே. (௨௫௪)

விசுவக்கிராசம்.

அழிகின்ற சாயா புருடனைப் போலக்
கழிகின்ற நீரிற் குமிழியைக் காணில்
எழுகின்ற தீயிற்கர்ப் பூரத்தை யொக்கப்
பொழிகின்ற விவ்வுடற் போமப் பரத்தே. (௨௫௫)

வாய்மை.

எல்லா மறியு மறிவு தனைவிட்டு
எல்லா மறிந்து மிலாபமங் கில்லை
எல்லா மறிந்த வறிவினை நானென்னில்
எல்லா மறிந்த விறையென லாமே. (௨௫௬)

மெய்கலந் தாரொடு மெய்கலந் தான்றன்னைப்
பொய்கலந் தார்முன் புகுதா வொருவனை
உய்கலந் தூழித் தலைவனு மாய்நிற்கும்
மெய்கலந் தின்பம் விளைந்திடு மெய்யர்க்கே. (௨௫௭)

ஞானிசெயல்.

முன்னை வினைவரின் முன்னுண்டே நீங்குவர்
பின்னை வினைக்கண்ணர் பேர்ந்தறப் பார்ப்பர்கள்
தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்
நன்மையி லைம்புல னுடலி னாலே. (௨௫௮)

தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே. (௨௫௯)

அவாவறுத்தல்.

வாசியு மூசியும் பேசி வகையினுல்
பேசி யிருந்து பிதற்றிப் பயனில்லை
ஆசையு மன்பு மறுமி னறுத்தபின்
ஈச னிருந்த விடமெளி தாமே. (௫௬௰)

ஆசை யறுமின்க ளாசை யறுமின்கள்
ஈசனோ டாயினு மாசை யறுமின்கள்
ஆசை படப்பட வாய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட வானந்த மாமே. (௫௬௧)

பத்தியுடைமை.

அடியா ரடியா ரடியார்க் கடிமைக்
கடியனாய் நல்கிட் டடிமையும் பூண்டேன்
அடியா ரருளா லவனடி கூட
அடியா னிவனென் றடிமைகொண் டானே. (௫௬௨)

ஆன்கன்று தேடி யழைக்கு மதுபோல்
நான்கன்றாய் நாடி யழைத்தேனென் னாதனை
வான்கன்றுக் கப்பாலாய் நின்ற மறைப்பொருள்
ஊன்கன்றா னாடிவந் துள்புகுந் தானே. (௫௬௩)

ஒன்பதாந்தந்திரம்.

ஞானகுரு தரிசனம்.

கருட னுருவங் கருது மளவில்
பருவிடந் தீர்ந்து பயங்கெடு மாபோல்
குருவி னுருவங் குறித்தவப் போதே
திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே. (௫௬௪)

அண்ண லிருப்பிட மாரு மறிகிலர்
அண்ண லிருப்பிட மாய்ந்துகொள் வார்களுக்
கண்ண லழிவின்றி யுள்ளே யமர்ந்திடும்
அண்ணலைக் காணி லவனிவ னாமே. (௫௬௫)

பிரணவசமாதி.

ஓமெனு மோங்கா ரத் துள்ளே யொருமொழி
ஓமெனு மோங்கா ரத் துள்ளே யுருவரு
ஓமெனு மோங்கா ரத் துள்ளே பலபேதம்
ஓமெனு மோங்கார மொண்முத்தி சித்தியே. (௫௯௯)

ஓங்கா ரத் துள்ளே யுதித்தவைம் பூதங்கள்
ஓங்கா ரத் துள்ளே யுதித்த சராசரம்
ஓங்காரா தீதத் துயிர்மூன்று முற்றன
ஓங்கார சீவ பரசிவ ரூபமே. (௫௯௭)

தூலபஞ்சாக்கரம்.

குருவழி யாய குணங்களி னின்று
கருவழி யாய கணக்கை யறுக்க
வரும்வழி மாள மறுக்கவல் லார்கட்
கருள்வழி காட்டுவ தஞ்செழுத் தாமே. (௫௯௮)

சூக்குமபஞ்சாக்கரம்.

எளிய வாதுசெய் வாரெங்க ளீசனை
ஒளியை யுன்னி யுருகு மனத்தராய்
தெளிய வோதிச் சிவாய நமவெனுங்
குளிகை யிட்டுப்பொன் னாக்குவன் கூட்டையே. (௫௯௧)

சிவசிவ வென்றே தெளிகில ரூமர்
சிவசிவ வாயுவுந் தேர்ந்துள் ளடங்கச்
சிவசிவ வாய தெளிவினுள் ளார்கள்
சிவசிவ வாகுந் திருவரு ளாமே. (௫௭௰)

சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளும்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே. (௫௭௧)

அதிசூக்குமபஞ்சாக்கரம்.

சிவாய நமவெனச் சித்த மொருக்கி
அவாய மறவே யடிமைய தாக்கிச்

சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க வானந்த மாமே. (சஎஉ)

பழுத்தன வைந்தும் பழமறை யுள்ளே
விழித்தங் குறங்கும் வினையறி வாரில்லை
எழுத்தறி வோமென் றுரைப்பர்க ளேதர்
எழுத்தை யழுத்து மெழுத்தறி யாரே. (ருஎங)

திருக்கூத்துத்தரிசநம்.

எங்குந் திருமேனி யெங்குஞ் சிவசத்தி
எங்குஞ் சிதம்பர மெங்குந் திருநட்டம்
எங்குஞ் சிவமா யிருத்தலா லெங்கெங்கும்
தங்குஞ் சிவனருட் டன்விளை யாட்டதே. (சஎச)

சிவானந்தக்கூத்து.

வேதங்க ளாட மிகுவா கமமாடக்
கீதங்க ளாட கிளரண்ட மேழாடப்
பூதங்க ளாடப் புவன முழுதாட
நாதங்கொண் டாடினன் ஞானனந்தக் கூத்தே. (சஎரு)

தேவர் சுரர்நரர் சித்தர்வித் தியாதரர்
மூவர்க ளாதியின் முப்பத்து மூவர்கள்
தாபதர் சத்தர் சமயஞ் சராசரம்
யாவையு மாடிடு மெம்மிறை யாடவே. (சஎசு)

பொற்பதிக்கூத்து.

உம்பரிற் கூத்தனை யுத்தமக் கூத்தனைச்
செம்பொற் றிருமன்றுட் சேவகக் கூத்தனைச்
சம்பந்தக் கூத்தனைத் தற்பரக் கூத்தனை
இன்புற நாடியென் னன்பில்வைத் தேனே. (சஎஎ)

பொற்றில்லைக்கூத்து.

ஆறு முகத்தி லதிபதி நானென்றும்
கூறு சமயக் குருபர னென்றும்
தேறினர் தெற்குத் திருவம் பலத்துளே
வேறின்றி யண்ணல் விளங்கிநின் றானே. (சஎஅ)

ஆடிய காலு மதிர்சிலம் போசையும்
பாடிய பாட்டும் பலவான நட்டமும்
கூடிய கோலங் குருபரன் கொண்டாடத்
தேடியு ளேகண்டு தீர்ந்தற்ற வாறே. (௪௭௯).

அற்புதக்கூத்து.

நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி
உற்றுற்றுப் பார்க்க வொளிவிடு மந்திரம்
பற்றுக்குப் பற்ருய்ப் பரம னிருந்திடம்
சிற்றம் பலமென்று சேர்ந்துகொண் டேனே. (௪௮௰).

அம்பல மாவ தகில சராசரம்
அம்பல மாவது வாதிப் பிரானடி
அம்பல மாவது வப்புத்தீ மண்டலம்
அம்பல மாவது வஞ்செழுத் தாமே. (௪௮௧).

புளிக்கண் டவர்க்குப் புனலூறு மாபோல்
களிக்குந் திருக்கூத்துக் கண்டவர்க் கெல்லாம்
அளிக்கு மருட்கண்ணீர் சோர்நெஞ் சுருக்கும்
ஒளிக்கு ளானந்தத் தமுதூறு முள்ளத்தே. (௪௮௨).

நாதத்தி னந்தமு நற்போத வந்தமும்
வேதத்தி னந்தமு மெய்ச்சிவா னந்தமும்
தாதற்ற நல்ல சதாசிவா னந்தத்து
நாதப் பிரமஞ் சிவநட மாமே. (௪௮௩).

ஆனந்த மானந்த மென்ப ரறிவிலர்
ஆனந்த மாநட மாரு மறிகிலர்
ஆனந்த மாநட மாரு மறிந்தபின்
தானந்த மற்றிட மானந்த மாமே. (௪௮௪).

அரன்றுடி தோற்ற மமைத்த றிதியாம்
அரனங்கி தன்னி லறையிற் சங்காரம்
அரனுற் றணைப்பி லமருந் திரோதாயி
அரனடி யென்று மனுக்கிரக மென்னே. (௪௮௫).

ஞானோதயம்.

விளக்கைப் பிளந்து விளக்கினை யேற்றி
விளக்கினுக் குள்ளே விளக்கினைத் தூண்டி
விளக்கில் விளக்கை விளக்கவல் லார்க்கு
விளக்குடை யான்கழல் மேவலு மாமே. (௪௮௬)

நானென்றுந் தானென்று நாடினே னாடலும்
நானென்றுந் தானென் றிரண்டில்லை யென்பதும்
நானென்ற ஞான முதல்வனே நல்கினான்
நானென்று நானு நினைப்பொழிந் தேனே. (௪௮௭)

உய்யவல் லார்கட் குயிர்சிவ ஞானமே
உய்யவல் லார்கட் குயிர்சிவந் தெய்வமே
உய்யவல் லார்கட் கொடுக்கம் பிரணவம்
உய்யவல் லாரறி வுள்ளறி வாமே. (௪௮௮)

சொரூபோதயம்.

உருவன்றி யேநின் றுருவம் புணர்க்கும்
கருவன்றி யேநின்று தான்கரு வாகும்
மருவன்றி யேநின்ற மாயப் பிரானைக்
குருவன்றி யாவர்க்குங் கூடவொண் ணாதே. (௪௮௯)

ஊழ்.

செற்றிலென் சீவிலென் செஞ்சாந் தணியிலென்
மத்தகத் தேயுளி நாட்டி மறிக்கிலென்
வித்தக னந்தி விதிவழி யல்லது
தத்துவ ஞானிக டன்மைகுன் றாரே. (௪௯௰)

வானின் றிடிக்கிலென் மாகடற் பொங்கிலென்
கானின்ற செந்தீக் கலந்துடன் வேகிலென்
தானன்றி மாருதஞ் சண்ட மடிக்கிலென்
நானன்றி நாதனை நாடுவ னானே. (௪௯௧)

சிவதரிசனம்.

சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை
சிந்தையி னுள்ளே சிவனும் வெளிப்படும்

சிந்தை தெளியத் தெளியவல் லார்கட்குச்
சிந்தையி னுள்ளே சிவனிருந் தானே. (சகஉ)

சிவரூபதரிசனம்.

உணர்வு மவனே யுயிரு மவனே
புணரு மவனே புலவி யவனே
இணரு மவன்றன்னை யெண்ணலு மாகான்
துணரின் மலர்க்கந்தந் துன்னிநின் றானே. (சகங)

கர்மநிர்வாணம்.

பற்றற் றவர்பற்றி நின்ற பரம்பொருள்
கற்றற் றவர்கற்றுக் கருதிய கண்ணுதல்
சுற்றற் றவர்சுற்றி நின்றவென் சோதியைப்
பெற்றுற் றவர்கள் பிதற்றொழிந் தாரே. (சகச)

மோனசமாதி.

உணர்வுடை யார்கட் குலகமுந் தோன்றும்
உணர்வுடை யார்கட் குறுதுய ரில்லை
உணர்வுடை யார்க ளுணர்ந்தவக் காலம்
உணர்வுடை யார்க ளுணர்ந்துகண் டாரே. (சகரு)

முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே யானந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமா றெங்ஙனே. (சகசு)

தானு மழிந்து தனமு மழிந்துநீ
டூனு மழிந்து வுயிரு மழிந்துடன்
வானு மழிந்து மனமு மழிந்துபின்
நானு மழிந்தமை நானறி யேனே. (சகஎ)

வரையுரைமாட்சி.

உரையற்ற தொன்றை யுரைசெய்யு மூடர்காள்
கரையற்ற தொன்றைக் கரைகாண லாகுமோ
திரையற்ற நீர்போற் சிந்தை தெளிவார்க்குப்
புரையற் றிருந்தான் புரிசடை யோனே. (சகஅ)

அனைந்தோர் தன்மை.

மலமில்லை மாசில்லை மானாபி மானக்
குலமில்லை கொள்ளுங் குணங்களு மில்லை
நலமில்லை நந்தியை ஞானத்தி னாலே
பலமன்னி யன்பிற் பதித்துவைப் போர்க்கே. (௪௯௯).

ஒழிந்தேன் பிறவி யுறவென்னும் பாசம்
கழிந்தேன் கடவுளு நானுமொன் றானேன்
இழிந்தாங் கினிவரு மார்க்கமும் வேண்டேன்
செழுஞ்சார் புடைய சிவனைக்கண் டேனே. (௫௱)

ஆராலு மென்னை யமட்டவொண் ணாதினிச்
சீரார் பிரான்வந்தென் சிந்தை புகுந்தனன்
சீராடி யங்கே திரிவதல் லாதினி
யார்பாடுஞ் சாரா வறிவறிந் தேனே. (௫௱௧).

நமன்வரின் ஞானவாள் கொண்டே யெறிவன்
சிவன்வரி னானுடன் போவது திண்ணம்
பவம்வரும் வல்வினைப் பண்டே யறுத்தேன்
தவம்வருஞ் சிந்தைக்குத் தானெதி ராமே. (௫௱௨).

சித்தஞ் சிவமாய் மலமூன் றுஞ் செற்றவர்
சுத்தஞ் சிவமாவர் தோயார் மலபந்தம்
கத்துஞ் சிலுகுங் கலகமுங் கைகாணார்
சத்தம் பரவிந்து தாமாமென் றெண்ணியே. (௫௱௩).

சிவபெரு மானென்று நானழைத் தேத்தத்
தவபெரு மானென்று தான்வந்து நின்றான்
அவபெரு மானென்னை யாளுடை நாதன்
பவபெரு மானைப் பணிந்துநின் றேனே. (௫௱௪).

அன்பு ளுருகி யழுவ னரற்றுவன்
என்பு முருவ விராப்பக லேத்துவன்
என்பொன் மணியை யிறைவனை யீசனைத்
தின்பன் கடிப்பன் றிருத்துவன் றானே. (௫௱௫)

தோத்திரம்.

போற்றும் பெருந்தெய்வந் தானே பிறரில்லை
ஊற்றமு மோசையு மோசை யொடுக்கமும்
வேற்றுட ருனென் றதுபெருந் தெய்வமாம்
காற்றது வீசன் கலந்துநின் றானே. (நாசு)

ஏனோர் பெருமைய னாகிலு மெம்மிறை
ஊனே சிறுமையு ளுட்கலந் தங்குளன்
வானோ ரறியு மளவல்லன் மாதேவன்
தானே யறியுந் தவத்தி னளவே. (நாஎ)

சர்வவியாபி.

நானறிந் தப்பொரு ளூடவிட மில்லை
வானறிந் தங்கே வழியுற விம்மிடும்
ஊனறிந் துள்ளே யுயிர்க்கின்ற வொண்சுடர்
தானறிந் தெங்குந் தலைப்பட லாமே. (நாஅ)

உணர்வு மவனே யுயிரு மவனே
புணர்வு மவனே புலனு மவனே
இணரு மவன்றன்னை யெண்ணலு மாகான்
துணரின் மலர்க்கந்தந் துன்னிநின் றானே. (நாகூ)

மூல னுரைசெய்த மூவா யிரந்தமிழ்
மூல னுரைசெய்த முந்நூறு மந்திரம்
மூல னுரைசெய்த முப்ப துபதேசம்
மூல னுரைசெய்த மூன்றுமொன் றாமே. (நாய)

வாழ்கவே வாழ்கவென் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்க மெய்ஞ்ஞானத் தவன்றாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே. (நிகக)

திருச்சிற்றம்பலம்.

ஆகச் செய்யுள் - நிகக.

திருமந்திரத்திரட்டு முற்றுப்பெற்றது.

சிலபிரதிகளில் அதிகமாகக் காணப்படும் திருமந்திரப் பாடற்றிரட்டு.

அவிரோதவுந்தியார் உரை.

இணங்க வேண்டா வினியுல கோருடன்
நுணங்கு கல்வியு நூல்களு மென்செயும்
வணங்க வேண்டா வடிவை யறிந்தபின்
பிணங்க வேண்டா பிதற்றை யொழியுமே. (க)

முன்னைப் பிறவியிற் செய்த முதுதவம்
பின்னைப் பிறவியிற் பெற்று லறியலாம்
தன்னை யறிவ தறிவா மஃதன்றிப்
பின்னை யறிவது பேயறி வாமே. (உ)

வைராக்கிய தீபவுரை.

உடலாங் குகையி லுணர்வாகும் பீடத்
தடலார் சமாதி யிதயத்த தாக
நடமா டியகுகை நாடிய யோகி
மிடையாகா வண்ணமே சாதிக்கு மெல்லவே. (ங)

நிற்ற லிருத்தல் கிடத்த னடையோடல்
பெற்ற வக்காலுந் திருவருள் பேராமல்
சற்றியன் ஞானந்தந் தானந்தந் தங்கவே
உற்ற பிறப்பற் றுளிர்ஞான நிட்டையே. (ச)

நாயோட்டு மந்திரம் என்னுஞ்செய்யுள் திருமூலத்தேவர் திருவாக்கென்று கருதுதற்கிடமில்லை.

திருமந்திரத்திரட்டின்

செய்யுள் முதற்குறிப் பகராதி.

அதிகமாகக் காணப்படும் பாடல்கள்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.

பதினோராந் திருமுறை

என்னும்

நாற்பது பிரபந்தங்கள்.

இந்தப்பிரபந்தங்களை யருளிச் செய்தவர்கள் (க) திருவாலவாயுடையார் என்னும் சோமசுந்தரக் கடவுள். (உ) காரைக்காலம்மையார். (ங) ஐயடிகள் காடவர்கோனாயனார். (ச) சேரமான் பெருமாணாயனார். (ரு) நக்கீரதேவ நாயனார். (சு) கல்லாடதேவ நாயனார். (எ) கபிலதேவ நாயனார். (அ) பரணதேவ நாயனார். (கூ) இளம்பெருமானடிகள். (ώ) அதிராவடிகள். (கக) திருவெண்காட்டடிகள். (கஉ) நம்பியாண்டார் நம்பி என்னும் பன்னிருவர்களே.

திருச்சிற்றம்பலம்.

இப்பன்னிருவர் அருளிச்செய்த பிரபந்தங்களின் றொகை.

திருவாலவாயுடையார்	௧
காரைக்காலம்மையார்	௩
ஐயடிகள் காடவர்கோ னாயனார்	௧
சேரமான் பெருமா ணாயனார்	௩
நக்கீரதேவ நாயனார்	௰
கல்லாடதேவ நாயனார்	௧
கபிலதேவ நாயனார்	௩
பரணதேவ நாயனார்	௧
இளம் பெருமானடிகள்	௧
அதிராவடிகள்	௧
திருவெண்காட்டடிகள்	௫
நம்பியாண்டார் நம்பி	௰

ஆகத்தொகை. ௪௰

பதினோராந் திருமுறையெனல் - திருமுறைகண்ட புராணம்.

வைத்ததற்பி னம்பிகழன் மன்னர்பிரான் மகிழ்ந்திறைஞ்சிச்
சித்திதரு மிறைமொழிந்த திருமுகப்பா சுரமுதலா
உய்த்தபதி கங்களையு மொருமுறையாச் செய்கவெனப்
பத்திதருந் திருமுறைகள் பதினொன்றாப் பண்ணினார். (௧)

மந்திரங்க ளேழுகோடி யாதலினான் மன்னுமவர்
இந்தவகை திருமுறைக ளேழாக வெடுத்தமைத்துப்
பந்தமுறு மந்திரங்கள் பதினொன்று மாதலினால்
அந்தமுறை நான்கினொரு முறைபதினொன் றாக்கினார். (௨)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பிரபந்தமாலைத் திரட்டு.

திருவாலவாயுடையார் சேரமான் பெருமாணயனாருக்கு அருளிச்செய்த திருமுகப்பாசுரம்.

திருச்சிற்றம்பலம்.

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவும் பானிற வரிச்சிறை
அன்னம் பயில்பொழி லால வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாணபத்திரன்
தன்போ லென்பா லன்பன் றன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே. (க)

திருச்சிற்றம்பலம்.

காரைக்காலம்மையார் அருளிச்செய்த
திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

கொங்கை திரங்கி நரம்பெழுந்து குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கணீண்டு பரடுயர்நீள்கணைக்காலோர் பெண்பேய்
தங்கி யலறி யுலறுகாட்டிற் றாழ்சடை யெட்டுத் திசையும்வீசி
அங்கங் குளிர்ந்தன லாடுமெங்க ளப்ப னிடந்திரு வாலங்காடே. (உ)

எட்டி யிலவ மீகை சூரை காரை படர்ந்தெங்கும்
சட்ட சடலை சூழ்ந்த கள்ளி சோர்ந்த குடர்கவ்வப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பறைபோல் விழிகட்பேய்
கொட்ட முழவங் கூளி பாடக் குழக னாடுமே. (ங)

நிணந்தா னுருகி நிலந்தா னனைப்ப நெடும்பற் குழிகட்பேய்
சுணங்கை யெறிந்து சூழு நோக்கிச் சுடர நவித்தெங்கும்
கணங்கள் கூடிப் பிணங்கள் மாந்திக் களித்த மனத்தவாய்
அணங்கு காட்டி லனல்கை யேந்தி யழக னாடுமே. (ச)

திருவிரட்டைமணிமாலை.

சங்கரனைத் தாழ்ந்த சடையானை யச்சடைமேல்
பொங்கரவம் வைத்துகந்த புண்ணியனை - அங்கொருநாள்
ஆவாவென் றாழாமைக் காப்பானை யெப்பொழுதும்
ஓவாது நெஞ்சே யுரை. (ரு)

வேதியனை வேதப் பொருளானை வேதத்துக்
காதியனை யாதிரைநன் னாளானைச் - சோதிப்பான்
வல்லேன மாய்ப்புக்கு மாலவனு மாட்டாது
இல்லேன மாவென்றான் கீழ். (சு)

அற்புதத்திருவந்தாதி.

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர். (எ)

இடர்களையா ரேனு மெமக்கிரங்கா ரேனும்
படரு நெறிபணியா ரேனுஞ் - சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாடு மெம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு. (அ)

யானே தவமுடையே னென்னெஞ்சே நன்னெஞ்சம்
யானே பிறப்பறுப்பா னெண்ணினேன் - யானேயக்
கைம்மா வுரிபோர்த்த கண்ணுதலான் வெண்ணீற்ற
அம்மானுக் காளாயி னேன். (௯)

அறிவானுந் தானே யறிவிப்பான் றானே
அறிவா யறிகின்றான் றானே - அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பா ராகாயம்
அப்பொருளுந் தானே யவன். (௰)

ஒருபா லுலகளந்த மாலவனா மற்றை
ஒருபா லுமையவளா மென்றால் - இருபாலும்
நின்னுருவ மாக நிறந்தெரிய மாட்டோமால்
நின்னுருவோ மின்னுருவோ நேர்ந்து. (௧௧)

அன்றுந் திருவுருவங் காணாதே யாட்பட்டேன்
இன்றுந் திருவுருவங் காண்கிலேன் - என்றுந்தான்
எவ்வுருவோ னும்பிரா னென்பார்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவ மேது. (௧௨)

காலனையும் வென்றோங் கடுநரகங் கைகழன்றோம்
மேலை யிருவினையும் வேரறுத்தோம் - கோல
அரணா ரவிந்தழிய வெந்தீயம் பெய்தான்
சரணா ரவிந்தங்கள் சார்ந்து. (௧௩)

ஐயடிகள்காடவர்கோனாயனார் அருளிச்செய்த க்ஷேத்திரத்திருவெண்பா.

ஓடுகின்ற நீர்மை யொழிதலுமே யுற்றாரும்
கோடுகின்றார் மூப்புங் குறுகிற்று - நாடுகின்ற
நல்லச்சிற் றம்பலமே நண்ணாமு னன்னெஞ்சே
தில்லைச்சிற் றம்பலமே சேர். (௧௪)

குத்தி நடந்து குனிந்தொருகை கோலூன்றி
நொந்திருமி யேங்கி நுரைத்தேறி-வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமு னெஞ்சமே
ஐயாறு வாயா லழை. (௧௫)

படிமுழுதும் வெண்குடைக்கீழ்ப் பாரெலா மாண்ட
முடியரசர் செல்வத்து மும்மை-கடியிலங்கு
தோடேந்து கொன்றையந்தார்ச் சோதிக்குத் தொண்டுபட்
டோடேந்தி யுண்ப துறும். (௧௬)

இழவாடிச் சுற்றத்தா ரெல்லாருங் கூடி
விழவாடி யாவிவிடா முன்னம்-மழபாடி
ஆண்டானை யாரமுதை யன்றயன்மால் காணாமை
நீண்டானை நெஞ்சே நினை. (௧௭)

உய்யு மருந்திதனை யுண்மினெனை வுற்றார்
கையைப் பிடித்தெதிரே காட்டியக்கால்-பைய
எழுந்திருமி யான்வேண்டே னென்னாமு னெஞ்சே
செழுந்திரு மயானமே சேர். (௧௮)

சேரமான்பெருமாணாயனார் அருளிச்செய்த பொன்வண்ணத்தந்தாதி.

பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மேனி பொலிந்திலங்கும்
மின்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம் வீழ்சடைவெள்ளிக்குன்றம்

தன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மால்விடை தன்னைக்கண்ட
என்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மாகிய வீசனுக்கே. (௧௯)

இடாமல் வலந்தானிடப்பா றுழாய்வலப் பாலொண்கொன்றை
வடமா லிடந்துகி ரேல்வல மாழியிடம்வலமான்
இடமால் கரிதால் வலஞ்சே திவனுக் கெழினலஞ்சேர்
குடமா லிடம்வலங் கொக்கரையா மெங்கள் கூத்தனுக்கே. (௨௰)

கொடிமே லிடபமுங் கோவணக் கீளுமோர் கொக்கிறகும்
அடிமேற் கழலு மகலத்தி னீறுமை வாயரவும்
முடிமேன் மதியு முருகலர் கொன்றையு மூவிலைய
வடிவேல் வடிவு மென்கண்ணு ளெப்போதும் வருகின்றவே. (௨௧)

முனியேன் முருகலர் கொன்றையி னுயென்னை மூப்பொழித்த
கனியே கழலடி யல்லாற் களைகண்மற் றொன்றுமிலேன்
இனியே லிருந்தவஞ் செய்யேன் றிருந்தவஞ் சேரினைந்து
தனியேன் படுகின்ற சங்கட மார்க்கனிச் சாற்றுவனே. (௨௨)

பொய்யா நரகம் புகினுந் துறக்கினும் போந்துபுக்கிங்
குய்யா வுடம்பி னுேர்வ நடப்ப பறப்பவென்று
நையா விளியினு நானில மாளினு நான்மறைசேர்
மையார் மிடற்ற னடிமற வாவரம் வேண்டுவனே. (௨௩)

மாயனன் மாமணி கண்டன் வளர்சடை யாற்கடிமை
ஆயின தொண்டர் துறக்கம் பெறுவது சொல்லுடைத்தே
காய்சின வானை வளருங் கனக மலையருகே
போயின காக்கையு மன்றே படைத்தது பொன்வண்ணமே. (௨௪)

நக்கீரதேவநாயனார் அருளிச்செய்த

பெருந்தேவபாணி

சூல பாணியை சுடர்தரு வடிவனை
நீல கண்டனை நெற்றியோர் கண்ணனை
பாலவெண் ணீற்றனை பரமயோகியை
காலனைக் காய்ந்த கறைமிடற் றண்ணலை

நூலணி மார்பனை நண்ணிய கேள்வியை
கோல மேனியை கொக்கரைப் பாடலை
வேலுடைக் கையனை விண்டோய் முடியனை
ஞாலத் தீயினை நாதனை காய்ந்தனை
தேவ தேவனை திருமரு மார்பனை
கால மாகிய கடிகமழ் தாரனை
வேத கீதனை வெண்டலை யேந்தியை
பாவ நாசனை பரமேச்சு வரனை
கீதம் பாடியை கிளர்பொறி யரவனை
போதணி கொன்றையெம் புண்ணிய வொருவனை
ஆதி மூர்த்தியை யமரர்க டலைவனை
சாதி வானவர் தம்பெரு மான்றனை
வேத விச்சையை விடையுடை யண்ணலை
ஓத வண்ணனை யுலகத் தொருவனை
நாத னாகிய நன்னெறிப் பொருளினை
மாலை தானெரி மயானத் தாடியை
வேலை நஞ்சினை மிகவமு தாக்கியை
வேத வேள்வியை விண்ணவர் தலைவனை
ஆதி மூர்த்தியை யருந்தவ முதல்வனை
ஆயிர நூறுக் கரிவரி யானை
பேயுரு வுகந்த பிறையணி சடையனை
மாசறு சோதியை மலைமகள் கொழுநனை
கூரிய மழுவனை கொலற்கருங் காலனை
சீரிய வடியாற் செற்றருள் சிவனை
பூதிப் பையனை புண்ணிய மூர்த்தியை
பீடுடை யாற்றைப் பிராணி தலைவனை
நீடிய நிமலனை நிறைமறைப் பொருளினை
ஈசனை யிறையனை யீறில் பெருமையை
நேசனை நினைப்பவர் நெஞ்சத் துள்ளனை
தாதணி மலரனை தருமனை பிரமனை
காதணி குழையனை களிற்றி னுரியனை
சூழ்சடைப் புனலனை சுந்தர விடங்கனை

தார்மலர்க் கொன்றை தயங்கு மார்பனை
வித்தக விதியனை
தீதமர் செய்கைத் திரிபுர மெரித்தனை
பிரமன் பெருந்தலை நிறைய தாகக்
கருமன் செந்நீர் கபால நிறைத்தனை
நிறைத்த கபாலச் செந்நீர் நின்றும்
உறைத்த வுருவா ரையனைத் தோற்றினை
தேவரு மசுரருந் திரம்படக் கடைந்த
அராவமு ணஞ்ச மமுத மாக்கினை
ஈரமி னெஞ்சத் திராவணன் றன்னை
வீர மழித்து விறல்வாள் கொடுத்தனை
திக்கமர் தேவருந் திருந்தாச் செய்கைத்
தக்கன் வேள்வியைத் தளரச் சாடினை
வேதமு நீயே வேள்வியு நீயே
நீதியு நீயே நிமல னீயே
புண்ணிய னீயே புனித னீயே
பண்ணிய னீயே பழம்பொரு ணீயே
ஊழியு நீயே யுலகமு நீயே
வாழியு நீயே வரதனு நீயே
தேவரு நீயே தீர்த்தமு நீயே
மூவரு நீயே முன்னெறி நீயே
மால்வரை நீயே மறிகட னீயே
இன்பமு நீயே துன்பமு நீயே
தாயு நீயே தந்தையு நீயே
விண்முதற் பூத மைந்தவை நீயே
பத்தியு நீயே முத்தியு நீயே
சொலற்கருந் தன்மைத் தொல்லோய் நீயே, அதனால்
கூட லாலவாய்க் குழக னவை
தறியா தருந்தமிழ் பழித்தன னடியேன்
ஈண்டிய சிறப்பி னிணையடிக் கீழ்நின்று
வேண்டு மதுவினி வேண்டுவன் விரைந்தே. (உரு)

திருமுருகாற்றுப் படை.

ஒருமுரு காவென்றென் னுள்ளங் குளிர வுவந்துடனே
வருமுரு காவென்று வாய்வெருவா நிற்பக் கையிங்ஙனே
தருமுரு காவென்று தான்புலம்பா நிற்பத் தையன்முன்னே
திருமுரு காற்றுப் படையுட னேவருஞ் சேவகனே. (உசு)

குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையாய்-என்றும்
இளையா யழகியா யேறூர்ந்தா னேறே
உளையாயென் னுள்ளத் துறை. (உஎ)

குன்ற மெறிந்தமையுங் குன்றப்போர் செய்தமையும்
அன்றங் கமரர்பதி காத்தமையும்-இன்றென்னைக்
கைவிடா நின்றமையுங் கற்பொதும்பின் மீட்டமையும்
மெய்விடா வீரன்கை வேல். (உஅ)

கபிலதேவ நாயனாருளிச் செய்த
மூத்தநாயனார் இரட்டைமணிமாலை.

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்-உருவாக்கும்
ஆதலால் வானோரு மானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை. (கக)

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்-விநாயகனே
விண்ணிற்கு மண்ணிற்கு நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து. (கூ0)

நல்லார் பழிப்பி லெழிற்செம் பவளத்தை நாணநின்ற
பொல்லா முகத்தெங்கள் போதக மேபுர மூன்றெரித்த
வில்லா னளித்த விநாயகனே யென்று மெய்மகிழ
வல்லா ரகத்தன்றி மாட்டா ளிருக்க மலர்த்திருவே. (கூக)

அதிராவடிகள் அருளிச்செய்த
மூத்தபிள்ளையார் திருமும்மணிக் கோவை.

மணிசிந்து கங்கைதன் மானக் குருளையை வாளரக்கர்
அணிசிந்த வென்றவெம் மையர்க் கிளங்கன்றை யங்கரும்பின்
துணிசிந்த வாய்ப்பெய்த போதகத் தைத்தொடர்ந் தோர்பிறவிப்
பிணிசிந்து கான்முளை யைப்பிடித் தோர்க்கில்லை பேதுறவே. (௩௨)

மொழியின் மறைமுதலே முன்னயனத் தேறே
கழிய வருபொருளே கண்ணே - தெழியதலால்
ஐயனே எங்கள் கணபதியே நின்னையலா
தையனே சூழாதென் னன்பு. (௩௩)

திருவெண்காட்டடிகள் அருளிச்செய்த
கோயினான் மணிமாலை.

நெறிதரு குழலை யற லென்பர்கள்
நிழலெழு மதிய நுத லென்பர்கள்
நிலவினும் வெளிது நகை யென்பர்கள்
நிரம்வரு கலச முலை யென்பர்கள்
அறிகுவ தரிதிவ் விடை யென்பர்கள்
அடியிணை கமல மல ரென்பர்கள்
அவயவ மினைய மட மங்கையர்
அழகிய ரமையு மவ ரென்செய
மறிமழு வுடைய கர னென்கிலர்
மறலியை முனியு மர னென்கிலர்
மதிபொதி சடில தர னென்கிலர்
மலைமகள் மருவு புய னென்கிலர்
செறிபொழி னிலவு தில்லை யென்கிலர்
திருநட நவிலு மிறை யென்கிலர்
சிவகதி யருளு மர னென்கிலர்
சிலர்நர குறுவ ரறி வின்றியே. (௩௪)

திருவிடைமருதூர் மும்மணிக்கோவை.

கதியா வதுபிறி தியாதொன்று மில்லை களேபரத்தின்
பொதியா வதுசமந் தால்விழப் போமிது போனபின்னர்
விதியா மெனச்சிலர் நோவதல் லாலிதை வேண்டுநர்யார்
மதியா வதுமரு தன்கழலே சென்று வாழ்த்துவதே. (௩௫)

காணீர் கதியொன்றுங் கல்லீ ரெழுத்தஞ்சம் வல்லவண்ணம்
பேணீர் திருப்பணி பேசீ ரவன்புக ழாசைப்பட்டுப்
பூணீ ருருத்திர சாதன நீறெங்கும் பூசுகிலீர்
வீணீ ரெளிதோ மருதப் பிரான்கழல் மேவுதற்கே. (௩௬)

ஓராதே யஞ்செழுத்து முன்னாதே பச்சிலையும்
நேராதே நீரு நிரப்பாதே—ஆராயோ
எண்ணுவா ருள்ளத் திடைமருதர் பொற்பாதம்
நண்ணுவா மென்னுமது நாம். (௩௭)

அன்றென்று மாமென்று மாறு சமயங்கள்
ஒன்றொன்றோ டொவ்வா துரைத்தாலும்—என்றும்
ஒருதனையே நோக்குவா ருள்ளத் திருக்கும்
மருதனையே நோக்கி வரும். (௩௮)

வளையார் பசியின் வருந்தார் பிணியின் மதனனம்புக்
கிளையார் தனங்கண் டிரங்கிநில் லாரிப் பிறப்பினில்வந்
தளையார் நரகினுக் கென்கட வார்பொன் னலர்ந்தகொன்றைத்
தளையா னிடைமரு தன்னடி யாரடி சார்ந்தவரே. (௩௯)

திருவேகம்பமுடையார் திருவந்தாதி.

மெய்த்தொண்டர் செல்லு நெறியறி யேன்மிக நற்பணிசெய்
கைத்தொண்டர் தம்மிலு நற்றொண்டு வந்தில னுண்பதற்கே
பொய்த்தொண்டு பேசிப் புறம்புறமே யுன்னைப் போற்றுகின்ற
இத்தொண்ட னென்பணி கொள்ளுதியோ கச்சி யேகம்பனே. (௪0)

வணக்கந் தலைநின் றிருவடிக்கே செய்பு மையல்கொண்டோர்
இணக்கன் றிமற்றோ ரிணக்கறிவோ மல்லம் வல்லரவின்

குணக்குன் றவில்லி குளிர்கச்சி யேகம்பம் பாடினல்லால்
கணக்கன் றுமற்றொரு தேவரைப் பாடுங் கவிநலமே. (சச)

படையா லுயிர்கொன்று தின்று பசுக்களைப் போலச்செல்லும்
நடையா லறிவின்றி நாண்சிறி தின்றி நகுங்குலத்தில்
கடையாப் பிறக்கினுங் கச்சியுளே கம்பத் தெங்களையாள்
உடையான் கழற்கன்ப ரேலவர் யாவர்க்கு முத்தமரே. (சஉ)

பாதம் பரவியோர் பித்துப் பிதற்றிலும் பல்பணியும்
மேதம் புகுதா வகையரு ளேகம்ப ரேத்தெனவே
போதம் பொருளாற் பொலியாத புன்சொற் பனுவல்களும்
வேதம் பொலியும் பொருளா மெனக்கொள்வர் மெய்த்தொண்டரே.

நம்பியாண்டார்நம்பி அருளிச்செய்த

கோயிற்றிருப்பண்ணியர் திருவிருத்தம்.

அவநெறிக் கேவிழப் புக்கவிந் நானமுந் தாமைவாங்கித்
தவநெறிக் கேயிட்ட தத்துவ னேயத் தவப்பயனும்
சிவநெறிக் கேயென்னை யுய்ப்பவ னேசென னந்தொறுஞ்செய்
பவமறித் தாள்வதற் கோதில்லை நட்டம் பயில்கின்றதே. (சந)

பிறவியிற் பெற்ற பயனொன்று கண்டிலம் பேரொலிநீர்
நறவியல் பூம்பொழிற் றில்லையு ளுடைக மாடுகின்ற
துறவியல் சோதியைச் சுந்தரக் கூத்தனைத் தொண்டர்தொண்டர்க்
குறவியல் வாற்கண்கள் கண்டுகண் டின்பத்தை யுண்டிடவே. (சரு)

பிழையா யினவே பெருக்கிநின் பெய்கழற் கன்புதன்னின்
நுழையா தசிந்தையி னேனையு மந்தா கினித்துவலை
முழையார் தருதலை மாலைமு டித்த முழுமுதலே
புழையார் கரியுரித் தோய்தில்லை நாத பொறுத்தருளே. (சசு)

வருவா சகத்தினின் முற்றுணர்ந் தோனைவண் டில்லைமன்னைத்
திருவா தவூர்ச்சிவ பாத்தியன் செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவைகண் டேயுமற் றப்பொருளைத்
தெருளா தவுள்ளத் தவர்கவி பாடிச் சிரிப்பிப்பரே. (சஎ.

ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி.

கவிக்குத் தகுவன கண்ணுக் கினியன கேட்கிலின்பம்
செவிக்குத் தகுவன சிந்திக் குரியன பைந்தாள
நவிக்கட் சிறுமியர் முற்றின் முகந்துதஞ் சிற்றிறுெற்றும்
குவிக்கத் திரைபரக் குங்கொச்சை நாதன் குழைகழலே. (சஅ)

உரவும் பொருளுமொண் போகமுங் கல்வியுங் கல்வியுற்ற
தரவுந் தரவிப் பயனு மெனக்குச் சுழிந்தபுனல்
புரவும் பொழிலும் பொழில்சூழ் பொதும்புந் ததும்பு வண்டின்
நரவம் பொழிலெழிற் காழியர் கோன்றிரு நாமங்களே. (சகூ)

மயிலேந்திய வள்ளறன்னை யளிப்ப மதிபுணர்ந்த
எயிலேந்திய சண்பை நாதனுலகத் தெதிர்ப்பவரியார்
குயிலேந்திய பொழிற் கொங்கேந்திய கொம்பினம் புகழீஇ
அயிலேந்திய மலர்கண் டுளனுய் வந்த வண்ணலுக்கே. (ருய)

கண்ணுர் திருநுத லோன்கோலக் காவிற் கரநொடியால்
பண்ணுர் தரப்பாடு சண்பையர் கோன்பாணி நொந்திடுமென்
றெண்ணு ரெழுத்தஞ்சு மிட்டபொற் றாளங்க ளீயக்கண்டும்
மண்ணுர் சிலர்சண்பை நாதனை யேத்தார் வருந்துவதே. (ருக)

முத்தன வெண்ணகை யார்மயன் மாற்றி முறைவழுவா
தெத்தனை காலநின் றேத்து மவரிலு மென்பணிந்த
பித்தனை யெங்கள் பிரானை யனைவ தெளிதுகண்டீர்
அத்தனை ஞானசம் பந்தனைப் பாத மடைந்தவர்க்கே. (ருஉ)

ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை.

என்று மடியவ ருள்ளத் திருப்பன விவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித் துதிப்பன நல்லசங்கத்
தொன்றும் புலவர்க ளியாப்புக் குரியன வொண்கலியைப்
பொன்றுங் கவுணியன் சைவ சிகாமணி பொன்னடியே. (ருங)

பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனுந் தோணிகண்டீர்-நிறையுலகில்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ். (ருச)

ஆளுடையவரசுகள் திருவேகாதசமாலை.

பதிகமே ழெழுநூறு பகருமா கவியோகி
பரசுநா வரசான பரமகா ரணவீசன்
அதிகைமா நகர்மேவி யருளினு லமண்மூடர்
அவர்செய்வா தைகடரு மனகன்வார் கழல்சூடின்
விதியரா குவர்சீர்மை யுடையரா குவர்வாய்மை
நெறியரா குவர்பாவம் வெறியரா குவர்சால
மதியரா குவரீச னடியரா குவர்மான
முடையரா குவர்பாரின் மனிதரா னவர்தாமே. (ருரு)

நன்று மாதர நாவினுக் கரசடி நளினம்வைத் துயினல்லால்
ஒன்று மாவது கண்டில முபாயமற் றுள்ளன வேண்டோமல்
என்று மாதியு மந்தமு மில்லதோ ரிகபரத் திடைப்பட்டு
பொன்று வார்புகுஞ் சூழலிற் புகேம்புகிற் பொறியிலைம் புலனேடே.

திருச்சிற்றம்பலம்.

பிரபந்தமாலைத் திரட்டு முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

பன்னிரண்டாந் திருமுறை

என்னும்

திருத்தொண்டர் புராணம்.

இப்புராணம் **பெரியபுராணம்** என்றும் வழங்கப்படும். இதை யருளிச் செய்தவர் அருண்மொழித் தேவராகிய ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள். இவர் ஸ்ரீ சிதம்பரத்திலே ஸ்ரீ நடராஜப்பெருமான் சந்நிதியடைந்து கசிந்துருகுமன்பினாலே அப்பெருமானை வணங்கி, எம்பெருமானே! அளவில்லாத பெருமை வாய்ந்த சிறப்பாச் செல்வர் களாகிய அடியார்களின் சிறந்த மான்மியத்தை அடியேனெவ்வாறு பாடுவேன், தேவரீரே அடியேனது ஆகுல மகலும்படி அடியெடுத்துத்தந்து முடித்தருளல் வேண்டும் என்று குறையிரந்து நிற்ப, உடனே பரங்கருணைத் தடங்கடலாகிய ஸ்ரீ நடராஜப் பெருமானது திவ்ய திருவருளால் சிதாகாச வெளியிலே அளவிறந்த ரஹஸியார்த் தங்களை யெல்லாந் தன்னுள்ளடக்கிக் கொண்டு விளங்கும் ஐந்தெழுத்தாலாய **உலகேலாம்** என்னும் அருள்நாத துரீயவொலி பலருங் கேட்க வெழுந்தது. அவ்வொலி வடிவாகிய துரீயவாக்கையே சுவாமிகள் முதலிலமைத்துக்கொண்டு அடியார் சரித்திர முழுமையும் பக்திச் சுவைநனி சொட்ட, உள்ள முதலிய கருவி கரணங்கள் யாவும் கனிந்து கசிந்துருகும்படிப் பாடி, இடையிலும் ஈற்றிலும் அத்துரீய வொலியையே அமைத்தருளி, அதற்குத் திருத்தொண்டர் புராணம் என்னுந் திருநாமத்தையுஞ் சூட்டியருளினார். அத்தகைய அரிய பெரிய **மாக்கதையே** இவ்வடியவர் புராணமாகும். இதன் பெருமை அளவிட்டறிதற்கரிது. (மாக்கதை - மகத்தாகிய சரிதம்).

இதனாலறியக் கிடக்கின்ற உண்மை யாதெனின், ஸ்ரீ நடராஜ வள்ளல் எடுத்துத்தந்த அருள்நாத தூரியவாக்கையே அடிப்படையா கக்கொண்டு இப்புராணம் பாடி முடிக்கப்பட்டமையின் இருவர் வாக்கையும் ஒரே வாக்காகக் கொள்ளுதலே நியதம். பொன்னம் பலத்தினில் ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளும் ஸ்ரீ தாண்டவே சுரர் உலகெலா முய்ய இவ்வருள்நாத முதற்பகுதியை அசரீரி வாக் காகத் திருவுளம் பற்றி யருளியபடி ஏனைய பகுதிகளையும் ஸ்ரீ சேக் கிழார் சுவாமிகளை யதிஷ்டித்து வெளிப்படுத்தினு ரென்பதே ஒருதலை. ஆதலின் இத்திருத்தொண்டர் புராணம் சிவவாக்கேன்றே பண்டையகாலந் தொட்டு வழங்கப்பட்டு வருகின்றது. திரு முறை களுள் ஒன்றாகவுஞ் சேர்க்கப்பட்டுள்ளது. இப்புராணத்தை வாசிக் குந்தோறும் வாசிக்குந்தோறும் எத்தகைய கன்மனமும் அனலிடைப் பட்ட மெழுகுபோல் அன்பினுற் கரைந்து கரைந்துருகி ஊன்,உயிர், உணர்வு, உள்ளம், ஆன்மவறிவு ஆகிய யாவும் அன்புமயமாய் விடுதல் பிரத்தியட்சாநுபவம்.அன்றியும், ஒருமுறை சொன்ன பொருணயம் மற்றொரு முறையில் அதைவிடச் சிறப்பாயொளிரும். மூன்றும் முறையில் இன்னும் அதிகமாய்ப் பிரகாசிக்கும். இவ்வாறே ஒவ் வொருமுறையும் அளவுக்கடங்காமல் வரம்பின்றிச் செல்லுதல் கண்கூடாம். இதன் திருவிருத்தங்கள், ௪௨௫௩.

ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் புராணம்.

மூவ ரோதுதிரு முறைக ளேழுதிரு
        வாத வூரர் முறை யொன்றிசைப்
பாவ ரைந்தமுறை யொன்று மூலர் மறை
        யொன்று பாசுரம தாதியாக்
கோவை செய்தமுறை யொன்று சேவையர்
        குலாதி நீதிமுறை யொன்றுடன்
பாவை பாகர்திரு வருள்சிறந்த முறை
        பன்னிரண் டெண வகுத்தபின்.

இவர் திருநட்சத்திரம் வைகாசியீ புனர்பூசம்.

சோ. சிவ அ.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராணச் செய்யுட்டிரட்டு.

திருச்சிற்றம்பலம்.

நடேசர் துதி.

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். (க)

ஊனடைந்த வுடம்பின் பிறவியே
தானடைந்த வுறுதியைச் சாருமால்
தேனடைந்த மலர்பொழிற் றில்லையுள்
மாநடஞ்செய் வரதர்பொற் றாடொழ. (உ

திருக்கூட்டப்புகழ்ச்சி.

மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
துதிசெயு நாயன்மார் தூய சொன்மலர்ப்
பொதிநல னுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை யுலகினில் விளங்கி வெல்கவே. (ங)

தடுத்தாட்கொண்ட புராணம்.

ஐந்துபேரறிவுங்கண்களேகொள்ள வளப்பருங்கரணங்கணான்கும் சிந்தையேயாகக்குணமொருமூன்றுந் திருந்துசாத்துவிதமேயாக, இந்துவாழ்சடையானாடுமானந்த வெல்லையிறனிப்பெருங்கூத்தின், வந்தபேரின்பவெள்ளத்துட்டிளைத்துமாறிலாமகிழ்ச்சியின்மலர்ந்தார். (ச)

பெருமையாற் றம்மை யொப்பார் பேணலா லெம்மைப் பெற்றார்
ஒருமையா லுலகை வெல்வா ரூனமே லொன்று மில்லார்

அருமையா நிலையி னின்று ரன்பினு லின்ப மார்வார்
இருமையுங் கடந்து நின்று ரிவரைநீ யடைவா யென்றுர். (௫)

தொல்லைமால் வரைபயந்த தூயாடன் றிருப்பாகன்
அல்லறீர்ந் துலகுய்ய மறையளித்த திருவாக்கால்
தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேனென்
றெல்லையில்வண் புகழாரை யெடுத்திசைப்பா மொழியென்றுன் (௬)

தில்லைவாழந்தணர் புராணம்.

ஆதியாய் நடுவுமாகி யளவிலா வளவுமாகிச்
சோதியா யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றிபோற்றி. (௭)

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி யருமறைச் சிரத்தின்மேலாம்
சிற்பர வியோமமாகுந் திருச்சிற்றம் பலத்துணின்று
பொற்புட னடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி. (௮)

கண்ணப்பநாயனர் புராணம்.

திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணு முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த வருட்டிரு நோக்க மெய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய வொளியி னீழற் பொருவிலன் புருவ மானுர். (௯)

முன்புதிருக் காளத்தி முதல்வனு ரருளுேக்கால்
இன்புறுவே தகத்திரும்பு பொன்னுனுற் போல்யாக்கை
தன்பரிசும் வினையிரண்டுஞ் சாருமல மூன்றுமற
அன்புபிழம் பாய்த்திரிவா ரவர்கருத்தி னளவினரோ. (௰)

அவனுடைய வடிவெல்லா நம்பக்க லன்பென்றும்
அவனுடைய வறிவெல்லா நமையறியு மறிவென்றும்
அவனுடைய செயலெல்லா நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலையிவ்வா றறிநீயென் றருள்செய்தார். (௧௧)

திருக்குறிப்புத்தொண்ட நாயனர் புராணம்.

எண்ணி லாகம மியம்பிய விறைவர்தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை யெனவுரைத் தருள
அண்ணலார் தமை யர்ச்சனை புரியவா தரித்தாள்
பெண்ணி னல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து. (கஉ)

சண்டேசுர நாயனர் புராணம்.

அண்டர்பிரானுந் தொண்டர்தமக் கதிபனாக்கி யனைத்துநாம்
உண்டகலமு முடுப்பனவுஞ் சூடுவனவு முனக்காகச்
சண்டீசனுமாம் பதந்தந்தோ மென்றங்கவர்பொற் றடிமுடிக்குத்
திண்டமதிசேர் சடைக்கொன்றை மாலைவாங்கிச் சூட்டினர். (கங)

திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்.

பொடியார்க்குந் திருமேனிப் புனிதர்க்குப் புவனங்கள்
முடிவாக்குந் துயர்நீங்க முன்னைவிட மமுதானல்
படியார்க்கு மறிவரிய பசுபதியார் தம்முடைய
அடியார்க்கு நஞ்சமுத மாவதுதா னற்புதமோ. (கச)

இருவினைப் பாசமு மலக்க லார்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்க ளேறிட
அருளுமெய் யஞ்செழுத் தரசை யிக்கடல்
ஒருகன்மே லேற்றிட லுரைக்க வேண்டுமோ. (கரு)

தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு சிந்தையு நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ் வாயு முடையார் புகுந்தனர் வீதியுள்ளே. (கசு)

கையுந் தலைமிசை புனையஞ் சலியன கண்ணும் பொழிமழை யொழியாதே, பெய்யுந் தகையன கரணங் களுமுட னுருகும் பரிவின பேறெய்து, மெய்யுந் தலைமிசை விழுமுன் பெழுதரு மின்றாழ் சடையொடு நின்றாடும், ஐயன் றிருநட மெதிர்கும் பிடுமவ ரார்வம் பெருகுத லளவின்றால். (கஎ)

திருஞான மாமுனிவ ரரசிருந்த பூந்துருத்திக்
கருகாக வெழுந்தருளி யெங்குற்ற ரப்பரென
உருகாநின் றும்மடியே னும்மடிக டாங்கிவரும்
பெருவாழ்வு வந்தெய்தப் பெற்றிங்குற் றேனென்றார். (கஅ).

பிள்ளையா ரதுகேளாப் பெருகுவிரை வுடனிழிந்தே
உள்ளமிகு பதைப்பெய்தி யுடையவரசினை வணங்க
வள்ளலார் வாகீச ரவர்வணங்கா முன்வணங்கத்
தெள்ளுமான் மறிக்கரத்தார் தொண்டரெலாந் தொழுதார்த்தார். (கக).

மண்முதலா முலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றே னெனப்புகன்று
நண்ணரிய சிவாநந்த ஞானவடி வேயாகி
அண்ணலார் சேவடிக்கீ ழாண்டவர சமர்ந்திருந்தார். (உ௰).

காரைக்கா லம்மையார் புராணம்.

இறவாத வின்பவன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டு மீண்டும் பிறப்புண்டே லும்மையென்றும்
மறவாமை வேண்டு மின்னும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி
அறவாநீ யாடும்போ தடியின் கீழிருக்கவென்றார். (உக)

நமிநந்தியடிகணாயனார் புராணம்.

நாட்டா ரறிய முன்னாளி னன்னா ளிறந்த வைம்படையின்
பூட்டார் மார்பிற் சிறியமறைப் புதல்வன் றன்னைப் புக்கொளியூர்த்
தாட்டா மரைநீர் மடுவின்கட் டனிமா முதலை வாய்நின்று
மீட்டார் கழலே நினைவாரை மீளா வழியின் மீட்பனவே. (உஉ).

திருஞானசம்பந்தசுவாமிகள் புராணம்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம். (உந).

அவம்பெருக்கும் புல்லறிவி னமண்முதலாம் பரசமயப்
பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்படநல் லூழிதொறும்

தவம்பெருக்குஞ் சண்பையிலே தாவில்சரா சரங்களெல்லாம்
சிவம்பெருக்கும் பிள்ளையார் திருவவதா ரஞ்செய்தார். (௨௪)

சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில். (௨௫)

தொழுவார்க்கே யருளுவது சிவபெருமா னெனத்தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மாலயனும்
இழிவாகுங் கருவிலங்கும் பறவையுமா யெய்தாமை
விழுவார்க ளஞ்செழுத்துந் துதித்துய்ந்த படிவிரித்தார். (௨௬)

வாழியர் தவமே கவுணியர் தனமே கலைஞானத்
தாழிய கடலே யதனிடை யமுதே யடியார்முன்
வாழிய வந்திம் மண்மிசை வானோர் தனிநாதன்
ஏழிசை மொழியா டன்றிரு வருள்பெற் றனையென்பார். (௨௭)

மறைவளர் திருவே வைதிக நிலையே வளர்ஞானப்
பொறையணி முகிலே புகலியர் புகலே பொருபொன்னித்
துறைபெரு மணியே சுருதியி னொளியே வெளியேவந்
திறையவ னுமையா ளுடனரு டரவெய் தினையென்பார். (௨௮)

புண்ணிய முதலே புனைமணி யரைநா ணொடுபோதும்
கண்ணிறை கதிரே கலைவளர் மதியே கவின்மேவும்
பண்ணியல் கதியே பருவம தொருமூ வருடத்தே
எண்ணிய பொருளாய் நின்றவ ருள்பெற் றனையென்பார். (௨௯)

கையதனு லொற்றறுத்துப் பாடுதலுங் கண்டருளிக் கருணைகூர்ந்த
செய்யசடை வானவர்தமஞ்செழுத்துமெழுதியசெம்பொற்றாளங்கள்
ஐயரவர் திருவருளா லெடுத்தபா டலுக்கிசைந்த வளவாலொற்ற
வையமெலா முய்யவரு மறைச்சிறுவர் கைத்தலத்து வந்தவன்றே.

ஞானத்தின் றிருவுருவை நான்மறையின் றனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலக்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தி னெழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள். (௩௧)

ஆலமே யமுதமாக வுண்டுவா னவர்க்களித்துக்
காலனை மார்க்கண்டற்காக் காய்ந்தனை யடியேற்கின்று
ஞாலநின் புகழேயாக வேண்டுநான் மறைகளேத்தும்
சீலமே யாலவாயிற் சிவபெரு மானேயென்றார். (௩௨)

காதலியைக் கைப்பற்றிக் கொண்டுவலஞ் செய்தருளித்
தீதகற்ற வந்தருளுந் திருஞான சம்பந்தர்
நாதனெழில் வளர்சோதி நண்ணியத னுட்புகுவார்
போதநிலை முடிந்தவழிப் புக்கொன்றி யுடனானார். (௩௩)

சாக்கியநாயனார் புராணம்.

செய்வினையுஞ் செய்வானு மதன்பயனுங் கொடுப்பானும்
மெய்வகையா னான்காகும் விதித்தபொரு ளெனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி யல்லவருக் கில்லையென
உய்வகையாற் பொருள்சிவனென் றருளாலே யுணர்ந்தறிந்தார். (௩௪)

எந்நிலையி னின்றாலு மெக்கோலங் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்றாண் மறவாமை பொருளென்றே
துன்னியவே டந்தன்னைத் துறவாதே தூயசிவம்
தன்னைமிகு மன்பினான் மறவாமை தலைநிற்பார். (௩௫)

காணாத வருவினுக்கு முருவினுக்குங் காரணமாய்
நீணாக மணிந்தார்க்கு நிகழ்குறியாஞ் சிவலிங்கம்
காணாது நேடியமா னான்முகனுங் காணநடுச்
சேணாருந் தழற்பிழம்பாய்த் தோன்றியது தெளிந்தாராய். (௩௬)

பத்தராய்ப்பணிவார் புராணம்.

நின்றாலு மிருந்தாலுங் கிடந்தாலு நடந்தாலும்
மென்றாலுந் துயின்றாலும் விழித்தாலு மிமைத்தாலும்
மன்றாடு மலர்ப்பாத மொருகாலு மறவாமைக்
குன்றாத வுணர்வுடையார் தொண்டராங் குணமிக்கார். (௩௭)

மாகேசுவரபூசை தோத்திரம்,

கொண்டுவந்து மனைப்புகுந்து குலாவுபாதம் விளக்கியே
மண்டுகாதலி னாதனத்திடை வைத்தருச்சனை செய்தபின்
உண்டிநாலு விதத்திலாறு சுவைத்திறத்தினி லொப்பிலா
அண்டர்நாயகர் தொண்டரிச்சையி லமுது செய்ய வளித்துளார்.

மண்ணினிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ணலாரடி யார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணினலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மையாமெனி னுலகர்முன் வருகென வுரைப்பார். (ருக)

அல்லார்கண்டத் தண்டர்பிரா னருளாற்பெற்ற படிக்காசு
பல்லாறியன்ற வளம்பெருகப் பரமனடியா ராஞர்கள்
எல்லாமெய்தி யுண்கவென விரண்டுபொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லாற்சாற்றிச்சோறிட்டார்துயர்கூர்வறுமைதொலைத்திட்டார்.

தனிவெள் விடைமே னெடுவிசும்பிற் றலைவர்பூத கணநாதர்
முனிவ ரமரர் விஞ்சையர்கண் முதலா யுள்ளோர் போற்றிசைப்ப
இனிய கறியுந் திருவமுது மமைத்தார் காண வெழுந்தருளிப்
பனிவெண் டிங்கண் முடிதுளங்கப் பரந்த கருணை நோக்களித்தார்.

தேடிய மாட நீடு செல்வமுந் தில்லை மன்றுள்
ஆடிய பெருமா னன்பர்க் காவன வாகு மென்று
நாடிய மனத்தி னோடு நாயன்மா ரணைந்த போது
கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவறக் கொடுத்து வந்தார். (சஉ)

வெள்ளானைச் சருக்கம்.

என்று மின்பம் பெருகு மியல்பினல்
ஒன்று காதலி னுள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம். (சரு)

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராணச்செய்யுட்டிரட்டு முற்றுப்பெற்றது.

சேக்கிழார் சுவாமிகள் துதி.

நூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கி னற்சொல வல்லபி ரானெங்கள்
பாக்கி யப்பய னுப்பதி குன்றைவாழ்
சேக்கி ழானடி சென்னி யிருத்துவாம்.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவாசக விஷய சூசனம்

அறுபது

(உருய வேதப்பிரமாணங்களுடன்).

சிவபுராணம்.

நமச்சிவாய வாஅழ்க. "நமச்சிவாய"—இது பஞ்சாக்ஷரமென்று சொல்லப்படும். இந்தப்பஞ்சாக்ஷரம் வேதத்தின் மத்தியிலுள்ளது. இதனை விரிக்கின் "த்ரயீ" என்று ஸ்மிருதியாதிகளில் படிக்கப்பட்டவேதமானது ருக், யஜுர், சாமம் எனமூன்று விதமாகப் பிரிந்து விளங்கும். இம்மூன்றனுள் நடுவேயுள்ளது யஜுர்வேதம். இந்த யஜுர்வேதம் நூற்றொரு சாகைகளாக விரிந்துகிடக்கின்றது. இவற்றுள் நடுச்சாகை ஐம்பத்தோராவது சாகையாகிய ஸ்ரீபோதாயன சாகை. இந்தச்சாகை ஏழுகாண்டங்களாக அமைந்துள்ளது. இதன் மத்தியிலுள்ள காண்டமே நாலாவது காண்டமாகிய சதருத்ரீயம். இதன் நடுவிலுள்ளது ஐந்தாவது பிரச்னம். அதில் "நமஃஸோமாயச ருத்ராயச" என்னும் அனுவாகத்தின் இருதயத்தில்," நமஃசிவாயச" என்னும் பஞ்சாக்ஷர மந்திரம் பிரகாசிக்கின்றது. இதனாலே இச்சிவமந்திரம் சகலவேத ஜீவரத்னமாயும், பரமபாவந கரமாயும், அதிக ரகசியமாயும், சர்வவேதாந்த சாரமாயுமுள்ளதோர் மந்திரமாகும். இதுவே நான்குவேதங்களின் மெய்ப்பொருளெனவும், சந்தியாகாலங்களிலோது மந்திரமெனவும், வேதசாரமாகிய சிவஞானப்பாலை யுண்டருளிய ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமானார் தாமருளிய திராவிடசூக்தியில் "வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது— நாதனாம நமச்சிவாயவே" எனவும், "செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்—கந்தியுண் மந்திர மஞ்செழுத் துமே" எனவும் விளக்கியருளினார். இதன் மகிமை அளவிறந்ததாதலின் வந்துழி வந்துழி விரிக்கப்படும். (க)

நாதன்றாள் வாழ்க. "நாதன்"—ஸ்ரீபஞ்சாக்ஷரத்தின் வாச்சியப் பொருளாயுள்ள சம்புவாகிய பரமேசுவரன். இந்தப் பரமேசுவரன் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தின் நடுவிலுள்ள சிம் என்ற சிவபீஜத்தை முகத்திலேற்று வகாரமாகிய அமிருதவாருண பீஜத்தைத் தம்மைப்பின்பற்றப் பெற்று அகிலவேதரகசியமாயும் அவற்றிற்கு ஜீவரத்நமாயும் நின்று சிவ: என்னும்நாமத்தால் பிரகாசிக்கின்றான். ருக்வேதம் இருபத்தொரு சாகைகளிலும், யஜுர்வேதம் நூற்றொரு சாகைகளிலும், சாமவேதம் ஆயிரஞ் சாகைகளிலும், அதர்வணவேதம் ஒன்பது சாகைகளிலும் இந்தச் சிவ என்ற சொல்லானது பேரணியாய் நின்று துரீயஸ்தானத்தை விளக்குதலானும், பரப்பிரமத்துக்கு இடுகுறிப் பெயராய் நிற்றலானும், மாண்டூக்கியோபநிடதம், நரசிம்மதாபனீயோபநிடதம், அதர்வசிரோபநிடதம் முதலிய எல்லா உபநிடதங்களும் இதனை அளவிலாது புகழ்கின்றன. நூல்களெல்லாவற்றிலும் வேதஞ்சிறந்தது. அதனுள் மகாமந்திரசமுதாயமாகிய சதருத்ரீயம் மிகச் சிறந்தது. அதனிடத்துள் ஸ்ரீபஞ்சாக்ஷரியும் அதனுள் சிவ என்னும் இரண்டக்ஷரமே மிகச்சிறந்தது. ஆகவே வேதபுருஷனுக்கு உருத்திரைகாதசனி கண்ணும், பஞ்சாக்ஷரம் கண்மணியும், சிவசப்தம் கட்பார்வையுமாயிருக்கின்றன. தேகத்தின் மத்தியிலுள்ள இருதயத்தில் ஆன்மா அணுரூபமாயிருந்து தேகமுழுமையும் இயக்குமாறுபோல் வேதத்தின் நடுவில் சிவசப்தம் இருந்து கொண்டு வேத முழுமையுஞ் சிவமணங்கந்திக்கச்செய்கின்றது. இக்காரணம் பற்றியே வேதவித்துக்கள் யாவரும் பதினான்கு வித்தைகளின் சாரமாயுள்ளதும், பாவங்களையெல்லாம் நசிக்கச்செய்வதும், பரப்பிரஹ்மவாசகமாயிருப்பதும் சிவநாமமே யென்று நுணித்தமதிகொண்டு கூறியுள்ளார்கள். தாயுமான சுவாமிகளும் "நூற்றெட்டாதி வேதமெடுத்தெடுத்துரைத்த விருத்திக்கேற்க-அமையுமிலக் கணவடிவா யதுவும்போதா தப்பாலுக் கப்பாலா யருட்கண் ணாகி" என்று கூறியருளினார். சண்டாளனாயிருப்பினும் சிவ என்னுஞ் சப்தத்தை யுச்சரிபானாயின் அவனோடு சம்பாஷணைசெய்—அவனோடு வாசஞ்செய்—அவனோடு கலந்து போசனஞ்செய்—எனப்பொருள்தரும் "அபிவாடஸ் சண்டாள: சிவஇதிவாசம் வதேத் தேநஸஹஸம் வதேத்—தேந ஸஹஸம் வஸேத்—தேந ஸஹபுஞ்ஜீத—" என்று முண்ட

கோபனிடதங்கூறிற்று. இந்தச் சுருதிப்பொருளேயே திராவிட மஹாபாஷ்யச் செல்வராகிய சிவஞானசுவாமிகள் "சிவனெனு மொழியைக் கொடியசண்டாளன் செப்பிடி னவனுடனுறைக—அவனொடு கலந்து பேசுக வவனோடருகிருந்துண்ணுக வென்னும்—உவமையிற் சுருதிப்பொருள்." என்று உரைத்தருளினார்கள். ஸ்ரீவாகீசப்பெருந்தகையாரும் "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங் கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகி லவர்கண்டீர் யாம்வணங்குங் கடவுளாரே." என்று அன்பாற்கரைந்து கனிந்துருகி யருளிச் செய்தார். இப்படிப்பட்ட அரிய பெரிய மகிமை வாய்ந்த சிவசப்தம் பாசமோசனத்துக்குப் பரமஹேதுவாயும், ஆரணத்துக்கு அன்னியமிலாச் சேமநிதியாயுமிருக்க, இதைக்கேட்கக் காது செவிடுபட்டும், சொல்லவாயூமையாயும்,உச்சரிப்பவரைக்காணக் கண்குருடுபெற்றும் வாழுந்தீயோருடைய செய்கை கொடிதுகொடிது! அறக்கொடிது!! இச்சிவநாமத்தின் சிறப்பினை "சிவசிவ வென்கிலர் தீவினை யாளர் - சிவசிவ வென்றிடத் தீவினை மாளும்-சிவசிவவென்றிடத் தேவருமாவர் - சிவசிவ வென்றிடச் சிவகதி தானே." எனத்திருமூலரும் திருவாய்மலர்ந்தருளினர். சிவசப்தத்துக்கு இச்சையுடையார் (அன்புடையார்) என்பதும் பொருளாதலின் சிவமே அன்பு, அன்பே சிவம் எனவும் உணரற்பாற்று. ஆதலின் சைவநெறியே அன்புநெறி.

இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் = அடியார்களது உளக்கமலத்தினின்றும் இமைப்பொழுதும் பிரியாது நிற்பவன் சம்புவாகிய சிவபெருமான். இந்தச்சம்புவையே இருதயகமலவாசியென்று வேதாந்தங்களெல்லாமெடுத்திசைக்கின்றன. உபநிடதச் சிரசுக்களுக்கெல்லாம் சிகையாகிய அதர்வசிகை "ஸர்வைச்வர்யஸ்ஸம்பந்நஸ் ஸர்வேச்வரஃ சம்பு ராகாச மத்யே த்யேயஃ=(சர்வஞ்ஞாதி கல்யாணகுணங்களாகிய) சர்வைசுவர்ய சம்பந்நரும், சர்வேசுவரரும், சம்புவாயுமுள்ளவரே இருதயாகாசமத்தியிலே தியானிக்கற்பாலர்" என்று பிரகாசப்படுத்தியது. இங்கே சம்புவென்றது சிவபெருமானுக்கேயுரிய அசாதாரண நாமம். சம்பு பத்தினியாகிய அம்மையாரைச் சாம்பவியென்றும், சம்புபக்தர்களாகிய சிவனடியார்களைச் சாம்பவர்களென்றும் அருணூல்கள் கூறுவதே போதுமான சான்றும். "சம்புஃசஃ பசுபதிஃ சிவஸ்ஸூலி மஹேஸ்வரஃ" என்று

அமரசிம்ஹமும் பசுபதிக்கே அந்நாமத்தைக் கூறிப்போந்தது. "சம்" எனப்படுஞ் சுகம் எவரிடமிருந்துண்டாமோ அவரே சம்புவாதலால் மெய்யடியார்களுக்கு நித்தியானுக்கிரகஞ்செய்து குன்றாச் சுகங்கொடுக்கும்ஸ்வதந்தரம் சிவத்தினிடத்தே இயல்பாயமைந்துள்ளதென்பது சமஸ்த சமுசயங்களையும் வேரறக்களைந்து தெளிபொருள் விளக்கும் வேதாந்தங்களின் முடிந்தகருத்தாம். ஆன்மாவினுடைய உள்ளமென்னும் இருதயமானது செந்தாமரை முகுளம்போன்ற அதோமுக வடிவானதும், ஐந்து துளைகளுடையதும். சரீரமத்தியத்துக்குச் சிறிது இடதுபுறத்தில் நிலைபெற்றுள்ளதும், இருபத்தாறு துறட்டெலும்புகளுக்குள் ஈசனாற் சேமித்து வைக்கப்பட்டதும் ஆகிய செங்கிறம்பொருந்திய மாமிசகண்டமாம். இதனுட்புறத்தி லுள்ள ஆகாசம் பூதாகாசம்போற் சடமாகாது சித்தேயாதலின் சிற்சத்திருபமாகிய சிதாகாசமாம். இந்தச் சிதாகாசமாகிய சிதம்பரத்தில் மின்னற்கொடிபோன்ற ஈசானராம் துரீயமூர்த்தி சதா எழுந்தருளியிருப்பர். "ஸதா ஜநாநாம் ஹ்ருதயே ஸந்நிவிஷ்ட: = என்றும் ஜனங்களுடைய இருதயத்தில் எழுந்தருளியிருப்பவர்" என்னும் சுவேதாசுவதரோப நிடத மந்திரத்தானுந் தெளிக. இந்த ஈசானர் சர்வகாரண பிரஹ்மசொரூபராதலானும், இவருக்குமேலொரு காரணமின்மையானும் அதர்வசிகோபநிடதமானது த்யாயீதே சானம் ப்ரத்யாயிதவ்யம்-ஈசானரைத்தியானிக்க, விசேஷமாகத்தியானிக்க" என்று இரட்டித்துக்கூறி வற்புறுத்தியது. இந்த இருதயாகாசமாகிய சிதம்பரத்தில் சிவபெருமானைத் தியானிப்பதையே தகரவித்தை அல்லது தகரோபாசனை என்று உபநிடதங்கள் கூறும். இந்தத் தகரவித்தை தைத்திரீயம், சாந்தோக்கியம், அதர்வசிகை, பிருஹதாரண்யம் முதலிய பல வுபநிடதங்களில் விரிவாகப் புகழப்பட்டிருக்கினும் அவற்றுள்பல பரமேசவரனுடைய சொரூபத்தைப் பொதுத்தன்மையானும், மற்றுஞ்சில சிறப்பான இடுகுறிகளானும் நிருபித்தன. ஆயின் கைவல்லியோபநிடதமோ அவற்றையெல்லாம் அநுவதித்துப் பொதுவாகவுஞ் சிறப்பாகவுங் கூறிய சொரூப தடஸ்த லட்சணங்கள் யாவையும் உமாகாந்தனிடத்தமைத்து தகரமென்னும் இருதயகமலத்தின்கண் தியானிக்கப்படும்பொருள் காளகண்டம், திரிநேத்திரம், சதுர்ப்புஜம் முதலிய சிறப்பிலக்கணங்களமைந்த பரம

சிவனேயென "ஹ்ருத்புண்டரீகம் விரஜம் விசுத்தம்......உமா ஸஹாயம் பரமேஸ்வரம் ப்ரபும்—த்ரிலோசனம் நீலகண்டம் ப்ர சாந்தம்" என்றற் றொடக்கத்தனவான வசனங்களால் உபாசகர் களுக்கு உண்மை நிறுவியது. சாக்ஷாத் பரமசிவம் சர்வவடிவங்களை யுங்கடந்துநின்ற நிஷ்களாதீத சிற்கனசொரூபமாயினும் ஆன்மாக்க ளுடைய தியானயோகசமாதியின்பொருட்டுத் தனதுதயாமூலத்தை வெளிப்படுத்தி இவ்வித தூரியபெரிய வடிவமாகச் சகளீகரித்து நிற்குமென்பது சர்வவேதாந்தங்களின் முடிந்ததுணிபாம். இந்தத் தகரோபாசனையையே தெய்வத்தன்மைத் திருவள்ளுவநாயனாரும் "மலர்மிசை யேகினான்மாணடி சேர்ந்தார்—நிலமிசை நீடுவாழ்வார்" என்று திருவாய்மலர்ந்தருளினார். சகல வித்தைகளிலும் தகரவித் தையே மிகச்சிறந்ததாதலின் ஆளுடைய பிள்ளையாரும் தமது திரு நெறித் தமிழ்வேதத்தில் தகரத்தையே முதலாக வெடுத்தனர்.

ஆகமமாகி. ஆகமம்=ஆப்தவாக்கியம். ஆ=ஞானம்,க=மோட் சம், ம=மலநாசம். எனவே ஆன்மாக்களுக்கு மலத்தை நாசஞ்செய்து ஞானத்தையுதிப்பித்து மோட்சத்தைத் தருதல் எனப்பொருள் படும். அன்றியும் ஆ=பாசம், க=பசு. ம=பதி எனப்பொருள்பட் டுத் தன்னைப்பழகினோர்க்குத் திரிபதார்த்த லட்சணத்தைஉணர்த்து வது எனவும் பொருள் கொள்ளப்படும். இவ்வாகமம் இரண்டுவிதமா யிருக்கும். வேதத்தையநுசரித்ததொன்று. அநுசரியாத தொன்று. வேதத்தை யநுசரித்தது அங்கீகாரமும் அநுசரியாதது வேதத்தில் அநதிகாரிகளாயிருக்கின்ற அப்பிராமணர்களுக்கு ஜீவனோபாயமாக வும்,அசுரவ்யாமோகனார்த்தமாகவுஞ்சொல்லப்பட்டதாதலால் அப்பிர மாணமாகும். வேதத்தை யநுசரித்த ஆகமங்கள் காமிகமுதல் வாது ளாந்தமான இருபத்தெட்டுச் சிவாகமங்கள். வேதத்தை யநுசரியாத ஆகமங்கள் வாமம், சோமம், லாகுளம்; பைரவம் முதலானவைகள். ஸ்மிருதி, புராணேதி காசங்களிற் கூறப்படும் ஆகமநிந்தை பிந்திய வைகளுக்கேயன்றிச்சிவபிரணீதமாயுள்ள சிவாகமங்களுக்கன்று. இந் தச் சிவாகமங்கள் ஒருக்காலும்ஒன்றானும் பாதிக்கப்படமாட்டா. ஆத லின், சர்வோத்தமமான பதிநூல்களென்றே யுணரற்பாற்று. யஜுர் வேதத்தைச் சார்ந்த அமிர்தநாதோப நிடதமும் "ஆகமங்களுக்கு விரோதமில்லாமல் யூகிப்பதே தர்க்கமாம்" என்னும் பொருள்பட

"ஆகமஸ்யா விரோதேந ஊவஹநம் தர்க்க உச்யதே" என்று சிவாகமங்களை எடுத்துப் பூஷித்தது. இன்னணம் தெளிவாகப் பூஷித்திருக்கவும் மேற்சொன்ன உபநிடதத்திலுள்ள ஆகமம் என்னுஞ் சொல்லுக்கு வேதம் என்னும் பொருந்தாப் பொருள்கொண்டு இடர்ப்பட்டனர் சிலர். இது பண்டையத் தீவினைப்பயனே. வேத வழியின்று பிரவர்த்தித்த சிவஞானிகள் தமதாசையடங்காமல் சிவாகமத் துறையிற்படிந்து இன்புற்றூர்களென உண்மை நூல்கள் பலவெழுந்து முழங்குகின்றன. நான்குமறைகளும், ஆறங்கங்களும், மற்றுமுள்ள கலைஞானங்களும் கற்றுணர்ந்த சனகாதி மஹரிஷிகள் சிவாகம ஞானத்தாலன்றோ மோகத்தைத் தவிர்த்து மனோலய மடைந்து சின்மாத்திர மயமானார்கள். ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியார் "வயர்துசிவாகம யோர்பேதம் நபச்யாமஃ வேதோபிசிவாகமஃ= யாம்வேத சிவாகமங்கட்குப் பேதங்காண்கின்றிலம், வேதமே சிவாகமம்" என்று கூறியருளினார். இக்கருத்தைப் பின்பற்றியே "வேத வாகமச் சென்னியில் விளைபொருளபேதம், பேதமாகிய பிணக்கறுத்த" என்று ஸ்ரீபரஞ்சோதி முனிவரும், "வேதாகமத் துணிபிரண்டில்லை யொன்றென்னவேவந்தகுருவே" என்று ஸ்ரீ தாயுமான சுவாமிகளும் உரைத்தருளினார்கள். அன்றியும், "வேதாந்தார்த்த மிதஜ்ஞானம் வேதஸாரமிதந்தந்த்ரம் - சித்தாந்தம் வேதஸாரத்வாத்=வேதத்தின் பொருள் இந்த ஞானம், வேதசாரமாயுள்ளது இந்தச்சித்தாந்தம், சித்தாந்தம் வேதசாரமா யிருத்தலினால்" என்று சிவாகமமுஞ் செப்பியது. வேதத்தின் ஞானகாண்டப் பொருளை விளக்கவெழுந்தசிவஞானகோசங்கள்இவைகளேயாதலின் இவற்றன் புருஷார்த்தங்கள் நான்கும் விரிந்து கிடக்கின்றன. இவைகளே வீடுபேற்றிற்கு முக்கியகருவிக ளென்பது மேதாவியர்துணிபு. சிவாகமங்களைத்தூஷித்துவேதங்களையே பிரமாணமாகக்கொள்வோர் கொள்கை பயனற்றதாம். (௪)

அன்னணிப்பான்=விரைவில் எழுந்தருளிவந்து அணுகி அனுக்கிரகிப்பவன். வேதம் போதவும் சிவாகமஞ்சிறப்பும், வேதம் பசுவும் சிவாகமம் அதன்பாலும், வேதம் கனியும் சிவாகமம் அதன்சாறும், வேதம் உடலும் சிவாகமம் அதன் உயிரும், வேதம் ஒருநதிக்குச் செல்லும் வழியும் சிவாகமம் அந்நதியிற்சென்று படியுந்துறையுமா

யிருத்தலால் வேதவழியில் நின்று ஆகமஞானத்தைக் கைக்கொண்டவர்களுக்குப் பரமேசுவரன் விரைவில் பேரருள் புரிவானென்பது இதனுல் தெரிக்கலுற்றது. வேதம் பொருள்பலபடத்தோன்றும் சூத்திரமும், சிவாகமம் அதனை யவ்வாறுக்கவொட்டாது தெளித்துரைக்கும் பாஷ்யமுமாயிருத்தலானும், வேதத்தினது ஞானபாகத்தில் சித்தாந்தமுடிபு அற்பமும், சிவாகமத்தின் ஞானபாகத்தில் சித்தாந்தமுடிபு அதிகமுமாய் விளங்குதலானும், சிவாகம ஞானமேசிவப்பிரசாதமடைவதற்கு யாவருக்கும் இன்றியமையாது வேண்டப்படும். சிவாகமம் வேண்டாமல் எத்தனை கோடிகாலம் வேதம்படித்தாலும் மயக்கந்தீராதென்பதுபிரஹ்மநிஷ்டாபரர் தீர்மானம். ஆகவே ஸ்ரீ தாயுமான சுவாமிகள் "ஆரணமார்க்கத் தாகமவாசி யற்புத மாய் நடந்தருளும்" எனவும், ஸ்ரீ உமாபதிசிவாசாரியர் "ஆதிமறை யோதியதன் பயனென்றமறியா,வேதியர்சொல் மெய்யென்று மேவாதே" எனவும் வற்புறுத்தியருளினார்கள். வேதாந்த சித்தாந்தமாகிய முடியையே" ஆகமம் விரித்துரைக்கின்றது. (ரு)

ஏகன்=சேதனுசேதனப் பிரபஞ்சங்களிரண்டினிலும் ஆகாயத்தைப்போல பரிபூரண வியாபகமாயுள்ள பதிப்பொருளொருவனே. "ஏகஸ்ததா ஸர்வ பூதாந்த ராத்மா=சர்வசிற்சடப் பிரபஞ்சங்களுக்கும் அந்தர் யாமியாகிய ஏகன்" என்று கடவல்லியுபநிடதமும், "ஏகோ ருத்ரோ நத்விதீயஃ=ஒருவனே உருத்திரன் இரண்டாவதாக ஒருவனிலன்" என்று அதர்வசிரோபநிடதமும் "தேவநாம் பதிரேகஃ=தேவர்களுக்குப் பதியாயுள்ள ஏகன்" என்று சாந்தோக்கியோப நிடதமும், "தமாதி மத்யாந்த விஹீனமேகம்=ஆதியந்தமில்லாதவனும் ஏகனும்" என்று கைவல்லியோபநிடதமும், "யயேகஸ்ஸ யேகோ ருத்ரஃ=எவன் ஏகன் அவன் ஏகனுனஉருத்திரன்" என்று அதர்வசிரோபநிடதமும், "ஏகோ தேவஸ்ஸர்வ பூதேஷுகூடஃ=ஒரே தேவன் எல்லாப் பூதங்களிலும் மறைந்தவன்" என்றுபிரஹ்மோபநிடதமும்,"ப்ரஹ்மைகம்த்வம்=ஏகமாகிய பிரஹ்மம்நீ" என்று அதர்வசிரோபநிடதமும்,"க்ஷரம் ப்ரதான மம்ருதாக்ஷரம் ஹரஃ - க்ஷராத் மாநா பீசதே தேவயேகஃ=க்ஷரம் - ஜடம், அக்ஷரம்-அமிருதம் (ஆன்மா), க்ஷராத்மாக்களை ஏகதேவனுகிய ஹரன்நடத்துகின்றான்" என்று சுவேதா சுவதரோபநிடதமுஞ்

சாற்றுகின்றன. இத்திறச் சுருதிப்பிரமாண வசனுதிகளால் சித்த சித்துப் பிரபஞ்சங்கள் யாவும் கலப்பினாலே தானேயாயிருப்பவன் சிவபிரானென்பதூஉம், அவனிடத்தே ஏகத்துவமுளதென்பதூஉம் பெறப்பட்டது. ஏகனென்னும் பெயர் சிவநாமங்களில் ஒன்றாயிருத்தல்பற்றி அதர்வசிரோப நிடதமானது "அதஅஸ்மா துச்யதே யேகஃ" என்றற்றொடக்கத்து மந்திரத்தில் "இனியெதனால் ஏக னெனப்படுவான், எல்லாவுலகங்களையுந் தன்னுள் ஒடுக்கிக்கொள்ளுகின்றான், எப்பொழுதுஞ் சிருஷ்டிக்கின்றான், சங்கரிக்கின்றான், காக்கின்றான் அதனாலேயே ஏகனெனப்படுகின்றான்" என்று கூறிப்போந்தது. சப்தம் அர்த்தம் (சொல், பொருள்) என்னும் இரு கூற்றுப் பிரபஞ்சங்களும் சிவனையே முழுமுதலாகக் கொண்டு நிலைபெறுகின்றமையானும்,அவனது சொரூபத்தைக்கொண்டே பிரகாசிக்கின்றமையானும் சிவமயம் என்னுஞ்சொல் வேதவேதாந்தங்களிலே கேட்கப்படுகின்றது. சனற்குமார சம்ஹிதையானது "ஸர்வம் சிவமயம் ப்ரோக்தம் ஜகதேதச் சராசரம் - ஏகயேவமஹாதேவஃ ஏகயேவேதிசஸ்ருதேஃ=சராசரமெனப்படும் இவ்வுலகமெல்லாம் சிவமயமெனச் சொல்லப்பட்டது, மகாதேவன் ஒருவனன்றோ, என்றசுருதிகளால் ஒருவனேயெனவும் உபதேசிக்கப்பட்டான்" என்று கூறிற்று. (சு)

அனேகன்=எண்ணிறந்தஅருட்கோலங்களுடையவன். "ஏகமவ்யக்த மநந்தரூபம்=வெளிப் படாதவனும், அனந்த ரூபனுமாயுள்ளவன் ஏகன்" என்று மகாநாராயணோபநிடதமும், "அசிந்த்யமவ்யக்த மநந்தரூபம் சிவம் = மனோவிருத்திக் கெட்டப்படாதவனும், அதிசூக்குமனும், அளவிறந்தரூபனும், சிவனும்" என்று கைவல்லியோபநிடதமும், ஏகம்ரூபம் பஹுதாயஃகரோதி=அவன் ஒருரூபத்தையே (பக்தர்கள் பாவனைகளுக்கேற்றவாறு) பலரூபமாகச்செய்வான்"என்று பிரஹ்மோபநிடதமும், "விஸ்வஸ்ய ஸ்ருஷ்டா ரமனேகரூபம்=விஸ்வத்தைச் சிருட்டித்தவன், அனேக ரூபங்கொள்பவன்" என்று மந்திரோபநிடதமுங் கூறுகின்றன. இந்த வசனங்களால் ஏகனென்று சொல்லப்பட்ட சிவபெருமானே பஞ்சகிருத்தியங்கள் செய்து பாலிக்கும் பொருட்டும், அன்பர்கள் உபாசித்து உய்யும்பொருட்டும் தனது சத்தி சாமர்த்தியத்தால் அனே

விறந்த அருட்கோலங்களை யெடுத்துக் கொள்வான் என்பது பெறப்பட்டது. வேதங்களிலுள்ள சிவநாமங்கள் யாவும் தன்னிடத்து நிரம்பப்பெற்றமையால் வேதசாரமென்னுஞ் சிவசஹஸ்ரநாமத்திலும் "ஓம்அநந்தாயநமஃ" என்னும் நாமம் சிவபிரானுக்குச் சொல்லப்பட்டுள்ளது. இவ்வுண்மையையே திராவிட உபநிடதமென்று துதிக்கப்பெற்ற சிவஞானசித்தியும் "நிறுத்திடும் நினைந்தமேனி நின்மலனருளினாலே" என்றும் "அருவமுமுருபாரூபமானது மன்றிநின்ற, வுருவமு மூன்றுஞ் சொன்ன வொருவனுக்குள்ளதாமே" என்றும் எடுத்திசைத்தது. (எ)

இறைவன்=ஜகஜ்ஜந்மாதி காரணனும் பிரபு. சர்வஞ்ஞத்துவம், சர்வகர்த்திருத்துவம், சர்வாநுக்கிரகம் ஆகிய இம்மூன்றிலக்கணங்களையும் ஒருவாராற் றருதலின்றித் தனக்கியல்பாக வுடையவனெவனோ அவனே சர்வவேதாந்தங்களிலும் இறைவனென்று கூறப்படுபவன். "எல்லாவற்றிற்கும்பிரபுஈசானன்.—எல்லாவாத்மாக்களுக்கும் புகலிடமும் நண்பனும் (அவனே)" என்னும் பொருள் விளங்க—ஸர்வஸ்ய பிரபு மீசானம்—ஸர்வஸ்யசரணம்ஸுஹ்ருத்" என்று சுவேதாசுவத ரோபநிடதஞ் செப்புகின்றது. ஈண்டு ஈசானன் என்னும் நாமம் சிவபெருமானுக்கே உரிய சிறப்புப்பெயராம். "ஈஸ்வரஸ் ஸர்வ ஈசானஃ சங்கரச் சந்திர சேகரஃ" என்னும் அமரசிம்ஹத்தாலு முணர்க. ஆதலாற்றான் "ஸப்தாதேவப்ரமிதஃ=சத்தத்தாலன்றோ அளவிடப்பட்டவன்" என்றசூத்திரத்தில் ஸ்ரீவேதவியாசமுனிவர் ஈசானன் என்றசொல்லை பிரஹ்மத்தின் பெயராக எடுத்து வழங்கினர். ஈசானன் = உபாதியில்லாத பரமைசுவரிய விசிஷ்டகுண முடையவன் என்பது பொருள். அன்றியும் அந்த சுவேதா சுவதரோப நிடதமே தமீஸ்வராணாம் பரமம்மஹேஸ்வரம் = ஈஸ்வரர்களுக்கெல்லாம் மேலான மகேசுவரன்" எனவும், "தந்தைவதாநாம் பரமஞ்சதைவதம்=தேவதைகளுக்கெல்லாம் சிறந்ததேவன்" எனவும், "பதிம் பதீநாம் பரமம்=பதிகளுக்கெல் பரமபதி" எனவும், "பரஸ்தாத் விதாமதேவம் புவனேச மீட்யம்= புகழத்தக்க புவனநாயகனும் அப்பாலுள்ள தேவனும் என அறிவோம்" எனவும், "ஸகாரணம் காரணாதி பாதிபஃ=அவனே காரணன்—காரணாதிபதிகளுக்கு (பிரமவிஷ்ணுருத்ரேந்திராதிகளுக்கு)

அதிபதி" எனவும் என்றுங்குன்றாச் சுதந்தரமுடைய சர்வாதிபதித்துவத்தைடம், இறைமையையும் சிவபெருமா னொருவனுக்கேகூறி அவனது பரமகாரண பரமேசுவர இணையிற்பெருமையினைத் தெற்றென விளக்கியது. தைத்திரீயோபநிடதமும் "ஈசஸ் ஸர்வஸ்ய ஜகதஃ பிரபுஃ=ஈசன் எல்லாவுலகங்களுக்கும் பிரபு" என்று அதே பொருளை விளக்கியது. (அ)

பிறப்பறுக்கும்பிஞ்ஞகன்=பிரவாகமுதியைப்போல்பின்பற்றி வாராநின்ற பிறவித்தளையைச் சேதிப்பவன் ஜடாதர மூர்த்தியாகிய சிவபெருமான். கிருத்திய கர்த்தாக்களாகிய பிரமன், விஷ்ணு, உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளும் புருஷார்த்தங்கள் நான்கனுள் அறம், பொருள் இன்பம் என்னும் மூன்றையே தரும் ஆற்றலுடையவர்க ளன்றி வீட்டையளிக்குஞ் சுதந்தரமுடையவரல்லர். சிவபெருமானொருவனே அம்மூன்றையுந்தந்து சர்வபாப நிவிர்த்தி செய்வதோடு சாசுவித சிவாநந்தாபி வியத்தியையும் அளிக்கும் பேராற்றல் இயல்பில் வகித்தவன். "யதாசர்மவதாகாசம் வேஷ்டயிஷ்யந்தி மாநவஃ—ததாசிவ! மவிஜ்ஞாய துக்கஸ்யாந்தோ பவிஷ்யதி:=என்று தோலைப்போல் ஆகாயத்தை மனிதர் போர்த்துக்கொள்வார், அன்றே சிவனையறியாமல் துயரத்துக்கு முடிவு உண்டாகும்" என்று சுவேதாசுவதரோப நிடதஞ் சாற்றுகின்றது. ஆகாயத்தைத் தோல்போல் போர்த்துக்கொள்பவருமில்லை, நின்மலனாகிய சிவனைவழிபடாது முத்தியடைபவருமில்லை யென்பது ஒரு தலை. இதனால் சிவபெருமானே முத்திநாதனெனவும், ஏனைய பிரமவிஷ்ணு உருத்திரர் முதலிய தேவர்கள் காலந்தோறும் மாறுபடுஞ் சுதந்தர மில்லாதவர்களாதலால் அத்தன்மையுடையா ரல்லரெனவும் சுருதிமுடியானது உபமான ஸாதிருசத்தால் நன்குவிளக்கியது. இக்கருத்தையே (மானுடன் விசும்பைத் தோல்போல் சுருட்டுதல் வல்லோனுயின்—ஈனமில் சிவனைக்காணு திடும்பைதீர் வீடுமெய்தும்) என்று திராவிடபாஷ்ய கர்த்தாவாகிய சிவஞானசுவாமிகள் காஞ்சிபுராணத்தில் விளக்கியுள்ளார். இதனாலன்றோ, யஜுர்வேதத்தைச் சார்ந்த கர்ப்போபநிடதமும் "யதியோந்யாம் ப்ரமுச்யேயம் ப்ரபத்யே பரமேஸ்வரம் - பர்க்கம் பசுபதிம் ருத்ரம் மஹாதேவம் ஜகத்குரும்=யோனியைவிட்டு வெளிவருவேனுயின் பரமேசுவர

னும், பர்க்கனும், பசுபதியும், ருத்ரனும், ஜகத்குருவுமான மகாதேவ னைச் சரணமடைவேன்" என்று பசுமரத்தாணி யறைந்தாற்போல் சிவபெருமானது மகிமையினை நாட்டியது. (க).

புறத்தார்க்குச்சேயோன்—காந்துவ்வாநுண் மகிழுங்கோன்= எப்படிப்பட்ட உயர்ந்த தேவர்களா யிருப்பினுந் தன்னை உள்ளன் போடு வழிபடாதவர்களுக்குத் தூரனென்பதூஉம், யாவராயிருப்பி னுந் தன்னை இடையறாக் கசிந்துருகும் மெய்யன்புகொண்டு வழிபடு வோர்க்கு எளியனென்பதூஉம் பெறப்பட்டது. இவ்வுண்மையை (சார்ந்தாரைக்காத்தல் தலைவர்கடன்) என்று சிவஞான போதச்செய் யுளும், (சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கலால் - நலமிலன்) என்று ஆளுடையபிள்ளையார் அருள்வாக்கும், (சார்ந்தார்க்கு இன்னமுத மாயினானே) என்று ஸ்ரீ வாகீசப்பெருந்தகையார் தேவாரமும், (பிழைக்கின்றார் பக்கம் பேணிநின்றானே) என்று திருமந்திரத்திரு முறையும் விளக்கின. கருணையே வடிவமாகக்கொண்ட மாதோர் பாகனான மகாதேவன் ஒருபெண்ணினுடைய முலையிலிருந்தும், குதிரைகட்டுதற்குக் கடாவிய ஆப்பிலிருந்தும், ஆட்டுப்பிழுக்கையி லிருந்தும், இன்னும்பல நிகிருஷ்ட ஸ்தானங்களிலிருந்தும் தம்மை மெய்யன்போடு வழிபட்ட அடியார்களது பூசையையேற்று அனுக் கிரகஞ் செய்தானெனின் அவனது பேரருளின்றிறத்தை வரை யறுக்க யார்தரம். (ஆட்பாலவர்க்கருளும் வண்ணமு மாதிமாண்புங் - கேட்பான்புகி லளவில்லை கிளக்கவேண்டா) என்றார் ஸ்ரீ ஞானசம் பந்தப்பெருமானார். இறக்குமளவுங் கொடுமைபுரிந்து இறக்கும் பொழுது சிவநாமத்தை யுச்சரித்தவர்கள் அடைந்த மேம்பாடு புரா ணங்களில் ஏராளமாய் விரிந்து கிடக்கின்றது. அல்லாமலும், (அடி யார்க் கெளியன்சிற் றம்பலவன்) என்னும் ஸ்ரீநடராசப்பெருமா னது திருவாக்கே சைவத்திருவாளரா யுள்ளார் யாவருக்கும் சிவ பெருமான் றிருவடிக்கண் மேன்மேலும் பத்திமையை உண்டுபண் ணச் சிறிதுந்தடையின்று. ஆதலாலன்றோ, ஸ்ரீ தாயுமானசுவாமிகள் (கண்ணுவாரேனுமுனைக் கைகுவியா ராயினந்த, மண்ணுவார் நட்பை மதியேன் பராபரமே) என்று கட்டளையிட்டருளினார்.

மாயப்பிறப்பறுக்த மன்னன்=மாயாமல சம்பந்தமாய் வாரா நின்ற வஞ்சனை, பொய் முதலியவற்றிற்கு இருப்பிடமான பிறவிப்

பிணியை யகற்றும் மகேசுவரன். "மாயாந்துப்ராக்ருதிம் வித்யாந் மாயிநந்து மஹேஸ்வரம்=மாயையைப் பிரகிருதி (காரணம்) என வும்-மகேசுவரனை மாயைக்கதிபதிஎனவும் உணர்க" என்று சுவேதா சுவேதரோபநிடதங் கூறுகின்றமையால், மாயையைத் தன்வசப் படுத்தியாளும் பேராற்றல் மகேசுவரனிடத்தில் இயல்பாயமைந்துள தென்பது பெறப்பட்டது. ஆதலின் அவனொருவனே மாயப்பிற விக்குப் பயந்து தன்னையடைந்த ஆன்மாக்களின் பிறப்பை அறுப்பா னென்பது மறைமுடியின் முடிந்தகருத்தாம். தைத்திரீய நாராய ணோபநிடதமும் "ய்: பரஸ் ஸமஹேஸ்வர:=எவர்மேலானவரோ அவர்மகேசுவர்" என்றுநாட்டியது. மகேசுவரனென்னும்பெயர் சிவ னுருக்கே உரிய ரூடிநாமம்-மகேசுவருடைய சத்தியை மகேசுவரி எனவும், மகேசுவருடைய அடியார்களைமாகேசுவரர்கள் எனவும் உல கக்கூறுவது நிதரிசனமாம். "சிவஸ்ஸூலி மஹேஸ்வர:" என்று அமரசிம்ஹமும் அப்பெயரைச் சிவனுருக்கே நிருபித்தது. அல்லது உம், ஈசுவரன், பரமேசுவரன், மகேசுவரன், சர்வேசுவரன் என்னும் நாமங்கள் ஏனையகடவுளருக்கு ஔபசாரிகமும் சிவபிரானொரு வருக்கே சொந்தமுமாம் என சர்வவித்தைகளும் ஆகாயமார்க்கத் தடித்த அந்தராதந்தரியாமென அறைகின்றன. என்னை! மஹான், பரமன்முதலிய அற்புதவிசேஷணங்கள் சிவநாமங்களுக்கே இயல்பா யமைந்துள்ளனவெனின், "மஹாவிஷ்ணு" என்னும் நாமம் ஸ்ரீமந் நாராயணனுக்குஞ் சொல்லப்பட்டுள்ளதே அதன்கருத்துயாதெனின், "கபிலஸ்து மஹாவிஷ்ணு:=கபிலன் மஹாவிஷ்ணு" என்று உபய வாதிகளாலும் வேறுபொருளுக்குப்பெயராக நிருபிக்கப்பட்டமை யால் அதுகூடாமை. ஆகவே, மஹான், பரமன் என்னும் நாமங்கள் சிவபெருமானுக்கேயுரிய பேராற்றல்வகித்தன. இஃதிங்ஙனமிருக்க சிவபெருமானே பிறவியை யொழிப்பான் என்பதற்கு "ஜ்ஞாத்வா சிவம்சாந்தி மத்யந்தமேதி=சிவத்தையடைந்து அத்தியந்த துக்க நிவர்த்தியை யடைகின்றான்" என்றும், "ஈசந்தம் ஜ்ஞாத்வா மம் ருதா பவந்தி=ஈசனையறிந்து மீளவிப்பிறவிகொடாத நித்தியமான பிரஹ்மானந்தாநுபவரூபமடைகிறான்" என்றும், "ஜ்ஞாத்வா தேவம் முச்யதே ஸர்வபாசை: = மகாதேவனையறிந்து சர்வபாசங்களி னின்று விடுபடுகின்றான்" என்று சுவேதாசுவதரோப நிடதமும்,

"ஜ்ஞாத்வாதம் ம்ருத்யுமத்யேதி நாந்ய: பந்தா விமுக்தயே=அவனை (உமாமகேசனை)யறிந்து மிருத்துவைத்தாண்டுவான் — வேறுவழி மோட்சத்துக்கு இல்லை" என்று கைவல்லியோபநிடதமுங் கூறிப் போந்தன. அன்றியும் "அபாமஸோமமம்ருதா அபூம=உமாதேவி யுடன் கூடிய சோமசுந்தரனைக்கண்டோம் அமிர்தர்களென்னும் சிவமயர்களானோம்" என்று அதர்வசிரோபநிடதமுஞ்செப்புதலால் பிரமவித்யாநாதனாகிய துரீயருத்திரனை அறிந்தவர்களுக்குப் பிறவிக் கடல் விலகுதலும், பாசக்ஷயமுண்டாகுதலும் சர்வவேதாந்தப் பிரதிபந்நமாம். (கக)

சிவனவன்=பிரமன், விஷ்ணு, சிவன் என்னும் மூவருக்கும் மேலானபரமசிவன். இந்தப்பரமசிவனே சகுண நிர்க்குண பாவனைகளைக்கடந்த பிராஹ்ம்மியபாவனையாலுணரப்படும்உமாசமேதசிவன். இப்பரம்பொருளை வேதம் பலவிடங்களிலும் திரிமூர்த்தியுத்திரணராயுள்ள நான்காவதான (சதுர்த்தம்) என்றுசாற்றுகின்றது. "ப்ரபஞ்சோபசமம் சாந்தம்சிவமத்வைதம் சதுர்த்த மந்யந்தே=பிரபஞ்சமொடுங்குமிடம், சாந்தன், சிவன், இரண்டற்றவன், நான்காவதுபொருள் என்று எண்ணுகிறார்கள்" என்றுநூற்றெட்டு உபநிடதங்களால் அடையப்படும் முத்தியுலகத்தை அதிதீவிர பரிபாகிக்கு எளிதிலடைவிக்கும் பெருநிதியென முக்திகோப நிடதத்தில் புகழ்ப்பெற்ற மாண்டூக்கியோபநிடதங் கூறுகின்றது. இதனையே "ஏகாத்ம ப்ரத்யயஸாரம் ப்ரபஞ்சோப சமம் சிவம் சாந்த மத்வைதம் சதுர்த்த மந்யந்தே=ஏகாத்மஞானசாரம் பிரபஞ்ச மொடுங்குமிடம்..." என்று நாரதபரிவிராஜகோபநிடதமும், "சாந்தம் சிவமத்வைதம் சதுர்த்தமந்யந்தே" என்று நரசிம்மதாபநியோபநிடதமும், "அத்வைதம்சதுர்த்தம் ப்ரஹ்மவிஷ்ணு ருத்ராதீதம்" என்று பஸ்மஜாபாலோப நிடதமும் வற்புறுத்தின. இதனால் வேதநாயகனாய் விளங்குபவர் நான்காவது பொருளாயுள்ள துரீய சிவன் என்பது தீர்மானிக்கப் பட்டது. ஈண்டு ஆரணமுடிகளிற் கூறிய சிவம் என்னுஞ்சொல் நேரேசிவபெருமானைக் குறிக்கவும் அந்தப் பதப்பிரயோகம் வருமிடந்தோறும் மங்களகரம் என்று மயங்கினர் சிலர். ஐயகோ! இதென்ன விபரீதவுணர்ச்சி. சிவன், கிருஷ்ணன் முதலியசொற்கள் பரமமங்களன், கரியன் என்னும் பொருளைத் தருவ

தாகக் கோசங்களிற்காணப்படினும் விசேஷமாய்ப் பரமசிவனும் திருமாலும் பொருளென அதேகோசங்கள் வேறிடத்தெடுத்தோதுவது பிரசித்தமாதலால் அந்நியாயத்தைப்பற்றி விசேஷப் பொருளினிடத்தே அவைகளை உபயோகித்தலே சிறப்பாம். அங்ஙனமில்வழி சிவன்தேவதை, கிருஷ்ணன் தேவதை என்பதாதி ஆன்றோர் வழக்கு அவலமாமன்றோ. சிவம் என்னும் நாமம் சிவபெருமானுக்கே போந்தமை (சிவனெனுநாமந் தனக்கேயுடைய செம்மேனியம்மான்) என்னும் ஸ்ரீவாகீசமூர்த்திகள் திராவிட சூக்தியால் கண்டு தெளிக. சிவசம்பந்தம் சைவமன்றோ. (கஉ)

என்சிந்தையுணின்றவதனால் = என்மனத்தின்கண் நிலையாக வீற்றிருத்தலினால். சாக்ஷாத்பரமேசுவரன் சர்வவியாபகமுடையவனாயிருப்பினும் மெய்யடியார்களது உள்ளக்கமலத்தில் தயிரின் நெய்போல் விளங்கியிருப்பன். ஒரு அரசன் ஒரில்லத்துக்கெழுந்தருளின் அவ்வில்லத்தைப் பலவாறு சுத்திசெய்து பலவிதங்களாலலங்கரிப்பது உலக வழக்கன்றோ. சாதாரணமான மன்னனுக்கே அத்துணைச்சிறப் பிருக்குமாயின் மன்னர்மன்னராகிய சிவபிரான் இருதயமாகிய குகையில் நிலையாக எழுந்தருளி யிருக்கவேண்டுமானால் அவ்விருதயம் எவ்வாறு நின்மலத்துவம் அடைந்திருக்கவேண்டுமென்பது சொல்லாமே யமையுமன்றோ. புரைதீர்ந்த சுத்தமாயிருக்க வேண்டுமென்னுங் கருத்துபற்றியே கைவல்லியோப நிடதமானது "வீதத் புண்டர்கம் விரஜம் விசுத்தம் விசிந்த்யமத்யே= ஹிருதயகமலத்தைத் தகளற்றதாகவும் சுத்தமாகவுங் கருதி அதன் நடுவே" என்று கூறியது. இவ்வுபநிடத மந்திரப்பொருளுக்கிசைந்தே அகத்தே அமர்ந்தபக்தி யுடையவராய் காமாதிபகைகளாறையும் அறுத்து ஐம்புலன்களையும் அடக்கிச் சிவஞானத்தையே பற்றுக்கோடாகக் கொண்ட அடியார்களது உள்ளக்கமலத்தைவிட்டு நீங்காது நிற்பவன் சிவபிரானென "அகனமர்ந்த வன்பினரா யறுபகைசெற் றைம்புலனு மடக்கிஞானப்-புகலுடையார் தம்முள்ளப் புண்டரிகத் துள்ளிருக்கும் புராணர் கோயில்." என்று உலகமெலாமுய்யவந்த நம்மறைச்சிறுவர் அருளினார். அன்றியும் உண்மையான வைராக்கியம்பெற்ற சித்தமுடையவர்களாயு மிருக்க வேண்டுமென்னுங் கருத்து தோன்ற "சங்கற்பசித்த ரவருள்ளக் கருத்திலுறை-

-சாக்ஷிநீ" என்றருளினர் ஸ்ரீ தாயுமான சுவாமிகள். இதனல் எல்லாம்வல்ல இறைவனுகிய சிவபெருமானைத் தியானயோக சமாதியின்கண்வைத்து சாக்ஷாத்கரிக்கும் மெய்யன்பர்களது உள்ளம் எஞ்ஞான்றுந் தூய்மையும் வைராக்கியமும் பெற்றிருக்கவேண்டுமென்பது அத்தியாவசியமாம். (௧௩)

அவனருளாலே அவன்றள் வணங்கி = அவனது திருவருளினலே அவனுடைய திருவடிகளை வணங்கி. ஈண்டு திருவருளென்றது சிவபெருமானுடைய திருவருட்பிரசாதம் - அதாவது மனோவிருத்திகளடங்கியபோது உண்டாகுந் திவ்வியதிருஷ்டி. கண்ணாடியை விளக்க விளக்க, முன்னே அப்பிரகாசமா யிருந்தவொளி பின்னர்பிரகாசமாய் விளங்கியதுபோல் அநாதியே ஆன்மாவிலே பிரிவறப்பொருந்திநின்றசிவம் சிவபாவனை கைவர கைவர அதிகமாய்ப் பிரகாசித்துத்தோன்றும். அங்ஙனந்தோன்றவே ஆன்மாவைப்பற்றியுள்ள ஆணவமலந் தேய்ந்தேய்ந்து பற்றறக்கழியும். கழியவே சிவபூரணப்பிரகாச முண்டாகும். அந்தப்பிரகாசமாகிய அருட்கண்ணாலே சிவபெருமானுடைய தாளைவணங்குதல் வேண்டும். "உளக்கண்ணுக்கல்லா தூன்கண்ணு லோருமதோ." என்றார் திருவெண்காட்டடிகள். "அவனருளே கண்ணகக் காண்பதல்லா - லிப்படியனிவ்வுருவ னிவ்வண்ணத்தனிவனிறைவ னென்றெழுதிக் காட்டொணதே." என்றார் திருத்தாண்டகவேந்தர். "சிந்திக்கச் சிந்திக்கத் தர்ப்பணத்தை விளக்க - வந்திடுமவ் வொளிபோல மருவியானுளத்தே வரவரவந் திடுவன்பின் மலமானதறுமே" என்றார் அருணந்தி சிவாசாரியர். இதனல் சூரியகிரணத்தின் உதவியைக் கொண்டு சூரியனைப் பார்ப்பதுபோல் சிவனருளை வாயிலாகக் கொண்டு சிவனை யுணரவேண்டுமென்பது ஒருதலை. "தத்துவமசி" என்னும் மகாவாக்கியத்தின் இரகசியார்த்தமும் இதுவேயாம். தத் = பரமாத்மாவாகிய சிவம் அல்லது பிரமத்துக்கும், துவம் = ஜீவாத்மாவாகிய உயிருக்கும், அசி = அருட்சத்தி வாயிலாக ஐக்கியம் என்பது பொருள். இறைவர் வாக்குமனதீத கோசரப்பொருளாதலின் அவரது உண்மைநிலையை அவரேயறிவிக்க நாம் அவரது திருவருளை முன்னிட்டு ஒருசிறிது அறியின் அறிவதல்லது நமதுபோதத்தால் அறியத் தக்கதல்ல வென்பது பேரருளாளர் தீர்வை. இவ்வுண்மை

யினையே "அணுவிலணுவாயும் பெரிதிற் பெரிதாயும் உள்ளசிவ பெருமான் இந்த ஜந்துவாகிய ஆன்மாவின் உள்ளக்குகையின் கண்ணே அமர்ந்துள்ளானெனவும் - கிரியையில்லாதவனும், மகிமை பொருந்தினவனுமான அவ்வீசனை ஆன்மாவானவன் அவனது அருட் பிரசாதத்தினலே சோகங்கள்தொலையக் காண்கின்றான் எனவும் பொருள்பட "அணோரணீயாந் மஹதோமஹீயாந்—ஆத்மாகுஹா யாம் நிஹிதோஸ்ய ஜந்தோஃ—நமக்ரதும் பஸ்யதி பீதஸோகே— தாதுஃ ப்ரஸாதாந் மஹிமாநமீசம்" என்று சுவேதாசுவதரோபநிடத மும், மகோபநிடதமும், கைவல்லியோபநிடதமுங் கூறுகின்றன. "அருணா லெவையும் பாரென்றான்—அத்தை, அறியாதே சுட்டி யென் னறிவாலே பார்த்தேன் - இருளான பொருள்கண்டதல்லால்" என்றார் தாயுமானவர். (கச)

எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான் = எம் பெருமானே எல்லாப்பிறவிகளிலும் பிறந்து மெலிந்தேன். இதனால் தமக்கொரு தலைவனைவேண்டப்படும் ஆன்மாக்கள் நல்வினை தீவினை யென்னும் இருவினைக்கிடாக நால்வகைத்தோற்றம் எழுவகைப் பிறப்பு எண்பத்துநான்கு நூறுயிர யோனிபேதங்களெய்தி மேலுங் கீழும் புக்குழன்று பிறந்திறக்கும் உண்மை சாதிக்கப்பட்டது. நால் வகைத்தோற்றங்களாவன:—அண்டசம், சுவேதசம், உற்பீசம், சரா யுசம் என்பவைகளாம். அவைகளுள் அண்டசம் - முட்டையிற் றோன்றுவன. சுவேதசம் - வேர்வையிலுங் கசிவிலுந்தோன்றுவன. உற்பீசம் - வித்து, வேர், கிழங்குமுதலியவைகளை மேற்பிளந்து தோன்றுவன. சராயுசம் - கருப்பையிற்றோன்றுவன. எழுவகைப் பிறப்புகளாவன:—தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பவைகளாம். கருப்பையில் தேவர்களும், மனிதர்களும், நாற்கால் விலங்குகளும் பிறக்கும். முட்டையில் பறவை களும், ஊர்வனவும், நீர்வாழ்வனவுந்தோன்றும். வேர்வையிலுங் கசி விலும் கிருமி, கீடம், பேன்முதலிய ஊர்வனவும், விட்டில் முதலிய சிறுபறவைகளும் ஜனிக்கும். வித்திலும் வேர், கொம்பு, கொடி கிழங்குகளிலும் புல், பூண்டு, தாவரங்களும் உதிக்கும். தேவர்கள் பதினொரு நூறுயிர யோனிபேதம். மனிதர்கள் ஒன்பது நூறுயிர யோனிபேதம். நாற்கால் விலங்குகள் பத்து நூறுயிரயோனிபேதம்.

பறவைகள் பத்து நூறுயிர யோனிபேதம், நீர்வாழ்வன பத்து நூறுயிரயோனிபேதம், ஊர்வன பதினைந்து நூறுயிரயோனிபேதம். தாவரங்கள் பத்தொன்பது நூறுயிரயோனிபேதம். ஆகத்தொகை எண்பத்து நான்கு நூறுயிரயோனி பேதமாகும்.

ஆத்மாவானது தானெடுத்த சரீரத்துக்கேற்ப மெய், வாய், கண் மூக்கு, செவி என்னும் பஞ்சேந்திரியங்களினாலும், சித்தத்தினாலும் அறியும் அறிவின் வகையினாலே ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர் என ஐவகைப்படும். இவற்றுள் பரிசமென்னும் ஓரறிவுயிராயுள்ளவைகள் புல், பூண்டு, செடி, மரம் முதலிவைகளாம். பரிசத்தோடு இரசம் என்னும் ஈரறிவுயிராயுள்ளவைகள் இப்பி சங்கு முதலியவைகளாம். பரிசம் இரசத்தோடு கந்தமென்னும் மூவறிவுயிராயுள்ளவைகள் கறையான், எறும்பு, முதலியவைகளாம். பரிசம், இரசம், கந்தத்தோடு ரூபம் என்னும் நான்கறிவுயிராயுள்ளவைகள் தும்பி, வண்டு முதலியவைகளாம். பரிசம், இரசம், கந்தம், ரூபத்தோடு சத்தம் என்னும் ஐயறிவுயிராயுள்ளவைகள் புள், விலங்கு, மக்கள், அசுரர், சுரர் முதலியவைகளாம். இவற்றுள் இறுதியிற்சொன்ன உயிர்களுக்கு ஐயறிவு ஒத்துளவேனும் மக்கட்குப் பகுத்தறியும் புத்தியும், சுராசுரருக்குப் புத்தியோடு சித்தியும், திரிமூர்த்திகட்குப் புத்தி சித்தியுடன் தங்களெல்லையில் சர்வஞ்ஞத்துவ முதலிய குணங்களும், கிருத்தியதாரதம்மியமும், பதவிபேதமும், ஒன்றுக்கொன்று மேலிட்டிருத்தல் பற்றியுண்டாந் தாரதம்மியமுமுள. இதனால் திரிமூர்த்திகளும் ஆத்மாக்களே.

ஆத்மாவானது பெண்ணுமல்ல, ஆணுமல்ல, அலியுமல்ல. எந்தெந்த சரீரத்தை யெடுக்குமோ அந்தந்த சரீரத்துடன்சேரும் என்னும் பொருடோன்ற "நைவஸ்திரீ நபுமாநேஷஃ நைவசாயம் நபும்சகஃ-யத்யச் சரீரமாதத்தே தேந தேந சயுஜ்யதே." என்று சுவேதா சுவதரோபநிடதங் கூறுகின்றது. இதனால் ஆத்மாவுக்கு தேவன், நரன், அசுரன், பசு, பட்சிமுதலிய பேதங்களும், ஆண், பெண், அலி என்னும் வேற்றுமைகளும், இளையவன், முதியவன், அந்தணன், அரசன்என்பதாதி வேறுபாடுகளும் எடுத்ததோர்சரீரோபாதிக் கேற்றபடி அமையுமேயன்றி இயல்பிலுள்ளது அல்லவென்பது துணியப்பட்டது. இதனால் யாவற்றிற்கும் கர்மமே காரணம்.

மேற்சொன்ன எண்பத்துநான்கு நூறாயிரயோனி பேதங்களுள் இதரயோனிகளெல்லாவற்றையும் போகத்தினாலும், பிராயச்சித்தாதிகளினாலும் நீக்கி மானுடப்பிறவியில் வரும்அருமைவிசாரித்துப்பார்க்கின் மிக்க விசாலமான சமுத்திரத்தைக் கையாலே நீந்திக் கரையேறினவன் காரியத்துக் கொக்கும். அங்ஙனம் மானுடப் பிறவியில் வந்து பிறந்தாலும் மலையிலும், வனத்திலும் குறவராகவும் இருளராகவும்பிறக்காமல் பிராஹ்மணாதி நான்குவருணத்தார் நிறைந்திருக்கும் தேசத்தில் பிறப்பது புண்ணியம். அதிலும் வேதாகம நெறி நில்லாத மிலேச்சதேசமொழிந்து புண்ணியநாட்டில் பிறப்பது மிகவும் புண்ணியம். அதிலும் ஈனகுலத்திற் பிறவாமல் கூன், குருடு செவிடு, பேடுமுதலியவை நீங்கி, ஞானமுங் கல்வியும் நயந்து, தானமுந் தவமுஞ் செய்யும் உத்தமசமயத்தில் பிறப்பது அதியுக்தமான புண்ணியம். அதிலும் பரசமயங்களிற் பிரவேசியாமல் சகல சமயாதீதமாகும் சித்தாந்த சைவ நன்னெறிபேணி சுத்தசிவத்தைப் பரதத்துவமாகவறிந்து துக்க நிவிர்த்தி செய்துகொள்ளுதல் உத்தமோத்தமமான அரியபுண்ணியமாம். இந்தப் புண்ணியத்தின் பயனைச் சொல்லப்புகின் சொல்லளவைக் கடங்காது.

இஃதிங்ஙனமாக, மேற்கூறிய பிறவிபேதங்களில் கல்லும் உயிரெனப்படலால், "கல்லாய் மனிதராய்ப்பேயாய்க் கணங்களாய்" என்றருளிச்செய்தபடியாம். ஈண்டு கல்லென்பது மலை. மலையானது வளர்வு, தேய்வு உடைமையானும், முன்னோர்காலத்துப் பறந்ததென்றமையானும், அகலிகை, கிரவுஞ்சன் முதலாயினோர் கல்லாய் அனேகநாள்கிடந்தமையானும், மலைத்தெய்வம்உண்மையானும், கல்லாதியமலையும் ஆருயிர் வர்க்கங்களி லொன்றாகும். கல் பாறையுமாம்.

ஓங்கார மாய்நின்ற மெய்யா = பிரணவவுருவாய் நின்றமெய்யனே. ஒருமுறை உச்சரித்தமாத்திரத்தில் உயர்ந்த கதியிற்கொண்டு போய் விடுத்தலால் பிரணவமானது ஓங்காரமென்று சொல்லப்பட்டது. ஓமித்யேதத்க்ஷர மாதௌ ப்ரயுக்தம் த்யானம் த்யாயிதவ்யம் = ஓமென்னும் பிரணவாட்சரமே ஆதியில் உபதேசிக்கப்பட்டது. அதுவே தியானம் அதுவே தியானிக்கத்தக்கது" என்று அதர்வசிரோபநிடதங் கூறிற்று. அன்றியும், "சர்வ தேவர்களுக்கும் சர்வவேதங்களுக்கும் இதுவே காரணஸ்தானம்" என்னும்

பொருள்பட "ஸர்வதேவவேதயோநிஃ" என்றுஞ் செப்பியது. சிவ தருமோத்தரமும் "ஓமென்னும் பதமதனில் வேதமாதி யுற்பவிக்கு மாலவித்தினுதிக்குமாபோல்" என்று இதனையே எடுத்தாண்டது. பிரணவத்தை எப்பொழுதும் சிவரூபமாகவே தியானிக்கவேண்டும். இது நான்கு அம்சங்களோடு கூடியது. நான்கு அம்சங்களும் நான்கு வேதங்களாம். முதல் அம்சம் அகாரம். இரண்டாம் அம்சம் உகாரம். மூன்றும் அம்சம் மகாரம். நான்காம் அம்சம் அர்த்த மாத்திரையாகிய மிக சூக்ஷ்மமான நாதரூபம். இவற்றுள் முதல்மூன்று அம்சங்களும் முறையே பிரமன், விஷ்ணு, சிவனைக்குறிக்க நான்காம் அம்சம் சிவபரஞ்சுடரைக் குறிக்கின்றது. சிவரூபமானது பிரம விஷ்ணுருத்ராதீத துரீயாகாரமாயும், சர்வ விதமான பொருட்பிரபஞ்சங்களுக்குங் காரணமாயும் நிற்றல்போல, அதற்குவாசகமாகிய சிவமந்திரமானபிரணவமும் நான்காய்நின்று சர்வ சொற் பிரபஞ்சங்களுக்கும் ஏதுவாய்ச் சிவத்துடனே அபேதத்தையடைகின்றது. அதனால் வாச்சியவாசக சம்பந்தமான சிவத்துக்கும் பிரணவத்துக்கும் பேதம் சிறிதுங்கிடையாது. சிவமேபிரணவம் பிரணவமேசிவம் என்பது சர்வவேதாந்தப் பிரதிபந்நமாம். இவ்வுண்மையைத் தைத்திரீய நாராயணோபநிடதமானது "ப்ரஹ்மாதிபதிர் ப்ரஹ்மணோதிபதிர் ப்ரஹ்மா சிவோமே அஸ்து ஸதாசிவோம்=வேதத்துக்கு நாயகன். பிரமனுக்கு அதிபதி, பிரமம், சிவம், எனக்குண்டாக, சதாசிவம், ஓம்" என்று நன்கு விளக்கியது.

அல்லதூஉம், அதர்வசிரோபநிடதமும் "ஸஓங்காரோயஓங்காரஃ" என்னும் மந்திரத்தில் வாசகமாகிய பிரணவத்தை ஓங்காரம், பிரணவம், சர்வவியாபி, அநந்தம், தாரம், சூக்ஷ்மம், சுக்லம், வைத்யுதம் என்னும் ஒன்பது பெயர்களானும் வாச்சியமாக சிவத்தை ஏகன், ஏகருத்ரன், ஈசானன், பகவான், மஹேசுவரன், மஹாதேவன் என்னும் ஆறுநாமங்களானும் ஒருசொற்றொடர்புகொண்டு முடிவு படுத்தியது. இதனாலே பிரணவத்துக்கும் சிவத்துக்கும் பொருளொற்றுமை அமைக்கப்பட்டிருப்பதோடு பிரணவமே பரமசிவநாமமென்பதும் நிரூபிக்கப்பட்டது. ஈண்டு குறிக்கப்பட்ட ஆறுநாமங்களும் சிவபிரானுக்கேயுரிய ரூடிநாமங்களாம். என்னை ! ஸ்ரீமந்நாராயணனுக்கே பகவான் என்னும் நாமம் சிறப்பாக உரியதென்று

விஷ்ணுபுராண முதலியவற்றுள் கூறியுள்ளதே அது பயனற்ற பதர்மொழியோ வெனின், அற்றன்று. வேதசம்ஹிதைகளில் பரமசிவனைத்தவிர வேறே எக்கடவுளரையும் பகுணத்தை யுடையவனென்று பொருள்கொள்ளும் பகவான் என்றசொல்லாற் சிறப்பிக்கவில்லை. பரமசிவனையோ "நமஸ்தே அஸ்துபகவ:-பகவ: பராசீநா முகாக்ருதி-அயம்மே அஸ்துபகவாந்-நமஸ்தே அஸ்துபகவந் விஸ்வேஸ்வராய - ஓம்நமோ பகவதே ருத்ராய=ஓபகவ! உன்னை வணங்குவாம். ஓபகவ! அப்புறம் நோக்கியவற்றை எமது பக்கம் திருப்பியருள்வாய். இப்பகவன் எமக்காகுக, ஓபகவ!! விசுவேசுவர!! உன்னைவணங்குவாம். ஓபகவ!! உருத்திர!! உன்னைவணங்குவாம்" என்பதாதி சுருதி, சுற்பசூத்திரங்கள் பன்முறையும் எடுத்துத் துதிக்கின்றன. ஹரதத்தாசாரிய சுவாமிகளும் ஓமஹேசுவர! பெரிய ஐசுவரியமுள்ளவர்க ளாயினும், பெரும்புகழ் பெற்றவர்களாயினும், வீரர்களாயினும், பூமியையாளும் அரசர்களாயினும், ஒவ்வொரு விஷயங்களிற் சிறந்தவர்களாயினும் பெரியோர் அவர்களைப் பகவான்களென்று வழங்குவதில்லை. மற்று ஞானவைராக்கிய சம்பந்நர்களையே அங்ஙனம் வழங்குகின்றார்கள் என்று ஆணைதந்திருக்கின்றமையாலும், "சங்கரோ பகவா னாந்யோ ரரக்ஷ சகல: ப்ரஜா:=பகவானும் ஆதித்யருமான சங்கரர் சகலபிரஜைகளையும் ரட்சித்தார்" என்று சரபோபநிடதமும், "ஸர்வ வ்யாபீச பகவாந் தஸ்மாத் ஸர்வ கதிச்சிவ:=எல்லாவற்றையும் வியாபித்தவன் பகவான் — ஆகையால் எங்கும் நிறைந்தவன் சிவனும்" என்று மந்திரோபநிடதமும் கூறுகின்றமையாலும் சிவபெருமானொருவருக்கே பகவான் என்னும்பெயர் ரூடியாக நிலைக்குமே யன்றி வேறொருவருக்கும் அப்பெயர் பொருந்தாது. ஆயின் ஏனையகடவுளரும், தேவர்களும், ரிஷிகளும் அப்பெயரால் அழைக்கப்படுவது என்னையெனின்! ஈசுவரசம்பந்தம் எய்திய காரணம்பற்றியேயன்றி வேறல்லவென்பது சுருதியின் இருதயமாம். சிவபெருமானைப் பகவன் என்று சுருதி முடிகள் துதிப்பனபோல் அவரது சக்தியாகிய அம்மையாரையும் பகவதி என்று துதித்து மகிழ்கின்றன. வேறுகடவுளரது சக்திகளுக்கோ அப்பெயர் எஞ்ஞான்றுங் கிடையாது. கடைப்பிடிக்க.

சிவபிரான் பகுகுண முடையவராதலால் பகேசனெனவும் பக வானெனவும் வேதங்களிலே சிறப்பிக்கப்பட்டார். பகம் (ஐசுவரியம், வீரியம், புகழ் திரு, ஞானம், வைராக்கியம்) என்னும் அறு வகைப்பெருமைகளை அவரது திவ்ய நாமங்களே தெளிவாய் விளக்கா நின்றன. ஈசுவரன்=ஐசுவரியத்தைக்குறிக்கும். உக்கிரன்=வீரியத்தை விளக்கும். சிவன்=பெரியபுகழை நாட்டும். ஸ்ரீமாந்-சந்திரசேகரன்=அழகைக்காட்டும். சர்வஞ்ஞன்=முற்றறிவைப் புகட்டும். காமரிபு-மஹர்ஷி=துறவு அல்லது வைராக்கியத்தைத் தெரிக்கும், அன்றியும் அவனது அற்புதச்செயல்களே பெருமையெனின்! நீலகண்டன்=விஷபக்ஷணத்தைவிளக்கும். விரூபாக்ஷன்=காமாதி சங்காரத்தைக்காட்டும். கபாலி=பிரமன் சிரங்கொய்ததைப் பேசும். பைரவன்=விஷ்ணுவின் ரக்தபிக்ஷைகொண்டமையை விளக்கும். கங்காளன்=திரிவிக்கிரமன் என்புதாங்கிய திருமேனியைத் தெரிக்கும். சரபன்=நரசிங்கன் கெர்வபங்கஞ் செய்தமையை நிலைநாட்டும். இன்னணங்கூறிய பற்பல சரித்திரங்களும் தக்ஷன்வேள்வி தகர்த்தல், திரிபுர சம்ஹாரஞ்செய்தல், பிரமன் விஷ்ணு அடிமுடிதேட அனற் பிழம்பாய் நிற்றல், இன்னோரன்ன பலவேறு திவ்விய சரித்திரங்களும் வேதங்களிலேயே படிக்கப்பட்டுள்ளன. வைதிகர்களாயுள்ளவர்களுக்கு அவைகளேஉடன்பாடு. மற்றைய வழிநூல்கள் அவற்றை ஒப்பினும் ஒப்பாவிடினும் யாதுங்குறைவில்லை. சுருதிக்கும் ஏனைய நூல்களுக்கும் விரோதமுண்டாயின் ஏனைய நூல்களைத்தள்ளி சுருதியையே கொள்ள வேண்டியதென்று மீமாம்ஸா சாஸ்திரம் விதித்துள்ளது. சுருதிவசனங்களைப் புராண வசனங்கள்கொண்டு வெல்ல முயல்வது அநுசிதமாம். இந்தச் சரித்திரங்களை அகாரண சிவத்துவேஷம் மேலிட்டு, நடுவுநிலைமை குன்றி, மதாவேசம் பூண்டு தூஷிப்பவர் பண்டைய தீவினைப்பயன் மலிந்த தீயோருந் தூர்த்தருமாவர். இன்னும் இவ்வோங்காரத்தின் விரிபொருளை ஐம்பத்தைந்தாவது விஷய சூசனத்திற்காண்க. எமது "ஓங்காரவிளக்கம்" என்னும் நூலும் அரியபெரிய இச்செயல்களை விரிவாயெடுத்துரைக்கும். அதில் பல அரிய விஷயங்களுண்டு. ஆங்குகாண்க. (கசு)

இயமானன்==எஜமானன் சிவபெருமானுடைய அஷ்டதநுக்களில் இறுதிக்கண்ணதாகிய ஆன்மாவுக்கு எஜமானன் அவ்வெம்

பெருமானொருவனே. அவனையன்றி பரமபதி வேறில்லையாதலால் "அத்மாநஃ பசுபதீ=ஆத்மாவில் பசுபதி" என்று ருக்வேதம் அவனையே புகழ்ந்தது. பாசசம்பந்தத்தினாலே பசுவென்னும் வியவகாரம் உண்மையில் பசு என்னுமிடத்துப் பசு பாசம் என்னும் இரண்டுங்கொள்ளக் கிடக்கின்றன. பசுவாகிய சித்துக்கும் பாசமாகிய அசித்துக்கும் நாயகராதலால் பசுபதியென்னும் நாமம் பிரமத்துக்காயிற்று. கிருஷ்ண யஜுர்வேதமானது "யேஷாமீசஃ பசுபதிஃ பசூநாம் சதுஷ்பதா முதச த்விபதாம்=நாற்கால்களும் இருகால்களுமுடைய பசுக்களுக்கும் ஈசராயுள்ளார் பசுபதியெனப்படுவார்." என்று கூறியது. அங்ஙனமே மந்திரோபநிடதமும் "யஈசே அஸ்ய த்விபதச் சதுஷ்பதஃ=எவன் இந்த இருகால்களுக்கும் நாற்கால்களுக்கும் நாயகன்" என்று செப்பியது. அன்றியும் "காதபதிம் மேதபதிம் ருத்ரம்=உருத்திரமூர்த்தி காதைகளுக்கதிபதி மேதைகளுக்கதிபதி." என்று ருக்வேதமும் புகழ்ந்தது. காதைகளுக்கதிபதி=உலகத்திலுள்ள சொல்மயப் பிரபஞ்சங்களுங்கெல்லாம் அதிபதி, மேதைகளுக்கதிபதி=மேதங்களெனப்படும் கன்மங்களுக்கெல்லாம் அதிபதி. இதனால் சர்வகர்மபலதாதா சிவபெருமானென்பதூஉம், ஒவ்வொரு கன்மத்துக்கும் அவரது கிருபையும் உத்தரவும் அவசியம் வேண்டுமென்பதூஉம் நிச்சயிக்கப்பட்டது. சிவபெருமானே பசுபதி யென்று விளக்குஞ்சுருதி வசனங்களிற் சிலவருமாறு'— "உமாபதயே பசுபதயே நமோநமஃ=உமாபதிக்கு பசுபதிக்கு அடிக்கடி நமஸ்காரம்" (தைத்திரீயோபநிடதம்). உமாபதிஃ பசுபதிஃ பிநாகீஹ்ய மிதத்யுதி=உமாபதியும் பசுபதியும் பினாகத்தையுடையவரும், அளவில்பிரகாசமுள்ளவரும்." (நரசிம்மதாபநியோபநிடதம்). "தஸ்மாத் ருத்ரஃ பசூநா மதிபதிஃ=ஆகையினாலே ருத்திரர் பசுக்களுக்கதிபதி." (ருக்வேதம்). "ஸர்வேஸ்வரஈசஃ பசுபதிஃ= சர்வேசுவரரும், ஈசரும், பசுபதியும்." (ஜாபாலோபநிடதம்.) "பரமேஸ்வரம் பர்க்கம் பசுபதிம் ருத்ரம்=பரமேசுவரரும், பர்க்கரும், பசுபதியும், ருத்ரரும்." (கர்ப்போபநிடதம்). "ஸர்வதேவாஃ பசுதாமவாபுஃ ஸ்வயம் தஸ்மாத் பசுபதி ஸம்பபூவ=இயற்கையினாலேயே ஸர்வ தேவர்களும், பசுக்களாவார் - ஈசர் தானாகவே பசுபதியெனச்சொல்லப்படுவார்." (சரபோபநிடதம்)"ஸ்வஸ்சிவபசு பதிஸ்

ஸாக்ஷீ சர்வஸ்ய சர்வதா=சிவபெருமான் தாமே பசுபதியாயும் சர்வத்துக்கும் சாக்ஷியாயு மிருக்கின்றார் (பாசுபதோபநிடதம்). அல்லாமலும் "அதிபதே மித்ரபதே=ஒ அதிபதி! ஒ மித்ரபதி!" என்று சாமவேதமும் அவரை அதிபதியென்று வழங்கியது. இந்திரனென்னுமிடத்து தேவேந்திரனென்றும், பாமையென்னுமிடத்து சத்தியபாமையென்றும் பொருள் கொள்வதுபோல நாம ஏகதேசத்தில் நாமக்கிரஹணமென்னும் நியாயத்தால் பதி என்னுஞ்சொல் பசுபதியாகிய சிவபெருமானையே பற்றுமென்பது வஜ்ஜிரதண்டநியாயமாம். அவரது பாசுபதாஸ்திரமே அஸ்திரதேவராம். (கஎ)

ஆக்குவாய் காப்பா யழிப்பா யருடருவாய்=ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளால் என்னும் பஞ்சகிருத்தியங்களைச் செய்பவனே. முதல் மூன்று கிருத்தியங்களையும் ஒருங்கு கூறி ஐந்தாவது கிருத்தியத்தையுஞ் சொன்னமையால் நான்காவது கிருத்தியமாகிய மறைத்தல் உபலக்ஷணையால் தழுவப்பட்டது. பஞ்சகிருத்தியங்களும் வேதபடித மென்பதும், திரிமூர்த்திகளில் ஒருவராகிய குண ருத்திரரல்லாது துரீய ருத்திரராகிய பரமசிவமே அப்பஞ்ச கிருத்தியங்களுக்கும் உரியாரென்பதும் போதர "பஞ்சக்ருத்ய நியந்தாரம் பஞ்சப்ரஹ்மாத்மகம் ப்ருஹத்=பஞ்ச கிருத்தியங்களை நியமனஞ் செய்பவரும் பஞ்சப்பிரஹ்ம சொரூபரும்" என்று பஞ்சப் பிரமோபநிடதமும், ஸர்வஜ்ஞ பஞ்சக்ருத்ய சம்பந்நஃ ஸர்வேஸ்வர ஈசாஃ பசுபதிஃ= சர்வஞ்ஞரும் பஞ்சகிருத்திய சம்பந்நரும், சர்வேசுவரரும் ஈசுரரும், பசுபதியும்" என்று ஜபாபாலோபநிடதமுந் தெளிவித்தன. இவ்வுண்மையினை உணராதார் பஞ்சகிருத்தியம் வேதத்திற் சொல்லவில்லையென்று மனம்போனவாறு கூறுவர். இந்தக் கிருத்தியங்களைந்தும் சிவபெருமானது சந்நிதியிலே நிகழ்வனவாம். ஆதலின் அவ்வெம்பெருமானைக் கேவலம் நிமித்தகாரணமெனல் சிந்தாந்த சைவநெறி உள்ளவாறுணராதார் கொள்கையாகும். "மன்னுசிவன் சந்நிதியின் மற்றுலகஞ் சேட்டித்த—தென்னு மறையி னியன் மறந்தாய்"என்னுஞ்சிவஞானபோதச் செய்யுளின் புதைப்பொருளை யுய்த்துணர்க - "பத்யு ரஸாமஞ்ஜஸ்யாத்=பதிசம்பந்தமாகிய சமயம் அஸாமஞ்ஜஸம்" என்று வேதாந்தசூத்திரத்திற் கண்டிக்கப்பட்

டுள்ளதே அச்சமயம் யாதெனின், அதுகேவலம் நிமித்தகாரணங் கூறுஞ் சைவமன்றி சமயாதீதமாம் வைதிகசைவமன்று. இவ்வைதிக சைவம் அதிசோபனமானதெனவும், குஹ்யாத்குஹ்யதமமெனவும், வேதசாரமெனவும், மோக்ஷார்த்தமெனவும் கூர்மபுராணங் கூறுகின்றது. இதுவே தக்ஷிணபாசுபதமாகிய உத்தரசைவமாம். நூற்றெட்டு உபநிஷத்துக்கோவையில் பாசுபதோபநிஷத்து என்னும் ஒருபநிஷத்து உண்மையால் அப்பாசுபதம் கேவலம் வைதிகமெனல் பொருத்தமாம். பாஞ்சராத்திரத்துக்கோ அவ்விதப் பெயருள்ள உபநிஷத்து ஒன்றுங் கிடையாது. ஆகவே அது அவைதிகமாம். அன்றியும் மேற்சொன்ன வேதாந்தசூத்திரத்திலேயே "உத்பத்யு ஸம்பவாத்" "நசகர்துஃகரணம்" என்னும் வாக்கியங்களில் சீவர்களுக்கு உற்பத்தியுண்டெனவும், கர்த்தாவும் கரணமும் ஒன்றெனவும் கூறுஞ் சங்க சக்கிராங்கித வைஷ்ணவபேதங்களுங் கண்டிக்கப் பட்டிருத்தல் பிரத்தியட்சமாம். வேதசம்பந்தமாகிய வைதிகசைவம் ஒன்றாலும் பாதிக்கப்படாது. இயல்பு என்றுந் திரியாமல் விளங்கிக் கொண்டிருக்கும். அதுவே வேதாந்த சித்தாந்தம். சமரசம். (கஅ)

அறம்பாவமென்னு மருங்கயிற்றாற்கட்டி=புண்ணிய பாவப்பயனென்னும் அரிய கயிற்றினாற்கட்டி. இதனால் பரமகருணாமூர்த்தியாகிய பரமேசுவரன் ஆணவவிருளில் அகப்பட்டுழலும் ஆன்மகோடிகளை ஆநந்தபரிதர்களாகச்செய்யத் திருவுளங்கொண்டு இருவினையென்னும் பாசக்கயிற்றினாற்கட்டி ஆட்டுவிக்கின்றானென்பதூஉம், அக்கட்டை அவிழ்க்கும்பேராற்றல் அவ்வமல பரமபதிக்கே இயல்பிலமைந்ததென்பதூஉம் பெறப்பட்டது. ஆகலின் எத்திறநற்பயனும் கோதனுகிய அம்புலியணிந்த பிரானருளாலன்றி ஆன்மாக்களுக்கு எக்காலத்தும் எவ்விடத்தும் அமையாதென்பது திண்ணம். "இருவினைப்பாசக்கயிற்றின்வழியாட்டுவிப்பானுமொருவனுண்டேதில்லையம்பலத்தே" என்றார் திருவெண்காட்டடிகள். இவ்விரண்டு வினைப் பயன்களை ஒவ்வொரு ஆன்மாவையும் எந்தத்தநுவினும் நீங்காதுபற்றிப் பின்றொடர்ந்து செல்லுமாதலால் "பற்றித்தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே"என்று மீளவும் அவரே வற்புறுத்தியருளினர். சவேதாசுவதரோபநிடதமும் "பராச்யாம்ச்ச சர்வாந் பரிணமயேத்யஃ=பழைய வினைகளையெல்லாம் பக்குவப்பட்ட பருவத்

துப் பரிணமிக்கும்படிச்செய்து அவைகளின்பயன்களையளிப்பான்." என்று கூறிப் போந்தது. அதனால் ஆன்மாக்களீட்டுஞ் சர்வகன்மங்களையும் அவரவர்களே ஏறுமலுங்குறையாமலும் புசிக்கும்படியூட்டி அவர்களுக்குச் சித்தசுத்தி பிறப்பித்து புலனொடுக்கி மனமடக்கித் தம்மையண்டித் தொண்டுபுரியும் புண்ணியப்பேறுவாய்த்த அவதாரத்து, "ஸர்வஸம்ஸாரபேஷஜம்=சர்வ சம்சாரப் பிணிக்கு மருந்தினர்" என்று தரிசனோபநிடதமும் "சிவயேவஸதாத்யேயஸ் ஸர்வஸம்ஸார மோசகஃ=சிவபெருமானொருவரே சதா தியானிக்கற்பாலர். சர்வ சம்சார பந்தங்களும் நிவிர்த்தியாகும்பொருட்டு" என்று சரபோபநிடதமும் அறைந்தபடி அவர்களது சம்சாரமென்னுங் கடுங்கானகத்தைக் கொளுத்துங் காட்டுத்தீயைப்போல் பிரகாசித்து நிற்பவன் கருணாநிதியாகிய எம் கண்ணுதற்பிரானென்பது வெளிப்பட்டது. அவனுக்கே வைத்தியநாதன் என்னும் நாமமுண்டு. (கக)

தத்துவனே=உண்மைப்பொருளே. எக்காலத்தும் அழியாமல் நித்தியப் பொருளாயுள்ளவர் மஹாதேவர் என்பது தோன்ற "தவம் பசுபதிஃ" என்று ஜாபாலோபநிடதஞ் செப்பியது. தத் என்னுஞ் சொல் பிரஹ்மத்தின் பெயராதலின் தத்துவம் என்ற சொல்லின் பொருள்பிரஹ்மத்துவம். அதாவது சுத்த பிரமத்தின் றன்மை என்று கொள்ளக்கிடக்கின்றது. ஓம், தத், ஸத் என்னும் இம்மூன்றும் பிரமத்தைக் குறிக்குஞ்சொற்களென ஸ்ரீ கிருஷ்ணர் உரைத்தருளினமையால், தத்துவஞானம், தத்துவோபதேசம் என்பதாதிப் பிரயோகங்கள் சிவஞானம், சிவோபதேசம் என்பவற்றையே பொருளாகக் கொண்டு விளங்குமாற்றல் பெற்றுள்ளன. சாக்ஷாத் சுத்தசிவம் தத்துவப் பொருளாயின் பிரகிருதியின் காரியங்களாகிய பிருதிவிமுதல் நாதமீறாகச் சொல்லப்பட்ட முப்பத்தாறையுந் தத்துவங்களென்று சுருதிகள் கூறியகாரணம் யாதெனின், பஞ்சபூத லயத்துடனே தேவர்களுக்கு நாசமுண்டாயிருக்கவும் மரரை அபேட்சித்து அமரரென்றுசொல்லப்பட்டாற்போலதாத்வீகமாகிய சரீராதிகளைப்போல் உடனே நாசமாகாது பிரளயபரியந்தம் நிலைத்துநிற்கையினால் தாத்வீகங்களைநோக்கி தத்துவங்களென்றுஅவைகள் உபசரிக்கப்பட்டன. அந்தத் தத்துவங்களையும் சுத்தசிவம் கடந்துநின்றமையால் தத்துவாதீதமென்று அதேசுருதிகள் வேறிடங்களில் அப்பரம்பொருளைப்

புகழாமலிருக்கவில்லை. உலோகாயதமுதல் ஐக்கியவாதசைவ மீறாகச் சொல்லப்பட்ட புறப்புறச்சமயங்களிலும், புறச்சமயங்களிலும், அகப்புறச் சமயங்களிலும் உள்ள தெய்வங்களும் பிறவும் பூதமுதல் அசுத்தமாயாதத்துவமீறாக ஒவ்வொருதத்துவங்களினும் நிலைபெறுகின்றன. சிவாகமங்களிற் கூறப்படும் சைவமென்னும் அகச்சமயத்து அறுவகைத்தெய்வங்களாய் நின்ற அதிகாரபோகலயசிவபேதங்கள் சுத்தவித்தைமுதலிய ஐந்துதத்துவங்களுள் ஒவ்வொன்றிலும் நிலைபெறுகின்றன. சகலசமயாதித மென்னுஞ் சித்தாந்தசைவத்தில் பிரபாதிக்கப்பட்ட தெய்வமாகிய சுத்தசிவமோ அந்தமுப்பத்தாறு தத்துவங்களை டுங்கடந்து எல்லாத்தெய்வங்களும் தம்மாணையின்வழிநிற்கப் பிரகாசிக்கின்றது. இதுவே மறைமுடிகளனைத்தும் ஒரேமுடிவாய் முரசடித்துக்கூறிய முடிபுரையாம். அதுபற்றியே திருவெண்காட்டடிகளும் "பூதமுங் கரணம் பொறிகளும் புலனும் பொருந்திய குணங்களோர் மூன்றும்-நாதமுங் கடந்த வெளியிலே நீயும் நானுமாய் நிர்குநா ளுளதோ" எனவும், ஸ்ரீ அருணகிரிநாதரும் "ஆறுறையும் நீத்ததன்மே னிலையைப்-பேரு வடியேன் பெறுமா றுளதோ" எனவுங்கூறி உண்மைநிறுவினர்கள். "ஸ்ரீ தாயுமானசுவாமிகளும்" "அயர்வறச்சென்னியில்வைத்த ராஜாங்கத்தில்-அமர்ந்தது வைதிக சைவ மழகிதந்தோ" என்று வீடுகாதலிப்பவர்கட்கு நன்னெறி புகட்டியருளினர். வேதாந்த சித்தாந்தமானது-வேதாந்தம் வேறு சித்தாந்தம் வேறு என்று கொள்ளத்தக்கதன்று. வேதாந்த சித்தாந்தமே பிரவாவிடேன்றான் ஓதாமல் வேதமுணர்ந்தோன்" என்றமையால் வேதாந்த சித்தாந்தமே வைதிகசைவம். அதுவே நன்னிலை. (உ௰)

மெய்யானர்=மெய்யாகிய சிவத்தை யடைந்தவர். அதாவது சிவத்வம் விளங்கப்பெற்றவர் (அறிவுருவானர்). சிவத்துவமாவது சார்ந்ததன் வண்ணமாம் இயல்பையுடைய ஆத்மா சிவத்தோடு ஐக்கியமுற்று நிற்குங்கால் சிவத்தினுடைய சர்வஞ்ஞாதி குணங்களெல்லாம் விளங்கப்பெற்று பரிபூரண சிதாகாசசிவத்தன்மையுற்று சிவானந்தாநுபவியாய் நிற்றல். இதனையே முண்டகோபநிடதமானது "ததா வித்வான் புண்யபாபே விதூய நிரஞ்சனஃ-பரமம் ஸாம்யமுபைதி=இத்திறமுள்ள முக்தன் புண்ணியபாவங்கள் தீர்ந்தவனாய் களங்கமற்றவனாய் சிவசாம்மியத்தை எய்துகின்றான்" என்றும்,

சுவேதாசுவதரோபநிடதமானது "தேதந்மயா அம்ருதா வைப பூவு:=அவர் பிரஹ்மமயராய் அமிர்தர்களானார்கள்" என்றுங் கூறிப் போந்தன. சர்வஞ்ஞத்வாதி குணங்களாவன:-சர்வஞ்ஞத்துவம் (முற்றறிவு). நித்திய திருப்தித்துவம் (வரம்பிலின்பமுடைமை). அநாதிபோதம் (ஆணவமலசம்பந்தமற்ற சுத்தஞானசொரூபம்). சுவதந்தரத்துவம் (தன்வயமுடைமை). அலுப்தசக்தித்வம் (பேரருளுடைமை). அனந்தசக்தித்துவம் (முடிவிலாற்றலுடைமை). இவ்வறு குணங்களே சிவசாம்யம் பெற்றவர்களுக்கு வெளிப்பட்டு விளங்காநிற்கும். இந்த அறுகுணங்களும் எண்குணங்களாக விரியுமாதலால் "தென்றிசைக்கோன் றானேவந்து கோவாடிக் குற்றேவல் செய்கென்றாலுங் குணமாகக்கொள்ளோ மெண்குணத்துளோமே" என்று கட்டளை யிட்டருளினார் திருத்தாண்டகவேந்தர். (உக)

சிவபுரத்தினுள்ளார்=சிவபுரத்தில் இன்புற்றிருப்பார். சிவபுரமாவது புனராவர்த்தியில்லாத பிரஹ்மலோகமென்னும் மஹாசிவலோகமாம். இது அண்டகடாகத்துள்ளிருக்குஞ் சத்தியலோகம், வைகுண்டம், கைலாசம் என்னும் ஊர்த்துவலோகங்களுக்கு அப்பாற்பட்ட சுத்தமாயாபுவனமாகிய அப்பிராகிருத மகாகைலாசம். இதுவே நிரதிசயானந்தவின்பம் அநுபவிக்குமிடம். ஓங்காரத்தின் இறுதியாயுள்ள நான்காவதான அர்த்தமாத்திரையின் பொருளாகிய ஸோமலோகமும் இதுவே. "யாவஸாநேஸ்ய சதுர்த்யர்த்த மாத்ரா ஸோமலோக ஓங்கார:=இதன் இறுதியில் நான்காவதான அர்த்தமாத்திரையுளது, அதுவே சோமலோகம் ஓங்காரம்" என்று அதர்வசிகோபநிடதங்கூறுகின்றது. சோமலோகமாவது உமாபதியின் லோகம். சோமன்=உமையோடு கூடியசிவன். அந்த உமாபதியே திரிமூர்த்திகளுக்குமேலான சச்சிதாநந்தப் பரம்பொருளெனவும், பிரணவத்தின் துரீயபாததேவதையெனவும், சர்வதேவர்களுக்கும் உபாஸ்யரெனவும், ஆரணமுடிகளறைந்தபடி பிரஹ்மநிஷ்டாபரர்களான மஹாசாம்பவர்களும் தமதனுபவத்தில் கண்டு கூறியுள்ளார்கள். திருநாவுக்கரசுசுவாமிகளும் திருவடித்திருத்தாண்டகத்தில் "அரைமாத்திரையி லடங்கும்மடி யகலமளகிற்பா ரில்லாவடி" என்று ஓங்காரத்தின் அர்த்தமாத்திரையின் பொருளாயுள்ளார் சிவபெருமானே என்றுவிளக்கியுள்ளார். என்னை! சிருஷ்டி, திதி, சம்ஹாரம் என்னும்

மூன்றுகிருத்தியங்களுக்கும் பிரமன், விஷ்ணு, உருத்திரன் கர்த்தாக்களென்று வேதங்கள் அறையாநிற்கவும் ஈண்டு உமாமஹேசன் ஒருவனே உலககாரணனெனவும், உபாஸ்யப்பொருளெனவும் எப்படி நிரூபிக்கப்படுமெனின், பிராகிருதமான முத்தொழில்களுக்குங் கர்த்தாக்களாய் முக்குணங்களால் அதிஷ்டிக்கப்பட்டிருக்கும் மும்மூர்த்திகளுக்குள்ளே உருத்திரன் ஒருவனே உலககாரணனென்று சொல்லின் அப்பொழுது அனேகேசுவரவாத முண்டாகு மாதலால் ஆட்சேபிக்கவிடமுண்டு. இங்கு முக்குணங்களையுங்கடந்த மும்மூர்த்திகளுக்குங்காரணமாய் ஸ்தூலசூக்ஷ்ம சுசூக்ஷ்மரூப மற்றதாய், சிதாநந்தரூபமாய், யோக விருத்தியினால் சகலசப்தங்களுக்கும் வாச்சியப்பொருளாய் இருக்கும் பரவஸ்துவைச் சொன்னமையால் ஆட்சேபனைக்குச் சிறிதும் இடமின்று. இவ்வஸ்துவைப் புராண வசனங்களைக்கொண்டு கண்டிக்க முயலுதல் வெறும் வாயை மெல்லுதலாம்.

கீர்த்தித்திருவகவல்.

தில்லை மூதூ ராடிய திருவடி=தில்லையாகிய பழைய திருப்பதியில் தாண்டவஞ் செய்தருளிய திருவடி. தாண்டவமாவது சிருஷ்டி, திதி, சம்ஹாரம், திரோபவம், அநுக்கிரஹம் என்னும் பஞ்சகிருத்திய நடனமாம். சத்துவம், ரஜசு, தமசுஎன்னும் முக்குணங்களையும் கடந்து நின்ற நின்மலசிவம் தியானயோக சமாதியினால் சாக்ஷாத்கரித்து நிற்கும் மெய்யடியார்களின் உள்ளக்கமலத்தை அனவரதமும் இருப்பிடமாக்கொண்டு உமாசகாயாதிலிங்கங்களுடன் எழுந்தளியிருப்பதுபோல், பிரமாண்டமாகிய இவ்வுலகத்திலும் தில்லையாகிய புண்டரீக வீட்டை ஆனந்தநிருத்தஞ் செய்யுந்தானமாகக்கொண்டு அருளேவடிவாகிய ஸ்ரீநடராஜ கோலத்தோடு எழுந்தருளியிருக்கும். இதனால் தாவரமாகிய அண்டமுஞ் சங்கமமாகிய பிண்டமுஞ் சமமெனல் உணரற்பாற்று. சாந்தோக்கிய உபநிடதத்தில் எட்டாவது பிரபாடகத்தில் பிரமபுரமாகிய இச்சரீரத்தில் உள்ள தகரமாகிய புண்டரீக வீட்டிலுள்ளே இருக்குங் ஆகாயத்தை நாடவேண்டியது." என்பது முதலாகத் தகரவித்தை கூறப்பட்டுள்ளது. ஈண்டு ஆகாசமென்றது "ஆகாசசரீரம் ப்ரஹ்ம=ஆகாசத்

தைச் சரீரமாகவுடையது பிரமம்." என்று தைத்திரீயோபநிடதங் கூறியபடி பிரஹ்மமாகிய சிவத்துக்குப் பெயராயிற்று. பிரமாண்டம் பிரமபுரமெனவும், இப்பிரமாண்டத்தி னுள்ளிருக்குந் தில்லைவனம் புண்டரீக வீடெனவும், இந்தத்தில்லை வனத்தில்நிருத்தஞ் செய்யுஞ் சிவம் பரையின் வடிவாய் விளங்கும் ஞானகாசத்தைச் சரீரமாகப் பெற்றதெனவும் அறியத்தக்கது. இந்தவாகாசம் பூதாகாசம்போற் சடமாகாது சிற்சத்திரூபமாய் விளங்கலால் சிதம்பரமெனப் பெயர் பெற்றிருக்கின்றது. இந்தச் சிதம்பரமும் எந்நாளும் நீக்கமின்றி அபேதமாய் விளக்குந்தன்மையால் தில்லையாகிய பழையபதியும் அப்பெயரால் விளக்கமுற்றுள்ளது. பிருதிவிமுதலனைத்தையும் தனதுருவாகக்கொண்ட விராட்புருஷனுக்கு இந்தத்திருப்பதி ஹ்ருத்பத்ம மத்தியக்ஷேத்திரமா யமைதலால் "சிதம்பரந்து ஹ்ருந்மத்யே" என்று தரிசனோபநிடதங் கூறிற்று. ஸ்ரீதாயுமான சுவாமிகளும் "களங்கமிலுருவந்தானே ககனமாய்ப் பொலியப் பூமி - வளர்ந்ததா ளென்ன உள்ளமன்றேன மறையொன் றின்றி" என்று சிதம்பரத்தையே இருதயத்தானமாக விளக்கியருளினர். "தானாடத் தன் தசையாடும்" என்னும் பழமொழிக்கிணங்கக் கருணாநிதியாகிய சிவபெருமான் சராசரப்பொருள்க ளனைத்தையும் இயக்குதலாகிய ஆனந்தநிருத்தனம் இந்தத் திவ்விய க்ஷேத்திரத்திலே செய்தருளுகின்றார். தகராமாகிய உள்ளக்கமலத்தின் கண் உபாசிக்கப்படும் பொருள் சிவபரமாத்மா வென்பதூஉம், அவரையவ்வாறு ஸ்ரீமந் நாராயணர் வழிபட்டுக் கொண்டிருக்கின்றாரென்பதூஉம், தஸ்யாஸ்ஸிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்திதஃ" என்று தைத்திரீயோபநிடதம் விதந்தபடி அண்டத்திலுள்ள சிதம்பரக்ஷேத்திரத்திலும் அந்நாராயணர் ஸ்ரீநடராஜப்பெருமானையே சேவித்துக் கொண்டிருக்கின்றாரென "வண்டுளப மணிமார்பன் புதல்வனொடும் மனைவியொடுங் குடிபுகுந்து வணங்கிப் போற்றும் - புண்டரிகபுரத்தினில் நாதாந்த யோனப் போதாந்த நடம்புரியும் புனிதவாழ்வே" என்று மீளவும் தாயுமானசுவாமிகள் வற்புறுத்தியருளினார்கள். "பையஞ்சுடர்விடு நாகப்பள்ளி கொள்வானுள்ளத்தானும்" என்றார் ஸ்ரீ வாகீசப்பெருந்தகையார். ஒருவன் ஒருவனங்கத்தென்றுமுளன்-

அந்தணன்—அந்தத்தையண்ணினவன்.-பிராஹ்மணன். தேவர்களில் உருத்திரன் பிராமணனும், விஷ்ணு க்ஷத்திரியனும், இந்திரன் சூத்திரனும், மற்றைத்தேவர்கள் சங்கரஜாதியாயு முள்ளார்களெனப் பொருள்பட "ப்ராஹ்மணோ பகவான்ருத்ர க்ஷத்ரியோ விஷ்ணு ருச்யதே - ப்ரஹ்மா வைஸ்ய இதிப்ரோக்தோ வ்ருஷலஸ்து புரந்தர: - ஸங்கராஸ் ஸர்வதேவாஸ்ஸ." என்று பராசரபுராணங்கூறிற்று. அம்பிகைபாகனான சிவபிரானார் சேதநாசேதனப் பிரபஞ்சங்களுக்கெல்லாம் பதியாயினும் விசேஷமாய் அந்தணர்க்குப் பதியாதலின் அந்தணரெனச் சிறப்பிக்கப்பட்டனர். அப்பிராமணன் (பிராமணனல்லாதவன்) பிராமணனுக்கு அதிபதியாக மாட்டான். ஆகவே பிரமன் என்ற பிராமணனுக்கும் பதி சிவனாதலால் ப்ரஹ்மாதிபதிர் ப்ரஹ்மணோதிபதிர்—வேதத்துக்கு அதிபதி, பிரமனுக்கு அதிபதி" என்று தைத்திரீய நாராயணோபநிடதஞ் சிவபிரானைப் புகழ்ந்தது. சாமவேதப் பிரபதப் பிராஹ்மணமும் த்வம்தேவேஷு-ப்ராஹ்மணோஸிஅஹம்மநுஷ்யேஷு-ப்ராஹ்மணோஹ்ப்ராஹ்மணமுபதாவதிஉபத்வா தவாவாமி த்வயா ப்ரஸூத இதம் காம கர்ஷ்யாமி—நீதேவர்களுள் பிராமணன் - நான்மனிதருள் (பிராமணன்) பிராமணன் பிராமணனையன்றோ வழிபடுவான். (ஆதலால்) உன்னையான் வழிபடுவேன்" என்று ஈசனுக்கே பிரம்மண்யங் கூறியது. மேலும் சுவேதாசுவதரோபநிடதமும் "விப்ரஸ்ய ப்ரஹத:—(பரமேசுவரன்) பெரிய பிராமணன்" என்று கூறி உண்மை நிறுவியது. சராசரப்பிரேரகனாகிய பரமசிவத்தின் திவ்விய நாமங்களிலொன்றாகிய "பர்க்கன்" என்னும் பெயரும் அளவில் பெருமைபெற்ற ஸ்ரீகாயத்திரி மஹாமந்திரத்தில் பிராஹ்மணத்துவ காரணமாய் நிற்றலின் அந்தணர்கள் யாவருக்குங் குலதேவதை அம்புலியணிந்த எம்பிரானே யென்பதுஆரணங்களின் முடிந்த கருத்தாம். ஆதலினன்றோ "அந்தணர்தஞ் சிந்தையானை" என்று திருநாவுக்கரசு சுவாமிகளும் திருவாய்மலர்ந்தருளினார்கள். இதனால் பிராமணர்கள் வேறு கடவுளரைப் பரமபதியாகவழிபடுதல்விசாரக்குறைவும் மதாபிமானமுமேயாம். என்னே! எனைய கடவுளரை ஒவ்வோர் கர்மங்களில்ஒவ்வோர் பயனைக்கருதி வழிபடவேண்டியது வேதசம்

மதமாயினும்பிறவிப்பிணிக்கு அச்சமுற்ற யாவரும் பரசிவசரணாகதி யேபரமதாரகமாகக் கொள்ளல்வேண்டும். முக்திதாதா அவனன்றோ.

சாந்திரனுகி=சாஸ்திரபோதகனுகி.சாஸ்திரமென்னுஞ் சொல் லைத் தாதுவின்படி பொருள்கூறின், சாஸ்=அருள்புரிவது, திர= காப்பது, அதாவது ஆத்தமாக்களை நறிய கட்டளைகளால் அருள்வயப் படுத்திக் காப்பது என்று பொருள்படும். வேதகர்த்திருத்துவம், வேதவேத்தியத்துவம், வேதஜ்ஞத்துவம் முதலிய எல்லாப்பெருமை களும் சிவபெருமானிடத்தே இயல்பாயமைந்துள்ளன. "வேதை ரநேகை ரஹமேவ வேத்யோ - வேதாந்த க்ருத் வேத விதேவ சாஹம் = வேதங்களெல்லாவற்ருலும் அறியற்பாலன் நானே - வேதங்களை வெளியிட்டவனும் நானே - வேதங்களை யறிந்தவனும் நானே" என்று கைவல்லியோபநிடதமும், "ஈசானஸ் ஸர்வ வித் யாநாம்=ஈசானன் சர்வவித்தைகளுக்கும் நாயகன்" என்று தைத்தி ரீயோபநிடதமும் நரசிம்மதாபநியோபநிடதமுங் கூறிப்போந்தன. முனிவர்கோமானுகிய வியாசமுனிவரும் "சாஸ்திர யோநித்வாத்= சாஸ்திரகாரணனுதலின்" என்னுஞ் சூத்திரத்தால் ஈசானனே சாஸ்திரங்களை வெளியிட்டவரென்று நன்கு நிரூபித்துள்ளார். சாஸ்திரம் நாதரூபமா யிருத்தலால் நாதரூபிணியாகிய உமாதேவி பங்கனே சாஸ்திரனெனச் சொல்லப்படுவான். பிரமவித்தையின் ஸ்வதந்தரதேவதை உமாதேவியே யென்பது கௌரி என்னும் நாமத்தால் விளங்கும். கோ=சத்தம் அல்லது ஒலி, கௌரி=நாதத் தின் அபிமான தேவதையாகிய உமாதேவி. அவரே பிரமவித்தியா தேவியெனச் சொல்லப்படுபவர். அந்தத் தேவியாரின் ஆண்மை பூண்டேதிருமாலானவர்அர்ஜுனனுக்குப் பிரமவித்தையென்னுங் கீதையை வெளியிட்டாரென்பது பிரமநிஷ்டாபரர் யாவரும் ஒப்ப முடிந்த துணிபாம். "யாஉமா ஸாமஹாவிஷ்ணு:=எவள் உமையே அவள் மகாவிஷ்ணு" என்னும் வேதவசனமே இவ்வுண்மையினை நிலைநிறுத்தும். அன்றியும் உமாதேவியினது புருஷாம்சம் பிரகிருதி ரூபமாகிய விஷ்ணுவென்று சர்வவேதவேதாந்தங்களும் நிச்சயித்துக் கூறுகின்றன. அப்பர் சுவாமிகளும் "அரியலாற் றேவியில்லை ஐயனை ஆறனூர்க்கே" என்று அருளிச்செய்தனர். திருமங்கை மன்ன னும் "பிறைதங்கு சடையானை வலத்தேவைத்துப் பிரமனைத் தன்

னுந்தியிலே தோற்றுவித்த" என்றருளிய பெரிய திருமொழியின்கண் தோற்றுவித்து என்னுஞ் சொல்லின் பொருளை உய்த்துணர்க. விஷ்ணுவைப் பெண்ணல்லவெனல் நுண்ணறிவின்மையாம்.

இஃதிங்ஙனமிருக்க, சுவேதா சுவதரோபநிடதமானது "எவன் பிரமதேவனை முதலில் சிருஷ்டித்தான் - எவன் அவனுக்கு வேதங்களையுபதேசித்தான்—அந்த ஆத்மபுத்திப்பிரகாசனான தேவனை மோட்சத்தை விரும்பி யான்சரணமடைகின்றேன்" என்னும் பொருள் விளங்க "யோப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் - யோவை வேதாம்ஸ்ச ப்ரஹிணோதி தஸ்மை - தம்ஹதேவ மாத்மபுத்தி ப்ரகாசம் - முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்யே" என்று கூறி சர்வான்மாக்களுக்கும் உய்யும்நல்வழி காட்டியது. அந்த வாய்மையையே உபப்ரஹ்மணமும் "ஈசானஸ் ஸர்வவித்யாநாம் ஸயேவாதி குருர்புதா: - தஸ்ய சிஷ்யோ மஹாவிஷ்ணு: ஸர்வஜ்ஞானமஹோததி:— ஈசானன் சர்வவித்தைகளுக்கும் ஆதி குரு - ஓ பண்டிதர்காள்! அவருக்குச் சீடராகிய மஹாவிஷ்ணு சர்வஞானக்கடலாம்" என்று நிரூபித்தது. ஸ்ரீதாயுமானசுவாமிகளும் "விஷ்ணு வடிவான ஞான குருவே" என்று கட்டளையிட்டருளினார். மேலும் சிவஞானசித்தியும், "ஆரண மாகமங்க ளருளினா லுருவுகொண்டு - காரண னருளானாகிற் கதிப்பவரில்லையாகும் - நாரணன் முதலாயுள்ள சுரர்நரர் நாகர்க்கெல்லாஞ் - சீரணி குருசந்தானச் செய்தியுஞ் சென்றிடாவே" என்று புகழ்ந்தமையால் உலகத்திலுள்ள ஒவ்வொரு சமயத்துக்கும் ஒவ்வொரு குருவுளரேனும் சமய நூல்களெல்லாவற்றினுந் தலைமையாகிய வேதாகமசாஸ்திரங்களைக் குருபரம்பரையின்கண் வைத்த சிவபெருமானொருவரே வைதிகஞானயோக ஆதிகுருவாம். அவரிடந்தோன்றிய பிராஹ்மணர்கள் வேறு பெயரால் அழைக்கப்படாது குருக்களென்னும் ரூடிப் பெயரால் அழைக்கப்படுவதே போதுமான சான்றாம். அவர்களே ஆதிசைவரெனவும், சிவத்விஜரெனவும், சிவவேதியரெனவும், சிவப்ப்ராஹ்மணரெனவுஞ் சொல்லப்படுவர். அவர்கள், ஏனையோர் போல் ஆச்சிரமமுதலிய காரணங்களாலன்றி ரூடியாற் குருக்கள் என்னுந் திருநாமத்தைப் பெற்றவராதலின் பொதுவகையால் யாவருக்கும், சிறப்புவகையால் சைவருக்கும் சிவபிரானைப் போலவே பிரதம ஆசிரியராவர். (௨௯)

அழகமர்திருவுரு-நீற்றுக்கோடி நிமிர்ந்து காட்டியும்-அழகமர்ந்த திருமேனியில் திருவெண்ணீற்றின் ரேகைகள் இடையிட்டுக்காட்டியும். திருவெண்ணீறாகிய பஸ்மம் ஆன்மாக்களின் தீவினைகளனைத்தையும் நீறுபடுத்தலால் நீறு எனவும், அழியாச்செல்வம் அருளலால் விபூதியெனவும், ஆன்மாக்கடோறுங்கலந்துள்ள மலமாசைக் கழுவுதலால் க்ஷாரமெனவும், அறியாமை யழியும்படிச்செய்து அநுபவ ஞானமாகிய சோதியைத்தருதலால் பசிதமெனவும், ஆன்மாக்களுக்குப் பூதம், பிரேதம், பிசாசம், பிரமராக்ஷசம், அபஸ்மாரம் முதலானவைகளாலுண்டாகுந் துன்பத்தை யொழித்து இரட்சிப்பருளலால் இரட்சை அல்லது காப்பு எனவும்பெயர்பெறுமென்று "பஞ்சபிர்நாமபிர்ப்ருச மைச்வர்ய காரணத்பூதிః" என்றற் றொடக்கத்து மந்திரங்களில் பிருஹஜ்ஜாபா லோபநிடதம் நன்கு விளக்கியுள்ளது. வேதங்கள் நான்கும் சிவபெருமானொருவரையே த்யேயப்பொருளாக அறுதியிட்டபடி திருவெண்ணீறாகிய பஸ்மத்தையும் ஞானச்சின்னமாகவும், சிறந்த தவவேடமாகவுங் கூறியுள்ளன. இந்தத்திருவெண்ணீறு வைதிகமென்பது மாலயன்முதலான கடவுளர்யாராலும் மறுக்கவொண்ணாத பரமசித்தாந்தமாம். இதனை உத்தூளனமாகவுந் திரிபுண்டரமாகவுந் தரித்தல்வேண்டும். திரிபுண்டரமாவது மூன்று ரேகைகளாகத் தரித்தல். இம்மூன்று ரேகைகளின் சொரூபங்களை உணருமிடத்து பதி, பசு, பாசமென்னுந் திரிபதார்த்தங்களையும், அகார உகார மகார மென்னும் வியஷ்டிப் பிரணவத்தையும், ரூபம் ரூபாரூபம் அரூபமென்னும் மூன்று வடிவங்களையும், சிருஷ்டி திதி சம்ஹாரமென்னும் முத்தொழில்களையும், இச்சாஞானக்கிரியையென்னும் முச்சத்திகளையும், மற்றுமுள்ளவைகளையும் உணர்த்துவனவாம். திரிபுண்டரத்தில் மேலாக விளங்கும் ரேகை சாமவேத சொரூபமாகவும், நடுவிலுள்ளரேகை யஜுர்வேத சொரூபமாகவும், அடியிலுள்ள ரேகை ருக்வேதசொரூபமாகவும் சொல்லப்படுகின்றன. இந்தத் திரிபுண்டரமாகிய மூன்றுரேகைகள் மும்மலம், முக்குற்றம், முக்குணம், முக்கரணம், முச்சரீரம், முக்காலம், முச்சுட்டு, முப்பிறவி, முப்பதவி, முத்தாபம், மூவினை, மூவுலகம், மூவிடம் இவைபோல்வன எல்லாச் சார்புகளையும் அறவேகெடுத்து ஞான் வெற்றி யுண்டாகும் வண்ணம் மேனிலையாய பெரும்பேற்றைத்

தெரிவிக்கும் மூன்றுரேகைகள்போல் நெற்றியில் நிமிர்ந்து விளங்கலால் நீற்றுக்கோடி நிமிர்ந்து காட்டியும் எனக் குறிப்பிக்கப்பட்டது. திருவெண்ணீறானது நெற்றியினிடத்து மூன்று ரேகைகள்போல் நிமிர்ந்து எஞ்ஞான்றும் பிரகாசிக்கும்படி சர்வாத்மாக்களுடைய நெற்றிகளும் நெடுமையாகப் படைக்கப்படாது திரிபுண்டரத்துக்கு இயையக் குறுக்காகச் சமைக்கப்பட் டிருத்தலே போதுமான நிதரிசனமாம். ஆதலினன்றோ தைத்திரீயோபநிடதமானது "ஸத்யாந்ந ப்ரமதித்வ்யம் - தர்மாந்ந ப்ரமதிதவ்யம் - குசலாந்ந ப்ரமதிதவ்யம் - பூதயைந ப்ரமதித்வ்யம் - ஸ்வாத்யாய ப்ரவசநாப்யாம்ந ப்ரமதிதவ்யம்—சத்தியத்தினின்றும் நழுவுதல் கூடாது. தர்மத்தினின்றும் நழுவுதல் கூடாது. தன்னைக் காப்பாற்றுங் காரியத்தினின்றும் நழுவுதல் கூடாது. பூதியணிதலினின்றும் நழுவுதல்கூடாது. வேதத்தை ஓதல், ஓதுவித்தல் இவைகளினின்றும் நழுவுதல் கூடாது" எனப்பலவிதிகளையும் விதித்து பஸ்மதாரணமும் யாவருக்கும் இன்றியமையாது வேண்டப்படுவதென்று ஸ்பஷ்டமாய்ப் புகழ்ந்து துதித்தது. ஈண்டு பூதியென்னும் பதத்துக்குத் திரவியம் என்று அர்த்தம்பண்ணி இடர்ப்பட்டனர் சிலர். "பூதியினைத் தான்கொடுத்தலாற்பூதி யென்னும்பேர்-ஓதுவர் வெண்ணீற்றினுக் கென்றோர்" என்னுந் தத்துவஞானியின் வாக்கை நோக்கித்துணர்க. இன்னும் இதன்விரிபொருளை ௫௪-வது விஷய சூசனத்திற் காண்க. எமது "விபூதி ருத்ராக்ஷ மஹத்வ விளக்கம்" என்னும் நூலினும் விரிவாய்க் கூறியுள்ளாம். ஆண்டு தெளிக. (௨௬)

பரம்பரத்துய்ப்பவன்=மிகவும் மேலான முத்தியுலகத்தில் வைப்பவன். ஈண்டு முத்தியுலகமென்றது துரீயபிரம சிவலோகமென்னுஞ் சோமலோகமாம். இதுவே விஷ்ணு பதத்தின் மேலாய சிவலோகமென்னும் பொருள்பட "விஷ்ணோ பரமம்பதம்" என்று தைத்திரீயோபநிடதங் கூறிற்று. அன்றியும் "ஞேயம் விஷ்ணு பதாதார்த்வம் திவ்யம் சிவபதம் ஜகத்=விஷ்ணு பதத்தின் மேலாயறியப்படுவது மகத்தாகிய திவ்விய சிவபதமாம்," என்று சிவதருமோத்தரமு முரைத்தது. என்னை! "விஷ்ணோ: பரமம்பதம்" என்னும் வசனத்துக்கு விஷ்ணுவினுடைய பரமபதமென்று பொருள் கொண்டால் குற்றமென்னையெனின், கூறுதும். அதர்வசிகோப

நிடதமானது "சர்வதேவாஸ் ஸம்விஸந்தீதி விஷ்ணு:=சர்வ தேவர்களும் ஒடுங்குமிடமாதலால் விஷ்ணு" என்று அவ்விஷ்ணு வின் பெயரைச் சிவபரமாக நிரூபித்தமையால் அண்டத்தில் உமா காந்தனுடைய சோமலோகமே பரமபதமாம். அதை யடைந்தவர் களே மீளப்பிறப்பதில்லை. அல்லதூஉம், கைவல்லியோபநிடத மானது "சாக்கிரம், சொற்பனம், சுழுத்தியென்னும் மூன்று ஸ்தானங்களினும் முறையே எது புஜிக்கத்தக்கதோ, எவன் புஜிக்கிறவனோ, எது போகமோ அவைகளுக்கு விலட் சணமாயும், சாட்சியாயும், சின்மாத்ரமாயுமுள்ள நான் சதா சிவன்" என்னும் பொருள்போதர "த்ரிஷு தா மஸு யத்போஜ் யம் - போக்தா போகச்ச யத்பவேத் - தேப்யோவிலக்ஷணஸ் ஸாக்ஷீ - சிந்மாத்ரோஹம் ஸதாசிவ:" எனவும், பிரமோபநிடத மானது பிரஹ்மம் நான்குபாத முடையதாய் விளங்குகின்றதெனவும், சாக்கிரத்தில் பிரமனும், சொற்பனத்தில் விஷ்ணுவும், சுழுத்தியில் உருத்திரனும், துரியத்தில் அழிவற்றதும், ஆதித்தியனும், விஷ்ணு வும், ஈசுவரனுமாயுள்ளதெனவும் பொருள்பட "தத்ர சதுஷ் பாதம் ப்ரஹ்ம விபாதி-ஜாக்ரதே ப்ரஹ்மா ஸ்வப்நே விஷ்ணு: - ஸு ஷுப்தௌ ருத்ர: துர்யமக்ஷர-மாதித்யோ விஷ்ணுஸ்சேஸ்வர ச்ச" எனவும் கூறிப்போந்தன. ஈண்டு பிரஹ்மோபநிடதத்திற் சொன்ன விஷ்ணுசப்தம் ஈசுவர சப்தத்துக்கு விசேஷணமாகக் கொள்ளப்பட்டுள்ளது. அப்படியேன் கொள்ளவேண்டும், விஷ்ணு வையே துரியமூர்த்தியாகக் கொள்ளலாகாதோவெனின்! அப்பொ ழுது சொற்பனஸ்தானத்திலுள்ள விஷ்ணுவுக்கும் துரியஸ்தானத்தி லுள்ள விஷ்ணுவுக்கும் பேதங்கூறவேண்டும். அங்ஙனங்கூறவோ வைணவமதம் இடந்தராது. இரண்டாவது ஸ்தானத்திலுள்ள விஷ்ணுமூர்த்தி மூன்றாவது ஸ்தானத்திலுள்ள உருத்திரமூர்த்தியிற் குறைந்தவரும்,நான்காவது ஸ்தானத்திலுள்ள துரியமூர்த்தி, மூன்றா வது, இரண்டாவது மூர்த்திகளைப் பார்க்கிலும் உயர்ந்தவராயு மிருக் கின்றமையால் தாழ்வு உயர்வுகளாகிய இருதன்மைகளை ஒரேமூர்த்தி யினிடஞ் சேர்த்தல் முற்றும் அசம்பாவிதம். ஆதலின் இரண் டாவது விஷ்ணுவேறு, நான்காவது விஷ்ணுவேறு என்பதே திண் ணம். இந்தச் சிந்தாந்தத்தை வைணவர்கள் ஒருபோதும் ஒப்பார்

கள். ஆகவே வைதிகவழி சார்ந்துய்யும் வைதிக சைவர்களுக்கே ஆரியத்துவம் நிலைபெறுயிருக்கின்றமையானும், பிரம விஷ்ணு ருத்திர பதங்களுக்குமேல் சிவபதம் ஒன்றுளதெனக் கொண்டமையானும், "ப்ராணம் மநஸி ஸஹகரணைஸ் ஸம் ப்ரதிஷ்டாப்ய த்யாதா ருத்ர:=பிராணன்களை இந்திரியங்களுடன் மனத்திற்சேர்த்து தியானிப்பவன் ருத்திரன்" என்று அதர்வசிகோபநிடதப் பிரமாணவாயிலாக ஸம்ஹார ருத்திரனை வேறு தேவர்களோடு சேர்த்து, அவன் எழுந்தருளியிருக்குங் கைலாயத்தையும் ஊர்த்துவலோகங்களில் ஒன்றாக ஒதுக்கினமையானும், ஈண்டு சோமலோகமென்றது பிரகிருதி வர்ஜ்ஜிதமான மஹாசிவலோகமாம். இதனையே கைவல்லியோபநிடதமும், முண்டகோபநிடதமும், கடவல்லியுபநிடதமும் "தேப்ரஹ்மலோகேஷு பராந்தகாலே பராம்ருதாத் பரிமுச்யந்தி ஸர்வே=அவர்கள் (ஞானயோகிகள்) மஹா சம்ஹார காலத்தில் பிரமலோகமென்னுஞ் சிவலோகத்திலிருந்தே பராமிர்தராய்ப் பரமுத்தியிற்றலைப்படுவர்" என்று புகழ்ந்தன. இன்னும் இப்பிரமலோகத்தின் பெருமையினை (உக), (சO) வது விஷயசூசனங்களில்விளக்கியுள்ளாம்-ஆண்டு கண்டுதெளிக. (உஎ)

அதிமூர்த்திகட் கருள்புரிந்தருளிய தேவதேவன்=முதன்மையான மும்மூர்த்திகட்குந் திருவருள் சுரந்தருளிய தேவதேவனாகிய மஹாதேவன். கிருத்திய கர்த்தர்களாகிய பிரமன், விஷ்ணு, சிவன் என்னுங் குணமூர்த்திகள் மூவரும் உமாசகாயரும், பரமேசுவரரும், திரிநேத்திரரும், நீலகண்டரும், சந்திரசேகரரும, பராநந்தத் தாண்டவருமான பரசிவப்பிரபுவின் திருவருள்பெற்றவரெனவும், இவர்கள் தங்கள் தங்கள் தொழில்களை நடாத்துதற்கு அவரே பரமகாரணரெனவும், அவரொருவரே ஏவுதற்கர்த்தா, இவர்களியற்றுதற்கர்த்தாக்களெனவும், அவர் சங்கற்பஞ் செய்யாதுழி இவர்கள்விசுவகாரியங்களை நடாத்த சக்தியற்றவர்களெனவும் இதனால் உணரற்பாற்று. ஆகவே வேதமானது மஹாதேவன் என்னுஞ்சிறப்பு நாமத்தைச் சிவனுக்கே சமர்ப்பித்தது. அதர்வசிரோபநிடதமானது "இனியெதனால் மஹாதேவனெனப் படுகின்றான்-எவன் எல்லாவற்றையும் ஒழித்துவிட்டு மகத்தாகிய பரமாத்தும ஞானயோக ஐசுவரியத்தின் பொருட்டுப் பூசிக்கப்படுகின்றான், அதனால் மஹா

மேதவன் எனப்படுகின்றான்." என்னும் பொருள் விளங்க "அத அஸ்மா துச்யதே மஹாதேவஃ-ஸர்வாந் பாவாந் பரித்யஜ்ய-ஆத்மஜ்ஞான யோகை ஸ்வர்யே மஹதி மஹீயதே தஸ்மாதுச்யதே மஹாதேவஃ" என்று கூறிற்று. இதர தேவர்களைப் பூசிப்பதால் அளவுள்ள ஆனந்தங் கைக்கூடுமென்றும், மஹாதேவரை வழிபடுவதால் அளவிலா ஆனந்தமாகிய பரமாத்தும ஞானயோக ஐசுவரியம் வந்து பொருந்துமென்றும், இந்தச்சுருதியால் வியக்தமாகியது. ஆதலின் வேதசிரசின் இரகசியக்கருத்தாவது வேறு தேவர்களைப் பூசிக்கும் பேதமையை யொழித்துவிட்டு மஹாதேவனொருவரையே சந்ததமும் பூசிக்கவேண்டுமென்பதாம். இவ்வுண்மையினை "வாது செய்துமயங்குமனத்தீரா ளயேது சொல்லுவீராகிலு மேழைகாள் - யாதோர் தேவரெனப் படுவார்க்கெலாம் மாதேவனலாற் றேவர்மற்றில்லையே" என்னுந் திருநாவுக்கரசுசுவாமிகள் திருவாக்கானும், "காண்பவன் சிவனேயாகு லவனடிக்கன்புசெய்கை-மாண்பற மான்றன்பாத மறந்துசெய் யறங்களெல்லாம்-வீண்செயல்" என்னுந் சிவஞானசித்திச் செய்யுளானுந் தெளிக. இருக்கு ஐயம் போக்கிய சைவசிகாமணியாகிய ஸ்ரீ ஞானசம்பந்தச் செல்வரும், "திருச்சிற்றம்பலமேய-செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே" என்று திருவாய் மலர்ந்தருளினார். "அவனன்றி மூவரா லாவதொன்றில்லை" என்று திருமூலத்தேவரும், "ஆராயும் வேளையிற் பிரமாதியாலுமையவொரு செயலுமில்லை" என்று தாயுமானவரும் அருளிச்செய்துள்ளார்கள். (உஅ)

கைலை=நித்தியமான மஹா கைலாசம்-இதுவே நிரதிசயாநந்த வின்பமநுபவிக்குமிடம். கைலாசமானது உத்தரகைலாசம், தக்ஷிண கைலாசம், ஊர்த்துவலோககைலாசம், மஹாகைலாசம் எனப்பல வகைப்படுதலின் காரியமூர்த்தியாகியஉருத்திருடை கைலாசத்துக்கும், துரீயமூர்த்தியாகிய மஹாசதாசிவருடைய மஹாகைலாசத்துக்கும் பேதம்பெரிதென உணரற்பாற்று. எக்காலத்தும் எவ்விடத்தும் வேறு எப்பொருளையு முணர்த்தாத பேராற்றல்வகித்த திரிலோசனன், நீலகண்டன், உமாபதி, விரூபாட்சன் என்றற் றொடக்கத்தனவான திவ்வியநாமதேயவைரவாணிகளறையப்பெற்ற துரீயசிவன் எழுந்தருளியிருக்கும் சாசுவித ஸ்தானமே இதுவாகும். இதனையே

திருவள்ளுவநாயனர் "வானோர்க் குயர்ந்த வுலகம்" எனவும் "வான னென்னும்வைப்பு" எனவும், "நிலமிசை" எனவுங் கூறியருளினர். அடியார்களையாட்கொள்ள அருட்டிருமேனி தாங்கிவரும் அம்பலி சூடிய வெம்பெருமான் அசலனாதலின் அவனெழுந்தருளியிருக்கு மிருப்பிடமும் அசலமாகவே மறைமுடிமுழக்கியது. சுவேதாசு வதரோபநிடதமும் கிரியின்மேலிருந்து உலகத்துக்குச் சுகமளிக்குங் காரணத்தால் சிவபெருமானைக் "கிரிசந்த" என்று துதித்தது. கிரி= மலை, சம்=சுகம், த=செய்பவன்-எனவே மலையினிடமிருந்து சுகமளிப்பவன் என்பது பொருள். பஸ்மஜாபா லோபநிடதமும் "கைலாஸ சிகராவாஸ மோங்கார ஸ்வரூபிணம்=கைலாச சிகரத் தில் வாசஞ்செய்பவரும், ஓங்காரஸ்வரூபரும்" என்று கைலாயத் தையும் அதன்கண்வசிப்பவருடைய இலக்கணத்தையும் புகழ்ந்து பேசியது. மலைத்தெய்வம் எம்முருகனும் பரசிவமுமே. (௨௧).

திருவண்டப்பகுதி

அண்டப் பகுதியினுண்டைப் பிறக்கம்—சிறியவாகப் பெரி யோன்=இல்லத்தில் நுழைகின்ற சூரியகிரணபத்திகளில் அள வற்ற அணுக்கூட்டங்கள் காணுமாறுபோல் அசித்துப் பிரபஞ்சத்தி னது எண்ணிறந்தகோடி அண்டங்கள் சிவபரமாத்துமாவின் முன் னர் அணுக்களாகத்தோன்றுமென்பது இதனல் வெளியாயிற்று. பல்லாயிரகோடியண்டங்களும் அணுக்களாகும்படி பெரிதானவரும், அணுக்களெல்லாம் அண்டங்களாகும்படி சிறிதானவரும், சிவபெரு மானொருவரே எனப்பொருள்கொண்டு தைத்திரீயோபநிடதமானது "அணோரணீயாந் மஹதோமஹீயாந்" என்று தொடங்கி அவரை "மஹாபுருஷம்" மஹிமாதி சப்தத்துடன் கூடிய ஈசசப்தத்தால் விளக்கி, "எவர்மேலானவரோ அவர் மகேசுரர்" என்று பொருள்பட யஃபரஸ்ஸமஹேஸ்வர:" என்று முடிவுபடுத்தி, அம்மகேசுரர் "ருதம் ஸத்யம் பரப்ரஹ்மம் புருஷம் க்ருஷ்ண பிங்களம்—ஊர்த்வரேதம் விரூபாக்ஷம் விஸ்வரூபாயவை நம:=மாறுபடாதமெய்யினரும், சத் தியரும், பரப்பிரமமும், புருஷரும், கிருஷ்ணபிங்களரும், ஊர்த்வ ரேதரும், விரூபாக்ஷரும், விசுவரூபருமாயுள்ளார்க்கு நமஸ்காரம்'"

என்று துதித்து சிவபரமாத்மாவினது தடஸ்தலட்சணத்தை விசதப் படுத்தியது. அன்றியும் அவ்வுபநிடதமே "அம்பிகாபதயே" உமா பதயே" "பசுபதயே" "ப்ரஹ்மாதிபதிர்" "ப்ரஹ்மணோதிபதிர்" என்றுகூறி சர்வபிராமணகுல தேவதையாகிய உமாகாந்தன் மகிமை யினை விளக்கிற்று. இவ்வுண்மையினை அறியும் புண்ணியமில்லா தார் பிரமனுடைய நெற்றியிலே தோன்றிய குணருத்திரனைத் துரீயமூர்த்தியாகிய சிவபெருமானென மயங்கி அவனே சேதன கோடிகளில் ஒருவனாகப் படிக்கப்பட்டானென்று வசைமொழி கூறி மாளாநிற்பர். ஐயகோ! இது வேதவியலறியாதார் கொள்கை யாம். அகத்தில்சத்துவமும் புறத்தில்தாமதமும் உபாதியாகப்பெற்ற சிவன் வேறு. அருட்பராசத்திசமேத சிவபிரான் வேறு என்பதே மறைமுடிகளின் முடிந்த தீர்வையாம். சிருஷ்டிகர்த்தாவாகிய பிர மனுக்கு உள்ளும் புறமும் தமசும், ஸ்திதி கர்த்தாவாகிய விஷ்ணு வுக்கு உள்ளும் புறமும் முறையே தமசும், சத்துவமும், சம்ஹார கர்த்தாவாகிய உருத்திரனுக்கு உள்ளும்புறமும் முறையே சத்துவ மும் தமசும் குணங்களாக உள்ளன வென்று ஸ்மிருதிபுராணேதி காசங்கள் யாவும் ஒருங்கெழுந்து கண்டோக்தியாய்க் கோஷிக்கின் றமையால், பகவத்கீதையில் "நிஸ்த்ரைகுண்யோ" என்று ஸ்ரீ கிருஷ்ணர் கூறியபொருள் குணமூர்த்திகளைக் கடந்த துரியசிவமே யாம்-அந்தச் சிவத்தையே ஈஸ்வரஸ் ஸர்வ பூதாநாம்" என்று மீண்டும் அவரே வற்புறுத்தியருளினர். அச் சிவபரம்பொருள் அண்டமோரணுவாம் பெருமைகொண்டு அணுவோரண்டமாஞ் சிறுமைகொண்டு விளங்குபவர். (௩௰)

ஒருவ னென்னு மொருவன் காண்க=ஒருவனென்னுஞ் செந் தமிழ்ப்பெருவழக்கு சிவபெருமானுக்கே கூறப்பட்டுள்ளது. பிருதி விமுதல் நாதமீறாகச் சொல்லப்பட்ட தத்துவ தாத்விக சமூகங்கள் யாவுஞ் சங்கரிக்கப்படும் மஹாபிரளயத்தில்அழியாதெஞ்சிநிற்பவன் சிவபெருமானொருவனே. ஆதலின் "ஈறிலாதவனீச னொருவனே" எனவும், "ஒருவனு யுலகேத்த நின்றநாளோ" எனவும் ஸ்ரீவாகீச மூர்த்திகள் திருவாய் மலர்ந்தருளினர்கள். மஹாசங்காரகாலத்தில் கிருத்திய கர்த்தாக்களாகிய விஷ்ணுவாதி தேவர்கள் தத்தமாற்ற லோடு நிலைபெற்றிருக்க மாட்டார்களோ வெனின், அப்பொழுது

மஹாப்பிரளயமென்பதில்லையாம். சங்காரகர்த்தா சிலவற்றையொழித்துஞ் சிலவற்றை நிறுத்தியுஞ் சங்கரிப்பானுமல்லன். சர்வ சங்கார காலத்தில் உருத்திரர்ஒருவர் தவிர இரண்டாவது வஸ்துவுக்கு இருப்பே கிடையாதென்றும், பிரமன், விஷ்ணு, சூரியன், அக்கினி, சந்திரன், நட்சத்திரங்களாகிய ஒரு பொருளும் இல்லையென்றும் பொருள்பட "ஏகயேவ ருத்ரோ நத்விதீயாய தஸ்தே-நப்ரஹ்மா நவிஷ்ணுர் நசூர்யோ நாக்னி சந்த்ர தாரகா:" என்று ஜாபாலோபநிடதங்கூறிற்று. ஈண்டு உருத்திரர் என்றது சர்வசங்கார மூர்த்தியாய்ச் சம்சார பந்தத்தைச் சேதிக்கும் பேராற்றல் வகித்த பிறப்பிலிப்பிரானே யன்றி காலருத்திரனல்ல. மறை முடியானது "ஒருவனே" என்று தேற்றியும் போதாது "இரண்டாவது இல்லை" என்றுங் கூறிய சொன்னயத்தையும் யூகித்தறிக. என்னை! மகோபநிடதமானது. "ஏகோஹவை நாராயண ஆஸீத்-நப்ரஹ்மா நேசாந:=நாராயணன் ஒருவனே யிருந்தான், பிரமனிருந்திலன், ஈசானன் இருந்திலன்" என்று கூறியதே அதன் கருத்து யாதெனின், இங்கு குறிக்கப்பட்ட பிரளயகாலத்து நாராயணனது இருப்பு ஸ்தூல சிருட்டிக்குப் பூர்வமுஞ் சூக்ஷ்ம சிருட்டிக்குப் பின்னுமென்றே அறியக்கிடக்கின்றது. ஏனெனின், இந்த வசனத்தில் நாராயணனும், பிரமனும், உருத்திரனும் பிரஸ்தாபிக்கப்பட்டார்களேயன்றி துரியசிவப்பிரஸ்தாபங்கிடையா. கற்பபேதங்களில் ஒரு கற்பத்தில் பிரம ருத்திரர்களை நோக்க நாராயணனுக்கு ஆதிக்யமுண்டென்பது யாவருக்குஞ் சம்மதம். "நப்ரஹ்மா நேசாந:" என்ற வாக்கியத்தோடு "நவிஷ்ணு:" என்று சேர்த்து சுருதி கூறியிருப்பின் நாராயணனுக்குத் துரியத்துவமும், ஒருவனென்னுஞ் சிறப்புப் பெயரும் நிலைபெறும். அங்ஙனமில்லையாதலின் பிரமன், ஈசன், இவர்களுக்கு மேலாகத் துதிக்கப்பட்ட நாராயணன் ஆகிய மூவர்களும் மஹாப்பிரளய காலத்தில் சங்கரிக்கப்படுவார்களென்பதே திண்ணம். இந்த மகோபநிடதமே வேறோரிடத்தில் "ப்ரஹ்மா விஷ்ணுச்ச ருத்ரச்ச ஸர்வேவா பூதஜாதய:-நாச மேவாநுதாவந்தி ஸலிலாநீவ பாடபம்= பிரம விஷ்ணு ருத்திரர்களும், எனையவெல்லா வுயிர்களும் பிறந்தழியும் இயல்பின-நெருப்பில் நீர்த்துளிபோல்" எனவும் "ஸசிவஸ்ஸ-ஹரிர்விதி:= அவனே சிவன், அவனே அரி,

அவனே பிரமன்" எனவுங் கூறிப்போந்தமையால் இம்மூவர்களுக்கும் மேலான துரீயசிவனே பிரளயகாலத்தில் சேடித்து நின்ற ஒருவனென்னும் பெயருக்குரியவனென்பது சுருதிமுடியின் இருதயமாயிற்று. அன்றியும் அதர்வசிரோபநிடதமும் "இனியெதனுலொருவனெனப் படுகின்றான்-எல்லாவுலகங்களையுந் தம்முள்ளொடுக்கிக் கொள்ளுகின்றான்-எப்பொழுதுஞ் சிருஷ்டிக்கின்றான்-சங்கரிக்கின்றான்-காக்கின்றான்-அதனாலே ஒருவனெனப் படுகின்றான்." என்னும் பொருளுண்டாக "அதஅஸ்மாதுச்யதயேகஃ" என்றதற்றொடக்கத்து வசனத்தில் நன்கு நிரூபித்துள்ளது. (௩க)

துவளைக் கண்ணி கூறன் = நீலமலர்போலுங் கண்களையுடைய உமாதேவியைக் கூறாக உடையவன். அகண்டகாா சச்சிதாநந்த ஸ்வயம்பிரகாசமாய்த் தன்னுண்மையில் நிற்கும் அநாதிமுத்த சித்துருவாகிய பரமசிவம், மாயையில் ஸ்வரூபசத்தாய் அடங்கியுள்ள பசுபாசங்களை நாமரூப வேறுபாடுகளுக்குரிய ஸ்தூலரூபத்தோடு வெளிப்படுத்து முகத்தால், தமது அருட்சத்தியை முதலில் தோற்றுவித்து, இச்சாஞானக்கிரியா சொரூபராய், பரமகருணையத் திருமேனிதாங்கி, இந்திரதனுசுபோல், நீலமும் பொன்மையும் பெற்று, அர்த்தநாரீசுவர வடிவமாய்ச் சோமலோகத்தில் எழுந்தருளியிருப்பர். இவ்வடிவே பரப்பிரமத்துக்குத் துரீய பெரிய வடிவமாகும். இந்தப் பெரிய வடிவத்தையே சகல அநர்த்தங்களையு மொழித்துச் சகல நற்பயன்களையும் கைகூடச்செய்யுஞ் சிந்தாமணியை நிகர்த்த பொய்யா மொழியாகிய வேதங்கள் "அம்பிகாபதயே" "உமாபதயே" "உமாஸஹாயம்" எனப் பற்பல திவ்ய நாமங்களால் ஓயாமல் துதித்துக்கொண்டு இளைப்பாறும். சிவம் சக்தியோடு சேர்ந்தாற்றான் எத்தொழிலையுஞ் செய்யவல்லது என்னும் பொருள் விளங்க "சிவமெனும்பொருளுமாதிசத்தியொடுசேரினெத்தொழிலும் வல்லதாம்" என்று சங்கராசாரியர் அருளிச்செய்தனர். ஸ்ரீ தாயுமான சுவாமிகளும் "இடமொருமடவா ளுலகனைக் கீந்திட் டெவ்வுலகத்தையு மீன்றுந் - தடமுறுமகில மடங்குநா ளம்மை தன்னையு மொடுக்கிவிண்ணெனவே." என்று கட்டளையிட்டருளினர். யஜுர் வேதத்தைச்சாாந்த உருத்திரஹ்ருதயோபநிடதமானது "வாமபார்ஸ்வே உமாதேவி." என்று அர்த்தநாரீசுவர மூர்த்தத்தையே

புகழ்ந்துள்ளது. இது ஆண் பெண் என்னும் ஆன்மாக்கள் என்றும் ஒன்றுபட்டுக் காதலித்து வாழும்பொருட்டதாக அகண்டகார சிவம் தன்னிலெழுந்து அமைத்துக்கொண்ட கருணை வடிவமாம். இந்த வடிவமே சர்வான்மாக்களுக்கும் மோக்ஷப்பிரதாயகமாகும். ஆதலி னன்றோ பிருஹஜ்ஜாபாலோபநிடதமும் "சிவசக்தியமிருதங்களின் ஸ்பரிசங் கிடைத்தால் மரணமேது" என்னும் பொருள்பட "சிவ சக்த்ய ம்ருதஸ்பர்சே லப்தயேவ குதோம்ருதி:" என்று கூறி உண்மை வலியுறுத்திற்று. (கூஉ)

எய்தினர்க் காரமு தளிப்போன்=தன்னை வந்தடைந்தவர்க ளுக்கு அரிய அமிர்தத் தன்மையையளிப்பவன். அமிர்தம்என்னுஞ் சொல் மரணமின்மையென்ற செம்பொருள் தருமாயினும் ஈண்டு மோட்சமென்னுஞ் சிவத்துவத்தையே அவாவிநின்றது. இதுவே சிவசாயுச்சியமாம். "ஈசனை யறிந்தவர்களுக்கு எல்லாப்பாசங்களும் ஒழியும்" என்பதாதி பலமந்திரங்கள் வேதங்களிற் கேட்கப்படுகின் றமையால் ஆணவமலச் சிதைவுடன் கூடிய சுத்தான்ம ஸ்வரூப மான சிவத்வாபிவியக்தியே அமிர்தமாம். அவிமுத்த ஜாபாலோப நிடதமானது "ஏதாநிஹவா அம்ருதஸ்ய நாமதேயாநி-ஏதைர்ஹவா அம்ருதோ பவதி=இவைகளன்றோ அமிர்தனுக்கு நாமதேயங்கள். இவைகளாலன்றோ அமிர்தனுவான்" என்று சிவபெருமானுக்கே அந்நாமத்தை யெடுத்தோதியது. கைவல்லியோபநிடதமும் "சிவம் ப்ரசாந்த மம்ருதம் பிரஹ்மயோநிம்=சிவனை, பிரசாந்தராய், அமிர் தராய், பிரமகாரணராய்" என்று அவ்வாறே கூறியுள்ளது. அமிர் தன்=நித்தியனுகியசிவன். எனவே மரணமென்ற ஜீவலிங்க மில் லாதவன் என்பது பொருள். மரணப் பிணியானது எஞ்ஞான்றும் பிறவிப்பிணியின் உடன்நிகழ்வதாதலால் பிறப்பிலிப்பிரானே அமிர் தனுவான். "அமிர்தத்தன்மை யென்ற மோட்சத்துக்குப் பிரபு ஈசானனே" என்பது போதர "உதா ம்ருதத் வஸ்யேசாந:" என்று மந்திரோபநிடதம் அறைதலால் மங்கைபாகனை சிவபெரு மானே மோட்சதான ஸ்வதந்தர னென்பது தெற்றனத்துணியப்பட் டது. அவ்வெம்பெருமானைபுணர்ந்தவர்கட்கே பாசக்ஷயமும் முத்தி பேறும் உண்டாமென்பது, "அபாமஸோம மம்ருதா அபூம=உமா தேவியோடு கூடிய பரமசிவனைக் கண்டோம், அமிர்தர்களானோம்"

என்னும் அதர்வசிரசின் மந்திரமே போதுமான சான்றும். அன்றியும், சுவேதாசுவதரோபநிடதமும், ஸாநிர்மலா மிமாம்சாந்திர்பிகாரோ ஜ்யோர்தி ரவ்யய=அவ்யயனும், ஜோதிரூபனுமாயுள்ள ஈசானன் முற்றும் நிர்மலமான சாந்தியைக் (கொடுப்பானாக)" எனவும், "ப்ரதான க்ஷேத்ரஜ்ஞ பதிர்குணேசஃ - ஸம்ஸார மோக்ஷ ஸ்திதி பந்தஹேதுஃ=பிரதானத்துக்கும் (பாசத்துக்கும்), க்ஷேத்திரஞ்ஞனுக்கும் (பசுவுக்கும்), பதியாயுள்ளவரும், சம்சாரத்தின் பந்தத்துக்கும், ஸ்திதிக்குங, மோட்சத்துக்குங் காரணரா யுள்ளவரும், சர்வஞ்ஞத்வாதி குணங்களை யுடைய ஈசுவரரேயாம்" எனவுங் கூறிப்போந்தது. அமிர்தனென்னும் பெயரை நாராயணன் முதலியோருக்கு நாராயணோபநிடதங்கள் குறித்தபோதினும், அது சிவபெருமானுக்கே யுரிய இடுகுறிப் பெயராயிருத்தலால் சிவநாமதேயமென்பதே முடிந்ததுணிபாம். காயத்திரி மஹாமந்திரத்தை அக்கினி, ஆதித்தன் முதலிய தேவர்கள் வழிபாட்டில ஆரணங்கள் விநியோகப்படுத்தினும், இறுதியில் அது பிரஹ்மமந்திரமே யாயிருத்தல்போல வேதங்களின் ஒவ்வொரு ருத்திரத்திலும் பரமசிவமே அமிர்தபரப்பிரம ரூபமாக நிரூபிக்கப் பட்டிருக்கின்றமையால் அந்தச் சிவமே அமிர்தசப்தத்துக்குப் பொருளென்பது தேற்றம். அங்ஙனமே ஸ்மிருதி புராணேதிகாசங்களும் நிச்சயப்படுத்தியுள்ளன.

போற்றித்திருவகவல்.

ஊழிமுதல்வ=பிரளயமுதல்வனே. பிரமாண்டப்பிரளயம், பிராகிருதப்பிரளயம், மத்திமப்பிரளயம், மஹாப்பிரளயம், பிரதம மஹாப்பிரளயம் என்னும் ஐவகைப்பிரளயங்களில் இறுதிக் கண்ணதாகிய பிரதம மஹாப்பிரளயத்தும்அழியாமல் நிலைபெற்று அந்தப் பிரளயத்தைச்செய்யும் முதல்வன்சிவபெருமானொருவனே. ஆதலினன்றே சுவேதாசுவதரோப நிடதமானது "எப்பொழுது இருள் (மகாசங்காரகாலம்) உளதாயிற்றோ அப்பொழுது பகலுமில்லை இரவுமில்லை, சத்துமில்லை அசத்துமில்லை, சிவன் ஒருவர்மாத்திரம் உளராயினர்" என்னும் பொருள் விளங்க "யதாதமஸ்தந் நதிவா நராத்ரிஃ-நஸந் நசாஸச் சிவயேவ கேவலஃ" என்று கூறிப்போந்தது. இதனால்

சிவன் என்னுஞ்சொல்லினால் உணர்த்தப்படும் பரம்பொருளே சிருஷ்டிக்கு முன்னுஞ் சங்காரத்துக்குப் பின்னும் உளதாகிய பரப்பிரஹ்மமெனஅறியக்கிடக்கின்றது. இதுவே "ஜந்மாத்யஸ்ய யத:= எக்கிருந்து இதன்பிறப்பு (உண்டாயிற்று)" என்னும் பிரமசூத்திரத்திலும் விளக்கப்பட்டது. தைத்திரீயோபநிடதமும் "எங்கிருந்து இவ்வுலகமெல்லாம் பிறக்கின்றனவோ, எதினின்று பிறந்தவை நிலைபெறுகின்றனவோ ஒழியுங்கால் அவை எங்கே பிரவேசிக்கின்றனவோ அதனை யறியவிரும்பு-அது பிரஹ்மமாம்" என்னும் பொருள் கொண்டு "யதோவா இமாநிபூதாநி ஜாயந்தே யேநஜாதாநி ஜீவந்தி யத்ப்ரயந்த் யபிஸம் விசந்தி தத் விஜிஜ்ஞாஸஸ்வதத் ப்ரஹ்ம" என்று கூறிற்று. அன்றியுங் கைவல்லியோபநிடதத்தில் "மய்யேவ ஸகலம் ஜாதம் மயிஸர்வம் ப்ரதிஷ்டிதம்-மயிஸர்வம் லயம் யாதி தத்ப்ரஹ்மா த்வயமஸ்ம்யஹம்"என்னிடத்திலிருந்தே எல்லாமுண்டாயிற்று, என்னிடத்திலே எல்லாம் நிலைத்தது, என்னிடத்திலே எல்லாமொடுங்குகின்றது, அந்த இரண்டாவதற்ற பிரமமும்யானே' எனவும், மந்திரோபநிடத்தில் "யயேவைக தத்பவே ஸம்பவே ச-யயேதத் விதுர ம்ருதாஸ்தே பவந்தி=எவ்வொருவனே உலகத்தின் உற்பத்தியிலும், உபஸம்ஹாரத்திலும் உள்ளான்-எவர் இவனை யறிவார் அவர் அமிருதராவார்" எனவும் எழுந்த சுருதிவசனங்களால் பிரபஞ்சத்தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக்கும் பரமகாரணமாய பிரஹ்மலக்ஷணம் நன்கு உணர்த்தப்பட்டது. இந்தப் பிரஹ்மமே சிவபரம்பொருளென்னும் ஊழி முதல்வன் என்று அனேகசுருதி முகங்களால் தெற்றென நிரூபிக்கப்பட்டுள்ளது. (௩௪)

அறுகோடிமாயாசத்திகள் வேறுவேறுதம் மாயைகள் தொடங்கின=இதனால் மாயா சக்தியின் வல்லபம் இனைத்தென்பது நாட்டப்பட்டது. ஆறுகோடி யென்பது ஓர் தொகையாயிருப்பினும் "அளவிறந்த" என்னும் பொருள்பட நின்றது. சாக்ஷாத் சிவபிரானைத் திருமால் நேரேதரிசித்தும் மாயா வல்லபத்தால் மயங்கி நீயாரெனக் கேட்டனரெனின் மற்றை யாரோ மாயையைக் கடக்கவல்லவர். மாயாவல்லபங் கூறுமிடத்து "கலையை மதிக்கும் புலவர் தமைச் சித்தர் குழாத்தைக் கடவுளரை-நிலையை மதிக்கு முனிவரரைத் திசைமாமுகனை நிரைவளையாச்-சிலையை மிதிக்கு நெடி

யோனை விழுங்கியுமிழாத் திறன் மாயை" என்று பிரபுலிங்கலீலை யும், "மாயவன் பிரமனீசன் யாரையு மயக்கஞ்செய்யுங்-காயமோ மாயையாறு லியாரிதைக் கடக்கவல்லார்" என்று வல்லளலார் சாத்திர முந் தெளிவித்தன. உலகிற்கு உபாதான காரணமெனப்படும் மாயை யின் சொரூபத்தை விசாரிக்கின் அழிவற்றதாயும், ஒருவருக்குந் தோன்றாததாயும், ஒன்றாயிருக்கிற நிலைமையினை யுடையதாயும், பிரபஞ்ச முண்டாவதற்கோர் வித்தாயும், ஜடமாயும், எவ்விடத்தும் வியாபக முடையதாயும், மலரஹிதனான பரமேசுவரனுக்குப் பரிக் கிரக சக்தியாயும், ஆன்மாக்களுக்குத் தனுகரண புவனபோகங்களாய் விரிந்தவோர் மலமாயும், என்றும் மயக்கத்தினைச் செய்வதாயுமுள்ள இலக்கணங்களை யுடையதாம். இந்த மாயையாகிய யந்திரமென்னுஞ் சக்கரத்தை யடைந்திருக்கின்ற சகல பிராணிகளையும் தனது மாயை யால் சுழற்றிக்கொண்டிருப்பவரும், சகல பிராணிகளுடைய இருத யத்தில் இருப்பவரும் ஈசுவரர் என்னும் பொருள்பட "ஈச்வரஸ் ஸர்வ பூதாநாம் ஹ்ருத்தே சேர்ஜுந திஷ்டதி-ப்ராமயந் ஸர்வ பூதாநியந்த்ரா ரூடாநி மாயயா" என்று ஸ்ரீகிருஷ்ணர் அர்ச்சுனனுக் குபதேசித்துள்ளார். இங்கே கிருஷ்ணர் தனக்கு அன்னியமான ஈசு வரனைக் குறித்தபடியால் அவ்வீசுவரனே உமாநாதனென உய்த்து ணரக் கிடக்கினறது. அன்றியும் பஞ்சப்பிரஹ்மோபநிடதமும் "மாயயா மோஹிதாச் சம்போ மகாதேவம் ஜகத்குரும்-நஜாநந்தி சுராஸ்ஸர்வேஸர்வகாரணகாரணம்=தேவர்களனைவரும் சம்புவின் மாயையால் மோகிக்கப்பட்டு ஜகத்குருவும், சர்வ காரணர்களுக்குங் காரணருமான மஹாதேவரையறிகின்றாரில்லை" என்று கூறிப்போந் தது. ஆகவே சம்புவே மாயையை நடத்துபவரென்பது தீர்மானம். ஆதலினன்றே அவருக்கு மாயீ யென்றநாமஞ் சுருதிகளிற் கேட் கப்படுகின்றது. (௩௫).

சகம்பேயென்று தம்மைச் சிரிப்ப நாணது வொழிந்து=உல கத்திலுள்ளார் உலகநடை சற்றுந்தெரியாத பேயரென்று தம்மைப் பார்த்து நகைக்கவும், சிவஞானிகளாயுள்ளார் ஞானநெறி கிஞ்சித்து மறியாத மலப்பேயரென்று தாமும் அவர்களைப்பார்த்துச் சிரித்த லும் இயல்பாதலின் நாணங்கொள்வதை யொழித்து என்றருளிய படியாம். உலகமுய்ய அவதரித்த சம்பரமாசாரிய மூர்த்திகள்என்றும்.

ஈசனது திருவடியிணையை மறவாது நிரந்தர சிவசிந்தனையிலிருந்து பிரபஞ்சத்தை முற்றும் மறந்தவராயும், பரமேசுவர நாம ரூப திவ்விய தாரகமந்திர நாதகலாநுசந்தான மஹாயோகத்தால்தன்மயராயும், பாலர் உன்மத்தர் பசாசாதிகளைப்போல ஆனந்த பரவச சித்தவிருத்தியுடையவராயும், பரமனடியாராயும் இருந்தனரென்பது இதனால் தெரிக்கலாயிற்று. சர்வ பாசங்களையுமொழித்த ஜீவன் முக்ததன்மையும் இதுவேயாம்.ஆதலினன்றோ சுக்ல யஜுர்வேதத்தைச் சார்ந்த ஹம்ஸோபநிடதமானது "தஸ்மிந் மநோ விலீநே-மநஸிகதே ஸங்கல்ப விகல்பதக்தே-புண்யபாபே-ஸதாசிவோம் சக்த்யாத்மா-ஸர்வத்ராவஸ்திதஸ் ஸ்வயம் ஜ்யோதிஃ-சுத்தோ நிரஞ்ஜனச் சாந்த தமம் ப்ரகாசய தீதி=அதனால் மனோலயமென்னும் மனநாசம் வந்துற்றபொழுது சங்கற்ப விகற்பங்களொழிந்தவனாய், புண்ணிய பாபமற்றவனாய், சதாசிவ சொரூபனாய், பிரணவ சக்திமயனாய் எங்கும் நிறைந்த ஸ்வயம்பிரகாச சொரூபனாய், சுத்தனாய், பற்றில்லாதவனாய், சாந்தனாய்ப்பிரகாசிப்பான்" என்று சிவாநுபவம் சுவாநுபவமாகக்கொண்ட சிவஞானிகளது தன்மையைவிளக்கிக்காட்டிற்று. இந்தச் சிவஞானிகள் பிராரத்துவ தேகமுள்ளமட்டும் பற்றற்று போகத்தை விரும்பாதிருந்தாலும், சாகப்போவார் யாதொரு போகத்தை இச்சியாதிருக்கவும் சுற்றத்தாராயுள்ளவர்கள் அவரை வேண்டிக் கொடுவந்து புசிப்பித்தல் போல் பிராரத்துவமும் இவர்களுக்கு வலியக்கொடு வந்து புசிப்பிக்கு மென்பது திண்ணம். இவர்கள் எஞ்ஞான்றும் உண்மைநிஷ்டையை மேற்கொண்டுசிவபெருமானுடைய திருவடி நிழலில் வானூடடங்கும் வளிபோல வீற்றிருப்பவராதலால் இவர்களுக்கு விருப்பு வெறுப்பென்பதில்லை. வினைகளைச் செய்தாராயினும் ஒரு பயனையும் நாடுவதில்லை. சமயாசாரம், தவம் விரதாநுஷ்டானம், ஆச்சிரமதருமம், மூர்த்தித் தியானபாவனை, சித்தசலனம், சமயத்துக்கேற்ற வேஷம், விஷயங்களை விடுதல் பற்றுதலாகிய நியமம், அந்தக்கரணதண்டம், இராஜச தாமச குணங்களை யடக்கி சத்துவகுண மேலிட்டிருத்தல் இவைபோன்ற விதிவிலக்குகள் ஒன்றுமேயில்லை. எனவே இவையாவும் ஞானசாதகனுக்கே யன்றி ஞானசித்தனுக்கல்லவென்பது வெளிப்படை. இவர்கள் இவ்வாறு உலக நடைக்கு வேறுபட்டிருத்தலைக்கண்டு மலசம்

பந்திகளாயுள்ளார் தங்கள் தங்கள் மனஞ்சென்றவாறு பேசிச் சிரித்தல் உலக வியல்பாம். இவர்கள் முற்றறிவுடையராய்ப் பிரபஞ்ச மயக்க மொழித்தவராயினும் உலகத்தார் பார்வைக்குப் பெரிய பயித்தியம் பிடித்தவர் போல் காணப்படுவர். ஆதலினன்றோ அவிமுக்த ஜாபாலோபநிடதமானது "அநுந்மத்தா உந்மத்த வதாசரந்தஃ=மயக்கமற்றவர் மயக்க முற்றவரைப்போல் சஞ்சரிப்பர்" என்று புகழ்ந்தது. அன்றியும். யதாஜாத ரூப தரஃ=பிறந்தவாறு உருவந்தரிப்பர்" என்றும் இசைத்தது. "பேயொன்றுந்தன்மை பிறக்குமளவுமே நீயொன்றுஞ்செய்யாமல் நில்" என்றது திருவருட்பயன். (ரு-சு)

மூவா நான்மறை முதல்வா=மூப்படையாத நான்கு வேதங்களுக்கு முதல்வனே. ருக், யஜுர், சாமம், அதர்வணம் என்னும் மறை நான்கும் பிரமன், விஷ்ணு, உருத்திரன் முதலிய பல கடவுளரைப் பரப்பிரமங்களென்று பலவிடங்களிற்றுதிக்கினும், மூர்த்தித் திரயாதீத சிவபெருமானொருவரையே த்யேயராகச் சிறப்பாகப் பிரகாசப்படுத்தியது. ஏனைய கடவுளரை யெவ்விடத்தும் எஞ்ஞான்றும் அவ்வாறு த்யேயராகக் கூறியதின்று. அந்தத்யேய வஸ்துவைச் சொல்லுமிடத்து சிவசப்தத்தாலும், ஈசான சப்தத்தாலும, ருத்ரசப்தத்தாலும்,ஈசுவர சப்தத்தாலும்,பிரஹ்மசப்தத்தாலும்,சம்புசப்தத்தாலுமே பன்முறை விசேஷமா யெடுத்துக்கூறிற்று, இதனால் சிவ ஈசான ருத்ர சம்புவாதி நாமங்களே பரதத்துவபோதக நாமங்களாகும். அவற்றுள் சில வேத வசனங்கள் வருமாறு:-"சிவஏவஸ்தாத்யேயஃ=சிவனொருவரே சதாதியானிக்கற்பாலர்" என்று சரபோபநிடதமும், சிவ ஏகோ த்யேயஃ=ஏகராகிய சிவபிரானுரே தியேயர்" என்று அதர்வசிகோபநிடதமும் "த்யாயீதேசாநம்=ஈசானரே தியானிக்கப்படுபவர்" என்று மீண்டும் அதே உபநிடதமும், "ஸஏகோருத்ரோத்யேயஃ=ஏகராகியருத்திரரேதியானிக்கத்தக்கவர்" என்று பிப்பலாதோபநிடதமும், "காரணந்து த்யேயச்சம்புஃ=காரணராயுள்ள சம்புவே தியேயப்பொருள்" என்று அதர்வசிகோபநிடதமும் குன்றின்மேலிட்ட விளக்குபோல் தெரிக்கலுற்றன. இவ்வித சுருதி வசனங்களால் துரீயமூர்த்தியாகிய சிவபெருமானே த்யேயரென்றும், உபாஸ்யரென்றும், ஸேவ்யரென்றும், மற்றவர்கள் தியாதாக்களென்றும், உபாசகர்களென்றும், சேவர்களென்றும் நன்கு நிரூபிக்கப்பட்

டன. அல்லதூஉம், உபாசகர்கள் உண்மையறிந்து உய்யும் வண்ணம். பெருந்தேவர்களாகிய நாராயணரையும் உருத்திரரையும் தியாதாக்களெனப் பொருள்கொண்டு "நாராயண பரோத்யாதா" என்று தைத்திரீயோபநிடதமும், "த்யாதாருத்ர:" என்று அதர்வசிகோபநிடதமும் முறையிடுகின்றன. ஈண்டு "த்யாதாருத்ர:" என்று கூறினமையால் தியானத்துக்கு விஷயமாக நிரூபிக்கப்படும் துரீயருத்திரன், த்யாதாவெனக் கூறப்படுங் குணருத்திரனிலும் வேறென்பதே தீர்மானம். ஒருவனே தியானஞ் செய்பவனும் செய்யப்படுபவனுமாதல் கூடாமையன்றோ? துரீயருத்ரனைத் தியேயப் பொருளாகக் கொண்ட அதர்வசிகோபநிடதத்திற்றானே பிரம விஷ்ணு ருத்ரேந்திரர்கள் படைக்கப்பட்டவர்களெனவும், ஆதலின் அன்னோர் காரணர்களாகமாட்டார்களெனவும், காரணராவார் சர்வைசுவரிய சம்பந்நரும், சர்வேசுவரரும், சம்புவாயு முள்ளவரே எனவும், அவரே தஹராகாச மத்தியில் தியானிக்கத் தக்கவரெனவும் பொருள் போதர "ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரேந்த்ராஸ் ஸம்ப்ரஸூயந்தே நகாரணம். காரணந்து ஸர்வைச்வர்யஸ் ஸம்பந்ந ஸர்வேச்வர: சம்புராகாச மத்யே த்யேய:" என்ற உண்மை நாட்டப்பட்டுள்ளது. இதனால் ஸர்வவேத வேதாந்தங்களுக்கும் முதல்வன் சிவபிரானென்பதே முடிந்தகருத்தாம். இவ்வுண்மையை யுணராச் சிலர் புராணவசனங்களைக்கொண்டு ஏனைய கடவுளருக்குத் தியேயத்வங்கூறுவர். வைதிக விவகாரத்தில் வைதிக விவகாரமே பிரதானமாதலால் புராண வசனங்களினுஞ் சுருதி வசனங்களே சாலச்சிறப்புடைத்தாம். ஆதலின் சிவபெருமானே பரம்பொருளெனக் கூசாதுரைத்தல் நடுவுநிலை குன்றா மாந்தர் கொள்கையாம். (௩எ).

அருவமு முருவமுமானாய்=அரூபமும் ரூபமுமானவனே. இனம்பற்றி ரூபாரூபமுந் தழுவப்படும். அநாதிமுத்த சித்துருவாகிய பரமசிவம் சர்வவடிவங்களையுங் கடந்திருப்பினும் ஆன்மாக்களுக்குப்போகமும், யோகமும், வீடும் உதவுமுகத்தால் காருண்ணியத்தினாலே அருட்டிருமேனி தாங்கிக்கொள்ளும். பொன்கட்டியானது பூஷணங்களாகக் காரியப்பட்டகாலத்து அநுபவத்துக்குரிய சிரேஷ்டபதார்த்தங்களாய் ஆன்மாக்களுக்குச் சுகத்தைத் தருதல்போல், இமைப்பொழுதும் உபகாரமல்லாது ஒன்றையும் இயக்காது நிற்குங் அனந்த

கல்யாணகுணக்கடலாகிய பரமசிவம் உமார்த்தசரீராதி திவ்வியமங்கள கல்யாணகுண தேஜோரூப வடிவங்களாய்ச் சகளீகரித்தே அநுபவ வேத்யமாய் ஆன்மாக்களுக்குப் பேரின்பத்தையே விளைவிக்கும். அகரமானது தானே தனித்தும் ஆகராதி வடிவங்களெடுத்தும் ககர முதலிய மெய்களை இயக்குமாறுபோல், நிஷ்களாதீதமாயுள்ள பரமசிவமும் எண்ணிறந்த அருட்கோலங்களைத் தாங்கிச் சேதனுசேதனப் பிரபஞ்சங்களை இயக்கும். இவ்வருள் வடிவங்கள் யாவும் மலரஹித மாதலால் அப்பரமசிவமே யென்றும், அதன்தயாமூலம் வெளிப்பட்ட தடஸ்த வடிவங்களென்றும் வேதம் பன்முறை முழக்கும், "இறுத்துவன் நினைந்த மேனி நின்மல னருளி ஞலே" என்னுஞ் சிவஞானசித்தி செய்யுளுக் கிணங்க சுவேதாசுவதரோப நிடதமும் "பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாந பல க்ரியாச=அவனது சக்தி பரையெனவும், பலவகையாகவுங் கேட்கப்படுகின்றது. ஆயினும் (தாதான்மியமாய்) இயற்கையிலமைந்தது ஞானமும் பலமுங் கிரியையுமாம்" என்று கூறிமகிழ்ந்தது. ஈண்டு துரீயசிவம் கொள்ளுந் திருமேனியாவும் அவரதுசக்தியே யென்பதுதெள்ளி திற்பெறப்பட்டது. அதனுல் அச்சிவம் உருவம், அருவம், உருவருவம் எனமூன்று திருமேனியுமாகலாம். அல்லது அம்மூன்றிற்றனித்தனியொவ்வொன்று மாகலாம். உருவமென்றபோது அதனை அருவமென்றே சாதித்தல் கூடாமை. அருவமென்றபோது உருவமென்றே சாதித்தல் கூடாமை. உருவருவமென்றபோதும் அவ்வாறேயாம். ஆதலாற்றான் சிவபரம்பொருள் கொள்ளுங் கோலங்கள் யாவும் சிற்கனமென்று வைதிகசைவ மொப்பி அப்பரம்பொருளுக்குத் தடஸ்தம் சொரூபம் என்னும் இருதிறவிலக்கணங்களை யுங் கூறி மகிழ்கின்றது. உலகுயிர்கள் உய்யுமாறுகொண்ட அந்த ஞான கோலங்களில் அப்பொருளின் சொரூப (உண்மை) விலக்கணம் ஏதுங் குறைவின்று. அதனுல் அவ்வைதிகசைவமொன்றே துவிதமாகவும், அத்வைதமாகவும் விசிஷ்டாத்வைதமாகவும், இம்மூன்றுக்கும் அதீதமாகவும் அவ்வவ்வமயத்துக்குத் தக்கபடி சமரச சமயமாய்ப் பிரகாசித்தொளிரும்.

நிற்க, அப்பரம்பொருள் பலவடிவங்கள்தரிக்கினும் அதற்கியல்பிலுள்ள சொரூபவிலக்கணமாவது தொழில், குணம், இச்சை

வெறுப்பு, விகாரம் ஒன்றுமில்லாத சுத்தசைதன்னிய சொரூபமே ஸ்வபாவமாக வுடையதாகும். அதனை விரிக்கின், முயற்கோடுபோல காணப்படாத அரூபமுமன்று. பிரபஞ்சத்தி லுண்டான வடிவங்கள் போல அதுவிதுவென்று சுட்டியறியப்படும் ரூபமுமன்று. சித்தாகிய ஆன்மவர்க்கமும் அசித்தாகிய பிரபஞ்சமுமன்று. சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியங்களையும் பண்ணுவது மன்று. எனவே, தனது சந்நிதிமாத்திரத்தில் அவைகளுண்டாமென்பது பொருள். தபாபிநயம், யோகாபிநயம், கவுரிகலியாணமாகிய இவைகளை அதிஷ்டித்துச் செய்வதன்றி தானே செய்வதுமன்று. இவ்வாறு சொல்லப்பட்டவை யெல்லாம் தானல்லவாய் தனதாகக்கூடிநின்று செய்யினும் இவையொன்றுடனுங் கூடாமல் தோய்வற நிற்கின்ற உண்மையுடையதாயிருப்பது அந்தக் கேவல சுத்தசைதன்னிய சிவசொரூபம். அந்தத் திவ்வியசொரூபம் பாவனையிறந்து நின்ற பாவனையினாலே ஒருவருக்குக் கிடைப்பதல்லது வேறெவ்விதத்தானுங் கிடைப்பதன்று.மந்திரோபநிடதமும்“பாவக்ராஹ்ய மநீடாக்யம்= அந்த பாவனையினா லறியத்தக்கது-தமக்கோர் ஆஸ்ரய மில்லாதது” என்று கூறிற்று. சிவஞானசித்தியும் “பாவனையிறந்து நின்று பாவிக்கப் படுவதாகும் பரம்பர னருளினாலே” என்று உணர்த்திற்று.

“பரம்பரஞ் சோதி பரனே=பிரகாசங்க ளனைத்தினும் மேம்பட்ட பிரகாசமுடைய மேலோனே. பிரபஞ்சத்தின் கண்ணுள்ள எல்லாப் பிரகாசங்களுக்கும் பரமப்பிரகாசமாய் நின்று அவைகளெல்லாவற்றையும் பிரகாசிக்கும்படிச் செய்தலானும், தான் ஸ்வயம்பிரகாசமாய் விளங்குதலானும், ப்ரஹ்மசொரூபமே அதுவாகும். சுவேதாசவதரோபநிடதமானது “ஈசானோ ஜ்யோதிரவ்யய:=ஈசானன் ஜோதிரூபன், அவ்யயன்” என்று கூறிற்று. அல்லாமலும், சூரியன் முதலியபலதேயுக்கள் ஸ்வயம்பிரகாச முடையனபோல் காணப்படினும், அவைகளெல்லாம் உண்மையில் தேயுக்களல்லவெனவும், பரசிவசொரூபமொன்றே ஸ்வயம்பிரகாசமுடையதெனவும், அறிவுறுத்த “நதத்ரஸூர்யோபாதி நசந்த்ரதாரகம்” என்றெழுந்து செல்லும் மந்திரத்தில் “அதனிடத்து சூரியன் பிரகாசிக்கமாட்டான் - சந்திரன் நட்சத்திரங்கள் இவை பிரகாசிக்கமாட்டா-மின்னல்களும் விளக்கமாட்டா. இவ்வக்கினி எவ்வளவு - அவன் ஒருவன் விளங்க

அவனை யநுசரித்து எல்லாம் விளங்கும் - அவன் பிரகாசித்தலால் ஈதெல்லாம் விளங்குகின்றது" என்று முடிவுரை கூறிற்று. இது போன்ற வசனம் பகவற்கீதையிலுமுளது. இதுபற்றியன்றோ உக்கிரன் என்னும் நாமம் பிரஹ்மத்தின்மேல் நின்று உலகத்திலுள்ள ஒளிகளுக்கெல்லாம் சிவப்பிரகாசமே தாயகமென நிரூபித்ததாயிற்று. "தேயமா ரொளிக ளெல்லாஞ் சிவனுருத் தேசத்தென்னுர்" என்று சகலாகம பண்டிதரும் சிவஞானசித்தியில் வற்புறுத்தியருளினர். இவ்வாறு கூறப்பட்ட ஸ்வயஞ்ஜ்யோதிஸ்வரூபமாகிய பரசிவப்படிவமே யானெனதென்னுஞ் செருக்குற்று இறுமாந்து நின்ற பிரம விஷ்ணுக்களுக்கு இடையே தோன்றி அச்செருக்கை யடக்கிய அக்கினிப் பிழம்பாம். இந்தச் சோதிப் பிழம்பைப் பரனெனப் புகழ்ந்தது அவன் எல்லாத் தேவருக்கும் மேலோனுயிருத்தல் பற்றியே. அப்பெயர் அவனுக்கு ரூடியாம். அவன் பானுகவே அவனது சக்தி பரையெனப் புகழப்பட்டனர். பராசக்தியெனவும் நாமம் வேறு எந்தச் சக்திக்கும் எவ்விடத்தும் அமைந்திற்றிலது. சிவனுரது சக்தியையே "பராஸ்யசக்திஃ" என்று மந்திரோபநிடதம் புகழ்ந்தது.

திருச்சதகம்.

க-வது மெய்யுணர்தல்.

கோள்ளேன் புரந்தரன்மாலயன் வாழ்வு=இந்திரன், திருமால், பிரமன் என்னுங் கடவுளர் பதங்களை யொருபொருளாக மதிக்கமாட்டேன். இவ்விறைவர் பதவிகள் அதிகார மலக்குற்ற முளதானும், சுகதுக்கங்கள் கலந்து நிற்றலானும், சிருஷ்டிகாலத்தில் பிராகிருதத் தோற்றங்களாய்க் காரியப்பட்டுஸம்ஹாரகாலத்தில்மூலப்பிரகிருதியி லொடுங்குதலானும், இந்திரசாலம், கானற்சலம், கனவு முதலியவைகளைப்போல் உள்ளனவாகத்தோன்றிப் பின்னில்லை யாதலானும், நிலையில்லாத அசத்துப் பொருளாம். ஈண்டு திதிகர்த்தாவாகிய விஷ்ணுவின் பதவியையும், சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமன் பதவி

யையுங் கூறினமையால் இனம்பற்றி ஸம்ஹார கர்த்தாவாகிய உருத்திரமூர்த்தியின் பதவியையுந் தழுவிக்கொள்ளவேண்டும். பிரமலோகமாகிய சத்தியலோகத்தினின்றும் தட்ச நாரத சனகாதிகளும், விஷ்ணுலோகமாகிய வைகுண்டத்தினின்றும் அநந்த கருட விஷ்வக்ஸேனாதிகளும், உருத்திரலோகமாகிய ஸ்ரீகைலாசத்தினின்றும், நந்தி ஆலால சுந்தராதிகளும் கர்மபூமியாகிய பூலோகத்துக்கு மீண்டார்களெனவும், இம்மும்மூர்த்திகளிடத்தில் தேவராதியோர் பிரமவிசாரஞ் செய்தாரெனவும், உபநிடதங்களும் உப ப்ராஹ்மணங்களும் கூறுகின்றமையால் இந்தப் பதவிகளைப் புனராவர்த்தியில்லாத மோட்ச ஸ்தானங்களாகக் கூறுதல் எவ்வாற்றானும் பொருந்தாதாம். அல்லதூஉம், இவர்களது திருமேனிகளே பிரமசொரூபமாயின் இவற்றின் சாக்ஷாத்காரமன்றி முக்தி வேறுண்டென்பது பெறப்படமாட்டாது. படாதாகவே, இந்த சாக்ஷாத்காரமே பிரமாநந்தாநுபவ நிலையாகவேண்டும். அப்படிக்கின்றி இம்மூவர்களையும் ஜீவர்களென்று வேதம் ஓதுக்கினமையால் இவர்களது பதங்களெல்லாம் பாரதந்திரிய துக்கக் களஞ்சியங்களே யன்றி சிறிதேனுந் துயரமணுகப்பெறாத சுத்த பரமானந்தாநுபவ சாம்ராஜ்யமான மோட்சமல்லவாம். அவைகளை யடைந்தவர் பூலோகத்துக்கு மீள்வாராயினர். மீளாத விடமே அதனினும் மேலானதன்றோ. ஆதலின் "மாலயனு யிந்திரனாய் வாழுவதாய் மாளுவதாஞ்-சாலமயல் பார்த்துத் தலையசைப்பர்" என்று கண்ணுடையவள்ளலாரும், "விதியார் படைப்பும் அரியா ரளிப்பும் வியன்கயிலைப்-பதியார் துடைப்பும் நம்பா லணுகாது பராநந்தமே-கதியாகக் கொண்டு" என்று திருவெண்காட்டடிகளும் சிவப்பிரசாத மெய்தினோர்களது தன்மையை விதந்தோதியருளினார்கள். ஆயின் புனராவர்த்தியில்லாத மோட்ச லோகந்தான் யாதெனின், பிரம விஷ்ணு ருத்திர லோகங்களுக் கதீதமாய், சுத்தமாயா புவனமாய், அதர்வ சிகையில் பிரணவத்தின் நான்காவது மாத்திரையின்ஸ்தானமாய்ப் படிக்கப்பட்டமஹாகைலாசமென்னும்சோம லோகமாகியசிவபுரமாம். இதுவே ப்ரஹ்மலோகமென்றுங் கூறப்படும். இதை யடைந்தவரது தன்மையைச் சாந்தோக்கியோபநிடதமானது ப்ரஹ்மலோகஸம்பத்யதேநசபுனராவர்த்ததே நசபுனராவர்த்ததே. =சிவலோகத்தை யடைந்தவன் மீளப்பிறக்கின்றானில்லை, மீளப்

பிறக்கின்றுனில்லை" என்று கூறிற்று. இந்த உபநிஷத்தின் பொருளையே முனிவேந்தராகிய வியாசபகவானும் "அநாவ்ருத்தி சப்தா தநாவ்ருத்தி: சப்தாத்=மீளப்பிறப்பதில்லை மீளப்பிறப்பதில்லை." என்று தமதுவேதாந்த சூத்திரத்து இறுதி யத்தியாயத்து இறுதிப் பாதத்து இறுதிச் சூத்திரத்திலே இருமுறை வடுக்கிக் கூறினர். எம்மை யாட்கொள்ள வெழுந்தருளி வந்த மணிவாசகப்பிரானும் "வானவூர் கொள்வோம் நாம் மாயைப்படைவாராமே" எனவும் "அண்டர்நா டாள்வோம்நா மல்லற்படைவாராமே" எனவும் திருப்படையெழுச்சி என்னும் திருப்பதிகத்தில் திருவாய்மலர்ந்தருளினார்கள். பகவற்கீதையிலும் இந்தச் சிவபுரத்துச் சிறப்பினை, "தமேவ சரணம் கச்ச ஸர்வ பாவேந பாரத, தத்ப்ரஸாதாத் ப்ராம்சாந்திம் ஸ்தாநம் ப்ராப்யஸி சாஸ்வதம்=அவரையே சகலமான தன்மையாலும் சரண மடையக்கடவாய்-அந்த ஈசுவரனுடைய அநுக்கிரகத்தாலே சர்வோத்தமமான சாந்தியையும் சாசுவிதமான ஸ்தானத்தையும் அடைவாயாக" என்று படர்க்கைப்பொருளைச் சுட்டி ஸ்ரீ கிருஷ்ணர் அர்ச்சுனனுக்கு உபதேசித்தருளினர். ஈண்டு குறித்த ஸ்தானமே அபரமுத்தி ஸ்தானம். அதைப் பரமபதமென்றால் இழுக்கென்னையெனின், பரமபத நாதனை ஸ்ரீமந்நாராயணன் கற்பந்தோறும் பூமியில் அவதரிப்பதால் அவன் எழுந்தருளியிருக்கும் பதவி மீளாப்பதவியெனல் பொருந்தாது. ஸ்ரீமத் உமாசமேத பரமசிவம் பக்தர்கள் மனங்களிக்க ஆங்காங்கு உண்மையிலக்கணம் வதுங்குறைவில்லாமல் ஆவிர்ப்பவிப்பதன்றி எங்கும் பிறப்பதின்மையால் அவரது திவ்விய லோகமாகிய சிவபுரமே என்றும் பிறப்புப்பிணி வந்தெய்தப் பெறாத சாசுவித ஸ்தானமாம். அந்த ஸ்தானத்தையடைந்தவர்களுக்குங்கூட மகாசங்கார காலமெனப்படும் மகாப்பிரளயகாலத்தில் விதேக கைவல்லியமாகிய பரமுத்தி சித்திப்பது திண்ணமாதலால் அதுவே அபரமோட்சபதமென்று சொல்லப்படும்.

என்னை! தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் "தாம்வீழ்வார் மென்றோட் டுயிலினினிதுகொல்-தாமரைக் கண்ணா னுலகு" என்று திருக்குறளிற் கூறியிருத்தலால் செங்கண்மாலுலகமே பேரின்ப வீடெனவும், அவ்வீட்டுத் தலைவனே பரம்பொருளெனவுங் கொண்டால் குற்றமென்னையெனின், அதுகூடாது. தீவினை நல்வினை

யென்னும் இரண்டனுள் தீயவொழிந்தழி நல்லன பொருந்துதலும் அதவு மொழியுங்கால் இறைவனருள் கூடுதலும் உலகத்தில் பிரத்தியட்சம். ஆதலின் இம்மை, மறுமை, வீடு என்னும் மூன்றனுள் இம்மையி லனுபவிக்கும் இகலோக வின்பத்துக்கு யாரும் மறுமையில் நுகரும் பரபோகத்தையே அவ்வுலகு குறிக்கின்றமையின் அது பேரின்பவீடாதல் செல்லாதாம். வீடு என்பது விடுதல் என்னும் பொருளைத்தருதலால் செங்கண்மா லெழுந்தருளி யிருக்கும் உலகத்தைப்பற்றுதல் விமலஞானநந்த வீடாகாது. மறுமைப்போகத்தை அநுபவிக்கும் உலகங்களிற் சிறந்ததாமென்பதே யமைவுடைத்து. ஆதலினன்றோ, "அருள்பெற்றவர்க ளித்தவுருவத்தைப் பெற்றிருக்கை முத்தியெனிற் பெறும்பதமே யிதுவும்-இனுதுநிலே யிது தானுங்காயமுண்டே லிருங்கன்ம மாயமலமெல்லா முண்டாம்" என்று பதமுத்தியையுந் தூஷித்துரைத்தது சிவஞானசித்தி. ஸ்ரீ தாயுமானசுவாமிகளும் "சாலோக மாதி சௌக்கியமும் விட்டநம்பால்-மேலான ஞானவின்பயேவு நா ளெந்நாளோ" என்றும் "பேரின்ப முத்தியிப் பூமியிலிருந்து காண, எத்தனை விகாதம் வரும்" என்றும் வற்புறுத்தியருளினர். (சுயு)

பூவரென்றேயெம்பிரானேடு மெண்ணி=சாக்ஷாத் சர்வேசுவரனுகிய சிவபெருமானைத் திரிமூர்த்திகளில் ஒருவனுக வெண்ணி.. ஸ்ரீகண்ட சர்ர சர்ரியாய் விளங்கும் பரமேசுவரன் பிரமவிஷ்ணுருத்திரர்களை யதிஷ்டித்து நின்றுகொண்டு அவரவர்கள் தொழில்களை நடாத்துகின்ற முறைமையினுல், அவரவராய்த் தியானம் பண்ணப் படுவானன்றி அவர்களுடனே யொருவனுக எண்ணப்படுவா னல்லன். பிரமனுக்குச் சிருஷ்டித் தொழிலும், விஷ்ணுவுக்குக் காத்தற்றொழிலும், உருத்திரனுக்குச் சங்காரத்தொழிலும் சாத்திரங்களிற் சொல்லப்படினும் உருத்திராதிஷ்டானமே எனைய ரிருவரிடத்தும் வியாபித்து யாவும் நடாத்துகின்ற தென்பது வேதமுடிகளின் தாற்பரியம். "கார்யம்விஷ்ணு: க்ரியாப்ரஹ்மா காரணந்துமஹேச்வர:=காரியம் விஷ்ணு, கிரியைபிரமா, காரணன் மகேசுவரன்" என்றுருத்திர ஹ்ருதயோபநிடதமும், "பராத் பரதரோ ப்ரஹ்மா தத்பராத்பரதோஹரி: - தத்பராத்பரதோ ஈச: தஸ்மா துல்யோதிகோநஹ:=பரத்துக்குப் பரமாயுள்ளவர் பிரமா-அவருக்கு மேலா

யுள்ளவர் ஹரி—அவருக்கு மேலாயுள்ளவர் ஈசர்—அவருக்குச் சமான மானவரும் துல்யரும் ஒருவருமில்லை" என்று சரபோபநிடதமுங் கூறுகின்றன. இதனால் உருத்திரமூர்த்திக்கு அடங்கினவர் மற்றிருவரென்பது சித்தமாயிற்று. இந்த ஈசராகிய உருத்திரரையே பிரம விஷ்ணுக்களோடு சேர்த்துப் படைக்கபபட்டவரென்றும், ஜகஜ் ஜந்மாதி காரணரல்ல ரென்றும், த்யாதா வென்றும், அதர்வசிகோபநிடதமானது வரையறுத்து முடிவுகட்டி விடுமாயின், மூவருக்கும் அதீதராகிய பரமசிவத்தை மூவரிலொருவராகச் சேர்த்துப் படித்தல் மகாபாதகமாம். ஆதலினன்றோ "ஓதருணை வித்தகரை மூவரிலொருத்தரென வோதியிடு மற்பமதியீர்" என்று திருவருணைக் கலம் பகமும், "மூவா முதலா முதல்வனை யு மூவுலகிற்-சாவார் பிறப்பார்க டங்களையுந்-தேவாக, வொக்க நினைவாருக் கல்லவோ வோரேழு மிக்க நரகம் விதித்ததுகாண்" என்று இரட்டையர் தைவீகவுலாவும் விசதப் படுத்தின. அன்றியும் இருக்குவேதமானது பரமசிவனை வேறு தேவர்களுக்குச் சமமாயாவது கீழாயாவது கருதித்தொழுதல் உருத்திரகோபஹேதுவென்று "மாதேர்ருத்ரஃ" என்றற்றொடக்கத்துவசனத்தில் உண்மை நிறுவியது. ஆயின் வைதிக சைவர்களென்று சொல்லப்படும் சகல சமயாதீதாத்துவித சித்தாந்த சைவர்கள் ஸம்ஹார கர்த்தாவாகிய உருத்திர மூர்த்தியைக் கடவுளாக வழிபடுத லில்லையோ வெனின், உண்மை கூறுதும். இந்த உருத்திரர் பந்தம் நீங்கி முத்திப்பெற்ற கடவுளாதலால் பாசிவத்துக்குரிய வெல்லாப்பெயரும், வடிவும், தொழிலும் எற்று வேதாகமங்கள்முதலியவற்றைஅறிவுறுக்குங் குரவராய்,அயன் மா லிருவருக்கும் மேலாய்ச் சைவத்திவ்னெய்தி சமயதீக்ஷை பெற்றோரால் வழிபடுங் கடவுளராயினரன்றி "விஸ்வாதிகோ ருத்ரோ மஹர்ஷிஃ=விசுவத்தைச்கடந்தவர் உருத்திரர் மஹரிஷி" என்று தைத்திரீயோபநிடதங் கொண்டாடிய விசுவசேவியராகிய துரீய மூர்த்தியல்லர். இதனால் சித்தாந்த சைவத்தில் பிரதிபாதிக்கப் படும் பரதத்துவப் பொருளாயுள்ளார் இன்னாரென்பது தெற்றென விளக்கப்பட்டது. ஐயுற வேண்டாம்.

அல்லதூஉம், பாரதம் அநுசாஸநிக பர்வத்தில் சிவபெருமான் தனது வலப்பாகத்தினின்றும் உலகத்தைப் படைக்கும் பொருட்டுப்

பிரமனைச் சிருஷ்டித்தாரென்றும் இடப்பாகத்தினின்றும் உலகத்தைக் காக்கும் பொருட்டு விஷ்ணுவைச் சிருஷ்டித்தாரென்றும், உகத்தின் முடிவில் ஸம்ஹாரத்தின் பொருட்டு உருத்திரனை அந்தப் பிரபுவே சிருஷ்டித்தாரென்றும் பொருள்பட "ஸோஸ்ருஜத் தக்ஷிணாதங்காத் ப்ரஹ்மாணம் லோகஸம்பவம்-வாமபார்ச்வாத் ததா விஷ்ணும் லோகரக்ஷார்த்த மீச்வரஃ-யுகாந்தே சைவஸம்ப்ராப்தே ருத்ரம் ப்ரபு ரதாஸ்ருஜத்" என்று கூறப்பட்டுள்ளது. இதனால் வேத சம்மதமாகிய நான்காவது தெய்வம் சிவபெருமானென்பதே முடிந்த கருத்தாம். இவ்வாறே சிவபுராணங்களெல்லாம் அயனரியரன் என்னும் மும்மூர்த்திகளையும் விளக்கி அவர்களைத் தமதாணையின்வழி நடாத்தும் பரமசிவனையும் விளக்குதலின் அந்தப் புராண சரித்திரங்கட்குரிய மூர்த்திகள் நால்வரென்பது வெளிப்படை. இம்முடிபுக்கே தேவார திருவாசகமும், மெய்கண்ட சாஸ்திரங்களும் ஒப்பியுள்ளன. விஷ்ணு புராணங்களோ அயனரனுகிய இருவர்களை மாத்திரம் விளக்கி விஷ்ணுமூர்த்தியையும் விளக்குதலின், அந்தப்புராண சரித்திரங்கட்குரிய மூர்த்திகள் மூவரென்பதே வெளிப்படை. இம்முடிபுக்கே ஆழ்வார் பாடல்களும் சம்மதித்துள்ளன. இதனுல் ஆழ்வார் பாடல்களனைத்தும் விஷ்ணுபுராணங்களிற் கூறிய முடிபையே எடுத்தாண்டதென்றும், சதுர்த்த வாச்சிய மூர்த்தம் விஷ்ணுபுராணங்களில் வெளிப்படையாகச் சொல்லவில்லையென்றும், திதி கர்த்தாவாகிய விஷ்ணுமூர்த்தி எஞ்ஞான்றும் அம்மூர்த்தமுடையாராகாரென்றும் ஏற்பட்டது. வேதம் எப்படி நான்கு மூர்த்திகளையும் விளக்கி முடிவில் நான்காவது மூர்த்திக்கே பரத்துவம் நிரூபித்ததோ அப்படியே புராணேதிகாசங்களும் நிரூபித்தமையால் வேத புராணேதிகாசங்கள் யாவும் சத்தியமாகச் சிவபரத்துவ போதக உண்மைநூல்களென்பதே துணிபு. இவ்வுண்மையினை யறியாதார் சிவபுராணங்களிற் சிவனுக்கும் விஷ்ணுபுராணங்களில் விஷ்ணுவுக்கும் முனிவர் சோமானுகிய வியாசர் பரத்துவங்கூறி குழப்பி வைத்தாரென்று மயங்கி நிற்பர். அந்த வியாசபகவான் அந்தந்த மூர்த்தியை வழிபடும் பக்குவர்களுக்கு அன்பு முதிரும்படியாக வேதம் எப்படிக்கூறிற்ரே அப்படியே கூறினுரன்றி குழப்பி வைத்தனரல்லர். கீழ்ப்பட்டாரை நோக்கி மேற்பட்டாருக்குப் பரத்துவங் கூறு

தல் சாஸ்திர சம்மதமாதலின் புராணங்களின் பிராணனை யறிதலே அறிவுடையோர் செய்கையாம். அக்கினிபுராணம், சூரியபுராணம், பிரமபுராணம், ஆகிய இவைகளை யுஞ் சொன்னதுபோல் விஷ்ணுபுராணத்தையும் சிவபுராணத்தையும் வியாசர் சொன்னமையால் அவைகளைக்கொண்டே விஷ்ணுமூர்த்திக்காவது உருத்திரமூர்த்திக்காவது முடிவான பரத்துவஞ் சாதித்தல் சிறிதும் ஒவ்வாத காரியமாம். அவர்களைப் பரட்பிரமமாகச் சொன்ன சுருதி வசனங்கள் "அந்நம் ப்ரஹ்ம" "மநோப்ரஹ்ம", "விஜ்ஞானம் ப்ரஹ்ம" "ஆதித்யோ ப்ரஹ்ம" என்றற் றொடக்கத்து வாக்கியங்களோடே இனம்பெறு மென்பதற்குயாதும் ஐயுறவில்லை. இத்திறம் உண்மைப்பொருள் சற்குரு கடாக்ஷமும் சத்திநிபாதமும் இல்லாதார்க்கு விளங்குதல் மிகவும் அரிதாம். (சுக)

கழுதொடு காட்டிடை நாடகமாடி=பேய்களோடு சுடுகாட்டினிடத்து நடனஞ்செய்து. சுடுகாடாவது ஊருக்குப் புறத்திலுள்ள புறங்காடாம். இதில் பூதங்களும், பேய்களும், பிசாசுக்களும் வாசஞ் செய்யும். இவைகளெப்பொழுதும் ஜீவர்களை யிடர்ப்படுத்தி அதஞ் செய்வதையே தொழிலாகப் பூண்டிருக்கும். மஹாசமுத்திரத்தின் ஜலமானது பிரவாகங்கொண்டு கரைகடந்து போகாவண்ணம் அச்சமுத்திரத்தின் மத்தியிலுள்ள வடவைத்தீ அப்பெரும் வெள்ளத்தைக் கிரஹணஞ் செய்து நிற்பதுபோல் பரமேசுவரனும் எண்ணிறந்த ஊர்கடோறும் அடுத்துள்ள எண்ணிறந்த சுடலைகளில் வசிக்கும் பூதம் பேய் பிசாசங்கள் வரம்புகடந்து சென்று சர்வப்பிரஜைகளையும் இடர்ப்படுத்தாதபடி அவைகளுக்குத் தலைவனான மயானருத்திரனை யதிஷ்டித்து அவைகளோடு நடனஞ் செய்யாநிற்பன். சங்கரோ பகவர்னுத்யோ ரரக்ஷ ஸகலஃ ப்ரஜஃ=பகவானும் ஆதித்தியருமான சங்கரர் சகலப்பிரஜைகளையும் ரட்சித்தார்" என்று சரபோப நிடதமும், "யஇமாந் லோகா நீசத ஈசநீபிஃ=எவர் இந்த லோகங்களை யெல்லாம் நியமன சக்திகளினலே ஆளுகின்றார்" என்று சுவேதாசுவதரோபநிடதமுஞ் செப்பியவாறு எல்லாப் பிரஜைகளையும் இரட்சித்தல் சிவபெருமானுக்குரிய அருட்குணமாகும். ஆதலின் பேய்களோடு நடனஞ்செய்கின்றானென்று சூசிப்பிக்கப் பட்டது. இதனல் சிவபெருமான் லோகோபகாரமாய்ச் செய்யும்

அருளுடைகம் எவ்வாற்றானுந் தாழ்வாக வெண்ணப்படமாட்டாது. இஃதிங்ஙனமிருக்க, வேறு பொருளாவது-பரமபதியாகிய சிவபெருமான் சர்வ சங்கார காலத்தில் சகல ஜீவகோடிகளையும் சர்வலோகங்களையுஞ் சங்கரித்த போழ்து அவையாவும் சுடலையாய்விடும். அத்தகைய சுடுகாடென்னும் மகாமசானத்தில் அவ்வெம்பெருமான் தானே முதற்பெருங் கடவுளென்பதூஉம், தனக்கு மேலொரு கடவுளின்றென்பதூஉம், யான்பரம் யான்பரம் என்று இறுமாப்பெய்தியுழலும் மாலயன் முதலிய கடவுளர் யாவரும் இடையே இறந்தழிந்தொழிடும் பசுக்களென்பதூஉம், தாமொருவனே ஆதியந்தங்கடந்த முன்னைப்பழம்பொருட்கும் முன்னைப்பழம்பொருளாயுள்ளவனென்பதூஉம், தன்னையடைந்து உள்ளன்போடு வழிபடும் மெய்யன்பரே மீளாமுத்திப்பேறுபெற்றுய்வரென்பதூஉம்நிலைநிறுத்தும்வண்ணம் அண்டங்களையெல்லாம் எடுத்தண்ணுங்கணங்களோடும் தாண்டவம் புரிந்தருளுவன். அக்காரணத்தால் "ஈமத்தாடி" "சுடலையாடி" முதலிய பல அரியநாமங்கள் அப்பெருமானுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. "நள்ளிருளினட்டம் பயின்றாடுநாதனே" என்ற மலர்மொழியின் கருத்தும் இதுவேயாம். இனி ஞானார்த்தமாவது:—பிருதிவி முதல் நாதமீறாகச் சொல்லப்பட்ட முப்பத்தாறு தத்துவங்களும் ஞானாக்கினியால் சுட்டெரிக்கப்பட்டு ஒழிந்துநின்ற விடமாகிய புருஷமத்தி சர்வசூன்ய மயானமென்னும் ஞானச்சுடலை யாகும். இந்தவிடம் இராப்பகலற்றதாயும், நினைப்பு மறைப்பு ஒழிந்ததாயும், பரவெளியாயுமிருத்தலால் ஜீவன்முத்தர்களனைவரும் இதையே நிலையிடமாக நித்தமும் பற்றியிருப்பார்கள். ஸ்ரீ தாயுமானசுவாமிகளும் "இராப்பகலில்லாவிடமே யெமக்கிடமென்றறிந்தே" என்றும் "நினைவொன்றும் நினையாமல் நிற்கினகமென்பார்" என்றுஞ்சாற்றியருளினார். சாதாரணமாகப் பேயானது ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம் முதலான தொழில்களற்றிருத்தல் போல ஜீவன்முத்தர்களாகிய சிவஞானிகளும் பேய்க்குணமருவி அது, தான் என்று அபிமானிக்கப்படும் உடம்பினழகையும், அவ்வுடம்பின் பாதுகாப்புக்கு இன்றியமையாது வேண்டப்படும் அகப்பற்று புறப்பற்று என்னும் இருவகைப் பற்றுக்களையு மொழித்து வானகமும் மண்ணகமும் வணங்கும்படி வீற்றிருப்பார்கள். அவர்களோடு சர்வேசுவரனாகிய

சிவபெருமானும் எக்காலமும் ஆனந்த நடனம் புரிந்தருளுவன். அந்நடனங் காரணமாக அப்பேரருளாளனுக்குப் "பேயோட்டாடி" என்னுந் திருநாமம் அவனது எண்ணிறந்த நாமங்களில் ஒன்றாகப் படிக்கப்பட்டுள்ளது. ஜீவன்முத்தர்கள் பேய்க்குணமருவி யிருப்பார்களென்பதற்குப் பிரமாணம் "பாலரொடு பேயர்பித்தர்பான்மையென நிற்பதுவே-சீலமிகு ஞானியர்தஞ் செய்கை பராபரமே" என்னுந் தாயுமானசுவாமிகள் திருவாக்கும், "பாலருடனுன்மத்தர் பசாசர் குண மருவிப் பாடலினோடாடலிவை பயின்றிடினும் பயில்வர்" என்னுஞ் சிவஞானசித்தி செய்யுளும், "நண்பகல் கங்குல்காணார் ஞானநல் லறிவேகொண்டு, கொன்புனை பித்தர்பாலர் பிசாசர்தங் கொள்கையாளர்" என்னும் பரஞ்சோதி முனிவர் பான்மொழியும், "பீளையுடைக் கண்களாற் பின்னைப் பேய்த்தொண்டர் காண்பதென்னே" என்னும் ஸ்ரீவாகீசப் பெருந்தகையார் திராவிட சூக்தியும் நிதரிசனமாம். அன்றியும், ஞானசம்பந்தப் பெருமானும்,"பேய் பேயென்ன வருவா ரவரெம் பெருமா னடிகளே" என்றருளிச் செய்தனர். (சஉ).

பவனெம்பிரான்=பவன் என்னுந் திருநாமமுடையவன் எனக்குத் தலைவன். பவன்=எக்காலத்தும் எவ்விடத்து முள்ளவன். அஷ்டமூர்த்தங்களில் பிருதிவியென்னுந் தநுவில் சிவனார் பவராய் விளங்குதலால் "ப்ருதிவீயோபவஃ" என்று ருக்வேதங் கூறுகின்றது. சராசரப் பொருள்களனைத்துந் தோன்றுவதற்கு இருப்பிடமாயிருத்தலால் யோகத்தானும், கோசங்கள் யாவும் அச்சொல்லைச் சிவத்துக்கே யுரிய நாமமாகக் கூறுதலால் இடுகுறியானும், பவநாமம் பரமேசுவரனையே குறிக்கும் யோகரூடிப்பெயராம். இப்பொருளையே சுவேதாசுவதரோபநிடதமும் "தம்விஸ்வரூபம் பவபூதம்=அவன் விசுவரூபன் பவபூதன்" என்று சாற்றியது. பவன் முதலிய அஷ்ட நாமங்களும் (பவன், ஸர்வன், ஈசானன், பசுபதி, உருத்திரன், உக்கிரன், பீமன், மஹாதேவன் என்பவைகளாம்) சிவனாருக்கே சிறந்தனவா மென்பது யாவரானும் மறுக்கவொண்ணாத் துணிபாம். அஃதெங்ஙனமெனின், எக்காலத்தும் எவ்விடத்தும் உண்மையால் பவன் எனவும், எல்லாவற்றையுஞ் சங்காரஞ் செய்தலால் சர்வன் எனவும், உபாதியில்லாத பரமைசுவரிய விசிட்டகுண முடைமையால் ஈசா

-னன் எனவும், பசுபாசங்களுக்கு நாயகமா யிருத்தலால் பசுபதி என வும், சம்சார ரோகத்தை உருகச் செய்தலால் உருத்திரன் எனவும், சூரிய சந்திராதி ஒளிகளால் அடக்கப்படமாட்டாமையால் உக்கிரன் எனவும், எல்லா வான்மாக்களையும் நியாமகஞ்செய்து அவற்றுக்கு அச்சமுண்டாக்குதலால் பீமன் எனவும், மஹத்துவமும் பிரகாசமு முண்மையால் மஹாதேவன் எனவும் சிவனுர் புகழப்பட்டனர். அது பற்றியே ருக்வேதம் "ப்ருதிவ்யோபவஃ-ஆபச்சர்வஃ-அக்நேருத்ரஃ-வாயுர்பீமஃ - ஆகாசஸ்யமஹாதேவஃ-ஸூர்யஸ்யோக்ரஃ-சந்த்ரஸ்ய ஸோமஃ- ஆத்மாநஃ பசுபதிஃ=பிருதிவியிற்பவராயும், அப்புவில் சர்வராயும், தேயுவில் உருத்திரராயும், வாயுவில் பீமராயும், ஆகாசத்தில் மஹாதேவராயும், சூரியனில் உக்கிரராயும், சந்திரனில் சோமராயும், ஆத்மாவில் பசுபதியாயும் (விளங்குகின்றார்)" என்று விளக்கிற்று. உண்மை யிவ்வாறிருக்க, அறிவுள்ளீடில்லாத சிலபாஞ்சராத்திரிகள் புராண வசனங்களையே முக்கியப் பிரமாணமாகக்கொண்டு குணமூர்த்தியாகிய உருத்திரர் பிரமனுடைய நெற்றியிலிருந்து தோன்றிய பொழுது ரோதனஞ்செய்தபடியால் உருத்திரர் என்னும் நாமம் பெற்றாரெனவும், அவர் போக்கொணாத பாபியா யிருந்தபடியால் மீண்டும் மீண்டும் அழுதாரெனவும், அவரது பாபவிமோசனார்த்தமாகப் பிரமமூர்த்தி பவன், சர்வன் முதலான எழுபெயர்களைத் தந்தாரெனவும், இழிவாகப் புலம்புவார்கள். அந்தோ! இவர்களிவ்வாறு பிதற்றுதலால் உய்த்துணரக் கிடக்கின்றது யாதெனின், போக்கொணாத பாவங்களை யெல்லாம் 'போக்கும் பேராற்றல் உபநிஷத் விசிட்டமான சிவநாமங்களுக்கே இயல்பிலமைந்ததன்றி வாசுதேவ நாமங்களாகிய விஷ்ணுவாதி நாமங்களுக்கு அத்துணையாற்றல் இல்லையென்பதே யாம். கமலத்தண்ணல் தியான மாற்றுழி அவனது புருவ நாப்பண் பரசிவ வருளால் பூவையோர் பங்கன் அழுதுகொண்டுதித்த அபிநய வைபவம் கல்வி, கேள்வி, அறிவு, முதலியவற்றாற் சிறந்த வல்லார்வாய்க் கேட்டுத் தெளிதலே சிறப்புடைத்து. அவ்வரிய வுண்மை பிரம நிஷ்டாபர ரல்லாதார்க்கு விளங்குதல் வெகு துர்லபம். அன்றியும் அங்ஙனந் தோன்றிய உருத்திரர் கிருத்திய கர்த்தாக்களுடன் ஒருவராகப் படிக்கப்பட்ட ஸம்ஹார ருத்திரமூர்த்தி

யின் அம்சரேயன்றி சகல சமயாதீ தாத்துவித சித்தாந்த சைவர்கள் பரவும் துரீய ருத்திரராம் பரசிவப்பிரபு வன்று. (சரு)

உ-வது அறிவுறுத்தல்.

யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்= நான் பிறவித்துன்பத்துக்குச் சிறிது மஞ்சேன், இறத்தலுக்கு என் செய்யக்கடவேன். பிறத்தல் துன்பம் இறத்தல் துன்பத்தினும் அறக்கொடிது என்பதனை யொருவாறு விளக்குதும். ஆன்மாவானது சூக்ஷ்ம சரீரத்தோடு பிதாபுசிக்கும் அன்னபானத்துடன் சென்று அவனுதரத்திற் றங்கியிருந்து பிறகு அவனிடத்துண்டாகிய சுக்கிலம் மாதாவிடத்துண்டான சுரோணிதத்தில் பவளப்பையில்முத்தை வைத்ததுபோல் பதிகிறவவதரத்து பிராணவாயுவை வாசனமாகவும் மனதை வழியாகவுங்கொண்டு சுக்கில சுரோணிதத்தின் தலைப்பிலே பதியும். அங்ஙனம் பதிந்து கன்மத்துக்கீடாக மூன்றரைக்கோடி உரோமத்துவாரமும், எழுபத்திராயிர நாடியும், வாயுவிற் பிரதானமான தசவாயுவும், நவத்துவாரமும், எண்சாணுடம்பும், எழுதாதுவும், ஆறுதாரமும், ஐந்துபொறியும், நாலுகரணமும், மூன்று மண்டலமும், இரண்டுவினையும், இவையிற்றை யொன்றெனப்போர்த்த புறத்தோலுமாக ரூபீகரிக்கும், அப்படி ரூபீகரித்து மாதாவின் கருப்பாசயப் பையில் நாளுக்குநாள் அவயவங்களெல்லாமுண்டாய் ஒரு வடிவாகத் திரளும். பிறகு தாய்புசிக்கு மாகாரத்தை அறுசுவையடைவாக நாபிச்சூத்திரத் துவாரா ஏற்றுக்கொண்டு அந்த அன்ன ரசத்தின் மிகுதியாலே அந்தக்கரணங்களுண்டாக அவற்றால் சுகதுக்கங்களை யநுபவிக்கும். பிறகு பூர்வ ஜன்மங்களிற் செய்த புண்ணிய பாவங்கள் புத்தியிற் சொற்பனம்போல் வந்து தோன்ற அக்கணமே சுழுமுனை நாடி யடைப்பட்டு இடைகலையும் பிங்கலையுந் திறக்க பிராணவாயு பிரவேசித்து மேல்நோக்கி நாசித் துவாரங்களினாலே நாளொன்றுக்கு இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசமாக உச்சாரணஞ் செய்யும். அக்காலத்தில் தானடைந்துள்ள கர்ப்பவாசம் மிகவும் இழிவானதென்றும், அதனால் மிக்க வேதனையேயுண்டாகிறதென்றும், கர்ப்பத்தினின்றும் பிறந்த போழ்தே சாக்ஷாத்

சர்வேசுவரனுடைய திருவருளால் ஞானசிரியன் திருவடியடைந்து எக்காலத்திலும் அழிவில்லாது நித்தியமாய் விளங்கும் சிவசாக்ஷாத்காரம் பெற்று அவலமாகிய பிறவிப்பிணியை ஒழித்துவிடக் கடவேனென்று விசாரித்துக்கொண்டிருக்கும். இக்கருத்தையே கர்ப்போபநிடதமானது "யதியோந்யாம் ப்ரமுச்யேயம் ப்ரபத்யே பரமேச்வரம், பர்க்கம் பசுபதிம்ருத்ரம் மஹாதேவம் ஜகத்குரும்=யோனியை விட்டு வெளிவருவேனாயின் பரமேசுவரனும், பர்க்கனும், பசுபதியும், ருத்திரனும், ஜகத்குருவுமான மகாதேவனைச் சரணமடைவேன்" என்று புகன்றது. இவ்வாறு விசாரித்துக்கொண்டிருக்கும் போழ்தே கருப்பாசயப்பை யுறுத்தலினால் பெரிய சற்பாறையின் கீழ் அகப்பட்டானொருவன் நெருக்கப்பட்டு துயரமடைவதுபோல் மிகவுந் துயரமடைந்து உளமழிந்து சோரும். அன்றியும் கருப்பாசயத்து நீராகிய வெள்ளம் மீக்கொண்டு நிற்கையினால் சமுத்திரத்தில் மரக்கலத்தினின்றும் வீழ்ந்தமிழ்ந்தினவன் துயரமடைவது போல் துக்கித்துப் புத்திமயங்கியிருக்கும். மேலும் தாயின் உதாரக்கினி சுடுகையினால் நெருப்பினின்று நீங்காமலிருக்கின்ற இருப்புக் குடத்தில் வைக்கப்பட்டவன் துயரமடைந்து ஆவிசோர்வதுபோல் துன்புறும் இதுவுமல்லாமல் இருப்பூசியைக் காய்ச்சி சரீரத்தில் தொளைத்திடப்பட்டவன் அடையும் துன்பத்தைப் பார்க்கிலும் எண்மடங்கு துயரமடைந்து அழுந்தும். இவ்வாறு துயரத்திலழுந்தி பீதியடைந்து மெய்மறந்திருக்கின்றபோது முப்பத்திரண்டுநூறுயிரத்து நாற்பதினாயிரம் சுவாசங்கழிந்து உதரகன்மந் தொலையவே தாயினிடத்துண்டான பிரசூத வாய்வு பிரவேசித்து உடலை மடக்கித் தலைகிழாகத் தள்ளும். அப்பொழுது ஆன்மாவானது தன்பலமெல்லாங் கெட்டு மிகவும் மயக்கமடைந்து முன்னெண்ணியிருந்த நல்ல நினைவுகளையெல்லாமொழித்து ஆலையிலே நெருக்கப்படுங் கரும்புபோல் தாயின் யோநித்துவாரத்தில் நெருக்கப்பட்டு சரீரத்துடன் பூமியில் விழும். பிறவித்துன்பம் இவ்வாறு பயத்தையுண்டுபண்ணுதலால் மேற்சொன்ன கர்ப்போபநிடதமானது "கர்ப்பவாஸே மஹத்துக்க:-கர்ப்பவாசமானது மகத்தாகிய துக்கம்" என்றுவற்புறுத்தியது.

இனி இறத்தல் துன்பமோ இதனினும் எண்மடங் கதிகமாம். அதனைச் சுருக்கச் சொல்லின் ஐம்பொறிகளும் அறிவழிந்து சரீரஞ்

சஞ்சரிக்காமல் கிடையாய் விழுந்து கிடக்கையில், ஆன்மாவானது தனக்கெதிரிலுள்ள பொருளையும், பூவையும், பூவையரையும் நினைத்து இனியிவைகளை யநுபவிப்பார் யாரோவென்றும், இவைகளை விட்டு நீங்குங்காலம் நமக்குவந்து வாய்த்ததே யென்றும், நாம் நமது, நமது என்று அதிகமாய் அபிமானம் வைத்திருந்த இவை யாவும் இப்பொழுது அந்நியமாயிற்றேயென்றும், பாந்தள் வாயிற் பற்றிய தேரையைப் போல் கலக்கங்கொண்டு துயரமடைந்து ஆவி சோரும். அன்றியும் தனக்கென ஓரறிவுமில்லாமல் செய்கையற்று பிராணன் மாத்திரம் நீங்காதிருக்குந் தருணத்தில் முதல் முதல் கெடுவது நேத்திரயாதலால் கண்பஞ்சடையும். முதல் கண்கெட வேண்டிய காரணம் யாதெனின், ஆன்மாவானது மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளினும் ஒப்பவிற்பினும் கண்ணிந்திரியத்தைப்போல் மற்ற இந்திரியங்கள் சேய்மைக்கண்ணுள்ள விஷயங்களை வியாபித்தறியமாட்டாது தம்மாட்டு வந்த விஷயங்களையே அறிகையாலும், கண்ணிந்திரியமோ தன்னிடத்து வந்துற்ற விஷயங்களையும் தூரத்திலுள்ள பொருள்களையும் அறிதலாலும், எல்லா வுறுப்புக்களிலும் கண்ணே பிரதானமாயிருத்தலாலும் முதல் முதல் கெடுவது கண்ணிந்திரியமாகும். இவ்வாறு கண்கெட்டுப் பஞ்சடையவே அருகிலுள்ளோர் வடிவம் தனக்குப் புலப்படாது. புலப்படாதாகவே அவர்களை மீளவும் பார்க்கவேண்டுமென்னும் அவா தன்னுள்ளத்தின்கண் அதிகரித்தெழ, விழித்து விழித்துப்பார்க்கும். அங்ஙனம் பார்த்துந் தன்னெண்ணம் நிறைவேறப் பெறாமையினால் அல்லுற்றழுந்தும். பிறகு காது செவிடுபடும். படவே அவர்கள் பேசும் வார்த்தைகள் தனக்குக் கேளாது. பிறகு பரிசவுணர்ச்சி கெடும். கெடவே அவர்கள் செய்யும் உபசாரங்கள் தனக்குத் தெரியாது. பின்னர் நாவிழுந்துபோகும். போகவே அவர்களைத்தான் அழைக்கக் கூடாமையாகும். பின்னர் நாசியில் கந்தவுணர்ச்சியறும். அறவே அவர்கள் தனக்குக்கொடுக்கும் வஸ்துக்கள் இன்னவை யென்று அறியக்கூடாமையாகும். இவ்வாறு இவ்வைம்பொறியும் ஒன்றின்பின்னொன்றாகக் கெடுவதுமன்றி ஐயமேலிடுதல் முதலிய அபாயங்களால் ஏககாலத்தில் புலனீங்கி அறிவழிந்து கெடுதலுமுண்டு. அப்பொழுது ஆன்மா படுந்துபரம் அளவிட்டுச் சொல்ல

முடியாது, ஆகவே "பட்டிடப்படுந்துயர் பகரற்பாலதோ" என்றும், "மரிப்பதி னருந்துயர் மதிக்கின் மற்றிலை" என்றும் சிவதருமோத்தரங் கூறிற்று. ஆளுடைய வடிகளும், மற்றோரிடத்தில் "சாதல் சாதல் பொல்லாமை" என்று மரணவேதனையின் கொடுமையை யாவரும் நடுக்கங்கொண் டுணர்ந்து உய்யுமாறு கூறினரே யன்றித் தன்பொருட்டன்று. இத்தகைய கொடிய மரணவேதனையையும், தேக அநித்தியத்தையும், ஆன்மாவின் சுதந்தர ஹீனத்துவத்தையும், யாதாமொருவர் தனிமையாயிருந்து சிறிதுநேரம் சிந்தித்துப் பார்க்கின், உடனே உயிர்க்குறுதியைத் தேடிக்கொள்ள யாதோரையமுமிராதென்பது திண்ணம்! திண்ணம்!! திண்ணம்!!! (சச)

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வால் மன்நின்பால்— தாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டி= பிரமன், விஷ்ணு, இந்திரன் முதலான தேவர்கள் உன்னைத்துதிப்பதுந் தாம்செல்வப்பெருக்கோடிருந்து சுகவாழ்வு வாழும்பொருட்டே. மனத்தை யுன்னிடத்துப் பதியச் செய்வதுந் தாமுயர்வடைந்து தம்மை யாவரும் வணங்க விரும்பியே. இதனால் எப்படிப்பட்ட உயர்ந்த தேவர்களாயினும் சிவபெருமானைச் சித்தசுத்தியுடன் திரிகரணங்களால் ஆராதனை செய்தாலன்றி அரிய ஐசுவரியங்களையும், ஈறிலாப் பதங்களையும் அடையமாட்டார்களென்பது நிரூபிக்கப்பட்டது. அன்றியுஞ் சிவாராதனையே மற்றெல்லா வாராதனங்களினுஞ் சிறந்ததென்பதூஉம், மிகமேலான தென்பதூஉம் நாட்டப்பட்டது. "தவச்ரியே மருதோ மர்ஜயந்த-ருத்ராயத்தே-ஜநிமசாரு சித்ரம்பதம் யத்விஷ்ணோருபமன்ய தாயிதே" என்றற்றொடக்கத்து ருக்வேதவசனத்தில் சமஸ்ததேவர்களும் ரௌத்ரமாகிய சிவலிங்காராதனத்தால் தங்கள்தங்கள் ஐசுவரியங்களை யடைந்தார்களென்றும், விஷ்ணுவானவர் சிவபூசைசெய்தே பரமபதவாழ்வு எய்தினரென்றும் கூறப்பட்டுள்ளது. இன்னும் அடியிற்குறிக்கும் பிரமாணங்களும் இவ்வுண்மையினை வலியுறுத்தும்:-வண்டுளருந் தண்டுழாய் மாயோனிறுமாப்பும், அண்டர்தொழ வாழுன்னிறுமாப்பு மாலால - முண்டவனைப் பூசித்த பேறென் றுணர்ந்திலையால்" (திருவிளையாடற் புராணம்). "வான மேத்த யான் வைகுந்த வாழ்வு பெற்றதுவும், ஞான நான்முகன் சத்திய வுலக நண்ணியதும், ஏனை விண்ணவர்

தத்தம் வாழ்க்கை யெய்தியதும், ஆனுயர்த்தவ னருட்குறி யருச் சனைப் பயனால்" (காஞ்சிபுராணம்). "குடங்கை நீரும் பச்சிலையும் இடுவார்க் கிமையாக்குஞ்சரமும் - படங்கொள் பாயும் பூவணையுந் தருவாய் மதுரைப்பரமேட்டி" (திருவிளையாடற்புராணம்). இதனால் உயர்ந்தபடியிலுள்ள பெருந்தேவர்கள் பதங்களனைத்தையும் ஆரணத்து அந்நியமிலாச் சிவார்ச்சனையே தருமென்பது சுருதி சம்மதமாம். "சிவனை யாவரே யருச்சனை செயாதவர் சிவன்மற்-றெவரை யாயினு மருச்சனை யியற்றியதுண்டோ" என்னுங் காஞ்சிபுராணச் செய்யுளையு மோர்க. (சரு)

நாயடியேன்-பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுனைப் பரவுவனே=நாயடியேனாகிய யானும் பாழாகிய பிறவித்தளையைச் சேதிக்கும் பொருட்டு உன்னைத் துதிக்காநின்றேன். தேவர்களனைவரும் தாமுயர்ந்து தம்மை யாவருந்தொழும்வண்ணம் உன்னைத் துதித்தலால் நானொருவன் கொடிய ஜனனமரண சம்சாரத்துக்குப் பயந்து அது நீங்கும்பொருட்டு உன்னைச் சரண்புகுந்து உன்னையே துதிக்கா நின்றேன். அயன், அரி முதலிய தேவர்க ளனைவரும் கொடிய பவப்பிணி யணுகப்பெற்றவர்களெனவும், அவர்களும் வெல்லக்கூடாத அப்பிணியை யகற்றுபவன் தேவதேவனாகிய சிவபிரானெனவும் இதனால் நிச்சயிக்கப்பட்டது. அன்றியும், அச்சிவபிரானே மேற்படி தீப்பிணி யற்றவனாகலின் அப்பிணியினின்றும் நிவிர்த்தி செய்விக்கும் பேராற்றல் அவ்வெம்பெருமானுக்கே இயல்பிலமைந்ததென்பதூஉம், ஜனனமரணப் பிணிப்புண்டு அலைவாரைக் காத்தல் அப்பிணியால் வருந்தும் மற்றவராகிய அயனாதியரால் இயலா வென்பதூஉம், அந்தப் பிணியற்ற மும்மலரஹித முக்கண் மூர்த்தியே அதனிடத் தச்சமுற்ற முமூட்சுக்களால் வழிபடத்தக்கவனென்பதூஉம் நாட்டப்பட்டது. அதனாலன்றோ சுவேதாசுவதரோபநிடதமானது. அஜாத இத்யேவ கஸ்சித்பீரு: ப்ரபத்யதே-ருத்ரயத்தே தக்ஷிணமுகம் தேநமாம் பாஹிநித்யம்=பிறப்பில்லையென்றே பயந்தவனொருவன் ஒ ருத்ரா! உனது தென்றிசைநோக்கிய திருமேனி யாதுளது அதனை வணங்குவான்-அதனால் என்னை நித்தியமுங் காப்பாயாக." என்று உண்மை யறிவுறுத்தியது. ஆயின், "நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே-நாராயணாத் ருத்ரோ ஜாயதே=

நாராயணனிடத்தில் பிரமா உண்டாகின்றான், நாராயணனிடத்தில் உருத்திரன் உண்டாகின்றான்" என்று நாராயணோபநிடதங் கூறியுள்ளதே அது பசையற்ற மொழியோ வெனின்! அற்றன்று. அடியிற் குறிக்கப்படும் உபநிடதப் பிரமாண வசனங்களின்படி பிரமன், விஷ்ணு, உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளுக் கப்பால் பரமேசுவரனாகிய உமாநாதன் துரியமூர்த்தியாகச் சொல்லப்பட்டமையாலும், சுருதிகளில் ஒருவனையே பெற்றவனாகவும் பிறந்தவனாகவுங் கூறுவதாகப் பொருள்கொண்டு அவைகளை அப்பிரமாணமாக்குதல் எவ்வாற்றானுங் கூடாமையாலும், பிறவாத்தன்மையைத் துரியருத்திரனிடத்தும் பிறப்பைக் காரியமூர்த்தியாகிய குண ருத்திரனிடத்துஞ் சேர்த்திடல் வேண்டுமென்பதே சர்வ வேதாந்த சம்மதமாகும். நாராயணோபநிடதங் கூறியபடி நாராயணனிடத்துப் பிறந்தவன் அவனோடு ஒருவனாகப் படிக்கப்பட்ட குணருத்திரனன்றி துரிய ருத்திரனல்ல-துரியருத்திரனுக்கு எஞ்ஞான்றும் எவ்விடத்தும் பிறப்புமில்லை இறப்புமில்லை. மற்றைக்கடவுளரைப்போல் ஐயந்தியுங் கிடையாது. எனவே புருஷவீரியாநுப் பிரவேசமும், மாதுரு கர்ப்பவாசமும் யோநிஜத்வமும் சிவத்துக் கில்லையென்பதே தேற்றம். அதுபற்றியே "எல்லாப் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ்,சொல்லாற்றெளிந்தேம்நஞ்சோணேசா-இல்லிற்,பிறந்த கதை யுங்கேளேம் பேருலகில் வாழ்ந்துண், டிறந்தகதை யுங்கேட்டிலேம்" என்று சைவத்திருவாளர் கட்டளையிட்டருளினார். என்னை! பரமபதநாதனான ஸ்ரீமந் நாராயணனுடைய அவதார வியவகாரங்களெல்லாம் பிரமன் முதலியோர் செய்த பிரார்த்தனைக் கெளிவந்து ஏனையோர்போல் வினைவயத் தாகாது சுவேச்சா மாத்திரத்தாற் செய்யப்பட்டதெனவும், அவ்வப்போது கொண்டமானுடபாவ முதலியவற்றால் அநர்த்தரூபமாய்த் தோன்றிய சோகம்,மோகம் முதலானவெல்லாம் அந்தந்த அவதாரங்கட்கியைந்த அபிநய மாத்திரையே யன்றி பிறிதல்லவெனவுங் கொள்ளலாகாதோ வெனின்! அப்படிக் கொண்டாலும் அவ்வித வநர்த்தங்கட்குஞ் சிறிது மிடனாகாத சிவபிரான் மஹிமையினை வரையறுக்க யார்தரம். கமலக்கண்ணனை ஜீவனென்று மற்றிருவரோடுஞ்சேர்த்துவேதம் ஒதுக்கியபடியால் அவனது அவதாரத்திற் கொண்ட சோகமோகதாபங்கள்யாவும்

அவனுக்கு அவ்வப்போதுண்டான ஜீவகுணங்களா மென்றே தெள்ளிதிற்றுணியப்படும்-அவனைப் பரம்பொருளாகக்கொண்டால் உண்டாகு மிழுக்கினை, ஸ்ரீதாயுமானசுவாமிகள் "அல்லலாந் தொழில் படைத்தே யடிக்கடியுருவெடுத்தே, மல்லன்மா ஞாலங்காக்கவருபவர் கடவுளென்னிற், றொல்லையாம் பிறவிவேலைத் தொலைந்திடா திருணீங்காது, நல்லது மாயைதானும் நாமெனவந்து நிற்கும்" என்று திருவாய்மலர்ந்தருளினமையுங் கவனிக்க. இனி திரிமூர்த்திகள் ஜீவர்களென்று மேற்குறித்த சுருதிவசனங்கள் வருமாறு:—

(க) "ப்ரஹ்மவிஷ்ணு ருத்ரேந்த்ராஸ் ஸம்ப்ரஸூயந்தே நகாரணம்-காரணந்து ஸர்வைச்வர்யஸ் ஸம்பந்நஸ் ஸர்வேச்வர சம்புராகாச மத்யே த்யேய:"=பிரமவிஷ்ணு ருத்ரேந்திரர்கள் சிருஷ்டிக்கப்பட்டவர்கள். அவர்கள் காரணர்களாகமாட்டார்கள், காரணராவார் சர்வைசுவரிய சம்பந்நரும், சர்வேசுவரரும், சம்புவாயுமுள்ளவரே ஹிருதய வாகாசமத்தியில் தியானிக்கற்பாலர், (அதர்வசிகோபநிடதம்)

(உ) "அவஸ்தாத்ரயாதீதம்துர்யம் ப்ரஹ்மஸஞ்ஜ்ஞிதம் - ப்ரஹ்மவிஷ்ணு வாதிபிஸ் ஸேவ்யம்-ஸர்வேஷாம் ஜநகம்பரம் ஈசாநம் பரமம் வித்யாத்"=சாக்கிர முதலிய மூன்று அவஸ்தைகளுக்கதீதரும், துரீயரும், பிரமமென்று பேருள்ளவரும், பிரம விஷ்ணுவாதிகளால் சேவ்யமானவரும், சகலருக்கும் ஜநகரும், பரதத்துவமானவரும், பரமருமான ஈசானரையே அறியத்தக்கது. (பஞ்சப்ரஹ்மோபநிடதம்)

(௩) "அத்வைதம் சதுர்த்தம் ப்ரஹ்ம விஷ்ணு ருத்ராதீதம்-ஏகமாசாஸ்யம் பகவந்தம் சிவம் ப்ரணம்ய"=இரண்டற்றவரும், சதுர்த்தவாச்சியரும், பிரம விஷ்ணு ருத்திரர்களைக் கடந்தவரும், உபாசிக்கத் தகுந்த ஒருவருமாகிய ஷாட்குண்ய சம்பந்நரான சிவனை நமஸ்கரித்து. (பஸ்மஜாபாலோபநிடதம்)

(௪) "உமாஸஹாயம் பரமேச்வரம் ப்ரபும் த்ரிலோசநம் நீலகண்டம் ப்ரசாந்தம்........ஸப்ரஹ்மா ஸசிவஸ் ஸேந்த்ரஸ் ஸோக்ஷர: பரமஸ்வராட்-ஸயேவ விஷ்ணுஸ் ஸப்ராண:=உமாசகாயரும், பரமேசுவரரும், பிரபுவும், முக்கண்ணரும், நீலகண்டரும், ப்ரசாந்தரும்......(ஆகிய சிவத்தைத்தியானித்தே இருளுக்கப்பாற்

செல்வன்) அவரே பிரமா, அவரே சிவன் (ருத்திரன்), அவரே இந்திரன், அவரே அழிவற்றவர், அவரேபரமர், அவரே சொப்பிரகாசர், அவரே விஷ்ணு, அவரே பிராணன். (கைவல்லியோபநிடதம்).

(ரு) "அகாரம் ப்ரஹ்மாணம் நாபௌ உகாரம் விஷ்ணும் ஹ்ருதயே-ம்காரம் ருத்ரம் ப்ருமத்யே ஓங்காரம் ஸர்வேஸ்வரம் த்வாதஸாந்தயே"=அகாரமாகிய பிரஹ்மாவை நாபியிலும், உகாரமாகிய விஷ்ணுவை இருதயத்திலும், மகாரமாகிய உருத்திரனைப் புருவமத்தியிலும், ஓங்காரமாகிய சர்வேசுவரனைத் துவாத சாந்தத்திலும் தியானிக்கவேண்டும். (சரபோபநிடதம்)

(சு) தஸ்யாச் சிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்தித:-ஸப்ரஹ்மா ஸசிவஸ் ஸஹரிஸ் ஸேந்த்ரஸ் ஸோக்ஷர: பரமஸ்வராட்= அந்த (நாராயணாதி) இருதயாக்கினி சிகையிலே பரமாத்மா வசிக்கின்றனர். அவரே பிரமா, அவரேசிவன், அவரே விஷ்ணு, அவரே இந்திரன், அவரே அழிவற்றவர், அவரேபரமர், அவரே சொப்பிரகாசர். (தைத்திரீயோபநிடதம்)

(எ) "ப்ரஹ்மா விஷ்ணுச்ச ருத்ரச்ச ஸர்வேவா பூதஜாதய:- நாசமேவாநுதாவந்தி ஸலிலா நீவபாடபம்"=பிரமவிஷ்ணு ருத்திரர்களும், ஏனையவெல்லாவுயிர்களும், பிறந்தழியும் இயல்பினநெருப்பில் நீர்த்துளிபோல். (மஹோபநிடதம்)

(அ) "ஹேயாந் விஷ்ணவாதிகாந் ஸர்வாந்-சிவயேவ ஸதாத்யேயஸ் ஸர்வஸம்ஸார மோசக:=ஹேயகுண வடிவங்களையுடைய விஷ்ணு முதலிய தேவர்களைக் கைவிட்டு சர்வசம்சார பந்தங்களையும் நிவிர்த்திசெய்யுஞ் சிவபெருமானொருவரே (அரியருத்திரரே) சதா தியானிக்கற்பாலர். (பைப்பலாதோபநிடதம்)

(கூ) "ப்ரஹ்ம விஷ்ண் வீசா நேந்த்ராதீநாம் நாமரூப த்வாரா ஸ்தூலோஹ மிதி மித்யாத்வா ஸவஸாம்ஜீவ:=பிரமவிஷ்ணு ருத்ரேந்திரர்கள் நாமரூபமூலமாய்த் தூலதேகத்தோடு வியாபிக்கின்றவர்களாதலால் ஜீவர்களெனப் படுகின்றார்கள்.

(நிராலம்போபநிடதம்)

(ய)யஸ்யாங்கஜோஹம் ஹரிருத்ரமுக்ய:"=விஷ்ணுவையும் உருத்திரனையும் முன்னர்க்கொண்டயான் எவருக்குப் பிள்ளையோ- எனவே பிரமன், விஷ்ணு, உருத்திரன் என்று வரிசையாகப் படிக்

கப்படும் நாங்கள் மூவரும் யாரிடத்தில் பிறந்தோமோ.

(சரபோபநிடதம்)

(௰௧) த்ரிணேத்ரம் த்ரிகுணாதாரம் த்ரயாணம் ஜநகம் ப்ர பும்'' = மூன்று நேத்திரங்களை யுடையவரும், மூன்று குணங்களுக்கு ஆதாரமானவரும், பிரமன், விஷ்ணு, உருத்திரன் என்னும் மூன்று மூர்த்திகளுக்கு ஜனகருமான பிரபுவை.

(ப்ருஹஜ்ஜாபாலோபநிடதம்)

மேற்கூறிய உபநிடதப் பிரமாண வசனங்களால் திரிமூர்த்தி வேறு, அவருக்கு மேலான துரீயசிவன் வேறு என்பதூஉம், அவரே மோட்சதாதா வென்பதூஉம் தெற்றென நிரூபிக்கப்பட்டதன்றோ! ஆயின் பகவற்கீதையில் ஸ்ரீவாசுதேவன் தானே மோட்ச கர்த்தா வென்று கூறியிருப்பதோடு "எல்லாத் தர்மங்களையும் விட்டுவிட்டு என்னொருவனையே சரணகதியடை—நான் உன்னைச் சமஸ்த பாபங்களினின்றும் விடுவித்து மோட்சத்தை யடையும்படிச் செய்கிறேன், பயப்படாதே." என்னும் பொருள்தோன்ற "ஸர்வதர்மாந் பரித்யஜ்யமாமேகம் சரணம் வ்ரஜ—அஹம்த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ் யாமி மாசுசஃ" என்று முடிவு படுத்தியிருப்பது என்னையெனிற் கூறுதும். மேலே காட்டிய வேதாந்த வசனங்களின்படி ஸ்ரீவாசுதேவன் மும்மூர்த்திகளிலொருவனாதலானும், அவனை அயன், அரி, அரன் என்னும் மூவர்களுக்கு மேலான சதுர்த்தவாச்சிய மூர்த்தமாகச் சுருதிகள் நிச்சயிக்காமையானும், வைஷ்ணவ புராணங்கள் நான்கும், பன்னிரு ஆழ்வார் பாடல்களும் மூன்று மூர்த்திகளையும் விளக்கி அம்மூர்த்திகளுக்கு முதலாவான் மூரிநீர்வண்ணனே யென்று காத்தற்கடவுளையே குறிப்பிக்கையானும், கிருத்திய கர்த்தாக்களாகிய அம்மூவரை நகாரமென்றும், ஜீவர்களென்றும், பற்பல வேதவாக்கியங்கள் ஆங்காங்கெழுந்து ஒதுக்குகின்றமையானும், மூவரையுங் கடந்த தனிமுதலே மோட்ச கர்த்தாவென்பது வெள்ளிடைமலைபோல் விளங்காநிற்கும். ஆகவே ஸ்ரீவாசுதேவன் என்னையே வழிபடுக வென்றது உனக்கு ஆசாரியனாகிய என்னையே வழிபடுக என்றதுமல்லாமல் என்னிடத்தில் அம்புலிசூடிய சிவபெருமானைவழிபடக்கடவாய்-அல்லது என்னை அவனாகப்பாவித்து வழிபடுவாய் என்பதே உண்மையான உறுதிப் பொரு

ளாம்-"ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி=பிரமத்தை யறிந்தவன் பிரமமே யாவான்" என்னும் வேதவசனமும், "இட்டனைக் காண்பனவ னேவலரை யேவலரென்—றிட்டனையார் காண்பாரியம்பு" என்னுஞ் சைவத்திருவாளர் வாக்கும் இப்பொருளை வற்புறுத்தும். அல்லாமலும், "பஸ்யமேயோக மைச்வர்யம்=ஈசுவர சம்பந்தமான என்னுடைய ஐசுவரிய யோகத்தை (நீ) பார்க்கக்கடவாய்." என்னுங் கண்ணன் வசனமே தான் ஈசுவரனல்ல வென்பதையும், ஈசுவர சம்பந்த மெய்தினவ னென்பதையுந் தெளிவாய்த் தெரிக்கா நிற்கும் "தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்யேத் யத: ப்ரவ்ருத்த: ப்ரஸ்ருதா புராணீ=அந்த ஆதிபுருஷனையே நான் சரணமடைகின்றேன்-எந்த ஸ்தானத்தை யடைந்தவர்கள் மீண்டும் பிறப்பதில்லையோ அந்தஸ்தானம் தேடத்தக்கது." என்னும் மீண்டும் அவனது வசனமே தான் பிரபத்திசெய்யும் அடிமை யென்பதையும், தனக்கு ஈசுவரன் அந்த ஆதிபுருஷ னென்பதையும் வெளிப்படையாக விளக்கிற்று. ஆதலினன்றே, வேதஸாரத்தை வெளியிடவெழுந்த புராணங்களும் பரமசிவத்துக்கு அடுத்தவரும் அவரது சக்திமயமா யமைந்தவரும் ஸ்ரீமந் நாராயணரே என்று அறைகூவி நின்றன.

அமிர்த நாதோபநிடதமும் "ஓங்கார ரதமாருஹ்ய விஷ்ணும் க்ருத்வாது ஸாரதிம் - ப்ரஹ்மலோக பதாந்வேஷீ ருத்ரா ராதந தத்பர:=ஓங்காரம் என்ற ரதத்திலேறி விஷ்ணுவை சாரதியாகக் கொண்டு பிரமலோகபதத்தைத் தேடிச்செல்வான்-(துரீய) ருத்திராராதனையில் பேரன்புடையவன்" என்று புகழ்ந்தது. ஞானத்தாயாராகிய ஔவையாரும் ஸ்ரீமந் நாராயணன் சிவபக்த சிகாமணியும் உபாசக சிரேஷ்டனுமாதலால் அவனுடைய கருணைபலத்தினாலே பரமசிவன் திருவடிகளிற் பேரன்பு உண்டாகுமென்று கொண்டு "திருமாலுக்கடிமைசெய்" என்று ஆணைதந்தருளினர். இதனால் சைவர்கள் விஷ்ணுவைத் தூஷிக்கின்றார்க ளென்னுங் கூற்று முற்றும் அபத்தமாம். சைவர்கள் விஷ்ணு வாலயங்களுக்குச்சென்று ஸ்ரீ விஷ்ணுமூர்த்தியைத் திரிகரணங்களாலும் வழிபடுதல் உலகப்பிரசித்தம். பாஞ்சராத்திரிகளோ அவ்வாறு சிவாலயங்களுக்குச்சென்று சிவபிரானை வழிபடுவதில்லையாதலின் அவர்களே சிவநிந்தகர்

ளாவர். என்னை! கற்புடைய மாதர்கள் தங்கள் கணவரையன்றி வேறுபுருஷரை நாடாதவாறுபோல் பாஞ்சராத்திரிகளும் அவ்வாறு செய்கின்றார்களெனின், அது பொருத்தமின்மையென்பது காட்டுதும். ஒருவன்தன் நாயகியைப்பார்த்து நீ என்னையே சரணாகதியடைவாய், நானே உனக்கு உபாயமென்று கூறினால், நீயென்னையொழிந்த மற்றவர்களை நிந்தனை செய்யென்றும், அவர்களை யுபசரிக்கவேண்டாமென்றுங் கருத்தாமோ! நானே உனக்கு நாயகனாதலால் என்னையே பற்றியிருப்பாயென்றும், நீ கதியடைவதற்கு நானே காரணனன்றிப்பிறர் காரணரல்லரென்றும், பிறரை நாயகனாக நாடாதே என்றும் கருத்தாமன்றி வேறன்று. அதுபோல தனது சமயக்கடவுளுக்கு விரோதமாகப் பாவிப்பது குற்றமாகுமேயன்றி அவர்களை வணங்குவது குற்றமாகாது. தனது கணவன் வேறொரு வடிவிலுள்ளானென்றறிந்தும் அவனை நிந்திப்பது இழிபேயன்றி சிறப்பல்ல. அங்ஙனம் நிந்திப்பதால் தனது கற்புத்தன்மைக்குக் குறைவு நேரிடுவதோடு அவனுடைய முனிவுக்கும் இலக்காகவேண்டியிருக்கின்றதென்பது வெளிப்படை. ஆதலினன்றோ ஆழ்வார்கள் தங்கள் சமயத்தில் விஷ்ணுமூர்த்தியைப் பரம்பொருளாகப் பாவினார்களாயினும் சிவபிரானையும் திருவெண்ணீற்றினையும் ஆங்காங்கும் புகழ்ந்துள்ளார்கள். வைஷ்ணவர்கள் சிவன், அக்கினி முதலிய தேவர்களுக்கு அந்தர்யாமியான நாராயணனைத் தொழுதாலும் ப்ரபந்ந ஆஸ்ரமங் குலைந்துபோம் என்றும், பகவத் சேஷத்வத்தைப் பார்க்கிலும் அந்நிய சேஷத்வங் கழிகையே ப்ரதானம் என்றுங் கூறுவது என்னையோ! இது அன்பு மார்க்கமாகுமோ! சமரசமோ! இதன் விரிவை எமது ஸ்ரீ பஞ்சாக்ஷர அஷ்டாக்ஷர மந்த்ரார்த்த ஸங்க்ரஹ விளக்கம் என்னும் நூலில் பரக்கக் காண்க.

நிற்க "ஸர்வதர்மாந்" என்னுஞ் சுலோகமானது பகவற்கீதையின் இறுதியிலுள்ள பதினெட்டாவது அத்தியாயத்தின் அறுபத்தாறாவது சுலோகம். இதற்கு முன்னுள்ள (சுக-வது) சுலோகமாகிய "ஈஸ்வரஸ்ஸர்வபூதாநாம்" என்னுஞ் சுலோகமானது கிருஷ்ணனுக்கு அந்நியமான ஈசுவரனுடைய இருப்பைக் காட்டுகின்றது. (சுஉ-வது) சுலோகமாகிய "தமேவசரணங்கச்ச" என்னுஞ் சுலோகமானது அந்த ஈசுவரனுடைய சாசுவிதமான ஸ்தானத்தைச் சாற்று

கின்றது. (௩௬-வது) சுலோகமாகிய "இதிதே ஞான மாக்யாதம் குஹ்யாத்குஹ்யதரம்மயா விம்ருஸ்யை தத்ஸேஷேண யதேச்சஸி ததாகுரு=இவ்விதம் ரகசியங்களுக்கெல்லாம் அதிரகசியமான ஞான ஹேதுவாகிய சாஸ்திரம் என்னாலே உனக்குச் சொல்லப்பட்டது. இந்தச் சாஸ்திரத்தைப் பூர்த்தியா யாராய்ந்து எவ்வாறு விரும்புகின்றாயோ அவ்வாறுசெய்" என்னுஞ் சுலோகமானது கீதை மிகவும் ரகசியமானதென்று கூறுகின்றது. பின்னர் (௬௬-வது) சுலோகமாகிய "ஸர்வதர்மாந்" என்னுஞ் சுலோகமானது கிருஷ்ணனது மகிமையினை விளக்குகின்றது. இவ்வாறு கீதையின் உபசம்ஹார அத்தியாயத்தில் சர்வபூதங்களினும் அந்தர்யாமியாயும், தனக்கநந்நியமாயு முள்ள ஈசுவரனது இருப்பைச் சொல்லி, பின்னர் அவனது பிரசாதத்தால் அடையப்பெறும் பேற்றையும் விளக்கி, அநந்தரம் தன்னையே சரணாகதி யடையும்படிக்கூறி, தான் அதனால் மோட்சத்தைப் பெறும்படிச் செய்விப்பதாகவும் போதித்தமையால், கிருஷ்ணன் ஈசுவரனல்ல வென்பதூஉம், அவன் ஈசுவரன் றிருவடியை யடையச்செய்யும் ஸோஹம் பாவனை முதிர்ந்த ஈசுவர சம்பந்தமெய்திய பரமாசாரிய னென்பதூஉம், நன்கு ஸ்தாபிக்கப்பட்டது. இந்த உண்மையையே "அருவெனு மமலன்றன் அருளில னெனினுஞ் சார் - குருபர னருளுண்டேல் இனியொரு குறையுண்டோ - திருவடி தரவந்தார் திருவுள மிலரென்றால்-உறுதுயர் களைகின்றார்- ஒருவரு மிலைகண்டீர்" என்று பிரமகீதையும், "குரவர் தமக்கர்ச்சனைகள் கொடுப்ப தெமக்காகும் - விரவி லெமக்குப் புரிபிழையாசான் விடுவிப்பான் - கரவிலவர்க்குப் புரிபிழையெம்மாற் களைவாகா - பரம பதத்தைத் தருவ தொருத்தன் பணியன்றே" என்று விருத்தாசல புராணமும் பிரகாசப்படுத்தின. ஆகவே கீதாசாரியனாகிய எமது கிருஷ்ணமூர்த்தியை ஜகஜந்மாதி காரணனும் பரம்பொருளாக மயங்கி இடர்ப்படாது பரமாசாரியராக வழிபடுதலே கீதையின் அதிரகசியார்த்தமாம். "யஸ்யதேவேபராபக்திர் யதாதேவேததாகுரௌ=எவனுக்குத் தேவனிடத்தில் பூரணமான பக்தியுண்டு—தேவனிடத்தி லுள்ளதுபோல் குருவினிடத்திலு முண்டு" என்னும் சுவேதாசுவதரோபநிடத மந்திரத்தையுஞ் சிந்தித்துத் தெளிக. அதனாற்றான் ஆசிரியர் போதாயன முனிவரும் ஆன்மாக்

களை யாட்கொள்ளும் ஆசாரியன் திருமேனியில் சிவனைப் பூசிக்க வேண்டுமென்று விதித்தனர். சிவஞானசித்தியும் "பரப்பிரம மிவ னென்றும் பரசிவன் ருனென்றும் பரஞான மிவனென்றும் பரா பரன்ரு னென்றும்—அரன்றருசீர் நிலையெல்லா மிவனே யென்று மருட்குருவை வழிபடவே யவனிவன்ரு ஞயே" என்று வற்புறுத் தியது. அவ்விதியையே அர்ச்சுனனும் அஞ்ஞான்று அமர்க்களத்தில் அநுஷ்டிப்பவனாய்த் தனக்குக் கீதோபதேசஞ் செய்தருளிய கண் ணன் றிருமேனியில் சிவபூசை முடித்துக்கொண்டானென்று பார தங் கூறிற்று. ஆதலினன்றோ வியாசர் கிருஷ்ணர் இருவர்தவிர அர்ச்சுனனுக்குச் சமானமான சிவபக்தன் எங்குமில்லை யென்று நூல்கள் கூறுகின்றன. சிவபெருமானே முத்திநாதன் என்னும் உண்மை கீதோபதேசத்தால் அர்ச்சுனனுக்கு நன்கு விளங்கினமை யால் கீதோபதேச மானபிறகும் அவ்வுபதேசத்தின் பயனுகச் சிவ பூசையை மரண பரியந்தமும் விடாது செய்துவந்தனன். வேத சிரசுக்களுக்கெல்லாஞ் சிகையாகிய அதர்வசிகோபநிடதமும் தனது இறுதி மந்திரத்தில் "மோட்சமென்கிற சிவத்தைக் கொடுப்பவன் சிவனே யாகலின் அவனொருவனே மற்றெல்லாவற்றையும் விட்டுத் தியானிக்கத் தக்கவன்" என்னும் பொருள்பட "சிவயேகோ த்யே யச்சிவங்கரஃ—ஸர்வமந்யத் பரித்யஜ்ய" என்று குன்றின்மேலிட்ட விளக்குபோல் விளக்கியது. இதற்கு விரோதமாகக் கீதாவசனத்தை வியாக்கியானஞ்செய்தல் பொருத்தமின்ரும். ஆகையினலே, யாமும் சப்தக்குரவருள் ஒருவராயுள்ள எமது கண்ணபிரானை "மிக்கானை மறையாய் விரிந்த விளக்கை யென்னுள் - புக்கானைப் புகழ்சேர் பொலிகின்ற பொன்மலையைத் - தக்கானைக் கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்த - அக்காரக் கனியை யடைந்துய்ந்து போனேனே" என்று கசிந்துருகும் மனத்தோடு துதிக்கும் நியமத்தை நித்தியமும் பூண்டுள்ளேம். (சசு)

பாடுவன நால்வேதம்=நான்கு வேதங்களும் சிவபெருமானு டைய பெரும்புகழைப் பாடாநின்றன. வேதங்கள் நான்கனுள் இருக்கு வேதம் இருபத்தொருசாகையும், யஜுர்வேதம் நூற்றொருசாகையும், சாமவேதம் ஆயிரஞ்சாகையும், அதர்வணவேதம் ஒன்பது சாகையு மாயுள்ளன. இந்த ஆயிரத்து நூற்று முப்பத்தொரு சாகைகளில்

ஒன்றிலாவது தத்துவாதீதனாகிய பரமசிவத்தின் பெரும்புகழ் கூறப்படாமலிருக்கவில்லை. ஒவ்வொரு சாகையிலும் அவனது திவ்விய நாமங்களின் தொகுதியாகிய ருத்ரம் படிக்கப்பட்டிருக்கின்றது. ஏனைத் தேவர்களுக்கோ அத்துணைச் சிறப்பு கிடையாது. கற்புடைய ஸ்திரீயானவள் தனது கணவனுடைய பெருமையினைச் சமயம் வாய்த்த போதெல்லாம் புகழ்ந்து பேசுதல்போல் வேதநாயகியும் தனது நாயகனுடைய என்றுங்குன்றா மகிமையினைப் பலதிறத்தானுஞ் சிறப்பித்துப் புகழவேண்டித் தனது சாகைகடோறும் பரமேசுவர நமஸ்காரங்களையும், பரமேசுவர தோத்திரங்களையும், பரமேசுவர பாரம்யங்களைப் பலவிதமாக நிரூபிப்பதையுமே அமைத்துக் கொண்டனள். அன்றியும் வேதத்துரோகிகளாயுள்ளார் நடுவு நிலைகொன்று தன்னைக் கெடுக்காவண்ணஞ் சிவநாமதேய ரத்தின ரட்சாபந்தனமும் ஆங்காங்கு அமைத்துக்கொண்டனள். ஆதலின் மறைகள் நான்கும் எப்பொழுதும் எவ்விடத்தும் எத்தேவரினுஞ் சிறந்த சிவத்தின் மகிமையினையே பெரும்புகழாகப் பாடிக்கொண்டிருக்கின்றனவென்பது துணியப்பட்டது. வேதங்களெல்லாவற்றானும் பிரதிபாதிக்கப்பட்ட பெருமையுள்ளவன் சிவபெருமானே என்பதைச் சர்வான்மாக்களும் நன்குணரவே "வேதை ரநேகை ரஹமேவ வேத்யோ = எல்லா வேதங்களாலும் அறியப்படுபவன் யானே" என்று கைவல்லியோபநிடதமும், "நதஸ்ய ப்ரதிமா அஸ்தி-யஸ்ய நாம மஹத்யச: = அவனுக்குச் சமானமானவ ரில்லை-எவன்பெயரே பெரிய புகழாம்" என்று சுவேதாசுவதரோபநிடதமுங் கூறின. அன்றியும் வேதங்களின் ஞானகாண்டப்பொருளை விளக்கவெழுந்த உத்தர பாகங்களாகிய வேதாந்தங்கள் ஈசாவாஸ்யமுதல் முத்திகோபநிடதமீறாக நூற்றெட்டு உபநிடதங்களாக விரிந்து கிடக்கின்றன. அவற்றுள் ஈசாவாஸ்ய மென்னும் பிரதம உபநிஷத்தின் உபக்கிரமத்தில் "ஈசாவாஸ்யமிதம் ஸர்வம்" என்றற்றொடக்கத்து மந்திரத்தில் ஈசசப்த மிருத்தலானும், இறுதியிலுள்ள முத்தி கோபநிடதமென்னும் உபசம்ஹாரோபநிடதத்தில், "கைவல்ய முக்திரேகைவ பாரமார்த்திக ரூபிணி." என்னும் மந்திரத்தில் ஈசனோ டிரண்டறக் கலந்து அறிவுமாத்திரையாய்நிற்கும் கைவல்லிய சப்தம் கேட்கப்படுகின்றமையானும், மீமாம்ஸகர் கூறும் உபக்கிரம உபசம்ஹார

நியாயம் பற்றி நூற்றெட்டு உபநிடதங்களும் சிவபெருமானுடைய பெரும்புகழையே பாடிக்கொண்டிருக்கின்றனவென்பது தெள்ளிதிற்றுணியப்பட்டது. (௬எ)

௯-வது. சுட்டறுத்தல்.

வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று போதுநான் வினைக்கேட னென்பாய்போல=சரீர சம்பந்த வினைகளிலே பிணிப்புண்டுகிடந்தவென்னை வலியவந்து நின்று "வா" நான் வினைகளைக் கெடுக்கும் பாவநாசன் என்று சொல்வாய்போல. ஆணவம், கன்மம் மாயை என்னும் மூன்று மலங்களும் ஆன்மாவை யநாதியே பந்தித்துள்ளன. கன்மமலமாகிய வினைகளின் பகுப்பு ஆகாமியம்,சஞ்சிதம், பிராரத்துவம் என மூன்று திறப்படும். மனவாக்குக் காயங்களினாலே ஈட்டப்படும் புண்ணிய பாவமாகிய இருவினைகள் எடுத்த பிறப்பில் ஈட்டப்படுகையில் ஸ்தூலகர்மமாய் ஆகாமியமெனப் பெயர் பெறும். பிறகு பக்குவப்படும் வரையில் புத்திதத்துவம் பற்றுக் கோடாக மாயையிலே கிடக்கும்போது ஸூக்ஷ்ம கர்மமாய் சஞ்சிதமெனப்பெயர்பெறும். பின்னர் பயன்படுகையில் பக்குவப்பட்ட சஞ்சிதகர்மங்கள் மேலெடுக்கும் உடம்பையும், அது கொண்டநுபவிக்கப்படும் இன்பதுன்பங்களை யுந்தந்து பிராரத்துவமெனப் பெயர்பெறும். இவற்றுள் ஆகாமியம் சஞ்சிதமாகிய விரண்டும் சிவனருளாலும் குரு கடாட்சத்தாலும்ஒழியும்.பிராரத்துவமோ அநுபவித்தேஒழிக்கற்பாலதாயினும் அவன் நானென்னும்இடைவிடாப் பாவனையால் அவாவற்ற விடத்து வாதிப்பதன்றாமென்பது லோகாநுபவம். எடுத்த உடம்பின் கண்ணே அநுபவிக்கப்படும் பிராரத்துவம் ஆதிபவுதிகம், ஆதியாத்மீகம், ஆதிதைவீகம் என முத்திறத்தாற் பலதிறப்பட்டு விரியும். ஆதிபவுதீகம் சடம்வாயிலாக வருவதெனவும், ஆதியாத்மீகம் சடத்தோடுகூடிய சேதனம் வாயிலாக வருவதெனவும், ஆதிதைவீகம் ஒரு வாயிலாலன்றி தெய்வந்தானே காரணமாக வருவதெனவும், அறியற்பாலன. அவற்றுள் சுபத்தம் எனப்படும் ஓர் வகை வினைகள் சிவதன்மத் தொருப்பட்டிருப்பவரை வாதியாது. மந்தம்

எனப்படும் வினைகள் சிவஞானிகளை வாதியாது. தீவிரம் எனப்படும் வினைகள் எல்லாரையும் வாதிக்குமாயினும் சிவஞானிகளை மிகுதியும் வாதியாது, ஆகாமியமும் ஏறாது. சீந்தற்றண்டு முதலான ஔடதங்களும் மந்திரங்களும் இம்மையிலே பயன்றருவதுபோல் ஆன்மாக்கள் இவ்விடத்தியற்றும் வினைகளிற் சில இம்மையிலேயே பயன்றரும். இவைகளுக்கு திருஷ்டமென்று பெயர். சில வினைகள் இம்மையிலே பயனைத்தராது மறுமையிலே பயன்றரும். இவைகளுக்கு அதிருஷ்டமென்று பெயர். பூமியிலுண்டாகுஞ் சில விளைவுகள் விளைந்த வருடத்துக்குப் புசிப்புமாயும், வருகிற வருடத்திற்கு விதையுமாயும் இருப்பது போல் இம்மையிலே செய்யும் அசுவமேதயாகம் பிரமஹத்தி முதலிய வினைகள் இம்மையிற்றானே சுகத்தையுந் துக்கத்தையும் முறையே தந்து மறுமையில் சுவர்க்கத்தையும் நரகத்தையுந் தரும். இவைகளுக்குத் திருஷ்டாதிருஷ்ட மென்று பெயர். ஆயின் ஒருவன் தானீட்டிய வினைகளுக்குத் தக்கபடி வேதாகமங்களிற் கூறியுள்ள பிராயச்சித்தாதிகளைச் செய்யின் அவைகள் நீங்குமென்று நூல்களிற் கூறியதென்னையெனின், அவ்வினைகளின் கௌரவமாத்திரங் கெடுமேயன்றி தோஷம் சேஷித்துநிற்குமெனல்திண்ணம். எவ்வாறெனின்! ஒருவன் பிரமஹத்தி, கோவதை முதலான வினைகளைச் செய்து அவற்றிற்குத்தக்க பிராயச்சித்தமியற்றினால் நரகவேதனைக்குண்டான கௌரவங்கெட்டு கொலை தோஷ மாத்திரம் சேஷித்துநிற்கும். அப்படி சேஷித்துநின்ற தோஷத்தின்பயன் மேலுடலெடுக்கைக்குத் தொந்தனையாகும். இவ்வாறு வினைகள் பிரவாகநாதியாக ஆன்மாவைப் பற்றியிருத்தலால் "வினைப்போகமே தேகங்கண்டாய்" என்றார் திருவெண்காட்டடிகள். இத்தகைய வினைகளனைத்தையும் அடியோடு நாசஞ் செய்பவன் சிவபிராளொருவனே. (சஅ)

இனியென்னே யுய்யமா றென்றென் றெண்ணி யஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை = இனி கடைத்தேறும் வழியாதென்று பன்முறை சிந்தித்துப் பஞ்சாக்ஷரமாகிய தெப்பத்தைப் பற்றிக்கொண்டு கிடக்கின்ற வென்னை. பௌவமென்னுஞ் சமுத்திரமானது தன்னுள் வீழ்ந்தாரை ஒரோவழி கொல்லுங்கொடுமையுடையது. பெரும்பிறவிப் பௌவமோ அப்படிக்கின்றி அனே

வரையும் எஞ்ஞான்றும் தன்னுள் வீழ்த்திக்கொல்லும் வெவ்விய வாற்றல்பெற்ற கொடுமையுடையது. அந்தப் பெரும்பிறவிக்கடலைக் கடக்கவேண்டுமாயின் நல்லதெப்பமாயும், எல்லா நன்மைகளைச் செய்யவல்லதாயும், நற்றுணையாயு மிருப்பதோர் கருவிவேண்டும். அது ஐந்தெழுத்தாகிய பஞ்சாக்ஷரமே. ஆதலின், சர்வான்மாக்களும் அதனையே பற்றிக்கிடத்தல் இன்றியமையாத கடனும். பிடித்தலாவது=மனத்தை யொருக்கிச் செபித்தல் "த்யான நிர்மதநாப்யாசாத் பாசந்தஹதி பண்டிதஃ=(இடைவிடாது சிந்தித்தலாகிய) தியானமென்னுங் கடைதல் வாயிலாகப் பிறந்த சிவஞானக்கினியினால் பாசத்தை அறிஞன் தஹிக்கின்றான்" என்று கைவல்லியோப நிடதங் கூறிற்று. இந்த ஐந்தெழுத்தாகிய பஞ்சாக்ஷரம் முதலாவது விஷயசூசனத்திற் சொல்லியபடி வேதங்களின் சாரமாயிருத்தலினால் ஏனைய மந்திரங்களின் பொருள்களனைத்தையும் தன்னுள்ளடக்கிக்கொண்டு தான் சிரசாய் விளங்கிக்கொண் டிருக்கின்றது. அன்றியும், தான் சிவபெருமானுக்குத் திருமேனியாய் ஆலம்வித்தைப் போன்று அனேக பொருள்களையுள்ளடக்கிக்கொண்டு முக்குணரஹிதமாய் அப்பெருமானுடைய மேன்மை பொருந்திய பிரணவத்தில் வீற்றிருக்கின்றது. சிவதத்துவத்துக்கு மேலாந் தத்துவம் எவ்வாறின்றோ அவ்வாறே வேதசிரசா யமைந்துள்ள இந்தத் திருவைந்தெழுத்துக்கு மேலான மந்திரமே கிடையாது. அண்ட சராசரங்களுக் கெல்லாம் மூலகாரணனாகிய சிவபிரானைத் தெளிந்தவர்கட்கு மற்றுள்ள தேவர்களால் அடையத்தக்க பயன் யாதுளது? அதுபோல் சிவபிரானது திருவைந்தெழுத்தைத் தெளிந்தபிறகு மற்றுமுள்ள மந்திரங்களால் அடையவேண்டிய பயனொன்று மில்லை. பிரமன் முதலாகக் கூறப்படுந் தேவர்கூட்டங்கட் கெல்லாம் சிவபிரான் எவ்வாறு பரிசுத்தரோ அவ்வாறே சப்தகோடி மஹாமந்திரங்கட்கும் திருவைந்தெழுத்தே மஹாபரிசுத்தமாகிய மந்திரமாம். இதனை யாவர் தியானிப்பார்களோ அவர்கள் நிழலைப் பரிசிக்கினுந் தரிசிக்கினும் பாதகங்கள் பறந்தோடுமென்றால் இதன் மஹிமையினை இவ்வளவினதென்று வரையறுக்க யார் தரம். இந்தத் திருவைந்தெழுத்தினுலேயே ஐம்பூதம், ஐம்பொறி, ஐம்புலன், ஐங்கருமேந்திரியம், பஞ்சகர்த்தாக்கள், பஞ்சகிருத்தியங்கள், பஞ்ச பிரமங்கள் முதலான

அனைத்தையும் சிவநிஷ்டைகூடும் அறிஞர்கள் ஆன்மாக்களுக்கு உணர்த்துவார்கள். இம்மஹாமந்திரம் "நமஃசிவாய" என்னும் ஐந்தெழுத்தால் விளங்கும். இதை ஆசிரியர் உரைத்த வுபதேசப்படி நல்ல முகூர்த்தத்தில் தொடங்கி ஆயுள்காலம்வரையில் விடாது மனவொருப்பாட்டோடு ஜபிக்கவேண்டும். எதைமறந்தாலும் உயிர்க்குறுதியைத் தரும் பஞ்சாட்சரத்தை மாத்திரம் மறத்தல்கூடாது. ஆதலினன்றோ ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள் "நற்றவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே" என்று கட்டளையிட்டருளினர். இப்படிப்பட்ட அரிய பெரிய மஹிமைவாய்ந்த பரம வைந்தெழுத்தாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரமானது பவசாகரத்தில் வீழ்ந்தழுந்துகின்ற ஆன்மாக்களனைவருக்கும் சிறந்த தெப்பமாயும், முத்திக்கரையிற் கொண்டுபோய் தப்பாது சேர்க்கும் நற்றுணையாயும், இருத்தல்பற்றி பஞ்ச பிரமோபநிடதமானது 'பஞ்சாக்ஷரமயம் சம்பும்பரம்ப்ரஹ்ம ஸ்வரூபிணம்-நகராதியகராந்தம் ஜ்ஞாத்வா பஞ்சாக்ஷரம் ஜபேத் பரப்பிரம ஸ்வரூபமாயுள்ள பஞ்சாக்ஷரத்தைத் தன் மயமாகக்கொண்டவர் சம்பு, பஞ்சாக்ஷரம் நகாரம்முதல் யகாரம் இறுதியாக வுள்ளதென அறிந்து ஜபிக்கக்கடவர்" என்று உண்மை நாட்டியது. இதனையே கஞ்சனூர்ச் செல்வரும் யாவருங்காண அனற்படிந்த அயப்படியேறிச் சிறப்பித்து சிவபரத்துவத்தை நாட்டினர்.

நிற்க, இந்தப் பஞ்சாக்ஷரமானது உச்சரிக்கிற முறைமையினாலே ஸ்தூலம், ஸூக்ஷ்மம், காரணம், மஹாகாரணம், அதிஸூக்ஷ்மம் அல்லது மஹாமநு என ஐவகைப்படும். ஸ்தூல பஞ்சாக்ஷரம் 'நமஃசிவாய' என்று சொல்லப்படும். ஸூக்ஷ்ம பஞ்சாக்ஷரம் சிவாயநமஃ என்று சொல்லப்படும். ஸ்தூலம்போகத்தையும், ஸூக்ஷ்மம் மோட்சத்தையுந் தருதலால்முமூட்சக்கள்எஞ்ஞான்றும்ஸூக்ஷ்ம பஞ்சாட்சரத்தையே விதிப்படி ஜபிக்கக்கடவர். ஆதலினன்றோ "சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க், கபாய மொருநாளு மில்லை" என்றார் ஔவைப் பிராட்டியார். கோவை வேந்தரும் "நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்" என்றனர். இந்த ஸூக்ஷ்மபஞ்சாக்ஷரத்திலுள்ள சிகாரம் சிவம், வகாரம் அருள், யகாரம் ஆன்மா, நகாரம் திரோதை, மகார மலம் என்று சொல்லப்படுதலால் இந்த முறைமையினை புணர்ந்து, ஊன நடனமாகிய நகாரமகாரத்தில் சென்று

ஜனன மரணப்பட்டுப் போகாமல், ஞான நடனமாகிய சிகார வகாரத்தைப் பொருந்தி, சிகார முதலாக வுச்சரித்து அப்படி உச்சரிக்கிற முறைமையினையும் விட்டு வகாரமாகிய ஞானந் தானாய் நிற்கவே சிகாரமாகிய ஞேயத்திலே அழுத்துவிக்கும். அது எப்படியெனில் பேசுமெழுத்தாகும் சத்தியாகிய வகாரம் இடமாகப் பேசா வெழுத்தாகுஞ் சிவமாகிய சிகாரத்தி லழுந்தவே அத்தன்மை யுண்டாகும். அதுவே மோனமுத்திரை என்னுங்கைக்காட்டி லுணரக் கிடக்கின்றது. அதனை விரிக்கின் கைத்தலமொன்றிலே கனிட்டை, அநாமிகை, மத்திமை என்னும் மூவிரல்களோடு இயல்பாகவே சேர்ந்து நிற்கும் தர்ச்சனியை (சுட்டு விரலை) அவற்றினின்றும் வேறு பிரித்து அங்குஷ்டத்தோடு (பெருவிரலோடு) ஏகமாயடங்கி நிற்க வமைப்பதுபோல், ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களோடு இயல்பாகவே கூடியிருக்கும் ஆன்மாவை அவற்றினின்றும் வேறு பிரித்துச் சிவபிரானது ஞானநந்த வடிவமாகிய திருவடி நிழலிலே அடங்கி நிற்க அழுத்துதலாம். அதாவது அறிவுருவாய் நிற்றலாம். இவ்வுண்மையையே நம் தாயுமான சுவாமிகள் "நின்ற நிலை" என்னுந் தலைக் குறிப்பின்கீழ் "கற்றதுங் கேட்டதுந்தானே யேதுக்காகக், கடபடமென் றுருட்டுதற்கோ சல்லாலெம்மான், குற்றமறக் கைகாட்டுங் கருத்தைக் கண்டு, குணங் குறியற்றின்பநிட்டை கூடவன்றோ" என்று உண்மை நிறுவினர். இந்த அநுபவரகசியமும், பஞ்சாட்சரம் ஏகாக்ஷரமாகும் முறைமையும் (வகாரகத்தில் நகாரமும், யகாரத்தில் மகாரமும், சிகாரத்தில் வகாரமும் அதில் யகாரமும் ஒடுங்குதல்), காரண பஞ்சாக்ஷரம், மஹா காரணபஞ்சாக்ஷரம், மஹாமநு ஆகிய விம்மூன்றும், உபதேசக்கிரமத்தால் அறியத்தகும் அதிரகசியமாதலால் குருபரன்றிருத்தாளைச் சேர்ந்து வழிபட்டுக் கேட்டுத் தெளிந்து உய்க. (சகூ)

தேவர்கோ வறியாத தேவதேவன் செழும்பொழில்கள் பயந்து காத் தழிக்குமற்றை மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி மூதாதை மாதாளும் பாகத்தெந்தை=தேவர்கட் கரசனாகிய இந்திரனும் உணரக்கூடாத தேவாதிதேவன் - செழுமையாகிய உலகங்களைப் படைத்துக் காத்து அழிக்கின்ற மற்றையோராகிய பிரமன், விஷ்ணு, உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளுக்கும் முதல்வனாய்

கின்ற ஆதிபுருஷன்-உருவமுடையவன்-யாவர்க்கும் பாட்டன்-உமா தேவியால் ஆளப்படுகின்ற இடதுபாகத்தை யுடையவன் என்பது பொருள். இதனால் சுத்தசிவத்தின் தடஸ்த லட்சணங் கூறப்பட்டது. தடஸ்த லட்சணமாவது சிவபெருமானுடைய தயாமூலம் வெளிப்பட்ட அவசரம். இது பரம கருணையத் திருமேனியாயும், முத்தொழில்களும் தனது சந்நிதியில் நடைபெற்று விளங்கச் சாட்சி மாத்திரமாயும், முக்குணங்களில் தோய்ந்துள்ள மும்மூர்த்திகளுக குப் பரமாயும், மனோவிருத்திகளுக் கெட்டாத நின்மலமாயும், ஆதி நடுவந்தமில்லாத் தனிமுதலாயும், விபுவாயும், சிதாநந்த ரூபமாயும், உள்ளதோர் சகளவடிவமாம். இவ்வடிவம் நித்திய விபூதி மயமாய் விளங்கும் ஸ்ரீ சோமலேக மென்னும் மஹாசிவலோகத்தில் எழுந்தருளி யிருக்கும் இருப்பு. இது மகாசிவலோகத்தில் மாத்திரமன்று, யோகிகள் ஹிருதய கமலத்தும், மஹாசிதம்பரத்தும், அன்பர்கள் பரிபாகத்துக்குத் தக்கபடி ஆங்காங்கு ஆவிர்ப்பவித்தும், நித்திய ஸவயம் பிரகாசச் சொரூபமாய் விளங்கிக்கொண் டிருக்கும். இதற்குச் சிறப்பிலக்கணமாவது மாதாளும்பாகம். மாது என்றால் உருத்திரனது சத்தியாகிய உருத்திராணியல்ல. மற்று உலகமீன் றருளிய பரா சத்தி யெனப்படும் பேரின்பமயமான பிரமவித்தியா தேவியாம், இந்தத் தேவியே தேவேந்திரனுக்கு யட்சதத்துவம் போதித்த பெருமாட்டியெனக் கேனோபனிடதம்புகலும். இவ்வம்மையை பரசிவசத்தி எனவும், மாதேவன் பாகத்தாய உமையம்மையெனவும், ஆரண முடிகளனைத்தும் ஒருங்கு சேர்ந்து அறையாநிற்கும். உமா வென்னுஞ் சொல், உகார மகார அகாரங்களாகிய வியஷ்டிப் பிரணவத்தில், அதற்கியல்பி லமைந்த அகார உகார மகாரங்களாகிய மாத்திரைகள் முறைபிறழ்ந்து, உமா எனத் தேவியார் திருநாமமாய் நிற்கும். இதுபற்றியே "க்ருஷ்ண பிங்களம்=கருமையுஞ் செம்மையுங் கலந்த திருமேனி" எனவும் '"உமாபதயே பசுபதயே=உமையின்பதிக்கு பசுபதிக்கு" எனவும் தைத்திரீயோபனிடதஞ் செப்பியது. இங்கு மாதாளும்பாகங் குறித்தமையால் காளகண்டம், கண்ணுதல் முதலிய மற்றைச் சிறப்பிலக்கணங்களுந் தழுவப்படும். இவ்வித இலக்கணங்களை வேறு எக்கடவுளருக்கும் எவ்விடத்தும் எச்சமயத்தும் வேதங்கள் துரியபாதத்தில் கூறவில்லை-

சிவபெருமானொருவருக்கே இயல்பிலமைந்த அசாதாரண இலக்கணங்களாகவும், நற்காரண வாக்கியங்களாகவும் ஒருங்கு சேர்ந்து கூறியுள்ளன. அவற்றுள் சில வருமாறு:—(க) ருதம் ஸத்யம் பரம்ப்ரஹ்ம புருஷம் க்ருஷ்ண பிங்களம்-ஊர்த்வரேதம் விருபாக்ஷம் விஸ்வரூபாயவை நம:=மெய்யினரும், சத்தியரும், பரப்ரஹ்மசொரூபரும், புருஷரும், கருமையுஞ் செம்மையுங் கலந்த திருமேனியுடையவரும், ஊர்த்வ வீரியமுடையவரும், விரூபாட்சரும், விசுவரூபருமாயுள்ளார்க்கு நமஸ்காரம். (தைத்திரீயோபநிடதம்). (உ) ருதம் ஸத்யம் பரம்ப்ரஹ்ம புருஷம் க்ருஷ்ண பிங்களம்-ஊர்த்வ ரேதம் விருபாக்ஷம் சங்கரம் நீலலோஹிதம்-உமாபதி: பசுபதி: பிநாகீஹ்யமிதத்யுதி:=மெய்யினரும்.........சங்கரரும், நீலலோஹிதரும், உமாபதியும், பசுபதியும், பினாகியரும், அளவில் பிரகாசமுள்ளவரும் (ந்ருசிம்ஹதாபநியோபநிடதம்). (ங) ருதம் ஸத்யம் பரம்ப்ரஹ்ம ஸர்வ ஸம்ஸார பேஷஜம்-ஊர்தவரேதம் விருபாக்ஷம் விஸ்வரூபம் மஹேசவ்ரம்=மெய்யினரும்.........சர்வ சம்சாரப் பிணிக்கு மருந்தினரும்.........(தரிசனோபநிடதம்), (ச) த்ரிலோசனம் உமார்த்த தேஹம் வரதம்=முக்கண்ணரும், உமைபாகரும், வரதரும் (யோகதத்வோபநிடதம்), (ரு) பஞ்சவக்த்ர முமா ஸஹாயம் நீலகண்டம் ப்ரசாந்தம்=ஐந்து முகங்களுடையவரும், உமாசகாயரும், நீலகண்டரும், பரமசாந்தரும். (மண்டலப் ப்ராஹ்மணோபநிடதம்,) (சு) உமா ஸஹாயம் பரமேஸ்வரம் ப்ரபும்-த்ரிலோசனம் நீலகண்டம் ப்ரசாந்தம்......(கைவல்லியோபநிடதம்). (எ) த்ரிணேத்ரம் த்ரிகுணாதாரம் த்ரயாணம் ஜநகம் ப்ரபும்=(ப்ருஹஜ்ஜாபாலோபநிடதம்). (அ) ஓங்கார ஸ்வரூபிணம் மஹாதேவ முமார்த்த க்ருதசேகரம்-ஸோம ஸூர்யாக்னி நயநம்-(பஸ்மஜாபாலோபநிடதம்).

இன்னணம் அளவில் வசனங்கள் ஆரணமுடிகளில் விரிந்து கிடக்கின்றன. சாந்தோக்கியம், ப்ருஹதாரண்ணியம், தைத்திரீயம் முதலிய உபநிடதங்களில் தகரோபாசன மூர்த்தியாகப் புகழ்ப்பெற்றவர், பிரமனோ, விஷ்ணுவோ, ருத்திரனோ, சத்தியோ, அக்கினியோ, சூரியனோ, வாயுவோ, மற்றியாரோவென நிகழுமையம் அகற்றுமாறு மேற்காட்டிய உபநிடதவசனங்கள் யாவும் ஒருங்கெழுந்து தகரவித்யாத் துரியப்பிரமம் உமாஸஹாயம், திரிநேத்திரம்,

நீலகண்டம் முதலிய அற்புத வடையாளங்கள் அமையப்பெற்றுள்ள ஒப்புயர்வில்லா மங்கள விக்கிரஹமென முழக்குகின்றன. இதனால் சர்வான்மாக்களுக்கும் உபாஸ்யப் பொருளாயுள்ளவர் சிவபரம்பொருளென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நிரூபிக்கப்பட்டது. அல்லாமலும், தைத்திரீயோபநிடதமானது துரீய மூர்த்தியாகிய சிவபிரானுருக்கு ஸத்தியோ ஜாதமுதல் ஈசானம் இறுதியாயுள்ள பஞ்சப்பிரம மந்திரங்களைக்கூறி "ஹிரண்யபதயே அம்பிகாபதயே உமாபதயே பசுபதயே நமோநம:" என்று துதித்துப் புகழ்ந்தமையால் சிவபிரானைத் தவிர வேறு எக்கடவுளரையும் அவ்வுபநிடதமானது உபாஸ்யப்பொருளாகச் சிறப்பித்தோதவில்லை யென்பது பரமசித்தாந்தமாயிற்று. அங்ஙனமிருக்க "விரூபாக்ஷன்" என்ற பதத்துக்கு ஒன்றுக்கொன்று மாறுரூபம் பெற்ற சூரிய சந்திரர்களைநேத்திரமாகக் கொண்டவரெனவும், "க்ருஷ்ண பிங்களம்" என்ற சொல்லுக்கு ஓரவதாரத்தில் கருமையும் ஓரவதாரத்தில் செம்மையும் பெற்றவரெனவும், வலிந்து பொருட்படுத்தி விஷ்ணுவினிடஞ் சேர்க்க விடர்ப்பட்ட வீணர் சித்தாந்தம் அவலமாயிற்றன்றோ. அப்படிமுரண்பட்டுக் கூற முயன்றது தமது கடவுளுக்கு வேறு அடையாளங்கள் வேதாந்தங்களிற் சொல்லப்படாமையால் மதாபிமானமும் அழுக்காறு மென்றுதை வேறு யாதெனப் புகல்வது. "நமோ ஹிரண்ய பாஹவே ஹிரண்ய வர்ணாய ஹிரண்ய ரூபாய" என்றுமினவும் அந்தத் தைத்திரீயோபநிடதமே புகன்றபடி தகரமாகிய உள்ளக்குகையின்கண் தியானிக்கப்படும் சோதிர்மயப் புருடன் மும்மூர்த்திகளையுங்கடந்த உமாஸஹாய சிவபெருமானென்பதே திண்ணம். கைவல்யோபநிடதமும் சர்வ வித்தைகளினுஞ் சிறந்தது தகரவித்தை யெனவும், அதனினும் மிகச்சிறந்தது உமாசகாயோபாஸ்தியெனவும் வற்புறுத்தியது. ஆதலாற்றான் ஆசிரியர் ஹரதத்தாசாரிய சுவாமிகளும் நாராயணனுக்கு அந்தர்யாமி சிவனேயாதலால் அவனை நாராயணனது திருமேனியின் கண் உபாசிக்கவேண்டுமென்று தைத்திரீய நாராயணோபநிடதப் பிரமாணங்கொண்டு சாதித்துள்ளார். அங்ஙனமாயின் வேதங்களிலும், உபப்ராஹ்மணங்களிலும் (புராணங்களிலும்), பிரமன், விஷ்ணு, உருத்திரன் முதலிய கடவுளரைப் பாதத்துவங்களாகவும், வழிபடு கடவுளராகவும்,

உலகத்தைச் சிருட்டித்தவர்களாகவும், ஊழிகாலத்துக்குப் பின்னு முள்ளவர்களாகவும், சராசரங்களுக்கு அதிபதிகளாகவும், அந்தர்யாமிகளாகவும், ஒதியுள்ளனவே அவ்வசனங்கள் யாவும் வெறுங் கூற்றேயெனின்! அற்றன்று. அந்த வசனங்கள் யாவும் பிரபல ப்ரமாணங்களுடன் முரணுவழி அக்கடவுளரை ஒரு பரமான்மாவினுடைய நியமன சக்திகளாகவும், விபூதிகளாகவுங் கொண்டு ஒரே பொருளைச் சுட்டிமுடிகின்றனவென முடித்துக்கூறுதலே பரம சாம்பவர்களது முடிந்ததீர்மானம். சர்வ சுருதிமுடிகளுக்கும் இதுவே ஒப்பமுடிந்த துணிபாம். ஆதலினன்றே எண்ணிறந்த வேதவசனங்க ளெழுந்து அவனே பிரமன், அவனே விஷ்ணு, அவனே சிவன் என்று நாட்டின. கிருத்திய கர்த்தாக்களாகிய மும்மூர்த்திகளையும் அவ்வாறு பிராணாதி அசேதனங்களைப்போல் அவனது விபூதிகளாக நிரூபித்தமையால் அவர்களைப் பரதத்துவமாகக் குறிக்கும் பல வேத வசனங்களையும் ஔபசாரிகமாகக் கொள்ளுதலே சால்புடைத்தாம். அது பற்றியே சுவேதா சுவேதரோபநிடதம் "ஏகயேவ ருதரோ நத்விதீயாயதஸ்துஃ யஇமாந் லோகா நீசத ஈசநீபிஃ=இரண்டாவதிலதாய், உருத்திரரொருவர் மாத்திரம் உளராய், இந்த லோகங்களெல்லாவற்றையும் நியமன சக்திகளால் ஆளுகின்றார்" எனவும், அதர்வசிரோபநிடதம் "யஇமாந் லோகா நீசதஈசநீயுஃ ஜநநீயுஃ=எவர் இந்த உலகங்களெல்லாவற்றையும் ஈசனிகளும், ஜனனிகளுமான பரமசக்திகளால் ஆளுகின்றார்" எனவும் வரையறுத்துக் கூறின.

என்னை ! மேற்சொன்ன உமாஸஹாயாதி சிறப்பிலக்கணங்களமைந்த பரமசிவனைக்கூறும் வசனங்களையும் அவ்வாறு ஔபசாரிகமாகக் கொள்ளலாகாதேவெனின், அது கூடாமை. ஆறுவது விஷய சூசனத்தில் காட்டிய பிரமாணங்களின்படி துரீய ருத்திரனொருவனிடத்தே ஏகத்துவம் அமைந்திருப்பதானும், அவ்வுருத்திரனுக்கும் பிரஹ்மத்துக்கும் பெயரொற்றுமைகொண்டு "ஏகஏவருத்ரோ நத்விதீயாய தஸ்தே=உருத்திரமூர்த்தி யொருவரே யிருக்கின்றார் இரண்டாவதில்லை" எனவும் "ஏக மேவாத் விதீயம் ப்ரஹ்ம=பிரமமொன்றே யுளது. இரண்டாது தில்லை" எனவும், "ஸர்வோஹ்யேஷருத்ரஃ=உருத்திரரே எல்லாமாயிருக்கின்றார்" எனவும், "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம=பிரமமே எல்லாமா யிருக்கின்றது". எனவும்

சுவேதாசுவதரம், சாந்தோக்கியம், தைத்திரீயம் முதலிய உபநிடதங்கள் கூறுகின்றமையானும், பிரமாதிகளைப்போல் ஏகதேச வசனங்களில் சர்வ சொரூபத்துவம் நிரூபிக்காது வேதசாகைகளிலுள்ள ஒவ்வொரு உருத்திர ஸம்ஹிதையிலும் ஸ்ரீமதுமாபதியையே சர்வ சொரூபனெனத் தீர்மானித்திருப்பதானும், சுருதி ஸ்மிருதிபுராணேதிகாசங்கள் யாவும் ஒருங்கெழுந்து சிவனே பரதத்துவமென நிர்ணயித்திருப்பதானும், பரமசிவனைப் பரதத்துவமாகக் கூறும் வாக்கியங்கள் எஞ்ஞான்றும் உபசார வசனங்களாகாவாம்.

ஆயின், வைதிகர்களாயுள்ளவர்கள் பிரமனையும், விஷ்ணுவையும், சிவனையும் பரப்பிரமங்களாக வழிபடுகின்றார்களே அஃதென்னையெனின், தைத்திரீயோபநிடதமானது "ஸர்வோவை ருத்ர:= எல்லாம் உருத்திரனே" என்று கூறினமையானும், கைவல்லியோபநிடதமானது "ஸப்ரஹ்மா ஸ சிவ:" என்றற்றொடக்கத்து மந்திரத்தில் "ஸயேவ ஸர்வம்=அவனே எல்லாம்" என்று திரிமூர்த்திகளையும் உமாமகேசனது விபூதிகளாகத் துதித்திருக்கின்றமையானும், எவரெவர்கள் எந்தெந்த தேவர்களிடத்து அன்பு செலுத்துகின்றார்களோ அவரவர்களுக்கு அந்தந்தத் தேவர்களை யதிஷ்டித்து அந்த உமாமகேசனே அநுக்கிரகஞ் செய்கின்றானென்பது முடிந்த தீர்வையாம். எல்லாக்கடவுளருந் தாமாக விளங்கும் இயல்பினன் அவனே என்பதுந் திண்ணம். ஆதலினன்றோ பகவற்கீதையில், "எந்தெந்த பக்தன் எந்தெந்த தெய்வ விக்கிரஹத்தை விசுவாசத்தோடு பூசிப்பதற்கு விரும்புகின்றானோ அந்தந்தப் பக்தனுடைய அந்தந்த விசுவாசத்தை ஸ்திரமானதாகவே நான் செய்கிறேன்" என்னும் பொருள்பட "யோயோ யாம் யாம் தநும்பக்தஸ் ஸ்ரத்தயார்ச்சிது மிச்சதி-தஸ்யதஸ்யா சலாம் ஸ்ரத்தாம் தாமேவ விததாம் யஹம்" என்று ஸோஹம் பாவனையிலே முதிர்ந்த ஸ்ரீகிருஷ்ணர் கூறியுள்ளார். அவ்வாறே, "யாதொரு தெய்வங்கொண்டீ ரத்தெய்வமாகியங்கே- மாதொரு பாகனார்தாம் வருவர்" என்று சிவஞானசித்தியிலும், "ஓவாதே-எவ்வுருவில் யாரொருவ ருள்குவாருள்ளத்து-எவ்வுருவாய்த் தோன்றி யருள் கொடுப்பான்-எவ்வுருவுந் தானேயாய் நின்றளிப்பான் றன்னிற் பிறிதுருவ-மேனோர்க்குங் காண்பரிய வெம்பெருமான்" என்று திருஆதியுலாவிலும் சைவ

திருவாளர்கள் ஆணை தந்துள்ளார்கள். இதனால் பிரமன், விஷ்ணு, சிவன் என்னும் மும்மூர்த்திகளைப் பரமேசுவரன் திருமேனியெனப் பாவித்துத் துணிந்து வழிபடுவார்க்கே முத்தி சித்திக்குமேயன்றி அவர்களைப் பரம்பொருள் எனவும், அப்பரம்பொருளுக்கு மேலாந் தனிமுதலெனவும், அவருக்குங் காரணமாம் பொருளெனவும், நினைத்து வழிபடுவார்க்கு எஞ்ஞான்றும் வீடு கூடுவதின்றென்பது நாட்டப்பட்டது. அதாவது அவர்கள் இடர்ப்படுவாரென்பதே திண்ணம். அரசன் பரிவாரங்களான மந்திரி முதலானவர்களை அவனாணையேற்ற பரிவாரங்களென்றறிந்து அவரவருக் குரியபடி நடப்பவர்க்கே இகலோகசுகமுண்டாவதன்றி அவர்களே அரசனென நம்பி நடப்பார்க்கு யாண்டும் சுகமில்லை யன்றோ! அன்றியும் அவ்வாறு விபரீதங்கொண்டு மயங்கி நடப்பவர் படுங்கடுந்துயரமே இதற்கு நிதரிசனமாம். பகவற்கீதை முழுதிலும் ஸ்ரீகிருஷ்ணன் தன்னை ஈசுவரனாகவும், சிருஷ்டி முதலிய சர்வ கர்த்திருத்துவ முடையவனாகவும் விதந்து கூறியது ஸோஹம் பாவனையால் ஈசுவரப் பிரசாதமெய்திய காரணம் பற்றியன்றி வேறன்று. இவ்வுண்மை மதம், மானம், மயக்கம், முதலியன பற்றிப்பிணங்குகின்றவர்களுக்குச் சிறிதும் விளங்குவதரிது. நுண்ணறிவும் நடுவுநிலைமையும் உடையராய் நோக்க வல்லார்க்கே எளிதில் இனிது புலனும். திருத்தியகர்த்தாக்களாகிய மூவருமொருவரும் பிரஹ்மமாகார். (கூ)

ச-வது ஆத்துமசுத்தி.

சிவனவன்றிர டோண்மேல் நீறுநின்றது கண்டனை யாயினும் நெக்கிலை=சிவபிரானது திரண்ட புயங்களின்மேல் திருநீறு நிலை பெற்றிருப்பதைக் கண்டும் மனம் உருகினையில்லை. எல்லா வேடங்களிலும் உத்தமோத்தமமானது திருநீற்றுப் பொலிவு. அந்தத் திருநீற்றினெழிலைக் கண்டமாத்திரத்தில் எப்படிப்பட்டவர்களுடைய உள்ளமும் கண்ணுங் கவரப்பட்டு அவ்வெழிலோடு ஒற்றித்து நிற்றல் பாலர்முதல் விருத்தர் இறுதியாயுள்ள ஆன்மாக்களது அநுபவப் பிரசித்தம். திருநீறானது சர்வ ஐசுவரியங்களுக்குங் காரணமா யிருத்த

லால் ஐசுவரிய காரணனான பரமேசுவரனுக்கு பரம அணிகலனு விருக்கின்றது. ஐசுவரிய விருப்பமுடையார் யாரோ அவரே அதையணியும் பாக்கியம் பெற்றவர். அவர்களுக்கே அது இன்றியமையாது வேண்டப்படுவது. திருநீறு தரிப்பதனு லுண்டாகுஞ் பயனை ப்ருஹஜ்ஜாபாலோப நிடதமானது,"பஸ்மதாரணஞ் செய்வதினுலேயே மோக்ஷமுண்டாகின்றது, சிவசாயுஜ்யமும் அடையப்படுகின்றது, அவன் மீளத்திரும்புகிறதில்லை, அவன் மீளத்திரும்புகிறதில்லை." என்னும் பொருள்தோன்ற பஸ்மதாரணுதேவமுக்திர் பவதி - சிவஸாயுஜ்யமவாப்நோதி - நசபுநராவர்த்ததே - நசபுநராவர்த்ததே" என்று கூறிற்று. இதனுல் பஸ்மதாரணமே பாபக்ஷயஹேதுவென்பதூஉம், மோட்சபல மென்பதூஉம் நன்கு நிரூபிக்கப்பட்டது. எல்லாக் கர்மங்களுக்கும் இதுவே முக்கியாங்கமாகவும் ஞானங்கமாகவும், இருக்கின்றமையால் வேதத்திலுள்ள கர்மகாண்டத்திலும் ஞானகாண்டத்திலும் இதுவே புகழப்பட்டிருக்கின்றது. நூற்றெட்டு உபநிடதங்களிலே இதன் மகிமையைப் பேசும் உபநிடதங்கள் பதினைந்து. "பூத்யைநப்ரமதிதவ்யம்= பூதியை யணிதலினின்றும் நழுவுதல்கூடாது" என்று தைத்திரீயோபநிடதமானது பஸ்மதாரணத்தைத் தெளிவாய் விதித்திருக்கின்றது. திருநீற்றுக்குரிய பெயரைந்தனுள் பூதியும் ஒன்றுதலால் அது பஸ்மமென்பதே சர்வ வேதாந்த சம்பிரதாய ரகசியமாம். "ஐச்வர்ய காரணுத்பூதி=ஐசுவரியத்துக்குக் காரணமா யிருத்தலால் பூதியெனப்படும்" என்று ப்ருஹஜ்ஜபாலோபநிடதமே அப்பொருளை விளக்கியது, ஆதலின் பஸ்மதாரணம் வேதசம்பந்தமான வைதிகமாம். வேதமார்க்கத்துக்குப் புறம்பான கொள்கையை (எனவே பஸ்மதாரணத்துக்கு அன்னியமான புண்டரங்களை). விஷ்ணுபுராணம் நக்கினமெனக் கூறுகின்றமையால் அக்கொள்கைகள் யாவும் பதிதமெனவும், பாஷாண்டமெனவுஞ் சொல்லப்படும்.

அன்றியும், "யதிகளுக்கு ஞானத்தைத் தருவதாயும் வானப்பிரஸ்தர்களுக்கு வைராக்கியத்தைக் கொடுப்பதாயும் உள்ளது" எனப் பொருள்கொண்டு "யதிநாம் ஜ்ஞானதம்ப்ரோக்தம் வனஸ்தாநாம் விரக்திதம்" என்றும், "எவர்கள் பஸ்மதாரணத்தை விட்டுக் கர்மத்தை அநுஷ்டிக்கிறார்களோ அவர்களுக்குக் கோடி ஜன்மங்

களினும் சம்சாரத்தினின்றும் விடுதல் உண்டாகாது'' எனப்பொருள் பட "யேபஸ்மதாரணம் த்யக்த்வா கர்மகுர்வந்தி மாநவா:-தேஷாம் நாஸ்தி விநிர்மோக்ஷஸ் ஸம்ஸாராஜ் ஜன்ம கோடிபி:" என்றும், "இதுவே விஷ்ணுவுக்கும் சங்கரருக்கும் ஞானத்தைப் புகட்டியது - பிரஹ்மஹத்தி முதலிய பாவங்களைப் போக்கவல்லது-மிக்க ஐசுவரி யத்தைக் கொடுக்கக் கூடியதென்றே (துரீய) சிவனது மார்பி லணி யப்பெற்றது'' எனப் பொருளவிளங்க "ஏததேவ ஹரிசங்கர யோர் ஜ்ஞானப்ரதம்-ப்ரஹ்மஹத்யாதி பாபநாசகம்-மஹாவிபூதி தமிதி சிவவக்ஷஸ்ஸ்திதம்''என்றும், மேற்சொன்ன ஜாபாலோபநிடதமே விதந்தெடுத்துக் கூறுமாயின், இந்தத் திருநீற்றின் பெருமையினை அளவிட்டுக் கூறுந் தகைமைத்தோ. யாக்கை நிலையாமையை அடிக்கடி நினைப்பூட்டும் பொருட்டும், உயிர்க்குறுதியைத் தேடிக்கொள்ளும் பொருட்டும், "பஸ்மாந்தம்சரீர: - பஸ்மத்தை இறுதியாகவுடையது சரீரம்'' என்று தசோபநிடதங்களில் ஆதியந்தங்களிலுள்ள ஈசா வாஸ்யோபநிடதமும், ப்ருஹதாரண்ணியோபநிடதமும், ஸ்பஷ்ட மாயறையுமாயின் இந்தத் திருவெண்ணீற்றை விரும்பி யணியாதார் யாரோ! அதை யணிந்தவர்களைச் கண்டவுடன் மனங்கனியாதார் யாரோ! "முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு பிடிசாம்பராய்வெந்து மண்ணாவதுங் கண்டும் பின்னுமிந்த-படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னினம்பலவர்-அடிசார்ந்து நாமுய் யவேண்டுமென்றே யறிவா ரில்லையே'' என்று திருவெண்காட்டடி கள் விளக்கிய வியன்வாக்கை உன்னியுன்னி உண்மைதேர்க-இத் துணைச் சிறப்பினையும், பெருமையினையும், வேதபடிதமாயுள்ள இப்பஸ்மம் வகித்திருக்குமாயின், பஞ்சராத்திர ஆவேசம் பூண்ட சிலர் இதனை நிந்திப்ப தென்னையோ வெனின்! "ஓவித்வானே! மகா பாதகங்களோடு கூடினவனுக்கும், பூர்வ ஜன்மங்களிலே அனேக அபராத மிழைத்தவனுக்கும், திரிபுண்ட ரோத்தூளனத் தில் த்ருடமான த்வேஷமுண்டாகின்றது'' என்னும் பொருள் போதர "மஹாபாதக யுக்தாநாம் பூர்வஜன்மார் ஜிதாகஸாம்-த்ரி புண்டரோத் தூளன த்வேஷோஜாயதேஸு த்ருடம்புத:''என்று ப்ருஹஜ்ஜாபாலோபநிடதமே வெள்ளிடை மலைபோல் விளக்கியபடி யால் பாஷாண்டிகளாகிய பாவிகளுடைய ஊழின் வலியைத் தடுக்க

யார்தரம். "ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று—சூழினுந் தான் முந் துறும்." என்று திருவாய்மலர்ந்தருளிய தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரது திருவாணையும் பொய்க்குமோ. ஸ்ரீவாகீசப் பெருந்தகையாரும் "தாயினும் நல்ல சங்கரனுக் கன்பர்—ஆயவுள்ளத் தமு தருந் தப்பெறார்—பேயர்பேய்முலை யுண்டுயிர் போக்கிய—மாயன் மாயத்துப் பட்ட மனத்தரே" என்று பாஷாண்டிகளினது நிலைமையை வெளிப்படையாகக் கூறியருளினார். எல்லாவற்றையும் அநுஷ்டித்தற்குச் சாதனமாகிய உடம்பை நிலைபெறச் செய்வதற்கு வேண்டப்படுவனவற்றைக் கூறுகின்ற ஆயுர்வேதமும் வியாதிகளுக்குப் பரிகாரமாகச் சொன்ன "மணிமந்த்ர ஔஷதம்" என்னும் மூன்றனுள் திருநீறே ஔஷதமாதலின் உயிர்ப்பிணியும், உடற்பிணியும், பவப்பிணியும் ஒருங்கேயறுப்பதும், பூசவும் புசிக்கவும் மருந்தாவதும் அதுவே என வியந்தது. "திருநீறு இட்டுயார் கெட்டார் சிவனை மறந்து யார் உய்ந்தார்" என்னும் பழமொழியையும் பூசித்தனர்க-ஆதலினன்றோ "திக்பஸ்மரஹிதம் பாலம்-திக்க்ராம சிவாலயம்=பஸ்மமில்லாத நெற்றியைச் சுடு-சிவாலயமில்லாத கிராமத்தைக் கொளுத்து" என்று இடித்துரைத்தது ப்ருஹஜ்ஜாபாலோபநிடதம். ஔவைப் பிராட்டியாரும் "நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா வுண்டிபாழ்" என்று கூறியருளினார். இதனால் உலகத்தை வெறுத்து மோட்சமே பொருளென நிற்கும் சந்நியாசிடம் திருவெண்ணீற்றைத் தள்ளொணாதென்பது பசுமரத்தாணியறைந்தாலன்ன நாட்டப்பட்டது. ஆதலின் "பஸ்மோத் தூளனம் பரம ஹம்ஸஸ்ய=பஸ்ம உத்தூளனம் பரமஹம்ஸனுக்கு முரியது" என்று நாரத பரிவிராஜகோப நிடதமும், சந்நியா ஸோபநிடதமும் கூறின. அல்லதூஉம், மேற்குறித்த ப்ருஹஜ்ஜாபாலோபநிடதமே "ஸ்ரீகௌதம விவாஹகாலே தாமஹல்யாம் த்ருஷ்ட்வா ஸர்வ தேவாஃ காமதுரா அபவந்த ததாநஷ்ட ஜ்ஞாநா துர்வாஸம் கத்வா பப்ரச்சுஃ" என்றெழுந்த செல்லும் வசனங்களில் கௌதமரது விவாககாலத்தில் அகலிகையின் பேரழகைக் கண்டு சகல தேவர்களும் காமனால் பீடிக்கப்பட்டு ஞானத்தை யிழந்தார்களெனவும், அப்பொழுது அவர்களனைவரும் துர்வாசரை யடைந்து பாப விமோசனார்த்தமாகப் பரிகாரங் கேட்க, அவர் பஸ்மாவைக் கொடுத்தாரென

வும், அதை வாங்கி தேகமுழுமையும் பூசிக்கொண்டு ரஜோ குணத்தினின்றும் நீங்கி மிக்க தேஜசு உடையவர்களானார்களெனவும், பின்னர் அச்சுதரானவர் "பஸ்மா பக்ஷய தச்சுத:" என்னும் வசனத்தின்படி அந்தப் பஸ்மத்தை மருந்துபோல உட்கொண்டாரெனவும், அங்ஙனம் உட்கொண்டு ஆநந்த பரவசராய்ச் சிவபெருமானைத் தியானத்து "நமஸ்தேஸ்து நமஸ்தேஸ்து த்வாமஹம் சரணம்கத: நமஸ்காரம், உனக்கு நமஸ்காரம் உன்னை நான் சரணமடைந்தேன். எனத் துதித்து, "த்வத் பாதயுகளே சம்போ பக்திரஸ்து ஸதாமம ஓசம்புவே! உமது பாதகமலங்களிரண்டினிலும் எனக்கெப்பொழுதும் பக்தியிருக்கட்டும்" என்றும், "பஸ்ம தாரணசம்பந்நோ மம பக்தோ பவிஷ்யதி=எனது பக்தன் பஸ்ம தாரணத்துடன் கூடினவனாய் ஆகக்கடவன்." என்றும்விண்ணப்பித்துச் சிவப்பிரசாத மெய்தினரெனவுங் கூறுகின்றது. இதனால் திருநீற்றின் மகிமை யளவிறந்ததென்பது நிரூபிக்கப்பட்டது. அந்நீற்றை விஷ்ணு மூர்த்தியே பாப விமோசனார்த்தமாக அணிந்து துதித்தனரென்று வேதம் முறையிடுமாயின் அதன் பெருமையினை வரையறுத்தோதவல்லார் யார்தாம். ஆதலினன்றோ வைணவ ஆழ்வாரும் நடுநிலை குன்றாது வேதவசனத்துக் கிணங்க "நீறு செவ்வே யிடக்காணில் நெடுமாலடியா ரென்றோடும்." என்று உத்தம வைணவர்களுய்யும் நெறியைப் புகட்டியருளினார். ஜகதாசாரிய மூர்த்திகளாகிய மணிவாசகப்பிரானும் "வெண்ணீறணிகிலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சுமாறே" என்று உபதேசித்தருளினார். சிவபக்தி, குருபக்தி யில்லாதார்க்கு எவ்வளவு போதித்தாலும் அவை நிஷ்பலமாவது பிரத்தியட்சப் பிரமாணமாதலால், ஈண்டு யாம் சுருதிபோதகமாகக் கூறிய உண்மைகள் யாவும் பிறவியந்தகர்க்கு வெய்யோனொளி விளங்காததுபோல், நடுநிலைகொன்று தினனும் மதாபிமான மேற்கொண்ட புறச்சமயிகளுக்கு விளங்குத லரிதாம். ஆயினும் அவர்களும் மனக்கோட்டம் விட்டுச் சிறிது ஆராயப்புகின் வாய்மையே வெல்லுமென்பதற்கு யாதொரு தடையுமின்று. ஸத்யமேவ ஜயதே. (நிக)

ரு-வது கைம்மாறுகொடுத்தல்.

மேலை வானவ ரும்மறி யாததோர் கோலமே=மேலுலகி லுள்ள தேவர்களும் உணரக் கூடாததாகிய ஒப்பற்ற திருவுருவமே. இதனால் பரப்பிரமமாகிய சிவபெருமானது திவ்விய திருவுருவம் யாவராலும் இத்தன்மையதென அறிதற்கரிதென்பது விளக்கப் பட்டது, இதனை விளக்க சாமவேதத்தைச் சார்ந்த கேனோபநிட தத்தில் ஒரு கதையுளது. அதுவருமாறு:—இந்திரன் முதலிய தேவர்களனைவரும் தங்களுக் குண்டாகிய அசுரவிஜயம் தங்க ளுடைய சாமர்த்தியத்தினாற் கிடைத்ததென்றும், தங்களுக்குத் தலைவர் சிவபெருமானென்பதை மறந்தும் அகங்கரித்தார்கள். அப் பொழுது சிவபெருமான் ஒருயக்ஷகோலந் தாங்கி இந்திரன்முன் சென்று ஒருயர்ந்த ஸ்தானத்தில் எழுந்தருளியிருந்தனர். அவரது ரூபத்தைத் தேவர்கள் அறிந்துகொள்ளாதபடியால் அவர்கள் யாவ ரும் அருகிலிருந்த அக்கினி பகவானைப் பார்த்து, ஓஅக்கினியே! நமக்கெதிரில் தேஜோரூபமாய் விளங்கிக்கொண்டிருக்கும் யக்ஷனை நீர் இன்னனென்று தெரிந்து கொள்ளுமென்றார்கள். உடனே அக்கினி யானவன் யக்ஷமூர்த்தி எழுந்தருளியிருக்குமிடத்திற்கு ஓடோடியும் வந்தனன். அப்பொழுது அந்த யக்ஷமூர்த்தி அக் கினியைப்பார்த்து நீயாரென்று கேட்க, அக்கினி பகவான் நான் பூமியிலுள்ள சமஸ்த சராசரப் பொருள்களையும் நீறாக்கவல்லவ னென்றான். பிறகு யக்ஷமூர்த்தி ஒரு துரும்பை யெடுத்து அவன் முன்னே போட்டு இதைப் பஸ்ம மாக்குதி என்றனர். உடனே அக்கினியானவன் அதிக கோபங்கொண்டு தனது சப்தஜ்வாலை களைத் தோன்ற வியாபித்து அதைக்கொளுத்த முயன்றான். அது கொளுத்தப்படாம லிருந்தபடியால் அக்கினி பரிபவப்பட்டு அத் துரும்பைக் கொளுத்துவதற்குத் தனக்குச் சாமர்த்திய மில்லை யென்று கண்டு தேவர்களிடம் திரும்பிவந்து, ஓதேவர்காள்! அந்த யக்ஷனுடைய மஹிமையைச் சொல்வதற்கும் நினைப்பதற்கும் சக்தி யற்றவனா யிருக்கின்றேனென்றான். பிறகு தேவர்கள் வாயு பகவானை யனுப்பினார்கள். அவனும் அப்படியே சென்று துரும்பை

யசைக்கப் பார்த்தும் முடியாமற் போனபடியால் வெட்கப்பட்டுத் திரும்பித் தேவர்களிடம் வந்து யக்ஷமூர்த்தியின் பிரபாவத்தை அக்கினி சொன்னதுபோற் சொன்னான். அப்பொழுது தேவர்களனைவரும் தேவேந்திரனைப் பார்த்து, ஓ இந்திரா! நீயாவது நமக்கெதிரி லிருக்கின்ற யக்ஷனை இன்னானென்று அறிதி யென்று சொல்ல அவ்வார்த்தையைக்கேட்டு இந்திரனும் யக்ஷமூர்த்தியின் சமீபத்தில் போய்நின்றான். அதுகண்ட யக்ஷமூர்த்தி மறைந்து விட்டனர். உடனே லோகமாதாவாகிய உமாதேவியார் ஆகாசத்தி லெழுந்தருள தேவேந்திரனானவன் தேஜோமயமாய் விளங்கிக் கொண்டிருந்த இமாசலத்தின் புத்திரியான உமாதேவியைப் பார்த்து இந்தயக்ஷமூர்த்தி யாரென்று கேட்டான். அப்பொழுது பார்வதியானவர் "ஓஇந்திரா! அந்த யக்ஷமூர்த்தியை என்னவென்று நினைக்கின்றாய். அவர் எமது பதி. உங்களுக்குப் பரப்ரஹ்மம். ஜயத்தை யுண்டுபண்ணியது அவருடைய சக்தியென் றறிந்து கொள்" என்று சொல்லி மறைந்தருளினார். உடனே இந்திரன், வாயுவு, அக்கினி முதலிய எல்லாத் தேவர்களும் பார்வதியின் திருவாக்கினாலே பரப்ரஹ்மத்தை யறிந்து உய்யும்வழிதேடிக்கொண்டார்கள். இவ்வாறு பரப்பிரமசிவமஹிமை வேதாந்தத்திலே விளக்கமாகக் கூறப்பட்டிருத்தலால் சிவபெருமானுடைய கருணையத் திருவுருவம் எப்படிப்பட்ட உயர்ந்த தேவர்களுக்கும் அவனது திவ்விய திருவருட் பிரசாதத்தினாலே உணரற்பாலதன்றி வேறெவ்வகையானு மில்லையென்பது பெறப்பட்டது. அன்றியும் "அவனன்றியோரணுவு மசையாது" என்னும் ஆப்தர் திருவாக்கும் நிலைநாட்டப்பட்டது. ஈண்டு ஆரணமுடிபாகிய கேனோபநிடதம் "ஸோப மாநா மமாம்ஹைமவதீம்=மிகப்பிரகாசமாகிய இமாசலத்தின் புத்திரியான உமாதேவி" என்றுவியக்தமாக விளக்கியிருக்கவும் அதற்கேற்ப சங்கராசாரியர் முதலானோர் இமயமலையின் பெண்ணான பார்வதியென்று பொருள்விரித்திருக்கவும் அதனைச் சிறிதுங் கருதாது "புருஷாகாரபூதையான உமையாய்த்தோன்றிய லக்ஷ்மி என்று அர்த்தம்பண்ணி அவ்விலக்ஷ்மியால் விளக்கப்பட்ட பிரமம் யக்ஷனாய்வந்த ஸ்ரீயஃபதி என்று வைணவ ஆசாரியராகிய இராமாநுஜர் மாறுபடக் கூறியுள்ளார். இதென்கொலோ! "மெய்ப்படு

நூன் முறைகண்டும் மோகத்தாற் றம்மதமே மேற்கொண்டுள்ளார்" என்னும் பரஞ்சோதிமுனிவர் பான்மொழியையு முய்த்துணர்க.

நள்ளுங் கீழுளும் மேலுளும் யாவுளும்-எள்ளு மெண்ணெயும் போனின்ற வெந்தையே=உள், புறம், நடு, கீழ், மேல், பக்கம் என்று சொல்லப்பட்ட எவ்விடத்திலும் எள்ளும் எண்ணெயும்போல் கலந்துநின்ற எமது தந்தையே. இதனால் சிவபெருமான் விந்து, மோஹினி, மான்என்னும் மூவகைப்பிரகிருதிகளிலுமுள்ள சராசரங்கள் யாவற்றுள்ளும் சர்வபரிபூரணனாய் நீக்கமற நிறைந்திருக்கின்றானென்பது விளக்கப்பட்டது. அவன் அங்ஙனமில்வழி ஜடசித்துக்களனைத்தும் ஒருங்கே ஒரியல்பாக அறியும் அறிவும், அவைகளைத் தொழிற்படுத்துங் கர்த்திருத்துவமும், சர்வான்மாக்களையும் அநுக்கிரகஞ்செய்யும் பொருளும் அவனிடங் குன்றும். குன்றவே, ஐசுவரியமுடையவனாதல், சர்வாந்தர்யாமியாதல், வியாபகனாதல் முதலிய எல்லா அசாதாரண குணங்களுங் குன்றி ஏகதேசவர்த்தியாய்க் கிடக்குறுவன். ஆதலால் இறைவனுக்கு எஞ்ஞான்றும் சர்வவியாபகம் எள்ளி லெண்ணெய் போலும், எரியுறு நீர்போலும் இன்றியமையாத இலக்கணமாம். "திலேஷு தைலம்=எள்ளிலெண்ணெய்" என்னும் இவ்வுபமானத்தையே ப்ரஹ்மோபநிடதமும், மந்திரோபநிடதமும், ஹம்ஸோபநிடதமும் நிறுவின. அல்லதூஉம், எல்லாப் பூதங்களுள்ளத்து முள்ளவனும், எல்லாவற்றையும் வியாபித்தவனும் பகவானாகையால் எங்கும் நிறைந்தவன் சிவனாம்" என்னும் பொருள்பட "ஸர்வபூத குஹாசய: ஸர்வ வ்யாபீச பகவாந் தஸ்மாத்ஸர்வ கதச்சிவ:" என்று சுவேதாசுவதரோபநிடதமும், "எல்லாவற்றையும் வியாபித்தவனும், எல்லாப் பூதங்களுக்கும் அந்தராத்மாவுள்ளவனும், கர்மங்களுக்கு அதிபதியும்" என்று பொருள் போதர "ஸர்வவ்யாபீ ஸர்வ பூதாந்தராத்மா - கர்மாத்யக்ஷ:" என்று ப்ரஹ்மோபநிடதமும் சிவ வியாபகவிலக்கணத்தைத் தெளிவாய் விளக்கின, என்னை! "அந்தர் பஹிஸ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண ஸ்தித:=உள்ளும்புறம்பும், அதனையெல்லாம் வியாபித்து நின்றனன் நாராயணன்." என்று நாராயணோபநிடதங் கூறியுள்ளதே அதன்பொருள் யாதெனின், மூலப்ரகிருதி வாசுதேவ ருருவமாகலின் அதற்குள் அவனது வியாபகம் அமைவுடைத்தென்

படுதே பரமசித்தம். அடிப்புறத்துள்ள ஆன்ம தத்துவங்களுக்குக் காரணமாய மூலப்பிரகிருதிக்குமேல் வித்தியா தத்துவங்களுக்கு எதுவாய சூக்ஷுமப்பிரகிருதியும், சிவதத்துவங்களுக்குக் காரணமாய பரப்பிரகிருதியும், நடுப்புறத்தும், தலைப்புறத்தும் இருப்பதாக "ஆத்ம தத்வமயோபாகே வித்யா தத்வஞ்ச மத்யமே - த்தக்ரே சிவதத்வந்து க்ரமாத் தத்வாநி ஸந்திஹி" என்று ஜாபாலோபநிட உரைத்தது. அன்றியும் சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசுவரம், சுத்த வித்தை என்னுஞ் சிவதத்துவங்களனைத்தையும், "சிவசக்திச்ச ஸாதாக்ய மீசம் வித்யாக்ய மேவச" என்று மீளவும் அவ்வுபநிட தமே எடுத்துப் போதித்தலானும், காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்றும் வித்தியாதத்துவங்களேழையும் "கால ஸ்வபாவே நியதிர்ய த்ருச்சா" என்னும் மந்திரத்தில் சுவே தாசுவதரோபநிடதம் விளக்கிக் கூறுதலானும், முத்திற மாயா தொகுதி முழுமையிலும் நாராயணனுக்கு வியாபகமில்லையென் பதே சுருதியுக்தமாம். ஆதலினன்றோ தைத்திரீயோபநிடதமானது ஸ்ரீமந் - நாராயணனை "விஸ்வம் நாராயணம்=விசுவரூபி நாரா யணன்" எனவும், சிவனை "விஸ்வாதிகோ ருத்ரஃ=விசுவத்தைக் கடந்தவன் உருத்திரன்" எனவுங் கூறி, சிவவிஷ்ணுக்களது ஏற்றத் தாழ்வுகளை நன்குவிளக்கியது. அன்றியும் மந்திரோபநிடதமும், முண்டகோபநிடதமும் "எவனிலும் மேலானதும் கீழானதும் ஒன் றில்லை-எவனிலுஞ் சிறியதும் பெரியதும் ஒன்றில்லை-எவன் விரு க்ஷம்போல் அசைவற்றவனாய் ஏகனாய் பரமாகாசத்தில் இருக்கின் றான்-அந்தப் புருஷனாலேயே ஈதெல்லாம் வியாபிக்கப்பட்டிருக் கின்றது" என்னும் பொருள்போதர "யஸ்மாத் பரம்நா பரமஸ்தி கிஞ்சித்" என்றற்றொடக்கத்து மந்திரத்தில் தெளிவாய் போதித் திருக்கின்றன. இன்னணம் அநந்த பிரமாணபாஹுள்யங்களால் சிவபிரா னொருவருக்கே சர்வபரிபூரணத்துவம் நிலைபெற்று விளங் கியதென்பது ஒருதலையாற் றுணியப்பட்டது. அர்ச்சுனன் வில் லடி, பாண்டியன் பிரம்படி ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி யோகபோக கோலம், உமாதேவியார் கண்களை மூடியலீலை, யக்ஷகோலந் தாங்கிவந்து துரும்பையசைக்கச் செய்தல், கண்ணன் முதலான சேதனசேதனங்களுக்குள்ளிருந்து சிவபூசை யேற்றுக்கொள்ளுதல்;

இவை முதலிய பலவேதோபப்ரஹ்மண சரித்திரங்களும் சிவபெருமானுடைய சர்வ பரிபூரண அந்தரியாமித்துவத்தை நன்கு நிரூபிக்கின்றன.

கிற்க, விஷ்ணு புராணப் பிரமாணத்தின்படி ஸ்ரீவாசுதேவனுடைய வியாபகப் பரப்பை விரிப்பின், நாம் வாசஞ் செய்யும் இப்பூமண்டலமானது பிருதிவி தத்துவத்திலுள்ள ஆயிரகோடி அண்டங்களில் ஓர் பிரமாண்டத்தி லுள்ளது. அந்தப் பிரமாண்டத்தின் உயரம் அகலங்களின் பிரமாணங்களைச் சொல்லின், பூமிக்குக்கீழ் காலாகினி உருத்திர புவன மீறாக அண்டகடாகக் கனமுட்பட பூலோகம் வரையிலும் ஐம்பது கோடி யோசனை யுயரமும், பூலோகத்துக்குமேல் சிவலோக மீறாக அண்டகடாகக் கனமுட்பட ஐம்பது கோடி யோசனை யுயரமும், பூலோகத்தின் மத்தியிலிருக்கும் மகமேருவின் நடுவினின்றும் கிழக்கு,மேற்கு, தெற்கு, வடக்கு இந்நான்கு திசைகளின் அண்டகடாகக் கனமீறாக ஐம்பதுகோடி யோசனை தூரமும் பொருந்தியுள்ளது. இங்ஙனம் கீழும்மேலும் பக்கங்களும் நூறு கோடி யோசனை யளவின் விரிவைப் பெற்றுள்ள இந்தப் பிரமாண்டம் அண்டகடாகத்துக்கப்பால் ஜலத்தினாலேசூழப்பட்டுள்ளது. அந்த ஜல ஆவரணம் அதனினும் பதின்மடங்கு விரிவும் உயர்ச்சியுமேற்றமுமுள்ள தேயுவினாலே சூழப்பட்டுள்ளது. அந்தத் தேயு ஆவரணம் அதனினும் பதின்மடங்கு விரிவும் உயர்ச்சியு மேற்றமுமுள்ள வாயுவினாலும், அந்த வாயுஆவரணம் அதனினும் பதின்மடங்கு அதிகமுள்ள ஆகாசத்தினாலும், அந்த ஆகாசஆவரணம் அதனினும் பதின்மடங்கு அதிகமுள்ள அகங்காரத்தினாலும், அந்த அகங்கார ஆவரணம் அதினினும் பதின்மடங்கு அதிகமுள்ள மகதத்துவத்தினாலும், அந்த மகதத்துவ ஆவரணம் அதனினும் பதின்மடங்கு அதிகமுள்ள பிரகிருதி தத்துவத்தினாலுஞ் சூழப்பட்டுள்ளது. அந்தப் பிரகிருதி தத்துவம் அநந்த மென்று சொல்லப்படுதலால் அதில் அனேகவாயிரங் கோடிகோடி அண்டங்களுண்டு. அத்தனையும் "வாசுதேவபரঃ ப்ரகிருதி" என்றுசுருதி கூறியபடி ஸ்ரீ வாசுதேவனுக்கு உருவமாகலின் அவற்றுள் அவனது வியாபகம் விரிந்து கிடக்கின்றது. இனி விஸ்வாதீதனான சிவபிரானது வியாபகமோ அந்தப் பிரகிருதி தத்துவத்தின் மேலும் நூறுமடங்கு

விரிவும் உயர்ச்சியுமுள்ள அராக அண்டமும், அதன்மேலும் நூறு மடங்கு அதிகமுள்ள வித்தையண்டமும், அதன்மேலும் நூறு மடங்கு அதிகமுள்ள கலையண்டமும், அதன்மேலும் நூறுமடங்கு அதிகமுள்ள நியதியண்டமும், அதன்மேலும் நூறுமடங்கு அதிக முள்ள காலஅண்டமும், அதன்மேலும் ஆயிரமடங்கு அதிகமுள்ள அசுத்தமாயையும், அதன்மேலும் பதினுயிரமடங்கு அதிகமுளள சுத்தமாயையிற் சுத்தவித்தையும், அதன்மேலும் பதினுயிரமடங்கு அதிகமுள்ள மகேசுவரமும் அதற்குமேல் சாதாக்கியமும், அதற்கு மேல் பரவிந்தும் அதற்குமேல் பரநாதமும் ஆகிய இவற்றை யெல் லாங்கடந்து சொல்லிறந்துநின்ற தொன்மையதா யோங்கி விளங்கு தலால் அப்பிரானுக்கே சர்வ பரிபூரணத்துவம் நிலைபெறும். அத ணுல்எங்கும் செறிந்தவன் சிவனும் என்பது ஒருதலை. ஆதலி னன்றே "உலகமும் பல்லுயிரு மொன்றிநிறைந் தோங்கி, இலகுஞ் சிவனெம்மிறை" என்றது ஞானக்குறள். திராவிடசுருதியும் "அப் பாலைக் கப்பாலைக்கப்பாலானை யாரூரிற்கண்டடைந்தேனுனவாறே." என்று மூவகைப் பிரகிருதிகளுக்கும் அப்பாற்பட்டவர் சிவபிரா னென்று துதித்தது. (ருந)

எட்டி னோடிரண் டுமறி யேனையே=எட்டிரண்டுந் தெரிக்கா நின்ற பொருளை யறியாத வென்னை. ஈண்டு எட்டு, இரண்டு என் னும் எண்கள் தமிழில் "அ" என்றும், "உ" என்றும் குறிக்கப்படு தலால் அகாரஉகாரமகாரங்களாலாய பிரணவாக்ஷரத்தை யறியாத வென்னை என்பது பொருள். அகாரம், உகாரம், மகாரம் ஆகியமூன் றும் ஒருங்குசேர்ந்ததே மூலமந்திரமாகிய பிரணவமாம்–நாராய ணோப நிடதமானது "அகாரஉகாரோமகாரஇதி தானேகதா ஸம்ப வத் ததேததோமிதி=அகாரம், உகாரம்,மகாரம் இவைகளை யொன்று சேர்த்தலால் பிரணவமாகின்றது" என்றுகூறிப்போந்தது. "நூ" (துதித்தல்) என்ற தாதுவிலிருந்து தோத்திரம் என்ற பொருளில் "நவ" என்ற சொல்லுண்டாக அதனோடு "ப்ர" என்னும் உபசர்க் கத்தைச் சேர்க்க "ப்ரணவ" என்ற சொல்லமைந்தது. இருக்கு முதலிய சமஸ்தவேதங்களும் பிரணவத்திலிருந்துதோன்றி தோத் திர ரூபங்களாயிருத்தலால் அவையனைத்தும் பிரணவதேவதைக்கே சொந்தமாகும். பிரணவதேவதை சாக்ஷாத்பரசிவமே என்பது பதி

ஞுருவது விஷயசூசனத்திற்காண்க. பிரணவ மென்னுந் தனிமந்திரம் சமஷ்டிப் பிரணவமெனவும், வியஷ்டிப்பிரணவமெனவும் இருதிறப்படும். சமஷ்டிப்பிரணவமாவது தொகுத்துக் கூறுவது: அது ஓம் என்பதாகும். வியஷ்டிப் பிரணவமாவது வகுத்துக்கூறுவது. அது அ, உ, ம, என்பதாகும். இந்த வியஷ்டிப் பிரணவமாகிய அகார, உகார, மகார மென்னும் மூன்றும் முறையே இறந்தகால நிகழ்கால எதிர்காலங்களையும், சாத்துவித இராசத தாமத குணங்களையும் பிரம விஷ்ணு ருத்திரர்களையும், காருஹபத்திய தக்ஷிண ஆகவநீயாக்கினிகளையும், இருக்கு யஜுர் சாமவேதங்களையும் உணர்த்தாநிற்கும். அகாரம் வாய்திறத்தலினாலே சிருஷ்டியையும், உகாரம் இதழ்குவித்தலினாலே திதியையும், மகாரம் வாய்மூடுதலினாலே சங்காரத்தையும் குறிப்பிக்கின்றமையால் எல்லாவுலகங்களும், எல்லாச்சுருதிகளும் இந்தப்பிரணவத்திலே தோன்றி நின்று ஒடுங்குமென்பது பெறப்பட்டது. பிரணவம் அகார உகார மகாரங்களாக விரிந்து மூன்றெழுத்தாயும், இம்மூன்றுங் கூடி ஓம் என்று உச்சரிக்கப்படும்பொழுது நாதமாயும், ஓம் என்று எழுதும்போது விந்துவாயு மிருப்பதால் முதல் மூன்றெழுத்தும் இந்த விந்துநாதங்களாகிய வரிவடிவும் ஒலிவடிவுங் கூடி ஐந்தெழுத்தாயிற்று. சுருதியும் "ப்ரதமம் தாரகாகாரம் த்விதீயம் தண்டமுச்யதே - த்ரிதீயம் குண்டலாகாரம் சதுர்த்தம் அர்த்தசந்த்ரகம்—பஞ்சமம் பிந்துஸம்யுக்தம் ப்ரணவம் பஞ்சலக்ஷணம்" என்றுகூறிய பிரமாணத்தின்படி முதல் நட்சத்திராகாரமும், இரண்டாவது தண்டா காரமும், மூன்றாவது வட்டவடிவும், நான்காவது அர்த்தசந்திரவடிவும், ஐந்தாவதுபிந்துவோடுகூடின வடிவுமாகிய ஐந்திலக்கணங்களுடையதாதலால் பிரணவமும் ஐங்கலைகளுடையதாயிற்று. மேலும் ருக்வேதத்தின் முதலிலேயுள்ள "அக்நிமீளே" என்னும் மந்திரத்தின் முதலில் அகாரமும், மத்தியிலுள்ள "யோநிஸ்ஸமுத்ரோபந்து" என்னும்மந்திரத்தின் மத்தியில் உகாரமும், அந்தத்திலுள்ள "சமாநம்வரம்" என்னும் மந்திரத்தின் முடிவில்மகாரமும்போந்தமையால்ருக்வேத முழுமையும் தொகுப்பாகப் பிரணவமாயிற்று. இந்தப் பிரணவம் இன்னதென்று விளக்கவே இரண்டாவதாகிய யஜுர்வேதம் எழுந்து முதலிலும், இறுதியிலும் பிரணவத்தைச் சொல்லி மத்தியில் "நமஃசிவாயக"

என்று பஞ்சாக்ஷரத்தை யோதிப்பொலிவெய்தியது. இதனால் பிரண வமே பஞ்சாக்ஷரமாயிற்று. பிரணவத்துக்கும் பஞ்சாக்ஷரத்துக்கும் சிறிதும் பேதமின்மையால் பஞ்சாக்ஷரமானது பிரணவத்தைப் போன்று பிரதக் மந்திரமும் பரமபாவநகரமான மோட்ச மந்திரமு மாம். பிரணவம் வேறு துணை வேண்டாது உச்சரிக்கப்படுவது போல் பஞ்சாக்ஷரமும் வேறொன்றின் ஆஸ்ரயமில்லாமல் ஜபிக்கப் படும். ஆகவே இரண்டும் தம்மில் வேறுபடாத ஒரேமந்திரமாம். இவ் வுண்மையை ஸ்ரீ தாயுமான சுவாமிகளும் "ஓங்காரமா மைந்தெழுத் தாற் புவனத்தை யுண்டுபண்ணி - பாங்காய் நடத்தும் பொருளே யகண்ட பரசிவமே" என்று வற்புறுத்தியருளினார்கள்.

நிற்க, மேலே கூறிய பிரணவ விலக்கணங்களைந்தனுள் முதலி ரண்டு உறுப்புக்களாகிய தாரகாகார தண்டாகாரங்கள் ஏனைய மூன்று உறுப்புக்களினின்றும் நீங்கி நிற்கும்வழி, முற்றியக்கம் பெறுமை யால் ஊமையெழுத்தெனவும், வேதாந்த சிரசாய்நிற்கும் மௌனக் குறியெனவுஞ் சொல்லப்படும். அன்றியும் மூலக்கணபதி நிலைய மெனவும், அட்சரங்களின் வித்தெனவும், பிள்ளையார் சுழியெனவும் புகழப்படும். இந்தக்குறி (சுழி) "உ" இதுவேயாம். இதிலுள்ள வட்ட வடிவு சிவசத்திபீடமென்றும், ஆவுடையென்றும், பிந்துவென்றும், மூலாதாரமென்றுஞ் சுருதிகள் அறையுமாறு பிரகாசித்துக்கொண் டிருக்க, நீள்வடிவு மூலஸ்தம்பமென்றும், சிவலிங்கமென்றும், நாத மென்றும், பிரமநாடியென்றும் விளங்கிக்கொண்டிருக்கும். இந்தச் சுழியினை யாதானுமொன்றை எழுதத்தொடங்குவதன்முன் தலைப் பில் தீட்டிக்கொள்ளும் சம்பிரதாயமானது, யாதாமொரு கிரியை முட்டின்றி முடித்துக்கொள்ளும்பொருட்டு அக்கிரியைக்குமுன் பிள்ளையார் உரு பிடித்து வைத்திடுவதை யொக்கும். சாக்ஷாத் பர மேசுவரனாலே சிருஷ்டிக்கப்பட்ட இப்பிண்டத்தில் தாரக ஓங்காரம் எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளதோ அவ்வாறே தமிழிலும் கிரந்தத் திலும் இப்பிள்ளையார் சுழி அமைக்கப்பட்டுள்ளது. வேறு பாஷை களில் அவ்விதம் அமைக்கப்பட்டிருக்கவில்லை யென்பது பிரத்தியட் சப் பிரமாணமாம். இத்தகைய மேன்மைபொருந்திய பிள்ளையார்சுழி அடங்கியுள்ள பிரணவமானது சர்வதேவர்களுக்கும் பிறப்பிடமாயும், சிவபிரானொருவருக்கே யிருப்பிடமாயும் விளங்குகின்றமையால்

பராநந்தத் தாண்டவஞ் செய்யும் ஸ்ரீ நடராஜப் பெருமானுடைய திவ்விய திருமேனியோடு பிரிபடாதிருக்கின்றது. இக்கருத்தையே அதர்வசிகோபநிடதமும் "ஏதத³க்ஷரம்பரம்ப்ரஹ்ம = இவ்வட்சரமாகிய ஓங்காரம் பரப்ரஹ்ம சொரூபம்" என்று கூறிப்போந்தது. இதனால் சொல்லுக்கும் பொருளுக்குமுள்ள அபேத சம்பந்தங் காரணமாகப் பிரணவமே பிரமமென நிரூபித்ததாயிற்று. விரிவை எமது பிரணவ வித்யா பரிமளம் என்னும் நூலினும், ஸ்ரீ பஞ்சாக்ஷர அஷ்டாக்ஷர மந்த்ரார்த்த ஸங்க்ரஹ விளக்கத்திலுங் காண்க.

ய-வது ஆனந்தாதீதம்.

விச்சதன்றியே விளைவு செய்குவாய் விண்ணு மண்ணக முழுதும் யாவையும் = விண்ணுலகம், மண்ணுலகம், ஏனைய வுலகமாகிய வெல்லாவற்றையும் வித்தில்லாமலே யுண்டாக்குவாய். பிரபஞ்சத் தொகுதி முழுதும் மாயையினின்றுந் தோன்றியதாக "மாயையி னுள்ளவஞ்சம் வருவது போவதாகும்" என்று சிவஞானசித்தி மொழிந்திருக்க, இங்கு வித்தில்லாமலேயென்று கூறியது என்னையெனின்! இச்சாமாத்திரத்திலே எல்லாஞ் செய்யவல்ல சிவபிரான் ஒருகாரணத்தினின்று ஒன்றைத் தோற்றுவித்தானெனில் அவனது சர்வசுதந்தரத்துக்கு இழுக்குண்டாமாதலால் அவனது அகடிதகடன சாமர்த்தியத்தை விளக்கவெழுந்தது இந்தத் திருவாக்கு. சூரியன் இச்சாவெத்தனமின்றி யிருக்கவும், அவனது சந்நிதியில் ஒன்று முகையாகவும், ஒன்று அலர்ந்தும், ஒன்று உலர்ந்தும், தாமரை முத்தொழிற் படுதல் போலும், புருஷனது சந்நிதானத்தில் ஸ்திரீக்கு இன்பம் ஜநித்தல் போலும், சிவ சந்நிதானத்தில் மாயையில் சிருஷ்டியாதி தோன்றும் என்பதே முடிபாம். முண்டகோபநிடதமும், ப்ருஹதாரண்ணியோபநிடதமும் "ததேதத்ஸத்யம்யதாஸு³தீப்தாத்" என்றற்றொடக்கத்து வசனத்தில் எப்படி எரிந்துகொண்டிருக்கும் அக்கினியிலிருந்து அநேக பொறிகள் உண்டாகின்றனவோ அப்படியே அக்ஷரப் பிரமத்தினின்றும் ஸ்வரூபசத்தாய் மாத்திரம் அடங்கியிருந்த பசுபாசங்கள் நாமரூப விபாகத்துக்குரிய பலவித ஸ்தூல ரூபத்தோடு

சிருஷ்டி காலத்தில் உண்டாகின்றன வென்று கூறுகின்றன. கிழங்கிலே நின்றும் பிறக்குந் தாமரையை சேற்றிலே நின்றும் பிறந்தது என்று பொருள்பட பங்கஜம் என்று கூறுமாறு, மாயையிலே நின்றுந் தோன்றிய உலகத்தை பிரமத்திலே நின்றுந் தோன்றியதென்று கூறுதல் உபசாரமேயாம். "மாயையுடையவன் மாயையினின்றும் பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்கின்றான்-அவனிடமே மற்றவர் மாயையால் கட்டுப்பட்டுள்ளார்" என்னும் பொருள்போதர, "அஸ்மாந் மாயீ ஸ்ருஜதே விஸ்வமேதத் தஸ்மிம் ச்சாந்யே மாயயா ஸம்நிருடா:" எனவும் "மாயை காரணம், மகேசுவரன்மாயீ என்றறியவேண்டியது" என்னும் பொருள்பட "மாயாந்து ப்ரக்ருதிம் வித்யாத்மாயிநந்து மஹேச்வரம்" எனவும் சுவேதாசுவதரோபநிடதம் உரைத்தலால் பிரபஞ்சத்தொகுதி முழுவதுந் தோன்றுவதற்கு வித்தாயுள்ளது மாயை யென்பதே வேத சம்மதமாம். இதனால் மாயை மித்தையென்று கூறும் வாதம் அடாதாயிற்று-ஸ்ரீ தாயுமானசுவாமிகளும் "அண்டபகி ரண்டமு மாயா விகாரமே அம்மாயையில்லாமையே" என்று திருவாய் மலர்ந்தருளினர் - ஈண்டு அம்மாயை யென்றது மாயையின் விகாரமாய்த் தோன்றிய காரியத் தொகுதியையேயாம். (ருரு

நீத்தல் விண்ணப்பம்.

மருந்தினனே பிறவிப்பிணிப்பட்டு மடங்கினர்க்கே=பிறவிப் பிணியிலகப்பட்டு முடங்கிக் கிடந்தவர்கட்கு ஔஷதரூபமாயிருப்பவனே. யாண்டு பிறப்புளது ஆண்டு இறப்புளது. யாண்டு பிறப்பில்லை ஆண்டு இறப்பில்லை என்பது தர்க்கசாஸ்திர நியதி. பிரபல சுருதிகளாகிய மறைமுடிகள் யாவும் அயன், அரி, அரன் என்னுந் திரிமூர்த்திகளையும் நியமிக்குந் துரீயமூர்த்தியாகிய சிவபெருமானுடைய மகிமையினை யெடுத்துப் பேசுந்தோறும் பேசுந்தோறும் அவ்வெம்பெருமான் நிரந்தர சிவசிந்தனையைப் பெற்ற மெய்யடியார்களுளங்களிக்க ஆங்காங்கு ஆவிர்ப்பவிப்பதன்றி அவனுக்கு என்ஞான்றும் பிறப்பில்லையென்றே பகர்கின்றன. ஆதலின் அம்மகானுக்கு

மகா சங்காரகாலத்தும், "தஸ்மா உபஸம் ஹர்த்ரே மஹாக்ராஸா யவை நமஃ=மகாசங்காரஞ் செய்பவரும் எல்லாவற்றையும் கவளீகரணஞ் செய்பவருமா யுள்ளார்க்கு நமஸ்காரம்" என்று அதர்வ சிரோபநிடதம் உரைத்தபடி, தானே அத்தொழிலை யியற்றும் வினை முதலாதலின் இறப்பு அல்லது அழிவு இல்லையென்பது துணியப்பட்டது. அங்ஙனந் துணியப்படவே அவனது இறவாத்தன்மை பசுக்களுக்குச் செய்யும் பாசநிக்கிரகத்தையும், ஞானநுக்கிரகத்தையும் விளக்கி முத்திப்பேற்றை யளிக்கும் பேராற்றலையும் புலப்படுத்தா நின்றது. சுவேதாசுவதரோபநிடதம் "அஜம் த்ருவம் ஸர்வதத்வை விசுத்தம்=பிறவாதவரும், நித்தியரும், தத்துவங்களை யெல்லாங் கடந்தவரும்" எனவும், ப்ருஹதாரண்ணியோபநிடதம் "ஸவா ஏஷ மஹாநஜ ஆத்மா ஜரோமரஃ=இந்தப்பெரிய மஹானாகிய பரமான்மா ஜரையில்லாதவரும், இறவாதவரும்" எனவுங் கூறிப்போந்தன. யூபத்திற் கட்டுப்பட்டிருக்கும் பசுவானது தானே அக்கட்டை அவிழ்த்துக்கொள்ளமாட்டாதாற்போல பிறவியென்ற பிணியில் சிக்குண்டு கிடக்கின்றவர்கள் தாமேஅப்பிணியை யகற்றிக்கொள்ளமாட்டார்கள். திரிமூர்த்திகளும் பாசத்தாற் பீடிக்கப்பட்ட தீப்பிணியுடையவர்களென்று வேதம்பல்காலும் பகர்தலால் அவர்களும் அச்சமுறும்படியான ஜனனமரணமாகிய துக்கத்தை யொழிக்கும் பேராற்றல் வகித்த பேருளாளன் அப்பிணியி லகப்படாத சிவபிரானென்பதே தேற்றம். ஆகவே அச்சிவ பரம்பொருளே பவசாகரத்துக்கு மருந்தினர் என்பது வெளிப்படை. திருவெண்காட்டடிகளும் "பிறவாதிருக்க வரந்தரல்வேண்டும் பிறந்துவிட்டா, லிறவாதிருக்க மருந்துண்டு காணிதவெப்படியோ, அறமார் புகழ்தில்லையம்பலவாண ரடிக்கமலம், மறவா திருமனமே யதுகா ணன்மருந் தனக்கே" என்று கூறி உண்மை நிறவினர். (ருசு).

திருவம்மானை.

சோர்ந்தறியாக்கையானை=பிறரைவணங்கும்பொருட்டுச் சேர்ந்தறியாத கைகளையுடையவனை. சேதனு சேதன ரூபமாகிய சகலப்பிர

பஞ்சங்களையும் தமது பேரருள் வியாபகப் பரப்பில் வைத்து நியமித்து நடாத்தும் முன்னைப்பழம்பொருட்கும் முன்னைப்பழம்பொருளாகிய சிவபெருமான் சர்வாத்மாக்களும் தம்மை வழிபட்டுய்யும் பொருட்டுத் தாமே எஞ்ஞான்றும் எவ்விடத்தும் சர்வலோக சரண்யராய் நிற்றலானும், தமக்குச்சமானரும் அதிகருமில்லாமல் தாமே சர்வ சுதந்தரரா யிருத்தலானும், பிறர் சங்கற்பத்துக்கும் கன்மத்துக்கும் வசப்படாது தாமே யகில லோகங்களுக்கும் நியந்தாவாய்ப் பிரகாசித்தலானும், எல்லாவான்மாக்களுந் தம்மைக் கைகுவித்து வணங்கத் தாம் வீற்றிருப்பதன்றி தாமெப்பொழுதும் பிறரை வணங்கும் பொருட்டுக் கரங்களைக் குவித்தவரல்லர். பிரமன், விஷ்ணு, உருத்திரன் முதலான சமஸ்ததேவர்களும் தமக்கு எஞ்ஞான்றும் வழியடியாரெனவும், தாமெப்பொழுதும் ஒருவருக்குங் குடியல்லாத் தன்மையரெனவும் ஆரணங்க ளறைந்தபடி ஸ்ரீஆளுடைய வரசுகளும் "தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான சங்கரன்" என்று தமது திராவிடசூக்தியில் உபதேசித்துள்ளார். இதனால் சகலவழிபாட்டுக்கும், சர்வதோத்திரங்கட்கும் விஷயமாவார் சிவபெருமானென்பது நாட்டப்பட்டது. ஸ்ரீ தாயுமான சுவாமிகளும் "இந்த்ராதி தேவதைகள் பிரமாதி கடவுள ரிருக்காதி வேதமுனிவர், எண்ணரிய கணநாதர் நவநாத சித்தர்க ளிரவிமதி யாதியோர்கள், கந்தருவர் கின்னரர்கள் மற்றையர்க ளியாவருங் கைகுவித் திடுந்தெய்வமே, கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு கருணைகரக் கடவுளே' என்று கூறி உண்மை நிறுவினர். தைத்திரீயோபநிடதமானது "விஸ்வம் பூதம் புவனம் சித்ரம் பஹுதா ஜாதம் ஜாயமாநஞ் சயத்-ஸர்வோஹ்யேஷ ருத்ரஸ் தஸ்மை ருத்ராய நமோஅஸ்து= பிரபஞ்சம் நித்தியமோ அநித்தியமோ விசித்திரமோ அனேகவிதமாக வுண்டானதோ உண்டாகிறதோ எல்லாப் பிரபஞ்சத்திற்கும் நிர்வாஹன் இந்த வுருத்திரன். ஆதலால் அப்படிப்பட்ட உருத்திரனுக்கு நமஸ்காரம்" எனவும், "யோ ருத்ரோஅக்நௌ யோஅப்ஸு யஓஷதீஷு யோருத்ரோ விஸ்வா புவனாவிவேச தஸ்மை ருத்ராய நமோஅஸ்து=எந்த ருத்திரன் அக்கினியிலுள்ளான், எவன் நீரிலுள்ளான், எவன் ஓஷதிகளிலுள்ளான், எவன் எல்லாப்புவனங்களிலும் உட்பிரவேசித்தான், அந்த உருத்திரனுக்கு நமஸ்காரம்" என

வும் கூறிப் போந்தமையால், சர்வ ஜகத்காரண பரப்பிரமம் துரீய ருத்திரரெனவும், அவரே நமஸ்காரத்துக்குரிய பரம்பொருளென வும் இனிது போதிக்கப்பட்டது. அன்றியும் நமஸ்காரங்களெல்லாம் சிவபெருமானுடைய சொத்தாயுள்ளன வென பலவேதபாகங்கள் பன்முறையெழுந்துநிரூபிக்கின்றமையால் அவருக்குச் செய்யப்படும் பலவகை வழிபாடுகளில் நமஸ்காரம் ஒன்றே மிகச்சிறந்ததென்பது நன்குணரக் கிடக்கின்றது. இவ்வுண்மையை யுணராச்சிலர் "ஸர்வ தேவ நமஸ்காரம் கேசவம் பிரதிகச்சதி" என்னும் ஸ்மிருதி வச னத்தை ஆதாரவாகக்கொண்டு சகலதேவர்கள் செய்யும் நமஸ்காரம் கேசவனையே சாருமென்று புலம்பாநிற்பர். இது அசங்கதம். சந் தியாவந்தனம் தொடங்குகையில் பரமேசுவரப் பிரீதியார்த்தம் என்று ஆரம்பித்தலால்கேசவம் என்னும் சப்தம் பரமேசுவராாகிய துரியசிவத்தையே பற்று மென்பதற்கு யாதுமையுறவில்லை-ஆதலி னன்றோ "தத்வேத குஹ்யோபநிஷத்ஸுகூடம்= அந்தப்பரம் பொருள் வேதங்களில் மிகவும் ரகசியமான உபநிடதங்களில் மறைக்கப்பட்டுள்ளது" என்று மந்திரோபநிடத முரைத்தது. வேதங்களிலுள்ள எல்லா வுபநிடதங்களும் ரகசியமேயாயினும் பிரம விஷ்ணு ருத்ராதிகளைக் கடந்த துரியப்பொருளை யுணர்த்தும் உப நிடதங்களே மிக்க ரகசியமாம் என்பது வேதாந்தத்தின் கருத்தாம். இப்படிப்பட்ட வுண்மைப்பொருள் பூர்வ புண்ணிய சுஹிருதமுடைய வர்களுக்கும், திருநீற்றின் குறிவழி நிற்குங் கொள்கை யுடையவர் களுக்குமே விளங்காநிற்கும். ஸ்ரீ தாயுமானசுவாமிகளும் "சைவ சமயஞ் சமயமெனில் அச்சமயத், தெய்வம் பிறைசூடுந் தெய்வமெ னில்—இவைரவென்,ஞானந்தவெள்ளத் தழுத்துவது முத்தியெனில், வானங்கான் பெய்மின் மழை" என்னும் பாசுரத்தைக் கூறி தமது அரியவற்புதச் செய்கையால் சிவபரத்துவத்தை நாட்டியருளினர். பரத சாஸ்திரமும், இந்திரனைக் குலிசாயுத முத்திரையைக் கொண் டும், பிரமாவைக் கமல முத்திரையைக் கொண்டும், விஷ்ணுவைச் சங்க முத்திரையைக் கொண்டும், சிவபெருமானைச் சிரசில் நமஸ்கார முத்திரையைக் கொண்டும் அபிநயஞ் செய்க வென்றது. இதனால் சிவபெருமானே நமஸ்காரத்துக்குரியவரென்பதுவெளிப்படை.(௫௭)

திருத்தெள்ளேணம்.

திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை=காத்தற்றொழிற்குரிய மஹாவிஷ்ணுவும் வராக வுருவேற்று பூமியைப் பிளந்து சென்றுங் காணுத திருவடியை. முன்னெரு காலத்தில் பிரமவிஷ்ணுக்களாகிய இருவரும் தம்மறிவு மயக்கத்தால் யாம் பரம் யாம்பரம் என்று அகங்கரித்து இகலியபோது அவர்களுடைய அகங்கார மொடுங்கும்படி அவர்கள் மத்தியில் அனற்பிழம்பாய் நின்றனர் சிவபெருமான். அப்பொழுது திருமாலானவர் அவ்வனற் பிழம்பின் அடியைக் காணும்பொருட்டு பூமிக்குள் தேடிச்சென்றும் அது பாதாள மேழினுக்கப்பாலும் ஊடுருவிச் சென்றமையால் அலுத்து எல்லைகாணது மயங்கினர். பிறகு தம்மிடத் துண்டாகிய பேதமையை யொழித்துவிட்டுப் பூமியின்மேல் வந்துநின்று சிவ பெருமானைப் பலவகையாலுந் துதித்துச் சிவப்பிரசாதத்தை யெதிர் நோக்கி யிருந்தனர். இந்தத்திவ்விய சரித்திரம் ருக்வேத ஸம்ஹிதையில் கூறப்பட்டுள்ளது. அது வருமாறு:—"விஷ்ணுர்வே வராஹம் ரூபமாஸ்தாய பூமிந் விதாரயந் ஸஹஸ்ரம் ஸமா ஆஸந், பாதாந் வேஷண பரோபூத்வா, த்வமேவ மாதாஸி, த்வமேவ பிதாஸி, த்வமேவ ப்ராதாஸி, த்வமேவ ஜ்யேஷ்டோஸி, த்வமேவ ஸ்ரேஷ்டோஸி, யஏவம் மஹிமாநம், வேதா த்ரஷ்டா பவதி, விஜ்ஞாதா பவதி, கர்த்தாபவதி, காரயிதாபவதி, யஏவம் வேத, சிவ ஸாயுஜ்ய மாப்நோதி சிவஸாயுஜ்ய மாப்நோதி=விஷ்ணுவானவர் வராகமாகிப் பூமியைக் கிழித்துச் செல்லுங்கால் ஆயிரவருடங்களாயின. சிவனுடைய பாதத்தைத் தேடுவதில் அவாவுடைய அவர் தாயு நீர், தந்தையுநீர், உடன்பிறந்தாருநீர், மூத்தாருநீர், உயர்ந்தாரு நீர் என்று துதித்தனர். இம்மகிமையை யறிய வல்லா னெவனே அவனே காண்கின்றவனுகின்றான், அறிந்தவனுகின்றான், கர்த்தாவாகின்றான், காரியஞ்செய்கின்றவனுகின்றான், இவ்வித மறிய வல்லானெவனே அவனே சிவசாயுஜ்யத்தை யடைகின்றான். சிவசாயுஜ்யத்தை யடைகின்றான்" என்பதாம். அன்றியும், சரபோப நிடதமும் "எவருடைய பாதார விந்தங்கள் விஷ்ணுவால் தேடப்படு

கின்றனவோ அந்த விஷ்ணுவினுடன் கூடி" என்னும் பொருள்பட "யத்பாதாம் போருஹத்வம் தவம் ம்ருக்யதே விஷ்ணு நாஸஹ" என்று கூறிப்போந்தது. இவ்வாறு இந்தச் சரித்திரம் சுருதி சிஷ்டமாயிருக்கவும் பொய்க்கதையென்று வைணவ ஆவேசம் பூண்டசிலர் குணருத்திரர் பரமாகக் கூறும் அபகர்ஷபுராண வசனங்களை ஆதாரமாகக்கொண்டு மறுக்கப்பார்க்கின்றனர். ஐயகோ! இதென்ன அவிவேகம். சுருதி வசனத்துக்கு முன் புராணவசனம் பலிஷ்டப்பிரமாணமாகுமா? சுருதி வசனத்துக்கும் புராண வசனத்துக்கும் விரோதமுண்டாகில் புராண வசனத்தைத் தள்ளி முதனூலாகிய சுருதி வசனத்தையே தழுவவேண்டுமென்னும் மீமாம்ஸ சாஸ்திர விதியை எங்கே தள்ளுவது? ஆதலின் பரந்தாமன் பன்றியுருவங் கொண்டு பரப்பிரமமாகிய பரமசிவத்தின் பாதத்தைத் தேடினனென்பதே பரம சித்தம். சங்கராசாரியரும் "விதித்வம் விஷ்ணுத்வம்'' என்னுஞ் சுலோகத்தில் (ஹம்ஸமாகவும் வராஹமாகவும் பிறந்து முன்று உன்னை மறக்கத்தக்க பிரமவிஷ்ணுக்களது பிறவிகளை விழைந்திலேன்) என்று சிவபெருமானை நோக்கி முறையிட்டிருக்கின்றனர். ஈண்டு திருமால்கொண்ட வராகவுருவம் அவரது பத்தவதாரங்களில் அடங்கியதன்று. அப்பத்திலுள்ள வராகவதாரம் வேறு காரணம் பற்றியே யாமென்றுணரற்பாற்று. (௫அ)

திருச்சாழல்.

நலமுடைய நாரணன்றன் னயனமிடந் தரனடிக்கீழ், அலராக விடவாழி யருளினன்=கண்மையுடைய ஸ்ரீமந் - நாராயணன் தன் கண்ணைப்பறித்துச் சிவபெருமானுடைய திருவடியில் மலராக அர்ச்சிக்க (அதனால் மகிழ்ந்து) சக்ராயுதத்தைப் பிரசாதித்தனர் அவ்வெம்பெருமான். இதன் வரலாறு வேதத்திலேயே சொல்லப்பட்டுள்ளது. அதாவது:— திதிகர்த்தாவாகிய விஷ்ணுமூர்த்தி சிவபிரானுடைய திருவடிப்போதில் பேரன்பு பூண்டு நாடோறும் ஆயிரங் கமலமலர்களாலருச்சித்து வந்தனரெனவும், அங்ஙனம் அர்ச்சித்து வருகையில் ஓர்நாள் ஒரு மலர் குறையக்கண்டு அக்குறையைநிறைத்

தற்பொருட்டுத் தன்கண்ணைப் பிடுங்கி இறைவன் றிருவடிமேல் சாத்தினரெனவும், அப்பொழுது இறைவன் மகிழ்ந்து சக்கரப் படையை அவருக்கருளினரெனவும் போந்ததாம். அதர்வணவேதத் தைச் சார்ந்த சரபோபநிடதம் "யோவாமபாதார்ச்சித விஷ்ணு நேத்ரஸ் தஸ்மை தடுதௌ சக்ரமதீவ ஹ்ருஷ்டஃ-தஸ்மை ருத்ராய நமோ அஸ்து=எவருடைய இடதுபாதத்தில் விஷ்ணுவானவர் தமது கண்மலரை யர்ச்சித்துச் சுதரிசன மென்னுஞ் சக்கரம் பிர சாதிக்கப்பெற்றுக்கொண்டனரோ அந்த உருத்திரமூர்த்திக்கு நமஸ் காரம்" என்று கூறியது. இதனால் விஷ்ணு ஸேவகரெனவும், த்யாதா வெனவும், சிவபெருமான் ஸேவ்யரெனவும், த்யேய ரெனவும் நிரு பிக்கப்பட்டது. தைத்திரீயோபநிடதமும் "தஸ்யாஃ சிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்திதஃ=அந்த நாராயணருடைய இருதயாக்கினி யின் சிகாமத்தியில் பரமாத்மாவுளர்" என்று உணர்த்தியபடியானும், அதற்கிணங்க திருநாவுக்கரசு சுவாமிகளும் "பையஞ் சுடர்விடு நாகப்பள்ளி கொள்வா னுள்ளத்தானும்" என்று திருவாய் மலர்ந் தருளினமையானும், விஷ்ணு உபாசகரென்பது வேறு பிரமாணம் வேண்டப்படாது வலியுறுத்தப்பட்டது. அங்ஙனம் வலியுறுத்தப் படவே, அவர் சிவஞானிகளுட் சிறந்தவரென்பதூஉம், மனோ நிக் கிரகஞ் செய்து பரசிவோபாஸ்தி செய்யும் மெய்யடியார்களுக்கு அவரது கருணுபலமே பேரன்பை யுண்டாக்கு மென்பதூஉம் நாட் டப்பட்டது. ஆதலாற்றான் உண்மைச் சைவர்கள் அனைவ ருந் தமது கிரியார்ச்சனையிற் சத்த குருபூசையில் அவரைச் சிறப் பித்துப் பூசித்து வருகின்றார்கள், அப்பையதீக்ஷித சுவாமிகளும் "அபாரம் விஜ்ஞாதும் கிரீச" என்றற் றொடக்கத்து வசனத்தில் "ஓகிரீச! உம்முடைய அளவில்லாத மகிமையினை யறியவும், உமது சரணாரவிந்தங்களில் உறுதியான அன்பைச் செலுத்தவும், உம்மு டைய பூசைகளாற் பூரணமான பிரசாதத்தைப் பெறவும் உலகத்தி லொருவனே சக்தன்-அவன் விஷ்ணு" என்று துதித்தனர். அவ் வாறே ஆசிரியர் ஹரதத்தாசாரியரும் "ஓ பரமேசுவரா! இந்தப் பத்மநாபன் பரப்பிரமமென்றும், பரதத்துவமென்றும், பரஞ்சோதி யென்றுஞ் சொல்லப்படுவான். உம்முடைய பாவனையிலாழ்ந்து உம்மிலும் வேறாகாது நின்றவனாதலால் கருட பாவனை

செய்யும் மாந்தரிகன் கருடனுவது போலாயினன்" என்றருளினர். இத்தகைய அநந்த பிரமாண முகங்களால் சிவபெருமானுடைய திருவடிக் கமலங்களில் அர்ச்சனையாற்றும் நெறியினன் திருமாலென்பது தெள்ளிதிற் பெறப்பட்டது. "மாலுமோல மிட்டலறு மம்மலர்க்கே" என்று அடிகளார் அருளிச்செய்துள்ளார் மற்ருேரிடத்தில்.

திருவுந்தியார்.

"உருத்திர நாதனுக்குந்திபற" உருத்திர நாதனுக்கு=உருத்திரனுகிய இறைவனுக்கு, அல்லது, உருத்திரர்களுக் கெல்லாந் தலைவனுயிருப்பவனுக்கு என்பது பொருள். உருத்திரர் ஏகாதசருத்திரர், சதருத்திரர், சஹஸ்ரருத்திரர், சம்ஹாரருத்திரர், சாலோகசாமீபசாரூபமுற்ற ருத்திரர் எனப் பலதிறப்படுவர். அவர்களுக்கெல்லாந் தலைவராகிய துரியருத்திரரே ஈண்டு குறிக்கப்பட்டவர். அவரே திரிமூர்த்திபரர். உருத்திரன் என்னுஞ் சொல்லுக்கு உரோதனம் (அழுகையைச்) செய்பவனென்று வைணவமதத்தினர் சாதாரணமாகப் பொருள்கூறிமயங்குவர். அச்சொல் அங்ஙனமொருவாறு பொருள் தருமாயினும் "ருத்தி ஸம்ஸாரஜம் து:கம் தத்ரா வயதிய: ப்ரபு: ருத்ர இத்யுச்யதே." என்று உபப்ப்ரஹ்மணங் கூறியபடி "ருத் என்பது சம்சாரதுக்கம், அதனை எவனெழிப்பான் அவனே ருத்திரனெனப்படுவான்" என்பதே உண்மைப்பொருள். தென்மொழிக் கந்தபுராணமும் "இன்னலங் கடலுட்பட்டோர் யாரையுமெடுக்குமாற்ருல்—உன்னரும் பரமமூர்த்தி புருத்திர னெனும்பேர் பெற்ருன்" என்று இப்பொருளையே வற்புறுத்தியது. இன்னமும் இதன் வேறு தெளிபொருளையுஞ் சிறிது விரிப்பாம். (க) ருத்=சப்தமயப்பிரபஞ்சம், அதனைத்தன் வசப்படுத்தினவன், எனவே சர்வசப்தங்களாலும் பிரதிபாதிக்கப்படுபவன். (உ) ருத்=பிரமவித்தை, அதனுலே ஆன்மாக்களிடத்துப் பொருந்தியுள்ள அநாதி மலத்தைக் கரையச் செய்பவன். (ங) ருத்=ஆவரணம், அதனை யொழிப்பவன் (ச) ருத்=ப்ரஹ்மஞ்ஞானம், அதனைநேரிலுஞ் சதாசாரியனை யதிஷ்டித்தும்உப

தேசிப்பவன். (௫) ருத்திரன்=ஸம்ஹாரகாலத்தில் சர்வான்மாக்களை யுங் கதறச்செய்பவன். (௬) ருத்திரன்=சகல நற்பிரவிருத்திகளை யுந் தடுக்குந் தமோகுணத்தைத் தன் வசப்படுத்தினவன். (௭) ருத்திரன்=பிரமனுடைய முகாவிர்ப்பவலீலையில் அழுகையை அபிநயித்தவன். (௮) ருத்திரன்=சப்தமயப்பிரபஞ்சத்தை யொழிப்பவன், எனவே மௌனசமாதியை உபதேசிப்பவன். (௯) ருத்திரன்=உலகத்திலுள்ள ஆன்மாக்களிடத்தமைந்த அஞ்ஞானத்தை நோக்கித் தான் துயருறுபவன், எனவே பிறர்துயர மேற்காமை யென்ற கருணைக்கு நிதியாயுள்ளவன் (௰) ருத்திரன்=சர்வேசுவர னாதலால் சர்வஜகத் பயங்கரன். இன்னோரன்ன பலபொருள்கள் உருத்திர சப்தத்துக்குப் பாஷ்யங்களினும், புராணேதிகாசங்களினும் விரிந்து கிடக்கின்றன. ஆதலாற்றான் சிவநேயமலிந்த செல்வர்களனைவரும் தந்தம் ஆசிரியமூர்த்திகளை மோட்சத்தை யளிக்குஞ் சிவபெருமானாகப் பாவித்துப் பூசித்துவருகின்றார்கள். இவ்வாய்மைக்கு அன்று அமர்க்களத்தில் ஸ்ரீகிருஷ்ணனைப் பூசித்த பற்குணனே சாலுங்கரி இதனால் ருத்திர நாமம் ப்ரஹ்மத்துக் குரியதென்பது நிலைநாட்டப்பட்டது. (௬௰)

இன்னணம் திருவருட் களிப்பின் மிகுதியால் வரைந்து வெளிப்படுத்திய இவ்வறுபது விஷய சூசனங்களையும் பிறப்பிலிப் பிரானும் பிறைசூடிய நாதனுமான சிவபெருமானுடைய திருவடிப் போதுகளுக்கு ஓர் சிறு வில்வத்தளிராக அளித்திட்டே மாதலால் வைதிகசைவர்களனைவரும் இதனையேற்று அன்பின் பெருக்கால் ஆநந்த பரவச சித்தவிருத்தியுடையவர்களாய்ச் சிவத்தியானப் பொலிவுடன் விளங்கியிருக்கத் திருவருளைச் சிந்திக்கின்றேம். சுபம்! சுபம்!! சுபம்!!!

திருச்சிற்றம்பலம்.

திருவாசக விஷய சூசனம்

(இரண்டாம் பதிப்பு)

முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவாசக விஷய சூசனத்தின் அட்டவணை.

சிவபுராணம்.

கீர்த்தித்திருவகவல்.

விஷயம். பக்கம்.

திருவண்டப்பகுதி.

போற்றித் திருவகவல்.

திருச்சதகம். க-வது மெய்யுணர்தல்.

உ-வது அறிவுறுத்தல்.

விஷயம். பக்கம்.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

இந்நூலாசிரியரால் இயற்றிப்

பதிப்பிக்கப்பட்ட நூல்கள்.

வேதோக்த சித்தாந்த விளக்கம்	...	0	2	0
விபூதி ருத்ராக்ஷ மஹத்வ விளக்கம்	....	0	3	0
சைவ நித்யாநுஷ்டானம் (தமிழ் கிரந்த லிபிகளில் மந்திரங்களும் அஷ்ட ஸம்ஸ்கார விளக்கமும்)	...	0	6	0
ஸ்ரீ பஞ்சாக்ஷர அஷ்டாக்ஷர மந்த்ரார்த்த ஸங்க்ரஹ விளக்கம்	...	0	10	0
பிரணவ வித்யா பரிமளம் என்னும் ஓங்கார விளக்கம் (நானூறு வேதப் பிரமாணங்களுடன்)	...	2	4	0
அகத்தியர் தேவாரத் திரட்டாதி பன்னிரு திருமுறைத்திரட்டு. குறிப்புரையும் விஷய சூசனமும் (திருவாசகத்துக்கு ௯௰ தனி விஷய சூசனம் ௨௫௰ வேதப் பிரமாணங்களுடன்) 672 பக்கங்களுடையது	...	2	12	0
திருவாசகம். குறிப்புரையும் விஷய சூசனமும் (தனி விஷய சூசனம் ௯௰-௨௫௰ வேதப் பிரமாணங்களுடன்)	...	1	8	0

சோ. சிவஅருணகிரி முதலியார்.

ஆனந்த நிலயம், சோளங்கிபுரம்.

(வட ஆற்காடு ஜில்லா.)

Sholinghur. (North Arcot Dt.)

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

இந்நூலாசிரியரால் இயற்றிப் பதிப்பிக்கப்பட்ட நூல்கள் கிடைக்கும் இடங்கள்.

—••✿••—

1. சோ. சிவ அருணகிரி முதலியாரவர்கள்
ஆனந்த நிலயம், சோளங்கிபுரம்.
(வட ஆற்காடு ஜில்லா).
Sholinghur, (North Arcot Dt.).

2. சோ. சிவ அருணகிரி முதலியாரவர்கள்
159. பெரிய தெரு,
திருவல்லிக்கேணி, (மதுராஸ்).
Triplicane (Madras.)

3. கா. பிச்சகுட்டி செட்டியாரவர்கள்
கண்டமாணிக்கம், (இராமநாதபுரம் ஜில்லா.)
Kandramanickam (Ramnad Dist.),